# ஐரோப்பாவின் வரலாறு

(கி.பி. 1815 முதல் தற்காலம் வரை)

ஆசிரியர்

அ. திலகவதி ஜகதீசன், பி.ஏ. (ஹானர்சு), பி.டி.,
பேராசிரியை, வரலாற்றுத்துறை,
அரசினர் மகளிர் கலைக் கல்லூரி,
வடசென்னை, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—279

# ஐரோப்பாவின் வரலாறு

(கி.பி. 1815 முதல் தற்காலம் வரை)

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்

**அ. திலகவதி ஜகதீசன்,** பி.ஏ. (ஹானர்சு), பி.டி.,
பேராசிரியை, வரலாற்றுத்துறை,
அரசினர் மகளிர் கலைக் கல்லூரி,
வடசென்னை, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1971
Revised Edition—March, 1975

T.N.T.B.S. (C.P.) No. 279

© Tamilnadu Textbook Society

EUROPE—From 1815 A.D. to Present Period

TMT. A. THILAKAVATHI JAGADEESON

**Price Rs. 5-50**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

*Printed by*

**BHARANI PRESS,**
11, Venkatathiri Naicken Street,
Kuyappettai, Madras-12.

# அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந்தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், மெய்ப்பொருளியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய பல துறைகளில் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான 'ஐரோப்பாவின் வரலாறு' (கி.பி. 1815 முதல் தற்காலம்வரை) என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளியான **279**ஆவது வெளியீடாகும். தமிழ் மக்களின் பேராதரவினாலும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களின் நல்லூக்கத்தினாலும், இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. ஆதலின் இப்பொழுது இந் நூல் மீண்டும் வெளிவருகின்றது. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் | ... | 1 |
| 2. | 1815ஆம் ஆண்டில் ஐரோப்பா | ... | 4 |
| 3. | பழைமையின் மீட்சி | ... | 10 |
| (அ) | வியன்னு மாநாடு | ... | 11 |
| (ஆ) | பிற்போக்கு அணிகள் | ... | 20 |
| (இ) | மெட்டர்னிக் | ... | 24 |
| 4. | உரிமைப் போராட்டமும் தேசிய இயக்கமும் | ... | 27 |
| (அ) | கிரேக்க விடுதலைப் போர் | ... | 28 |
| (ஆ) | ஸ்பானியப் புரட்சி | ... | 30 |
| (இ) | 1830ஆம் ஆண்டுப் புரட்சி | ... | 31 |
| 5. | 1848ஆம் ஆண்டுப் புரட்சி | ... | 38 |
| 6. | பால்கன் நாடுகளின் பிரச்சினை | ... | 45 |
| 7. | மூன்றும் நெப்போலியன் | ... | 54 |
| 8. | இத்தாலிய ஐக்கியம் | ... | 67 |
| 9. | ஜெர்மனி ஐக்கியமுறல் | ... | 86 |
| 10. | 1871ஆம் ஆண்டிற்கும் 1914ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட ஐரோப்பா | ... | 106 |
| (அ) | இத்தாலிய நாட்டின் பிரச்சினைகள் | ... | 111 |
| (ஆ) | ஆஸ்திரியா–ஹங்கேரி இரட்டை முடியாட்சியும் அதன் பிரச்சினைகளும் | ... | 116 |
| (இ) | உலகப் போருக்குமுன் ஐரோப்பாவின் நிலை | ... | 119 |
| (ஈ) | பத்தொன்பதாம் நூற்றுண்டில் ரஷ்யா | ... | 121 |
| (உ) | ரஷ்ய-துருக்கியப் போரும் பெர்லின் மாநாடும் | ... | 129 |
| (ஊ) | முக்கூட்டு நட்பு தோன்றுதல் | ... | 133 |
| (எ) | புதிய ஏகாதிபத்தியம் | ... | 135 |

பக்கம்

11. 19ஆம் நூற்றாண்டில் கலாசாரம் ... 139
(அ) புத்துணர்ச்சி இயக்கம் ... 139
(ஆ) கலைகள் ... 144

12. முதலாம் உலகப் போர் (1914—1918) ... 147
(அ) பாரிசு சமாதான மாநாடு ... 160
(ஆ) சர்வதேசச் சங்கம் ... 166

13. சர்வாதிகார ஆட்சிகள் மலருதல் ... 173
(அ) ரஷ்யப் புரட்சி ... 173
(ஆ) துருக்கி ... 182
(இ) ஜெர்மனி ... 188
(ஈ) இத்தாலி ... 204

14. லொகார்னோ உடன்படிக்கை ... 213

15. இரண்டாம் உலகப் போர் (1939—1945) ... 216
(அ) போருக்குப்பின் ஐரோப்பா ... 229

16. ஐக்கிய நாடுகளின் நிறுவனம் ... 234

17. ஐரோப்பியப் பொது சமுதாயம் ... 241

18. சமகால நாகரிகம் ... 246
(அ) விஞ்ஞானத் துறையிலும் தொழில்நுட்பத் துறையிலும் தோன்றிய அற்புதங்கள் ... 250
(ஆ) இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய இலக்கியம் ... 254
(இ) கலைகள் ... 255

மேலும் படிக்கவேண்டிய நூல்கள் ... 260
கலைச்சொற்கள் ... 262

# 1. தோற்றுவாய்

ஐரோப்பிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றுண்டிற்கென ஒரு தனி இடமுண்டு. சூருவளியையொத்த பெரும் சக்திகளை ஃபிரெஞ்சுப் புரட்சியும், தொழிற் புரட்சியும் தோற்றுவித்த நேரத்தில் 18ஆம் நூற்றுண்டு மெல்லக் கரைய, 19ஆம் நூற்றுண்டு மலர்ந்தது. இவ்விரு புரட்சிகளின் கூட்டுப் பயனுக உலகம் பெரிதும் மாறுதல் அடைந்தது. 18ஆம் நூற்றுண்டு உலகையும் 19ஆம் நூற்றுண்டு உலகையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது உலகில் ஏற்பட்ட மகத்தான மாறுதலின் அளவினைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. 18ஆம் நூற்றுண்டில் கோப்பர்நிகஸின் கண்டுபிடிப்புகள் 'உலகே அண்டத்தின் மையம்' என்ற கொள்கையைப் பொய்ப்பித்ததோடு புவியியல் அறிவையும் பெருமளவிற்கு வளர்த்துவிட்டன. இருப்பினும், அமெரிக்கா முழுமையாகக் கண்டறியப்படவில்லை. ஆப்பிரிக்கா இருண்ட கண்டமாகவே இருந்தது. ஆஸ்திரேலியாக் கண்டம் உலகப் படத்தில் இடம்பெறவில்லை. இருந்தபோதிலும், உலகின் முக்கியப் பகுதிகளின் நிலை, அளவு ஆகியவை திட்டவட்டமாகக் கண்டு அறியப்பட்டிருந்தன. 19ஆம் நூற்றுண்டில் ஏற்படவிருந்த மாபெரும் மாற்றங்களின் அறிகுறிகள் 18ஆம் நூற்றுண்டிலேயே தெரிய ஆரம்பித்தன. இந்தியாமீது இங்கிலாந்தின் பிடி இறுகியது. சீனுவின் 'ஒதுங்கியிருக்கும் கொள்கை' உடைக்கப்பட்டு ல வழியாக ரஷ்யரும், நீர் வழியாக ஆங்கிலேயரும் சீனுவினுள் ஊடுருவத் தலைப்பட்டனர். கிழக்கிந்தியத் தீவுகளை அடையும் போட்டியில் இங்கிலாந்தும் ஹாலந்தும் முழுமூச்சுடன் இறங்கின. ஜப்பானும், தனக்குத்தானே விதித்துக்கொண்டிருந்த சிறை வாழ்விலிருந்து விடுபட்டு, வெளிநாட்டினரின் கவனத்தை ஈர்ப்பதில் முன்னணிக்கு வந்தது. ஒவ்வொரு துறையிலும்,செயலும் விரிவும் நிகழ்ந்தன. ஆர்க்டிக் பிரதேசங்களிலும், தென்கடல் தீவுகளிலும், ஆப்பிரிக்கக் கரையோரங்களிலும் விஞ்ஞான வல்லுநர்களின் காலடிகள் படத்தொடங்கின. செல்வம் திரட்டுவது,

பேரரசுகளை அமைப்பது, அறிவுக் களஞ்சியத்தை மேலும் நிரப்புவது என்ற இலக்குகளோடு ஐரோப்பிய மக்கள் செயலாற்றத் தலைப்பட்டனர்.

சர்வதேச அரசியலிலும் இவ்விரு நூற்றாண்டுகளுக்கிடையே றிப்பிடத்தக்க மாறுதல் இருப்பதைக் காண்கிறோம். முன் நூற்றாண்டில் பொருளாதார, குடியேற்றப் போட்டிகளை முன்னிட்டுப் போர்கள் நடந்தன. அரச தந்திரம், அமைதியைக் காத்தல் இவ்விரண்டும் மன்னர்களின் கையிலிருந்தன. ஆனால், அனைவரும் கூடிப் பேசி நிரந்தர அமைதிக்கு வழி காணுதல் என்ற புதிய முறை பின் நூற்றாண்டில் பெருமளவில் கைக்கொள்ளப் பட்டது. சுருங்கச் சொன்னால், 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய புரட்சி, 19ஆம் நூற்றாண்டின் சாதனைகளையெல்லாம் மேம் போக்காகக் காட்டிவிட்டது.

18ஆம் நூற்றாண்டு, 19ஆம் நூற்றாண்டில் உலக நாடுகளிடையே ஏற்படக்கூடிய வீழ்ச்சிக்கான எச்சரிக்கைகளையும், பெரும் சாதனைகளுக்கான வாழ்த்துகளையும் தெளிவாகக் காட்டியிருப்பதைக் காண்கிறோம். ஐரோப்பாவிலே அதிக மதிப்பு வாய்ந்த ஹேப்ஸ்பர்க் அரச வம்சம், நெப்போலியனால் வீழ்த்தப் படும் முன்பே சரிவை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததை இந் நூற்றாண்டு நிரூபித்தது. அதேபோல் டான்யூப் நதியையும் கடந்து விரிந்து பரந்திருந்த துருக்கியப் பேரரசு அஸ்தமித்துக் கொண்டிருந்ததையும் இந் நூற்றாண்டு கண்டது. அப் பேரரசில் இணைந்திருந்த கிறித்தவ நாடுகள் புரட்சிக் கொடியை உயர்த்த ஆரம்பித்திருந்தன. ரஷ்யாவும் ஆஸ்திரியாவும் துருக்கியின் பெரும் எதிரிகளாகத் தங்களை இனம்காட்டிக்கொண்டன. மேலும், 16ஆம் நூற்றாண்டில் விரிவுக்கொள்கையைக் கடைப் பிடித்துப் பெரும் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருந்த போலந்து இப் பொழுது தன் முழு அழிவைத் தடுத்துக்கொள்ளப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டும் 1795-ல் அது அஞ்சிய அழிவு அதனை அணைத்துக்கொண்டது. டென்மார்க், ஸ்வீடன், ஸ்பெயின் ஆகியவை புகழ் மங்கிய நாடுகளாக ஆகிவிட்டன.

இவ்விரு நூற்றாண்டுகளுக்குமிடையே ஐரோப்பா பெரும் மாற்றங்களை உண்மையில் கண்டது. சமுதாய, பொருளாதார, நீதித் துறைகளில் மக்களிடையே பரஸ்பரம் நிலவக் கூடிய அறிகுறிகள் பெரிதும் தோன்றின. 1789ஆம் ஆண்டின் ஐரோப்பிய விவசாயக் கூலிக்கும், தற்கால உரிமைகள் நிறைந்த தொழிலாளிக்கும் இடையே எத்துணை வேறுபாடு? குறைந்த மக்கள்தொகையும், அதிக இறப்பு விகிதமும், அற்ப ஆயுள்

படைத்த அரசாங்கங்களும், மத்திய காலத் தண்டனைச் சட்டங்களும், பலபடிகள் நிறைந்த சமுதாய அமைப்பும், பாய்மரக் கப்பல்களும், கைத்தறியும், குதிரை வண்டிகளும், கடல் கொள்ளைக்காரர்களும், அடிமை வியாபாரிகளும், கொள்ளை நோய்களும் மலிந்த உலகம் முன்னது. செஸ்டர்ஃபீல்டும், வால்டேரும், டாக்டர் ஜான்சனும் இவ்வுலகைச் சேர்ந்தவர்களே. ஆனால், அதற்கடுத்ததில் நவீன வாழ்க்கையும் பெரிய தொழில் நகரங்களும், பெரும் இயந்திரக் கண்டுபிடிப்புகளும், ஆகாய விமானங்களும், அணுகுண்டுகளும், தேசிய ஒலிபரப்புச் சாதனங்களும், ஜனநாயகமும், பொதுநல அரசும், அரசு கல்வி முறையும், கூட்டுப் பொறுப்புகளும் மிகவும் விரிந்த நிர்வாக அமைப்பும் சிறப்புற்று விளங்குகின்றன.

விஞ்ஞானம், தொழில்துறை, மனிதாபிமான முயற்சிகள் ஆகிய துறைகளில் 18ஆம் நூற்றாண்டே சிறப்பிடம் பெறுகிறது. சமயத்துறையிலும், பொறையுடைமை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வில்பர் ஃபோர்ஸ், ஹோவார்ட், எலிசபெத் ஃபிரை ஆகியோரின் நன்முயற்சிகளால் அடிமை வியாபாரம் வெறுக்கப்பட்டும், சிறைச்சாலைச் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டும் வந்தன. மக்களுக்குச் செய்திகளைத் தரும் பணியில் நாளிதழ்கள் இப்போதுதான் ஈடுபடத்தொடங்கின.

# 2. 1815ஆம் ஆண்டில் ஐரோப்பா

கால் நூற்றாண்டுக் காலமாக ஐரோப்பாவை ஆட்டிவைத்த நெப்போலியப் புயல் ஓய்ந்தது. நெப்போலியனது வீழ்ச்சிக்குக் காரணமான ஐரோப்பிய அரசியல் வல்லுநர்கள் ஐரோப்பாவில் பழைய வாழ்க்கை முறை, பழைய இலட்சியங்கள், நடைமுறைகள் திரும்பவும் நிலைபெற வேண்டுமெனப் பெரிதும் விரும்பினர். சமுதாய, அரசியல் துறைகளில் புதிய சோதனைகளை மேற்கொள்ளவோ, காலத்திற்கேற்ற நிர்மாணத் திட்டத்தை உருவாக்கவோ அவர்கள் முயற்சி செய்யவில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மக்களாட்சி, முற்போக்குக் கருத்துகள் என்ற சொற்களிலேயே அபாயம் செறிந்திருந்தது. ஃபிரெஞ்சுப் புரட்சியோடு தொடர்புடைய இக் கருத்துகளை அவர்கள் வெறுத்தனர். இவற்றை அறவே ஒடுக்கவும், வல்லமைச் சமநிலையை நிலைநாட்டவும் 1815ஆம் ஆண்டில் கூடிய வியன்னு மாநாடு முயன்றது. ஆனால், பழைய ஐரோப்பாவைத் திரும்ப ஏற்படுத்தும் இம் முயற்சி தோற்றது. ஐரோப்பாவில் புதிய யுகம் உதித்ததை வரலாறு பெருமையுடன் குறித்துக்கொண்டது.

**அரசியல் நிலை:** 17ஆம் நூற்றாண்டின் இடையில் ஏற்படுத்தப் பட்ட வெஸ்ட்பேலியா உடன்படிக்கையைப்போல், முதல் உலகப் பெரும்போருக்குப் பிறகு உருவாக்கப்பட்ட பாரிஸ் உடன் பாட்டைப்போல், வியன்னு மாநாடு ஐரோப்பிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகத் திகழ்கிறது. பல அரசர்கள், அரசப் பிரதிநிதிகள், ஆலோசகர்கள் என ஐரோப்பா முழுவதுமே வியன்னுவில் திரண்டுவந்து ஆஸ்திரிய அமைச்சர் மெட்டர் னிக்கின் உபசரிப்பில் திளைத்திருந்தது. பழைய ஐரோப்பாவை மீண்டும் நிறுவுவதெனக் கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்ட மெட்டர்னிக்கின் கருத்துகளை பிரிட்டிஷ் அமைச்சரான காஸில்ரீ பகிர்ந்துகொண்டார். ரஷிய மன்னர் ஸார் அலெக்சாந்தர்

முற்போக்குக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டதாகத் தெரிந்தாலும், அவரும் மெட்டர்னிக்கின் வசியத்திற்குக் கட்டுப்பட்டார். உலகியல் அனுபவம் பெற்ற ஃபிரெஞ்சுப் பிரதிநிதியான டால்லிரெண்ட் பிறரது கண்டனங்களுக்கு அதிகம் ஆளாகாதவராகவும், மற்றப் பிரதிநிதிகளின் திறமைக்கும் சாதுரியத்திற்கும் தகுந்த பதிலடி கொடுப்பவராகவும் விளங்கினர். ஃபிரான்சில் புரட்சித்தீயின் கங்குகள் முற்றிலும் இன்னமும் அணையவில்லை என்பதை நன்கு உணர்ந்திருந்த அவர், தக்க காலம் வரும்வரை பொறுத்திருப்பதே சாலச் சிறந்தது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அவரது அறிவுரைகளை மாநாட்டினர் விரும்பி ஏற்றனர்.

ஐரோப்பாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை இந்த நால்வரும் ஏற்றனர். ஐரோப்பிய மக்களது நிலையைப் பற்றிக் கவலைகொண்டது போன்ற பாசாங்கைக்கூட மாநாட்டினர் செய்யவில்லை. இருப்பினும், ஒரு பொறுப்புணர்வோடும், நினைத்த சமாதானத்தை உருவாக்கவேண்டும் என்ற ஆர்வத்தோடும் அவர்கள் பணியாற்றினர் என்பதை மறுக்கவியலாது. சட்டதிட்டங்களை வரையறுத்துக்கொண்டு அதன் அடிப்படையில் செயலாற்றவில்லை. முக்கியமான பிரதிநிதிகளிடையே தனிப்பட்ட முறையில் விவாதங்களை நடத்தியும், சிறப்புக் குழுக்களில் முடிவுகளை எடுத்தும், பின்னர் அவற்றிற்குப் பொதுவான முடிவுகள் என்ற வண்ணந்தீட்டியும் பணிகள் நடந்தேறின. இதன் விளைவாக 1815ஆம் ஆண்டு ஜுன் 9ஆம் நாள் கடைசியாகக் கையெழுத்தான விதிகளோடு மாநாடு சட்டபூர்வமான முடிவை எய்தியபோதிலும், அதற்கு முன்பே மாநாட்டின் அடிப்படைக் கருத்து நிறைவேறிவிட்டது.

வியன்னு மாநாடு அரசியலைத் தவிர்த்து, ஐரோப்பிய சமுதாய வாழ்வின் வேறு எந்தத் துறையையும் தொடவில்லை. வியன்னு உடன்பாட்டை அடிப்படையாகக்கொண்டே ஐரோப்பா 19ஆம் நூற்றுண்டில் அடியெடுத்து வைத்தது. 1919ஆம் ஆண்டில் ஏற்பட்ட சமாதான முயற்சிகளோடு ஒப்பிடும்போது, வியன்னு மாநாட்டின் சாதனை பெருமிதம் அளிப்பதே என்று பலர் கருதுகின்றனர். ஆனுல், மக்கள் புறக்கணிக்கப்பட்டனர் என்பதும், 19ஆம் நூற்றுண்டின் இரு தீவிர சக்திகளான தேசியம், மக்களாட்சி ஆகிய இரண்டும் ஒடுக்கப்பட்டன என்பதும் உண்மையே. வியன்னு உடன்பாட்டைத் திருத்தியமைக்கும் வழிமுறை, மாநாட்டில் தீர்மானிக்கப்படவில்லை. இருந்தபோதிலும் உடன்பாட்டைப் படிப்படியாகத் திருத்தும் முயற்சியில் ஐரோப்பா தன்னை ஈடுபடுத்திக்கொண்டதே 19ஆம் நூற்றுண்டின் ஐரோப்பிய வரலாறு ஆகும்.

**சமூக, பொருளாதார நிலை:** நிலக்கரியும் இரும்பும் அருகருகே கிடைத்தமையாலும், ஆங்கிலேயரின் சமுதாயம், அவர்களது பொருளாதாரம் ஆகியவற்றின் தனித்தன்மை போன்ற சாதக மான சூழ்நிலைகளின் விளைவாகவும் 18ஆம் நூற்றுண்டின் இறுதி வாக்கில் இங்கிலாந்தின் பொருளாதார வானில் 'தொழிற் புரட்சி' யெனும் கதிரவன் ஒளிவீசத் தொடங்கிவிட்டது. அதன் பயனே இங்கிலாந்தின் மிகுதியான செல்வ வளம். அதைக் கொண்டுதான் நெப்போலியனுக்கெதிரான ஐரோப்பியக் கூட்டணியின் அச்சாணியாக விளங்கி, ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை முறியடிப்பதில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

இரும்பும் நிலக்கரியும் மிகுதியாகக் கிடைத்தது ஓர் அடிப் படைக் காரணம். அதனுடன் நீராவிச் சக்தி சேர்ந்தபோது இயந்திரங்கள் உருவெடுத்தன. அவற்றைத் தொடர்ந்தன தொழிற்சாலைகள். ஆனுல், இவைமட்டும் இங்கிலாந்தின் செல் வச் செழிப்பிற்குக் காரணமல்ல. தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்ட விரிவான கண்டுபிடிப்புகளும், மூலதனக் குவிப்பும், தொழிலில் ஈடுபட்டவர்களது தொலைநோக்குணர்வும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. 'இங்கிலாந்து ஒரு கடைக் காரர்களது நாடு' என நெப்போலியன் வருணித்ததை மெய்ப் பிப்பதுபோல் ஆங்கிலேயரது வணிக நோக்கும், பொருளாதாரச் சிந்தனையும், பிற நாட்டினரைக் காட்டிலும் மிக முற்போக் கானவை. எஃகுத் தொழிலும், பஞ்சாலைத் தொழிலும் வளர்ந்த அதே வேகத்தில் போக்குவரத்துத் துறையிலும் பெரும் மாற்றம் விளைந்தது. 1823ஆம் ஆண்டில் ஸ்டாக்டன்-டார்லிஸ்டன் இடையே அமைக்கப்பட்ட சிறிதளவு தூரத்திற்கான இருப்புப் பாதை கால் நூற்றுண்டுக் காலத்திற்குள் 7,000 மைல்களுக்கு நீட்டப்பட்டது. குறைந்த செலவில், பெருமளவு பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு விரைவாக அனுப்ப வசதி யான வழியை முதன் முறையாக மனிதகுலம் பயன்படுத்தியது.

இயந்திரங்களை ஏற்றுமதி செய்தும், பயிற்சிபெற்ற தொழி லாளர்களை வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதி அளித்தும் தொழிற் புரட்சியின் சாதனைகளைப் பிறர் பயன்படுத்தாவண்ணம் வெகுகாலத்திற்குத் தடுக்க முடியவில்லை. இங்கிலாந்தால் சுதந் திரம் பெற்ற மகிழ்வோடு தொழில் துறையிலும் சிறப்பான வளர்ச்சி பெற்றுத் தனக்கென ஓரிடத்தை ஏற்படுத்திக் கொண்ட முதல் ஐரோப்பிய நாடு பெல்ஜியம் ஆகும். ஃபிரான்சின் வட பகுதியில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டாலும் நாடு முழுவதுமாகப் பார்க்கும்பொழுது அது பொருளாதாரத்தில் பின் தங்கியே இருந்தது. மக்களில் முக்கால் பங்கினர் விவசாயத்தை நம்பி

வாழ்ந்தனர். சிறுதொழில்கள் சிறப்புற்றிருந்தன. வங்கித் தொழில் வளர்ச்சியாலும், அரசின் ஆதரவாலும், கடன்பெறும் வசதி பெருகியதாலும், இங்கிலாந்து அடைந்த உன்னத நிலைக்கு நேர் மாறான பின்தங்கிய நிலையில் ஃபிரான்சின் பொருளாதாரம் துவண் டிருந்தது.

பிற ஐரோப்பிய நாடுகளின் நிலையோ ஃபிரான்சை விடத் தாழ்ந்திருந்தது. மனித சக்தி, மூலதனம் இவை அரிதாக இருந்த மையாலும் விவசாயக் கூலிகளுக்கு விடுதலை அளிக்கும் முயற்சி முற்றுப் பெறாமையாலும், ஜெர்மானிய நாடுகளின் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாக இல்லை. ஆஸ்திரியாவிலும், பொஹீமியாவிலும் எஃகு, பஞ்சாலைத் தொழில்களும் வளர்ந்திருந்தன. ஜெர்மானிய நாடுகளின் வளர்ச்சி குன்றியதற்குக் காரணம் அப் பகுதி பல நாடுகளாகப் பிளவுண்டு பொருளாதாரத் தடைகள் மிகுந்திருந்ததே யாகும். இத் தடையைத் தகர்க்கும் முதல் முயற்சியினை 1816ஆம் ஆண்டு பிரஷ்யா மேற்கொண்டு சுங்கத் தடைகளைப் பிரஷ்ய எல்லைக்குள் விலக்கியது. இம் முயற்சி பின்னர் 1833ஆம் ஆண்டில் பிரஷ்யாவின் தலைமையில் 'ஜோல்வரின்' என்னும் சுங்க ஐக்கிய இயக்கமாக மலர்ந்தது.

ஐரோப்பாவின் பிற பகுதிகளில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பரம்பரையான சமுதாய அமைப்பு நிலவி வந்தது. சான்றாக, 1848ஆம் ஆண்டுவரை இத்தாலியில் இருப்புப் பாதையே கிடையாது. ஐரோப்பாவில் மக்கள் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் தொழில் வளர்ச்சி மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்த நேரத்தில் மக்கள் தொகைப் பெருக்கமும் நிகழ்ந்தது. மனித சக்தி அதிகரித்ததோடு நுகர்வோர் தொகையும் பெருகியது. இது வளர்ந்து விரிவடையும் பொருளாதாரத்தில் சாதகமான கூறாகும். பெருகிய மக்கள் கூட்டம் நகரங்களில் நிரவப்பட்டதால் அதைத் தொடர்ந்து பல பிரச்சினைகள் உருவெடுத்தன. அவற்றைத் தீர்க்கவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது.

இந்த மாற்றங்களும் பிரச்சினைகளும் சிந்தனையாளர்களின் கவனத்தை ஈர்த்தன. பெருகிவரும் மக்கள் தொகைக்கும், விரிவடையும் பொருளாதாரத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை அவர்கள் ஆராய்ந்தனர். பொருளாதார நிபுணரான மால்தஸ் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் தனது 'மக்கள் தொகை பற்றிய கட்டுரை'யில் ஒரு திடுக்கிடும் கருத்தை வெளியிட்டார். மக்கள் தொகைப் பெருக்கம் ஜியோமிதி விகிதத்தில் பெருகும்பொழுது, இயற்கைச் செல்வம் கூட்டு விகிதத்தில் பெருகுகிறது. இதன் விளைவாக மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவதோடு மக்கள்

எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தத் தொற்றுநோய்கள், பஞ்சங்கள் என்ற வழிகளை இயற்கை பயன்படுத்த நேரும் என்பதே அவர் முடிவு.

இருபது வருடங்களுக்கு முன்னால் முற்போக்கு வாதிகளின் வேதமெனக் கருதப்படும் 'நாடுகளின் செல்வம்' என்னும் தனது நூலில் ஆதம் ஸ்மித்தும் இந்த முற்போக்குப் பொருளாதாரச் சிந்தனையையே வலியுறுத்தினார். குறுக்கீடற்ற போட்டி, சுதந் தரமான தொழிலூக்க முயற்சி, தடையிலா வாணிபம் ஆகியவை பெரும்பாலான மக்களுக்குப் பயனளிக்கும் பொருளாதாரப் பணிகளை உருவாக்கும் என்பது கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப் பட்டது. இங்கிலாந்து தொழில்துறையில் வெகுதூரம் முன்னேறி இருந்த காரணத்தால் தடையிலா வாணிபத்தின் முழுப்பயனை நுகர முடிந்தது. ஆனால், பிரஷ்யா 'ஜோல்வரினை' உருவாக்கித் தடையிலா வாணிபத்தை ஜெர்மானிய நாடுகளைப் பொறுத்தமட்டில் ஆதரித்தாலும், பிற நாடுகளுடன் தொடர்பு என்று வரும்போது காப்பு முறையை முழுமூச்சுடன் ஆதரித்தது.

தொழிலாளர் (labour) பிரச்சினையும் பெரிதாக வளர்ந்தது. ஒரு பொருளே, சந்தையின் நிலவரத்தைப் பொறுத்து அதன் விலையும் மாறுபடும் என்பதால் முற்போக்குப் பொருளாதாரச் சிந்தனை தொழிலாளர் சட்டங்களுக்கு ஆதரவாக இல்லை. இங்கிலாந்தில் தோன்றிய 'சார்ட்டிஸ்ட் இயக்கம்' தொழிலாளர் களின் நல்வாழ்வை இலட்சியமாகக் கொண்டதாகும். அதன் தோல்வி தொழிலாளரின் இயக்கத்திற்கு ஏற்பட்ட பேரிடியாகும். இருப்பினும், 20ஆம் நூற்றாண்டில் தொழிலாளரது இயக்கம் மீண்டும் தலைதூக்கியது.

ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பது பொதுவாக மனித குலத்தின் விருப்பமாகும். மனிதாபிமான உணர்வோடு பொருளாதாரக் கண்ணோட்டமின்றி இந்த இலக்கை அணுகினர் சிலர். இம் முயற்சி 'சோஷலிசம்' என்ற பெயரால் வழங்கப்பட்டது. செயின்ட் சைமன், ஃபாரியர் (Fourier) போன்ற கற்பனாவாதிகள் ஃபிரான்சில் இக் கருத்துக்குப் புது வண் ணந்தீட்டிப் பரிமளிக்கச் செய்தனர்.

பொருளாதாரப் பணிகளை உச்சநிலை, தேக்கநிலை என்ற லயத் துக்குட்பட்டு சீராகச் செயற்படுத்தும் வலிமைமிக்க சாதனமாகச் 'சந்தை' விளங்கியது. பொருளாதார நெருக்கடிநிலை ஏற்பட்ட பொழுது தொழிலாளர்களின் ஊதியம் குறைந்து, அவர்களது வாழ்க்கைநிலை சீர்கேடு அடைந்தது. தொழிலாளர்கள் ஒன்று பட்டுப் போராடுவதையும் முதலாளிகளால் தடுக்க முடிந்தது.

இருப்பினும், இங்கிலாந்தில் தொழிற்சங்க இயக்கம் மெல்ல வளர்ந்தது. ராபர்ட் ஓவன் 1834ஆம் ஆண்டில் 'கிராண்டு நேஷனல் கன்சாலிடேட்டட் டிரேடு யூனியனை' உருவாக்கினார். ஆனால், இவ்வியக்கம் தடைகளை மீறி ஓங்க இயலவில்லை.

இதனால் சீற்றம் அடைந்த தொழிலாளர்கள், அரசியலில் ஈடுபடுவதன் மூலம் தங்கள் குறைகளுக்குப் பரிகாரங்களைத் தேடினர். புரட்சிகரமான கருத்துகளைக் கொண்டிருந்ததால் தொழிற்சங்கங்களோடு கருத்து மோதல் ஏற்பட்டு இந்த எழுச்சி தோல்வியைத் தழுவியது. நாடாளுமன்றச் சட்டங்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

பெருந்தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தால் ஃபிரான்சில் தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவது நடக்கவில்லை. 1830ஆம் ஆண்டுப் புரட்சி நிகழ்ச்சிகளில் தொழிலாள வர்க்கம் பங்கு கொண்டு ஃபிரான்சில் ஏற்கெனவே இருந்துவந்த வர்க்கப் போராட்டத்திற்கு உயிரூட்டியது. ஜூலைப் புரட்சியில் ஃபிரெஞ்சு அரசு கவிழ்ந்தமைக்குக் காரணம், தொழிலாளர் இயக்கம் வலுப் பெற்றமையேயாகும். பிரிட்டனையும் ஃபிரான்சையும் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர் இயக்கம் உருப்பெறவில்லை; ஆங்காங்கே அதிருப்தியின் விளைவாக ஏற்பட்ட சிறு பூசல்களைத் தவிர.

பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட இந்த மாற்றங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தபோதிலும், ஐரோப்பாவில் மிக மெதுவாகவே செயல்பட்டன. அவற்றின் விளைவுகள் வெகுகாலத்திற்குப் பின்னரே உணரப்பட்டன. வியன்னா மாநாட்டினர் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்த ஐரோப்பாவில் விளைந்த இந்தப் பொருளாதார மாற்றங்களை எதிர்பாராத காரணத்தினாலேயே அரசியல் மாற்றங்களோடு தங்கள் பணியை நிறுத்திக் கொண்டனர்.

வாட்டர்லூவில் நெப்போலியனின் புகழ் அஸ்தமித்த பின்னர் ஐரோப்பாவைப் பிரச்சினைகளாகிய இருள் கப்பிக்கொண்டிருந்தது. ஃபிரெஞ்சு மக்கள் நெப்போலியனின் வீழ்ச்சிக்குப்பின் அவனை அறவே மறந்தவர்களாய் போர்பன் ஆட்சியின் மீட்சிக்குத் தங்களைத் தயார்படுத்திக்கொண்டனர். ஐரோப்பாவின்மீது ஃபிரெஞ்சுப் புரட்சி எனும் எரிமலையிலிருந்து வெடித்துச் சிதறிய லாவா பரவிக்கிடந்தது. 1815ஆம் ஆண்டில் ஐரோப்பிய அரசியல்வாதிகள் அந்த எரிமலைக் குழம்பின்மேல் தங்கள் பிற்போக்குத் தனமான கருத்துகளை விதைத்தனர் எனக் கூறுகிறார் அறிஞர் ஃபிஷர். இம் முயற்சி வீணானது என்பதை வரலாறு தெளிவாகக் காட்டியது.

# 3. பழைமையின் மீட்சி

ஃபிரெஞ்சுப் புரட்சி உலகிற்குச் சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம், மக்களாட்சி போன்ற தத்துவங்களை அளித்தது. புரட்சிக்குப்பின் ஃபிரான்சை ஆட்சிசெய்த நெப்போலியன் ஏகச் சக்கராதிபதிக் கோலம் பூண்டாலும் புரட்சியின் தத்துவ நெருப்பை அணையவிடாமல் காத்தான், காத்ததாகப் பெருமையாகக் கூறிக் கொண்டான். ஆனால், அவனது வீழ்ச்சிக்குப்பின், நாடக அரங்கின் திரை விலகியபோது, தெரிந்த காட்சி பழைமையின் மீட்சியாகவே இருந்தது. ஆனால், அரங்கிற்குப் பின்னே ஜனநாயக தேசீய சாதனைகளுக்கான தீவிர ஒத்திகை நடந்துகொண்டேயிருந்தது.

பழைமைக் கருத்துகள் எங்ஙனம் ஐரோப்பாவை ஆட்கொண்டன என்பதைப் பார்ப்போம். ஃபிரான்சில் பழைய போர்பன் முடியாட்சி மீண்டது. ஸ்பெயினில் ஏழாம் ஃபெர்டினண்ட் திரும்பவும் அரியணை ஏறினார். போர்ச்சுகலில் ஆறும் ஜான் திரும்பவும் பதவியேற்றார். அவருடன் சர்வாதிகார ஆட்சி எனும் பழைமையும் மீண்டது. இத்தாலியில் நெப்போலியனின் மாற்றங்கள் சுவடின்றி அழிக்கப்பட்டன. அரசியல் ரீதியாக நோக்கும்பொழுது இத்தாலி என்ற நாடே இல்லாமல் போயிற்று. அதற்குப் பதிலாகப் பழைய அரச பரம்பரையினால் ஆளப்பட்ட பீட்மாண்ட் சார்தினியாஅரசு, ஆஸ்திரியாவின் சொந்தமான வெனிஷியா லம்பார்டி, சுதந்திரச் சிற்றரசுகளான டஸ்கனி, மொதீனா, பார்மா, லூக்கா, போப்பின் நாடுகள், சிசிலி ஆகியவையே அங்கிருந்தன. ஜெர்மனியில் நெப்போலியன் காலத்தில் வீசிய சுதந்திர ஜனநாயகத் தென்றல் நின்று போயிற்று. 39 நாடுகளாகப் பிளவுண்டு, கட்டுக்கோப்பின்றி, ஆஸ்திரிய ஆதிக்கம் என்ற கயிற்றால் பிணைக்கப்பட்ட ஒரு கூட்டு இணைவாக ஜெர்மனி காட்சி அளித்தது. தேசிய உணர்வு நசுக்கப்பட்டு 12 வெவ்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் பழைமையின் மீட்சி என்ற பெயரால் ஆஸ்திரிய ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப் பட்டனர். மற்றைய நாடுகளில் தேசிய உணர்வும், சுதந்திர வேட்கையும் மலர்ச்சியுற்ற பொழுது அங்கே ஐக்கியமும், சுய

ஆட்சியும் கனிந்து பலன் தந்தன. ஆனால், ஆஸ்திரியாவிலோ இவ்வுணர்வுகள் ஒற்றுமைக் குலைவிற்கும், நாட்டின் சிதைவிற்குமே வழி வகுத்தன. 'போலந்தின் விதியைப் பொறுத்தது தான் ஐரோப்பாவின் எதிர்காலம்,' என்றான் நெப்போலியன். ஒரு சுதந்திர நாடு என்ற அந்தஸ்தினை இழந்து, பலம் வாய்ந்த அண்டை நாடுகளிடம் சிக்கிச் சீரழியும் நிலையைப் போலந்து மீண்டும் அடைந்தது. இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அடிப்படைக் கருத்து வேறுபாடுகளின் காரணமாகப் பிரிந்துபோன பெல்ஜியமும் ஹாலந்தும் நெதர்லாந்து அரசு என்ற பெயரில் பலவந்தமாக இணைக்கப்பட்டன. இதன் நோக்கம், ஃபிரான்சுக்கு எதிராக அதன் வடகிழக்கு எல்லையைப் பலப்படுத்துவதே எனக் கூறப்பட்டது. ஸ்விட்சர்லாந்தைப் பொறுத்தமட்டில் ஃபிரெஞ்சுப் புரட்சியால் உந்தப்பட்டு 'ஹெல்வெடிக்' குடியரசு அமைக்கப்பட்டது. ஆனால், 1815-ல் அவ்வாட்சிக்குப் பதிலாக வல்லரசுகளின் மேற்பார்வையில் ஒரு கூட்டிணைவு அமைக்கப்பட்டது. நாடுகளின் பரப்பு என்று பார்க்கும் பொழுது இவ்விதமாகப் பழைமை மீட்கப்பட்டது. நெப்போலியன் காலத்தில் ஐரோப்பாவெங்கும் பரவிய ஃபிரெஞ்சுப் புரட்சிக் கருத்துகளான தேசியம், சுதந்திரம் போன்றவை அழிக்கப்பட்டதன் மூலமும் பழைமை மீண்டது.

## (அ) வியன்னா மாநாடு (1815)

ஐரோப்பாவில் நெப்போலியனின் வீழ்ச்சிக்குப்பின் அமைதி நிலவிற்று. ஐரோப்பிய வல்லரசுகள் ஒன்றுகூடி ஆக்கபூர்வமான திட்டம் ஒன்றைத் தீட்டின. இத் திட்டத்து விதிகளை 20 ஆண்டு காலத்திற்குக் குலைக்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டை மேற்கொண்டன. 1814ஆம் ஆண்டு ஷாமான் என்ற இடத்தில் கூடி இந்த ஒப்பந்தத்தில் (Treaty of Chaumont) கையொப்பமிட்டனர். ஐரோப்பாவில் மீண்டும் நெப்போலியனின் மரபு அரசு கட்டிலில் ஏறக்கூடாது, நெப்போலியன் வீழ்ச்சிக்குப்பின் ஏற்படுத்தவிருக்கின்ற நாடுகளுக்கிடையேயான நில சம்பந்தமான மாற்றங்களை எவரும் மீறவோ மாற்றவோ கூடாது என்பனவே அவ்வொப்பந்தத்தின் விதிகள். நெப்போலியன் ஃபிரெஞ்சு அரியணை மீது தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் உள்ள உரிமைகளைத் துறந்த பின்னர் ஐரோப்பிய வல்லரசுகள் நிம்மதிப் பெருமூச்சுடன் அமைதியாக அமர்ந்து தங்கள் மனத்துக்கு இசைந்தவாறு ஐரோப்பிய வரைபடத்தை மாற்றியமைக்கும் பணியில் ஈடுபட்டன. முதலில் அவர்கள் எடுத்துக்கொண்ட நாடு ஃபிரான்சு ஆகும். பழைய போர்பான் அரச மரபை அரியணை ஏற்றிய நே . நாட்டினர், அதனோடு பழைய மதநிறுவனம் போன்றவற்றையுடு

ர்

உயிர்ப்பித்தனர். ஃபிரான்சின் நீண்டநாளைய கனவான இயற்கை எல்லைகள் என்ற இலட்சியத்தை நெப்போலியன் நிறைவேற்றியிருந்தான். ஆனால், அந்த இலட்சியத்திற்கு இப்போது ஊறு நேர்ந்திருந்தது. அந்த இயற்கை எல்லைகளேயும் அவற்றைச் சார்ந்த பகுதிகளேயும் ஃபிரான்சு இழக்க நேர்ந்தது. 1814ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் நாள் கையெழுத்தான 'முதற் பாரிஸ் உடன்பாடு' இப் பணியைச் செய்து ஃபிரெஞ்சு மக்களின் நெஞ்சங்களில் தீராத தாபத்தை ஏற்படுத்தியது. இவ் வுடன்பாடு சில சலுகைகளை ஃபிரான்சுக்கு அளித்தது. அதாவது, ஃபிரான்சு நிராயுதபாணி ஆக்கப்படவில்லை, இழப்பீட்டுத் தொகை தரும்படி வற்புறுத்தப்படவில்லை. இத்தாலியிலிருந்தும் ஜெர்மனியிலிருந்தும் அள்ளிக்கொண்டு வந்த கலைச்செல்வங்கள் கேட்கப்படவில்லை. ஆனாலும், மால்டா, மொரிஷஸ் இவைகளை இழந்தது; இந்தியாவிலிருந்த கோட்டைகளைத் தத்தம் செய்தது; டொபாகோ, செயின்ட் லூயிஸியா ஆகியவற்றையும், செயின்ட் டொமிங்கோவையும் இழந்தது. இவற்றை ஃபிரெஞ்சு மக்களால் ஏற்க முடியவில்லை.

ஃபிரான்சைத் தவிர மற்ற நாடுகளின் விதியைத் தீர்மானிக்க நேசநாட்டுப் பிரதிநிதிகள் வியன்னு நகரில் கூடிப் பேசுவதென ஒப்புக்கொள்ளப்பட்டது. வியன்னு விவாதங்களில் தனக்கும் பங்கு வேண்டுமெனக் கூறியது. புனர்வாழ்வு பெற்ற, மன்னிக்கப்பட்ட, பழைய முடியாட்சியைத் திரும்பவும் அடைந்த ஃபிரான்சின் பிரதிநிதியான தாலிரான் வல்லரசுகளுக்கிடையேயுள்ள கருத்து வேறுபாட்டை ஃபிரான்சிற்குச் சாதகமாக்கிக் கொள்வதில் முனைந்தார். இத் தருணத்தில்தான் நெப்போலியன் எல்பாவிலிருந்து திரும்பி 'ஒரு நூறு நாள்கள்' ஐரோப்பாவின் இதயத் துடிப்பை அதிகப்படுத்தினுன். ஆனால், ஜூன் மாதம் 18ஆம் நாள் வாட்டர் லூவிலிருந்து விரட்டப்பட்ட நெப்போலியன் வரலாற்றிடமும் விடைபெற்றுன். இம்முறை ஃபிரான்சைக் கருணையோடு நடத்த வெற்றி பெற்ற நாடுகள் விரும்பவில்லை. 'இரண்டாவது பாரிஸ் உடன்பாடு' 1815ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் கையொப்பமிடப்பட்டது. அதன்படி ஒரு போர் இழப்பீட்டுத் தொகை தரவும், அந்நிய நாடுகளிடமிருந்து எடுத்து வரப்பட்ட கலைச் செல்வங்களைத் திருப்பித் தரவும், வெற்றி பெற்றோரது பெரும்படை ஒன்றைத் தன் மண்ணில் வைத்துப் பராமரிக்கவும் ஃபிரான்சு ஒப்புக்கொண்டது. ஃபிரான்சின் எல்லைகள் மேலும் சுருங்கி எல்லைப்புரத்திலிருந்த சில முக்கியப் பகுதிகளையும் அது இழந்தது. ஆங்கிலேயப் பிரதிநிதிகளான காஸில்ரீ, வெல்லிங்டன் பிரபு ஆகியோரது ஆலோசனைகளின் பேரிலேயே மேலும் அவமானப்படுவதிலிருந்து ஃபிரான்ஸ் தப்பியது.

'வியன்னு உடன்படிக்கை'யானது வாட்டர்லூ போருக்கு முதல் நாள் அதாவது 1815ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இவ் வுடன்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது; ஏனெனில் எல்லா ஐரோப்பிய நாடுகளும்—துருக்கி நீங்கலாக அதில் பங்குகொண்டன. மேலும், சில குறிப்பிட்ட கொள்கைகளை உருவாக்கிக்கொண்டு அவற்றின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. 'வல்லமைச் சமநிலையைக்' காத்தல், ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பிருந்த ஐரோப்பாவை மீண்டும் உரு வாக்கி வாழ்விழந்த பழைய அரச பரம்பரையினரைத் திரும்பவும் அரியணையில் அமர்த்துதல், இழந்த பகுதிகளுக்குச் சமமாக இழப் பீடு தருதல் என்பவையே இம் மாநாட்டின் அடிப்படைக் கொள்கைகளாம். 1805ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாகக் கொள்ளப்பட்டு அவ்வாண்டில் ஒவ்வொரு நாட்டிற்கும் சொந்த மான பகுதிகள் அந்தந்த நாட்டிற்கே திரும்பத் தரப்பட வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. உண்மையில் இந்த வியன்னு மகாநாடு ஃபிரான்சுக்கு எதிர்ப்பாக அணி சேர்ந்தவர் களைப் பரிசு வழங்கிப் பாராட்டவும், அதன் நண்பர்களைத் தண்டிக் கவுமே முனைந்து பணியாற்றியது எனலாம். புரட்சி இயக்கங் களைத் தடை செய்வதன்மூலம் நீண்டகால அமைதியை அடைய லாம் என்றும் இம் மாநாடு கருதியது.

இம் மாநாட்டில் ஐரோப்பாவின் புகழ்வாய்ந்த அரசியல் தந்திரிகளும், பேரரசர்களும், சிற்றரசர்களும் கலந்துகொண்டனர். அரசர்களுள் ரஷ்ய மன்னர் முதலாம் அலெக்சாண்டர், பிரஷ்ய மன்னர் மூன்றும் ஃபிரடெரிக் வில்லியம், ஆஸ்திரியப் பேரரசர் முதலாம் ஃபிரான்சிஸ் ஆகியோர் முக்கியமானவர்கள். இங்கி லாந்து அமைச்சர்கள் காஸில்ரீயும், வெல்லிங்டனும், ரஷ்ய அமைச்சர் நெஸல்ரோடும், ஃபிரெஞ்சுப் பிரதிநிதி தாலிரானும் அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கவர்கள். மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நிகழ்ச்சிகளைச் சுமுகமாக நடத்தியவர் ஆஸ்திரிய அமைச்சரான மெட்டர்னிக் ஆவர்.

இந்த மாநாட்டின் நில சம்பந்தமான முடிவுகளைக் காண் போம்.

**ரஷ்யா :** கூட்டணி நாடுகளிலேயே அதிகமான சலுகைகளைப் பெற்ற நாடு ரஷ்யாதான். ரஷ்யாவின் செறிந்த படை பலம் இத் தகுதியை அதற்கு ஏற்படுத்தித் தந்தது. ரஷ்யா பிரஷ்யா விடமிருந்து கிடைத்த போலந்துப் பகுதிகளையும் ஸ்வீடனிட மிருந்து பின்லாந்தையும் பெற்றது. இப் பகுதிகள் ரஷ்யாவோடு இணைவதால் ரஷ்யாவின் பலம் ஓங்கி வல்லமைச் சமநிலை சீர்

கெடும் என காஸில்ரீயும் மெட்டர்னிக்கும் அஞ்சி எதிர்ப்புத் தெரிவித்தும் பயன் இல்லை.

**ஜெர்மனி :** ஜெர்மானியச் சிற்றரசுகளின் எண்ணிக்கையைக் குறைத்து 38 அரசுகள் கொண்ட ரைன் இணைப்பரசை நெப்போலியன் உருவாக்கினன். நெப்போலியனது இப் படைப்பு, ஜெர்மானியத் தலைமை குறித்து ஆஸ்திரியாவிற்கும் பிரஷ்யாவிற்குமிடையே போட்டி ஏற்பட்டதால் மாற்றமின்றித் தப்பித்துக் கொண்டது. ஆனல், ரைன் இணைப்பரசு ஜெர்மன் இணைப்பரசு என அழைக்கப்பட்டது. ஆஸ்திரியப் பேரரசரே இவ்வரசிற்குத் தலைவர். இவ் விணைப்பரசின் பொதுச்செயல்களை விவாதிக்க ஃபிராங்க்ஃபர்ட்டில் ஓர் அவை நிறுவப்பட்டது. இந்த ஜெர்மன் அரசுகளுக்கிடையே ஐக்கியத்தைப் பலப்படுத்தும் வேறு எந்த ஆலோசனையையும் மெட்டர்னிக் ஏற்க மறுத்துவிட்டார்.

**பிரஷ்யா:** பிரஷ்யா ஸாக்ஸனியில் பாதிப் பகுதியும், ஃபிரான்சின் பக்கமிருந்த எல்லையைப் பலப்படுத்த வேண்டி ரைன் நதிக் கரையோரப் பகுதிகள் சிலவற்றையும் அடைந்தது. ஸ்வீடனிடமிருந்து மேற்கு பாமொரேனியாவையும் பிரஷ்யா பெற்றது. முக்கியமான போலந்துப் பகுதிகளை ரஷ்யாவிடம் இழந்தாலும் போஸன், டான்சிக் ஆகியவற்றைப் பிரஷ்யா தன்னுடன் நிறுத்திக் கொண்டது.

**ஆஸ்திரியா :** ஆஸ்திரியா, நெதர்லாந்து என்று வழங்கப்பட்ட பெல்ஜியத்தை ஹாலந்திற்கு வழங்கி அதற்குப் பதிலாக இத்தாலியில் லம்பார்டி, வெனிஷியா, இல்லீரியா, டைரோல் ஆகிய பகுதிகளை அடைந்தது. இத்தாலியிலிருந்து மற்ற அரசுகள் ஆஸ்திரியாவின் தயவை நம்பி வாழும் நிலையை அடைந்தன. போலந்தின் ஒரு பகுதியான கலேஷியா ஆஸ்திரியாவிற்குத் தரப்பட்டது. இத்தாலியைச் சிதைத்து அங்கு ஐக்கியம் என்ற பேச்சே எழாதபடி செய்ய மெட்டர்னிக் விரும்பினர். அவ்விருப்பத்திற்கு வியன்னு மாநாடு ஆதரவு காட்டியது.

**ஹாலந்து:** ஃபிரான்சின் வடகிழக்கு எல்லையை வலுப்படுத்தும் நோக்கத்தோடு ஆஸ்திரிய நெதர்லாந்து, ஹாலந்துடன் இணைக்கப்பட்டது. இந்த நெதர்லாந்து ஐக்கிய அரசை மேலும் வலுப்படுத்த வளமிக்க குடியேற்றமான ஜாவாவை அதற்குத் திருப்பித் தந்தார் காஸல்ரீ. எல்லையை வலுப்படுத்த பிரிட்டனிடமிருந்து நிதி உதவியையும் பெற்றது இவ்வரசு. ஆனல், இந் நடவடிக்கை புத்திசாலித்தனமாக இருந்தபோதிலும் தோல்வியே அடைந்தது.

**இத்தாலி :** இத்தாலி ஐக்கியத்திற்கு வழி காட்டிய சார்தீனிய நாடு பியட்மான்ட், சேவாய், நீஸ், ஜினோவா ஆகிய பகுதிகளைப் பெற்றது. இதனால் ஃபிரான்சின் தென்கிழக்கு எல்லையில் வலிமைமிக்க நாடாக அது விளங்கியது. போப் ஆண்டவருக்குச் சொந்தமான பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு அவரது அரசு மீண்டும் உருவாயிற்று. நெப்போலியன் மனைவியான மரியா லூயிசாவிற்குப் பார்மா அளிக்கப்பட்டது. நேப்பிள்ஸ், டஸ்கனி, மொடெனா போன்ற சிற்றரசுகள் மீண்டும் உருவாக்கப்பட்டன.

**ஸ்வீடன் :** பின்லாந்தை ரஷ்யாவிற்குத் தத்தம் செய்த ஸ்வீடனுக்கு நார்வே அளிக்கப்பட்டது. நார்வேயை இழந்த டென்மார்க்கிற்கு வேறு ஒரு பகுதியும் கிடைக்கவில்லை. காரணம், நெப்போலியனோடு நட்புப் பூண்ட தவற்றைப் புரிந்தது அந் நாடு.

**ஹனோவர் :** ஹனோவர் ஓர் அரசாக அங்கீகரிக்கப்பட்டது. ஹனோவர் பிரபு அரச பதவி அடைந்தார்.

**ஸ்விட்சர்லாந்து :** மேலும் 3 கான்டன்களைப் பெற்ற ஸ்விட்சர்லாந்துக் கூட்டரசு புனர்வாழ்வு பெற்றது.

ஸ்பெயினும் போர்ச்சுகலும் பழைய அரச பரம்பரையினரின் கீழ் முடியாட்சியைப் பெற்றன.

**இங்கிலாந்து:** ஃபிரான்சு, ஹாலந்து, டென்மார்க், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் குடியேற்றங்களைக் கைப்பற்றிய இங்கிலாந்து அவற்றுள் பெரும் பகுதியைத் திருப்பித் தந்துவிட்டது. இருப்பினும் மால்டா, மொரிஷியசு, நன்னம்பிக்கை முனை, இலங்கை, ஹெனிகோலாந்து, அயோனியத் தீவுகள், ஹோண்டுராஸ், மலாக்கா ஆகியவற்றை பிரிட்டனே வைத்துக் கொண்டது. ஹாலந்திற்கு மட்டும் இழப்பீட்டுத் தொகையொன்றை அது தந்தது.

**மதிப்பீடு :** வியன்னா மாநாட்டில் ஆஸ்திரியா, ரஷ்யா, பிரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நான்கு நாடுகளுமே முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்பட்டாலும் ஃபிரெஞ்சுப் பிரதிநிதி தாலிரான் தமது நுணுக்கமான அரசியல் தந்திர அறிவு காரணமாகத் தன் நாட்டின் செல்வாக்கு குறைந்து விடாமல் காத்துக்கொண்டார். மேலே குறிப்பிட்ட நான்கு நாடுகளில் பிரிட்டன் மற்ற நாடுகளோடு எல்லா விவகாரத்திலும் ஒத்துப்போக முடியவில்லை. மேலும் காஸல்ரீயும் வெல்லிங்டனும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் முழு ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. பிரஷ்ய மன்னர் மூன்றும் ஃபிரடெரிக் வில்லியமோ ரஷ்ய மன்னரின் அடியொற்றிச்

செல்வதையே விரும்பினர். தமக்கென ஒரு வழி வகுத்துக் கொள்ளவில்லை அவர். எனவே, ரஷ்ய மன்னர் அலெக்சாண்டரும், மெட்டர்னிக்குமே வியன்னா நாடகத்தில் முக்கியப் பங்குகளை ஏற்க வேண்டி வந்தது. இவ்விருவரிலும் மெட்டர்னிக்கே பிறரை வசீகரிக்கும் தன்மையாலும், அரசியல் தந்திரம், அனுபவம், திறமை இவற்றாலும், பிறர் மனத்தை ஊடுருவி உண்மையை அறியும் ஆற்றலாலும், சூழ்ச்சித் திறனாலும் முதலிடத்தைப் பெற்றார். ஒளி அலையாடும் நீர்ச்சுழலை ஒத்த வியன்னா மாநாட்டில் ஒரு மீனைப் போல் நீந்திக் களிக்க அவரால் முடிந்தது. ஒரு நெருக்கடியான நிலையில் அழகான சொல் அடுக்குகள் என்ற தங்கமயமான பனி மூட்டத்தில் மூடிச் சமாளித்துவிடும் திறமை அவரிடம் இருந்தது. பொதுவாக மெட்டர்னிக் ஒரு சூழ்ச்சிக்காரர் என்றும், சந்தர்ப்பவாதி என்றும், மெருகிடப்பட்ட துரும்பு என்றும் தூற்றப்படுகிறார். அலெக்சாண்டர் அவரைப் 'பொய்யர்' என்று கூற, குடியரசுவாதிகளும் உரிமைவாதிகளும் மக்களது விருப்பத்தை மதிக்காத, காலத்தின் தேவையை உணராத பிற்போக்குவாதி என்று முடிவு கட்டினர். மெட்டர்னிக் ஓர் ஆஸ்திரிய அமைச்சர் என்பதையும், எனவே ஆஸ்திரியாவின் நலனே அவர் கொள்கைக்கு வடிவம் தந்தது என்பதையும் நாம் மறக்கக்கூடாது. ஆஸ்திரிய நாடு என்பது பலவகையான அரசுகளை உள்ளடக்கிக்கொண்டிருந்தது. திருமணப் பரிசாகவோ போர் அல்லது அரச தந்திர விளைவாகவோ வல்லமைச் சமநிலை அல்லது துருக்கிக்கு எதிராகக் கிறித்தவ உலகின் ஒட்டுமொத்தமான எதிர்ப்பு அணி என்ற பெயரிலோ, இப் பகுதிகள் ஆஸ்திரியாவோடு இணைக்கப்பட்டிருந்தன. ஒரு தலைவனுக்கு மக்கள் அனைவரும் பணிய வேண்டும் என்ற ஓரே கொள்கைதான் இப் பகுதிகளை எல்லாம் ஆஸ்திரியாவோடு இணைக்கும் பசையாக இருந்தது. ஃபிரான்சில் தோன்றியதைப்போல் மக்களது தேசிய எழுச்சி தோன்றினால் ஆஸ்திரியா மிக மோசமாகப் பாதிக்கப்படும் என்பதை உணர்ந்திருந்த மெட்டர்னிக், தேசிய உணர்வைத் தன் எதிரியாக மதித்ததில் வியப்பில்லை. ஆஸ்திரியப் பேரரசு ஃபிரெஞ்சுப் பேரரசோடு மோதிக்கொண்டிருந்த நெருக்கடியான கட்டத்தில் ஒவ்வொருவரும் மனம் தளர்ந்து தடுமாறிக்கொண்டிருக்கையில் மெட்டர்னிக் ஆஸ்திரியக் கொள்கைக்கு உரமூட்டி, சரியான பாதையில் அந் நாட்டை நடத்திச் சென்றதால், இறுதியில் 'நெப்போலியனை வெற்றி கண்டவர்' என்ற பெயரையும் அடைய முடிந்தது. அது போன்றே புதிய அபாயங்களைக் குறித்து விழிப்புணர்வோடு ஜெர்மனியிலும் இத்தாலியிலும் தலைதூக்கிய தேசிய, ஜனநாயக இயக்கங்களை அவர் நசுக்கினார். பால்கன் மக்களது உரிமை உணர்வைக் குழிதோண்டிப் புதைத்தார்; ரஷ்ய மன்னரது பால்கன் விடுதலைபற்றிய திட்டங்களை நிறைவேறாது தடுத்தார்.

அதேநேரத்தில் வளர்ந்துவிட்ட ரஷ்யாவின் பலத்தையும், தேய்ந்துவிட்ட ஃபிரான்சின் பலத்தையும், உலகெங்கும் வியாபித்து விட்ட பிரிட்டனின் கடல் வலிமையையும் மனத்தில் கொண்டு ஐரோப்பிய வல்லமைச் சமநிலை பாதிக்கப்படாதவாறு ஐரோப்பிய அரசியல் அரங்கை மாற்றியமைப்பதில் அவர் கவனம் செலுத்தினர்.

(மெட்டர்னிக்கின் குறிக்கோள்) போரைப் பொறுத்தவரை தெளிவாகவும் ஏற்புடையதாகவும் இருந்தது. ஆனால் சமாதானம் பற்றிய அவரது குறிக்கோள் பின்வந்த சந்ததியினரால் புரிந்துகொள்ள முடியாததோடு, குறையுள்ளதாகவும், கடுமையானதாகவும், சந்தர்ப்பவாதமாகவும் காட்சியளித்தது. 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்கு முன்பே தன் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தை ஆஸ்திரியா உணர்ந்திருந்தது. இரண்டாம் ஜோசப் தன் ஒளிசான்ற அரசின் மூலம் அத் தேவையை நிறைவேற்ற முயன்று தோற்றான். ஜோசப்பால் பெறமுடியாத வெற்றியைத் தேசியமும் ஜனநாயகமும் அடைய முடியாது என்பதை மெட்டர்னிக் தெளிவாக உணர்ந்திருந்தார். எனவேதான் ஆஸ்திரியப் பிரச்சினையை ஒரு வலுவான அயல் நாட்டுக் கொள்கை மூலம் அணுகித் தீர்வுகாண முயன்றார். இருப்பதைக் காப்பதற்காக ஐரோப்பியச் சமுதாயத்தை மாறாமல் வைத்திருப்பதன்மூலம் ஆஸ்திரியாவின் வலிமையைப் பாதுகாக்க அவர் திட்டம் தீட்டினர். அவர்மேலுள்ள தலையாய குற்றச்சாட்டு ஆஸ்திரியப் பேரரசின் நலத்திற்காக, ஜெர்மனியும் இத்தாலியும் ஐக்கியமும் முன்னேற்றமும் அடையாதவாறு தடுத்தார் என்பதாகும். அவரைக் கடுமையாகச் சாடிய ஐரோப்பா நாற்பது ஆண்டுக் காலத்திற்கு அமைதியில் திளைத்ததென்றால் அதற்குக் காரணம் மெட்டர்னிக்கே என்பதை மறுக்க முடியுமா? மெட்டர்னிக்கின் பாதையிலிருந்து விலகியதால்தான் ஹேப்ஸ்பர்க்குகள் அழிவை விரைவில் அணைத்துக்கொள்ள நேர்ந்தது. இன்று ஐரோப்பாவில் ஜெர்மனியின் ஆதிக்கம் வீழ்த்தப்பட்டபின் ஃபிரான்சும் பிரிட்டனும் வலிமை இழந்து ஒடுங்கியபின் துண்டாடப்பட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் சிறு நாடுகள் செல்வாக்கில் உயர்ந்துவரும் ரஷ்யாவுடன் ஒத்துப்போக முயன்று வரும் வேளையில் மெட்டர்னிக்கின் சமப்படுத்தப்பட்ட ஐரோப்பியர் சமுதாய சித்தாந்தத்தின் அருமை பெருமை தெளிவாய்ப் புலப்பட்டது.

மெட்டர்னிக்கிற்கு அடுத்தாற்போல் வியன்னா மாநாட்டில் செல்வாக்கைப் பெற்றவர் ரஷ்ய மன்னர் முதலாம் அலெச்சாண்டர் ஆவர். நெப்போலியனது வீழ்ச்சி நாடகத்தில் அவர்

செய்த பணி ஐரோப்பிய அரங்கில் இதுவரை எந்த ரஷ்ய மன்னரும் பெற்றிராத செல்வாக்கை உருவாக்கித் தந்தது. இதனால், ரஷ்யா விற்கு ஐரோப்பியத் தலைமை வந்துசேர்ந்தது. இத் தலைமையினைக் கண்ட இங்கிலாந்தும் ஆஸ்திரியாவும் பதட்டமடைந்தன. அத் துடன் நில்லாது அதைக் குறித்துப் பெரிதாகச் சித்தரித்துப் பேசி வந்தன. ஆனால், இவர்கள் அஞ்சிய அளவிற்கு அரசியல் திறம் படைத்தவரல்லர் மன்னர் அலெக்சாண்டர். தன் காலத்தவருக் கும் புதிராக விளங்கிய அவர், நடைமுறைக்கு ஒவ்வாத கற்பனை களில் மூழ்கி உலவுபவராகவும் கொண்ட கொள்கையை நிறை வேற்றித் தீருவது என்ற உறுதிப்பாடு இல்லாதவராகவும், அலை பாயும் மனப்போக்குடையவராகவும் விளங்கினர். இவற்றால் அவர் தம் காலத்தவர் கண்முன் ஏமாற்றுக்காரராகவும், நம்பக் கூடாதவராகவும், அபாயகரமானவராகவும் காட்சியளித்தார். அவரிடம் ஏகாதிபத்ய உணர்வு மிகுந்திருந்தபோது பின்லாந்து போன்ற அண்டை நாடுகளை எல்லாம் ரஷ்யாவுடன் இணைத்து ரஷ்ய நிலப்பரப்பை விரிவாக்கவேண்டும் என்றும், நெப்போலியனுடன் கூட்டு சேர்ந்துகொண்டு, துருக்கியைப் பங்குபோட்டுக் கொள் ளவும், ஆசிய நாடுகளை எல்லாம் கபளீகரம் செய்யவேண்டும் என்ற வேட்கைகொண்டும் இருந்தார். ஆனால், தாராள உணர்வு மிகுந்திருந்தபோதோ பின்லாந்திற்கு அரசியலமைப்பை அளித் தார்; போலந்திற்கு மறுவாழ்வு அளிக்கத்திட்டமிட்டார்; ரஷ்யா வில் இருந்துவந்த நிலக்கூலிகளுக்கு விடுதலை அளிக்க முயன்றார்; அடிமைநிலை அகற்றும் பணிக்கு ஆதரவளித்தார்; புரட்சி வந்து விடுமோ என்ற அச்சமும், சமயத்தின்பால் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுமே அவரது தாராள மனப்போக்கிற்குக் காரண மாகவிருந்தன. அவர் படைகள் பிறரிடம் தோல்வியுறும்போது இறைவன் தன்மீது கொண்ட கோபத்தால் தோல்வி விளைந்தது என எண்ணினர். ரஷ்யாவின்மீது போர்தொடுத்த நெப்போலி யன் படைகள் தோற்றுத் திரும்பும்போதோ, நெப்போலியனைத் தோல்வியுறச்செய்யும் பணியை முடித்துவைக்க இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தாம் என எண்ணினர். வெற்றி பெறுவதற்காகவே பிறந்தவர், ஐரோப்பாவிற்கு விடுதலை அளித் தவர், மக்களது அன்பும் ஆதரவும் பெற்ற ஆண்டவனது படை வீரர், என்றெல்லாம் மக்களால் புகழப்பட்டு, 1815ஆம் ஆண்டில் புகழின் உச்சநிலையை எய்தினர் அலெக்சாண்டர். வியன்னா உடன்பாட்டில் இவருக்கிருந்த செல்வாக்கின் காரணமாக உயர்ந்த இலட்சியக் கருத்துகளும் பொருளற்ற படாடோபமான சொற் கோவைகளும் நிறைந்திருந்தன. சமுதாய அமைப்பிற்குப் புத் துருவம் தருதல், ஐரோப்பாவின் அரசியல் முறையை மாற்றி அமைத்தல், படைவலிமையை நியாயமாக மறுபங்கீடு செய்வதன்

மூலம் நிலையான அமைதியை ஏற்படுத்துதல் என்பன போன்ற அழகான சொல்லடுக்குகள் மக்கள் மனம் மயங்கித் தடுமாற்றம் அடையச் செய்வதற்கும் வியன்னு மாநாட்டில் உயர்ந்த பெருந் தன்மையான தோற்றத்தைத் தரவுமே பயன்படுத்தப்பட்டன. இம் மாநாட்டின் உண்மையான நோக்கம் தோற்றவர்களது செல்வத்தையும் பிறவற்றையும் வென்றவர்கள் பங்குபோட்டுக் கொள்வதே என அம் மாநாட்டுச் செயலாளரான கென்ட்ஸ் (Gentz) கூறிய கருத்து அடிக்கடி எடுத்தாளப்படுகிறது. இக் குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கலாம். ஆனல், நெப் போலியன் காலத்து ஃபிரான்சு தன் எதிரிகளை நடத்திய முறை யுடன் ஒப்பிட்டுக் காணும்போது வியன்னு மாநாட்டினர் ஃபிரான்சைப் பெருந்தன்மையுடனேயே நடத்தினர் என்பதை மறுக்கமுடியாது.

ஃபிரெஞ்சுப் புரட்சி அளித்த ஜனநாயகம், தேசியம் என்ற மகத்தான இரு சக்திகளின் ஆற்றலை உணராததுடன் அவற்றை நசுக்க முற்பட்டது இம் மாநாடு என்பது இதன் மீதுள்ள மற்ருெரு குற்றச்சாட்டாகும். வல்லமைச் சமநிலையைப் பாதுகாப்பதில் ஆர்வம் கொண்டிருந்த அவர்கள் பொதுமக்களின் உணர்வுகளை மதிக்கத் தவறினர் என்பது இன்னுமொரு குற்றச்சாட்டு ஆகும். நெப்போலியன் போன்ற கொடுங்கோலர்கள் இனி தோன்றக் கூடாது என்ருல் அக் கொடுங்கோலன் தோன்றுவதற்குக் காரண மாக விளங்கிய ஜனநாயகத்தையும் தேசியத்தையும் அழித்து நசுக்குவதே சிறந்தது எனத் தாங்கள் கொண்ட முடிவுக்கு ஒரு நியாயத்தை அமைத்துக் கொண்டனர் இம் மாநாட்டினர். எனினும், இம் முடிவு தவருனது என்பதில் ஐயமில்லை. போலந்து மக்கள் மிக ஆர்வத்துடன் தங்களது பிரிக்கப்பட்ட நாட்டின் பகுதிகள் மீண்டும் இணைக்கப்பட்டுப் பழைய போலந்தாக உரு வாக்கித்தரும் இம் மாநாடு என எண்ணினர். ஆயினும் அது நடக்கவில்லை. சமயம், இனம், வாழ்க்கைமுறை, பண்பாடுகளால் வேறுபட்டிருந்த பெல்ஜியத்தை அந் நாட்டு மக்களின் உணர்வு களைப் புறக்கணித்து ஹாலந்துடன் இணைத்து பெல்ஜிய மக்களின் தீராத வெறுப்புணர்ச்சிக்கு ஆளாயிற்று. இதுபோலவே நார்வே மக்களது விருப்பத்திற்கு மாருக, நார்வே ஸ்வீடனுடன் இணைக் கப்பட, அவர்கள் 90 ஆண்டுக் காலம் போராடிப் பின் ஸ்வீடனின் பிடியிலிருந்து விடுதலை பெறும் நிலைக்கு உள்ளாக்கிற்று வியன்னு மாநாடு. நெப்போலியன் காலத்தில் ஐக்கியமாயிருந்த இத்தாலி யின் ஒற்றுமை நிலையைக் குலைத்தனர்; ஜெர்மனிக்கு ஒரு நிலை யான ஏற்பாட்டினைச் செய்துதரத் தவறிவிட்டனர். மாநாட்டி னர். இத்துணைத் தவறுகளை இம் மாநாடு புரிந்திருப்பினுங்கூட எதிர்காலத்தில் ஐரோப்பா உருவாவதற்கு வேண்டிய உண்மை

யான வலுவான அடிப்படையைத் தந்து 40 ஆண்டுக் காலத்திற்கு அமைதியைக் காத்தது என்பதே இதன் பெருமைக்குச் சான்ருக நிற்கும்.

## (ஆ) பிற்போக்கு அணிகள்
## (The Concert of Europe)

வியன்னு மாநாட்டு விதிகளைக் கடைப்பிடிப்பதில் எல்லா ஐரோப்பிய நாடுகளும் ஒருங்கிணைந்து உத்தரவாதம் அளிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனுல், இவ்வுத்தரவாதம் ஏட்டளவில் மட்டுமன்றி நடைமுறையிலும் வரவேண்டுமென்பதற்காகச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை அந்நூற்ருண்டில் சுவைமிக்க சில அரசியல் பரிசோதனைகளுக்கே காரணமாயின. அவற்றுள் முதலாவது, ஸார் அலெக்சாண்டரின் கற்பனையில் உருவாகிய 'புனிதக் கூட்டணி'யாகும் (Holy Alliance). 1815ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் நாள் பாரிசுக் கருகே கூட்டணி நாடுகளுடைய துருப்புகளின் முன் நிலையில் புனிதக் கூட்டணிப் பத்திரம் ரஷ்யா, ஃபிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய மூன்று நாடுகளால் கையெழுத்திடப்பட்டது. ஐரோப்பிய நாடுகளனைத்தும், கிறித்தவச் சமயத்தின் பெயரால் ஒன்று சேர்ந்து, சகோதரர்களைப் போலவும் ஒரு பெரும் கிறித்தவ நாட்டின் மக்களைப் போலவும் அன்போடு பழகி, சமயம், நீதி, அமைதி இவற்றைக் காப்பதற்காக ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் என்பதே இப் புனிதக் கூட்டணியின் தத்துவமாகும். சமய விளக்கின் துணையோடு அரசியல் பாதையில் எல்லோரும் இணைந்து நடக்கக்கூறும் இக் கொள்கைக்கு ஐரோப்பாவில் பல விதமான வரவேற்புக் கிடைத்தது. இப் பத்திரத்தில் போப் ஆண்டவரும், துருக்கி சுல்தானும் மட்டுமே கையெழுத்திடவில்லை. அதில் குறிப்பிட்டுள்ள புனிதக் கொள்கைகளிடம் தனக்குள்ள அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்ட பிரிட்டன், அதில் கையெழுத்திட மரியாதையுடன் மறுத்துவிட்டது. இப் பத்திரம் உரிமைக்கொள்கைக்கு எதிராக இல்லாமற்போயினும், ஓர் அரசியல் துணைவன் என்ற வகையில் பயனற்றதாகவும், அரச தந்திரக் கருவி என்ற வகையில் தோல்வியாகவும் முடிந்தது. உண்மையில் அலெக்சாண்டரைத் தவிர்த்து வேறு யாருமே இதற்கு முக்கியத்துவம் தரவில்லை. மெட்டர்னிக்கின் கருத்துப்படி இது அதிக ஓசை எழுப்பும் பொருளற்ற ஒன்ருகும். காஸல்ரீ இன்னும் மோசமானதாக ('A Piece of Sublime, Mysticism and Nonsense') என்று வருணித்தார். அலெக்சாண்டரின் கற்பனையில் உதித்த இத் திட்டத்தின் உடலற்ற ஆன்மாவிற்கு ஓர் உடலை அளிக்க அவர் எவ்வளவோ முயன்ருர். ஆனுல், இது இறுதிவரை ஒரு

பக்திபூர்வமான நிறைவேருத இலட்சியமாகவும், நடைமுறைக்குக் கொண்டுவர முடியாத ஏட்டுச் சுரைக்காயாகவும் இருந்துவிட்டது.

ஆனல், மெட்டர்னிக்கின் அரசியல் தந்திர அறிவின் கனியான 'நால்வர் கூட்டணி' (Quadurupple Alliance) என்ற கருத்து, நிறித்தவ இலட்சியங்கட்குப் பதில் வல்லரசுகளின் சர்வாதிகாரம் என்பதைப் புகுத்தி நடைமுறைக்கு ஒத்த கருத்தாக விளங்கியது. ஃபிரான்சோடு செய்யப்பட்ட உடன்பாடுகளை நிறைவேற்றிக் காப்பதற்காக ரஷ்யா, ஃபிரஷ்யா, ஆஸ்திரியா, பிரிட்டன் ஆகிய நான்கு நாடுகளும் ஓர் ஒப்பந்தத்தால் ஒன்றுபட்டன. ஐரோப்பிய அமைதியைக் காக்கவும் தத்தம் நாடுகளின் முன்னேற்றத்துக்கான பொதுவான விவகாரங்களை விவாதித்து முடிவு செய்யவும் அவ்வப்போது கூட்டங்களைக் கூட்டுவதெனத் தீர்மானித்தது. இக் கூட்டணி உண்மையிலேயே கூடிப்பேசி விவாதிப்பதன்மூலம் சர்வதேசக் கூட்டுறவை ஏற்படுத்த முயற்சி செய்தது. எனினும், அப்போதைய வல்லரசுகளின் தன்னலமே எல்லாவற்றிற்கும் முன்னிலை வகித்தது என்பதை மறுக்க முடியாது. இரண்டாவது பாரிசு உடன்பாட்டையும் வியன்னு ஏற்பாட்டையும் இருபதாண்டுக் காலத்திற்குப் பாதுகாப்பது என்பதே இவ்வுடன்பாட்டின் ஆரம்ப நோக்கமாயிருந்தது.

**அய்லா லாப்பல் மாநாடு :** இக் கூட்டணியின் திட்டத்தின்படி முதல் மாநாடு பழம்பெரும் நகரமான அய்லா லாப்பலில் 1818ஆம் ஆண்டில் கூடியது. இம் மாநாடு முதலில் எடுத்துக் கொண்ட பிரச்சினை ஃபிரான்சின் நிலை பற்றியதாகும். ஃபிரான்சின் நட்பை ஏற்று அதைக் கூட்டணியில் சேர்த்துக் கொள்வதென முடிவாயிற்று. இதன் முதல் விளைவு, நால்வர் கூட்டணி ஐவர் கூட்டணியானதேயாகும். ஃபிரான்சிலிருந்து அன்னியத் துருப்புகள் அகற்றப்பட்டன. நார்வே, டென்மார்க் ஆகிய நாடுகளின் விஷயத்தில் வியன்னு ஏற்பாட்டு விதிகளைப் புறக்கணித்ததற்காக ஸ்வீடன் மன்னர் பெர்னடட் விசாரிக்கப்பட்டார். ஹெஸ்ஸியின் (Elector of Hesse) தேர்வாளர் தமக்கு மன்னர் பட்டம் தரப்பட வேண்டுமென விடுத்த விண்ணப்பம் பேராசை மிக்கதென ஒதுக்கப்பட்டது. ஆஸ்திரியாவிலும், ஃபிரஷ்யாவிலும் யூதர்கள் நடத்தப்படும் விதம் பற்றியும் விவாதிக்கப்பட்டது. ஸ்பெயினுக்குச் சொந்தமான தென் அமெரிக்கக் குடியேற்றங்களின் புரட்சிபற்றிய பிரச்சினையும் விவாதிக்கப்பட்டது. இக் குடியேற்றங்கட்கும் பிரிட்டனுக்குமிடையே வியாபாரத் தொடர்புகள் வளர்ந்துவிட்டிருந்தன. அவ்வுறவுகள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டுமென பிரிட்டன் கோரியது. அதேபோன்று வட ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பார்பெரி கடற்

கொள்ளைக்காரர்கள் தெற்குக் கடலோரப் பகுதிகளில் அட்டூழியம் செய்வதைத் தடுக்கும் முறைகளும் ஆராயப்பட்டன. அவர்களை முறியடிக்க ரஷ்யக் கப்பல்கள் மத்தியதரைக் கடலுள் புகுவதை பிரிட்டன் முழுமூச்சோடு எதிர்த்தது. இதனால் அடிமை வியாபாரத்தை ஒழிப்பதற்காக எல்லா நாட்டுக் கப்பல்களையும் சோதனையிடும் உரிமை தனக்கு வேண்டுமென பிரிட்டன் கேட்டபோது, மற்றவர்கள் அதற்கு ஆதரவு தரவில்லை. இந்தக் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் ஒன்றுபட்டு இருக்கிறோம் என்ற உணர்வோடு மாநாடு கலைந்தது.

இம் மாநாட்டினால் பெருமிதமும் புதுத்தெம்பும் அடைந்த மெட்டர்னிக், ஜெர்மனியில் தலைதூக்கிய கிளர்ச்சியைக் கொடிய அடக்குமுறையால் அடக்கினார். இதை வன்மையாகவும் வெளிப்படையாகவும் காஸல்ரீ எதிர்த்தபோதே கூட்டணியில் விரிசல் கண்டது.

**த்ரோபா மாநாடு :** 1820ஆம் ஆண்டு ஆஸ்திரியாவில் த்ரோபா (Troppau) என்ற இடத்தில் இரண்டாம் முறையாக மாநாடு கூடியது. இம் மாநாடு கூட்டப்படுமுன் ஸ்பெயினிலும், நேப்பிள்சிலும் உரிமைகள் நிறைந்த அரசியல் அமைப்புக் கோரி, மக்கள் கிளர்ச்சிகள் செய்து, தாங்கள் விரும்பியதை அடைந்தனர். இந்தப் புரட்சித் தொற்றுநோய், ஆஸ்திரியாவிற்குட்பட்ட மற்ற நாடுகளிலும் பரவிவிடுமோ என அஞ்சிய மெட்டர்னிக் அப்படிப்பட்ட நிலை ஏற்படாதவாறு தடுத்துக்கொள்ள நினைத்தார். அத விளைவுதான் இம் மாநாடு. இம் மாநாட்டில் கிளர்ச்சி தோன்றும் நாடுகளுக்கும் கூட்டணிப் படைகள் சென்று அதை அடக்கும் உரிமை வேண்டுமென மெட்டர்னிக் கூறினார். பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் இவ்விதம் தலையிடுவதைக் காஸல்ரீ ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு முடிவுக்கும் வராமல் கலைந்த பிரதிநிதிகள் 1821ஆம் ஆண்டு லெய்பாக்கில் (Laibach) கூடினர்.

**லெய்பாக் மாநாடு :** லெய்பாக்கில் கூடிய மாநாடு நேப்பிள்சில் தோன்றிய புரட்சியை ஒடுக்கி அதன் அரசன் பெர்னாண்டைத் திரும்பவும் அரியணையில் அமர்த்தும் பணியை ஆஸ்திரியாவிடம் ஒப்படைத்தது. சில வாரங்களில் ஆஸ்திரியப் படைகள் நேப்பிள்சில் நுழைந்து புரட்சித் தீயை அணைத்துப் பெர்னாண்டை அரசனாக்கின. பியட்மாண்டிலும், ஆஸ்திரியாவின் இரும்புக்கரம் நீண்டு அங்கு முளைவிட்ட உரிமை ஆட்சியையும் கிள்ளி எறிந்தது.

**வெரோனா மாநாடு :** அடுத்த மாநாடு வெரோனாவில் கூடுமுன் ஒரு முக்கிய சம்பவம் நடந்தது. துருக்கியின்கீழ் இருந்த

கிரீசில் புரட்சி வெடித்தது. ரஷ்ய மன்னர் அலெக்சாண்டர் பால்கன் பிரச்சினையை ரஷ்ய அரசியலின் ஓர் அங்கமாகக் கருதுபவர். மெட்டர்னிக் ஆஸ்திரியாவை இத்தாலியில் தலையிடும்படி செய்தது எவ்வளவு சரியானதோ, அதைப் போன்றதே ரஷ்யா துருக்கியில் தலையிடுவதும் என்று அவர் திடமாக நம்பினர். ஆனல், இத் தலையீட்டை மெட்டர்னிக் அடியோடு ஆட்சேபித்தார். பிரிட்டனும் அவர் கருத்தை ஏற்றதால் ரஷ்யா துருக்கியில் தலையிடுவதை மெட்டர்னிக் தடுக்கமுடிந்தது. மேலும், அப் பிரச்சனையே வெரோனு மாநாட்டில் எழாதவாறு பார்த்துக்கொள்ளவும் அவரால் முடிந்தது. 1822ஆம் ஆண்டு வெரோனுவில் கூடிய மாநாடு ஸ்பானிய பிரச்சினையையே முக்கியமானதாகக் கருதியது. இம் மாநாட்டில் ஃபிரான்சு ஸ்பெயினில் தலையிடும் உரிமை தனக்கு வேண்டுமெனக் கூறியது. இதைக் கடுமையாக எதிர்த்தது இங்கிலாந்து. காஸல்ரீயின் மரணத்திற்குப்பின் வெளியுறவு அமைச்சராகப் பதவி ஏற்ற கானிங், போர்பான் குடும்ப உடன்பாடு புதுப்பிக்கப்படுவதைக் கண்டு அஞ்சி ஃபிரான்சிற்கு ஸ்பானிய உள்நாட்டு விவகாரத்தில் தலையிடும் உரிமை தரக்கூடாதெனக் கடுமையாக எதிர்த்தார். தன் ஆலோசனைக்கு எதிராக மாநாடு முடிவெடுத்தால் அதற்கு இங்கிலாந்து எவ்வகையிலும் பொறுப்பாளியல்ல என்பதை அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இதனுல் மாநாடு பொதுவான ஒரு நடவடிக்கை எடுக்கமுடியாமற் போயினும் ஃபிரான்சு தனித்துத் தலையிடுவது என்ற முடிவினின்றும் பின்வாங்கவில்லை. 1823ஆம் ஆண்டு ஃபிரான்சு ஸ்பெயின்மீது படையெடுத்தது. ஆறு மாதங்களில் முடியாட்சி அங்கு நிலைநாட்டப்பட்டது. 1812ஆம் ஆண்டைய அரசியல் அமைப்பு மண்ணில் புதைந்தது. ஃபிரெஞ்சு உதவியால் திரும்பவும் ஸ்பானிய அரியணை ஏறிய ஏழாம் ஃபெர்டிணண்டு ஸ்பானிய, அமெரிக்கக் குடியேற்றங்கள் பற்றிய பிரச்சினையிலும் தனக்கு உதவும்படி வல்லரசுகளைக் கோரினுன். இந்த முயற்சியில் இங்கிலாந்து பங்கு கொள்ளாதெனக் கண்டிப்புடன் கூறினுர் கானிங். இதே நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஜனுதிபதியான மன்ரோ தமது புகழ்பெற்ற அயல்நாட்டுக் கொள்கையை வெளியிட்டார். புதிய உலகான அமெரிக்காவில் மற்ற எந்த நாடும் தலையிடுவதை ஐக்கிய நாடுகள் பொறுமையோடு ஏற்காது என்பதே அக் கொள்கையின் சாரம். இதைத் தொடர்ந்து ஸ்பானிய, அமெரிக்கக் குடியேற்றங்களின் விடுதலையை அமெரிக்க ஐக்கியநாடும் இங்கிலாந்தும் அங்கீகரித்தன. இதன் பின்னரும் மாநாட்டு முறை செத்துவிடவில்லை. 1824ஆம் ஆண்டு ரஷ்ய மன்னர் கிரேக்கப் பிரச்சினைகளைக் குறித்து ஆராய ஒரு மாநாட்டைக் கூட்டினுர். இங்கிலாந்து இதில் சேர மறுத்தது.

மற்ற நான்கு பெரும் அரசுகள் 1825ஆம் ஆண்டு பீட்டர்ஸ் பர்க்கில் கூடின. இம் மாநாடு பலத்த தோல்வியாக முடிந்தது. இதையே மாநாட்டு முறையின் இறுதி எனக் கொள்ளலாம். ஐரோப்பா, மெட்டர்னிக்கால் போர்த்தப்பட்டிருந்த மாநாட்டு முறை என்னும் பாசத்திலிருந்து விடுபட்டது. மாநாட்டு முறை சரிந்து விழ முதற்காரணம் இங்கிலாந்து ஒத்துழைக்க மறுத்ததே ஆகும். பிறநாட்டு உள் விவகாரங்களில் வன்முறையாகத் தலையிடுவதையும், சிறிய நாடுகளின் நலன்கள் பலியிடப்படு வதையும் இங்கிலாந்து வெறுத்தது. கானிங் இந்தக் கூட்டு முயற்சிக்குப் பதில் ஒவ்வொரு நாடும் தத்தம் விவகாரங்களில் மட்டும் ஈடுபடுவதே நல்லது என்று கூறும், 'ஒவ்வொரு நாடும் அதற்கே; கடவுள் நம் எல்லோருக்கும்' என்ற புதிய கொள்கையை ஐரோப்பாவிற்கு அளித்தார்.

மாநாட்டு முறை மடிந்துபோயினும் அதன் மதிப்புகளை நாம் மறக்கலாகாது. பரஸ்பர நம்பிக்கையோடு அனைவரும் ஒன்றுகூடிக் கருத்துப் பரிமாற்றம் செய்வது என்பது ஒரு சிறந்த கொள்கை. காஸல்ரீயும் மெட்டர்னிக்கும் இக் கொள்கையை ஆதரித்தனர். அலெக்சாண்டரோ இவர்களை விட்டு வெகு தொலைவிற்கு மிக வேகமாகச் சென்றார். 1826ஆம் ஆண்டிற்குப் பிறகு மக்களது உரிமைகளை நசுக்குவதையே முக்கியப் பணியாக இம் மாநாடு கருதியது. இதை இங்கிலாந்தால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. சிறிய நாடுகளும் எதிர்த்தன. மேலும் தங்கள் தங்கள் நலன் பாதிக்கப்படக் கூடாது என்பதில் காட்டிய அக்கறையை ஐரோப் பியப் பொதுவிவகாரத்தில் காட்ட வல்லரசுகள் தவறின. சர்வ தேச அமைதியைக் காக்க ஒன்றுபடுதல் என்ற இலட்சியத்தை இம் மாநாட்டு முறை அளித்தது. ஆனால், நெப்போலியனது போர்கள் காரணமாகத்தான் இந்த ஒற்றுமை நிகழ்ந்தது என் பதை நாம் மறக்க முடியாது. எனவேதான் மாநாட்டு முறை என்ற இப் பரிசோதனை ஐரோப்பாவில் ஒரு கணம் ஒளிவீசி அடுத்த கணமே மங்கிப்போகிற நெருப்புப் பொறியைப் போலக் கால மெனும் காற்றில் அணைந்துபோயிற்று.

## (இ) மெட்டர்னிக்

1815ஆம் ஆண்டு முதல் 1848ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய அரசியலில் தன்னிகரற்ற ராஜதந்திரியாக விளங்கியவர் மெட்டர் னிக் ஆவார். இக் கால் கட்டத்தில் தம் சொல்லாலும் செய லாலும் ஐரோப்பிய வரலாற்றைத் திசை திருப்பிய பெருமை இவரைச் சாரும். ஆஸ்திரியாவில் மட்டுமன்றி ஜெர்மானியக் கூட்டிணைவிலும் பிற ஐரோப்பியப் பதிகுகளிலும் அவரது கருத்து

கள் கொடிகட்டிப் பறந்தன. பழைமை மீட்சியைத் தன் உயிர் மூச்சாகக் கொண்ட மெட்டர்னிக் அரசனின் தன்னுட்சி உரிமைக் காக வாழ்நாள் முழுவதும் போராடினுர். புரட்சியையும் அதன் விளைவுகளையும் அவர் வேம்பென வெறுத்தார்.

கிளெமென்ஸ் மெட்டர்னிக் 1773ஆம் ஆண்டில் ஒரு பிரபுக் குடும்பத்தில் தோன்றினுர். அவரது மாணவப் பருவத்தில் ஃபிரெஞ்சுப் புரட்சி வெடித்தெழுந்து அதன் கருத்துத் தீப்பொறி கள் ஐரோப்பாவெங்கும் பறந்தன. புரட்சிக் காலத்தில் ஃபிரான்சு நாட்டில் நிகழ்ந்த மனிதத்தன்மையற்ற கொடூரமான நிகழ்ச்சிகள் மெட்டர்னிக்கின் உள்ளத்தில் ஆழப்பதிந்தன. அப்போதே அவர் தன்னைப் புரட்சியின் எதிரியாகக் கருதத் தொடங்கினுர்.

1795ஆம் ஆண்டில் ஆஸ்திரிய அமைச்சரான கானிட்ஸின் மகளை மணந்தபோது மெட்டர்னிக்கின் அந்தஸ்து பெரிதும் உயர்ந்தது. ஃபிரஷ்யா, ஃபிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளில் ஆஸ்திரிய அயல்நாட்டு அமைச்சகத்தில் பணிபுரியும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

ஒரு மாபெரும் ராஜதந்திரி உருவாகிக் கொண்டிருந்தார். அவரது 36ஆம் வயதில் ஆஸ்திரிய அமைச்சர் பதவி அவரைத் தேடிவந்தது. தம்மிடம் அளிக்கப்பட்ட பொறுப்பை 39 ஆண்டு காலம் குறைவற நிர்வகித்து இக் காலம் ஐரோப்பிய வரலாற்றில் மெட்டர்னிக்கின் யுகம் என்று வர்ணிக்கப்படும் அளவிற்கு அவர் பெயரும் புகழும் ஈட்டினுர்.

ஃபிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியனின் ஆட்சியும் ஐரோப் பாவின் சாபக்கேடுகளென மெட்டர்னிக் நம்பினுர். பழைய நிலையை மீட்பதாலும் சமாதானத்தைக் காப்பதாலுமே ஐரோப் பாவை அழிவுப்பாதையிலிருந்து மீட்க முடியும் என்பது அவரது சித்தாந்தம். நெப்போலியனின் வீழ்ச்சிக்குப்பின் வியன்னு மாநாடு கூடியபோது அதில் முக்கிய பங்கேற்ற மெட்டர்னிக் புரட்சிக் கருத்துக்களெனும் கறையை ஐரோப்பாவிலிருந்து துடைத்து எடுத்தாலொழிய ஐரோப்பாவிற்கு விமோசனம் இல்லை யென்பதை மாநாட்டுப் பிரதிநிதிகளுக்குத் தெளிவுறுத்தினுர்.

ஐரோப்பிய சமாதானம் என விரிந்த நோக்கோடு பிரச்சனை களை அணுகினுலும் தான் ஓர் ஆஸ்திரியன், ஆஸ்திரியாவின் நலனே தனக்கு முதன்மையானது என்பதைச் செயலில் காட்ட அவர் தயங்கியதில்லை. ஐரோப்பிய நாடுகளில் கொழுந்து விட் டெரிந்த தேசிய உணர்வு எனும் தீயை அவர் அணைக்க முயன்ற

தற்குப் பலப் இன மக்களையும் பல நாடுகளையும் தன்னகத்தே கொண்டிருந்த ஆஸ்திரியப் பேரரசில் அந்நிய பரவி ஆஸ்திரியப் பேரரசு சிதைந்து விடப்போகிறதே என்ற அச்சமே முதன்மை யான காரணம் ஆகும்.

மெட்டர்னிக்கின் காலத்தில் ஐரோப்பாவில் ஆஸ்திரியாவின் முக்கியத்துவம் அதிகரித்தது. ஆஸ்திரியப் பேரரசைச் சிதைவி லிருந்தும் காக்க அவர் பல கடுமையான நடவடிக்கைகளை மேற் கொண்டார். ஜெர்மானியக் கூட்டிணைவிற்குத் தலைமை தாங்கும் பொறுப்பு ஆஸ்திரியாவிற்கும் உண்டு என்பதால் ஜெர்மனியிலும் அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டுத் தன் கொள்கையை நிலை நாட்டினர் மெட்டர்னிக். 1819ஆம் ஆண்டில் செயற்படுத்தப் பட்ட கார்ல்ஸ் பாத் ஆணைகள் மெட்டர்னிக்கின் மனப்போக்கைப் புலப்படுத்துகின்றன. தேசிய உணர்வு அங்கு பூண்டோடு நசுக்கப் பட்டது. 1820—21ஆம் ஆண்டுகளில் இத்தாலியில் நேப்பிள்ஸில் மன்னரை விலக்கும் இயக்கம் உருவானபோது அங்கும் மெட்டர் னிக்கின் இரும்புக்கரம் நீண்டு மக்கள் எழுச்சியை நசுக்கியது. நால்வர் உடன்பாட்டின் பெயரால் இத்தகைய கொடுஞ்செயல் களுக்கு நியாயம் என்ற கவசத்தை அவரால் அணிவிக்க முடிந்தது.

இங்ஙனம் தன் கருத்து சர்வாதிகாரத்தால் ஐரோப்பிய நாடுகளை ஆட்டிப் படைத்த மெட்டர்னிக்கை ஒரு சோகமான முடிவு எதிர்நோக்கியிருந்தது. மக்களின் உரிமைக் குரலும் தேசியப் போராட்டமும் ஓர் தனி மனிதனின் ஆணைக்குக் கட்டுப் படாத மாபெரும் சக்திகள் என்பதைக் காலம் நிரூபித்தது.

1848ஆம் ஆண்டில் ஃபிரான்சில் தோன்றிய புரட்சியின் அலைகள் ஆஸ்திரியாவையும் நனைத்தன. ஆஸ்திரிய உரிமை வாதிகள் புரட்சிக் கொடியை உயர்த்தி மெட்டர்னிக்கின் ராஜி நாமாவைக் கோரினர். ஆஸ்திரிய மாணவர்களும் தொழிலாளி களும் அணி திரண்டு தம் கோரிக்கைகளை வலியுறுத்தினர். அரசு அவர்கள் மீது படையினரை ஏவியது. ஆனால், படையினர் புரட்சி யாளர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய மறுத்தனர். இந் நிகழ்ச்சி மெட்டர்னிக்கை நிலைதடுமாறச் செய்தது. அவர் கட்டிய கோபுரம் அவர் கண்ணெதிரே சரிந்து வீழ்ந்தது. தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு உடனே இங்கிலாந்து நாட்டிற்குச் சென்று அங்கேயே தம் இறுதி நாள்களை அவர் கழித்தார்.

அவர் நாட்டை விட்டு ஓடியது ஐரோப்பாவெங்கும் உரிமை வாதிகளின் உள்ளத்தில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சியது. ஓர் அடக்குமுறைச் சகாப்தம் முடிந்தது எனப் புரட்சியாளர்கள் மகிழ்ந்தனர்.

# 4. ஐரோப்பாவில் உரிமைப்போராட்டமும் தேசிய இயக்கமும்

ஐரோப்பிய அரசியலில் 1815-லிருந்து 1850 வரையிலான காலத்தைச் சாதனைகளின் காலம் என்று சொல்லுவதை விட இலட்சியக் கனவுகளின் காலம் எனக் கூறுவது பொருந்தும். இக் காலத்தில் கலை, இலக்கியத் துறையில் புகழ் பெற்றிருந்த பீதோவன், கதே, வோர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, பைரன், விக்டர் ஹ்யூகோ, பால்சாக், ஹீகல், மில், பாரடே ஆகியோரின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க, பெருமைபடைத்தவரெனச் சுட்டிக் காட்டத்தக்க, தகுதிபடைத்த ஓர் அரசியல் வாதியையோ, ராஜதந்திரியையோ ஐரோப்பா பெற்றிருக்கவில்லை. மக்கள் வாழ்க்கையில் அரசியல் உடன்படிக்கைகளாலன்றி, தொழில் வளர்ச்சி, விஞ்ஞான ஆராய்ச்சியால் ஏற்பட்ட முன்னேற்றம், கலையார்வம், சமய இயக்கங்கள், கல்வியின் விரிவாக்கம் இவற்றால் பெரும் மாற்றமும், முன்னேற்றமும் ஏற்பட்டது.

இக் காலத்தில் இலட்சியவாதிகள் அரசியலில் பூரண சுதந்திரம், தேசிய ஐக்கியம் போன்ற கனவுகளில் லயித்திருந்தனர். ஆனால், உண்மையில் உலகில் அவர்கள் கண்டதோ கட்டற்ற சர்வாதிகார ஆட்சியும், உரிமைக்குரல் எழுப்பியதற்காகச் சிறை வாழ்வு அல்லது நாடுகடத்தல் என்ற தண்டனைக்கு ஆட்பட்டதுமே யாகும். அவர்களது புரட்சி முயற்சிகள் தோற்றாலும், பிற்போக்குவாதம் தழைப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது உழைப்பிற்கான பலன் உள்ளூர மலர்ந்து, காய்த்துக் கனிந்து கொண்டிருந்தது.

ஃபிரெஞ்சுப் புரட்சிக்குமுன், அரசவைகளும், மந்திராலோசனை மண்டபங்களுமே அரசியல் களங்களாகக் கருதப்பட்டன. ஆனால், புரட்சிக்குப்பின்னர் அப் பேற்றினை பத்திரிகைகளும், தெருச் சந்திகளும் பெற்றன. ஐரோப்பிய அரசர்களும், அவர்

களது மதிமந்திரிகளும் இவ்வுண்மையினை உணரவோ அல்லது ஏற்கவோ மறுத்தனர். இதனால்தான் எழுச்சியுற்ற மக்களின் குரலை அடக்குவதில் அவர்கள் ஆவேசமாக ஈடுபட்டனர். மக்களது கோரிக்கைகள் நியாயமற்றவை என அவர்கள் கருதியதோடு அரசியலையும், நாட்டு நிர்வாகத்தையும்பற்றி நினைக்கவும் மக்களுக்கு அருகதை இல்லை என்று உறுதியாக நம்பினர். இந்தத் தவறே மக்களது எழுச்சி மேலும் வலுப்பட உதவிபுரிந்தது.

ஏற்கனவே தேசிய ஐக்கியமும், சுதந்திரமும் பெற்றிருந்த நாடுகளான இங்கிலாந்து, ஃபிரான்சு, ரஷ்யா போன்ற நாடுகளில் மக்களாட்சித் தத்துவங்களான, பெரும்பான்மைக் கட்சியின் ஆட்சி, நாடாளுமன்றத்தில் மக்களின் பிரதிநிதித்துவம், வயது வந்தோர் வாக்குரிமை, சமயப் பொறையுடைமை, பத்திரிகைச் சுதந்திரம் போன்றவைகளைக் கோரிக் கிளர்ச்சிகள் நடந்தன. இனத்தால் ஒன்றுபட்டு, அரசியலால் பிளவுபட்டிருந்த மக்களைக்கொண்ட ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில், ஐக்கியத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராட்டங்கள் எழுந்தன. அந்நிய ஆட்சிக்கு உட்பட்டோ அல்லது விருப்பின்றிப் பிறநாடுகளோடு இணைக்கப்பட்டோ இருந்த பெல்ஜியம், நார்வே, போலந்து, பால்கன் நாடுகள் ஆகியவற்றில் மக்களாட்சிக்காகவும், தேசிய விடுதலைக்காகவும் இயக்கங்கள் தீவிரமாகச் செயல்பட்டன. இத்தகைய இயக்கங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது கிரீஸில் தோன்றிய விடுதலை இயக்கமாகும்.

## (அ) கிரேக்க விடுதலைப் போர் (1821-1832)

அடுத்து விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து உணர்ச்சி வேகத்துடன் அதை நடத்திச்சென்று தகுந்த தருணத்தில் அந்நிய நாடுகள் தலையீடு காரணமாக அதனை வெற்றிகரமாக முடித்த நாடு கிரீஸ் ஆகும். சமயச் சுதந்திரம் அளிக்கப்பட்டாலும் வரிச்சுமையாலும் கடுமையான அடக்குமுறையாலும் சொல்லொணாத் துன்பம் அனுபவித்தனர் கிரேக்க மக்கள். 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் துருக்கியப் பேரரசின் வலிமை குன்றியிருந்த நேரத்தில் கிரேக்க மக்கள் இடையே தேசிய உணர்வும் பண்டைப் பெருமை பற்றிய பெருமிதமும் அரும்பலாயின. மக்களிடையே விடுதலை வேட்கையைப் பரப்பப் பல ரகசியச் சங்கங்கள் தோன்றின. அவற்றுள் முக்கியமானது 1814ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட ஹெட்டைரியா பிலிகே (Hetairia Philike) என்னும் சங்கம் ஆகும். முதலில் 1821ஆம் ஆண்டு வடகிரீஸில் அலெக்ஸாந்தர் இப்சிலாண்டி (Alexandir hypsilanti) என்பார் தலைமையில் கலகம் வெடித்தெழுந்தது. இவர் மால்டேவியாவில்

துருக்கியச் சுல்தானின் கவர்னராக இருந்த கிரேக்கப் பிரபு ஆவர். இக் கிளர்ச்சிக்கு ரஷ்ய உதவி விரைந்து வரும் என எதிர்பார்த்து ஏமாந்தார். கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு அலெக்ஸாந்தர் ஆஸ்திரியாவில் தஞ்சமடைந்தார்.

இதைத் தொடர்ந்து கிரீஸின் தென்பகுதியான மோரியாவில் பெரும் கிளர்ச்சி மூண்டது. வன்முறை தாண்டவமாடிய இக் கிளர்ச்சியில் கிரேக்கர்கள் தம்மிடையே வசித்த 25000 துருக்கியர்களை ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்தனர். மால்டேவியா, வால்லேச்சியா, கிரீஸ் என்ற இருமுனைகளில் தன் வலிமையை நிரவிப் போராட வேண்டிய நிலையில் துருக்கி இருந்ததால் கிரேக்கப் புரட்சியை விரைந்து ஒடுக்க முடியவில்லை. தன் குடிகளில் வலிமை மிக்கவரை முதலில அடக்குவது என்ற கொள்கையைப் பின்பற்றிய சுல்தான் 1824ஆம் ஆண்டில் தன்வசமிருந்த எகிப்தின் பாஷாவான மகமது அலியோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். எகிப்து தன் கடற்படை தரைப்படைகளைத் துருக்கிக்கு அளித்து உதவுவதற்குப் பதிலாகத் துருக்கி, எகிப்திற்கு மோரியா, சிரியா, கிரீட் (crete) ஆகிய பகுதிகளைத் தருவதாக ஒப்புக் கொண்டது. ஒப்பந்தப்படி மகமது அலியின் மகன் இப்ராஹிம் பாஷாவின் தலைமையில் ஓர் எகிப்தியப் படை வந்து மோரியாவில் இரத்த ஆறு ஓடும்படி செய்தது. கிரீஸின் நிலை பரிதாபத்திற்குரியதாயிற்று. ஐரோப்பியர் பலர் கிரீஸிற்கு உதவ முன் வந்தனர். புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் பைரனும் அவர்களில் ஒருவர். இவற்றால் பயனில்லை. ஐரோப்பிய நாடுகளின் தலையீடு ஒன்றுதான் கிரீஸைக் காப்பற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டது. இதுவரை தலையிடாக் கொள்கையைப் பின்பற்றிய ஐரோப்பிய நாடுகள் தங்கள் கொள்கையை மாற்றிக்கொள்ள நேரிட்டது. இதற்கிடையே 1821ஆம் ஆண்டு ஈஸ்டர் நாளன்று மோரியாவில் துருக்கியர்கள் கொல்லப்பட்டதற்குப் பழி தீர்ப்பதேபோல் கிரேக்கத் திருச்சபையால் பாட்ரியாக் அவரது அரண்மனை வாயிலிலேயே தூக்கிலிடப்பட்டார். இச் செயல் ஐரோப்பிய நாடுகளின் சினத்தைக் கிளரியது. இங்கிலாந்தின் புதிய அயல்நாட்டு அமைச்சரான கானிங் என்பார் கிரீஸின் விடுதலைக்கு ஐரோப்பா உதவவேண்டும் என விரும்பினார். ரஷ்யாவிலும் மெட்டர்னிக்கின் மாணவரான அலெக்ஸாந்தருக்குப்பின் பதவியேற்ற நிக்கோலஸ் கிழக்கில் முன்னேறும் பரம்பரைக் கொள்கையை ஆதரித்தார். இந்த மன மாற்றங்களின் விளைவாகக் கிரீஸ் விவகாரத்தில் கூட்டு நடவடிக்கை எடுக்க ஐரோப்பிய நாடுகள் முடிவு செய்தன. துருக்கிய சுல்தான் பணிய மறுத்ததால் படை பலத்தைப் பயன் படுத்த நேர்ந்தது. இங்கிலாந்து, ஃபிரான்சு, ரஷ்யா ஆகிய நாடுகளின் கடற்படை நவாரினோ வளைகுடாவை முற்றுகை

விட்டுத் துருக்கிய எகிப்து கடற்படையை 1827ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முறியடித்தது. பின்னரே துருக்கி சமாதானத்திற்கு உடன்பட்டது. 1829ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் எட்ரியாநோபிள் உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி கிரீஸின் விடுதலையைத் துருக்கி ஏற்றது. டான்யூப் மாநிலங்களான மால்டேவியாவும் வால்லேச்சியாவும் ரஷ்யப் பாதுகாப்பின் கீழ் தன்னுட்சி உரிமை பெற்றுத் துருக்கியப் பேரரசின் பகுதியாகவே விளங்கின. துருக்கியப் பேரரசில் ஏற்பட்ட முதற்பிரிவும், பிளவும் கிரீஸ் விடுதலை பெற்றதேயாகும். பலேரியா மன்னரின் இரண்டாம் புதல்வரான ஆட்டோவிற்குக் கிரேக்க மணிமுடி வழங்கப்பட்டது. அவர் 1833-ல் பதவியேற்ருர்.

## (ஆ) ஸ்பானியப் புரட்சி

18ஆம் நூற்ருண்டு முழுவதிலும் உள்நாட்டுக் குழப்பத்திலும், போராட்டத்திலும் ஈடுபட்டதால் ஐரோப்பிய விவகாரங்களில் தீவிரமான பங்கேற்க முடியாமல் ஒதுங்கி நின்ற இரு ஐரோப்பிய நாடுகள் ஸ்பெயினும், போர்ச்சுகலும் ஆகும். இவ்விரு நாடுகளையும் ஆட்டிவைத்த பிரச்சினைகள் அரச வம்சம், குடியேற்றங்கள், அரசியலமைப்புப் பற்றியவையாகும். ஃபிரான்சுக்கு எதிராக ஒரு தேசியக் கிளர்ச்சியை உருவாக்கி நடத்தியதன் மூலம் ஐரோப்பாவிற்கே ஒரு எடுத்துக்காட்டாக ஸ்பெயின் திகழ்ந்தது. 1791ஆம் ஆண்டில் ஃபிரான்சு பெற்ற அரசியல் அமைப்பினை அடியொற்றி ஸ்பெயினுக்கென 1812-ல் ஒரு அரசியல் அமைப்பு தீட்டப்பட்டது. குறைகள் நிரம்பியதாக இருப்பினும் மக்கள் உரிமைகளை எடுத்துரைப்பதில் ‘மாக்ன கார்ட்டா’ விற்கு நிகராக அது விளங்கியது. வெகு குறைந்த கால அளவே இவ் வரசியலமைப்பு அமலில் இருந்தது.

1814ஆம் ஆண்டில் ஸ்பெயினில் திரும்பவும் பதவியேற்ற ஏழாம் ஃபெர்டினண்ட் விருப்பின்றி இவ்வரசியலமைப்பை யேற்ருர். ஆனுல், விரைவிலேயே அதற்கு ஊறுசெய்ய முனைந்தார் இன்குவிசிஷன் மறுபடியும் விதிக்கப்பட்டது. உரிமைவாதிகள் தண்டிக்கப்பட்டனர். இப் பிற்போக்குக் கொள்கை 1820ஆம் ஆண்டில் படையினரும் பங்குகொண்ட ஒரு மக்கள் புரட்சியைத் தோற்றுவித்தது. புரட்சி வெற்றியடைந்தது. ஆனுல், இது அதிக காலம் நீடிக்கவில்லை. பிற்போக்கு அணிகள் வெரோனுவில் கூடி ஸ்பானிய நிலைமையை விவாதித்தனர். பிரிட்டிஷ் அமைச்சர் கானிங்கின் எதிர்ப்பையும் மீறி ஸ்பெயினின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதென ஃபிரான்சு பிடிவாதமாக முடிவெடுத்தது. இங்கிலாந்து அணியைவிட்டு விலகியது. ஃபிரான்சு

ஸ்பெயினில் தலையிட்டது. புரட்சி ஒடுக்கப்பட்டது. ஃபெர்டிநண்டு திரும்பவும் அரியணையில் அமர்த்தப்பட்டார். இம்முறை அரசர் சர்வாதிகார ஆட்சியை நடத்தி மக்களை அச்சுறுத்தித் தன் கட்டுக்கு அடங்கியிருக்குமாறு செய்யத்துணிந்தார். இந்தக் காலக் கட்டத்தில்தான் அமெரிக்காவிலிருந்த தன் குடியேற்றங்களை ஸ்பெயின் இழந்தது. மன்றோக் கொள்கையால் ஐரோப்பியத் தலையீடு தடுக்கப்பட்டதால் ஸ்பெயின் தன் குடியேற்றங்களைத் திரும்பப் பெறமுடியாது தவித்தது.

1833ஆம் ஆண்டில் ஃபெர்டிநண்டின் மறைவிற்குப் பின் ஸ்பெயினில் வாரிசுரிமைக் கிளர்ச்சி மூண்டது. மறைந்த அரசனின் சகோதரரான டான் கார்லோஸும், மூன்று வயது நிரம்பிய புதல்வியான இஸபெல்லாவும் அரசபதவிக்குப் போட்டியிட்டனர். இஸபெல்லாவிற்கு ஃபிரான்சும், பிரிட்டனும் ஆதரவு நல்கின. ஏழாண்டுக்கால கொரில்லாப் போருக்குப்பின் கார்லோஸின் ஆதரவாளர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டனர். கார்லோஸும் நாட்டைவிட்டு அகன்றார். ஆரம்பத்திலிருந்தே இஸபெல்லாவிற்குத் துணைநின்ற அரசியலமைப்பைக் கோரியவர்கள் ஏமாற்றமடைந்தனர். அரசி தன்னலமிக்க அன்னை கிறிஸ்டினா போன்றோரின் கைப்பாவையாக விளங்கியதோடு, திறமையற்றும் இருந்தாள். அவள் ஆட்சி குழப்பம், சிக்கல்கள், அவதூறுகள் இவற்றின் இலக்கணமாகத் திகழ்ந்தது. மக்கள் வாழ்வில் மலர்ச்சி இல்லை. 1854இல் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி ஏற்பட்டது. 1868ஆம் ஆண்டில் மக்கள் கிளர்ச்சி தோன்றி அரசி வெளியேறுமாறு கோஷம் எழுப்பப்பட்டது. அதே ஆண்டு இஸபெல்லா நாடு கடத்தப் பட்டாள். ஸ்பானியக் கிளர்ச்சியின் ஒரு பெரும் அத்தியாயம் இவ்விதம் முடிவுற்றது.

## (இ) 1830ஆம் ஆண்டுப் புரட்சி

புரட்சிகளின் தாயகமாக விளங்கிய ஃபிரான்சில் புரட்சி வெடித்து எழுந்தது. வியன்னா ஏற்பாட்டின்படி ஃபிரெஞ்சு அரியணையில் அமர்ந்த போர்பான் வம்சத்து 18ஆம் லூயி தன் நிலையை முற்றிலும் உணர்ந்து இருந்தார். தன் முன்னோர்களைப் போல் முழு வலிமையோடு திகழமுடியாதபடி மக்களின் வலிமை என்ற தடைச் சுவர் எழும்பிவிட்டதை அறிந்திருந்த அம் மன்னர், காலத்தின் கோலத்திற்கு ஏற்பத்தானும் மாறத் துணிந்தார். இத் துணிவின் விளைவே, 1814ஆம் ஆண்டு வெளியான புதிய அரசியலமைப்பைப் பற்றிய சாசனமாகும். இதன்படி ஒரு பிரபுக்கள் அவையும், ஒரு பொதுமக்கள் அவையும் கொண்ட

பாராளுமன்றம் ஃபிரான்சுக்கு அளிக்கப்பட்டது. சொத்து, வயது இவற்றின் அடிப்படையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. 29 மில்லியன் மக்கள்தொகையில் ஒரு லட்சம் பேருக்கே வாக்குரிமை கிட்டியது. இச் சாசனம் எல்லா மக்களும் சமம் என்று முழங்கியபோதும் மிகக் குறைவான மக்களே வாக்குரிமை பெற்றிருந்தனர். அரசியலில் ஃபிரான்சும் இன்னமும் ஒரு சிறப்புரிமை பெற்றவர்களின் நாடாகவே விளங்கிவந்தது. ஆனல், சிறப்புரிமை என்பது முன்பு பிறப்பினுல் நிர்ணயிக்கப்பட்டது. ஆனல், இப்போது சொத்துகளின் மதிப்பால் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறு இருப்பினும் நெப்போலியன் காலத்தைவிட அரசாங்கமுறை மிகவும் தாராளத்தன்மை வாய்ந்ததாக இருந்தது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். வேறு ஒரு விதத்திலும் இச்சாசனம் தன் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தியது. ஃபிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியனும் ஏற்படுத்திய மாற்றங்களில் எவ்வெவற்றைப் போர்பான்கள் ஏற்கச் சித்தமாக இருக்கின்றனர் என்பதை வரையறுத்துக் காட்டியது. முடியாட்சியின் வீழ்ச்சியால் தங்கள் உரிமைகள் பறிபோகுமோ என அஞ்சிய ஃபிரெஞ்சு மக்களுக்குச் சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்ற புரட்சித் தத்துவத்தை இச்சாசனம் மறுப்புப் பிரகடனம் செய்தது. மேலும், அரசாங்க வேலை வாய்ப்புகள் அனைவருக்கும் திறந்து விடப்படும்; சட்ட விதிமுறைப்படியன்றி ஒருவரையும் கைது செய்யவோ தண்டிக்கவோ முடியாது, எல்லோருக்கும் முழு சமய சுதந்திரம் உண்டு. ரோமன் கத்தோலிக்க மதம் அரசாங்க மதமாக இருப்பினுங் கூடப் பத்திரிகைச் சுதந்திரம் உண்டு. இவைபோன்ற உரிமைகளையும் இச் சாசனம் ஃபிரெஞ்சு மக்களுக்கு வழங்கியது. புரட்சிக் காலத்தில் அரசனுக்கும் மத நிறுவனத்திற்கும் பிரபுக்களுக்கும் சொந்தமாக இருந்த நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றை வாங்கிய மக்களது சொத்துரிமை பாதிக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

18ஆம் லூயியின் சமாதான வேட்கையும், பழிவாங்கும் வெறியின்மையும், மிதவாதக் கொள்கைகளும் உண்மையை ஒப்புக்கொள்கின்ற நேர்மையும் ஃபிரெஞ்சு மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டன. ஆனல், இது சிறிதுகாலமே நீடித்தது. அதற்கு முக்கியக் காரணம் புரட்சிக் காலத்தில் நாட்டைவிட்டு வெளியேறி, பின்னர், நெப்போலியன் காலத்திலும் அவன் வீழ்ச்சிக்குப் பின்னும் நாட்டிற்குத் திரும்பி வந்த பிரபுக்களை உறுப்பினர்களாகக்கொண்ட தீவிரவாதிகளான முடியாட்சிக் கட்சியே ஆகும். அடுத்து, பட்டத்துக்குரியவரான அரசரின் தம்பி ஆர்த்வா

(Artois) பிரபுவின் தலைமையில் இயங்கிய இவர்கள் புரட்சியால் தாங்கள் அடைந்த இன்னல்களை இம்மியும் மறக்கவில்லை. புரட்சியின் கடைசிச் சின்னத்தையும் அழித்து எறிந்துவிட்டுப் பழைய அரசாங்க முறையை நிலைநாட்ட உறுதி கொண்டனர். 1814ஆம் ஆண்டுச் சாசனத்தை இவர்கள் மனதார வெறுத்தனர். மேலும் 1815ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வன்முறையைக் கையாண்டு பெரும்பான்மை வலிமை பெற்றனர். இவர்களது ஆட்சி ஃபிரான்சைப் பின்னோக்கி நடக்கச் செய்தது. அவர்களுக்கு வாக்கு அளிக்காதவர்கள் துரோகிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறப்பான நீதிமன்றங்களால் தண்டிக்கவும் பெற்றனர். பத்திரிகைத் தணிக்கை முறையும் புகுத்தப்பட்டது. இவர்களது பழிவாங்கும் வெறியையும் படுகொலைகளையும் (White Terror) எதிர்த்து மக்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பினர். மிதவாதியான மன்னர் 1816ஆம் ஆண்டு மறுபடியும் தேர்தலை நடத்ினார். இம் முறை மிதவாதிகள் பதவிக்கு வந்தனர். அரசாட்சியின் கடுமை தவிர்க்கப்பட்டது. இதேசமயம் ஃபிரான்சு மற்ற நாடுகளுக்குத் தரவேண்டிய போர் இழப்புத் தொகையைத் தந்து முடித்தது. ஃபிரெஞ்சு மண்ணில் முள்ளாய் நெருடிக்கொண்டிருந்த அந்நியத் துருப்புகள் 1818ஆம் ஆண்டு ஃபிரான்சிலிருந்து விலக்கப்பட்டனர். நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாவதற்கான அறிகுறிகள் தென்படலாயின.

ஆனால், 1820ஆம் ஆண்டு ஆர்த்வா பிரபுவின் மகன் பெர்ரி பிரபு (Duke of Berry) ஒரு தீவிரவாதியால் கொலை செய்யப்பட்டான். இந்த நிகழ்ச்சியால் அரசர் மட்டுமன்றி மிதவாத அரசாங்கமும் அதிர்ச்சி அடைந்தது. அரசர் மிதவாதக் கொள்கையில் நம்பிக்கை இழக்கலானார். இச் சூழ்நிலையைப் பயன்படுத்தி முடியாட்சிக் கட்சியினர் மீண்டும் பதவியைப் பிடித்தனர். 1827ஆம் ஆண்டுவரை நீடித்த இவர்களது ஆட்சியில் அடக்குமுறை செங்கோல் ஓச்சியது. மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டன. பத்திரிகைத் தணிக்கைமுறை நடைமுறைக்கு வந்தது. கல்வித்துறை சமய நிறுவனத்திடமே திரும்பவும் ஒப்படைக்கப்பட்டது. மக்களவையின் பதவிக்காலம் ஐந்திலிருந்து ஏழு ஆண்டுகளாக உயர்ந்தது. அரசை எதிர்ப்போர் பெருந்தண்டனை அடைந்தனர். இக் காலத்தில் ஃபிரெஞ்சு மக்கள்மட்டும் உரிமைகளை இழக்கவில்லை. ஃபிரெஞ்சுத் துருப்புகளின் அடாத பிரவேசத்தால் ஸ்பெயினிலும் மக்கள் எழுச்சி நசுக்கப்பட்டது (1823). ஆரம்பத்தில் உரிமைகளை அள்ளித்தந்த 18ஆம் லூயியின் ஆட்சி இறுதிக் கட்டத்தில் மக்களின் உரிமைக்கு எதிரான ஆட்சியாக மாறிவிட்டது. 1824இல் 18ஆம் லூயி மரணமடைந்தபின்,

ஆர்த்வா பிரபு 10ஆம் சார்லசு என்ற பட்டத்தோடு அரியணை ஏறினர்.

10ஆம் சார்லசின் ஆட்சிக்காலம் (1824-1830) ஏழாண்டுகள் நீடித்தது. புதிய மன்னர் ஃபிரான்சின் நாடாளுமன்ற நிறுவனங்களை மதித்து நடப்பதாக அறிவித்தார். ஆனல், அவர் மிகுந்த பிற்போக்குவாதி என்பதும், ஏதேச்சாதிகார வெறி பிடித்தவர் என்பதும் விரைவில் நிரூபணம் ஆயின. மக்கள் மன்னரிடம் கொண்ட வெறுப்பு நாளுக்கு நாள் வளரலாயிற்று. ஃபிரெஞ்சுப் புரட்சியின்போது நாட்டிலிருந்து அஞ்சி ஓடிப் பின்னர் சிறிது சிறிதாக நாடு திரும்பிக் கொண்டிருந்த பிரபுக்களுக்கு இழப்பு ஈடாக நூறு கோடி பிராங்குகள் தருவதென அரசர் முடிவு செய்தார். இப் பெருந்தொகையைத் திரட்ட ஏதும் புலப்படாதபோது தேசியக் கடன்களின்மீதிருந்த வட்டியை ஐந்து சதவீதத்திலிருந்து மூன்று சதவீதமாகக் குறைத்தது அரசு. நாட்டின் மறுமலர்ச்சிக்காக மனமுவந்து கடன் கொடுத்திருந்த தொழில் அதிபர்களும் வங்கியாளர்களும் சினமுற்றனர். பிரபுக்களுக்காக இழப்பினை ஏற்க இவர்கள் விரும்பவில்லை. 1827ஆம் ஆண்டு தேர்தல் நடந்தபோது முடியாட்சிக் கட்சி மக்களின் ஆதரவை இழந்ததால் தோற்று, மிதவாதிகள் பெரும்பான்மை பெற்று அமைச்சரவையை அமைத்தனர். மூர்க்க குணம் படைத்த சார்லசு தனக்குப் பிடிக்காத ஆனல், மக்களின் ஆணையால் பதவிக்குவந்த அவ்வவையைப் பதவிலிருந்து நீக்கித் தனக்கு மட்டும் பிடித்தமான முடியாட்சிக் கட்சியைப் பதவியில் அமர்த்தினர். இச் செயல் மக்களிடையே எதிர்ப்பு உணர்ச்சி வலுக்கொள்ளும்படி செய்தது. அரசனின் இத்தகைய செயல்களுக்கு எல்லாம் பக்கபலமாக இருந்தவர் 1822ஆம் ஆண்டு முதல் அமைச்சராக இருந்த பாலினுக் என்ற சூழ்ச்சித்திறம் மிக்க அரசியல் வல்லுநரே ஆவர். நாடாளு மன்றத்தையும் ஃபிரான்சின் அரசியலமைப்பையும் ஒழித்துக்கட்டி மக்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தவேண்டும்; மக்களின் கவனத்தைத் திருப்ப நாடு பிடிப்பதை இலட்சியமாகக் கொண்ட அயல்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றவேண்டும் என்பனவே இவ்வமைச்சரது அரிய ஆலோசனைகள். திட்டங்களைத் தீட்டும்போது பொது மக்களின் உணர்ச்சி, எண்ணம் ஆகியவற்றின் வலிமை என்னவென்று அறியாமலிருந்ததே இவர் திட்டங்களில் உள்ள குறைபாடு ஆகும். சார்லசு தன் அதிகாரங்களை நிலைநாட்ட நான்கு சட்டங்களை வெளியிட்டார். அவற்றின்படி பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. தேர்தல்முறை மாற்றி அமைக்கப்பட்டது. வாக்காளரின் எண்ணிக்கை பெரிதும் குறைக்கப்பட்டது.

1830ஆம் ஆண்டு ஜூலை மாதம் தோன்றிய இச் சட்டங்கள் ஃபிரான்சைத் திரும்பவும் புரட்சிப் பாதைக்கு அழைத்துச் சென்றன. வழக்கம்போல் பாரிசு புரட்சியின் தலைமையகம் ஆயிற்று. பாரிசு நகரத் தெருக்களிலே மூன்று நாள்கள் சண்டை நடந்தது. ஒரு கட்டத்தில் மன்னரது படை அவரது ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்துப் புரட்சிக்காரர்கள் பக்கமே சேர்ந்துகொண்டது. கோழையான சார்லசு தன் பேரனே இனி மன்னன் என அறிவித்துப் பின்னர் முடிதுறந்து இங்கிலாந்து சென்றார். புரட்சித் தலைவர்கள் சார்லசின் குடும்பத்தையே வெறுத்தனர். எனவே, புரட்சிக்குக் காரணமான லபாயே, தாலிரான் என்ற தலைவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப போர்பான் வம்சத்தின் கிளையான ஆர்லியன்சு வம்சத்தைச் சேர்ந்த லூயி பிலிப்பைப் புதிய மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். குடியரசு ஏற்படாவிடினும் மக்களின் உணர்ச்சிகளை மதித்து இங்கிலாந்தில் இருப்பதைப்போன்ற அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி நடக்குமெனத் தலைவர்கள் பொதுமக்களுக்கு உறுதியளித்தனர். ஃபிரெஞ்சு மக்களின் மன்னர் என்ற பட்டத்தைப் பெற்ற இம் மன்னர் புரட்சிக் கருத்துகளிடம் ஈடுபாடு கொண்டவர். ஃபிரான்சுக்கு இவரது ஆட்சியில் நன்மை விளையும் என மக்கள் எதிர்பார்த்தனர். அந்த எண்ணத்தை நிறைவேற்றி வைப்பதில் லூயி பிலிப் கண்ணுங் கருத்துமாக இருந்தார்.

## ஐரோப்பாவில் மற்ற நாடுகளின் புரட்சி

1830ஆம் ஆண்டில் ஃபிரான்சில் தோன்றிய ஜூலைப் புரட்சியின் முழக்கம் பிற நாடுகளிலும் எதிரொலித்தது. வியன்னா மாநாட்டின் சில பொருந்தா விதிகளை அழித்து எறிய இதுவே வாய்ப்பென பெல்ஜியம், இத்தாலி, ஜெர்மனி, போலந்து ஆகிய நாடுகளில் வாழ்ந்த மக்கள் கருதினர். முதலில் புரட்சி அலைகளில் நனைந்த நாடு பெல்ஜியமே.

**பெல்ஜியப் புரட்சி:** சமய, மொழி, பொருளாதார அடிப்படையில் வேறுபட்டிருந்த பெல்ஜியமும் ஹாலந்தும் 1815ஆம் ஆண்டு இணைக்கப்பட்டன. இந்த ஐக்கிய நெதர்லாந்து நாட்டிற்கு மன்னர் வில்லியம் ஓர் அரசியலமைப்பை வழங்கி இருந்தார். இருநாடுகளும் தலைக்கு 55 உறுப்பினர்களை ஐக்கிய நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் உரிமை பெற்றிருந்தன. இந்த ஏற்பாட்டால் பெல்ஜியத்தின் மனம் குளிரவில்லை. எண்ணிக்கை குறைந்த டச்சு மக்கள் தங்கள்மேல் ஆதிக்கம் செலுத்துவதையும், டச்சுமொழி தேசிய மொழியாக ஆனதையும் கண்டு கொதித்தனர், பெல்ஜிய மக்கள். பாரிசில் ஜூலைப் புரட்சி

தோன்றிய செய்தியை அறிந்ததும் இக் கொதிப்புணர்வு கிளர்ச்சியாக உருவெடுத்தது. பெல்ஜிய மக்கள் அணி திரண்டது. டச்சுப் படைகள் பெல்ஜியத்தில் இருந்து விரட்டப்பட்டன. மன்னர் வில்லியம் புரட்சியை அடக்கமுயன்று தோற்றார். பெல்ஜியப் புரட்சியை வல்லரசுகள் வெவ்வேறு கண்ணோட்டத்தில் கண்டன. வாணிபம். அரசியல்போட்டி காரணமாக பெல்ஜியப் புரட்சி வெற்றி பெற்று ஹாலந்து தோல்வியுறுவதே ஃபிரான்சு, இங்கிலாந்து நாடுகளின் லட்சியமாக இருந்தது. இவ்விரு நாடுகளின் எதிர்ப்பாலேயே பெல்ஜியப் புரட்சியை நசுக்க முன்வந்த ஃபிரஷ்யா பின் வாங்கநேர்ந்தது. ஆஸ்திரியாவும் ரஷ்யாவும், இத்தாலியிலும் போலந்திலும் தலைதூக்கிய புரட்சியை நசுக்கும் வேலையில் முழுமூச்சோடு ஈடுபட்டிருந்ததால் பெல்ஜியத்தைப் பற்றிக் கவலை கொள்ள அவைகளுக்கு நேரமில்லை. இங்கிலாந்தும் ஃபிரான்சும் தங்கள் படைகளை அனுப்பிப் புரட்சிக்கு உதவி புரிந்தன. இதனால் பெல்ஜியப் புரட்சி வெற்றி அடைந்தது. பின்னர், பெல்ஜியத்தின் எதிர்காலத்தைப்பற்றி முடிவெடுக்க இலண்டனில் ஒரு மாநாடு கூடியது. அங்கே பெல்ஜியம் ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டதோடு அதன் நடுநிலைமையும் அனைத்து ஐரோப்பிய நாடுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இங்கிலாந்தைப்போல் ஓர் அரசரும் அரசியலமைப்பும் கொண்ட தனிநாடாக 1831ஆம் ஆண்டு பெல்ஜியம் உருப்பெற்றது. வியன்னா மாநாட்டின் ஒரு விதி இவ்விதம் தகர்ந்தது; தேசியம் வென்றது.

**போலந்துப் புரட்சி:** *1830*-ல் போலந்தும் புரட்சியைக் கண்டது. 18ஆம் நூற்றாண்டில் பேரரசுகளால் உருத்தெரியாமல் சிதைக்கப்பட்ட போலந்து, வியன்னா மாநாட்டால் புத்துயிர் பெற்றது. ரஷ்ய மன்னரின்கீழ், சிறிதளவு உரிமை பெற்ற நாடாகப் போலந்து திகழ்ந்தது. ஆனால், முழு உரிமைபெறப் போலந்து மக்கள் புரட்சி செய்தனர். தீவிரமான புரட்சிக்குப்பின் ரஷ்ய ஆதிக்கத்தை உதறி எறிந்துவிட்டு வார்சாவில் புதிய அரசைப் பிரகடனப்படுத்தினர் போலந்து மக்கள். ஆனால், சர்வாதிகார மனப்போக்குக் கொண்ட ரஷ்ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் தம் படை பலத்தால் போலந்துப் புரட்சியை நசுக்கிப் புதிய அரசைக் கலைத்தார். தன் தேசியத் தன்மையை இழந்து ரஷ்யாவின் ஒரு மாகாணமாகப் போலந்து மாற்றப்பட்டது. ரஷ்ய மொழியும், ரஷ்ய ஆட்சியும் போலந்தின்மீது திணிக்கப்பட்டன. எதிர்ப்புக் குரல் எழுப்பியவர்கள் கொல்லப்பட்டனர் அல்லது சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். ஜெர்மனியிலும் ஜூலைப் புரட்சி மாற்றங்களைக் கொணர்ந்தது.

சாக்சனி, ஹனேவர், ஹெஸ்ஸி ஆகிய அரசுகளின் மக்கள் 1814ஆம் ஆண்டு ஃபிரெஞ்சு சாசனத்தைப் போலத் தங்களுக்கும் அரசியல் அமைப்புகள் வேண்டும் எனப் புரட்சி செய்தனர். அந் நாடுகளின் சிற்றரசர்களும் மக்களின் கோரிக்கைக்குப் பணிந்தனர். இதைக் காணச் சகியாத மெட்டர்னிக் ஜெர்மனியில் புரட்சியை நசுக்கவும் மேலும் பரவாமல் தடுக்கவும் பல அருமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவை வெற்றியும் அடைந்தன.

இத்தாலியிலும், பார்மா, மோடனு ஆகிய இடங்களில் கிளர்ச்சிகள் தோன்றின. அந் நாடுகளின் சிற்றரசர்கள் நாட்டை விட்டு ஓடினர். ஆனல், மெட்டர்னிக்கின் இரும்புக்கரம் இங்கும் புரட்சிகளை ஒடுக்கியது. பழையநிலை மீண்டது. இத்தாலியர்களுக்கு ஆஸ்திரியாவின்பால் இருந்த வெறுப்புப் பெருகியது.

இந் நாடுகளில் ஜூலைப் புரட்சி தோன்றிய சில ஆண்டுகளில் ஸ்பெயினும், போர்ச்சுகலுங்கூட மக்கள் பிரதிநிதித்துவம் கொண்ட அரசியலமைப்பைக் கொண்டன. ஜூலைப் புரட்சியின் முக்கியத்துவம் என்னவெனில் அது ஐரோப்பாவின் மனநிலையில் சிறப்பான மாற்றத்தை ஏற்படுத்துவதில் வெற்றிபெற்றதே ஆகும். மெட்டர்னிக் அழிக்கவேண்டுமென விரும்பிய தேசிய உணர்வு, சுதந்திரம் என்ற இரு கொள்கைகள் வீறு கொண்டு எழும்படி இப் புரட்சி செய்தது. ஃபிரான்சில் போர்பான்களுக்குப் பதில் ஆர்லியன்சு வம்சத்தை அரியணையில் ஏற்றி வியன்னு மாநாட்டின் மற்ருெரு கொள்கையான பரம்பரை உரிமையையும் இப் புரட்சி அழித்தது. பெல்ஜிய விடுதலையும் வியன்னு ஏற்பாட்டிற்குக் கிடைத்த பேரிடியாகும். பிரிட்டனும் ஃபிரான்சும் ஐரோப்பாவில் நசுக்கப்படுகின்ற மக்களின் நல்வாழ்வை நாடும் காவலர்கள் என்ற புதிய பதவியை ஏற்றன. ஃபிரான்சையும் பெல்ஜியத்தையும் தவிர மற்ற இடங்களில் இப் புரட்சி தோற்ருலும் ஐரோப்பாவில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் வல்லமையுடையதாக விளங்கியதென்பதில் ஐயமில்லை.

# 5. 1848ஆம் ஆண்டுப் புரட்சி

ஃபிரான்சில் 1848ஆம் ஆண்டில் புரட்சி வெடித்ததற்குக் காரணம் புதிய மன்னர் லூயி பிலிப்பின் உறுதியற்ற கொள்கைகளே ஆகும். நாட்டில் அவருக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகளும் புரட்சியை வரவேற்றன. லூயி பிலிப் ஆட்சிக்கு வந்தபோது அவருக்கு வயது 57. 1789ஆம் ஆண்டு புரட்சிக் காலத்தில் புரட்சிக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு 16ஆம் லூயியின் படுகொலைக்கு ஒப்புதல் தெரிவித்த பிலிப் எகலேட்டின் பிள்ளையே இவர். அப்போது 16 வயதினராக இருந்த லூயி பிலிப் புரட்சிப் படைகளுடன் சேர்ந்து பல போர்களைக் கண்டார். பின்னர் அவர் நாட்டைவிட்டு ஓடி, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருபத்துஐந்து ஆண்டுகள் அஞ்ஞாத வாசம் செய்தார். நெப்போலியனது வீழ்ச்சிக்குப்பின் ஃபிரான்சு திரும்பிய லூயி பிலிப் தன் சொத்துகளில் பெரும் பகுதியை மீட்டுக்கொண்டு அமைதியான வாழ்க்கையை ஆரம்பித்தார். இச் சமயத்தில்தான் தன் உரிமைவாதக் கொள்கையாலும் ஆடம்பரமற்ற வாழ்க்கையாலும் பிறரைக் கவரும் பண்புகளாலும் செல்வமிக்க நடுத்தர மக்களது நட்புறவைப் பெருமளவில் பெற்றார். ஒரு பிரபுவுக்குரிய செருக்கோடு நடக்காமல், தன் பிள்ளைகளையும் மற்றவர்களைப்போல் பொதுப் பள்ளிக்கு அனுப்பிய லூயி பிலிப், தான் ஆதிக்கம் பெறவேண்டும் என்ற ஆசையை எளிமையான வாழ்க்கை என்ற போர்வையினால் மறைத்துக்கொண்டார். அவர் மன்னராகப் பதவியேற்றபோதே ஃபிரான்சில் அவருக்கு எதிர்ப்பு இருந்தது. அவ்வெதிர்ப்பு நாளுக்குநாள் வளர்ந்ததேதவிரச் சிறிதும் குறையவில்லை நாட்டில் பல கட்சிகள் தோன்றி இருந்தன. லெஜிடிமிஸ்ட் கட்சியினர் 10ஆம் சார்லசின் பரம்பரையினர் ஆட்சிக்கு வருவதை ஆதரித்தனர். அவர்கள் கண்களுக்கு லூயி பிலிப் ஒரு திருடனாகக் காட்சியளித்தார். ஆனால், இக் கட்சி வலுவுடையது அல்ல. இருந்தும் குடியரசுக் கட்சியின் எதிர்ப்பைத்தான் லூயி பிலிப்பால் சமாளிக்க

முடியவில்லை. மன்னன் ஜனநாயகவாதியாக இருப்பான்; குடியாட்சி முறையே நிலவும் என லபாயே கொடுத்த உறுதிமொழியின் பேரிலேயே இக் கட்சியினர் லூயி பிலிப்பின் ஆட்சிக்கு ஒப்பினர். ஆனால், விரைவிலேயே அவர்கள் ஏமாற்றத்தைச் சந்தித்தனர். லூயி பிலிப்பின் ஜூலை முடியாட்சி மிகவும் பிற்போக்காகவும் மிகத் தீவிரமாகவும் இல்லாது ஒரு மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தபோதிலும் வெகு விரைவிலேயே பிரபுக்களுக்குமட்டும் தான் எதிரி இல்லை; குடியாட்சிக்கும் தான் எதிரியே என்பதைத் தன் செயல்கள் மூலம் நிரூபித்துவிட்டார். ஆரம்பத்தில் வயது, சொத்து, தகுதிகளைக் குறைப்பதன்மூலம் வாக்காளரின் எண்ணிக்கையை ஒரு லட்சத்திலிருந்து இரண்டு லட்சமாக உயர்த்தியதனைக் குடியாட்சிப் பாதையிலே நாடு எடுத்து வைக்கும் முதல்படி என மக்கள் கருதி மகிழ்ந்தனர். ஆனால், இதுவே முதலும் முடிவும் என அறிந்த போது அவர்கள் உள்ளங்களிலே வெறுப்பு மண்டியது. ஆட்சியை எதிர்த்துக் குடியரசுக் கட்சி அடிக்கடி கலகங்களை நிகழ்த்தியது. ஆனால், அக் கட்சியை நசுக்கி, அதன் பத்திரிகைகளை அழித்து, லட்சம் உறுப்பினருக்குக் கடுமையான தண்டனை அளித்து அவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக்கொண்டது அரசு. அரசருக்கு ஆதரவாக இருந்த ஒரே கட்சி நடுத்தர மக்களைப் பெருவாரியாகக் கொண்ட அரசியல் அமைப்புக் கட்சியாகும். இக் கட்சிக்கு மன்னர் அளித்த சலுகைகளையும் அதனோடு அவர் கொண்ட தொடர்பையும் வெறுத்த இதர கட்சியினர் லூயி பிலிப்பை 'மக்கள் மன்னன்' எனக் கேலியாக அழைத்தனர்.

நாடாளுமன்ற முறையை மன்னர் நாட்டிற்கு அளித்திருந்த போதும் அம் முறை ஃபிரான்சில் வெற்றிகரமாக இயங்கவில்லை. 1830-லிருந்து 1840 வரை பத்து அமைச்சரவைகள் தோன்றி வீழ்ந்தன. 1840-லிருந்து 1848 வரை குவிசோ (Guizot) தொடர்ந்து அமைச்சராகப் பணியாற்றினார். இவர் அரசருக்கு ஏற்ற அமைச்சர். பெயரளவிலன்றி உண்மையாகவே அரச அதிகாரங்களை அனுபவிக்கத் துடித்த பிலிப்புக்கு இவர் உறுதுணையாக விளங்கினார். ஃபிரான்சின் அரசியலமைப்பில் இனி எந்த மாற்றமும் தேவையில்லை எனக் கருதினார் குவிசோ. சிறிதும் இடம்விடாத எஃகைப்போன்ற தீவிர பழமைவாதி அவர். வாக்காளர் பட்டியலை விரிவாக்குவதோ, தொழிலாளர்க்கு நன்மை செய்யும் சட்டங்களைச் செய்வதோ அவருக்குத் தேவையற்றதாகத் தென்பட்டது. முன்னுக்கும் செல்லாமல் பின்னுக்கும் செல்லாமல் உயிரற்றுத் தேங்கி நின்றது ஃபிரான்சின் அரசியல். ஆனால், மக்களின் துன்பங்களும் துயரங்களும் பெருகிக் கொண்டே சென்றன.

இந் நேரத்தில் ஃபிரான்சு தொழில் புரட்சியின் வயப்பட்டுக் கிடந்தது. ஃபிரான்சின் தொழில் வளம் பெருகியது போன்றே தொழிலாளர்களின் குறைகளும் இன்னல்களும் பெருகிக் கொண்டே போயின. அதிக நேர வேலை, குறைந்த ஊதியம் என்ற சூழ்நிலையில் தொழிலாளர்கள் அவதியுற்றனர். இதன் விளைவாகத்தான் தொழில்களின் அமைப்பைக் குறித்தும், தொழிலாளி முதலாளி உறவைக் குறித்தும் ஏகமாக விவாதிக்கப்பட்டு சோஷலிசக் கொள்கைகள் உருப்பெறலாயின. தங்கள் உழைப்புக் கேற்ற ஊதியம் தராது சமுதாயம் தங்களுக்கு அநீதி செய்வதாகத் தொழிலாளர்கள் மனம் குமுறினர். செயின்ட் சைமன் போன்ற சோஷலிசவாதிகள் சமுதாய சீர் திருத்தத்திற்காகப் புதிய கருத்துகளை வெளியிட்டனர். செயின்ட் சைமன், தொழில் உற்பத்தி அரசிடமே இருக்கவேண்டும் என்றும், திறமைக்கேற்ற வேலை, உழைப்பிற்கேற்ற ஊதியம் வேண்டும் என்றும் வாதிட்டார். இவரது கருத்துகளை ஏற்று நடந்த மற்றொரு சிந்தனையாளர் லூயி பிளாங் (Louis Blanc) ஆவர். சிறந்த எழுத்தாளரான இவர் தம் எழுத்தோவியங்களில் ஃபிரான்சின் பொருளாதார நிலையைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டினார். லூயி பிலிப்பின் பூர்ஷ்வா அரசாங்கத்தைப் 'பணக்காரர்களுக்காகப் பணக்காரர்களால் பணக்காரர்களைக் கொண்டு நடத்தப்படுகின்ற ஆட்சி' என்று கடுமையாக விமர்சித்தார். ஒவ்வொரு மனிதனுக்கும் வேலை பெறும் உரிமை உண்டு என்றும் அதை அரசு உருவாக்கித் தரவேண்டும் எனவும் விவாதித்தார். இதற்காக அரசே முதல் போட்டுத் தேசியத் தொழிலகங்களை நடத்தவேண்டும் எனக் கூறினர். இவற்றைத் தொழிலாளர்களே நிர்வகித்து இலாபத்தைப் பிரித்துக் கொள்ளலாம் என்றும் கூறினர். இவரது கருத்துகளைப் ஃபிரெஞ்சுத் தொழிலாளர்கள் மனதார ஏற்றனர். இவர்களைக் கொண்டு குடியாட்சியில் நம்பிக்கையுள்ள சோஷலிஸ்டுக் கட்சி ஒன்று பிறந்தது. இதே சமயம் நாட்டில் நாடாளுமன்றச் சீர்திருத்தமும், தேர்தல் முறையில் சீர்திருத்தமும் வேண்டுவோரின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே சென்றது. இந்த எதிர்ப்பையெல்லாம் குவிசோ பொருட்படுத்தவே இல்லை. எனவே, எதிர்ப்பின் வேகத்தை அரசுக்கு உணர்த்த 1847 ஆம் ஆண்டு எண்ணற்ற சீர்திருத்தக் கூட்டங்கள் (Reform Banquets) நாடெங்கும் ஏற்பாடு செய்யப்பட்டன. முடியாட்சியிடம் தங்களுக்கு விசுவாசம் உண்டு; ஆனல், 'அரசின் கொள்கைகளை எதிர்க்கிறோம் என இவர்கள் வலியுறுத்தினர். வேறு சில கூட்டங்கள் முடியாட்சியை எதிர்ப்பதற்கென்றே ஏற்பாடு செய்யப்பட்டன. 1848ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாரிசில் கூடவிருந்த அத்தகைய கூட்டம் ஒன்றை அரசு தடை செய்தது. கூட்டத்திற்கு

வந்த எண்ணற்ற மாணவரும் பிறரும் ஏமாற்றமும் சினமும் அடைந்தனர். அச் சினத்தின் காரணமாகச் சட்டத்திற்குப் புறம்பான சில நிகழ்ச்சிகள் நடந்தன. அவர்களை அடக்குவதற்காகத் தேசியப் பாதுகாப்புப் படையை, அரசு ஏவியது. பாதுகாப்புப் படையினர் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தனர். அச்சம் அடைந்த அரசர் சில சீர்திருத்தங்களை அளிக்க முன்வந்தார். ஆனால், குவிசோ அதற்கு உடந்தையாக இருக்க விரும்பாது பதவியை விட்டு விலகினார். இச் செய்தி பாரிசு மக்களுக்குப் புதிய உற்சாகத்தை அளித்தது. குவிசோ பதவியை விட்டு விலகியதைக் கோலாகலமாகக் கொண்டாடினர். மக்களின் பிப்ரவரிப் புரட்சி இத்துடன் நின்றுவிடவில்லை. முடியரசை வெறுத்த குடியரசுக் கட்சியினர் மக்களின் மனநிலையைப் பயன்படுத்தி லூயி பிலிப்பையும் விரட்ட எண்ணினர். ஊர்வலங்களும் கைகலப்புகளும் நிகழ்ந்தன. கைகலப்பில் இறந்த மக்களின் உடல்களை வண்டியில் நிரப்பித் தீவட்டி வெளிச்சத்தில் ஊர்வலம் விட்டனர். எங்கும் பழி வாங்கும் உணர்வு மிஞ்சியது. சீர்திருத்தங்கள் வேண்டும் என்ற கோரிக்கை மாறி 'குடியாட்சி வாழ்க' என்ற கூக்குரல் கிளம்பியது. இறுதியில் பிப்ரவரி 24ஆம் நாள் லூயி பிலிப் தன் பேரன் பாரிஸ் பிரபுவுக்கு ஆட்சியளித்துப் பதவியை விட்டு விலகி, மாறு பெயரில் இங்கிலாந்து சென்றார். பின்னர் இரண்டாண்டுகளே உயிர்வாழ்ந்தார்.

குடியரசுக் கட்சியினரும் சோஷலிஸ்டுக் கட்சியினரும் முடியரசு நீடிப்பதைச் சிறிதும் விரும்பவில்லை. எனவே, அவர்கள் லாமார்டைன் (Lamartine) என்ற புகழ்பெற்ற கவிஞரைத் தலைவராகவும் லூயி பிளாங்கை உறுப்பினராகவும் கொண்ட தற்காலிக அரசை அமைத்தனர். விரைவில் மக்களின் ஒப்புதலுடன் இத் தாற்காலிக அரசு குடியரசாக மாறியது. இவ்விதம் ஃபிரான்சில் இரண்டாவது குடியரசு ஏற்பட்டது. பிப்ரவரிப் புரட்சியும் இங்ஙனம் வெற்றி முரசு கொட்டியது.

## பிற நாடுகளில் 1848ஆம் ஆண்டுப் புரட்சி

ஃபிரான்சில் பரவிய புரட்சித் தீ ஜெர்மனியையும் பற்றியது. ஜெர்மனியின் ஒவ்வொரு பகுதியிலும் புரட்சி பரவியது. ஃபிரஷ்ய மன்னர் 4ஆம் ஃபிரடெரிக் வில்லியம் தம் மக்களுக்கு ஓர் அரசியல் அமைப்பைத் தந்தார். சாக்சனி, பவேரியா, ஹனோவர் சிற்றரசர்களும் இதைப் பின்பற்றினர். இவை அனைத்தையும் விட முக்கியத்துவம் வாய்ந்தது 1848-ல் ஃபிராங்பர்ட்டில் கூடிய தேசிய நாடாளுமன்றம் ஆகும். எல்லா ஜெர்மன் நாடுகளும் இதில் அங்கம் வகித்தன. ஜெர்மனிக்கு என ஒரு பொதுவான

அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஜெர்மனியின் மணி முடி ஃபிரஷ்ய மன்னர் 4ஆம் ஃபிரடெரிக் வில்லியத்துக்கு வழங்கப்பட்டது. புரட்சி மன்றம் அறிவித்த இம் முடியை ஃபிரஷ்ய மன்னர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆஸ்திரியாவிற்கு அஞ்சியதாலும் புரட்சி நாடாளுமன்றத்தின் பலவீனத்தைத் தெரிந்துகொண்டிருந்ததாலுமே அவர் இவ்விதம் மறுத்தார். இதனுல் ஜெர்மனி ஐக்கியம் அடையும் காலம் சிறிது தள்ளிப்போயிற்று என்பதோடு, ஆஸ்திரியாவும் தன் வலிமையைக் காட்டிப் புரட்சியின் வேகத்தைச் சிறிது சிறிதாகத் தணியும்படி செய்தது. இருப்பினும், மெட்டர்னிக் உருவாக்கிய ஜெர்மனி பெருத்த மாற்றத்தை அடைந்துவிட்டது என்பது உண்மையே.

ஆஸ்திரியப் பேரரசு இப் புரட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆஸ்திரியாவுக்கு அடங்கி இருந்த, பல இன மக்கள் இப்போது விடுதலை வேண்டிப் புரட்சி செய்தனர். 1848ஆம் ஆண்டிலிருந்தே பொகிமியாவில் இருந்த செக் மக்கள் அதிக உரிமைகளுக்காகப் போராடி வந்தனர். இப்போது அவர்களுடன் ஹங்கேரியில் இருந்த மாகியார்களும், லம்பார்டியிலும் வெனிசிலும் இருந்த இத்தாலியர்களும் சேர்ந்து கிளர்ச்சி செய்தனர். வியன்னுவிலும் புரட்சி பரவியது. ஹங்கேரி லூயி கொஸ்ஸூத் (Louis Kossuth) என்பவரின் தலைமையில் தன்னை ஒரு குடியரசாக அறிவித்துக்கொண்டது. புரட்சியின் கடுமை தாங்காது, பிற்போக்காளர் மெட்டர்னிக் இங்கிலாந்திற்கு ஓட்டம் எடுத்தார். ஆஸ்திரிய மன்னர் பெர்டினுண்டு மக்களுக்குச் சில சலுகைகளையும் ஓர் அரசியல் அமைப்பையும் அளித்தார். மேலும், ஹங்கேரிய மக்கள் கேட்ட பத்திரிகைச் சுதந்திரம், சமய சுதந்திரம் போன்ற பல சீர்திருத்தங்களுக்கும் வேறு வழியின்றி மன்னர் ஒப்புதல் அளித்தார். ஹங்கேரியைப் பின்பற்றி' பொகிமியாவும் தான் கேட்ட சலுகைகளைப் பெற்றது. மெட்டர்னிக் எழுப்பிய கோட்டைகளை வெறும் மணற் குவியல்களாக ஆக்கிய புரட்சியலைகள் ஆஸ்திரியப் பேரரசின் தெற்குப் பகுதிக்கும் பரவின. ஆஸ்திரிய ஆட்சியின்கீழ் 1815ஆம் ஆண்டிலிருந்து அவதிப்பட்ட லம்பார்டியும், வெனீசியாவும் அந்நிய ஆட்சிக்கு எதிராகப் புரட்சிக் கொடி உயர்த்தின. வெனிசு தன்னை ஒரு குடியரசாக அறிவித்துக்கொண்டது. பியட்மாண்ட், இச் சுதந்திரப் போரில் பங்குகொள்ளத் தன் படைகளை அனுப்பியது. தஸ்கனி, போப்பின் அரசுகள், நேப்பிள்சு ஆகிய இத்தாலிய நாடுகளும் தங்களுக்கென அரசியலமைப்புகளை உருவாக்கிக்கொண்டன. ஆஸ்திரியாவின் கைப்பிடியிலிருந்து இத்தாலியே நழுவிவிட்டதாகத் தோன்றியது. ஆஸ்திரியப் பேரரசு அழிவின்

எல்லைக்கு வந்துவிட்டது. ஆனாலும், ஆஸ்திரியா தன்னை மீட்டுக் கொள்ள ஓர் இறுதி முயற்சியில் ஈடுபட்டது. ஆஸ்திரியாவில் இருந்த பல இன மக்களின் இடையே உள்ள வேறுபாடுகளும் அதன் குன்றாப் படை வலிமையும் இழந்ததை மீட்டு விடுவோம் என்ற தெம்பை அந் நாட்டு அரசிற்கு ஊட்டின. முதலில் படை வலிமையால் பிராகா நகரைப் பிடித்து அங்குப் புரட்சித்தீயை அணைத்தது ஆஸ்திரியா. இத்தாலியிலும் வெற்றிக்கதை தொடர்ந்தது. பியட்மாண்டையும் லம்பார்டியையும் தனியே போராட விட்டுப் பிற இத்தாலிய நாடுகள் பின்வாங்கிவிட்டன. 60 ஆண்டுகளாகப் போர்களில் ஈடுபட்டு, தனிச்சிறப்புப்பெற்ற எண்பத்திரண்டு வயதான ராடட்ஸ்கீ என்ற ஆஸ்திரியத் தளபதியிடம் பியட்மாண்டின் மன்னர் சார்லசு ஆல்பர்ட் கஸ்டோசா என்ற இடத்தில் தோற்றார். இதற்கிடையே ஆஸ்திரிய மன்னர் பெர்டினண்டு தம் பதவியைத் துறக்கவே 18 வயது இளைஞன முதலாம் ஃபிரான்சிஸ் ஜோசப் ஆட்சிக்கு வந்தார். ரஷ்ய உதவியோடு ஆஸ்திரியப் படைகள் ஹங்கேரியில் நுழைந்தன. சுதந்திர இயக்கத்தை முறியடித்தன. அந் நாட்டைத் திரும்பவும் ஆஸ்திரிய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தன. கொஸ்ஸுத் துருக்கிக்கு ஓடிப்போனார். இத்தாலியில் ஃபிளாரன்சும் ரோமும் குடியரசுகளாக அறிவிக்கப்பட்டன. போப் ஆண்டவர் நாட்டை விட்டு வெளியேறினார். இந் நிலையில் 1849ஆம் ஆண்டில் திரும்பவும் சார்லசு ஆல்பர்ட் ஆஸ்திரியப் படைகளுடன் மோதினார். மற்ற இத்தாலிய நாடுகள் உதவிக்கு வராத நிலையில் அவர் கடுந்தோல்வி அடைந்தார். மனமுடைந்த சார்லசு ஆல்பர்ட் இத்தாலியின் நன்மையைக் கருதி, பதவியைத் துறந்தார். இருள் சூழ்ந்த நிலையில் பதவிக்கு வந்த அவர் மகன் இரண்டாம் விக்டர் இமானுவேல் இத்தாலிக்கு ஒளியூட்டும் பணியைப் பிற்காலத்தில் நிறைவேற்றினார். இதன் பின்னர் ஆஸ்திரியப் படைகள் இத்தாலியக் குடியரசுகள் அனைத்தையும் கலைத்து, திரும்பவும் ஆஸ்திரிய ஆதிக்கத்தை நிலைநாட்டின. இவ்விதம் ஆரம்பத்தில் மிகுந்த விறுவிறுப்போடு தொடங்கிய புரட்சிகள் இறுதியில் அவல முடிவை அடைந்தன.

19ஆம் நூற்றாண்டின் மையத்தில் தோன்றிய இவ்விரு புரட்சிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவற்றின் அடிப்படையிலும் குறிக்கோள்களிலும் உள்ள மகத்தான மாற்றங்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன. 1830ஆம் ஆண்டில் ஃபிரான்சில் ஏற்பட்ட புரட்சி சார்லசின் பிற்போக்குக் கொள்கைகளை எதிர்த்து உரிமைகளுக்காக ஃபிரெஞ்சு மக்கள் நிகழ்த்திய போராட்டம் ஆகும். முடியாட்சிக்கு எதிராக அன்றி, அரசிய

லமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியைக் கோரி எழுந்த புரட்சி யாகும் இது. இதனுல்தான் புரட்சிக்குப் பின்னும் வேெருரு மன்னரின்கீழ் முடியாட்சி தொடர்வதைப் பார்க்கிறேம். ஆனுல், அடுத்த புரட்சியோ குடியரசைக் கோரி நடந்த மாபெரும் மக்கள் எழுச்சியாகும். சமதர்மம், குடியாட்சிமுறை இவ்விரண்டுமே இப் புரட்சியின் குறிக்கோள்கள் ஆகும்.

ஒரு நில நடுக்கத்தைப்போல் ஐரோப்பாவை இவ்விரு புரட்சி களுமே ஆட்டிவைத்தன. முதற்புரட்சியால் பல நாடுகளில் ஜனநாயக யுகம் பிறந்தது. இரண்டாம் புரட்சியோ எங்கும் தேசிய உணர்வைக் கிளறிவிட்டது. இறுதி விளைவு என்று பார்க்கும்பொழுது இரு புரட்சிகளுமே தோற்றன. பெல்ஜியம் விடுதலைபெற்ற நிகழ்ச்சி மட்டும் விதிவிலக்காக இருந்தது. முதற் புரட்சியைவிட இரண்டாம் புரட்சி பொதுவாக ஐரோப்பிய மக்களிடத்தும் மன்னரிடத்தும் அரசியல் விழிப்புணர்ச்சியை அதிகமாகத் தூண்டிவிட்டது எனில் அக் கூற்று மிகை இல்லை.

45

# 6. பால்கன் நாடுகளின் பிரச்சினை

மேற்கு ஆசியா, வடக்கு ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளைக்கொண்டு விரிந்து பரந்திருந்தது, ஆட்டோமன் துருக்கியப்பேரரசு. 17ஆம் நூற்றாண்டிலிருந்து துருக்கியப் பேரரசின் வீழ்ச்சிப் படலம் துவங்கியது. துருக்கியர்களுக்கு அடிமைப்பட்டுப் பல இன்னல்களை அனுபவித்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்த கிறித்தவ சமயத்தைச் சார்ந்த ஸ்லேம் என்ற மக்கள் சமய, தேசிய உணர்வுகளால் உந்தப்பட்டு நீண்ட விடுதலைப் போராட்டத்திற்குபின் தங்கள் இலட்சியத்தை எய்தினர். கிரீஸ், செர்பியா, மான்டிநீக்ரோ, பல்கேரியா, ருமேனியா, அல்பேனியா, ஹெர்சிகோவினு போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் துருக்கியின் பிடியிலிருந்து விடுபட்டுச் சுதந்திர நாடுகளாக ஐரோப்பிய அரசியல் வானில் ஒளிவீசத் தொடங்கின. இந்தச் சுதந்திர இயக்கத்தில் ரஷ்யா, இங்கிலாந்து ஆஸ்திரியா, ஃபிரான்சு போன்ற நாடுகள் பல்வேறு கட்டங்களில் பல்வேறு நோக்கங்களோடு தலையிட்டு இதில் குழப்பத்தையும் சிக்கலையும் இழையவிட்டன.

இதுவே கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பிரச்சினை என்ற பெயரில் அறியப்படுகின்றது.

இப் பிரச்சினையைப்பற்றிக் கூறும்போது மில்லர் என்ற வரலாற்று அறிஞர், 'ஐரோப்பாவிலிருந்து துருக்கியப் பேரரசு சிறிது சிறிதாக மறைந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புகிற பிரச்சினையே கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பிரச்சினை' என வரையறுத்துக் கூறுகின்றார். மூர்லிப் பிரபு இதனை 'ஒன்றுக்கொன்று எதிரான ஈடுபாடுகள், பகைமக்கள், வேறுபாடான கோட்பாடுகள் ஆகியவற்றின் நிலையற்ற, கண்டுபிடிக்க இயலாத, ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கிற இழைகளின் பிரச்சினையே' எனக் கூறுகின்றார்.

1856ஆம் ஆண்டில் டான்யூப் நதிவரை விரிந்திருந்த துருக்கியப் பேரரசுக்கு 1914ஆம் ஆண்டில் தலைநகரும் திரேசில் (Thrace) ஒரு சிறிய பகுதி மட்டுமே எஞ்சின. இடைப்பட்ட காலத்திய துருக்கிய வரலாற்றை ஆராயும்போது நமக்கு நான்கு உண்மைகள் புலப்படுகின்றன. அயல்நாடுகளின் உதவியுடனோ, அன்றித் தனித்தோ போராடித் துருக்கிய ஆதிக்கத்தை உதறி எறிந்துவிட்டுத் தங்கள் சுதந்திர நிலையைத் துருக்கியும் ஐரோப்பாவும் ஒப்புக் கொள்ளும்படி செய்ய பால்கன் மக்கள் செய்த முயற்சிகள் முதலாவதாகும். அடுத்து இந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உள்ளே உள்நாட்டுக் குழப்பங்களைத் தவிர்த்துத் தத்தம் அரசாங்க நிதி, பொருளாதாரத் துறைகளைச் சீர்ப்படுத்திக் கொள்ள அந் நாடுகள் மேற்கொண்ட பணிகள் ஆகும். மூன்றாவதாகக் கிழக்கு ஐரோப்பாவில் உதயமான புதிய கிறித்தவ நாடுகள் தங்கள் நாடுகளை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு துருக்கியுடனும் தமக்குள்ளும் சண்டையிடத் தொடங்கின. வலிமை பெற்ற ஐரோப்பிய நாடுகளைப் போன்றே இங்கும் விரிவாக்கல், வல்லமைச் சமநிலை, மேலாதிக்கம் போன்ற கொள்கைகள் அடிபடத்தொடங்கின. இறுதியாக நசித்துக்கொண்டிருந்த துருக்கியப் பேரரசு, முதிர்ச்சியடையத் துடித்துக்கொண்டிருந்த புதிய நாடுகள் இவற்றின் நிலையைப் பயன்படுத்தித் தங்களுடைய ஆதாயத்தைப் பெருக்கிக்கொள்ள நினைத்த ஐரோப்பிய வல்லரசுகளின் பேராசையும் குறிப்பிடத்தக்கதாகும். அதிலும் ரஷ்யா, ஆஸ்திரியா, ஹங்கேரி, ஜெர்மன் பேரரசு ஆகியவற்றின் பேராவல் சிறப்பானதொன்றாகும்.

மகாபீட்டரின் காலத்திலிருந்து கிழக்கில் முன்னேறுவதைத் தன் கொள்கையாகக் கொண்டிருந்தது ரஷ்யா. கருங்கடலையும் 'டார்டனெல்லஸ்' ஜலசந்தியையும் பெற்று மத்திய தரைக் கடலில் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பது அதன் இறுதி இலட்சியம். ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த பால்கன் மக்களைப் புராதன கிரேக்கக் கிறித்தவச் சமயத்திற்கும் ரஷ்ய நாட்டிற்கும் உள்ள தொடர்பும் ரஷ்ய மன்னரைப் பால்கன் பிரச்சினையில் தலையிட உரிமையும் கடமையும் உள்ளவராகக் கருதச் செய்தது. இதன் 'காரணமாகவே உரிமை கோரி பால்கன் மக்கள் புரட்சிக் குரல் எழுப்பியபோதெல்லாம் ரஷ்யா உடனடியாக அவர்களின் உதவிக்கு ஓடித் துருக்கியைக் கண்டிப்பதும் தண்டிப்பதும் வழக்கமாயிற்று. இந் நிலை ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் அச்சத்தைத் தோற்றுவித்தது. துருக்கியர் ஆதிக்கம் அழிந்தால் ரஷ்யாவின் செல்வாக்குப் பெருகும், அதனால் வல்லமைச் சமநிலை கடுமையாகப் பாதிக்கப்படும்; அதைத் தடுப்பது தம் கடமை என எண்ணி ஐரோப்பிய நாடுகள் செயல்பட ஆரம்பித்தன.

குறிப்பாக பிரிட்டன், கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யாவின் செல்வாக்குப் பெருகுவதால் தன் ஆதிக்கத்திலிருக்கும் எகிப்தும் இந்தியாவும் அபாயத்துக்குள்ளாவதைத் தவிர்க்க எண்ணியது. ரஷ்யக் கரடியின் நிழல் பால்கனில் படருவதை பிரிட்டிஷ் சிங்கம் அதிருப்தியோடு கவனித்தது. முடிவில் சரிந்துகொண்டிருந்த துருக்கியப் பேரரசிற்கு முட்டுக்கொடுத்து அதற்கு ஆதரவாக இருந்து ரஷ்யா அபாயத்திற்கு முடிவுகட்டத் தீர்மானித்தது. பால்மர்ஸ்டன் என்ற முதலமைச்சர் காலத்தில் இக் கருத்தை யொட்டி பிரிட்டனின் அயல் நாட்டுக் கொள்கை வகுக்கப்பட்டது.

கிழக்கு ஐரோப்பியப் பிரச்சினையை ஆஸ்திரியா வேறு கோணத்திலிருந்து கண்டது. கடற்கரை இல்லாத காரணத்தினால் குடியேற்றங்களை அமைக்கவும் வாணிபத்தைப் பெருக்கவும் வழி யற்றிருந்த ஆஸ்திரியா பால்கன் தீபகற்பத்தை அடைவதன்மூலம் கடலாதிக்கத்தைப் பெறுவது எளிது என நினைத்தது. மேலும், பால்கனில் இருந்ததைப் போன்ற பல இனப் பிரச்சினை ஆஸ்திரி யாவிலும் உண்டு. துருக்கியை எதிர்த்து பால்கன் மக்கள் சுதந் திரம் அடைந்தால் அது ஆஸ்திரிய அரசின் சிதைவிற்கும் காரண மாகக்கூடும் என ஆஸ்திரியா அஞ்சியது. இதற்காகத் துருக்கிச் சுல்தானின் கரங்களை வலுப்படுத்தி ரஷ்யாவை பால்கனில் செல் வாக்கு அடையாவண்ணம் தடுத்து நிறுத்தி இறுதியில் தன்திட்டம் நிறைவுறும் வகையில் தன் அயல்நாட்டுக் கொள்கையை ஆஸ்திரியா வகுத்துக்கொண்டது.

பால்கனில் துருக்கியின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக முதலில் புரட்சிக் கொடியை உயர்த்தியவர்கள் செர்பியரே. 1804ஆம் ஆண்டு காரா ஜார்ஜ் (Kara George) என்ற விவசாயப் பெருங்குடி மகனின் தலைமையில் அவர்கள் விடுதலைப் போராட்டத் தைத் தொடங்கினர். ரஷ்யாவும் தன் ஆதரவை நல்கியதால் செர்பிய அரசு அமைவது சாத்திமாயிற்று. ஆனால், மிலோஷ் ஒப்ரோனேச் (Milosh Obranovich) தலைமைப் பதவிக்குப் போட்டி யிட்டதால் செர்பியர்களிடையே பிளவு தோன்றியது. இதனைப் பயன்படுத்தித் துருக்கியர் மீண்டும் தம் ஆதிக்கத்தை செர்பியா வில் நிறுவினர். 1817ஆம் ஆண்டு காரா ஜார்ஜி கொல்லப் பட்டார்.

1829ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஏட்ரியனேப்பிள் உடன்பாடு செர்பியாவில் தன்னாட்சி ஏற்பட வழி வகுத்தது.

## கிரிமியப் போர் (1853—1856)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பிரச்சினைச் சுழலில் 1853ஆம் ஆண்டில் தொடங்கிய கிரிமியப் போர் மைய இடத்தை வகிக்கிறது.

மூன்று அடிப்படையான காரணங்கள் இப் போருக்கான சூழ்நிலையைத் தோற்றுவித்தன. அவை துருக்கியரின் குன்றிவரும் வலிமை, பால்கன் தீப கற்பத்தில் சிறிய, வீர உணர்வு பெற்ற கிறிஸ்துவ நாடுகள் எழுச்சியுற்றமை, வல்லரசுகளின் பால்கன் தீப கற்பத்தைப் பற்றிய கொள்கைகளை இவை பாதித்ததும் ஆகும். அற்பமான காரணங்களை முன்னிட்டும், நிறைவேற்ற முடியாத வீணான முடிவுகளை நோக்கியும், போரின் இயல்பு என்று பார்க்கும்பொழுதும், பெருமையற்ற நிலையிலும் இப் போர் நடந்தது; நவீன காலத்தில் நடந்த போர்களில் முற்றிலும் பயனற்ற வகையில் நடந்த போர் இது என இழித்துரைக்கப் படுகிறது. ஆயினும் வியன்னு மாநாட்டில் ஐரோப்பாவின் மீது திணிக்கப்பட்ட ஏற்பாட்டை வெற்றிகரமாகக் குலைத்தது என்ற வகையிலும். பால்கன் நாடுகள் மீது ரஷ்யாவின் ஆதிக்கம் படரு வதைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தியது என்ற வகையிலும் இப்போர் ஐரோப்பிய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுவதை எவரும் மறுக்க இயலாது.

கிரிமியப் போரில் பங்கு பெற்ற முக்கிய நாடுகளின் நிலையினைக் காண்போம். குட்சக் கெய்னார்ட்சி உடன்படிக்கையில் (1774) இடம் பெற்ற சில விதிகளை ஆதாரமாகக் கொண்டு ரஷ்யா, பால்கனில் உள்ள கிறிஸ்துவ இனத்தவரைப் பாதுகாக்கும் உரிமை தனக்கே உரியது என வாதிட்டது. இது தன் உள்நாட்டு விவகாரத்தில் அத்துமீறித் தலையிடுவதாகும் எனக் கருதிய துருக்கி, ரஷ்யாவின் உரிமையை ஒருபோதும் ஏற்கவில்லை. ரஷ்ய சார் முதலாம் நிக்கோலஸிற்குத் துருக்கி 'அபாய நிலையிலுள்ள ஒரு நோயாளி'க்காகவும், அந் நாடு எந்தக் கணத்திலும் சிதைந்து சிதறிவிடக் கூடிய நிலையில் இருப்பதாகவும் தோன்றியது. தவிர்க்க வியலாத அம் முடிவு ஏற்படுமுன் துருக்கியின் பிரதேசங்களைக் குறித்த ஓர் உடன்பாட்டினை பிரிட்டனுடன் ஏற்படுத்திக்கொள்ள அவர் துடித்தார். இவ்வுடன்பாட்டில் ஃபிரான்சைக் கூட்டாளியாக்கிக்கொள்ள அவர் விரும்பவில்லை. துருக்கியைச் சிதைவுறாமல் காப்பதையே தனது பரம்பரைக் கொள்கையாகக் கொண்டிருந்த பிரிட்டன் இதை ஒப்புக்கொள்ளவில்லை. பிரிட்டனில் ரஷ்யாவின் மீது அவநம்பிக்கை வளர்ந்தது.

ஃபிரான்சின் கிழக்கத்தியக் கொள்கையும் துருக்கியைப் பங்கீடு செய்வதை ஆதரித்தது. ஆனால், பெரும் பகுதி ஃபிரான்சையே சேரவேண்டும் என்பது அக் கொள்கையின் முக்கியக் குறிக்கோளாக இருந்தது. கிழக்கில் ஃபிரான்சின் பெருமையை நிலை நிறுத்த வேண்டும் என்ற தணியாத ஆசையும், ஃபிரான்சில் கத்தோலிக்கக் கட்சியினரை நம்பியிருக்க வேண்டிய அவசியமும்,

நெப்போலியன் என்ற பெயரோடு இணைக்கப்பட்டிருந்த புகழ், வெற்றி ஆகியவற்றைத் தானும் பெறவேண்டுமென்ற ஆர்வமும் மூன்றும் நெப்போலியனைப் போரில் ஈடுபடும்படித் தூண்டின.

ஐரோப்பாவில் வல்லமைச் சமநிலை சீர்குலையும்படியானநிலை ஏற்படுமெனில் அதற்குக் காரணம் ரஷ்யாவாகத்தான் இருக்க முடியுமென ஆஸ்திரியா உறுதியாக நம்பியது. இதனால் துருக்கி நாட்டைச் சிதைவுறாமல் காப்பது என்பதைத் தன் அரசியல் கொள்கைகளுள் ஒன்றாக அங்கீகரித்தது, ஆஸ்திரியா. வியன்னா ஏற்பாட்டின் மூலம் அயோனியத் தீவுகளைப் பெற்ற பிரிட்டன் கிழக்கத்தியப் பிரச்சினையில் அதிக நாட்டம் கொண்டது. காஸல்ரீ, கானிங், பால்மர்ஸ்டன், டிஸ்ரேலி ஆகிய பிரிட்டிஷ் பிரதமர்கள் உறுதியாகக் கடைப்பிடித்த அயல்நாட்டுக் கொள் கையின் முக்கிய அம்சங்கள் இரண்டாகும். அவை பால்கனில் ரஷ்ய ஆதிக்கத்தைத் தடுப்பதும் உதுமானியப் பேரரசைச் சிதைவுறாமல் காப்பீதும் ஆகும்.

எகிப்து துருக்கிக்கு உட்பட்ட ஒரு பகுதி. அதனை ஆண்டு வந்த முகமது அலி 'எகிப்தின் நெப்போலியன்' எனச் சிறப்பிக்கப் பட்டார். எகிப்தைப் பலவகைகளிலும் முன்னேறச் செய்து, படைபலத்தையும் பெருக்கி ரஷ்யாவின் உதவியையும் கோரிப் பெற்று துருக்கிக்குப் பெரும் தலைவலியாக விளங்கினார் முகமது அலி. ஒரு கட்டத்தில் நிலைமை கட்டு மீறியதை உணர்ந்த துருக்கி ரஷ்யாவோடு உன்கியார் ஸ்கெலசி உடன்படிக்கையைச் செய்து கொண்டு தன்தோல்வியை ஏற்றது. முகமது அலி மனம் பூரித்தார். ரஷ்யாவும் உடன்படிக்கையால் டார்டனெல்லஸ் ஜல சந்தியைத் தன் போர்க்கப்பல்கள் உபயோகத்திற்கு மட்டும் திறந்து விடப்படும் உரிமையைப் பெற்றுத் தன் பெருகிய வலிமை யைப் பறைசாற்றிக் கொண்டது. இதைக் கண்டு மனம் பொருமிய பிரிட்டன், பால்மர்ஸ்டனின் இராஜ தந்திரத்தின் மூலம் இவ் வுடன்பாட்டைத் தகர்த்தது. ரஷ்யாவின் கனவு கலைந்தது. முகமது அலி துருக்கியின் மேலாதிக்கத்தை ஒப்புக் கொண்டார்.

இந்தக் கிரிமியப் போர் வெடித்து எழுவதற்கான தீப்பொறி யினை வழங்கிய பெருமை ஃபிரெஞ்சுப் பேரரசரான லூயி நெப் போலியனையே சாரும். பேரரசராகுமுன், ஃபிரெஞ்சு மக்க ளிடையே முதலாம் நெப்போலியனின் மகத்துவத்தைக் கூறித் தன் புகழினைப் பெருக்க முயன்று கொண்டிருந்த காலத்தில் லூயி நெப்போலியன் ஒரு முறை நான் உங்கள் முன்னே ஒரு கொள்கை, ஒரு தேவை, ஒரு தோல்வி இவற்றின் பிரதிநிதியாக நிற்கிறேன். மக்களது ஆளும் உரிமையே அக் கொள்கை. ஒரு பெரும் பேரரசே

அத்தேவை. தோல்வி வாட்டர்லூவில் அடைந்த தோல்வி நீவிர் கொள்கையை உணர்ந்து விட்டீர்கள்; தேவைக்காகத் தொண்டு செய்து விட்டீர்கள்; மிஞ்சியிருப்பது தோல்விக்குப் பழிவாங்கும் படலம் ஒன்றே,' என்று முழங்கினான். பழிதீர்க்கும் வாய்ப்பு, போரினால் ஏற்படும் புகழ், நாட்டு மக்களின் நீடித்த ஆதரவு, அனைத்துமே அவனுக்குக் கிட்டும். அன்னியநாடு ஒன்றின் உள் நாட்டு விவகாரத்தில் தலையிடுதலின் மூலம் கத்தோலிக்கத் துறவி களின் உரிமைகளுக்காக வாதிடும் சாக்கில் துருக்கியில் தலையிடத் துணிந்துவிட்டான், லூயி நெப்போலியன். அந் நாட்டிலுள்ள கிறித்துவர்களின் புனிதத் தலமான பெத்லஹேம் ஆலயத்தின் திறவுகோல்களை வைத்திருக்கும் உரிமையும், ஏசு பெருமான் அவ தரித்த அந்தப் புனித இடத்தில் ஃபிரெஞ்சு அரசசின்னம் பொறிக் கப்பட்ட வெள்ளியிலான தாரகையை வைக்கும் சிறப்பதிகாரமும் கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்த துறவிகளுக்கு உண்டா, இல்லையா என்பதே பிரச்சினை. இலத்தீன் துறவிகளுக்கு இவ்வுரிமை கள் அளிக்கப்படவேண்டுமென நெப்போலியன் வற்புறுத்தவே, துருக்கி சுல்தான் முதலில் தயங்கினாலும் பின் அவ்வாறே செய் தார். ரஷ்ய சார் நிக்கோலஸ் சினமுற்று தன் ஆதிக்கத்திலுள்ள கிரேக்கத் திருச்சபையினரையே அவ்வுரிமைகள் சாரும் என சுல்தா னுக்குத் தாக்கீது அனுப்பினார். இரு வல்லரசுக் கட்சிகளிடையே சிக்குண்ட துருக்கி சுல்தான், இருவரையும் சமாதானப்படுத்த முயன்று தோற்றார். ரஷ்யத் தூதுவர் மென்ஷிக்கோ கான்ஸ் டான்டிநோபிலுக்கு வந்து சுல்தானைத் தன் வசம் ஈர்க்கும் பணியில் ஈடுபட்டார். ஐரோப்பாவின் நோயாளியான துருக்கிப் பேரரசை எப்படிப் பங்கு போடலாம் என நிக்கோலஸ் ஆலோசனை நடத்தினார். இதனிடையே துருக்கியிலிருந்த பிரிட்டிஷ் தூதுவரான ஸ்டிரல்போர்டு ரெட்கிளிஃப் பிரபு துருக்கியில் ரஷ் யாவின் ஆதிக்கம் ஓங்குவதைத் தடுக்கும் முயற்சியில் தீவிர மாகச் செயல்பட்டார். அவர் முயற்சி வென்றது. மனம் குமுறிய ரஷ்யா 1353ஆம் ஆண்டு ஜுலை மாதம் துருக்கியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த மால்டேவியா, வல்லேச்சியா பகுதிகளைக் கைப் பற்றியது.

ரஷ்யாவின் இச் செயலில் மனம் பதறாமல் ஃபிரான்சு, இங்கிலாந்து, ஆஸ்திரியா, ஃபிரஷ்யா ஆகியவை வியன்னாவில் கூடி ஒரு குறிப்பைத் தயாரித்து துருக்கிக்கும், ரஷ்யாவுக்கும் அனுப்பின. துருக்கியிலுள்ள கிறித்தவ மக்களைப் பாதுகாக்கும் உரிமையினைப்பற்றிய அக் குறிப்பு தெளிவற்றிருந்தது. ரெட் கிளிஃபின் தலையீட்டினால் துருக்கி இக் குறிப்பை ஏற்க மறுத்து விட்டது. இவ்விதம் ராஜதந்திர முயற்சி பயன்தராதபோது

போர் ஒன்றைத் தொடரவேண்டியநிலை ஏற்பட்டது. அக்டோபர் மாதத்தில் தன் பிரதேசத்திலிருந்து ரஷ்யப் படைகளை விலக்கும் படி சுல்தான் ஆணை பிறப்பித்ததற்குப் பதிலளிக்கும் வகையில் ரஷ்யா துருக்கி மீது போர்ப் பிரகடனம் செய்தது. சினேப் வளைகுடாவிலிருந்த துருக்கியக் கடற்படைப் பிரிவொன்றை ரஷ்யா தூள் தூளாக்கியது. ஃபிரான்சும், பிரிட்டனும் ரஷ்யா மீது போர் தொடுத்தன.

ரஷ்யா ஸிலிஸ்டிரியாவை முற்றுகையிட்டு, பால்கன் பிரதேசத்தைக் கடந்து கான்ஸ்டாண்டிநோபிளைப் பிடிக்கத் திட்டமிட்டது. இத் திட்டம் நிறைவேற முடியாமல் குறுக்குச் சுவராக ஆஸ்திரியா நின்றது. ரஷ்யாவிற்கும், ஆஸ்திரியாவிற்குமிடையே பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடந்தபோது கீழ்க்கண்ட நான்கு கருத்துகளும் நேசநாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவை (1) மால்டேவியா, வல்லேச்சியாவிலிருந்து ரஷ்யா விலக வேண்டும். (2) டான்யூப் நதியில் கப்பல் போக்குவரத்து எல்லோருக்கும் பொதுவாக வேண்டும். (3) ஐரோப்பிய வல்லமைச் சமநிலையைக் காப்பதில் துருக்கியும் இடம் பெறவேண்டும் (4) பால்கனிலுள்ள கிறித்துவ மக்களுக்குத் தானே பாதுகாவலன் என்ற உரிமையை ரஷ்யா விட்டுக்கொடுக்கவேண்டும். இவற்றை ஏற்பதில் ரஷ்யா தயக்கம் காட்டியதால் போரின் அடுத்த கட்டம் மூண்டது. கருங்கடலில் இருந்த ரஷ்யக் கடற்படைத் தளமான செபஸ்டோபோலைத் தாக்குவதெனப் பிரிட்டனும், ஃபிரான்சும் முடிவெடுத்தன. செபஸ்டோபோல் முற்றுகையிடப்பட்டது. ரஷ்யர்கள் தீரத்தோடு நகரைக் காத்தனர். இதற்கிடையே பாலக்லாவிலும், இஸ்கர்மேனிலும் ரஷ்யப் படைகள் ஆங்கிலேயர்களையும், ஃபிரெஞ்சுக்காரர்களையும் எதிர்த்துத் தோல்வியைத் தழுவின. தொடர்ந்து சார்தீனியர்களிடமும் ரஷ்யர்கள் தோற்றனர். நேசப் படையினரால் இவ்வெற்றிகளைச் சுவைக்க முடியவில்லை. கிரிமியாவின் கடுங்குளிரும், காலரா போன்ற கொள்ளைநோய்களும் அவர்களைக் கொடுமைப்படுத்தின. போதிய உடை, உணவு, மருத்துவ வசதிகளின்றிப் படையினர் திணறினர். படுகாயமுற்றோர் மூன்று வார கடற் பயணத்திற்குப் பின்பே, ஸ்குட்டாரி மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெறமுடிந்தது. அம் மருத்துவ நிலையத்தின் நிலையும் இரங்கத்தக்கதாக இருந்தது. 'டைம்ஸ்' பத்திரிகையின் போர்க் கால நிருபர் ஒருவர் நேசப்படையின் அவலநிலையைத் தம் பத்திரிகையில் சித்தரித்து எழுதினார். இங்கிலாந்தில் பொது மக்களிடையே இச் செய்திகள் பெரும் பரப்பை ஏற்படுத்தின. படையினரின் நலன்கள் கவனிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள்

நாடெங்கிலும் எழுந்தன. பிரிட்டிஷ் பிரதமரான அபெர்டீன் பதவி இழந்தார். பால்மர்ஸ்டன் தலைமையேற்றார். படையினருக்காக வசதிகள் கண்காணிப்போடு ஏற்படுத்தப்பட்டன. இடையே பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்ற ஆங்கிலேய மாது தனிப்பட்ட முறையில் பணம், பொருள்கள் ஆகியவற்றைச் சேகரித்துக் கொண்டு ஒரு தொண்டர் குழாம் புடைசூழ, ஸ்குட்டாருக்கே வந்தார். உலகமே வியக்கும் தன்னலமற்ற பணியினைச் செய்து நோயுற்ற, காயமுற்ற படையினருக்கு ஆறுதலும், அமைதியும் தந்தார். கிரிமியப் போரினால் விளைந்த முக்கியமான நன்மை இராணுவ மருத்துவத் துறையில் செவிலியரின் பங்கு சீர்திருத்தப் பட்டதாகும்.

1855ஆம் ஆண்டு ஜூன் மாதம் செபஸ்டாபோலின் ஒரு பகுதி வீழ்ந்தது. ரஷ்ய மன்னர் நிக்கோலஸ் காலமானார். அவருக்குப்பின் பதவியேற்ற அவரது மகனான இரண்டாம் அலெக்சாந்தர் லூயி நெப்போலியனிடம் தன் தந்தையைப் போல் பகைமை பாராட்டாது போரை முடிவுக்குக்கொண்டு வர விரும்பினார். சிறிய ஆசியாவில் துருக்கிக்குச் சொந்தமாக இருந்த கார்ஸ் கோட்டையை ரஷ்யர்கள் கைப்பற்றினாலும் போரைத் தொடர்ந்து நடத்த நாட்டின் நிதிநிலைமை இடம் தரவில்லை. இவற்றின் விளைவாகப் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டுப் பாரிசில் சமாதான மாநாட்டிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1856ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பாரிசில் சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. தாங்கள் விரும்பியதையெல்லாம் நேசநாடுகள் இவ்வுடன்பாட்டின் மூலம் அடைந்தனர். முதலாவதாக கருங்கடல் நடுநிலையாக்கப்பட்டது. அதாவது துருக்கியும், ரஷ்யாவும் அக் கடலில் போர்க் கப்பல்களை நிறுத்தி வைத்திருக்கும் உரிமையை இழந்தன. டான்யூப் நதியில் எல்லா நாட்டுக் கலங்களும் செல்லலாம். அடுத்து, சுல்தானின் கிறித்தவ மக்கள்மீது தனக்கிருந்த உரிமையை ரஷ்யா விட்டுக் கொடுத்தது. அதற்குப் பதிலாக அம் மக்களைத் தன் மற்ற குடிகளைப் போன்றே சரிசமமாக மதித்து நடத்துவதாக சுல்தான் கொடுத்த வாக்குறுதி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மால்டேவியா, வல்லேச்சியா பிரதேசங்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்கப் பட்டுப் பெயரளவிற்குத் துருக்கி சுல்தானுக்குக் கட்டுப்பட் டிருக்க வேண்டுமென விதிக்கப்பட்டது. ரஷ்யாவிடமிருந்து தென் பெஸ்ஸரேபியா பிடுங்கப்பட்டு இப் பகுதிகளோடு இணைக் கப்பட்டது. துருக்கி சிதைவுறாமல் காப்பதென நேசநாடுகள் பிரதிக்ஞை செய்துகொண்டன. செர்பியாவிற்கும் சுதந்திரம்

வழங்கிய சுல்தான் தன் பிறமக்களை நன்கு ஆள்வதாக உறுதி கூறினன்.

கிரிமியப் போரில் முக்கிய விளைவு ரஷ்ய ஆதிக்கம் துருக்கியில் ஏற்படாமல் தடுத்ததாகும். துருக்கிக்கும் நேசநாடுகளின் அரவணைப்பில் மறுவாழ்வு கிடைத்தது. லூயி நெப்போலியனுக்குப் பெரும் புகழும் விளம்பரமும் கிடைத்தன. இங்கிலாந்தில் தேசியக் கடன் சுமை அதிகரித்தது. ஆஸ்திரியா, ஒரு ஜன்ம வைரியைப் பெற்றது.

இவையன்றியும் கிரிமியப் போர் ஐரோப்பிய அரசியலில் பிற விளைவுகளையும் ஏற்படுத்தியது. ஒரு புதிய இத்தாலியும், ஒரு புதிய ஜெர்மனியும் தோன்றுவதற்கு இப் போர் உதவி புரிந்தது. ரஷ்யாவின் உள்நாட்டுக் கொள்கையில் முன்னேற்றக் கருத்துகளும், வெளிநாட்டுக் கொள்கையில் திசைமாற்றமும் தோன்றின. வியன்ன ஏற்பாடு அடிப்படையில் ஆட்டம் கண்டது. பால்கனில் புதிய சக்திகள் உயிர்த்துக் கொண்டிருந்தன.

# 7. மூன்றும் நெப்போலியன்

1848ஆம் ஆண்டு பிப்ரவரி புரட்சிக்குப் பின் ஃபிரெஞ்சு மன்னர் லூயி பிலிப் நாட்டை விட்டு ஓடிய பின்னர், ஃபிரான்சில் ஒரு குடியரசு நிறுவப்பட்டது என்று பார்த்தோம். இக் குடியரசு பெயரளவில் 1852ஆம் ஆண்டு வரை நீடித்தாலும், 1851ஆம் ஆண்டிலேயே அதற்கு முடிவு வந்துவிட்டது. குடியரசின் ஐந் தாண்டுக்கால வரலாறு குழப்பமும் அபாயமும் நிறைந்ததாக இருந்தது. ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட தாற்காலிக , அரசில் 'லாமார்டைனின்' (Lamartine) தலைமையிலான குடியரசுக் கட்சி பெரும்பான்மையாகவும், லூயி பிளாங்கின் (Louis Blanc) தலைமையிலான சோஷலிஸ்டுக் கட்சி சிறுபான்மையாகவும் இடம் பெற்றிருந்தன. இவ்விரு கட்சிகளுக்கிடையே கொள்கை வேறு பாடு காரணமாக அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. முடியரசி லிருந்து குடியரசிற்கு மாறிய சாதனை ஒன்றோடு திருப்தி அடைந் தார் லாமர்ட்டைன். ஆனால், லூயி பிளாங்க்கோ, அரசியலில் ஏற்படும் மாற்றம்மட்டும் போதாது; நாட்டில் பெரும்பான்மை யினரான ஏழை மக்களது நிலையை உயர்த்த சமுதாயமே ஒரு பெரும் மாற்றத்துக்குட்பட வேண்டும்; குறிப்பாக அனைவருக்கும் வேலை பெறும் உரிமை (Right to Employment) வேண்டும் என்ற கொள்கை உடையவராயிருந்தார். இவரது ஆலோசனைப்படி அரசு தேசியத் தொழிலகங்களை (National Workshops) நாடு முழுவதும் ஏற்படுத்தியது. அரசின் உதவியோடு நடத்தப்படும் தொழிற்சாலைகளில் ஒவ்வொரு தொழிலாளியும் தனக்குத் தெரிந்த தொழிலைச் செய்து உற்பத்தியைப் பெருக்குவது என்ற லூயி பிளாங்க்கின் கொள்கைக்கு எதிர்ப்பாகப் பல்வேறு தொழில் களைச் செய்பவர்கள் பலருக்கும் ஒரே மாதிரியான வேலை வழங் கப்பட்டது. இராணுவ முறையிலான வாழ்வும், ஒரு நாளைக்கு இரு பிராங்க்குகள் கூலி என்ற வழக்கமும் நடைமுறையிலிருந்த இத் தொழிலகங்களில், உற்பத்திபற்றிய ஓர் ஒழுங்குமுறையும் கிடையாது. இத் தொழிலகங்களை நாடி வருவோர் எண்ணிக்கை

நாளுக்கு நாள் உயர்ந்து மூன்றும் மாதத்திலேயே ஓர் இலட்சத்தை எட்டிவிட்டது. அனைவருக்கும் வேலை கொடுக்க முடியாதாகையால், வேலை நாள்கள் வாரத்தில் இரண்டாகச் சுருங்கி, அதற்குக் கூலியாக, வாரத்திற்கு எட்டுப் பிராங்க்குகள் நிர்ணயிக்கப்பட்டது. இது பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதில் நிலைமையின் இறுக்கத்தை மேலும் அதிகப்படுத்தியது. தொழிலாளர்கட்கு வீண் பொழுதுபோக்க அளிக்கப்பட்ட நேரமும், குறைவான கூலி விகிதங்களும் குறைகளைப்பற்றிப் பேச நிறைய வாய்ப்பளித்தன. இப் பரிசோதனையால் நாட்டின் பணம் வீணானதோடு உருப்படியாக ஒன்றும் நிறைவேறாமல் குரூரமான புரட்சிக்குத் தான் வழி வகுக்கப்பட்டது.

1848ஆம் ஆண்டு மே மாதம் வயது வந்த 9,000,000 வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய அரசியலமைப்புச் சபை பதவி ஏற்றது. இச் சபையில் மிதவாதிகளாகக் குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மைப் பலம் பெற்றிருந்தனர். இச் சபையின் முதற்பணி சோஷலிசம், அமைதியின்மை ஆகியவற்றை வளர்க்கும் தேசியத் தொழிலகங்களை மூட முடிவெடுத்ததே யாகும். தொழிலாளர்கள் படையில் சேரலாம் என்றும், கிராமப் புறங்களுக்குச் சென்று அரசின் பொதுப்பணிகளில் ஈடுபடலாம் என்றும் இரு வாய்ப்புகள் வழங்கப்பட்டன. ஆனால், தொழிலாளர்கள் இவற்றை விடுத்துப் புரட்சி செய்யத் துணிந்தனர். தேசிய அவைத் தளபதி கேவன்யாக்கிற்குச் (General Cavaignac) சர்வாதிகாரத்தை அளித்து, கிளர்ச்சியை அடக்கப் பணித்தது. ஜூன் மாதம் நான்கு நாள்களுக்குத் தொடர்ந்து பாரிசு தெருக்களில் மூர்க்கமான போராட்டம் நடந்தது. இறுதியில் புரட்சி ஒடுக்கப் பட்டாலும் செலவான தொகையும், கொல்லப்பட்ட 10,000 மக்களும், கைது செய்யப்பட்ட 25,000 மக்களும், நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கானோரும், ஏழை மக்களின் நெஞ்சங்களிலே ஆளுவோரைப்பற்றிய வெறுப்புணர்வை மூட்டினர். சோஷலிசம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது.

இதன் பிறகே தன் முக்கியப் பணியாகிய அரசியலமைப்பை வரைதலை அவை ஏற்றது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் ஒரு குடியரசு நிறுவத் தீர்மானிக்கப்பட்டது. மூன்றாண்டுகள் பதவிவகிக்கும் 750 உறுப்பினர்களைக்கொண்ட ஓரவை சட்டமன்றத்தை உருவாக்குவதென்றும், நிர்வாக அதிகாரம் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்காண்டு காலத்திற்குப் பதவி வகிக்கும் அதிபர் ஒருவரிடம் இருப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவு, லூயி நெப்போலியன் போனபார்ட் என்ற ஒருவர்,

தம் பிறப்புக் காரணமாகவும், நெப்போலியனேடு கொண்ட உறவுத்தொடர்பு காரணமாகவும் ஃபிரான்சின் தலைமைப் பதவி தனக்கே உரியது என வாதிட்டு அதைப் பெறவும் வழிவகுத்தது.

1832ஆம் ஆண்டில் நெப்போலியனது மகன் இறந்தபின், நெப்போலியனின் தம்பி மகனுன லூயி நெப்போலியன் குடும்பத் தலைவன் ஆனான். ஃபிரான்சை ஆளும் தகுதியும் உரிமையும் தனக்கு உண்டெனக் கண்மூடித்தனமாக அவன் நம்பினான். 1836ஆம் ஆண்டிலும், 1840ஆம் ஆண்டிலும் இருமுறை அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்று தோற்றான். முதன் முறை நாடு கடத்தப்பட்டும், இரண்டாம் முறை சிறையிலிடப்பட்டும் அவன் மனம் தளரவில்லை. சிறையிலிருந்து தப்பிச்சென்று இங்கிலாந்தில் தஞ்சமடைந்த லூயி நெப்போலியன் 1848ஆம் ஆண்டுப் புரட்சியைத் தனக்களிக்கப்பட்ட வாய்ப்பாகக் கருதினான். நாடு திரும்பி, அரசியலமைப்புச் சபையில் உறுப்பினன் ஆனான். அவன் திறமையும், கருத்துகளும் பிறரை ஈர்க்காவிட்டாலும், அவன் பெயரில் காந்தம் இருந்தது. நெப்போலியன் என்ற பெயரைக் கேட்டதும் ஃபிரெஞ்சுக்காரர்கள், குறிப்பாக விவசாயிகள் பரவசமாயினர். பின்னர் அரசியலமைப்புச் சபையிலும் அவன் அங்கம் வகித்தான். தன் பெரியப்பாவைப்போல் புகழ்பெற விரும்பிய நெப்போலியன் ஒவ்வொரு கணமும் வாய்ப்பினைத் தேடிக் கொண்டேயிருந்தான்.

குடியரசின் அதிபருக்கான தேர்தல் நடைபெற்றபோது நெப்போலியனும் தேர்தலில் நின்றான். தாற்காலிக அரசு தோன்றிய நாளிலிருந்து பதவி வகித்த கேவன்யாக்கும் போட்டியிட்டார். தொழிலாளி வர்க்கத்தின் நன்மதிப்பை அவர் இழந்திருந்த காரணத்தால் நெப்போலியனுக்கு வெற்றிவாய்ப்பு கூடுதலாயிற்று. முடிவில் ஐந்துமில்லியன் வாக்குகள் வித்தியாசத்தில் நெப்போலியன் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். குடியரசிற்கு உண்மையுள்ளவனாக இருப்பதாகவும் அவ்வமைப்பை மாற்ற முற்படுவோரைத் தண்டிப்பதாகவும் சட்டமன்றத்தில் சூளுரைத்தான் நெப்போலியன். மூன்றாண்டிற்குள் அதைத் தானே மீற நேரிடும் என்று அவன் அப்போது கனவிலும் கருதவில்லை. அரசியலமைப்பின்படி அதிபர் நான்காண்டுகளுக்குப் பதவியை விட்டு விலகவேண்டும்; மறுதேர்தலில் போட்டியிடக் கூடாது. ஆனால், பதவி ஆசையும் ஆதிக்கவெறியும் நெப்போலியனைப் பிடித்தாட்டின. முதலாம் நெப்போலியனின் வாழ்வில் ஒரு பொன்னான பகுதியைத் தானும் தன் வாழ்வில் நடத்திப் பார்க்கத் தயாரானான். இதில் மட்டுமே முதலாமவனைக் காட்டிலும் இவன் பெரு வெற்றியடைந்தான்.

1851ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் நாள் ஆஸ்டர்லிட்ஸ் வெற்றித் திருநாளன்று நாடு கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தபோது நெப்போலியன் தன் விதியைச் சோதித்துப் பார்க்கத் துணிந்தான். அன்று பல ராணுவ, அரசாங்கத் தலைவர்கள், குடியரசுக் கட்சி, அரசக் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் ஆகியோர் அவரவர் இல்லங்களிலேயே கைது செய்யப்பட்டனர். ஒரு சிறு படை சட்டமன்றத்தை வளைத்துக் கொண்டது. தலைநகரின் சுவர்களிலெல்லாம் அதிபரின் கொள்கைகளை விளக்கும் சுவரொட்டிகள் காணப்பட்டன. முதலாம் நெப்போலியனது கான்சுலேட் காலத்தில் நிலவிய அரசியலமைப்பையும் சுபிட்சத்தையும் ஃபிரெஞ்சு மக்களுக்கு இவரும் அளிக்கப் பிரயத்தனப்படுவதாக அச் சுவரொட்டிகள் கூறின. நாட்டில் நெப்போலியனுக்கு எதிர்ப்பே இல்லையெனக் கூறிவிட முடியாது. சில சட்ட மன்ற உறுப்பினர்கள், சுவரொட்டிகளில் காணப்பட்ட வாசகங்களின் பொருளை உணர்ந்துகொண்டு அதிபரைக் குற்றம்சாட்டும் நோக்கத்தோடு சட்டமன்றத்திற்குச் சென்றனர். ஆனால், அவர்கள் உள்ளே நுழைய முடியாது தடுக்கப்பட்டதோடன்றிக் கைதும் செய்யப்பட்டனர். தனக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழா வண்ணம் சில தடுப்பு நடவடிக்கைகளையும் அவன் மேற்கொண்டிருந்தான். நெருக்கடி நேரங்களில் மக்களைப் புரட்சிக்குத் தயார்ப்படுத்தும் பத்திரிகைகளும் அச்சகங்களும் காவல் படையின் கண்காணிப்பின்கீழ் வந்தன. இந்த முன்னேற்பாடுகளையும் மீறி டிசம்பர் 3ஆம் நாள் மக்கள் அணி அவனுக்கெதிராகத் திரண்டது. ஆனால், அடுத்தநாளே பல படுகொலைகளுக்குப்பின் பாரிசு பணிந்தது. லூயி நெப்போலியனின் திடீர்ப் புரட்சி (Coup D' Etat-சூதத்தா) வெற்றிபெற்றது. மாவட்டங்களில் புரட்சியைத் தவிர்க்க ராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. நெப்போலியனால் அபாயகரமாகக் கருதப்பட்டவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டோ நாடு கடத்தப்பட்டோ அப்புறப்படுத்தப்பட்டனர். குறிப்பாகக் குடியரசுக் கட்சிக்குச் சமாதி கட்டப்பட்டது.

இவ்விதம் எதிர்ப்பை நசுக்கியபின் நெப்போலியன் அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரத்தையும் அவர்களுக்குப் பணிபுரியும் வாய்ப்பையும் மக்கள் தனக்களிக்க விரும்புகின்றனரா என்பதையறிய ஒரு வாக்கெடுப்பு நடத்தினான். இவ் வாக்கெடுப்பு நியாயமான முறையில் நடைபெறாவிட்டாலும், கொள்கைகள் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்கப்படாவிட்டாலும், பெருமளவிற்குப் பலமும் பயமுறுத்தலும் பயன்படுத்தப்பட்டாலும், ஏழரை மில்லியன் மக்கள் அவனுக்காதரவாக (எதிர்த்தவர்கள் ஒரு மில்லியனுக்கும் குறைவு) வாக்களித்து மறுபடியும் ஒரு

நெப்போலியனது ஆட்சி அமைவதில் தங்களுக்கிருந்த ஆர்வத்தைப் புலப்படுத்தினர்.

வாக்குக் கணிப்பின் முடிவு வெளியானபோதே குடியரசு மடிந்துவிட்டது. ஆயினும், பெயரளவில் அது இன்னும் ஓராண்டுக் காலம் நீடித்தது. 1852ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மறுபடியும் ஒரு வாக்குக் கணிப்பின்மூலம் குடியரசிற்குப் பதில் பேரரசை நிறுவ மக்களிடம் அனுமதிபெற்றான் நெப்போலியன். போனபார்ட் குடும்பத்தினருக்கு அதிர்ஷ்ட நாளான நவம்பர் 2ஆம் நாள் மூன்றாம் நெப்போலியன் என்ற பெயரோடு ஃபிரெஞ்சு மக்களின் பேரரசாக முடிசூட்டிக் கொண்டான் லூயி நெப்போலியன். ஃபிரான்சில் இரண்டாம் பேரரசு பிறந்தது.

18 ஆண்டுகள் பேரரசராகச் செங்கோலோச்சிய நெப்போலியன், தன் பெயரில் உள்ள கவர்ச்சியை முழுமையாகப் பயன்படுத்தியும், நிலையான கொள்கை இல்லாதபோதிலும், ஐரோப்பிய அரசியலில் தனக்குக் கிடைத்த வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தியும் ஐரோப்பிய மன்னர்களிடையே ஒரு பெரும் புள்ளியாகத் திகழ்ந்தார். அவரது அரசாட்சி மக்களது நன்மையைக் கோரும் சர்வாதிகாரியினது ஆட்சியாகக் காட்சியளித்தது. தேவையான சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு நாட்டை மேனிலைக்கு உயர்த்திய பின் ஒரு குடியரசில் உள்ளதைப் போன்று மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படும் என்பதே பேரரசின் கொள்கையெனக் கூறப்பட்டது. முதலாம் நெப்போலியன் ஆரம்பித்த பணிகளை முடிக்க வேண்டுமெனில் மக்கள் சிறிது காலத்திற்குத் தங்கள் உரிமைகளைத் தியாகம் செய்யத் தயாராய் இருக்க வேண்டுமெனப் பேரரசர் கூறினார். உண்மையில் எல்லா அதிகாரங்களும் பேரரசரிடமே இருந்தன. வயது வந்த ஆடவர் அனைவராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் ஓராண்டில் மூன்று மாதங்களுக்குக் கூடியது. அதற்குச் சட்டமியற்றும் அதிகாரம் கிடையாது. ஒரு செனட் சபையும் இராஜ்ய சபையும் (Council of States) பெயரளவிற்கு இருந்தன. அமைச்சர்கள் பேரரசரால் நியமிக்கப்பட்டு அவருக்கே பொறுப்புள்ளவர்களாக இருந்தனர். நாட்டில் மக்கள் விருப்பம்போல் பொதுக்கூட்டங்கள் நடத்த முடியாது. பத்திரிகைத் தணிக்கை முறை தீவிரமாக அமல் செய்யப்பட்டது. தங்கள் உரிமைகளை முற்றிலும் இழக்கவில்லை என்ற மனநிலையில் மக்களை வைக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலாம் நெப்போலியனது கான்சுலேட்டுக் காலத்தின் அரசாட்சி முறை பின்பற்றப்பட்டதால், நாட்டின் பொருளாதார

நிலை உயர்ந்தது. வங்கித்தொழில் விரிவடைந்தது; விவசாய, தொழில் அபிவிருத்திக் கடன் வசதிகள் அளிக்கப்பட்டன. தொழில் வளர்ச்சிக்கு உதவத் தகவல் தொடர்பு சாதானங்கள் அதிகரிக்கப்பட்டன. பெருமளவில் இருப்புப் பாதைகளும் கால்வாய்களும் ஏற்பட்டன. வாணிபத்திலும் நாடு உயர்நிலையை அடைந்தது. தடையில்லா வாணிபத்தில் நம்பிக்கைக்கொண்ட பேரரசர் இறக்குமதி வரிகளைக் குறைத்து வெளிநாட்டுப் பொருள்கள் ஃபிரெஞ்சுச் சந்தைகளில் தடையின்றி இடம்பெற வழி செய்தார். பிரிட்டனோடும் வேறு சில நாடுகளோடும் வியாபார ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. பாரிசு நகரம் புதுமைக் கோலம் பெற்று, அழகுடன் மிளிர்ந்தது. ஐரோப்பாவிலேயே அற்புதமான தலைநகர் என்ற புகழையும் அடைந்தது. பாரிசு நகரில் ஓர் அனைத்துலகத் தொழில் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டு அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டவர் பாரிசுக்கு ஈர்க்கப்பட்டனர். ஏழை, எளிய மக்களையும் பேரரசர் மறக்கவில்லை. அவர்களுக்கெனப் பல மருத்துவ மனைகள், புகலிடங்கள், இரவலர் இல்லங்கள் (Alms Houses) ஆகியவை அமைக்கப்பட்டன. தொழிலாளர்களின் ஆதரவைப் பெறத் தொழிற்சங்கம், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை அமைக்கப்பட்டன. வேலை நேரத்தில் நிகழும் விபத்து, மரணம் முதலியவற்றிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்கக் காப்புறுதித் திட்டம் உருவாக்கப்பட்டது.

தன் மக்களின் வாழ்வைப்போல் தன் அக வாழ்வில் ஒளி கூட்டப் பேரழகும், உயர்குடிப் பிறப்பும் வாய்ந்த 'யூஜின் டிமான்டிஜோ' (Eugenie de Montijo) என்ற ஸ்பானிய மங்கையைக் காதல் திருமணம் செய்துகொண்டார் பேரரசர். தியூல்லரி அரண்மனையில் கலகலப்பும் ஆரவாரமும் மிக்க வாழ்க்கை தொடங்கி விட்டது.

வரலாற்றில் முதலாம் நெப்போலியன் அடைந்த இடத்தைத் தானும் அடைய வேண்டுமெனப் பேரரசர் பேராசை கொண்டார். நாட்டின் பொருளாதார வளத்திற்கு உறுதுணையாக விளங்கக் குடியேற்றங்களைத் தேடவும், ஃபிரெஞ்சு மக்களது புகழாசையைத் திருப்திப்படுத்தவும், அரசாங்கத்திற்கெதிராக மக்களின் கவனம் திரும்பாமல் தடுப்பதற்காகவும் போர்கள் தேவைப்பட்டன. உள்ளத்தால் அமைதிப் பிரியராயினும், முதலாம் நெப்போலியனைப்போல் போர் வேட்கை இருந்தும், ஆனால், அதற்கேற்ற திறமை இன்மையால் மூன்றும் நெப்போலியனுக்குத் தேவையற்ற போர்களில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டது. ஓர் அபாய மிக்க வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துக்கொண்டு அதைச்

செயல் படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்தில் சிக்கிக்கொண்ட நெப்போலியன் அதனுல் பல இன்னல்களை அனுபவித்தார்.

முதலில் குடியேற்றங்களைப் பெறுவதில் கவனம் செலுத்திய நெப்போலியன் மேற்கு ஆப்பிரிக்க நாடான அல்ஜீரியாவை முழுமையாகக் கைப்பற்றி ஃபிரான்சோடு இணைத்தார். இங்கிலாந்தோடு சேர்ந்துகொண்டு இராணுவ பலத்தைக் காட்டி, சீனுவை மிரட்டிப் பல வியாபாரச் சலுகைகளைப் ஃபிரான்சு பெற்றது. 1851ஆம் ஆண்டில் இந்தோ-சீனு முதலிய நாடுகளுக்குக் குடியேற்றங்கள் அமைக்கும் நோக்கத்தோடு படைகள் அனுப்பப்பட்டன. 1863ஆம் ஆண்டில் கம்போடியா ஃபிரெஞ்சுக் குடியேற்றம் ஆயிற்று. நெப்போலியன் புரிந்த முக்கியமான முதற்போர், 1854ஆம் ஆண்டு தொடங்கிய கிரீமியப் போராகும் (Crimean War). ஃபிரான்சுக்கும் ரஷ்யாவுக்குமிடையே நெடுநாள்களாகப் பகை முதிர்ந்து வந்தது. அதை மேலும் அதிகப்படுத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பாலஸ்தீனத்திலிருந்த கிறித்தவப் புனிதத் தலங்களை 18ஆம் நூற்றுண்டின் முற்பகுதி வரை கத்தோலிக்கர்கள் நிருவகித்து வந்தனர். அதை அவர்கள் சரிவர நிருவகிக்காததால் துருக்கி சுல்தான் கிரேக்க வைதீகத் திருச்சபையிடம் (Greek Orthodox Church) அப் பொறுப்பினை ஒப்படைத்தார். அப் பொறுப்பு மீண்டும் தங்களிடம் தரப்பட வேண்டுமெனக் கத்தோலிக்கத் துறவிகள் வற்புறுத்தி வந்தனர். நெப்போலியன் அவர்களுக்கு ஆதரவளிப்பதெனத் தீர்மானித்தார். ரஷ்ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் இதனை எதிர்த்து வைதீகத் திருச்சபையின் உரிமைகளைப் பாதுகாக்க உறுதி பூண்டார். நெப்போலியன், துருக்கியிலிருந்த பிரிட்டிஷ் தூதுவர் ரேட்கிளிப் (Radcliff) இவர்களின் தூண்டுதல் காரணமாகத் துருக்கி சுல்தான் ரஷ்யாவை எதிர்க்கத் தயாராஞர். அதே சமயம் சுல்தானின் ஆட்சியிலிருந்த சில பால்கன் நாடுகள் ரஷ்யாவின் உதவியைக் கோரின. குட்சுக்கெய்னுர்ட்ஜி (Kutchuk Kainardji) உடன்படிக்கையின்படி துருக்கியிலிருந்த கிறித்தவ மக்களின் பாதுகாவலனுகும் உரிமையைப் பெற்ற ரஷ்யா, 1853ஆம் ஆண்டில் தன் படைகளை அனுப்பி ருமேனிய மாநிலங்களைக் கைப்பற்றியது. உடனே பிரிட்டன், ஃபிரான்சு, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் வியன்னுவில் கூடிப் பேசி ரஷ்யப் படைகள் ருமேனியாவை விட்டு உடனே அகலவேண்டுமென்றும், அதன் பின்னரே சுல்தான் தன் கிறித்தவ மக்களுக்கு உரிமைகள் அளிப்பது பற்றி முடிவு எடுப்பார் என்றும் ஒரு குறிப்பை அனுப்பின. ரஷ்யா இக் குறிப்பை ஏற்றது. ஆனுல், பிரிட்டிஷ் தூதரின் ரகசிய ஆலோசனையை ஏற்ற துருக்கி இவ்வேற்பாட்டை மறுத்து

1853ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ரஷ்யாமீது போர் தொடுத்தது. துருக்கிக்கு ஆதரவாகப் பிரிட்டிஷ், ஃபிரெஞ்சுப் போர்க் கப்பல்கள் பழைய உடன்படிக்கையொன்றை மீறி டார்டனெல் (Dardanelles) ஜலசந்தியில் புகுந்து போரிடச் சித்தமாயின. போர்ப் பிரகடனம் செய்யப்பட்டும், போரிடத் தகுந்த இடம் கிடைக்காமையால் ஓராண்டுக் காலம் போரின்றியே கழிந்தது. பின்னர் மக்கள் வாழ்வதற்கு அருகதையற்ற, கொசுக் கள் நிறைந்த சதுப்பு நிலமான கிரீமியத் தீபகற்பம் (Crimean Peninsula) தேர்ந்தெடுக்கப்பட்டது. 1854ஆம் ஆண்டு போர் தொடங்கியது. முதலில் ரஷ்யர்கள் துருக்கிக் கப்பற்படையை சைனோப் (Sinope) என்னுமிடத்தில் தோற்கடித்தனர். உடனே ஃபிரெஞ்சு, பிரிட்டிஷ் கப்பல்கள் விரைந்து கருங்கடலில் ரஷ்யக் கப்பற்படையைத் தாக்கின. கிரீமியத் தீபகற்பத்திலிருந்த ரஷ்யக் கப்பல் தளமான ஸெபாஸ்டபோலைக் (Sebastapole) கைப்பற்றப் பிரிட்டிஷ், ஃபிரெஞ்சுக் கப்பற்படை பெரிதும் முயன்று ஆயிரக் கணக்கான வீரர்களைப் பலி கொடுத்தது. 1855ஆம் ஆண்டு செப்டெம்பரில் அதைக் கைப்பற்றியது. இப் போரில் ஒரு முக்கிய தன்மை போரினாலன்றி, மழையாலும், குளிராலும், சகதியில் சிக்கியதாலும் இரு தரப்பிலும் பெருஞ்சேதம் ஏற்பட்டதே யாகும். இப் போரில்தான் 'கைவிளக்கேந்திய மங்கை'யான பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் மருத்துவப் பணி புரிந்து போர் வீரர்கட்கு அமைதியும் ஆதரவும் தந்தார். இவரது பணி யால் தரமிக்க ஒழுங்குமுறைக்குட்பட்ட மருத்துவத் தாதித் தொழில் பிறந்தது. ரஷ்யத் தரைப்படை சில வெற்றிகளை ஈட்டி யும் இரு தரப்பில் ஒருவருக்கும் முழுவெற்றி கிடைக்கவில்லை. களைப்பும் சலிப்பும் மிகுந்ததாலும், முதலாம் நிக்கோலசு இறந்து போனதாலும், பிரிட்டனில் பாமர்ஸ்டன் (Palmerston) முதல மைச்சராகப் பதவியேற்றதாலும் போரை நிறுத்த முடிவு செய்யப் பட்டது. 1856ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றும் நெப்போலி யன் தலைமையில் பாரிசு சமாதான மாநாடு உடன்பாடு உரு வானது. பாரிசு மாநாட்டில் போரில் பங்குகொண்ட நாடு களோடு அமரும் வாய்ப்பினைச் சார்தீனியா பெற்றது. இந் நாடு கிரீமியப் போருக்கான பிரச்சினையில் சுயநல நோக்கத்தோடு 15,000 போர் வீரர்களை அனுப்பிப் போரில் பங்கேற்றுச் சமா தான மாநாட்டிலும் இடம் பெற்றது. ஒற்றுமையும் ஐக்கியமும் இன்றி அந்நிய ஆதிக்கத்தின்கீழ் இத்தாலி அவதியுறும் நிலையை ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துக்கூறும் நிலையை அரிய வாய்ப் பாக இதனைப் பயன்படுத்திக்கொண்டார் சார்தீனிய முதல மைச்சர் கவூர். உடன்பாட்டின் விதிகள் என்று பார்க்கும் போது துருக்கியை அழிவிலிருந்து காப்பது, பால்கனில் ரஷ்யா

வின் முன்னேற்றத்தைத் தடுப்பது என்ற இலட்சியங்களை நேச நாடுகள் நிறைவேற்றிக்கொண்டன என்பது தெளிவாகத் தெரிகிறது. தன் கிறித்தவக் குடிமக்களைத் திருப்திப்படுத்த சில சீர்திருத்தங்களை மேற்கொள்வதாகச் சுல்தான் வாக்களித்தார். ஆனால், அவை வாயளவில் நின்றன. டான்யூப் மாநிலங்களான மால்டேவியா, வாலேச்சியாவிற்கு சுயாட்சி வழங்கப்பட்டது. கருங்கடல் நடுநிலையாக்கப்பட்டு எந்நாட்டுப் போர்க்கப்பலும் அங்கே நுழையக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது. கிரீமியப் போர் எதையும் சாதிக்காமற்போனாலும் ஐரோப்பாவில் ஃபிரான்சின் புகழும் நெப்போலியனின் செல்வாக்கும் உயர வழிசெய்தது. ஐரோப்பாவில் இச் சமயத்தில் தோன்றிய தேசிய இயக்கங்கள் நெப்போலியனைத் தம் ஆதரவாளனாகக்கருதி அவ்வப்போது உதவிக் கோரிக்கைகள் விடுத்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது இத்தாலிய தேசிய இயக்கமாகும். இத்தாலியப் புரட்சிச் சங்கமான கார்போனரியுடன் இளமைதொட்டே தொடர்பு கொண்டிருந்தார் நெப்போலியன். இத்தாலியிலிருந்து ஆஸ்திரியாவை விரட்டி இத்தாலிய ஐக்கியத்திற்கு வழிவகுக்கும் போரில் பங்கு கொண்டால் தன் புகழ் உயருவதுடன் அவ்வுதவிக்கு ஈடாகச் சில நிலப்பகுதிகளும் கிடைக்கும் எனத் தெரிந்தபோது அம் முயற்சியிலுள்ள ஆபத்துகளை அலட்சியம் செய்து இத்தாலிக்கு உதவ எண்ணம் கொண்டார் நெப்போலியன். இதனால் ஃபிரான்சின் எல்லையில் ஒரு வலிமை மிகுந்த இத்தாலி உருவாவதையும் ஃபிரான்சு கத்தோலிக்கர்களது சினத்துக்கு ஆளாவதையும் தவிர்க்கவியலாது போயிற்று. 1858ஆம் ஆண்டில் ஆர்சினி என்ற இத்தாலிய தேசியவாதியின் குண்டுக்கு இரையாகவிருந்து தப்பித்த நிகழ்ச்சி நெப்யோலியனை ஒரு முடிவுக்கு வரச்செய்தது. சார்தீனிய அமைச்சர் கவூரோடு, ஆஸ்திரியப் படைகளுக்கு எதிராகப் ஃபிரெஞ்சுப் படைகளை அனுப்பி வைப்பதுடன் இவ்வுதவிக்கீடாக சாவாய், நீஸ் என்ற பகுதிகளைப் பெறவும் ஒப்பி ஒரு ரகசிய உடன்பாடு செய்துகொண்டார். அதன்படி 1859ஆம் ஆண்டு ஆஸ்திரிய, சார்தீனியப் போர் மூண்டபோது ஃபிரெஞ்சுப் படைகள் சார்தீனியாவின் உதவிக்கு விரைந்தன. ஆனால், முழு வெற்றி அடையுமுன் திடீரெனத் தன் படைகளைப் போரிலிருந்து விலக்கிக்கொண்டார் நெப்போலியன். இப் போரில் ஃபிரஷ்யா தலையிடக்கூடும் என்ற அச்சமும், ஆஸ்திரியாவுடன் பகைமை முற்றிவிடுமோ என்ற ஐயமும், இத்தாலிக்கு உதவியது போதும் என்ற திருப்தியும் நெப்போலியனை ஆஸ்திரிய அரசருடன் வில்லா பிராங்காவில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு தூண்டின. தனித்துப் போராட முடியாத சார்தீனியாவும் போரை நிறுத்தியது. நெப்போலியனது அரைகுறை உதவியால்

தன் இலட்சியத்தை அடையமுடியாத சார்தீனியா வெறுப்பும் சினமும் கொண்டது. கத்தோலிக்கரும் அவருக்கு விரோத மாயினர். வாக்களிக்கப்பட்ட நிலப்பகுதிகளும் அவருக்குக் கிடைக்கவில்லை. விரைவிலேயே நடு இத்தாலிய நாடுகள் புரட்சி மூலம் தத்தம் அரசரை விரட்டி சார்தீனியாவுடன் இணைய விரும்பியபோது ஐரோப்பிய நாடுகளின் அங்கீகாரம் கிடைக்க வில்லை. நெப்போலியனது அங்கீகாரம் கிடைத்தால் பிற நாடுகள் எதிர்க்காது என்ற சூழ்நிலை ஏற்பட்டது. நெப்போலியன் பெருந் தன்மையுடன் இதனை அங்கீகரித்து இத்தாலிய ஐக்கியத்திற்கு ஒரு வழி கோலினார். அதற்கு நன்றி காட்டும் முகத்தான் சாவாய், நீஸ் வழங்கப்பட்டன. இத்தாலிய ஐக்கியத்திற்கு உதவியதாகப் புகழ் பெற்றாலும் சாவாயையும், நீஸையும் ஏற்றுக் கொண்டதால் அவ்வுதவியின் தரம் குறைந்ததோடு நெப்போலி யனின் உண்மை உருவமும் ஐரோப்பியருக்குப் புலப்பட ஆரம் பித்தது.

இத்தாலிய விவகாரத்தில் பெறத் தவறிய புகழை அவர் ருமேனிய விவகாரத்தில் அடைந்தார். 1856ஆம் ஆண்டு துருக்கி சுல்தானுக்கு உட்பட்ட ருமேனிய மாநிலங்கள் சுயாட்சி பெற்றன. நெப்போலியனது தலையீடு காரணமாக இவ்விரு மாநிலங்களுக்கும் தங்களுக்கென அரசர்களையும், நாடாளுமன்றத்தையும் தேர்ந் தெடுத்துக் கொள்ளும் உரிமை கிட்டியது. இணைய விரும்பிய இவ்விரு பகுதிகளும் ஒரே இளவரசைத் தங்கள் அரசனாகத் தேர்ந் தெடுத்தன. இதைத் துருக்கி எதிர்த்தபோது நெப்போலியன் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி இவ் விணைப்பு ஏற்பட வழி செய்தார். இங்ஙனம் ருமேனியா பிறந்தது. ஐரோப்பாவில் இருந்த உரிமைவாதிகள் நெப்போலியனது செயல் கண்டு மனம் மகிழ்ந்தனர்.

ருமேனியா விவகாரத்தில் காட்டிய தீவிரத்தை நெப்போலி யன் போலந்திடம் காட்டவில்லை. ரஷ்யாவின் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள, போலந்து மக்கள் நடத்திய போராட்டத்திற்குப் ஃபிரெஞ்சு மக்கள் ஆதரவளித்தனர். அவர் களுக்கு உதவி செய்யுமாறு நெப்போலியனைத் தூண்டவும் செய் தனர். போலந்து மக்கள் ஃபிரெஞ்சு உதவிகிட்டும் என்ற நம்பிக் கையில் 1863ஆம் ஆண்டு புரட்சி செய்தனர். ஆனால், ஆஸ்திரி யாவும் ஃபிரஷ்யாவும் ரஷ்யாவுக்கு உதவி புரியும் என எதிர் பார்த்த நெப்போலியன் போலந்து மக்களுக்கு உதவத் தயங்கினார். ரஷ்யாவோடு போர்புரிய அவர் தயாராகவுமில்லை. இத் தயக்கத் தின் விளைவால் போலந்து குரூரமாக நசுக்கப்பட்டது. நெப் போலியன் தன்னாட்டு மக்களின் வெறுப்பிற்கு ஆளானார்.

அடுத்து மெக்சிகோ நாட்டில் தலையிட்டதன்மூலமும் தன் புகழுக்கு இழுக்குத் தேடிக்கொண்டார் நெப்போலியன். மெக்சிகோவின் அதிபரான பெனிட்டோ ஜுவாரேஸ் (Benito Juarez) தம் அரசுக்கு எதிரான பணிகளில் ஈடுபட்ட கத்தோலிக்கத் திருச்சபையின் சொத்துகளைப் பறிமுதல் செய்து அதன் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினார். தன்னாட்டுக் கத்தோலிக்கர்களிடம் இழந்த ஆதரவை மீட்டுக் கொள்வதற்காகவும் பனாமாக் கால்வாயை வெட்டும் பணியில் ஈடுபட்ட ஃபிரெஞ்சு நிறுவனத்திற்கு உதவுவதற்காகவும் மெக்சிகோவின் உள்நாட்டு விவகாரங்களில் நெப்போலியன் தலையிட விரும்பினார். ஃபிரான்சோடு இங்கிலாந்தும் ஸ்பெயினும்கூடத் தலையிட விரும்பின. இதை விரும்பாத மெக்சிகோ, இந் நாடுகளுக்குத் தரவேண்டிய கடன்களைத் திருப்பித் தருவதில்லை என முடிவு செய்தது. மெக்சிக்கோவிற்கு புத்திப் புகட்ட இம் மூன்று நாடுகளும் முடிவெடுத்தன. 1862ஆம் ஆண்டு ஃபிரெஞ்சுப் படைகள் மெக்சிகோவைப் பிடித்தன. அதிபர் ஜ்வாரேஸ் நாட்டைவிட்டு ஓடினார். மெக்சிகோவை ஒரு முடியரசு நாடு எனப் பிரகடனப்படுத்திய நெப்போலியன், அந் நாட்டு மணிமுடியை ஆஸ்திரிய அரசரின் தம்பியான மாக்சிமிலியனுக்கு (Maximilian) அளித்தார். இதனால் ஆஸ்திரியாவின் நட்பைப் பெறமுடியும் என அவர் தப்புக்கணக்குப் போட்டார். ஆனால், மெக்சிகோ நாட்டு மக்கள் முடியரசை எதிர்த்துப் போராடினர். இச் சமயத்தில் மன்ரோக் கொள்கையின் அடிப்படையில் அன்னியர்கள் அமெரிக்க மண்ணைவிட்டு வெளியேற வேண்டுமென ஆணையிட்டது ஐக்கிய அமெரிக்க நாடு. அதை ஏற்று 1867ஆம் ஆண்டில் தன் படைகளை நெப்போலியன் மீட்டுக்கொண்டார். ஆதரவற்ற நிலையில் மாக்சிமிலியன் மக்களால் சிறைப் பிடிக்கப் பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டார். மெக்சிகோவில் படையையும் பணத்தையும் விரயமாக்கிய பழி நெப்போலியனை வந்தடைந்தது. மேலும், மெக்சிகோவில் தன் கவனத்தைத் திருப்பியதால் ஐரோப்பாவில் நடந்த இரு முக்கியப் போர்களான டேனியப் போரிலும், ஆஸ்திரிய-ஃபிரஷ்யப் போரிலும் தலையிட்டுத் தன் செல்வாக்கை உயர்த்திக்கொள்ள இயலாமல் போயிற்று. ஆஸ்திரிய, ஃபிரஷ்யப்போர் தொடங்குமுன் நெப்போலியனை நடுநிலை வகிக்கச் செய்வதில் முயன்று வெற்றி பெற்றார் பிஸ்மார்க். ரைன் நதிக் கரையோரப் பகுதிகள் ஃபிரான்சுக்குக் கிடைக்கக் கூடும் என மனக்கோட்டை கட்டிய நெப்போலியன், பிஸ்மார்க் அளித்த தெளிவற்ற வாக்குறுதிகளை நம்பி இப்போரில் நடுநிலை வகிக்க ஒப்புக்கொண்டார். வாக்களிக்கப்பட்ட பகுதிகள் கிடைக்காததுடன் பெருவிளைவுகள் ஏற்படுத்திய, பிரஷ்ய, ஃபிரெஞ்சுப் போரில் ஈடுபட்டுப் பேரழிவை எய்த வேண்டிய நிலை நெப்போலியனுக்கு ஏற்பட்டது.

தன் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு ஏற்பட்ட தோல்விகளின் காரணமாகத் தன் உள்நாட்டுக் கொள்கையைச் சிறிது மாற்றிக் கொண்டார் நெப்போலியன். சர்வாதிகார அரசு மறைந்து உரிமைகள் மலிந்த பேரரசு ஏற்பட்டது. இம் மாற்றம் 1870 வரை நீடித்தது. இக் காலத்தில் சட்ட மன்றத்திற்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டது. பத்திரிகைத் தணிக்கை முறையும் தளர்த்தப்பட்டது. 1863ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் குடியரசுக் கட்சி மீண்டும் முன்னணிக்கு வந்தது. சைமன் (Simon), தையர் (Thiers), பெர்ரி (Berry), காம்பெட்டா (Gambetta) முதலிய தலைவர்கள் அக் கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். சிறிது உரிமைகளைப் பெற்ற மக்கள் மேலும் பல உரிமைகளைக் கோர ஆரம்பித்தனர். 1870ஆம் ஆண்டு ஒரு புதிய அரசியலமைப்பை மக்களுக்கு அளித்த நெப்போலியன் பிரிட்டனைப் போன்ற அமைப்பு ஃபிரான்சிலும் ஏற்படுமாறு செய்தார். உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்திவிட்டோம் என நம்பி மனநிறைவு அடைந்த நெப்போலியன், ஃபிரஷ்யாவின் ஆதிக்கம் ஐரோப்பாவில் வளர்ந்து வருவது கண்டு அதிருப்தி அடைந்தார். போர் என்ற சாதனத்தைப் பயன்படுத்திப் ஃபிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மனியை ஒன்றுபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தார், ஃபிரஷ்ய அமைச்சர் பிஸ்மார்க். இணைப்பில் சேர மறுத்த தெற்கு ஜெர்மன் நாடுகளை வழிக்குக் கொண்டு வர ஒரு பொது விரோதியைப் பற்றிய அச்சத்தை அந் நாடுகளுக்கு ஊட்ட பிஸ்மார்க் திட்டமிட்டார். அந்தப் பொது விரோதியாக ஃபிரான்சை உருவாக்கிக் காட்டினர். ஃபிரஷ்யாவுக்கும் ஃபிரான்சுக்குமிடையே ஸ்பானிய அரசர் பற்றிய பிரச்சினை தோன்றிப் பகைமையைக் கிளறிவிட்டது. உடல்நலமற்றிருந்த நெப்போலியனும் ஃபிரஷ்யமன்னர் வில்லியமும் போரை விரும்பாவிடினும் பிஸ்மார்க் போர் ஒன்றுதான் தன் இலட்சியத்தை நிறைவு செய்யும் என நம்பியதால் போரைத் தவிர்க்க முடியவில்லை. 1870ஆம் ஆண்டு ஃபிரஷ்யா தன்னை அவமானப்படுத்திவிட்டது எனச் சினந்த ஃபிரான்சு ஃபிரஷ்யாமீது போர் தொடுத்தது. மனமும், படைபலமுமின்றிப் போரில் ஈடுபட்ட நெப்போலியன் விரைவிலேயேதோல்வியைத் தழுவினர். செடான் போர்க்களத்தில் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்ட நெப்போலியன் ஓர் இலட்சம் துருப்புகளுடன் சரண் அடைந்தார். ஜெர்மானியர் அவரைக் கைது செய்தனர். செடான் அவலச் செய்தி கிடைத்தவுடன் ஃபிரான்சில் குடியரசுக் கட்சியினர் நெப்போலியனது பேரரசு வீழ்ந்தது என அறிவித்து, காம்பெட்டாவின் தலைமையில் ஒரு குடியரசை நிறுவினர். (ஃபிரெஞ்சு, ஃபிரஷ்யப் போர் பற்றிய விவரங்களுக்கு ஜெர்மனியின் ஐக்கியம் என்ற தலைப்பைக் காண்க).

இவ்விதம் நெப்போலியனது அயல்நாட்டுக் கொள்கை ஆரம் பத்தில் வலிமையுடையதாகத் தோன்றினாலும் முடிவில் முழுத் தோல்வியையே அடைந்தது. நெப்போலியனிடம், ஒரு பேரர சனுக்குத் தேவையான எதிரியைக் கருவறுக்கும் திறனும், நண்பனை இறுகப்பற்றும் பண்பும் இல்லாது போயிற்று. மிகத் தொலைவில் உள்ள மெக்சிகோ விவகாரத்தில் ஈடுபட்டு மிக அருகிலே ஃபிரஷ்ய நாடு பூதாகாரமாக வளர்வதைக் கவனிக்கத் தவறிவிட்டார். பிரிட்டன், ரஷ்ய நாடுகளின் நட்பைக் காப் பாற்றிக் கொள்ளத் தவறினார். இத்தாலிக்கு உதவியும்கூட கையூட்டைப் பெற்றதால் இத்தாலிய மக்களின் மனங்களில் தாழ்ந்த இடம்பெற்றார். உள்ளபடியே அமைதியையும் தேசி யத்தின் வளர்ச்சியையும் விரும்பிய இப் பேரரசர் இவற்றிற்குத் தான் ஆற்றவேண்டிய கடமையை மறந்தார். 'நான் நெடுங் காலத் திட்டங்களைத் தீட்டுவதில்லை. அந்தந்தக் கணத்தின் அவசியத்திற்கேற்பச் செயல்படுகிறேன்' எனக் கூறிய நெப்போலி யனின் கொள்கைகள் நிலையற்றவை, நாணயமற்றவை எனப் பெயர் பெற்றவை. முதலாம் நெப்போலியனைப்போல் சிறப்பும் புகழும் அடையவேண்டும் என்ற ஆர்வம் கொண்ட மூன்றாம் நெப்போலியன் தன் திறமைக் குறைவு காரணமாக இறுதியில் பெருந்தோல்வியை அடைந்தார். இதனால் நெப்போலியன் என்ற மகத்தான பெயரின்மீது கட்டப்பட்ட இரண்டாம் பேரரசு என்ற கோபுரம் 1880-ல் அடித்த ஃபிரஷ்யப் புயலுக்கு ஆற்றாது அழிந்துபோயிற்று.

# 8. இத்தாலிய ஐக்கியம்

ரோமானியப் பேரரசின் தலைமைப்பீடமாக விளங்கி, பண்டைய வரலாற்றுக் கலாசாரச் சிறப்போடு திகழ்ந்து அரசியலில் உன்னத நிலைபெற்று, ஐரோப்பாவின் மணிமகுடமாக ஒளி வீசிய இத்தாலி இடைக்காலத்தில் சிதறுண்டு புகழ் மங்கிக் கிடந்தது. ஆனாலும், வாணிபத்தில் அது பெற்றிருந்த முதன்மையும் அதனால் அதற்குக் கிடைத்த செல்வமும் குறையவில்லை. நவீனகால ஆரம்பத்தில் இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கம் ஐரோப்பா எங்கும் பரவி இத்தாலியின் பண்டைப் பெருமையைக் கொடிகட்டிப் பறக்கச் செய்தது. இருப்பினும், இத்தாலியின் அரசியல் வாழ்வில் ஒருமை உணர்வும், தேசிய உணர்வும் மறுமலர்ச்சி அடையவேயில்லை. பிரிந்துகிடந்த நாடுகளை ஒன்றுபடுத்தித் தேசிய உணர்வு என்ற இரத்த ஓட்டத்தை இத்தாலிக்கு அருளியவன் பிறப்பால் இத்தாலியனான ஃபிரெஞ்சுப் பேரரசர் முதலாம் நெப்போலியனே. ஆனால், இந்த ஒற்றுமை சிறிது காலமே நிலைத்தது. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப்பின் ஐரோப்பாவைச் சரிப்படுத்தும் பணியில் ஈடுபட்ட வியன்னா மாநாடு இத்தாலியை மீண்டும் துண்டு துண்டாக உடைத்து வரலாற்றுக் கடிகார முள்ளைப் பின்னோக்கித் திருப்பி வைத்தது.

1815-லிருந்து 1850 வரை இத்தாலிய வரலாறு ஒற்றுமையின்மை, அந்நிய ஆதிக்கம், தோல்வியில் முடிந்த மக்களின் போராட்டங்கள் இவற்றின் கலவையாகவே இருந்தது. வியன்னா ஏற்பாட்டின்படி இத்தாலியப் பகுதிகளான வெனீஷியாவும், லம்பார்டியும் ஆஸ்திரியாவின் நேரடி ஆட்சியின்கீழ் வந்தன. மையத்தில் இருந்த தஸ்கனி, பார்மா, லூக்கா, மோடனா, போப்பாண்டவரின் நிலப்பகுதிகள் ஆகியவை அவற்றை முன்பு ஆண்ட ஆட்சியாளர் வசமே ஒப்படைக்கப்பட்டன. தென்கோடியில் இருந்த நேப்பிள்சும், சிசிலியுமான இரட்டை சிசிலி அரசு அதனை ஆண்ட போர்பான் வம்சத்

தவரிடமே தரப்பட்டது. பியட்மாண்டும் சார்தீனியாவும் அவற்றிற்குரிய ஒரே இத்தாலிய அரசு வம்சமான சாவாய் வம்சத்தவரிடமே விடப்பட்டது. அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது இத்தாலி என்ற ஒரு நாடே கிடையாது. மேற்குறிப்பிட்ட சிறுசிறு அரசுகள்தாம் இருந்தன.

தேசியம், ஒற்றுமை என்ற ஒளியற்ற இருளில் மூழ்கியிருந்த இத்தாலிக்கு நெப்போலியனின் குறுகிய கால ஆட்சி சிறிதளவு நம்பிக்கையொளியை ஊட்டியது. வியன்னா மாநாட்டின் கடுமையான விதிகள் நாட்டின் தன்மான உணர்வைத் தட்டி யெழுப்பின. இதன் விளைவாக அந்நிய ஆட்சியை விரட்டி நாட்டில் ஒருமைப்பாட்டை உருவாக்கப் பல இயக்கங்கள் மறைவில் இயங்கத் தொடங்கின. அத்தகைய இயக்கங்களுள் குறிப்பிடத் தக்கது கார்பொனரி (Carbonari) இயக்கமாகும். நேப்பிள்சில் மூரட்டின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட இவ்வியக்கம் அந்நிய ஆதிக்கத்தை விரட்டுவது, அரசியல் சுதந்திரம் பெறுவது என்ற கொள்கைகளைத் தன் லட்சியமாகக் கொண்டிருந்தது. இதில் இத்தாலிய மக்கள் பிரபுக்கள், ராணுவ அதிகாரிகள், விவசாயிகள் என்ற வேறுபாடின்றிப் பெருமளவில் பங்குகொண்டு இயக்கத்தின் லட்சியங்கள் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பரவ வழி செய்தனர்.

இந்த இயக்கங்களின் இடைவிடாத பணியால் இத்தாலியில் 1820ஆம் ஆண்டில் புரட்சித் தீ கனன்றெழுந்தது. முப்பதாண்டுக் காலத்திற்கு இத் தீ அணையவே இல்லை. ஸ்பெயினில் புரட்சி எழுந்ததைத் தொடர்ந்து நேப்பிள்சில் முதலில் கிளர்ச்சி தோன்றியது. கிளர்ச்சிக்காரர்கள் தம் மன்னர் பெர்டினண்டிடமிருந்து ஓர் அரசியல் அமைப்பையும் வேறு சில சலுகைகளையும் பெற்றனர். இவ் வெற்றி நிலைக்கவில்லை. மெட்டர்னிக்கின் சுண்டு விரலசைப்பில் ஆஸ்திரியத் துருப்புகள் அலை அலையாய்ப் பொங்கிவந்து நேப்பிள்சின் புரட்சித் தீயை அணைத்தன. அதற்குள் பியட்மாண்டிலும் லம்பார்டியிலும் கிளர்ச்சிகள் மூண்டன. ஆஸ்திரியாவின் இரும்புக்கரம் இங்கும் நீண்டு கிளர்ச்சிகளை நசுக்கியது. பியட்மாண்டிலும் கிளர்ச்சி தன் முத்திரையைப் பதித்துவிட்டுச் சென்றது. மன்னர் விக்டர் இமானுவேல் பதவியிழக்க அவரது தம்பியான சார்லஸ் ஃபெலிக்சு அரசராக அறிவிக்கப்பட்டார். அவ்வமையம் அவர் இத்தாலியில் இல்லாததால் அவரது தம்பியான சார்லசு ஆல்பர்ட் அரசப் பிரதிநிதியாகப் பதவியேற்றார். மக்களுக்கு ஓர் அரசியலமைப்பை உருவாக்கித் தந்ததாலும் ஆஸ்திரிய ஆதிக்கத்தை ஒழித்து நாட்டின் முன்னேற்றத்திற்குச்

சில திட்டங்களை மக்கள் முன் வைத்ததாலும் இவருக்கு மக்களின் ஆதரவு பெருகிற்று. ஆனால், நாடு திரும்பி அரசினை ஏற்ற சார்லசு வேறுவித வார்ப்பானதால் ஆஸ்திரியப் படையின் உதவியோடு தம் மக்களை அடக்கி அமைதியை ஏற்படுத்தினர்.

1830ஆம் ஆண்டில் ஃபிரான்சில் தோன்றிய ஜூலைப் புரட்சி இத்தாலியையும் பற்றியது. போப்பின் நாடுகளான ரொமக்னு விலும், பார்மா, மோடனு பியட்மாண்டிலும் தத்தம் ஆட்சி யாளருக்கு எதிராக மக்கள் புரட்சி செய்தனர். ஆனல், ஆஸ்திரி யப் படையினர் இங்கெல்லாம் புகுந்து புரட்சிகளை அடக்கினர்.

**மாசினி :** இத்தாலியின் தேசிய ஒற்றுமை இயக்கம் தலை தூக்க முடியாமல் போய்விடுமோ என இத்தாலியர் மனமுடைந்த நிலையில் 'ஓராயிரம் ஆண்டு ஓய்ந்துகிடந்த பின்னர் வாராதுபோல வந்த மாமணி'யாக அவர்களிடையே தோன்றினர் மாசினி (mazzini). சிறந்த சிந்தனையாளரும் எழுத்தாளருமான ஜோசப் மாசினி ஜெனுவோ நகரில் 1805ஆம் ஆண்டு ஒரு மருத்துவரின் மகனுகப் பிறந்தார். இளமையில் கார்பொனரி அமைப்பில் உறுப்பினராகப் பணியாற்றினர். தன் நாட்டின் துயரத்தையும் ஒற்றுமையின்மையும் கண்டு மனம் வருந்திப் பிள்ளைப்பிராயத்தி லேயே எப்போதும் கறுப்புடையில் இருக்க விரும்பினர். அவர் மனக்கண்முன் ஆயிரமாயிரம் வரலாற்று நிகழ்ச்சிகளும் வீரம் தோய்ந்த நினைவுகளும் வெள்ளமெனப் பெருக்கெடுத்த நிலையில் சிறப்பான இலக்கிய வாழ்விற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள் ளும் ஆர்வமும் தகுதியும் அவரிடம் நிரம்பி வழிந்தன. ஆனல், இந்த ஆர்வத்தை இவர் அரசியலுக்காகத் தியாகம் செய்தார். கார்பொனரியில் இவர் தீவிர அங்கத்தினராக இருந்ததால் 1830ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். வோனுக் கொட்ட கையில் சிறைவைக்கப்பட்ட அவர் ஆறு மாதம் கழித்து விடுதலை செய்யப்பட்டார். சிறை மீண்ட பின்பே 1831-ல் இளம் இத்தாலி என்ற அமைப்பினை அவர் உருவாக்கினர். இவ்வமைப்பு இரகசிய மாக இயங்கி இத்தாலியரிடையே ஒற்றுமை, தேசியம் என்ற இலட்சியங்களைப் பரப்பி அவர்களிடையே வலிமைமிக்கதோர் சக்தியாக விளங்கவேண்டுமென அவர் திட்டமிட்டார். நாற்பது வயதிற்கு உட்பட்டோர்தாம் அதில் உறுப்பினராக முடியும். 'புரட்சியின் முன்னணியில் இளைஞர்களை நிறுத்துங்கள்; அந்த இளம் நெஞ்சங்களிலே பதுங்கிக் கிடக்கிற சக்தி பற்றிய இரகசி யத்தை அப்போது உணர்ந்து கொள்வீர். பெருந்திரளான மக்களிடையே அந்த இளம் குரல்கள் ஏற்படுத்துகிற மாயவித்தை போன்ற செல்வாக்கை அப்போது உணர்வீர்' என மாசினி ஒரு

முறை கூறினர். மாசினியின் புதிய இயக்கம் இத்தாலிய இளைஞர்களைத் தன் வயப்படுத்தி உயரிய இலட்சியத்திற்காகத் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாத திண்மையை அவர்களுக்கு ஊட்டி, தன்னலமற்ற ஒரு பெரும் இளைஞர் படையை நாட்டில் உருவாக்கி விட்டது. சொல்வன்மையும் இலட்சியக் கனலும் தூய வாழ்வும் கொண்ட தலைவரே இவ்வியக்கத்தின் மாபெரும் வெற்றிக்குக் காரணமாவர். இரண்டாண்டுக் காலத்திலேயே இளம் இத்தாலி அமைப்பின் எண்ணிக்கை அறுபதினாயிரத்தை எட்டியது. 'தியாகிகளின் குருதியைப் பாய்ச்சுவதால் கருத்துகள் விரைந்து பரவுகின்றன' என்றார் மாசினி. தியாகம் செய்வதற்கு ஆயிரக்கணக்கில் இத்தாலிய இளைஞர்கள் தயாராயினர். ஆனால், இந்நிலைக்கு அவர்களைத் தயார்படுத்திய தலைவரோ நாட்டிலிருந்து விரட்டப்பட்டு வெளிநாடுகளிலே தன் வாழ்நாளில் இறுதி 40 ஆண்டுகளைக் கழிக்க நேர்ந்தது.

இத்தாலியத் தேசிய இயக்கத்திற்கு மாசினியைப் போன்றே வேறு சிலரும் ஆரம்பக் காலத்திலிருந்தே பாடுபட்டனர். அவர்களுள் முதன்மையானவர் வின்சென்ட் கியோபர்டி (Vincent Geoberti) என்ற பாதிரியார் ஆவார். போப்பாண்டவரின் தலைமையில் இத்தாலிய நாடுகள் அனைத்தும் ஒரு கூட்டரசாக இணைய வேண்டும் என்பது அவர் கனவு. பால்போ (Balbo) என்பார் எழுதிய 'இத்தாலிய வரலாறு' என்ற நூலில் இத்தாலி எவ்விதம் அடிமைப் பட்டது என்பது விளக்கப் பட்டபின், நிச்சயம் விடுதலை உண்டு என்ற நம்பிக்கையும் வலியுறுத்தப் பட்டிருந்தது. மேலும், டேனியல் மேனின், லாபாரினா போன்றவர்கள் 'இத்தாலிய தேசிய மன்றம்' என்ற ஓர் அமைப்பினை நிறுவி சாவாய் மன்னரின் தலைமையில் இத்தாலி முழுமைக்கும் ஒரு முடியாட்சியை உருவாக்க வேண்டும் என்றனர்.

1848ஆம் ஆண்டுப் புரட்சி இத்தாலியைப் பற்றுமுன் சில முக்கிய நிகழ்ச்சிகள் அங்கு நடந்தேறின. முதலாவதாகச் சார்லசு ஆல்பர்ட், பியட்மாண்ட் அரசரானார். விரைந்து முடிவெடுக்க முடியாமையும் அஞ்சும் இயல்பும் இவரது குறைபாடுகளாக இருந்த போதிலும் இத்தாலிய விடுதலை இயக்கத்தில் உண்மையிலேயே ஆர்வமிக்கவர் இவர் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டனர். இத்தாலியின் மற்ற மன்னர்களின் இயல்பும் இவருக்குச் சாதகமாக இருந்தது. நேபிள்சை ஆண்ட இரண்டாம் பெர்டினாண்டு அலட்சிய மனபோக்கும் கொடுமையும் நிறைந்த ஒரு சர்வாதிகாரி. மோடனாவோ ஒரு தன்னலமிக்க கொடுங் கோலனால் ஆளப்பட்டு வந்தது. லூகாவின் மன்னரோ மனநலமற்றவர். நெப்போலியனுடைய மனைவியான

ஆஸ்திரிய இளவரசி மரியா லூயிசா, 'பார்மா'வை ஆட்சி புரிந்து வந்தாள். இவர்களோடு ஒப்பிடும்போது இத்தாலிய மக்கள் சார்லசு ஆல்பர்டைத் தங்கள் பாதுகாவலனாகக் கருதிய தில் வியப்பு ஒன்றும் இல்லை.

கியோபர்டி போன்றோர் மிதமான சீர்திருத்தங்களே போதும் எனக் கருதியபோது பெரும்பான்மையான இத்தாலியர் புரட்சி வழியே சாலச் சிறந்தது என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். ஆங்கிக் கவிஞரான 'பிரௌனிங்' இத்தாலியரின் உணர்ச்சியைக் கவிதையாக வடிக்கும்போது, 'ஒரு இத்தாலியனுக்கு மூன்று வரங்கள் தரப்பட்டால் இத்தாலியின் அடிமைத் தனத்திற்குக் காரணமான மெட்டர்னிக்கின் குரள்வளையை இருகரங்களும் ரத்தத்தால் ஈரமடையும்வரை நெறிப்பதை ஒரு வரமாக விரும்பிக் கேட்பான்' எனப் பாடினர்.

நற்பேறு காரணமாக இத்தாலிய வரலாற்றில் முதன்முறை யாக உரிமை வேட்கையின் தேசிய உணர்வும் நாட்டுப்பற்றும் மிக்க ஒருவர் போப் ஆண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1846-ல் ஒன்பதாம் பையஸ் என்ற பெயருடன் பதவியில் அமர்ந்த போப் ஆண்டவர் தமது துணிச்சலான கருத்துகளாலும் செயல் களாலும் இத்தாலியர் நெஞ்சங்களில் புது நம்பிக்கையை வளர்த் தார். முதலில் இவர் தம் நாட்டில் இருந்த அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்தார். கார்டினலாக இருந்தபோது ஆஸ்திரிய ஆதிக்கத்திடம் வெறுப்பும் கார்பொனரியின் கொள் கைகளில் ஈடுபாடும் கொண்டிருந்த இவர், போப் ஆண்டவர் ஆன பின்னும் கூட அக் கொள்கைகளில் கொண்டிருந்த பிடிப் பினைக் கண்டு மெட்டர்னிக் முதலானோர் வியப்பும் அச்சமும் அடைந்தனர். இந் நிலையில் சார்லசு ஆல்பர்ட் தம் மக்களுக்கு ஓர் அரசியல் அமைப்பைத் தந்தார். போப் ஆண்டவரும் தம் நாடுகளுக்குச் சில சீர்த்திருத்தங்களை அறிவித்தார். 'கடவுள் இத்தாலிக்கு ஆசி அளிக்கட்டும்' என்ற போப் ஆண்டவரின் ஆசியை இத்தாலியர் ஒரு சுபசூசகமாகக் கருதினர். இத்தகைய சூழ்நிலையில்தான் இத்தாலியர் புரட்சிப் பரவியது.

முதலில் நேப்பிள்சிலும் சிசிலியிலும் மக்கள் சீர்திருத்தங்கள் கோரிக் கிளர்ச்சி செய்தனர். பின்னர் போப் ஆண்டவர் நாடு களிலும், தஸ்கனியிலும் மக்களுக்கு அதிக உரிமைகள் அளிக்கும் அரசியல் அமைப்பைக் கோரி கிளர்ச்சி தோன்றியது. லம்பார்டி யும் வெனிஷியாவும் ஆஸ்திரிய ஆதிக்கத்திலிருந்து விடுபடத் துடித்தன. நேப்பிள்சில் பெர்டினண்டு மக்களின் சக்தியைக் கண்டு அஞ்சி அவர்கள் விரும்பியவண்ணம் ஓர் அரசியலமைப்

பைத் தந்தார். இதைத் தொடர்ந்து தஸ்கனி, பியட்மாண்டு ஆகிய நாடுகளும் மக்கள் விருப்பத்துக்கு ஏற்ப அரசியலமைப்புகளைப் பெற்றன. இவ்விதம் புரட்சி தோன்றிய மூன்று மாதங்களுக்குள் ஆஸ்திரிய ஆதிக்கத்துக்கு உட்பட்ட பகுதிகள் தவிர இத்தாலி முழுமையும் அரசியல் அமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியினைப் பெற்றது; புரட்சியின் அடுத்த கட்டம் தொடங்கியது.

1848ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வியன்னாவில் புரட்சி மூண்டது பற்றியும் மெட்டர்னிக் நாட்டை விட்டு ஓட நேர்ந்ததைப் பற்றியும் இத்தாலிக்குச் செய்திகள் கிடைத்தன. இச் செய்திகள் ஆஸ்திரிய ஆதிக்கத்திலிருந்த லம்பார்டிக்கும் வெனீஷியாவுக்கும் தேனாக இனித்தது. லம்பார்டியிலிருந்த மிலானில் உடனே புரட்சி மூண்டது. ஆஸ்திரியக் கவர்னர் விரப்பட்டார். ஐந்து நாள்கள் போராட்டத்துக்குப்பின் ஆஸ்திரியப் படைகளும் விரட்டியடிக்கப்பட்டன. வெனீசிலும் புரட்சி மூண்டு ஒரு குடியரசு நிறுவப்பட்டது. மோடனாவிலும் பார்மாவிலும் ஆட்சி செலுத்திய அரசர்களும் தத்தம் நாடுகளை விட்டு ஓடினர். இத்தாலியில் ஆஸ்திரிய ஆதிக்கமே செயலற்றுப்போயிற்று. அந்நிய ஆதிக்கத்தைப் பூண்டோடு ஒழித்து நாட்டில் ஒற்றுமையை உண்டாக்க பியட்மாண்டு மன்னரே நடவடிக்கை எடுக்கத் தகுந்தவர் என மக்கள் நம்பி அவரைத் தலைமை ஏற்கும்படி வற்புறுத்தினர். இத்தாலிய மறுமலர்ச்சி இயக்க ஏடொன்றின் பதிப்பாசிரியரான கவூர் என்ற தேசியவாதியும் 'சார்தீனிய அரசரின் மகத்தான நேரம் நெருங்கிவிட்டது. அரசருக்கும் நாட்டுக்கும் ஒரே ஒரு பாதைதான் திறந்துவிடப்பட்டிருக்கிறது. அதுவே உடனடியான போர்' என்ற உணர்ச்சிமயமான வேண்டுகோளைச் சார்லசு ஆல்பர்ட்டுக்கு விடுத்தார். சார்லசு ஆல்பர்ட்டும் நாட்டின் குரலைச் செவி மடுத்தார். தம் குலப்பெருமைக்கு ஏற்றதான முடிவை எடுத்தார்.

1848ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் நாள் ஆஸ்திரியாவுக்கு எதிரான முதல்போர் மூண்டது. தஸ்கனி மன்னர் லியோபால்டு படையணிகளை அனுப்பி உதவினார். நேபிள்சில் பெர்டினண்டும் போப் ஆண்டவரும் தங்கள் மக்களின் வற்புறுத்தல் காரணமாகப் படைகளை அனுப்பினர். இத்தாலிய விடுதலைப் போர் மக்களின் கிளர்ச்சி என்ற கட்டத்தில் இருந்து தேசியப் போர் என்ற உயர் தகுதிபெற்ற நிலையினை எய்திவிட்டது. ஆனால், இத்தாலி போரில் ஒற்றுமைப்பட்டது குறுகிய காலத்திற்கே. ஆஸ்திரியாவின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சிப் போப் ஆண்டவர்


இத்தாலிய ஐக்கியம்
சுவிட்ஸர்லாந்து
ஆஸ்திரியா
டைரோல்
மிலான்
லம்பார்டி
வெனிஷியா
வெனிஸ்
டிரஸ்டி
ஸாவாய்
டூரின்
பியட்மாண்ட்
பிரான்ஸ்
நீஸ்
ஜெனோவா
பிளாரன்ஸ்
டஸ்கனி
போப்பின் நாடுகள்
அட்ரியாடிக் கடல்
கார்சிகா
ரோம்
நேப்பிள்
சார்தினியா
பாலர்மோ
இரட்டைச் சிசிலி
மத்திய தரைக் கடல்
ஆப்பிரிக்கா

பின்னடைந்தார். பெர்டினண்டும் தன் நாட்டுக் கிளர்ச்சியை அடக்கத் தன் படைகளைத் திரும்ப அழைத்துக்கொண்டார். லம்பார்டியிலும், வெனிஷியாவிலும், பார்மாவிலும். மோடனு விலும் இருந்த மக்கள் சார்லசுக்கு ஆதரவாக இருந்தபோதிலும் போர்க்களத்தில் போதிய படைகள் இல்லாததால் தோல்வி யைத் தழுவினர் சார்லசு ஆல்பர்ட். கஸ்டோஸா (Custozza) போர்க்களம் இத்தாலிய ஐக்கிய இயக்கத்திற்குப் பேரிடியாய் வந்தது. லம்பார்டியும் வெனிஷியாவும் ஆஸ்திரிய ஆதிக்கத்தில் திரும்பவும் பிணைக்கப்பட்டன.

பியட்மாண்டின் தோல்வி, முடியாட்சியின் தோல்வியாகக் கருதப்பட்டது. எனவே, ரோமிலும் தஸ்கனியிலும் குடியரசுக் கட்சிகள் உருவாகி, சில தீவிரமான செயல்களை நிறைவேற்றின. மாசினியின் தலைமையில் ரோமில் ஒரு குடியரசு நிறுவப்பட்டது. போப் ஆண்டவர் நாட்டைவிட்டு ஓடி நேப்பிள்சில் தஞ்சமடைந் தார். தஸ்கனி மன்னரும் விரட்டப்பட்டார். அங்கே ஒரு குடி யரசு உதயமாயிற்று. 'மன்னர்களின் போர் முடிந்துவிட்டது; மக்களின் போர் ஆரம்பமாயிற்று' என இதையே வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுன்றனர். ஒரு முறை தோல்வியைத் தழுவிய சார்லசு ஆல்பர்ட் அதனுல் மனமுடைந்து தம் இலட்சியத்தை மறக்கத் துணியவில்லை. ஆஸ்திரிய அரக்கனோடு திரும்பவும் மோதி இரண்டில் ஒன்றைத் தீர்மானிக்க முடிவெடுத்தார். இதன் விளைவாக இரண்டாம் முறையாக நொவாரா என்னு மிடத்தில் போர் மூண்டது. இங்கும் அவர் பெருந்தோல்வி அடைந்தார். போருக்கு அடுத்த நாள் அவமானகரமான உடன் பாட்டில் கையெழுத்திடுவதைக் காட்டிலும் பதவியைத் துறப்பதே மேல் எனத் தீர்மானித்தார் சார்லசு ஆல்பர்ட். அவருக்குப் பின் பதவியேற்ற அவர் மகன் இரண்டாம் விக்டர் இமானு வேல் ஆஸ்திரியாவுடன் சமாதானம் செய்துகொண்டார்.

நொவாரா போர்க்களத்தைத் தொடர்ந்து அடுக்கடுக்கான தோல்விகள் ஏற்பட்டன. பெர்டினண்டு சிசிலியைத் திரும்பப் பிடித்தார். லியோபால்ட் தஸ்கனியில் ஆதிக்கம் பெற்ருர். ரோமாபுரிக் குடியரசைக் காப்பாற்ற அதன் தளபதி கரிபால்டி எவ்வளவோ முயன்றும் ஃபிரெஞ்சுப் படைகளிடம் தோற்ருர். ஃபிரெஞ்சுக் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லூயி நெப்போலியன் ரோமாபுரிக் குடியரசை அழித்து இத்தாலி யில் ஆஸ்திரியாவுக்கு எதிராகத் தம் வலிமையை விளம்பரப் படுத்திக்கொண்டதோடு போப் ஆண்டவரையும் திரும்பப் பதவியில் அமர்த்தினர். விரைவில் வெனிசும் ஆஸ்திரியாவசம்

ஆயிற்று. இவ்விதம் இத்தாலி முழுமையும் திரும்பப் பழைய நிலையை அடைந்தது. பல தேசியவாதிகள் மனமுடைந்து இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் புகலிடம் தேடிச் சென்றனர். வியன்னாவில் புரட்சியின் தோல்வியைக் கொண்டாடும்முகத்தான் இசைவாணர்கள் பல இசைப்பாடல்களை இயற்றி மகிழ்ந்தனர். பொதுவாகப் பார்க்குமிடத்து இத்தாலியில் தேசிய ஜனநாயகப் போராட்டங்கள் முழுத்தோல்வி அடைந்துவிட்டதுபோல் தோன்றினாலும் இத்தாலிய மக்களின் இதயங்களிலே மகத்தான மாறுதலை இப் புரட்சி ஏற்படுத்தியதை மறுக்க முடியாது. முதன் முறையாக இத்தாலிய ஐக்கியத்திற்காகத் தங்கள் பிரதேச மனப் பான்மையினை மறந்து மக்கள் ஒன்றுபட்டுப் போராடினர். இத்தாலி தன்னைத்தானே உணர்ந்து கொண்டது. தலைமையேற்று நடத்த ஓர் அரச வம்சம் உண்டு; தன்னைக்காக்க மக்கள் அணியும் உண்டு என்பதை அது புரிந்துகொண்டது.

தோல்வி தந்த சோகத்தில் இத்தாலி ஆழ்ந்திருந்தபோது விக்டர் இமானுவேல் உறுதியான உள்ளத்தோடு தன் தந்தை மக்களுக்கு அளித்திருந்த உரிமைகளைக் காப்பதாக உறுதி பூண்டார். இந்த உறுதியே பின்னாளில் ஐக்கிய இத்தாலியின் மணிமுடியைச் சூடுவதற்கான தகுதியை அவருக்குப் பெற்றுத் தந்தது.

இத்தாலிய ஐக்கிய வரலாற்றில் விக்டர் இமானுவேலுடன் சேர்த்துப் பேசப்படும் பெருமை கவூர் எனும் உயர்குடிப் பெருமகனுக்கு அளிக்கப்படுகிறது. பியட்மாண்டைச் சேர்ந்த பிரபுக் குடும்பத்தில் உதித்த கவூர், படைத் தளபதியாகும் பயிற்சியினைப் பெற்றார். உரிமைக் கொள்கைகளில் இளமையிலிருந்தே ஈடுபாடு கொண்டிருந்த கவூரால் படைப்பணியைச் செவ்வனே ஆற்ற முடியவில்லை. பணியினை உதறியெறிந்த கவூர் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து அங்குள்ள அரசியல் வாழ்வின் கூறுகளைக் கூர்ந்து கவனித்துத் தம் அரசியலறிவை வளர்த்துக் கொண்டார். அவர் கவனத்தை ஈர்த்த இரு முக்கிய நாடுகள் ஃபிரான்சும் இங்கிலாந்துமாகும். சார்தீனிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த கவூர் அப்போது அரங்கில் ஐரோப்பிய அரசியலைப் பற்றிய தன் அறிவை வியத்தகு முறையில் வெளிப்படுத்தி அனைவரது கவனத்திற்கும் இலக்கானார். இங்கிலாந்து நாட்டைப்போல் மக்களின் நம்பிக்கை என்ற முதலினைவைத்து நாட்டிற்கான திட்டங்களைத் தீட்டினால் அவை நிச்சயம் வெற்றிபெறும் என அவர் நம்பினார். 1852ஆம் ஆண்டு கவூரை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை உருவாகியது. இத்தாலிய ஐக்கிய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது.

விடுதலையும் ஐக்கியமும் இத்தாலி பெறவேண்டுமென்பதே கவூரின் இலட்சியமாகும். தனக்கென ஒரு இலட்சியத்தை வகுத்துக் கொண்ட கவூர் அதை நிறைவேற்றுவதிலுள்ள இடையூறுகளையும் தடைகளையும் பற்றி நன்கு அறிந்திருந்தார். பொங்கிவரும் உற்சாகத்தின் துணைகொண்டு தனித்து நின்று போராடி அந்த இலட்சியத்தை அடையமுடியாது என்பதை அவர் திட்டவட்டமாக உணர்ந்திருந்தார். இராஜதந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்தி ஐரோப்பிய அரசியல் செல்வாக்குப் பெற்றுள்ள நாடுகளின் நட்பை வலிந்து பெற்றுவது இலக்கினை அடைய கவூர் விழைந்தார். இக் கருத்தை மாசினி போன்றோர் ஏற்கவில்லை. இத்தாலிய விடுதலை இயக்கத்தின் எதிரி என்றும் அதன் புனிதத் தன்மையையும் தரத்தையும் குறைக்கத் திட்டமிடுபவர் என்றும் சிலர் இழித்துரைத்தும் அஞ்சாதவராக, கொண்ட கொள்கையைத் தம் வழியில் நிறைவேற்ற முனைந்தார்.

ஃபிரான்சிற்கும் ரஷ்யாவிற்குமிடையே ஏற்பட்ட கிரீமியப் போர், கவூருக்கு ஒரு வாய்ப்பினைத் தந்தது. சார்தீனியா இப் போரில் ஈடுபட நேரடியான காரணம் ஒன்றுகூடக் கிடையாது. ஆனுல், செபாஸ்டபோல் சேற்றுக் களத்திலிருந்து இத்தாலி உருவாக்கப்படும் எனக் கவூர் நம்பினுர். பெரும் பெரும் நாடுகள் பங்குகொள்ளும் போரில் சார்தீனியப் படைகளும் போரிட்டன என்ற பெயரோடு போருக்குப்பின் நடக்கும் சமாதான மாநாட்டில் சார்தீனியாவிற்கும் ஓர் இடம் கிடைக்கும். அப்போது இத்தாலியின் நிலையினை ஐரோப்பா உணரும்படி செய்வது எவ்வளவு எளிது என்று கணக்குப்போட்டார் கவூர். அவர் கணக்குப் பிசகவில்லை. பாரிசு சமாதான மாநாட்டில் இத்தாலியின் பாழ்பட்ட அரசியல் நிலையைப்பற்றிக் கவூர் ஆற்றிய உணர்ச்சிமயமான சொற்பொழிவை மாநாட்டுப் பிரதிநிதிகள் வியப்போடும் வேதனையோடும் கேட்டனர். ஐரோப்பிய நாடுகளின் அனுதாபத்தைப் பெருமளவிற்குப் பெற்ற திருப்தியோடு நாடு திரும்பினுர் கவூர்.

இத்தாலிமீது சுமையாய் அழுத்திய ஆஸ்திரிய ஆதிக்கப் பாறையைப் புரட்டித்தள்ள வெறும் அனுதாபச் சொற்கள் போதாது; இரும்புக் கடப்பாறை போன்ற படைவலிமையும் அதை இயக்க ஒரு வலிய கரமும் படைத்த நாடொன்றின் நட்பே மிகத்தேவை என்ற முடிவிற்கு வந்த கவூர் அத்தகைய வலிமை ஃபிரான்சு நாட்டிற்குத்தான் உண்டு என்பதையும் தெளிவாக உணர்ந்தார். அப்போது ஃபிரான்சின் பேரரசராக விளங்கியவர் லூாயி நெப்போலியன். இளம் பருவத்தில் கார்போனுரி இயக்கத்தில் உறுப்பினராகப் பணியாற்றிய லூாயி நெப்

போலியனுக்கு இத்தாலியப் புரட்சி இயக்கத்தில் இயல்பாகவே அனுதாபமாயிருந்தது. அந்த 'அனுதாபத்தைச் செயலாக மாற்றப் பலவாறு முயன்ருர் கவூர். அவர் முயற்சிகள் வெற்றி அடையச் சில நிகழ்ச்சிகள் உதவின. அவற்றுள் ஒன்று 1858ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நெப்போலியனையும் அவன் மனைவியையும் கொல்வதற்காகத் தீட்டப்பட்ட சதித்திட்டமாகும். ஓர் இசை நாடகக் காட்சிக்குச் சென்று கொண்டிருந்த வேளையில் அரச குடும்பத்தினரை நோக்கி வெடிகுண்டுகள் வீசப்பட்டன. பலர் மாண்டாலும் தெய்வாதீனமாகப் பேரரசரும் பேரரசியும் தப்பிப் பிழைத்தனர். இச் சதிக்கு உடந்தை எனப் பல இத்தாலியர்களும் அவர்களுக்குத் தலைவனுன ஆர்சினி என்பவனும் கைது செய்யப்பட்டனர். தன்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டைத் துணிவோடு ஒப்புக்கொண்ட ஆர்சினி தன் சதித்திட்டம் உருவாகக் காரணம் நெப்போலியன் இத்தாலிய விடுதலைக்கு வழி செய்யாமையே என அஞ்சாது கூறினுன். சிறையிலிருந்தபோது இத்தாலிக்கு உதவ வேண்டுமென இரு உருக்கமான கடிதங்களை அவன் நெப்போலியனுக்கு எழுதினுன். சாவை ஏற்கும்போது இறுதியாக 'இத்தாலி வாழ்க' என முழங்கினுன் அவன். இந் நிகழ்ச்சிகள் நெப்போலியன் நெஞ்சில் நீங்காத நினைவுகளாய்ப் பதிந்தன. இத்தாலிய விவகாரத்தில் ஒரு முடிவுக்கு வருமாறும் அவனைத் தூண்டின.

கோடைக் காலத்தை புளோம்பியர்சு அரண்மனையில் கழிக்கப் போவதாகவும் அங்கு தன்னை வந்து சந்திக்கும்படியும் கவூருக்கு ரகசியச் செய்தி அனுப்பினுர் நெப்போலியன். தன் எண்ணம் ஈடேறப் போகிறது என மகிழ்ந்தார் கவூர். 'நாடகம் அதன் நெருக்கடியான கட்டத்தை நோக்கி விரைந்து செல்கிறது' என அபிப்பிராயப்பட்டார் அவர். ஜூலை 21ஆம் நாள் தொடங்கிய சந்திப்பு அடுத்த நாளும் நீடித்தது. பேச்சு வார்த்தைகளின் முடிவில் சார்தீனியாவிற்கு உதவி செய்ய இணங்கினுர் நெப்போலியன். ஃபிரான்சின் தலையீடு நியாயமானதே என ஐரோப்பாவை நம்பவைக்கும் பணியை நிறைவேற்றுவதாகக் கவூர் ஒப்புக்கொண்டார், வட இத்தாலி சார்தீனியாவின் கீழும், முழு இத்தாலி போப் ஆண்டவரின் கீழும் இறுதியில் இணையுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இத்தாலியில் தலையிடுவதால் நெப்போலியனின் புகழ் ஓங்கி அவன் அரியணையின் அடிப்படைகளும் பலம் பெறுவதோடு இத்தாலிக்கு உதவினேம் என்ற ஆத்ம திருப்தியும் நெப்போலியனுக்குக் கிடைக்கும். இவை மட்டும் போதாது என நெப்யோலியன் கருதினுன். இதனுல் சார்தீனிய அரசவம்சத்தின் பூர்வீகச் சொத்தான சாவாயையும் கரிபால்டி பிறந்த இடமான

நீசையும் நெப்போலியனுக்கு அளிப்பதாகக் கவூர் கூறினார். மேலும், நெப்போலியனது ஒன்றுவிட்ட தம்பியான ஜெரோம் போன பார்ட்டிற்கு விக்டர் இமானுவேலின் மகளைத் திருமணம் செய்து தருவதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

புளோம்பியர்சு உடன்பாட்டின் விதிகளைக் கூர்ந்து கவனிக்கும்போது இத்தாலிய ஐக்கியத்தைவிட இத்தாலிய விடுதலையிலேயே நெப்போலியன் ஈடுபாடு கொண்டிருந்தான் என்பதும், இத்தாலியிலிருந்து ஆஸ்திரியாவை விரட்டுவதே அவன் குறிக்கோளாக இருந்தது என்பதும் தெளிவாகப் புரிகிறது. கவூரின் கருத்து வேறுவிதமாக இருந்தபோதிலும் வேறு வழியின்றி அச்சமயம் நெப்போலியனின் கருத்தை ஏற்றார். விக்டர் இமானுவேலும் நாட்டின் நலன் கருதித் தன் மகளைத் தியாகம் செய்யத் துணிந்தார்.

இதன் பின்னர் நிகழ்ச்சிகள் துரிதமாக நிறைவேறின. பாரிசில் மூன்றாம் நெப்போலியனும் இத்தாலியும் என்ற தலைப்பில் உறவுகளையும் பிரச்சினையையும் விளக்கி ஒரு சிறு நூல் பிரசுரம் ஆயிற்று. சார்தீனிய நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போது விக்டர் இமானுவேல் 'இத்தாலியின் பல பகுதிகளில் இருந்து எழும் அவலக் குரல்களைக் கேட்டுகொண்டு இனி வாளா இருக்க முடியாது' எனக் குறிப்பிட்டார். ஜெரோம் இளவரசன் தன் மணமகளின் கரம் பற்ற டூரினுக்கு விரைந்தான். கவூரும் போர் முன்னேற்பாடுகளில் ஈடுபட்டதோடு, ஆஸ்திரியாவின் சினத்தைக் கிளறும் முயற்சிகளிலும் ஈடுபட்டார். போர் ஏற்பட்டால் ஆஸ்திரியாவின் உதவிக்குப் ஃபிரஷ்யா விரைந்துவரும் என்பது வெளிப்படையாகத் தெரியவே நெப்போலியன் சிறிது அஞ்சினார். இங்கிலாந்து ஒரு மாநாட்டைக் கூட்டி அமைதியைக் காக்கலாம் என ஓர் ஆலோசனை கூறியது. 1859ஆம் ஆண்டு மார்ச் மாதம் சார்தீனியப் படைகளை எல்லையை நோக்கி அணி வகுத்துச் செல்லும்படி கவூர் உத்தரவிட்டார். இதுவரை பொறுமையோடு இருந்த ஆஸ்திரியா திடீரெனச் சார்தீனியப் படைகள் பின்வாங்க வேண்டும் என இறுதி எச்சரிக்கை விடுத்தது. எங்கே போர் மூளாமல் போய்விடுமோ என அஞ்சிக்கொண்டிருந்த கவூர் குதூகலம் அடைந்தார். 'பகடை உருட்டப்பட்டுவிட்டது; நாம் வரலாற்றைப் படைத்துவிட்டோம்' என மகிழ்ச்சிக் குரல் எழுப்பினார் கவூர். ஆஸ்திரியா, சார்தீனியாமீது போர் தொடுத்தவுடன் சார்தீனியாவிற்கு ஆதரவாக ஃபிரான்சும் போரில் குதித்தது. மே 20ஆம் நாள் சார்தீனிய ஃபிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியப் படைகளை மாண்ட் ஸல்லோவில் தோற்கடித்தன. தொடர்ந்து மஜேன்டாவிலும் (ஜூன் 4ஆம் நாள்) சால்பெரி

ணுவிலும் ஆஸ்திரியாவின் தோல்வி தொடர்ந்தது. லம்பார்டியி லிருந்து ஆஸ்திரியா விரட்டப்பட்டது. வெனிஷியாவையும் விட்டு ஓடவேண்டிய தருணம் நெருங்கிவிட்டது. அந் நிலையில் நெப்போலியன் தன் படைகளைத் திரும்பி வருமாறு உத்திரவு இட்டான். ஆஸ்திரியப் பேரரசான ஃபிரான்சிஸ், ஜோசப்பை வில்லாபிராங்கா என்னுமிடத்தில் சந்தித்து ஒரு போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் தன் சொந்தப் பொறுப்பில் செய்து கொண்டார். அவ்வொப்பந்தப்படி பியட்மாண்டுடன் லம்பார்டி இணையும்; வெனிஷியா ஆஸ்திரியாவின்கீழ் தொடர்ந்து இருந்து வரும்; மோடனுவிலும் தஸ்கனியிலும் மக்கள் கிளர்ச்சிகளால் வெளியேற்றப்பட்ட மன்னர்கள், திரும்பவும் பதவியில் அமர்த்தப் படுவர்.

வெற்றியை முழுமையாகத் துய்த்து மகிழவேண்டிய தருணத்தில் திடீரெனப் போரிலிருந்து நெப்போலியன் விலகக் காரணங்கள் என்ன என்று பார்ப்போம். அமைதிப் பிரியரான நெப்போலியன் ஒரு பெரும் போரின் கோரங்களைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும் ஃபிரஷ்யா, ஆஸ்திரியாவின் உதவிக்கு வரத் துடித்துக் கொண்டிருந்தது. இதன்றி நெப்போலியனுக்கே தன் கொள்கை சரியானதா என்று ஐயப்பாடு தோன்றிவிட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட பலம் வாய்ந்த இத்தாலி ஃபிரான்சின் எல்லையில் உருவானால் அதனால் ஃபிரான்சிற்குச் சாதகமா பாதகமா என்ற கேள்விக்கு அவரால் விடைகாண முடியவில்லை. மேலும், கத்தோலிக்கத் திருச்சபையும் நெப்போலியனது கொள்கையை எதிர்த்தது. இக் காரணங்களின் கூட்டு விளைவால்தான் நெப் போலியன் அந்தத் திடீர் முடிவை எடுத்தார்.

இம் முடிவினை அறிந்த இத்தாலியர் ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்தனர். விக்டர் இமானுவேல் செய்வது அறியாது திணறினார். போரைத் தனித்துத் தொடர முடியாத நிலையில் அவர் சமாதானத்திற்குத் தயாரானார். சூரிச் உடன்பாடு, வில்லா பிராங்கா ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தியது. இத்தாலியரின் நம்பிக்கையை மண்ணோடு மண்ணாக்கும் இவ்வுடன்பாட்டை ஏற்க வேண்டாமெனக் கவூர் தம் அரசருக்கு வேண்டுகோள் விடுத்தார்; பலனில்லை. மனமுடைந்த கவூர் தன் பதவியைத் துறந்தார். அவரோடு அன்னிய நாடுகளின் உதவியால் இத்தாலிக்குப் புது வாழ்வு அளிக்கலாம் என்ற கொள்கையும் ஒடுங்கியது. இந்தச் சார்தீனிய, ஆஸ்திரியப் போர் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தாது போயினும், சில குறிப்பிடத்தக்க விளைவுகளை உருவாக்கியது என்பதை மறுக்க முடியாது. இத்தாலிய ஐக்கியத்தின் தலைவன் என்ற புதிய பதவியைச் சார்தீனியா ஏற்றுக்

கொண்டது, ஐரோப்பிய நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றது. மேலும் லம்பார்டி இத்தாலிக்குச் சொந்தம் என ஒப்புக் கொண்டதால் வெனிஷியா மீதும் இத்தாலி சொந்தம் கொண்டாட வழி வகுக்கப்பட்டது. சார்தீனியாவுக்கு வெனிஷியா கிடைக்காததால் அந்த இழப்பினைச் சரிக்கட்ட வேறு சில சலுகைகளை அந் நாடு அடைவதை ஆஸ்திரியாவால் தடுக்க முடியாது போயிற்று.

மத்திய இத்தாலியில் மக்கள் தங்கள் பழைய மன்னர்களை ஏற்க விரும்பாது சார்தீனியாவோடு இணைய விரும்பிப் புரட்சியில் ஈடுபட்டனர். சார்தீனிய உதவியோடு இத்தாலிய தேசிய சங்கத்தினர் ஏற்பாடு செய்து நடத்திய இப் புரட்சிகள் பெரும் வெற்றியைக் கண்டன. தஸ்கனி, மோடனு, பார்மா ஆகிய நாட்டு மன்னர்களும், போலக்னு, ரோமெக்னு பிரதேசங்களிலிருந்து போப் ஆண்டவர் பிரதிநிதிகளும் விரட்டப்பட்டு அங்கே தாற்காலிக அரசுகள் நிறுவப்பட்டன. இப் பகுதிகளில் வாக்கெடுப்பு நடத்தியபோது மக்கள் சார்தீனியாவோடு இணைவதையே விரும்புகின்றனர் என்பது தெளிவாயிற்று. இந் நேரத்தில் அதாவது 1860ஆம் ஆண்டு ஜனவரியில் மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்ற கவூர், மத்திய இத்தாலிய மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவது விக்டர் இமானுவேலின்பொறுப்பு என்று எடுத்துரைத்தார். சூரிச் உடன்பாட்டை மீறினல், ஐரோப்பாவின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டிவருமே என அம் மன்னர் அஞ்சினர். ஐரோப்பிய நாடுகளின் மனநிலை என்ன என்று பார்ப்போம்.

இங்கிலாந்து, இத்தாலியப் பிரச்சினையை அனுதாபத்தோடு அணுகி இவ் விஷயத்தில் பிற நாடுகள் தலையிடாமல் இருப்பது நலம் எனக் கருதியது. சார்தீனிய அரசு விரிவடைவதையோ அல்லது போப் ஆண்டவரின் ஆதிக்கம் குறைவதையோ சிறிதளவும் விரும்பாமல் ஆஸ்திரியா தன் எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படையாகக் காட்டிற்று. சூரிச் உடன்பாடு மீறப்படுவதை விரும்பவில்லை என்பதை ரஷ்யாவும் ஃபிரஷ்யாவும் தெளிவாக உணர்த்தின. இருப்பினும் ஃபிரான்சு எவ் வழியில் செல்லுமென்பதே முக்கியமானதாக இருந்தது. நெப்போலியன் இருதலைக் கொள்ளி எறும்பானுர். சூரிச் உடன்பாடு மீறப்படுவதை அவரும் விரும்பவில்லை. அதே நேரத்தில் மத்திய இத்தாலியில் தோன்றிய தேசிய இயக்கங்களையும் மக்களின் உணர்ச்சிகளையும் அவர் மதித்தார். இறுதியில் அவருக்கு ஒரு நல்ல முடிவு தென்பட்டது. அம் முடிவை கவூரும் ஏற்றதால் விரைவில் அனைவராலும் அது ஏற்கப்பட்டது. மத்திய இத்தாலிய அரசுகள் தம் மக்களின் விருப்பப்படி சார்தீனியாவோடு இணையலாம். அம் முடிவை

நெப்போலியன் ஏற்பார். அந்த ஒப்புதலுக்கு விலையாக முன்பே பேரம் பேசப்பட்ட சாவாயையும் நீசையும் ஃபிரான்சுக்குத் தரச் சார்தீனியா இணங்க வேண்டுமென்பதே அம் முடிவு. மத்திய இத்தாலிய அரசுகளின் முடிவை நெப்போலியனே ஏற்ற பிறகு பிற நாடுகள் அம் முடிவைப் பிரச்சினையாக்க விரும்பவில்லை. இவ்விதம் இத்தாலிய ஐக்கியத்தில் மற்றொரு அத்தியாயம் விரைவில் முழுமை பெற்றது.

இன்னமும் வெனிஷியா, நேபிள்சு, போப்பின் அரசுகள் ஆகிய பிரதேசங்கள் ஐக்கியத்திற்கு அப்பால் இருந்தன. சாவாயையும் நீசையும் இழந்ததை இத்தாலியர்களால் மறக்கவும் மன்னிக்கவும் முடியவில்லை. அதிலும் நீசில் பிறந்த கரிபால்டி மிகுந்த மனவருத்தமுற்று, தான் பிறந்த நாட்டில் தன்னை அன்னியனாக்கிய கவூரைச் சபித்தார். இந்தத் துரோகத்திற்கு ஈடாகத் தனக்கு ஓராயிரம் துப்பாக்கிகளைத் தருமாறும் அவற்றைக்கொண்டு சிசிலியிலே போராட்டம் நடத்தப்போவதாகவும் அவர் கவூருக்குக் கடிதம் எழுதினார். ஆனால், கவூர் தாம் கடைப்பிடித்த கொள்கை சரியானதே என்று நம்பினார். தூற்றுவோர் தூற்றினாலும் தொடர்ந்து தன் கொள்கையைக் கடைப்பிடிப்பதன்மூலம் இத்தாலிய ஐக்கியத்தைச் சாதிக்கமுடியும் என்றும் நம்பினார். அடுத்தாற்போல் அவர் கவனம் சிசிலிமீது திரும்பியது. 'வடக்கில் ராஜதந்திரத்தின்மூலம் இத்தாலி உருவாக்குவதைத் தடுத்தனர். தெற்கில் புரட்சியின்மூலம் அதைச் சாதித்துக் காட்டுகிறேன்' என்று சவால் விடுத்தார் கவூர். அரசர்களையும் அன்னிய உதவிகளையும் பெறுவதற்கு மாறாக இம் முறை மாசினியையும் கரிபால்டியையும் மக்களது புரட்சி உணர்வையும் அவர் நம்பினார்.

இரட்டைச் சிசிலி என வழங்கப்பட்ட அரசு சிசிலித்தீவிலும் நேப்பிள்சிலும் நடைபெற்று வந்தது. இரண்டாம் ஃபிரான்சிசு என்ற மதியற்ற மன்னரின் காலத்தில் நிலைமை சீர்கேடுற்றது. மத்திய இத்தாலிய அரசுகளில் ஏற்பட்ட புரட்சி இங்கும் புரட்சிக் கொள்கைகளைத் தூவியது. சார்தீனியா பியட்மாண்டோடு இணைவதையே இம் மக்களும் விரும்பினர். அதிலும் குறிப்பாகச் சிசிலியில் லா-பாரினா என்ற புரட்சித் தலைவனின் கீழ்த் தேசிய சங்கம் திறமையாகச் செயல்பட்டு மக்களைப் புரட்சிக்குத் தயார்ப் படுத்தி இருந்தது. மாசினியும் இப் புரட்சிக்கு ஊக்கம் அளித்தார். ஆயினும், கரிபால்டி, கவூர் என்ற இரு பெரும் சக்திகளின் உதவியால்தான் சிசிலிக்கு விடுதலை என்பது விதிக்கப் பட்டிருந்தது.

**கரிபால்டி :** 1807ஆம் ஆண்டு நீஸ் நகரில் பிறந்தவர் ஜோசப் கரிபால்டி. தம் மகன் ஒரு பாதிரியாக வேண்டும் எனப் பெற்றேர் விரும்பியபோது கரிபால்டியின் மனம் திரை கடல் ஓடும் வாழ்வைத் தேர்ந்தெடுத்தது. இளம் இத்தாலிய இயக்கத்தில் சேர்ந்து இறுதிவரை ஓர் ஊக்கம்மிகுந்த தொண்டராகப் பணியாற்றிய கரிபால்டி, மாசினியால் திட்டமிடப்பட்ட புரட்சியில் பெரும் பங்கு ஏற்ருர். புரட்சி தோற்று கரிபால்டியின் தலைக்கு விலை பேசப்பட்ட நேரத்தில் அவர் தென்அமெரிக்காவுக்குத் தப்பித்துச் சென்ருர். அங்கு பதினுன்கு ஆண்டுகள் தங்கியிருந்த கரிபால்டி, இத்தாலியப் படை அணி ஒன்றை நிறுவி அர்ஜென்டைனுவுக்கு எதிராக மாண்டிவிடியோவைக் காத்துப் பெரும் புகழும் அனுபவமும் பெற்ருர். 1848ஆம் ஆண்டு இத்தாலியில் புரட்சி என்ற செய்தி அறிந்து தன் நாடு திரும்பிய கரிபால்டியின் தலைமையின்கீழ் எண்ணற்ற இத்தாலியர் திரண்டனர். கரிபால்டியின் படை சார்லசு ஆல்பர்ட்டுக்கு உதவியாக ஆஸ்திரியப் போரில் ஈடுபட்டது. அப் போரில் தோல்வி ஏற்பட்டது. பின் ரோமாபுரியில் நிறுவப்பட்ட குடியரசுக்கு உதவியாகக் கரிபால்டி சென்ருர். ஃபிரெஞ்சுப் படைகளுக்கு எதிரே அக் குடியரசு நொறுங்கி வீழ்ந்தபோது, 4000 படை வீரர்களோடு பின் வாங்கிச் சென்ருர் கரிபால்டி. ஆஸ்திரியப் படைகளும் ஃபிரெஞ்சுப் படைகளும் இத்தாலியக் காடுகளிலும் மலைகளிலும் கரிபால்டியை வேட்டையாடச் சென்றன. அவர்களிடம் சிக்காமல் அலைந்து திரியும்போது கரிபால்டியின் வாழ்வில் மகத்தானதோர் இழப்பு ஏற்பட்டது. அவரது வாழ்விலும் தாழ்விலும் அவருக்கு உறுதுணையாய் விளங்கி, வீரத்திற்கும் துணிச்சலுக்கும் இருப்பிடமாய் விளங்கி, அவருக்கு ஏற்ற மனையாளாகத் திகழ்ந்த அனிதாவை அவர் இழந்தார். இவ்விழப்பினுல் மன அதிர்ச்சி அடைந்த கரிபால்டி திரும்பவும் அமெரிக்காவிற்குச் சென்ருர். தாய்நாட்டினிடம் தளராத பற்றும், வீரமும், சாகசமும் நிரம்பிய கரிபால்டியால் அந்நிய நாட்டில் நெடுங்காலம் தங்கி இருக்கமுடியவில்லை. 1854ஆம் ஆண்டு இத்தாலிக்குத் திரும்பிய அவர் காப்ரேரா என்னும் தீவில் விவசாயத்தில் ஈடுபட்டார். 1859ஆம் ஆண்டுப் போர் அவரைத் திரும்பவும் போர் வாழ்வில் ஈடுபடுத்தியது. இத்தாலிய இளைஞர்கள் அவரது விரலசைப்பிற்காகக் காற்றினிலேறி விண்ணையும் சாடத் தயாராக நின்றனர். 1860ஆம் ஆண்டு சிசிலியில் புரட்சி வெடித்தபோது சிசிலி மக்களுக்கு உதவ அவர் முடிவெடுத்தார். அவ்வாண்டு மே மாதம் கரிபால்டியின் தலைமையில் 1000 செஞ்சட்டை வீரர்கள் ஜெனேவாவிலிருந்து இரு கப்பல்களில் புறப்பட்டனர். மேற்போக்காகப் பார்க்கும்போது இப் படையெடுப்பு ஒரு கேலிக்

கூத்தாக முடியும்போல் தோன்றியது. ஏனெனில், நேப்பிள்சு மன்னருக்குச் சிசிலியில் 24 ஆயிரம் படை வீரர்களும், நேப்பிள்சில் ஒரு லட்சம் படை வீரரும் இருந்தனர். இப் பெரும் படைக்குமுன் கரிபால்டியின் ஆயிரவர் யானைகள் முன் பூனைகள் போல் இருந்தனர். ஆனால், வெற்றி, வீரத்தின் பக்கமே என்பது உண்மையாயிற்று. சில வாரங்களிலே கரிபால்டி வெற்றி அடைந்தார். சிசிலி மக்களும் படையினரும்கூட அவர் பக்கம் சேர்ந்தனர். ஆகஸ்டு 5ஆம் நாள் விக்டர் இமானுவேலின் சார்பில் சிசிலியின் சர்வாதிகாரியாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார் கரிபால்டி. பின்னர், கடலைக்கடந்து நேப்பிள்சில் தன் படைகளுடன் வந்து இறங்கி அப் பகுதியையும் விடுவிக்க எண்ணினார். பெரும்படை இருந்தபோதிலும் மக்களின் ஆதரவு சிறிதேனும் இல்லாததால் முடியரசு கவிழ்ந்தது. மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே நேப்பிள்சின் வீதிகளில் கரிபால்டி வலம் வந்தார். ஐந்து மாதக் காலத்திலேயே பதினொரு மில்லியன் மக்கள்தொகைகொண்ட ஒரு நாட்டை ஆயிரம் பேர்கொண்ட படையின் உதவியோடு கைப்பற்றிய கரிபால்டியின் சாதனை தற்கால உலக வரலாற்றிலே தன்னிகரில்லாச் சிறப்புக் கொண்டதாக விளங்கும்.

கரிபால்டி தன் பணி அத்துடன் முடிந்துவிட்டதாகக் கருதவில்லை. தன் படையின் வெற்றி அணிவகுப்பு ரோமாபுரியிலும் தொடரவேண்டும் என அவர் விரும்பினார். கரிபால்டியின் இந்த எண்ணம் கவூரின் நெஞ்சில் அச்சத்தைத் தோற்றுவித்தது. ஏனெனில், ரோமாபுரியை ஒரு ஃபிரெஞ்சுப்படை காத்து நின்றது. அப் படையோடு மோதுவதை ஃபிரான்சுடன் மோதல் என நெப்போலியன் கருதுவார். விளைவுகள் விபரீதம் ஆகும். எனவே, அந்தக் கட்டத்தில் தலையிட்டு கரிபால்டியின் திட்டத்தைத் தடுப்பது என கவூர் முடிவு செய்தார். கவூரின் ஆலோசனையை ஏற்ற விக்டர் இமானுவேல் தன் படையோடு கரிபால்டியை எதிர்கொள்ள ரோமாபுரி நோக்கி விரைந்தார். செப்டெம்பர் 18ஆம் நாள் கேஸ்டல் பிடாரோ என்னுமிடத்தில் போப் ஆண்டவர் படைகள் முறியடிக்கப்பட்டன. ரோமாபுரியையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் தவிர்த்துப் போப் ஆண்டவருக்குச் சொந்தமான உம்பிரியா, மார்ச்செஸ் ஆகிய பகுதிகள் சார்தீனியப் படைகள் வசம் வந்தன. கரிபால்டியை முந்திக்கொள்ளாவிட்டால் முடியரசு தொலைந்தது. புரட்சியின் சிறையிலே கிடந்து இத்தாலி வாட நேரிடும் என கவூர் கூறினார். அவர் விருப்பப்படியே பியட்மாண்ட் படைகள் முந்திச் சென்றன. அக்டோபர் 18ஆம் நாள் விக்டர் இமானுவேல்

நேப்பிள்சை வந்து அடைந்தார். மன்னரைப் பற்றி உயர்ந்த மதிப்புக்கொண்டிருந்த கரிபால்டி அவரிடம் தன் படைகளையும் தன் அதிகாரத்தையும் அளித்தார். சிசிலியையும் நேப்பிள்சையும் விக்டர் இமானுவேலின் காலடியில் வைத்த கரிபால்டியின் தியாகம் மகத்தானது. விக்டர் இமானுவேல் சிசிலி நேப்பிள்சின் மன்னர் பதவியை ஏற்றூர். அவர் மனமுவந்து அளித்த பட்டங்களையும், பதவிகளையும் வேண்டாமென மரியாதையோடு நிராகரித்த கரிபால்டி தன் வாழ்நாளின் எஞ்சிய பகுதியை விவசாயத்தில் செலவிட முடிவெடுத்தார். காப்ரேரா தீவில் 20 ஆண்டுக் காலத்தைக் கழித்த கரிபால்டி நடுநடுவே தன் தாய் நாடு குரல் கொடுத்தபோதெல்லாம் அதன் உதவிக்கு விரைந்தோடி வந்தார். 1861ஆம் ஆண்டு பிப்ரவரி 18ஆம் நாள் ஐக்கியமுற்ற இத்தாலியின் முதல் நாடாளுமன்றம் டூரினில் கூடியது. அடுத்த மாதமே இத்தாலிய அரசராக முடிசூட்டிக் கொண்டார் விக்டர் இமானுவேல். இத்தாலிய மக்கள் மனம் குளிர்ந்தாலும் மனதில் குறை இல்லாமல் இல்லை. வெனீசும் ரோமாபுரியும் அற்ற இத்தாலி அவர்களுக்கு நிறைவைத் தரவில்லை. ஆயினும் இத்தாலிய ஐக்கியத்தின் சிற்பியான கவூர் அவ்விரு பகுதிகளும் இத்தாலியோடு விரைவில் இணையும் என நம்பினுர். அவர் உயிரோடு இருந்து, இத்தாலிய ஐக்கியத்தைப் பார்க்காமல் போயினும் அவர் கனவு விரைவிலேயே நனவாயிற்று.

ஆஸ்திரியாவைத் தோற்கடிப்பதன் மூலம் வெனிஷியாவும், ஃபிரெஞ்சுப் படைகள் ரோமை விட்டு விலகுவதன் மூலம் ரோமாபுரியும் இத்தாலிக்குக் கிடைக்கும். ஆனுல், இவ்விரு செயல்களையும் இந்த மக்களால் தனித்துச் சாதிக்க இயலாது. ஐரோப்பிய அரசியல் சூழ்நிலையில் பெரும்மாற்றங்கள் விளைந்தால் தான் இத்தாலியரின் கனவு நனவாகும். அத்தகைய மாற்றங்கள் விரைவிலேயே வந்தன. 1866ஆம் ஆண்டு ஃபிரஷ்ய அமைச்சரான பிஸ்மார்க்கின் தூண்டுதலால் ஃபிரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையே ஒரு போர் மூண்டது. இத்தாலி ஃபிரஷ்யாவோடு செய்துகொண்ட உடன்படிக்கை காரணமாக இப் போரில் தலையிட்டது. இத்தாலியப் படைகள் நிலத்திலும் நீரிலும் தோல்வியே கண்டன. ஆயினும் சடோவாவில் ஃபிரஷ்யர்கள் பெற்ற பெரு வெற்றியின் பயனுக இத்தாலிக்கு வெனிஷியா தரப்பட்டது. பிஸ்மார்க் தன் லட்சியத்தை நோக்கி வெற்றி நடைபோடும்போது அப் பயணத்தில் பங்குகொண்ட இத்தாலிக்கும் அந் நாடு விரும்பிய பரிசினை அளித்தார். இத்தாலியின் மையத்தில் அமைந்திருந்த ஏழு குன்ற நகரான ரோமா

புரி மட்டும் ஐக்கியமுற்ற இத்தாலியிலிருந்து தனித்து நின்றது. இத்தாலிக்கு அந் நகரம் கிடைப்பதற்கும் பிஸ்மார்க்கே காரண மானுர். அந்த இரும்பு மனிதரின் திட்டப்படி 1870ஆம் ஆண்டு ஃபிரான்சுக்கும் ஃபிரஷ்யாவுக்கும் இடையே பகைமை முற்றிப் பெரும்போர் ஒன்று தொடங்கியது. ஃபிரான்சின் இரண்டாம் பேரரசினது தலைவிதியை நிர்ணயிக்கும் போரில் தன் முழு வலிமை யையும் ஈடுபடுத்திப் போரிட வேண்டியநிலையில் நெப்போலியன் இருந்தார். ரோமாபுரியைக் காத்து நின்ற ஃபிரெஞ்சுப்படை ஃபிரான்சிற்குத் திருப்பி அழைக்கப்பட்டது. ஃபிரெஞ்சுப் படை கள் விலகிய அடுத்த கணமே விக்டர் இமானுவேல் தன் படை களுடன் சென்று ரோமாபுரியைக் கைப்பற்றினுர். ரோமா புரியை இழந்த ஒன்பதாம் பயஸ் வருத்தமும் சினமும் மிகக் கொண்டு வாட்டிகன் நகரில் தன்னைத்தானே அடைத்துக் கொண்டார். அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத இத்தாலியர் ரோமாபுரி கிடைத்த மகிழ்ச்சியைக் கோலாகலமாகக் கொண்டா டினர். ரோமாபுரி மீண்டும் இத்தாலியின் தலைநகர் ஆயிற்று. இவ்விதம் இத்தாலி மாசினியின் இலட்சியக் கோட்பாடுகளாலும், கவூரின் ஒப்பரிய இராஜதந்திர அறிவாலும், கரிபால்டியின் மனத் திண்மையாலும் வாள் வலிமையாலும், விக்டர் இமானுவேலின் ஒத்துழைப்பாலும், ஐரோப்பிய அரசியலரங்கில் ஏற்பட்ட மாற் றங்களாலும், பதினெட்டு மாதகாலத் தீவிரப்போராட்டத் திற்குப்பின் ஐக்கியமடைந்து, ஐரோப்பிய நாடுகளின் வரிசையில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டு வரலாற்றுப் பாதையில் தன் பயணத்தைத் தொடங்கியது.

# 9. ஜெர்மனி ஐக்கியமுறல்

இடைக்காலத்தில் வலிமை பெற்றிருந்த புனித ரோமானியப் பேரரசின் மையமாக விளங்கிய ஜெர்மனி 18ஆம் நூற்ருண்டில் சிறிதும் பெரிதுமான 350 சிற்றரசர்களைக் கொண்ட ஜெர்மனியாகச் சிதறுண்டு கிடந்தது. சிற்றரசர்களின் தன்னலம், ஆதிக்க வேட்கை இவற்றின் காரணமாகத் தேசிய உணர்வோ, ஐக்கியத்தின் அவசியமோ ஜெர்மானிய மக்களின் உள்ளங்களில் அரும்பவில்லை. அந் நிலையில் முதலாம் நெப்போலியன் தன் வாள் வலிமைகொண்டு ஜெர்மனியின் 350 சிற்றரசுகளை 38 அரசுகளாகக் குறுக்கி ரைன் இணைப்பரசை ஏற்படுத்தி அதற்குத் தானே தலைவஞனுர். இவ்விதம் மக்களின் முயற்சியின்றி வெளிநாட்டு மன்னர் ஒருவரால் ஐக்கிய உணர்ச்சி ஜெர்மனியில் தோற்றுவிக்கப்பட்டது. ஆனல், ஐக்கியத்தை வரவேற்ற ஜெர்மானியர்கள் அதனுடன் வந்த அந்நிய ஆதிக்கத்தைக் கண்டு மனம் புழுங்கினர். ஐரோப்பாவில் நெப்போலியனது யுகம் முடிந்து ஒரு புதிய யுகத்தை வியன்ஞ மாநாடு உருவாக்கியது. ஐரோப்பா எங்கும் மாற்றங்கள் ஏற்பட்டபோது நெப்போலியன் உருவாக்கிய ஜெர்மானிய இணைப்பரசு மட்டும் மாற்றங்கள் ஏதுமின்றி அப்படியே விடப்பட்டது. தலைமை மட்டும் ஃபிரான்சிடமிருந்து ஆஸ்திரியாவுக்கு மாற்றப்பட்டது. ஜெர்மனியில் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் முயற்சியில் ஆஸ்திரியா ஈடுபட்டபோது ஜெர்மனியில் வலிமைமிக்க நாடாக விளங்கிய ஃபிரஷ்யாவோடு அடிக்கடி மோத நேர்ந்தது. இம் மோதல்களின் விளைவே ஐக்கிய ஜெர்மனியின் உதயம் எனலாம்.

இத்தாலிய ஐக்கியத்திற்கு எதிரியாக விளங்கியதைப் போன்றே ஜெர்மானிய ஐக்கியத்திற்கும் ஆஸ்திரியா தடைச் சுவராக நின்றது. ஆஸ்திரியாவின் வலிமையைக் கண்டு அஞ்சிய

ஜெர்மன் நாடுகள் ஐக்கியம், தேசியம் என்ற இலட்சியங்களைப் பற்றி நினைக்காமலேயே காலத்தைத் தள்ளின.

ஆயினும் இவ்வுயரிய இலட்சியங்கள் ஜெர்மானியப் பல்கலைக் கழகங்கள் வாயிலாகக் கல்வி பயின்ற ஆயிரமாயிரம் இளைஞர் களின் உள்ளங்களிலே மெல்ல இடம் பெறத் தொடங்கின. வரும் தலைமுறையினருக்கு ஒற்றுமை, நீதி, விடுதலை நிறைந்த சமுதாயத்தை விட்டுச் செல்வது தங்கள் கடமை என்ற நினைப்பை மாணவர்களிடையே பல சங்கங்கள் தோற்றுவித்தன. முதலில் ஜேனுப் பல்கலைக்கழகத்தில் தோற்றுவிக்கப்பட்ட மாணவர் சங்கம் விரைவில் 16 பல்கலைக்கழகங்களுக்குப் பரவியது. குறைவற்ற ஆர்வமும் வீரமும் இருந்தபோதிலும் குறிப்பான எதிர்காலத் திட்டங்களைப் பெற்றிராததால் இச் சங்கங்கள் நற் பலன்களை விளைவிக்கவில்லை. ஆயினும் மாணவர்களின் சக்தியை உணர்ந்த மெட்டர்னிக் இச் சங்கங்களைச் செயலற்றதாக்க விரும்பி னார். 1819ஆம் ஆண்டு கார்ல்ஸ்பார்க் நகரில் ஜெர்மானியச் சிற்றரசுகளின் கூட்டம் ஒன்றை மெட்டர்னிக் கூட்டினார். இவ் வவையில் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டு அவை பின்னர் இணைப்பரசின் உதவியால் சட்டங்களாக்கப்பட்டன. அவற்றின்படி பல்கலைக்கழகங்கள் புரட்சிகளில் ஈடுபடாதவாறு சில தற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாண வர் சங்கங்களுக்கும் தடை விதிக்கப்பட்டது. இவ்விதம் கார்ல்ஸ் பார்க் சட்டங்கள் மூலம் உறுதிமிக்க இரும்பு வலை ஒன்று ஆஸ்திரி யாவால் ஜெர்மானியப் பல்கலைக்கழகங்கள் மீது விரிக்கப்பட்டது. மெட்டர்னிக்கும் மன அமைதி பெற்றார்.

இந் நிலையில் ஜெர்மானிய ஐக்கியம் என்ற மாபெரும் இலட்சி யத்தை நோக்கி ஓர் அடி எடுத்துவைப்பதைப் போன்ற பணி ஒன்றினைச் சில ஜெர்மானிய நாடுகள் தம்மை அறியாமேயே செய்து முடித்தன. பொதுவாக 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஜெர்மானியத் தொழில்வளம் பெருகியது. இரயில் பாதைகளும் கால்வாய்களும், சாலைகளும் நாடுகளை இணைத்து வியாபாரமும் போக்குவரத்தும் எளிதாக நடைபெறும்படிச் செய்தன. தொழில் துறையில் ஜெர்மனியில் முதலிடத்தைப் பெற்றிருந்தது ஃபிரஷ்யா. ஆயினும் ஜெர்மனியில் நாடுகளுக்கிடையே கடுமையான போட்டி யும், தனித்தனியான சுங்கத் தீர்வை முறைகளும், வணிகக் கட்டுப்பாடுகளும் மிகுந்திருந்ததால் பொருளாதார வளர்ச்சி குன்றியே இருந்தது. கள்ளக்கடத்தலும் பெருமளவில் இயங் கியது. இந் நிலையில் 1818ஆம் ஆண்டில் சுங்கச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றை இயற்றி நிலைமையைச் சீர்திருத்த ஃபிரஷ்யா

முயன்றது. உள்நாட்டு வணிக அதிகரிப்பிற்கும் நாட்டு வருவாய் உயர்விற்கும் வழிசெய்த இச் சட்டத்தின் பயனைப் பிற ஜெர்மன் நாடுகளும் அடையவேண்டுமெனப் ஃபிரஷ்யா விரும்பியது. இவ் விருப்பமே சோல்வரீன் (Zollverein) சுங்க ஐக்கியம் என்ற அமைப் பாக உருவெடுத்தது. ஃபிரஷ்யாவின் தலைமையில் பல ஜெர்மன் நாடுகள் இவ்வமைப்பில் இணைந்து தங்களுக்கு இடையே இருந்த தடைச் சுவர்களை விலக்கிப் பொருள்கள் எளிதாக ஓரிடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல வழிவகுக்கும் தடை யில்லா வாணிப முறையை ஏற்றுப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்துக்கொண்டன. பவேரியா, சாக்சனி போன்ற நாடுகள் ஆரம்பத்தில் அவ்வமைப்பை ஐயக் கண்ணோடு பார்த்தாலும் பின்னர் அதன் சீரிய தன்மைகளை உணர்ந்து தாமும் அதில் இணைந்தன (1842). முதலில் ஆஸ்திரியா இவ்வமைப்பில் அதிக அக்கறை காட்டவில்லை. 1848-ல் மெட்டர்னிக்கின் வீழ்ச்சிக்குப் பின் ஆஸ்திரியா இவ்வமைப்பில் கலந்துகொள்ள முன் வந்தது. ஆனால், ஃபிரஷ்யா ஆஸ்திரியாவைச் சேர்த்துக்கொள்ள மறுத் தது. இவ்விதம் முதன்முறையாக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஜெர்மன் அமைப்பில் பங்கு கொள்வதிலிருந்து ஆஸ்திரியாவை விலக்கிவைப்பதில் ஃபிரஷ்யா வெற்றிபெற்றது.

'சோல்வரீனின் முக்கியத்துவத்தை அளவிடுகையில் முதன் முறையாக நிதி வாணிபத்துறையில் ஜெர்மனி ஒருமையுற்றது. பொருளாதார முன்னேற்றத்திற்காக ஜெர்மன் நாடுகள் ஒன்றாக இணைந்தன. அதிலும் ஃபிரஷ்யாவின் தலைமையின்கீழ் ஒருங்கு இணைந்தன. மேலும், இந்த ஜெர்மானிய அமைப்பிலிருந்து ஆஸ்திரியாவை ஒதுக்கிவிட்டு வாழும் வாழ்விலும் பழகிக் கொண்டன' என்று மாரியட்டும் ராபர்ட்சனும் கூறுகின்றனர். இது அரசியல் ஐக்கியம் அல்லவாயினும் பொருளாதார நோக்கத் திற்காக உருவான இக் கூட்டுக்கு அரசியல் முக்கியத்துவமும் இருந்ததென்பதை மறுக்கமுடியாது. இதுவரை ஆஸ்திரியாவால் தான் தலைமை தாங்கமுடியும் என்ற ஜெர்மானிய நாடுகளின் எண்ணத்தை மாற்றித் தனது பொறுமையும் திறமையும் மிக்க தாராளத்தன்மை வாய்ந்த கொள்கைகள்மூலம் வலிமையற்ற சிறு ஜெர்மன் நாடுகளில் உள்ளங்களைக் கவர்ந்து, தன்னாலும் ஜெர்மானியத் தலைமையை ஏற்க முடியும் என்பதை நிரூபித்தது ஃபிரஷ்யா. பின்னால் உருவாகப் போகும் ஐக்கிய ஜெர்மனிக்கு சோவல்வரீன் கட்டியங் கூறியது என்பது மிகையல்ல.

1830ஆம் ஆண்டில் ஃபிரான்சில் ஜூலைப் புரட்சித்தீ பரவிய போது அதன் பொறிகள் ஜெர்மனியிலும் சிந்தின. பல ஜெர்

மானியச் சிற்றரசர்கள், தங்கள் மன்னர்களிடமிருந்து உரிமைகள் நிறைந்த அரசியலமைப்பைக் கோரிப் பெற்றனர். ஆனால், இத்தகைய சீர்திருத்தங்களின் எதிரியான மெட்டர்னிக் புரட்சிப் பொறிகள் பெருந்தீயாக உருவாகாவண்ணம் அணைத்தார்.

இப் புரட்சியில் தொடர்பு கொள்ளாமல் தனித்து நின்றது ஃபிரஷ்யா. வளமைவாய்ந்த குடியரசும் அதனிடம் மக்கள் கொண்ட விசுவாசமும் இதற்குக் காரணங்களாகும். 1840ஆம் ஆண்டு நான்காம் ஃபிரடெரிக் வில்லியம், ஃபிரஷ்ய மன்னராகப் பதவி ஏற்றார். இவர் உரமான உள்ளமும் அறிவுக்கூர்மையும் பெற்றிருந்தார். இவர் ஆட்சிக்காலத்தில் பத்திரிகைச் சுதந்திரம் போன்ற பல சீர்திருத்தங்கள் அனுமதிக்கப்பட்டன. ஆனால், மக்களுக்கு ஓர் அரசியலமைப்பைத் தர அவர் ஒப்பவில்லை. இந் நிலையில்தான் 1848ஆம் ஆண்டில் ஃபிரான்சில் தோன்றிய பிப்ரவரிப் புரட்சியின் அலைகள் ஜெர்மனியையும் தாக்கின. மக்களின் கிளர்ச்சிக்குத் தலைவணங்கி பேடன், உர்ட்டம்பர்க், நாசோ, ஃபிரான்ஸ்விக், வீமார், டார்மஸ்டட், ஹனோவர், சாக்சனி ஆகிய சிற்றரசுகளின் மன்னர்கள் தம் மக்களுக்கு அரசியலமைப்புகளை நல்கினர். பவேரிய மன்னர் பதவியைத் துறக்க நேர்ந்தது. பெர்லினையும் புரட்சித் தீ பற்றியபோது அதை அணைக்கத் தன் துருப்புகளை அனுப்பினர் ஃபிரஷ்ய மன்னர். இதனால் புரட்சி தணிவதற்குப் பதில் மிகுந்த தீவிரம் அடைந்தது. இறுதியில் மன்னர் மக்களின் கோரிக்கைக்குப் பணிந்து ஓர் அரசியலமைப்பைத் தர முன்வந்தார்.

இப் புரட்சி ஜெர்மானிய மக்களிடையே தேசிய உணர்வை எழுச்சி கொள்ளுமாறு செய்தது. ஜெர்மன் நாடுகளனைத்தையும் இணைத்துத் தேசிய நாடாளுமன்றம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கை எங்கும் எழுந்தது. ஜெர்மனி முழுமைக்குமாகத் தாற்காலிக அரசு ஒன்றை அமைக்கும் திட்டத்தை ஹென்ரி காகேர்ன் தீட்டினார். 1848ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் ஜெர்மன் நாடுகளின் பிரதிநிதிகள் ஏறத்தாழ 600 பேர் பிராங்பர்ட்டில் கூடி இரு அவைகளுக்குச் சட்டமன்றத்தையும் நிர்வாகத் துறைக்கு ஒரு தலைவரையும் இணைக்கப்பட்ட ஜெர்மானிய அரசிற்குத் தேர்ந்தெடுப்பது என்று முடிவெடுத்தனர். மே மாதத்தில் பிராங்கபர்ட்டில் புதிய நாடாளுமன்றம் கூடியது. ஜெர்மன் மக்களின் அடிப்படை உரிமைகள் வரையறுக்கப்பட்டன. பரம்பரை முடியரசை நிறுவுவதெனத் தீர்மானிக்க இவ்வவை ஐக்கிய ஜெர்மனியின் மணிமுடியைப் ஃபிரஷ்ய மன்னர் நான்காம் ஃபிரடெரிக் வில்லியத்திற்கு அளித்

தது. ஆஸ்திரியாவிற்கு இவ்வவையில் இடமில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இச் சமயத்தில ஆஸ்திரியப் பேரரசர் ஃபிரான்சிஸ் ஜோசப் தனது நாட்டில் தலையெடுத்த புரட்சிகளை அடக்கி அமைதி ஏற்படுத்தினுர். தன்னைப்போன்றே புரட்சியை நசுக்கும்படி ஜெர்மானியச் சிற்றரசர்களை அவர் கேட்டுக் கொண்டார். இதனுல் திடம் பெற்ற பல ஜெர்மானியச் சிற்றரசர்கள் தத்தம் நாடுகளில் புரட்சியை ஒடுக்கித் தம் ஆதிக்கத்தை மீண்டும் நிறுவினுர்கள்.

நிலைமை தலைகீழாக மாறுவதைக் கண்ட நான்காம் பிரடெரிக் வில்லியம் தனக்களிக்கப்பட்ட மணிமுடியை ஏற்க மறுத்தார். மன்னர்களால் அளிக்கப்படாது மக்களால் அளிக்கப் பட்ட அம் மணிமுடியை ஏற்க அவர் விரும்பவில்லை. சாக்கடை யிலிருந்து கிடைத்த அவமானகரமான மணிமுடியாக அவருக்கு அது தோன்றியது. உண்மையில் ஆஸ்திரியாவின் எதிர்ப்பை எண்ணி அவர் அஞ்சியதே இம் மறுப்பிற்குக் காரணம். இம் முயற்சி தோற்றபின் பொதுவாக அரசியல் அமைப்பை உருவாக்க முயன்று அதிலும் தோல்வியே கண்டது. எடுத்த பணி ஒன்றை யும் முடிக்காது பிராங்பர்ட்மன்றம் கலைந்தது.

1848ஆம் ஆண்டுப் புரட்சிக்குப்பின் மக்களின் கிளர்ச்சிகள் மூலம் ஜெர்மனி ஒன்றுபடும் என்ற நம்பிக்கை நசித்துப் போயிற்று. ஜெர்மானியச் சிற்றரசுகளின் நம்பிக்கைமீது மன்னர் களின் ஆதிக்கம் முன்னைவிட அழுத்தமாகப் பதிந்தது. குறிப் பாகப் ஃபிரஷ்யாவில் ஓர் அரசியலமைப்பும் ஒரு நாடாளு மன்றமும் அளிக்கப்பட்டிருந்தாலும், மன்னர் அவற்றோடு தன் வளமையைப் பகிர்ந்துகொள்ளச் சிறிதும் தயாராக இல்லை. ஃபிரஷ்ய அமைச்சர்களும் மன்னன் வழிநடந்து எவ் வகையிலும் வலிமை கெடாதவாறு பார்த்துக்கொண்டனர்.

இத் தருணத்தில் ஃபிரஷ்ய மன்னர் பிடெரிக் வில்லியம் மறைந்து முதலாம் வில்லியம் பதவி ஏற்றார். ஜெர்மானிய வரலாற்றில் பொருள் நிறைந்த புகழ்மலிந்த ஓர் அத்தியாயத்தை இவர் ஆட்சி தோற்றுவித்தது. 64 வயது நிரம்பிய மன்னர் தம் வாழ்நாளில் பெரும்பகுதியைப் போர்க்களத்திலேயே கழித்து அத் துறையில் மேலான அனுபவமும் பிடிப்பும் கொண்டு இருந் தார். அவர் ஒரு முறை 'ஜெர்மனியை ஆள வேண்டுமென யார் நினைத்தாலும் அதைப் படை வலிமை கொண்டு முடிக்கவேண்டும்; வெறும் வார்த்தை ஜாலங்களால் அதனை முடிக்க முடியாது''


ஐக்கிய ஜெர்மனி
1815-ஆம் ஆண்டில் ஏற்பட்ட இணைப்பரசின் எல்லை
1871-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஜெர்மானியப் பேரரசின் எல்லை
வட கடல்
டென்மார்க்
ஸ்வீடன்
பால்டிக் கடல்
ஷெல்ஸ்விக்
ஹோல்ஸ்டீன்
மெக்லன் பர்க்
மேற்குப் பிரஷ்யா
ஹாலந்து
ஹனேவர்
பிராண்டன்பர்க்
போஸென்
பிரஷ்யா
வெஸ்ட் பாலியா
பெர்லின்
ரஷ்யா
பெல்ஜியம்
ஹெஸ்ஸி
சாக்ஸனி
சைலேஷியா
பிரேக்
லொரைன்
பிராங்பர்ட்
பவேரியா
அல்ஸாஸ்
பேடன்
உர்டம்பர்க்
வியன்னா
புடாபெஸ்ட்
பிரான்ஸ்
சுவிட்ஸர்லாந்து
ஆஸ்திரிய-ஹங்கேரி
இத்தாலி
துருக்கி
மத்திய தரைக் கடல்
அட்ரியாடிக் கடல்

என்று கூறினர். பதவி ஏற்றவுடன் வில்லியம் சில இராணுவச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு படைபலத்தைப் பெருக்க வேண்டுமென எண்ணினர். ஆனல், அவற்றுக்கான மானியத் திற்காக நாடாளுமன்றத்தை அணுகியபொழுது அங்கு அவருக்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது. மன்னர் கேட்ட மானியத்தை வழங்க மறுத்தது நாடாளுமன்றம். இருவருக்குமிடையே ஒரு நீண்ட கசப்பான வல்லமைப் போட்டி ஆரம்பித்தது. பின்னர், நாடாளுமன்றத்தைக் கலைக்க விரும்பினர். அது இயலாது என்று தெரிந்தபோது தம் பதவியைத் துறப்பது என்ற முடிவிற்கும் வந்துவிட்டார். அம் முடிவிற்கு வந்தபின் அவரது நற்பேற்றின் காரணமாக இறுதியாக ஒரு முயற்சி செய்ய எண்ணினர். அள வற்ற துணிவும் ஆற்றலும் படைத்த ஆட்டோவான் பிஸ்மார்க் என்பவரை அமைச்சராக்கி அவர் ஆலோசனைகளைப் பெறுவதே அம் முயற்சியாகும். 1862ஆம் ஆண்டு செப்டெம்பர் 23ஆம் நாள் பிஸ்மார்க் அமைச்சராகப் பதவி ஏற்ருர். ஃபிரஷ்ய வரலாற் றில் சுவைமிக்க ஏடு ஒன்று திருத்தப்பட்டது. நாடாளுமன்றத்து டன் மன்னர் நடத்தும் போராட்டத்தில் மன்னரைக் கைவிடுவ தைக்காட்டிலும் அவரோடு சேர்ந்து தானும் அழிவதையே விரும் புவதாகக் கூறினர். சொல்லில் காட்டிய உறுதியைப் பிஸ்மார்க் செயலிலும் காட்டினர். போராட்டம் நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது. நாடாளுமன்றம் அடிக்கடி கூட்டப் பட்டது. மானியக் கோரிக்கைகளை எதிர்த்தே கீழ்ச்சபை வாக் களித்தாலும் மேல் சபையின் ஆதரவுடன் தாம் விரும்பிய சட் டங்களை அரசரும் அமைச்சர்களும் ஏற்றுக் கொண்டனர். வெளிப்படையான இந்தச் சர்வாதிகாரக் கூட்டாட்சியில் நாடாளு மன்றத்தின் தோல்வி இன்னும் வெளிப்படையாகத் தெரிந்தது. மன்னர் விரும்பிய படைப்பெருக்கமும் ஏற்பட்டது. ஆனல், படைப் பெருக்கம் என்பது இலட்சியத்திற்கான வழியேயன்றி அதுவே இலட்சியமன்று. படைபலத்தால் ஃபிரஷ்யாவின் நிலையை வலுப்படுத்தி அதன்மூலம் ஜெர்மானிய ஐக்கியத்தை அடைவதே அந்த இலட்சியமாகும். ஐக்கியத்தை அடைய ஓரேவழி போர் தான் என முழங்கிய பிஸ்மார்க் 'இந் நாளில் பெரும் பிரச் சினைகள் வெறும் பேச்சாலும் பெரும்பான்மை வாக்குகளாலும் தீர்மானிக்கப்படுவதல்ல. 1848ஆம் ஆண்டில் செய்யப்பட்ட பெரும் தவறு அதுதான். இரத்தமும் 'இரும்புமே (Blood and Iron Policy) சாதனைகளை நிகழ்த்தும்' எனத் தமது புகழ்பெற்ற உரை ஒன்றில் அவர் குறிப்பிட்டார். இதனல்தான் அவரது கொள்கை 'இரத்தமும் இரும்பும் இணைந்த கொள்கை' என வழங்கப்பட்டது.

1815ஆம் ஆண்டு பிராண்டன்பர்க்கைச் சேர்ந்த பழம் பெருமை வாய்ந்த பிரபுக் குடும்பத்தில் தோன்றிய பிஸ்மார்க் 19ஆம் நூற்றாண்டு உலகுக்கு ஈந்த வெகுசில சிறப்பான ராஜ தந்திரிகளுள் ஒருவர் ஆவர். கல்லூரிப் படிப்பிற்குப் பின்னர் ஃபிரஷ்ய அரசாங்கப் பணியில் நுழைந்த பிஸ்மார்க் விரைவிலேயே அதனின்று விலகினார். பின்னர் தம் தந்தையின் பண்ணையை மேற்பார்வையிடும் பணியை ஏற்றார். இளமையிலிருந்தே முடியாட்சியிடம் நம்பிக்கையும் விசுவாசமும் நிறைந்த பிஸ்மார்க் 1850ஆம் ஆண்டில் ஃபிரஷ்ய மன்னர் தம் மக்களுக்கு ஓர் அரசியலமைப்பை அளித்ததைக் கண்டு மனம் கொதித்துக் குமுறினார். இங்கிலாந்தின் நாடாளுமன்ற முறையை அவர் தமது பரம எதிரியாகக் கருதினார். ஃபிரஷ்ய நாடு உயர்வடைவதற்குக் காரணம் அதன் மன்னர்களேயன்றி மக்கள் அல்லர் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த உண்மையை அனைவரும் மதித்து நடக்க வேண்டுமென அவர் வற்புறுத்தினார். கொள்கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு மன்னரின்கீழ் இணைந்து பணியாற்றுவதே ஃபிரஷ்யாவின் நல்வாழ்வுக்கேற்ற நல்வழி என்பதை அவர் திரும்பத் திரும்பக் கூறினார். 1851-ல் பிராங்பர்ட் அவைக்குப் ஃபிரஷ்யாவின் பிரதிநிதியாகச்சென்ற பிஸ்மார்க் ஆஸ்திரிய ஆதிக்கத்தின் அழிவில்தான் ஃபிரஷ்யாவின் மேன்மை மலரமுடியும் என்ற எண்ணத்தைத் தம் மனதிற்கொண்டார். ஜெர்மனியில் ஃபிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய இருவருக்கும் இடமில்லை. யாரேனும் ஒருவர் வெளியேறியே தீரவேண்டுமெனத் திட்டவட்டமாக உரைத்தார். ரஷ்யாவிலும் ஃபிரான்சிலும் சில காலம் ஃபிரஷ்யத் தூதராக பிஸ்மார்க் பணியாற்றினார். இதன் பின்னர்தான் 1862-ல் அமைச்சராகும் வாய்ப்பு அவரைத் தேடிவந்தது.

அமைச்சரானபின் பிஸ்மார்க் கண்டுபிடித்த இரத்தமும் இரும்பும் இணைந்த கொள்கையின் பயனால் மூண்ட மூன்று போர்களின் விளைவே ஐக்கியமடைந்த ஜெர்மனி ஆகும். இம் மூன்று போர்களும் பிஸ்மார்க்கின் சிந்தனையில் உதித்து, செயல் திறத்தோடு நடத்தப்பட்டு ஆறாண்டு குறுகிய காலத்தில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டன.

பிஸ்மார்க் திட்டமிட்டு நடத்திய மூன்று போர்களில் முதலாவதான டேனியப் போருக்கு முன் ஆஸ்திரியா ஜெர்மனியின் மீதிருந்த தன் பிடிப்பை வலுப்படுத்திக்கொள்வதற்காக ஜெர்மன் சிற்றரசர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டவிழைந்தது.

வில்லியம் விரும்பினாலும் ஃபிரஷ்யா அதில் பங்கு கொள்ளலாகாது என வற்புறுத்தி பிஸ்மார்க் தடுத்தார். ஃபிரஷ்யா இல்லாத ஜெர்மானிய மாநாடு தோல்வியடைந்தது. இம் முயற்சியே ஜெர்மனியைத் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க ஆஸ்திரியா செய்த இறுதி முயற்சி ஆகும்.

டேனியப் பேரரசின் காரணங்களை ஆராயும்போது பிஸ்மார்க்கின் சந்தர்ப்பவாதமும், எதிர்காலத்தைப்பற்றிய நுண்ணறிவும், கொண்ட கொள்கையை எப்படியாயினும் செய்து முடிக்கும் செயல்திறனும் வெளிப்படுகின்றன. இப் போருக்குக் காரணமான ஷ்லெஷ்விக் (Scheleswig), ஹோல்ஸ்டின் (Holstein) என்ற இரு டச்சிகளின் பிரச்சினை குழப்பமும் சிக்கலும் நிறைந்ததாகும். இங்கிலாந்துப் பிரதமர் பால்மாஸ்டன். இப் பிரச்சினையைப் பற்றித் தெளிவாக அறிந்தோர் மூவர் என்றும், அவர்களில் ஒருவரான இங்கிலாந்து அரசியின் கணவர் இறந்துவிட்டார் என்றும், இரண்டாமவரான ஒரு ஜெர்மன் பேராசிரியர் மன நோய் விடுதியில் இருந்தார் என்றும், மூன்றுமவரான தாம் அப் பிரச்சினையைப்பற்றிய விவரங்களை அடியோடு மறந்துவிட்டதாகவும் வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

இருப்பினும் இப் பிரச்சினையைச் சற்று ஆராய்வோம். இவ்விரு டச்சுகளும் பத்தாம் நூற்றுண்டிலேயே டென்மார்க்கோடு இணைக்கப்பட்டன. டேனிய மன்னருக்கு உரிமையான இப் பகுதிகள் தனித்தனி சட்டமன்றங்களைப் பெற்றிருந்தன. டேனியச்சட்டங்கள் இம் மன்றங்களாலும் அங்கீகரிக்கப் பட்ட பின்னரே இங்கு நடைமுறைக்கு வந்தன. இவ்விரண்டு பகுதிகளிலும் ஜெர்மானியரே பெரும்பான்மையாக இருந்தாலும் ஹோல்ஸ்டின்மட்டும் புனித ரோமானியப் பேரரசின் பகுதியாக விளங்கி, அப் பேரரசின் அழிவுக்குப் பின் ஏற்பட்ட ஜெர்மன் இணைப்பரசில் அங்கம் வகித்தது. ஹோல்ஸ்டினை ஆளும் கோமகன் என்ற உரிமையில் டேனிய மன்னர், ஜெர்மானிய டையட் சபையிலும் இடம்பெற்றுர். இவ்விரு டச்சிகளின் நிலைமை சற்று விசித்திரமாக இருப்பினும் இந்த ஏற்பாடு சில காலம் நீடித்தது. ஆனல் 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பொங்கிவரும் தேசிய உணர்வின் காரணமாகத் தொன்று தொட்டு இருந்து வந்த உறவு ஆட்டம் கண்டது. ஹோஸ்டினை ஜெர்மானிய இணைப்பிலிருந்து விடுவிக்க வேண்டுமென டேனியரும், ஷ்லெஷ்விக்கை டேனியரின் பிடியிலிருந்து விடுவித்து ஜெர்மானிய இணைப்பில் சேர்க்க வேண்டும் என ஜெர்மானியரும் விழையலாயினர். இந் நிலையில் 1848ஆம் ஆண்டு டேனிய

மன்னராகப் பதவியேற்ற ஏழாம் பிரடெரிக் இரு டச்சிகள் உள்ள டென்மார்க் முழுமைக்கும் ஒரு புதிய அரசியல் அமைப்பை அளித்தார். உடனே இதை எதிர்த்து அந்த இரு டச்சிகளிலும் புரட்சி தொடங்கியது. ஃபிரஷ்யா, ஜெர்மானிய டச்சிகளுக்குத் துணை நின்றது. ஆனால் ஃபிரிட்டன், ரஷ்யா, சுவீடன், ஆஸ்திரியா போன்ற நாடுகள் டென்மார்க்குக்குத் துணையாக நின்று பிரச்சினைக்கு முடிவுகட்ட இலண்டனில் மாநாட்டைக் கூட்ட முடிவு செய்தன. இலண்டனில் ஓர் உடன்பாடு வரையப்பட்டது. அதன் படி இரண்டு டச்சிகளையும் டென்மார்க்கே வைத்திருந்தது. ஆனால் டென்மார்க் அரசோடு இவை எக்காலத்திலும் இரண்டறக் கலக்கலாகாது. மேலும் டென்மார்க் மன்னர் இங்குள்ள ஜெர்மானிய மக்களை மதிப்போடும் சலுகை தந்தும் நடத்த வேண்டும். ஏழாம் பிரடெரிக்குப் பிறகு டென்மார்க் அரசும் இவ்விரு டச்சிகளும் கிளக்ஸ்பர்க் மரபைச் சார்ந்த கிரிஸ்டியனையே சாரும். கிரிஸ்டியனோடு போட்டியிட்ட அகஸ்டன்பர்க் கோமகன் போட்டியினின்று விலகிக் கொண்டார். இந்த ஏற்பாட்டினை ஃபிரஷ்யா, ஆஸ்திரியா உட்பட எல்லா ஐரோப்பிய நாடுகளும் ஏற்றன. இவ்வுடன்பாடு ஏற்படுத்திய அமைதி தாற்காலிகமானதே. டேனியர்கள் ஐடர் நதிவரை தங்கள் அரசு விரிந்து, பிரச்சினைக்குரிய இரு டச்சிகளும் தம் நாட்டோடு ஒன்றாக இணைவதில் மிகத் தீவிரமாக இருந்தனர். 1755-ல் மக்களது கோரிக்கைக்கு இணங்கிய மன்னர், இவ்விரு டச்சிகளுக்குமாகச் சேர்த்து ஒரு புது அரசியலமைப்பை நல்கினார். தங்கள் தனித்தன்மை இழந்து டேனிய அரசோடு பலவந்தமாக இணைக்கப்படும் இம்முயற்சியை எதிர்த்து ஹோல்ஸ்டின் எதிர்ப்புக் குரலை எழுப்பியது. மன்னர், ஹோல்ஸ்டினுக்குமட்டும் விதிவிலக்கு அளிக்க முன்வந்தார். ஆனால் டேனியர்களின் எதிர்ப்புக் காரணமாக அவர் தம் முடிவை மாற்றிக் கொண்டு 1863ஆம் ஆண்டு ஷ்லெஷ்விக்கை டென்மார்க்கோடு இணைத்து ஹோல்ஸ்டினையும் மிக அதிகஅளவில் கட்டுப்படுத்தும் அரசரின் அறிவிப்பு, பிரகடனமாயிற்று. இம்முடிவை எதிர்த்து ஹோல்ஸ்டினும் அதற்கு ஆதரவாக ஜெர்மானியரும் ஒன்று திரண்டனர். இச் சமயத்தில் பிரடெரிக் மறைந்து ஒன்பதாம் கிரிஸ்டியன் பதவி ஏற்றார். தம் முன் வைக்கப்பட்ட ஜெர்மானியின் எதிர்ப்பு, டென்மார்க்கின் புரட்சி என்ற இரண்டினுள் முன்னதையே வரவேற்பது என்ற முடிவினைக் கிரிஸ்டியன் விரைந்து எடுத்தார். இரண்டு டச்சிகளிலும் புரட்சி மூண்டது. அகஸ்டன்பர்க் கோமகன் தன் உரிமைகளைப் புதுப்பித்தார். ஜெர்மானிய டயட் சபை அவருக்கு ஆதரவாகப் போர் தொடுத்தது. ஹோல்ஸ்டின் விடுவிக்கப்பட்டு அகஸ்டன்பர்க் கோமகன் அதன்

தலைவர் ஆனார். இக் கட்டத்தில் இப் பிரச்சினையில் ஃபிரஷ்யா தலையிடவேண்டிய வேளை வந்துவிட்டது என பிஸ்மார்க் கருதினார். இலண்டனில் கையெழுத்திட்டுக் கிரிஸ்டியனின் உரிமைகளை மதிப்பதாக ஒப்புக் கொண்டதால் அகஸ்டன்பர்க் கோமகனின் ஏற்றத்தை ஃபிரஷ்யா அனுமதிக்கலாகாது என வாதாடினார் வில்லியம். ஆனால், முடிவில் பிஸ்மார்க்கின் கொள்கையை ஏற்றார். அந்நியரின் பிடியிலிருந்து இரு ஜெர்மானிய டச்சிகளை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபடுவதென ஃபிரஷ்யா முடிவெடுத்தது. ஆஸ்திரியாவும் ஃபிரஷ்யாவும் ஒத்துழைக்கத் தீர்மானித்தன. இறுதி நேரத்தில் பிரச்சினையைத் தீர்க்குமாறு ஜெர்மானிய டையட் சபைக்குப் பெயரளவில் ஒரு கோரிக்கை விடப்பட்டது. டையட் சபை அதை நிராகரிக்கவே தங்கள் சொந்தப் பொறுப்பில் போரை நடத்துவது என ஆஸ்திரியாவும் ஃபிரஷ்யாவும் முடிவெடுத்தன. 48 மணி நேரத்தில் நவம்பர் அரசியல் அமைப்பைத் திரும்பப்பெறுமாறு ஒரு இறுதி எச்சரிக்கை டென்மார்க்கிற்கு விடப்பட்டது. டென்மார்க் இதற்குப் பணிந்து போரை நிராகரித்திருந்தால் பிஸ்மார்க்கின் திட்டங்கள் தவிடு பொடியாகி இருக்கும். ஆனால் டென்மார்க் மன்னர் இரு காரணங்களுக்காகப் போரைத் தேர்ந்தெடுத்தார். ஒன்று தன் நாடாளுமன்றத்தைக் கூட்டி அரசியலமைப்பைத் திரும்பப் பெறும் நடவடிக்கை எடுக்கக் கொடுக்கப்பட்ட நேரம் போதாது. இரண்டு டென்மார்க் அரச பரம்பரையுடன் சமீபத்தில் திருமண உறவு கொண்ட ஃபிரிட்டிஷ அரசவம்சம் தன்னைக் கைவிடாது என்ற நம்பிக்கை.

1864ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பித்த போர் விரைவில் ஒரு முடிவை எய்தியது. ஹோல்ஸ்டின், ஷ்லெஷ்விக் ஆகிய டச்சிகள் விடுவிக்கப்பட்ட பிறகும் போரை நிறுத்தாமல் ஆஸ்திரிய ஃபிரஷ்யப் படைகள் டென்மார்க்கினுள் நுழைந்து விட்டன. படுதோல்வி அடைந்த டென்மார்க்கிடம் ஐரோப்பிய நாடுகள் அனுதாபம் கொண்டன. இலண்டனில் ஒரு மாநாட்டைக் கூட்டி டென்மார்க்கிற்கு நியாயம் வழங்க அவை முன் வந்தன. ஆனால், இம் மாநாட்டினால் ஒரு பயனும் விளையவில்லை. பின்னர், வியன்னாவில் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு ஹோல்ஸ்டினையும், ஷ்லெஷ்விக்கையும் துறக்க ஒப்புக்கொண்டது டென்மார்க். பிரச்சினை இன்னமும் தீர்ந்தபாடில்லை. ஃபிரஷ்யா இப் பகுதிகளை இணைத்துக்கொள்ள விரும்பியது. ஆஸ்திரியா இப் பகுதிகளில் எதுவும் தன் நாட்டோடு இணைய வேண்டுமென ஆசைப்படவில்லை. ஆயினும், அவை ஃபிரஷ்யாவோடு இணைவதையும் அனுமதிக்க விரும்பவில்லை, இறுதியில் ஆஸ்திரியாவில்

ஓர் உடன்பாடு செய்யப்பட்டு, அதன்படி இவ்விரு பகுதிகளையும் ஆஸ்திரியாவும் ஃபிரஷ்யாவும் சேர்ந்து நிர்வகிப்பதென ஒப்புக் கொள்ளப்பட்டது. தாற்காலிகமாக ஹோல்ஸ்டினை ஆஸ்திரியாவும், ஷ்லெஷ்விக்கை ஃபிரஷ்யாவும் நிர்வகிப்பதென முடிவு செய்யப்பட்டது. இவ்விதம் ஐக்கிய ஜெர்மனியை உருவாக்க பிஸ்மார்க் திட்டமிட்ட மூன்று போர்களில் முதல்போர் நிறைவெய்தியது. பிஸ்மார்க்கின் திறமைகள் வெளிப்படலாயின. அமைச்சர் காட்டிய பாதையிலே கண்மூடித்தனமாய் முழு விருப்பின்றிச் சென்ற மன்னர் வில்லியம், அமைச்சர் காட்டும் பாதை பொன்னான பாதை என்பதை உணர்ந்துகொண்டார். பிரபுப் பட்டமும் உயரிய அரசின் தகுதிச்சான்றிதழான கருங்கழுகுச் சின்னமும் பிஸ்மார்க்குக்கு அளிக்கப்பட்டன.

பிஸ்மார்க்கின் அடுத்த இலட்சியம் ஆஸ்திரியாமீது போர் தொடுக்கவேண்டும் என்பதே. அப் போரில் பிற ஐரோப்பிய நாடுகள் தலையிடாவண்ணம் தடுக்கும் முயற்சிகளை அவர் பொறுமையாக மேற்கொண்டார். 1863ஆம் ஆண்டில் போலந்தில் கிளர்ச்சி எழுந்தபோது அதை அடக்குவதில் ரஷ்யாவிற்கு உதவி, அந் நாட்டின் நல்லெண்ணத்தைப் பெற்றார். 1865ஆம் ஆண்டில் ஃபிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியனைச் சந்தித்துப் பேசி, இனி நிகழப்போகும் போரில் அவர் நடுநிலைமை வகித்தால் ரைன் நதிக்கரைப் பிரதேசங்கள் சிலவற்றை அவர் பரிசாகப் பெறக்கூடும் என்பதைக் குறிப்பால் உணர்த்தினார். இத்தாலிய ஐக்கியத்தைத் தன் இலட்சியமாகக்கொண்டு ஆஸ்திரியாவைத் தன் பரம வைரியாகப் பாவித்த சார்தீனியாவோடு நேச ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டார். இறுதியில் பிரச்சினைக்குரிய இரு டச்சிகளின் விவகாரத்தை ஆஸ்திரியா 'டையட்' சபைக்கு எடுத்துச் சென்றபோது அது கெஸ்டின் உடன்பாட்டிற்குப் புறம்பானது என்று கூறி ஃபிரஷ்யப் படைகளை ஹோல்ஸ்டினுக்குள் செலுத்தினார். ஃபிரஷ்யாவின் இந்த ஆக்ரமிப்பைக் குறித்து ஆஸ்திரியா டையட் சபையில் புகார் செய்தது. அதேநேரத்தில் ஃபிரஷ்யப் பிரதிநிதி இணைப்பரசின் அமைப்பில் முக்கிய சீர்திருத்தங்களைக்கோரும் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தார். ஆஸ்திரியாவின் புகாரை முதலில் எடுத்துக்கொண்ட டையட் சபை பெருவாரியான வாக்குகளால் ஃபிரஷ்யாவின் நடவடிக்கையைக் கண்டித்தது. அதற்குப் பதிலாக ஃபிரஷ்யா, ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளைப் பழி தீர்ப்பதாகக் கருவியதோடு ஜெர்மன் இணைப்பரசு கலைக்கப்பட்டு விட்டதாகவும் அறிவித்தது.

1866ஆம் ஆண்டு ஜூன் 16ஆம் நாள் ஆஸ்திரிய-ஃபிரஷ்யப் போர் மூண்டது. போரின் ஆரம்பத்தில் ஆஸ்திரியாவின் நிலை உயர்ந்திருந்தது. ஆஸ்திரியாவின் 8 இலட்சம் துருப்புகளுக்கு எதிரே ஃபிரஷ்யாவின் 3½ இலட்சம் துருப்புகள் சமபலம் இல்லாத எதிரிகளாகத் தோற்றமளித்தனர். மேலும் ஃபிரஷ்யாவிற்கு ஆதரவாளர்கள் அதிகமில்லை. ஆனால், உண்மையில் ஆஸ்திரியா, கரையான் அரித்தமரம்போல் வலிமையற்று இருந்தது. போரில் இத்தாலியும் குதித்ததால் ஆஸ்திரியாவிற்கு இருமுனைகளில் போரிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேலும் ஃபிரஷ்யத் தளபதியான 'மோல்ட்கே'விற்கு இணையானவரல்லர் ஆஸ்திரியத் தளபதியான 'பெனடெக்' பிரபு. ஆஸ்திரியப் படைகள் இத்தாலியப் படையினை 'கஸ்டோஸா'வில் தோற்கடித்தது. அது தவிர வேறு எந்த வெற்றியையும் அடையவில்லை. ஜூலை 2ஆம் நாள் பொஹிமியாவில் 'சடோவா' என்னுமிடத்தில் ஆஸ்திரியப் படைகள் படுதோல்வி அடைந்தன. வெற்றிப் பெருமிதத்தோடு ஃபிரஷ்யப் படைகள் 'பிராகா' நகரைப் பிடித்து, பின் வியன்னாவை நோக்கி முன்னேறின. இதே நேரத்தில் ஆஸ்திரியாவிற்கு ஆதரவளித்த பவேரியா, பேடன், உர்ட்டம்பர்க், நூரம்பர்க் ஆகிய சிற்றரசுகளும் ஃபிரஷ்யாவின் பிடியில் சிக்கின. இந்நிலையில் யாரும் எதிர்பாராவண்ணம் சமாதானக் கோரிக்கை விடுத்தார் பிஸ்மார்க். தோற்ற நாடான ஆஸ்திரியாவைக் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்திச் சில எளிய நிபந்தனைகளைமட்டும் விதித்து ஆஸ்திரியாவின் நட்பை யாசித்தார் அவர். ஃபிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மனியை ஒன்றுபடுத்தி ஆஸ்திரியாவை ஜெர்மனியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்பதுதான் இலட்சியமேதவிர, ஆஸ்திரியாவின் மனத்தைப் புண்படுத்துவது அல்ல என்ற கருத்தை மன்னர் வில்லியமும் ஏற்குமாறு பிஸ்மார்க் செய்தார். இடையில் நெப்போலியன் தலையிட்டுத் தான் நடுநிலைமை வகித்ததற்காக பிஸ்மார்க் வாக்களித்த இழப்பீட்டைத் தருமாறு கோரினார். அது 'லக்சம்பர்க்'காகவோ அல்லது 'மெயின்ஸ்'ஸாகவோ இருக்கும் என அவர் ஊகித்தார். ஆனால் பணி முடிந்துவிட்டதால் நெப்போலியனுக்கு ஏன் பரிசு தரவேண்டும் என பிஸ்மார்க் எண்ணமிட்டார். 'மெயின்ஸ்' வேண்டுமா அல்லது போர் வேண்டுமா என்ற பிஸ்மார்க்கின் கேள்வியைப் பார்த்து நெப்போலியன் வாயடைத்துப் போனார். போருக்குப் போகும் நிலையில் அவர் இல்லை. எனவே, தன் மன உணர்ச்சியை அடக்கித் தகுந்த சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கும் முடிவினை அவர் ஏற்றார்.

1866ஆம் ஆண்டு ஆகஸ்டு 23ஆம் நாள் 'பிராக்' உடன்படிக்கை கையெழுத்தாயிற்று, இவ்வுடன்பாட்டின்படி ஆஸ்

திரியா வெனிஷியாவை இத்தாலிக்கு ஈந்தது. மேலும், போர் இழப்பீட்டுத் தொகை ஒன்றை ஃபிரஷ்யாவிற்குத் தந்ததோடு பழைய இணைப்பரசின் அழிவையும் ஒப்புக்கொண்டது. ஃபிரஷ்ய நாட்டோடு ஷ்லெஷ்விக், ஹோல்ஸ்டின், ஹனோவர் அரசு, ஹெஸ்ஸி நாஸோ, பிராங்பர்ட் நகர் ஆகிய பகுதிகள் இணைந் தன. மெயின் நதிக்கு வடக்கிலுள்ள ஜெர்மானிய நாடுகள் அனைத்தும் ஃபிரஷ்யாவின் தலைமையில் இணைந்து 'வடஜெர்மன் இணைப்பரசு' என்ற பெயரைப் பெற்றன. இவ்வரசில் ஆஸ் திரியாவிற்கு இடமில்லை. தெற்கிலுள்ள பவேரியா, உர்டம்பர்க், பேடன் ஆகிய நாடுகள் தனித்தியங்கவும், விரும்பினால் ஓர் இணைப்பரசு ஏற்படுத்திக் கொள்ளவும் உரிமைகள் வழங்கப் பட்டன.

இவ்விதம் சடோவாவில் ஆஸ்திரியா பெற்ற அடி இத்தாலிய ஐக்கியத்திற்கு உதவிபுரிந்தது. ஜெர்மானீய ஐக்கியம் நிறை வடைவதற்கும் அது உதவியது. வடஜெர்மன் இணைப்பரசின் தலைவராக வில்லியமும் அதன் தலைமை அமைச்சராக பிஸ்மார்க் கும் ஏற்கப்பட்டதோடு ஃபிரஷ்யப்படையும் பொருளாதார முறையும் இணைப்பரசைக் காக்கும் தூண்களாயின. ஓர் அரசியல் அமைப்பும் இவ்விணைப்பரசுக்கு பிஸ்மார்க்கால் வழங்கப்பட்டது.

ஆஸ்திரிய, ஃபிரஷ்யப் போரின் வெற்றி பிஸ்மார்க்கின் இரத்தமும் இரும்பும் இணைந்த கொள்கையின் வலிமையைப் பறைசாற்றியது. எனவே, அதைத் தொடர்ந்து பின்பற்றத் துணிந்தார் பிஸ்மார்க். இப் போருக்குப்பின் ஃபிரஷ்யாவிற்கும் ஃபிரான்சிற்கும் இடையே உறவுகள் பிளவுபட்டன. நான்கு தெற்கு ஜெர்மானிய நாடுகள் விலகி நின்று ஜெர்மானிய ஐக்கியத்திற்குச் சவால் விடுத்தன. இவ்விரு உண்மைகளையும் மோதவிட்டு ஜெர்மானிய ஐக்கியம் என்ற சாதனையை நிகழ்த்த பிஸ்மார்க் முடிவெடுத்தார்.

ஃபிரஷ்யாவின் பெருகிவரும் வலிமையைக் கண்டு அச்சமும் பொறாமையும் அடைந்தது ஃபிரான்சு. ஃபிரஷ்யாவிற்கோ ஃபிரான்சின் மனநிலை எரிச்சலை ஊட்டியது. இதுகாறும் தன் வளர்ச்சிக்குத் தடையாக விளங்கிய ஃபிரான்சின்மீது ஜெர்மனி வெறுப்பும் எரிச்சலும் கொண்டதில் வியப்பில்லை. இத் தருணத் தில் லக்சம்பர்க் தனக்குத் தரப்படவேண்டும் என்ற புதிய கோரிக்கையை நெப்போலியன் எழுப்பினார். ஹாலந்தின் வச மிருந்த அச் சிற்றரசை ஃபிரான்சிற்கு விற்க ஹாலந்து மன்னர் சம்மதித்தாலும், ஃபிரஷ்யா அதற்குத் தடையாக நின்றது. ஜெர்மானிய நிலமான லக்சம்பர்க் அதன் பரம்பரை எதிரியிடம்

போவதா எனச் சீறினர் ஜெர்மானியர். இதைக் கண்ட நெப் போலியன் மனம் கொதித்தது. பின்னர் லக்சம்பர்க் பிரச் சினையைத் தீர்க்க வழக்கப்படி ஓர் ஐரோப்பிய மாநாடு கூட்டப் பெற்றது. மாநாட்டின் முடிவின்படி லக்சம்பர்க் ஒரு நடுநிலை நாடாக மாறியது. ஃபிரஷ்யத் துருப்புகள் அங்கிருந்து விலக்கப் பட்டன. இம் முடிவைத் தத்தம் வெற்றியாக ஃபிரஷ்யாவும் ஃபிரான்சும் கொண்டாடின. இத்துடன் ஐரோப்பிய அரசியல் வானில் இடி மின்னல்கள் மறைந்து தெளிவு பிறந்துவிட்டதாகத் தோன்றியது.

ஆனல், எதிர்பாராதவிதமாகத் தென்மேற்குத் திக்கிலிருந்து சூருவளிக்கான அறிகுறிகள் தோன்றின. அங்கே 1868-ல் ஸ்பெயினில் அரசி இஸபெல்லாவின் கொடுங்கோலாட்சிக்கு எதிரே மக்களின் கிளர்ச்சி தோன்றி, முதிர்ந்து இறுதியில் அரசி நாட்டைவிட்டு விரட்டப்பட்டார். முடியாட்சியில் நம்பிக்கைக் கொண்டிருந்த ஸ்பானிய மக்கள் தங்கள் அரியணையில் அமர்வ தற்குத் தகுதியானவரை ஐரோப்பாவெங்கும் வலைவீசித் தேடினர். அவ் வலையில் ஹோகன்சோலர்ன் (Hohenzollern) அரச வம்சத் தில் ஒரு கிளையைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்கச் சமயத் தினரான லியோ பால்டு என்னும் இளவரசர் சிக்கினர். அவரது சகோதரரான சார்லசு ருமேனிய அரியணையில் அமர்ந்து பெரும் புகழ் ஈட்டியிருந்தார். நெப்போலியன் போனபார்டின் தளபதி யும், தங்கையின் கணவருமான 'முரட்டின்' பேரரான லியோ பால்டு ஸ்பெயின் மன்னராவதில் யாருக்கும் ஆட்சேபம் இராது என ஸ்பானியர்கள் கருதினர். 1870ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வில்லியம், பெர்லினில் தம் குடும்பத்தவரையும் முக்கிய அமைச்சரவையையும் கூட்டி இதுபற்றி விவாதித்தார். இறுதியில் லியோபால்டு ஸ்பானிய அரியணை தமக்கு வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தார். அதை ஒப்புக்கொள்ளும்படி பிஸ்மார்க் செய்த வாதங்கள் அவ்வமயம் பயனற்றும் போயின. ஆனல், பிஸ்மார்க் மனம் சோரவில்லை. அவரது ஆலோசனையின்பேரில் ஸ்பானியர் தம் கோரிக்கையைப் புதுப்பித்தனர். இம் முறை பலத்த வற்புறுத்தல் காரணமாக இக் கோரிக்கையை ஏற்பதாக லியோபால்டு அறிவித்தார்.

இம் முடிவைக் கண்டு ஃபிரான்சு பேரதிர்ச்சியடைந்தது. ஐரோப்பாவில் ஜெர்மனியின் ஆதிக்கம் ஓங்கி 'வல்லமைச் சம நிலை' சீர்குலையும் என ஃபிரெஞ்சுப் பத்திரிகைகள் ஓலமிட்டன. ஜூலை 6ஆம் நாள் கூடிய அமைச்சரவையின் அவசரக் கூட்டத் தில் லியோபால்டு தன் முடிவை மாற்றிக்கொள்ளாவிட்டால்

தயக்கமின்றியும் பலவீனமின்றியும் தங்கள் கடமையைச் செய்து முடிக்க ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு வழி தெரியுமென நெப்போலியன் முழங்கினார். அவ்வழி போருக்கும் அழிவுக்குமான வழி என்பதை ஐரோப்பா விரைவில் தெரிந்து கொண்டது.

ஃபிரஷ்யாவில் ஃபிரெஞ்சுத் தூதுவரான பெனடெட்டி ஃபிரஷ்யாவின் கருத்தை விரைந்து அறிந்து கூறுமாறு முடுக்கப் பட்டார். பிஸ்மார்க் பெர்லினில் இல்லை. பிற அதிகாரிகள் இது ஹோகன்சோலர்ன் அரச வம்சத்தவரின் குடும்ப விவகாரம் எனக் கூறிவிட்டனர். இறுதியாக பெனடெட்டி 'எம்ஸ்' நகரில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஃபிரஷ்ய மன்னரையே அணுகுவது என்ற முடிவுக்கு வந்தார். லியோபால்டின் முடிவை மாற்ற வேண்டும் அல்லது போர் என்பதைப் ஃபிரஷ்ய மன்னருக்குத் திட்டவட்டமாக எடுத்துக் கூறும்படி பாரிசு அவருக்கு ஆணையிட்டது. ஃபிரஷ்ய மன்னர் பெனடெட்டியை மரியாதையோடு வரவேற்றுப் பேசித் தாமும் ஓர் அமைதியான முடிவை விரும்புவதாகக் கூறினார். அதன்படியே அவர் லியோபால்டிற்கும் முடிவை மாற்றிக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கி, செய்தி ஒன்றை அனுப்பினார். லியோபால்டும் அவர் வார்த்தையை ஏற்றுத் தாம் ஸ்பானிய அரியணையை ஒப்புக்கொள்ளப்போவதில்லை என்று அறிவித்துவிட்டார். ஃபிரான்சிற்கு வேண்டிய பதில் கிடைத்துவிட்டது. போர் அபாயம் விலகிவிட்டதாக நெப்போலியன் மகிழ்ந்தார். ஆனால், ஃபிரெஞ்சு அயல்நாட்டு உறவு அமைச்சரும் இராணுவத்தினரும் பிஸ்மார்க்கைப் போன்றே போரை விரும்பினர். இதன் விளைவாக இனித் தன் குடும்பத்தைச் சார்ந்த யாருமே ஸ்பானிய அரியணைக்கு ஆசைப்படுவதில்லை என்ற உறுதிமொழியைப் ஃபிரஷ்ய மன்னரிடமிருந்து எழுத்து மூலமாகப் பெறும்படி பெனடெட்டிற்கு ஆணை அனுப்பப்பட்டது. ஜூலை 13ஆம் நாள் ஃபிரஷ்ய மன்னரை பெனடெட்டி சந்தித்தார். ஃபிரான்சின் ஆணவத்தைக் கண்டு வியப்பும் வெறுப்பும் அடைந்த வில்லியம் அப்படிப்பட்ட உறுதிமொழி எதுவும் அளிக்க முடியாதெனத் திடமாக ஆனால், மரியாதையோடு மறுத்தார். சந்திப்பு அத்துடன் முடிவுற்றது.

லியோபால்டு தன் முடிவை மாற்றிக் கொள்வதைப் பற்றிக் கேள்விப்பட்ட பிஸ்மார்க் மனத்தளர்ச்சி அடைந்தார். ஃபிரஷ்யத் தளபதி மால்ட்சேயையும், போர் அமைச்சர் ரோனேயும் அழைத்துப் பேசிக்கொண்டிருக்கையில் எம்ஸில் (Elms) நடந்த நிகழ்ச்சிகள் குறித்துப் ஃபிரஷ்ய மன்னர் அனுப்பிய தந்திச் செய்தி பிஸ்மார்க்கிற்குக் கிடைத்தது. அதைக் கண்ட பிஸ்மார்க்

கின் மனச்சோர்வு மறந்து போயிற்று. களிப்புக் கடலில் ஆழ்ந்து அவர் தன் திட்டத்தை மால்ட்கே, ரோன் இருவரிடமும் விளக்கிக் கூறினர். தந்திச் செய்தியைச் சுருக்கிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கச் செய்வதன்மூலம் 'ஃபிரெஞ்சுக் காளையின்மீது சிவப்புத் துணியை வீசி அதன் சினத்தைக் கிளப்பும் பணியை' மேற்கொள்ளப் போவதாக அறிவித்தார்.

மூவரும் களிப்பில் ஆழ்ந்தனர். திட்டப்படி எம்ஸ் தந்திச் செய்தி சுருக்கப்பட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டது.

பிஸ்மார்க் எதிர்பார்த்தது விளைந்தது. ஜுலை 14ஆம் நாள் ஃபிரான்சில் தேசிய விடுமுறை நாள். பத்திரிகைச் செய்தியால் ஃபிரெஞ்சு மக்கள் கொதிப்படைந்தனர். தங்கள் தூதுவரைப் ஃபிரஷ்ய மன்னர் அவமதித்துவிட்டதாக அவர்கள் கருதினர். ஒரே நாளில் மும்முறை அமைச்சரவை கூடியது. பொங்கிப் பெருகிய உணர்ச்சி வெள்ளத்தில் நெப்போலியன் சிக்கித் திணறினர். போர் வேண்டாம் என்ற அவர் ஆலோசனையை ஏற்பார் யாரும் இல்லை. மக்களின் மனநிலையைப் பிரதிபலித்த அமைச்சர்கள் முடிவை இறுதியில் அவரும் மனத்தாங்கலோடு ஏற்றார். அடுத்த நாளில் ஃபிரான்சு ஃபிரஷ்யாமீது போர் தொடுத்தது. ஃபிரஷ்யாவிலும் இதே மனநிலைதான் தென்பட்டது. தங்கள் மன்னரையும் தங்கள் நாட்டையும் ஃபிரான்சு அவமதித்ததைப் பத்திரிகைச் செய்திகள் அவர்களுக்கு உணர்த்தின. ஃபிரஷ்யாவுக்கு இழைக்கப்பட்ட அவமானத்தைத் தங்களுடையதாக எண்ணினர் தெற்கு ஜெர்மானிய நாட்டவரும், தெற்கு ஜெர்மனியின் தலைமையை ஏற்க விரும்பிய பவேரியாகூட ஃபிரான்சுடன் நட்பு என்ற கொள்கையை உதறி எறிந்து, ஃபிரஷ்யாவின் அணியில் சேர்ந்து போருக்குப் புறப்பட்டது. ஃபிரான்சு வென்றால் ரைன் நதிக்கரைப் பிரதேசங்களையும் பேலட்டிநேட்டையும் இழக்க நேருமே என்ற அச்சமும் பவேரியாவை வாட்டியது. மொத்த ஜெர்மனியும் சினத்தீயால் உந்தப்பட்டு ஆரவாரத்தோடு ஃபிரான்சைக் களத்தில் சந்திக்கப் புறப்பட்டது.

களத்தில் இறங்கிய ஃபிரெஞ்சுப் படைகளின் நிலை உண்மையில் இரங்கத்தக்கதாக இருந்தது. அளவுக்கு மீறிய உற்சாகத்தைத் தவிர, போர் செய்வதற்கு அத்யாவசியமாகத் தேவைப்படும் வேறெதுவுமே அவர்களிடம் இல்லை. போதுமான துப்பாக்கிகள்கூட அவர்களிடம் இல்லை. அரசதந்திர ரீதியாகப் பார்க்கும்போது ஃபிரான்சு தனித்தே நின்றது. பெல்ஜியத்தைத் தான் இணைத்துக்கொள்ள விரும்புவதாக நெப்போலி

யன் எழுதிய கடிதங்களைப் பிஸ்மார்க் பிரசுரித்ததால் இங்கிலாந்து ஃபிரான்சிடம் கொண்டிருந்த அனுதாபத்தைத் துறந்து நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றக்கூடாதென முடிவு செய்தது. ஆஸ் திரியா ஃபிரான்சு பக்கம் சாய விரும்பி ரஷ்யாவின் அச்சுறுத்தல் காரணமாகப் பின்வாங்கியது. இத்தாலி ரோமாபுரியைத் தனக்கு விட்டுக்கொடுப்பதாக இருந்தால் நெப்போலியனுக்கு உதவலாமென எண்ணியது. ஆனால், நெப்போலியன் அதற்குச் சம்மதிக்காததால் இத்தாலியும் நடுநிலைமை நாடுகளின் பட்டியலில் இடம் வகித்தது. நாலரை இலட்சம் படைவீரர்களைக் கொண்ட ஜெர்மன் படை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஃபிரெஞ்சுப் படையெடுப்பிற்குத் தயாராயின. ஃபிரெஞ்சுப் படைகள் நெப்போலியன் தலைமையிலும், தளபதி மெக்மாகன் தலைமையிலும் இரு பிரிவுகளாகப் பிரிந்து ரைன் நதியைக் கடக்கத் தயாராயின. ஆகஸ்ட் நான்காம் நாள் போரைத் தொடங்கிய ஜெர்மனியர், எதிர்ப்பைச் சுலபமாக முறியடித்து ஆல்சேஸ்சில் (Alsace) நுழைந்தனர். லொரேயிலும் (Lorraine) ஜெர்மானியர் வசமாக, ஃபிரெஞ்சுப் படை மீட்ஸ் (Metz) கோட்டைக்குப் பின் வாங்கியது. ஃபிரெஞ்சுத் தளபதி மெக்மாகன் முன்னணிப் படையோடு வந்துசேர்ந்து, நெப்போலியனிடம் எல்லாப் படைகளும் பாரிசுக்குப் பின்வாங்கிச் சென்று, அங்கிருந்து ஜெர் மானியப் படைகளோடு போரிட வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். நெப்போலியன் பாரிசிலிருந்து தன் அரசி யூஜுனுக்கு இக் கருத்தைத் தெரியப்படுத்தினார். அப்படி ஒட்டுமொத்தமாகப் பின்வாங்குவது பேரரசரின் அழிவிற்கு வழிகோலும். எனவே, மீட்ஸ் கோட்டையை முற்றுகையிலிருந்து விடுவிப்பதே நலம் என அரசி பதில் அனுப்பினாள். எனவே, கனத்த இதயங்களோடு நெப்போலியனும் மெக்மாகனும் தம் படைகளை மீட்சை நோக்கி நடத்திச் சென்றனர். 1820ஆம் ஆண்டு செப்டெம்பர் 2ஆம் நாள் சடானில் ஜெர்மானியப் படை இவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டது. உடல் நலம் குன்றிய நிலையில் வேறு வழியின்றி நெப்போலியன் தன் 81,000 படை வீரர்களோடு சரண் அடைந்தார். ஃபிரெஷ்ய மன்னரை நேரில் சந்திக்க முயன்று அது மறுக்கப்பட்ட நிலையில் பிஸ்மார்க்கைச் சந்தித்து மனிதத்தன்மை வாய்ந்த நிபந்தனைகளுக்காக மன்றாடினார் நெப்போலியன். பிஸ்மார்க் தாம் இரும்பு மனிதர் என்பதை அப்போதும் நிரூபித்தார். சடான் போர்க்களம் ஃபிரெஞ்சுப் ஃபிரஷ்யப் போரின் ஒரு கட்டம் முடிவுற்றதைக் காட்டியதோடு இரண்டாம் ஃபிரெஞ்சுப் பேரரசு வீழ்ச்சியையும் கொணர்ந்தது. நெப்போலியனது தோல்வியைப் பற்றி அறிந்தவுடனே லியான்காம்பெட்டா என்ற குடியரசுக் கட்சித் தலைவரின்கீழ் அக் கட்சியினர் கூடிப் பேரரசர்

பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும் ஃபிரெஞ்சுக் குடியரசு ஒன்று அமைக்கப்பட்டதாகவும் அறிவித்தனர். பேரரசியும் அவள் மைந்தனும் இங்கிலாந்திற்குத் தப்பி ஓடினர். சடானில் அடைந்த தோல்வியை ஃபிரான்சின் தோல்வியாக ஒப்புக்கொள்ளாத புதிய அரசு போரைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்தது. ஃபிரெஞ்சு மண்ணில் ஓர் அங்குலத்தையும் ஃபிரெஞ்சுக் கோட்டைகளில் ஒரு கல்லையுங்கூட விடுவதில்லை என்பதே அதன் முடிவு. ஜெர்மானியரும் ஃபிரான்சை முடமாக்குவது என்ற தீர்மானத்தோடு செயல்பட்டனர். ஃபிரெஞ்சுக் குடியரசின் போர் அமைச்சரான கேம்பட்டா மக்களின் தேசிய உணர்வைத் தூண்டிவிட்டு 21 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் எல்லோரையும் போரில் ஈடுபடுத்தி வெற்றியைக் குவிக்கத் திட்டமிட்டார். ஆனால், மெட்ஸ், ஸ்டிராஸ்பர்க் கோட்டைகளோடு பாரிசும் முற்றுகையிடப்பட்டது. ஃபிரெஞ்சுக்காரர்கள் வீரத்தோடு போர் புரிந்தும் வெற்றி ஜெர்மானியர் பக்கமே சேர்ந்தது. முதலில் ஸ்டிராஸ் பர்க் வீழ்ந்தது. அக்டோபர் மாதத்தில் தளபதி பசைன் மெட்ஸ் கோட்டையும் ஒரு பெரும் படையையும் பறிகொடுத்தார். பாரிசு மட்டும் 1871ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் நாள் வரை தாக்குப் பிடித்தது. பின் உணவுப் பொருளும் பிறதேவையான பொருள்களும் அற்றுப்போனதால் சரண் அடைந்தது. வெர்சாயியில் பிஸ்மார்க்கும் தையர்சும் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள் மே மாதம் பிராங்பர்ட் உடன்படிக்கையாக உருவெடுத்தது. அதன்படி பிரான்சு ஜெர்மனிக்கு ஆல்சேசையும் மெட்ஸ் உள்ளிட லொரைனையும் ஜெர்மனிக்குத் தருவதோடு பெரும்போர் இழப்பீட்டுத் தொகையும் அளிக்க ஒப்புக்கொண்டது. முழுத் தொகையும் தரப்படும் வரை ஜெர்மன் படைகள் பிரான்சில் இருப்பதெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. 1866ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவுக்குக் காட்டப்பட்ட கருணையில் துளியளவுகூட ஃபிரான்சின்மீது காட்டப்படவில்லை. ஃபிரெஞ்சு மன்னர்களான இரண்டாம் ஹென்றி, 14ஆம் லூயி காலங்களில் ஜெர்மனியிடம் இருந்து பறிக்கப்பட்ட ஆல்சேசையும் லொரைனையும் திரும்ப அடைந்து, காலம் கடந்த மனத் திருப்தியை ஜெர்மனி அடைந்தது. ஃபிரெஞ்சு மக்களின் மனங்களில் ஆறாத புண்ணை ஏற்படுத்திய இந் நிபந்தனைகள் பழிவாங்கும் உணர்வை அவர்களின் நெஞ்சங்களிலே ஏற்றி, நாற்பதாண்டுக் காலத்திற்குப்பின் பழிமுடித்து நிறைவெய்தும்படி செய்தது.

**ஃபிரெஞ்சு ஃபிரஷ்யப் போரில் முக்கிய விளைவு எதுவெனில் ஜெர்மனியை ஒன்றுபடுத்தி, ஃபிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மானியப் பேரரசை அமைக்க வேண்டுமென பிஸ்மார்க் தீட்டிய**

திட்டம் நிறைவேறியதே ஆகும். வட ஜெர்மனி கூட்டிணேவோடு சேராது பிணங்கி இருந்த தென் ஜெர்மன் நாடுகள் தங்கள் வேறு பாடுகளை மறந்து பொதுப் பகைவனுக்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடி, வெற்றிக்கும் ஐக்கியத்திற்கும் வழிகோலின. போர் நடந்துகொண்டிருக்கும்போதே தென் ஜெர்மன் நாடுகளோடு பல உடன்பாடுகளை உருவாக்கி ஜெர்மன் பேரரசு தோன்றப் பாதை அமைத்தார் பிஸ்மார்க்.

பாரிசு வீழ்ச்சிக்கு 10 நாள்கள் முன்பு அதாவது ஜனவரி 18ஆம் நாள் ஃபிரஷ்யா ஹோகன்சோலர்ன் வம்சத்தினர் 'அரசர்' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டு சரியாக 120 ஆண்டு களுக்குப் பின்னர் 14ஆம் லூயி கட்டிய வெர்செல்மாளிகையில் அமைத்த கண்ணுடிக் கூடத்தில் வில்லியம் ஜெர்மன் பேரரசராக முடி சூட்டிக்கொண்டார். பல நூற்றுண்டுகளாக ஜெர்மனி சிதறுண்டும் இழிநிலையிலும் இருந்ததற்குக் காரணமான பகை நாட்டின் முக்கிய நகரிலே ஜெர்மன் சிற்றரசர்களும், தளபதி களும் சூழ்ந்திருக்க, பேடன் கோமகன் வாழ்த்துரைக்க, ஜெர்மன் பேரரசு பிறந்தது வரலாறு கண்ட சிறப்பு நிகழ்ச்சிகளுள் அரிய தொன்றுகும்.

பிறக்கும்போதே வலிமையுடைய நாடாகப் பிறந்த ஜெர்மனி ஐரோப்பிய அரசியலில் தலையாய இடத்தைத் தனக்கெனப் பிடித் துக் கொண்டது. பிஸ்மார்க் ஐரோப்பாவின் தலைசிறந்த தலைவர் எனப் புகழப்பட்டார். மூன்று போர்கள் மூலம் பிஸ்மார்க்கும் 1843ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின் மூலம் புரட்சிக்காரர்களும், சிந் தனையாளர்களும். எழுத்தாளர்களும், கவிஞர்களும், தத்துவ ஞானிகளும் சாதிக்க முயன்றவை அனைத்தும் ஓர் உருக்கொண்டது போல் ஜெர்மானியப் பேரரசு எழுந்தது.

# 10. 1871ஆம் ஆண்டிற்கும் 1914ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட ஐரோப்பா

**ஃபிரான்சின் நிலை :** செடான் போர்க்களத்தில் ஜெர்மனியிடம் ஃபிரான்சு தோற்றபின் லூயி நெப்போலியன் பேரரசு கவிழ்ந்து ஒரு தாற்காலிகக் குடியரசு நிறுவப்பட்டது. இவ்வரசே அவமானகரமான பிராங்க்பர்ட் உடன்படிக்கையை ஒப்புக் கொண்டது. உள்நாட்டிலும் கலகங்கள் தோன்றின. அரச கட்சியினர் நிரம்பிய தேசிய சபைக்கும் பாரிசு நகர மக்களுக்கும் இடையே பகைமை முற்றி ஒரு புரட்சி தோன்றியது. பாரிசு நகரம், நகரை நிர்வகிக்கவும், புரட்சியைத் தொடர்ந்து நடத்தவும் கம்யூன் (Commune) என்ற குழுவை நிறுவி முழுச் சுதந்திரம் கோரி நாடு முழுமையும் தம்மைப் பின்பற்ற வேண்டுமென வேண்டுகோள் விடுத்தது. குடியரசுத் தலைவர் தையர்சு சளைக்காது போராடிக் கடுமையான சேதத்திற்குப் பின் பாரிசைப் பணிய வைத்தார்.

கம்யூன் புரட்சியை ஒடுக்கிய பின் ஜெர்மனிக்குத் தர வேண்டிய இழப்புத் தொகையைத் தந்து முடித்து அந்நியப் படைகள் நாட்டைவிட்டு வெளியேறும்படி செய்தார். நாட்டிற்கு அரும்பணி ஆற்றிய தையர்சு பதவியை விட்டு விலகிய பின்னர் மெக்மாகன் தலைவர் ஆனார். உள்ளத்தால் அரசக் கட்சியினர் ஆன இவர் ஃபிரான்சில் முடியாட்சி மீள்வதற்கு முயன்றார். இம் முயற்சி ஈடேற ஃபிரான்சின் அரியணையேறத் தகுதியுடையவர்களின் எண்ணிக்கை தடையாக இருந்தது. போர்பான் வம்சத்து மன்னன் பத்தாம் சார்லசின் பேரன் காம்தே-த-செம்போர்டு, ஆர்லியன்சு வம்சத்து லூயி பிலிப்பின் பேரரான காம்தே-த-பாரிசு போனபார்ட் குடும்பத்தைச் சார்ந்த லூயியின் மகனான லூயி நெப்போலியன் என்ற மூவரும் ஃபிரான்சின் மணிமுடியைச் சூடத் தகுதியுடையவர்கள். மக்கட்பேறு அற்ற செம்போர்டு பிரபு அரசர் ஆவது என்றும் அவருக்குப் பின் அரியணை

பாரிசு பிரபுவுக்கு உரியது என்றும் கூறும் திட்டமொன்று வகுக்கப்பட்டது. முடியரசு தோன்றும் நேரம்கூடி வரும் வேளை யில் செம்போர்டு பிரபு புரட்சியின் சின்னமான மூவண்ணக் கொடியை ஏற்க முடியாது எனப் பிடிவாதமாகக் கூறினுர். அதற்குப் பதில் போர்பான்களின் வெள்ளைக் கொடியைத் தேசியக் கொடி ஆக்கவேண்டும் என்பதே அவர் வாதம். ஆனுல், ஃபிரெஞ்சு மக்களோ புரட்சியோடு சம்பந்தப்பட்ட எதையும் உயிரெனப் போற்றினர். முடிவாக, ஃபிரான்சு குடியரசாகவே இருப்பது எனத் தீர்மானித்தது. இவ்விதம் அரசக் கட்சியைச் சேர்ந்த தலைவர், அரசக் கட்சியினர் நிரம்பிய தேசிய சபை இவற்றோடு கூடிய மூன்ரும் குடியரசு ஃபிரான்சில் உதயமாயிற்று. புதிய அரசியல் அமைப்பின்படி குடியரசின் தலைவர் ஏழாண்டுக் காலம் பதவி வகிப்பார். பிரதிநிதிகள் சபை, செனெட் சபை என்ற இரு அங்கமுடைய சட்டமன்றம் இருந்தது. இம் மூன்ரும் குடி யரசிற்குப் பலதரப்பட்ட சோதனைகள் ஏற்பட்டன. அவற்றுள் தலையாயது தளபதி பொலான்ஷேவால் (General Boulanger) ஏற்பட்டது. போர் அமைச்சரான பொலான்ஷேயின் பேச்சாற் றலும் முற்போக்குக் கருத்துகளும், போர் வீரர்களையும், சாதாரண மக்களையும் அவரிடம் ஈடுபாடு கொள்ளச் செய்தன. அவர் ஒரு சர்வாதிகாரி ஆவாரோ என அஞ்சிய குடியரசு அவரைக் கைது செய்ய முயன்றது. பொலான்ஷே கோழையைப்போல் பெல் ஜியத்திற்கு ஓடி அங்கே தற்கொலை செய்து கொண்டார். பொலான்ஷேயின் ஆதிக்கம் பிசுபிசுத்துப் போனதோடு குடியர சின் நிலையில் உறுதிப்பட்டது.

பனுமா புரளியும் குடியரசிற்கு ஏற்பட்ட மற்ருெரு சோதனையே. பனுமாக் கால்வாயை வெட்டும் பணியில் ஈடுபட்ட ஃபிரெஞ்சுக் கம்பெனியோடு தொடர்புடைய சில அமைச்சர் களும் சட்டமன்ற உறுப்பினர்களும் இலஞ்ச ஊழல் குற்றம் சுமத்தப்பட்டனர். பலத்த கண்டனத்திற்கு ஆளான குடியரசு தன்னிலையைத் தெளிவாக்கி சிக்கலில் இருந்து வெளிப்பட்டது.

குடிரசிற்கு மிகப் பெரிய சோதனை டிரைபஸ் (Dreyfus) வழக்கின் மூலம் வந்தது. பிறப்பால் யூதரான கேப்டன் டிரைபஸ் இராணுவ இரகசியங்களை ஜெர்மனிக்கே விற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, மெய்ப்பிக்கப்பட்டு, இராணுவ நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு, தென்னமெரிக்காவிற்கு அருகில் பேய்த் தீவிற்கு ஆயுள் கைதியாக அனுப்பப்பட்டார். பின்னர் கண்ட றியப்பட்ட சில உண்மைகள், புகழ்பெற்ற எழுத்தாளர்களான எமிலிஜோலா, அனத்தோல் ஃபிரான்சு ஆகியோர் காட்டிய

ஈடுபாடு இவை காரணமாக டிரைபசு நிரபராதி என்பது புலப் பட்டது. பின் இருமுறை மறு விசாரணை நடத்தப்பட்டு டிரைபசு மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார். இவ் வழக்கைச் சாக்காக வைத்து குடியரசின் எதிரிகள் குடியரசைக் கவிழ்க்க முயன்று தோற்றனர்.

மூன்றும் குடியரசு, ஃபிரான்சிற்கு ஐரோப்பிய அரசியலில் ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களை மறக்க, தொலைதூரத் தில் குடியேற்றங்களை அமைப்பதில் தன் கவனத்தைத் திருப்பி யது. லூயி ஃபிலிப்பின் காலத்திலேயே வட ஆப்பிரிக்காவில் அல்ஜீரியா ஃபிரான்சிற்குக் கிடைத்திருந்தது. 1881ஆம் ஆண்டில் டுனிசு ஃபிரான்சு வசமிருந்தது. ஆசியாவில் இந்தோ சீனு, கம்போர்டியா போன்ற பகுதிகளும் மத்திய ஆப்பிரிக்காவில் காங்கோவும் ஃபிரான்சிற்குக் கிடைத்தன. 1904-ல் மொரோக் கோவும் ஃபிரான்சின் செல்வாக்கிற்குட்பட்டது. மேற்கு ஆப் பிரிக்காவில் சேனுகால் (Senegal), கினி, ஐவரிகோஸ்ட், நைஜிரியா ஆகிய பகுதிகளும் ஃபிரான்சின்கீழ் வந்தன. 1912-ல் ஜெர் மனியின் எதிர்ப்பையும் மீறி மொராக்கோவைத் தன் குடியேற்ற மாக மாற்றியது. இவ்விதம் 20ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பிரிட்டனுக்கு அடுத்தாற்போல் பெரிய குடியேற்றப் பேரரசை உருவாக்குவதில் ஃபிரான்சு வெற்றியடைந்தது,

ஐரோப்பாவில் நண்பர்களற்ற நிலையில் தனித்து விடப்பட்ட ஃபிரான்சு அந் நிலை மாறி, தனக்கும் நண்பர்கள் வேண்டும் என ஆசைப்பட்டது. அந்த ஆசை நிறைவேறும் சூழ்நிலை ஏற்பட்ட போது, வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொண்டது ஃபிரான்சு. இதன் விளைவாக எழுந்தது தான் முக்கூட்டு நட்பாகும். அதைப் பற்றிப் பின்பு கவனிப்போம்.

**ஜெர்மனியின் நிலை:** ஃபிரஷ்ய மன்னர் முதலாம் வில்லியம் கெய்ஸர் என்ற பட்டத்தோடு ஐக்கியமுற்ற ஜெர்மனியின் முதல் பேரரசர் ஆனுர். ஜெர்மானியப் பேரரசு ஃபிரஷ்யா, பவேரியா, சாக்சனி, உர்ட்டம்பர்க் என்ற நான்கு முடியரசுகளையும், ஏழு சிற்றரசுகளையும், பதினேறு கோமகன் ஆட்சிப் பகுதிகளையும் (Duchies), பிரம்மன், ஆம்பர்க், லூபேக் என்ற மூன்று நகரங் களையும் கொண்டு இருந்ததோடு ரையின்லாந்து என வழங்கப் பட்ட ஆல்சேஸ், லொரையின் ஆகிய பகுதிகளையும் பெற்றிருந் தது. முதலில் கூறப்பட்ட 25 அரசுகளும் உள்நாட்டு விவ காரத்தில் சுயாட்சி பெற்றிருந்தன. அவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட பூந்தெஸ்ராத்து (Bundesrat) என்னும் ஜெர்மன் மேல் சபையும் வயது வந்த ஆடவர் அனைவராலும் தேர்ந்து எடுக்கப்

பட்ட ரீஸ்டாக் (Reistag) என்னும் ஜெர்மன் கீழ் சபையும் பேரரசுக்கு ஆலோசனை தந்தும், சட்டமியற்றியும் நிர்வாகத்தில் உதவி புரிந்தன. ஆனால் உண்மையான அதிகாரம் பேரரசரிடமும் சான்சலரான பிஸ்மார்க்கிடமும் இருந்தது.

ஐக்கிய ஜெர்மனியின் தந்தையான பிஸ்மார்க் ஜெர்மானிய ஐக்கியம் நிறைவுறும்வரை போர்வழியையும், வன்முறையையும் கையாண்டார். ஆனால், அதற்குப் பின் அவரது கொள்கையில் பெருத்த மாற்றம் தோன்றியது. ஜெர்மனி அமைதியாகவும் விரைந்தும் முன்னேறவேண்டும் என விரும்பினார் அவர். தோல்வியாலும் இழப்பாலும் அதிர்ச்சி அடைந்திருந்த ஃபிரான்சு, நிலையான கொள்கையற்ற ரஷ்யா, ஜெர்மனியிடம் தான் அடைந்த அவமானத்தை மறக்கமுடியாத ஆஸ்திரியா, ஆகிய நாடுகள் சூழ இருப்பதை மனதிற்கொண்டு சமாதானத்தையும் வெல்திறத்தையும் அடிப்படையாகக் கொண்ட அயல்நாட்டுக் கொள்கையை அவர் வகுத்தார். ஃபிரான்சை அனாதையாக்குதல், ஜெர்மனியின் வலிமையை உயர்த்தி அதன் செல்வாக்கை விரிவுபடுத்துதல் இவையே பிஸ்மார்க்கின் புதிய கொள்கையின் சிறப்புக் கூறுகள். ஜெர்மனி குடியேற்றங்களை அடையவேண்டுமென்றோ அல்லது கிழக்கில் விரிவடைய வேண்டுமென்றோ அவர் துளியும் விரும்பவில்லை. மேலும் ஃபிரான்சின் பழிவாங்கும் உணர்வைத் திசைமாற்றி விடவும் அவர் திட்டமிட்டார். வட ஆப்பிரிக்காவை யார் பெறுவது என்ற போட்டி எழுந்தபோது அதில் ஆர்வம் கொள்ளும்படி ஃபிரான்சை மறைமுகமாகத் தூண்டிவிட்டார் பிஸ்மார்க். இதில் ஃபிரான்சு வெற்றி அடைந்தால் இத்தாலி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் பகைமை அந்நாட்டிற்குக் கிடைக்கும். அதனாலும் தன் கொள்கை நிறைவுறும் என அவர் கருதினார்.

*1881* முதல் *1890* வரை ஜெர்மனியின் சான்சலராகப் பணியாற்றிய பிஸ்மார்க் உள்நாட்டில் பல உன்னதச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். *1873*ஆம் ஆண்டு மார்க்கு (Mark) என்ற புதிய அனைத்து ஜெர்மானிய நாணயம் நடைமுறைக்கு வந்தது. அதே போன்று நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான சிவில், கிரிமனல் சட்டங்களும், நீதி மன்றங்களும் அமைக்கப்பட்டன.

பிராட்டஸ்டென்ட் ஃபிரஷ்யா, ஐக்கிய ஜெர்மனியின் தலைமையை ஏற்றதைக் கத்தோலிக்கர் விரும்பாமல் அதிருப்தி உணர்வைப் பரப்பினர். பேரரசின் சட்டமன்றத்தில் கத்தோலிக்கக் கட்சியினர் பெரும்பான்மையாக இருந்ததால் அவர்களை முழு

மையாகப் பகைத்துக் கொள்ள பிஸ்மார்க் விரும்பவில்லை. ஆனாலும் போராட்டம் தொடர்ந்தது. இதனை பிஸ்மார்க் நாகரிகத்தைக் காக்க நடத்தும் போராட்டம் அல்லது குல்டுர்காம்ப் (Kulturkamph) என வர்ணித்தார். ஆனால், இதைவிடத் தீமை நிறைந்தது என அவர் கருதிய சோஷலிசத்திற்கு எதிராக ஒரு போராட்டத்தைத் துவக்குகையில் அவர் கத்தோலிக்கர்களோடு ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டார்.

பொருளாதாரத் துறையில் ஜெர்மனி கிடுகிடு என முன்னேறியது. கிராமப் பொருளாதாரம் மறைந்து பெருந் தொழிலை அடிப்படையாகக் கொண்ட நகரப் பொருளாதாரம் தோன்றியது. இரசாயன மின்தொழில் துறைகளில் ஜெர்மனி முன்னணியில் நின்றது. லொரைன் இரும்புக் கனிமமும் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டது. கப்பல் வாணிகத் துறையிலும் ஜெர்மனி முதலிடம் வகித்தது. தொழிற்சாலைகளிலும், நகரங்களிலும், தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மிக மோசமடைந்தது. தொழிற் புரட்சியால் வளமடைந்த எல்லா நாடுகளிலும் தோன்றிய புரட்சி இது. ஆனால், இதைத் தீர்க்க முதலில் முயற்சி எடுத்த நாடு ஜெர்மனியே. பிஸ்மார்க் தொழிலாளர்களுக்கான கட்டாய ஆயுள் பாதுகாப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தினார். சோஷலிஸ்டுகளைத் தம் எதிரிகளாகக் கருதிய பிஸ்மார்க் அரசரின் உயிரைப் பறிக்க மேற்கொள்ளப்பட்ட இரு முயற்சிகளைக் காரணங்களாகக் காட்டி அவர்களை அடக்கக் கடுமையான சட்டங்களை இயற்றினார். சோஷலிஸ்டுகளின் செல்வாக்கு அழிந்தது. சர்வாதிகாரத்திற்குத் தலைவணங்கத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டது ஜெர்மனி.

தொழில்வளம் மிகுந்ததால் குடியேற்ற நாடுகள் ஜெர்மனிக்குத் தேவை என்ற கூக்குரல் எழுந்தது. பேரரசரைத் தன் பிடிக்குள் வைத்திருந்த பிஸ்மார்க் இதற்குச் செவிசாய்க்கவில்லை. ஆனால், 1888-ல் பேரரசர் முதலாம் வில்லியம் இறந்தபின் நிலைமை மாறியது. அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்த அவர் மகன் பிரடெரிக் ஒரு நற்பண்பினர். மூன்று மாத காலமே ஆட்சி செலுத்திய பிரடெரிக் புற்று நோயால் இறந்தார். அவர் மகனான இரண்டாம் வில்லியம் அடுத்துப் பதவி ஏற்றார். புதிய கெய்சர் ஆதிக்க வெறியும், செயல்திறமும், பிடிவாத குணமும் நிரம்பப் பெற்ற இளைஞர், பிரிட்டனை விடப் பெரிய உலக வல்லரசாக ஜெர்மனி வளரவேண்டும் எனக் கனவு கண்ட வில்லியமும் பிஸ்மார்க்கும் கொள்கை அளவில் இரு துருவங்களாக இருந்தனர். தொடர்ந்து இணைந்து செயலாற்ற முடியாமல் 1890 ஆம் ஆண்டு பிஸ்மார்க் பதவியில் இருந்து விலகினார். ஜெர்மனி

என்ற கப்பலைப் பல நெருக்கடிகளிடையிலும் உள்ளம் கலங்காது செலுத்தி வந்த கப்பல் தலைவர் இறுதியில் கப்பலில் இருந்தே வெளியேற்றப்பட்டார். இவ்விதம் ஜெர்மனியின் எதிர்காலத்தை மட்டுமன்றி ஐரோப்பாவின் தலைவிதியையும் நிர்ணயிக்கும் சக்தியாக விளங்கிய பிஸ்மார்க்கின் வீழ்ச்சிக்குப்பின் அவரது கொள்கைகளுக்கும் சமாதி கட்டப்பட்டது. வெகுவிரைவாக முன்னேற்றத்தை நோக்கியும் உலகப் போரை நோக்கியும் ஜெர்மனி நடக்க ஆரம்பித்தது.

## (அ) இத்தாலிய நாட்டின் பிரச்சினைகள்

தேசிய ஐக்கியத்திற்குப்பின் இத்தாலிய வரலாற்றில் எத்துறையிலும் வீழ்ச்சியையே சந்திக்கிறோம். உணர்ச்சிகள் வடிந்த நிலையில் இத்தாலி ஐக்கியமுற்றிருப்பினும் உண்மையில் ஏமாற்றத்திலும் அதிருப்தியிலும் அழுந்தி, வறுமை, சிக்கல்கள், ஒழுங்கின்மை ஆகியவற்றின் நிலைக் களனாய்ப் பொலிவு குன்றி நின்றது. சுதந்திர தேவியின் அருட்பார்வைபட்டும் ஒளிபெறாது பிரச்சினைகள் என்னும் இருளில் மூழ்கியிருந்தது இத்தாலி. வெளித் தோற்றத்திற்கு ஐக்கியமடைந்த நாடாகத் தோன்றினாலும் அவ்வொற்றுமை உணர்வு மக்களின் உள்ளங்களில் எதிரொலிக்கவில்லை. ஏனெனில், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பங்குபெறாமல் வெகு குறைந்த அளவு மக்களின் முயற்சியால் ஐக்கியம் என்னும் இலட்சியம் கைகூடிவிட்டது. ஆண்டாண்டு காலமாகப் பிரிந்து வாழ்ந்தே பழக்கப்பட்டுவிட்ட பல்வேறு வகையான மக்களைக் கொண்டிருந்த இத்தாலி வெகு சீக்கிரத்தில் ஐக்கியமடைந்துவிட்டது. பியட்மாண்டில் ஒளி வீசிய சுதந்திரம் என்ற தீபத்தை இத்தாலிய மக்கள் போராடிப் பெறாமல், பரிசாகவே அடைந்துவிட்டனர். அந்நிய ஆட்சியினின்றும் விடுபடுவதற்கும் நாட்டின் ஐக்கியத்தை உருவாக்குவதற்கும் இடைவிடாது போராடிய ஒரு சில உயர்பண்பினரால் போற்றிப் புகழப்பட்ட தேசிய உணர்வு அந்த அளவிற்கு சாமானிய மக்களின் இதயங்களை ஆட்கொள்ளவில்லை என்று இத்தாலியைப் பற்றித் தமது நூலில் லூகி ஸ்டர்ஜோ என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். இத்தாலியின் தலையாய தேசியப் பிரச்சினை எதுவெனில் புறத்தே ஏற்பட்ட அரசியல் ஒற்றுமையை இத்தாலியரது உள்ளங்களில் ஏற்படச் செய்வதாகும்.

புதிய இத்தாலியை எதிர்நோக்கிய உள்நாட்டுப் பிரச்சினைகள் எண்ணிறந்தன. இத்தாலியின் திசையெங்கும் குறுகிய பிரதேச மனப்பான்மை தலைவிரித்தாடியது. அரசியல் அமைப்புக்குட்பட்ட ஆட்சியையும் ஒழுங்கான நிர்வாகத்தையும் சிறிது காலம் நுகர்ந்த

பியட்மாண்ட் முதல் முடியாட்சியின் கொடுமைகளனைத்தையும் அனுபவித்த சிசிலி, நேப்பிள்ஸ் வரை பல்வேறு அரசியல் நிலைகளைக் கண்ட நாடுகள் ஐக்கிய இத்தாலியில் அடங்கியிருந்தன. நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான அமைப்பினை ஏற்படுத்த அரசு முயன்றபோது அதற்கு எதிர்ப்புத் தோன்றியது. இருப்பினும் நிர்வாக, நீதித் துறைகள் ஒழுங்கு படுத்தப்பட்டன. ஃபிரான்சைப் பின்பற்றி உள்ளாட்சித் துறை திருத்தியமைக்கப்பட்டது. புகைவண்டிப் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்பட்டது. கட்டாய இராணுவப் பயிற்சி முறை அமுலாக்கப்பட்டது. சிசிலியில் இயங்கிய மாஃபியா போன்ற இரகசிய இயக்கங்கள் வேரறுக்கப்பட்டன. ஒரு கட்டாயக் கல்விச் சட்டத்தை உருவாக்கியதன் மூலம் அறியாமையில் ஆழ்ந்திருந்த மக்களைக் கரையேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இம் முயற்சி எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை.

நாட்டின் நிதி நிலைமையும், மக்களின் ஏழ்மை நிலையும் இத்தாலிய அரசாங்கத்தின் பிற சாபக்கேடுகளாகும். நிர்வாகச் சீர்கேடுகளும், ஊழலும் மேல்மட்டத்தில் மலிந்து கிடந்தன. தேசியக் கடன் சுமை தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்திருந்தது. நாட்டின் படைப் பெருக்கம், நிதி நிலை மேலும் சீரழியக் காரணமாயிற்று. இத்தாலியின் தெற்குப் பகுதியில் நிலவிய பஞ்ச நிலைமை வேறு அரசின் முன்னேற்றத் திட்டங்களைத் தடுத்து நிறுத்தியது. வரிப்பளு சமுதாயத்தின் கீழ்ப்பட்ட மக்களைப் பெரிதும் பாதித்தது. பொதுவாகக் கூறுமிடத்து நிதிப் பற்றாக்குறையும், வறுமையும் அரசை முன்னேற்றப் பாதையில் செல்ல விடாது தடுக்கும் தடைக் கற்களாக விளங்கின.

அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஐக்கிய அரசால் ஏற்படுத்திக் காட்ட இயலவில்லை. அரசியலில் ஒரு சிலரிடம் அதிகாரம் குவிந்து பொதுமக்கள் பலரிடையே மறைந்து கிடந்த திறமை கண்டுபிடிப்பாரற்று, பயனற்று ஒழிந்தது. கத்தோலிக்கச் சமயத்தினர் புறக்கணிக்கப்பட்டதால் அவர்களது வெறுப்பிற்கு அரசு இலக்காயிற்று. பொருளாதார ரீதியில் நோக்கும்பொழுது விவசாயத்தை நம்பியிருந்த தென்பகுதி பின்தங்கியிருந்தது. தொழில் துறையில் முன்னேறி இருந்த வடபகுதியில் தொழிலாளர் கிளர்ச்சிகள் அடிக்கடி மூண்டு முன்னேற்ற வேகத்தைக் கட்டுப்படுத்தின. மக்கள் தொகைப் பெருக்கம் நாட்டின் பொருளாதாரம் மேலும் சீர் கெட வழிவகுத்தது. 1893ஆம் ஆண்டில் சிசிலியிலும், 1898ஆம் ஆண்டில் மிலானிலும், தொழிலாளர்கள் பெரிய அளவில் புரட்சி செய்தனர். அரசு கடுமை

யான நடவடிக்கை எடுத்துப் புரட்சியை ஒடுக்கியது. தீவிரமான சட்டங்களை நிறைவேற்றியதன் மூலம் மக்களின் அதிருப்தியையும் சம்பாதித்துக்கொண்டது. இதன் காரணமாகவே 1900ஆம் ஆண்டில் இத்தாலிய அரசர் ஹேம்பர்ட் படுகொலை செய்யப்பட்டார்.

அவருக்குப்பின் பதவியேற்ற மூன்றும் விக்டர் இம்மானுவேல் இளைஞர். மக்களாட்சியில் நம்பிக்கை உள்ளவர். இவர் காலத்தில் நாட்டின் நிலை மெல்ல சீர்படத் தொடங்கியது. அந்நிய முதலீட்டால் நாட்டில் தொழில்வளம் சிறக்க ஆரம்பித்தது. தொழிலாளர் மனதைக் குளிர்விக்கவும், கல்வி அறிவின்மையை அகற்றவும், சட்டங்கள் இயற்றப்பட்டன. 1905ஆம் ஆண்டில் முதன்முறையாக உபரி பட்ஜெட் தீட்டப்பட்டது. 1912ஆம் ஆண்டில் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. இவற்றினூடே பிற மேலை நாடுகளைப் போன்றே இத்தாலியிலும் சோஷலிசக் கட்சி ஒன்று தோன்றி மக்களிடையே செல்வாக்குப் பெற்றது.

ஐக்கிய இத்தாலியின் உதயத்தோடு தோன்றிய மற்றுமொரு பிரச்சினை கத்தோலிக்க சமயத்தையும், போப்பாண்டவரையும் பற்றியதாகும். ஐக்கிய இத்தாலியின் அங்கங்களாக ரோமாபுரியைத்தவிர, போப் ஆண்டவருக்குச் சொந்தமான பிறநாடுகள் இணைத்துக் கொள்ளப்பட்டாலும் 1871ஆம் ஆண்டின் இத்தாலிய நாடாளுமன்றம் இயற்றிய 'உத்திரவாதச் சட்டத்தின்படி (Law of Quarantees) போப் ஆண்டவருக்குப் பல சிறப்பான சலுகைகள் வழங்கப்பட்டன. கவூரின் இலட்சியமான 'ஒரு சுதந்திர நாட்டில் சுதந்திரமான மத நிறுவனம்' என்ற கொள்கையின் அடிப்படையில் போப் ஆண்டவர் அரசருக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பெற்றூர். அப்போதைய போப் ஆண்டவரான ஒன்பதாம் பயஸ் இவற்றை வரவேற்கவில்லை. தன்னை வாட்டிகன் அரண்மனையில் அடைத்துக்கொண்ட போப் ஆண்டவர் தம்மை இந்த அவலநிலைக்கு ஆளாக்கிய இத்தாலிய அரசோடு ஒத்துழைக்க வேண்டாமென இத்தாலியக் கத்தோலிக்கர்களுக்கு அறைகூவல் விடுத்தார். 'உங்கள் அடாத செயலின் விளைவுகளை நீங்கள் அதிக காலம் அனுபவிக்கமாட்டீர்கள்', என்று கூறி அரசைச் சபித்தார். அவருக்குப்பின் பதவியேற்ற பதின்மூன்றும் லியோ ஒரு ராஜதந்திரி எனினும் முந்தைய போப் ஆண்டவரின் கொள்கையை அப்படியே பின்பற்றினுர். சேஷாலிச அபாயம் வளர்ந்ததால் அரசிற்கும். கத்தோலிக்கருக்கும் இடையே சமாதான நல்லெண்ணப் பேச்சு வார்த்தைகள்

நடந்தன. பத்தாம் பயஸின் காலத்தில் அரசருக்கும், கத்தோலிக்கருக்குமிடையே நேசம் மலர்ந்தது. ஒத்துழைப்புக் காலம் தொடங்கியது.

அயல் நாட்டுக் கொள்கையைப் பொறுத்த அளவில் இத்தாலியின் பிரச்சினைகள் மூன்றாகும். முதலாவதாக அநீதி இழைக்கப்பட்ட போப்பாண்டவருக்குச் சாதகமாக ஃபிரான்சோ, அல்லது ஆஸ்திரியாவோ தலையிட்டால் அதனைச் சமாளிப்பது எப்படி என்பது பிரச்சினை. இரண்டாவதாக ஆஸ்திரியாவின் வசம் சிக்கியிருந்த இத்தாலியப் பகுதிகளான டிரெண்டினு, டிரிஸ்டி முதலானவற்றை எப்படிப் பெறுவதென்பதாகும். இப் பகுதிகளை மீட்பதற்காக இத்தாலியில் ஒரு இயக்கம் தோன்றி வலுவான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தது. கிளர்ச்சிக்காரர்கள் டால்மேஷியாவையும், அல்பேனியாவையும் கூட இத்தாலியுடன் இணைக்கவேண்டுமெனக் கோரினர். இறுதியாக, புதிய அரசு குடியேற்றங்களைப் பெற்று பேரரசாக விளங்கி மத்திய தரைக்கடலை ஒரு இத்தாலிய ஏரியாக மாற்றி பண்டைப் பெருமையை நிலைநாட்ட வேண்டுமென ஒரு இலட்சியக் கனவு கண்டது. அக் கனவை நனவாக்க ஐரோப்பிய நாடுகளோடு மோத வேண்டிய நிலை இருந்தது. ஃபிரான்சின் பக்கம் சாய்வதா, ஆஸ்திரியாவோடு இழைவதா எனச் சிறிதுகாலம் தடுமாறியது, புதிய அரசு. இடையில் முனிசையும், (1876ஆம் ஆண்டில்) திரிபோலியையும் (1878ஆம் ஆண்டில்) கைப்பற்றிக் கொள்ளுமாறு பிரிட்டன் கூறியதை அச்ச உணர்வின் காரணமாக ஏற்கவில்லை. 1881ஆம் ஆண்டில் ஃபிரான்ஸ் டூனிஸைத் தன் வசமாக்கிக்கொண்டது இத்தாலியின் ஆத்திரத்தைக் கிளறியது. உடனே ஆஸ்திரியா, ஜெர்மனி இணைப்பில் தன்னையும் ஐக்கியப் படுத்திக்கொண்டது இத்தாலி. 1882ஆம் ஆண்டில் முக்கூட்டு உடன்பாடு (Triple Alliance) ஏற்பட்டது. ரோமாபுரி விவகாரத்தைக் கிளறுவதில்லையென பிஸ்மார்க் வாக்குறுதி அளித்தார். நாள் செல்லச் செல்ல இக் கூட்டுறவால் தனக்கு லாபமேதுமில்லை என உணர்ந்த இத்தாலி, மனம் வருந்தி இங்கிலாந்தை நோக்கித் தன் நேசக் கரத்தை மெல்ல நீட்டியது.

காலனிகளைப் பெறவேண்டும் என்ற ஆவல் இத்தாலியை செங்கடலிலும், சோமாலி நாட்டிலும் தனது இழப்பை ஈடுசெய்து கொள்ளுமாறு தூண்டியது. உள்நாட்டுச் சுல்தான்களுடன் சில ஒப்பந்தங்கள் செய்து கொண்டதன் பேரில் சோமாலி நாடு இத்தாலி வசம் ஆனது. எரித்ரியாவில் நுழைவதற்காக மஸோவாவில் நுழைந்த இத்தாலியப் படை அபிசீனியாவுடன் போரிட நேர்ந்தது. சில வெற்றிகளுக்குப் பின்னர் 1896ஆம் ஆண்டில்

அடோவா என்னுமிடத்தில் இத்தாலியப்படை படுதோல்வி யடைந்தது. இத் தோல்வியினுல் காலனி பெறும் எண்ணத்திற்குச் சூத்திரதாரியான கிரிஸ்டி பதவிநீக்கம் செய்யப்பட்டார். சில நாள்களுக்கு இத்தாலியில் பேரரசு ஆகவேண்டும் என்ற எண்ணம் ஒழிந்தது. ஆயினும் புதிய நூற்ருண்டு தொடங்கியவுடன், ஃபிரான்சின் மொரோக்கோத் தலையீட்டாலும், மத்தியதரைக் கடலில் ஜெர்மனியின் முன்னேற்றத்தாலும், உந்தப்பட்டு இத் தாலியின் ஆப்பிரிக்கநாட்டின்பால் கொண்ட ஆதிக்க ஆசை உயிர்ப்பெற்றது. 'இளம் துருக்கியர்' சங்கத்தினரது ஆதர வைப்பெற்று 1911-ல் இத்தாலி துருக்கிமீது போர் தொடுத்தது. திரிபோலி, சிரிளேசியா ஆகிய இடங்களைக் கைப்பற்றி இத் தாலியக் காலனியான லிபியாவுடன் இணைத்துக்கொண்டது.

முக்கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டிருந்தபடியால், ஆஸ்திரியாவைச் சேர்ந்த இத்தாலிய மொழி பேசும் மக்களுக்கென ஒரு வழி காணமுடியாது தவித்தது இத்தாலி. ஃபிரான்சுக்கும், இத்தாலிக்கும் இடையே ஏற்பட்ட சமரசத்திலுைம், பால்கன் தீபகற்பத்தில் ஆஸ்திரியா, ஜெர்மனியின் முற்போக்குக் கொள்கை யினுலும், இத்தாலிக்கும், முக்கூட்டு ஒப்பந்த மற்றநாடுகட்கு மிடையே பிளவு விரிவடைந்துகொண்டே சென்றது. எனவே, முதல் உலகப் போர் மூண்டவுடன், உள்நாட்டுக் குழப்பத்தில் மூழ்கிக்கிடந்த இத்தாலி தன்னை ஒரு நடுநிலை நாடு என்று கூறிக் கொண்டது. இருப்பினும் ஆஸ்திரியாவிடமிருந்து தனக்குச் சொந்தமான சில பகுதிகளைப் பெற இதுவே தகுதியான தருணம் என்பதை இத்தாலி உணரத் தவறவில்லை. சில பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர் 1915ஆம் ஆண்டு இத்தாலி இலண்டன் உடன்படிக்கையின்படி நேசநாடுகளுடன் சேர்ந்து கொண்டது. இதன்படி நேசநாடுகள் வெற்றிபெறும் பட்சத்தில் டால்மேஷியாவின் ஒரு பகுதி, டிரென்டினே ஆகிய பகுதிகள் இத்தாலிக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இறுதியாக இத்தாலியின் வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றிக் கூறுங்கால் ஹாஜி ஸ்டெர்ஜோவின் கணிப்பு பொருந்தக் தக்கது. 'ஐரோப்பிய அரசியல் சதுரங்கத்தில் இத்தாலி சில சமயம் ஒரு வல்லரசுக்கும், மற்ற சமயம் வேறு வல்லரசுக்கும் உதவியாகப் பயன்படும் ஒரு காயாகக் காட்சி அளித்தது. மேலெ ழுந்தவாரியாகக் கண்ணுற்ற பொழுது, இதன் மூலம் அவளுக்குப் பயன்கிடைக்கும் போல் தோன்றினுலும், உண்மையில் ஏமாற்ற மும், தொல்லையுமே அவளுக்கு மிஞ்சின. சீரற்ற, தொடர் பின்றி இருந்த அயல் நாட்டுக் கொள்கையும், அவள் நிலைமை

யிலிருந்து சில அரிய கடினங்களுமே இதற்குக் காரணங்களாகும். இந்த அரசியல் சூதாட்டத்தில் இத்தாலியின் மந்திரிகள் கையி லிருந்து அதைக் காக்க அவர்கள் அரும்பாடு பட்டனரோ, அதே சீட்டுகள் கீழே விழுந்தன. இவ்வாறாக, இத்தாலி எந்த நாட்டிட மிருந்தும் எதையும் பெறவுமில்லை, கொடுக்கவுமில்லை.'

## (ஆ) ஆஸ்திரியா–ஹங்கேரி–இரட்டை முடியாட்சியும் அதன் பிரச்சினைகளும்

ஜெர்மானிய ஐக்கியத்திற்காக பிஸ்மார்க் திட்டமிட்டு நடத் திய போர்களில் ஆஸ்திரிய ஃபிரஷ்யப் போரும் ஒன்றாகும். இப் போரில் தோல்வியைச் சந்தித்த ஆஸ்திரியாவை உள்நாட்டு நெருக்கடிகள் எதிர்நோக்கி இருந்தன. ஹாப்ஸ்பர்க் பேரரசின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டிருந்த ஹங்கேரியில் வாழ்ந்த பெரும்பான்மையான மாகியார் இனத்தவர்கள் தம் தனித் தன்மையைப் பறி கொடுத்து, பேரரசோடு ஒன்றுபட ஒருபோதும் விரும்பியதில்லை. 1849ஆம் ஆண்டில் கொஸ்ஸீத்தின் தலைமை யில் போராடித் தோல்வியுற்ற போதும் அவர்கள் மனம் தளர வில்லை. இந்த ஏழுவாரப் போரில் தன் மன வேறுபாட்டினை மறந்து அரசோடு அவர்கள் ஒத்துழைத்ததற்குக் காரணம் போருக்குப் பிறகாவது தங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தான். போரில் பேரரசு பெற்ற தோல்வி ஹங் கேரியனுக்குத் துணிவே தந்தது. ஆஸ்திரியாவிடம் பகைமை பாராட்டுவதைவிட நட்புடன் பங்குதாரர்களாக இருப்பதில் நன்மை அதிகம் என்பதை ஹங்கேரிய மக்களின் தலைவரான ஃபிரான்ஸிஸ்டீக் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். சோதனை களை இனித் தாங்க முடியாது என்ற நிலைக்கு வந்து விட்ட ஆஸ் திரியாவும் பேரரசைத் திருத்தியமைக்கும் பணியினை மேற் கொள்ள விழைந்தது.

இத்தகு சூழ்நிலையில் தான் பேரரசு இரட்டை முடியாட்சி யாக மறுவடிவம் பெற்றது. ஆஸ்திரிய அரசோடு ஹங்கேரியும் அரசு அந்தஸ்தைப் பெறும். ஆஸ்திரியப் பேரரசில் ஆஸ்திரியா, பொஹிமியா, கலீஷியா, கார்னியோலா, டைரோல் பகுதிகள் அடங்கும். ஹங்கேரி அரசில் ஹங்கேரி, குரோஷியா, பானுட், டிரான்ஸில் வேனியா பகுதிகள் அடங்கும். இவ்விரு அரசு களும் தனித்தனி அரசியலமைப்பையும், நடாளுமன்றத்தை யும், கொண்டிருக்கும். பல விஷயங்களில் இவை சுதந்திரமாக இயங்கினாலும் ஒரே அரசரைப் பெற்றிருக்கும். 'ஆஸ்திரியப் பேரரசரும், ஹங்கேரி அரசருமான' என்ற பட்டத்தை அவர்

தாங்குவார். அரசரைப் போன்றே இவ்விரு அரசுகளுக்கும் படை, அயல் நாட்டு உறவு, சில அமைச்சர் பதவிகள் பொதுவாக இருக்கும். இவ்வுடன்பாட்டுக்கு இரு தரப்பினரும் ஒப்பினர். 1867-ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ்வொப்பந்தம் (Ausgleich) 51 ஆண்டுகள் நிலவப் போகும் இரட்டை முடியாட்சியை ஹாப்ஸ்பர்க் பேரரசில் ஏற்படுத்தியது.

இவ்வுடன்பாட்டின் மாபெரும் குறைபாடான ஸ்லாவ் இனமக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டதை எடுத்துக் கூறலாம். ஆஸ்திரியா—ஹங்கேரியில் வாழ்ந்த போலிஷ் மக்கள், குரோஷியர்கள், செக்குகள் (Czechs), செர்பியர்கள் ஆகிய ஸ்லாவ் இனத்தவர்கள் தங்கள் உரிமைகளைக் கோரித் தனித்தோ அல்லது ரஷ்ய உதவியைப் பெற்றோ விடாதுபோராடிக் கொண்டிருந்தனர்.

இத்தாலியிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும் விரட்டப்பட்ட ஆஸ்திரியா தன் உள்நாட்டு நிலையைச் சீர்திருத்திக் கொண்ட பின் பால்கன் பகுதியில் தன் செல்வாக்கினை நிலை நாட்டுவதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கலாயிற்று. இரட்டை முடியாட்சி தோன்றிய காலத்திலிருந்து முதல் உலகப்போர் மூண்ட நாள்வரை பேரரசராக விளங்கியவர் பிரான்சிஸ் ஜோஸப் ஆவர். புகழ் வாய்ந்த ஹோப்ஸ்பர்க் குலப்பெருமையைக் காப்பதில் இவர் நாட்டம் உடையவர். நாடாளுமன்றம் இருந்தபோதிலும் சட்டத்தை ரத்து செய்யும் அதிகாரம் போன்ற சிறப்பு அதிகாரங்கள் பேரரசருக்கு இருந்தன. அவற்றைப் பேரரசர் தாராளமாகப் பயன்படுத்தினர். இதனை நாடாளுமன்றம் விரும்பவில்லை. படை, நிதி, அயல்நாட்டு உறவு போன்ற பொதுவான துறைகளில் இரு நாடாளுமன்றத்திற்கிடையே ஒத்துழைப்பிற்குப்பதில் மோதலுக்குரிய சாத்தியக் கூறுகளே அதிகமாக இருந்தன. இரு மன்றங்களையும் சேர்ந்த 120 உறுப்பினர்கள் வியன்னாவிலும், புடாபெஸ்ட்டிலும் மாறிமாறிக்கூடித் தனித்தனி அரங்கத்தில் அமர்ந்து விவாதித்து கடிதப் போக்குவரத்தின் மூலம் முடிவுகளை எய்தினர். முடிவுகள் ஒத்துப் போகாத போதுதான் வாக்களிக்கமட்டும் ஒன்றாகக் கூடினர். இம் முறை நடைமுறைக்கு ஒவ்வாததோடு தீர்க்க வேண்டிய சிக்கல்களில் மேலும் முடிச்சுகளைக் கூட்டியது.

ஆஸ்திரியாவில் தொழில்துறை முன்னேற்றம் ஏற்பட்டு நகரத் தொழிலாளி வர்க்கம் பெருகிக்கொண்டிருந்த வேளையில் ஹங்கேரி விவசாயத்தைப் பின்பற்றித் தன் பழைய நிலமானிய இயல்பினின்று மாறாமல் இருந்தது. இந் நிலை புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. இரட்டை அரசின் படைகள் பற்றியும்

பிரச்சினை தோன்றியது. படையின் உயர் பதவிகள் ஹங்கேரியர் கட்கு அளிக்கப்படவேண்டுமென்றும், ஆணைகள் மோகியார் மொழியில் பிறப்பிக்கப்படவேண்டுமென்றும் ஹங்கேரி விரும்பியது. வியாபார உடன்பாடுகள் பற்றிய பிணக்குகளும் தோன்றின.

1870ஆம் ஆண்டில் நாட்டில் நீண்ட காலமாக நிலவி வந்த கத்தோலிக்க மரபினை எதிர்த்து ஒரு உரிமைவாதக் கட்சி (Liberal Party) செல்வாக்கினைப் பெற்றது. இது ஒரு பத்தாண்டுக் காலமே நீடித்தது. விரைவில் கார்ல் லூகர் என்ற சட்ட நிபுணரின் தலைமையில் கத்தோலிக்கக் கட்சி வலிமை பெற்றது. சமூகத்தின் அடிமட்ட மக்களினிடையே பிரபலம் அடைந்த இக் கட்சி பல சாதனைகளைப் புரிந்தது. நாட்டில் தொழிலாளர் இயக்கம் சட்டபூர்வமாக்கப்பட்டது. தொழிற்சாலை விதிகள் திருத்தியமைக்கப்பட்டன. வியன்னு நகரும் புதுப் பொலிவு பெற்றுத் திகழ்ந்தது. இவ்வளவிற்கும் காரணமான கார்ல் லூகர் யூதர்களையும் அவர்களுடைய முதலாளித்துவ நோக்கங்களையும் கடுமையாகச் சாடி நாட்டு மக்களிடையே அவர்கள்மீதான வெறுப்பை வளர்த்தார். இந்தச் சூழலில்தான் பின்னளில் ஹிட்லர் வளர்ந்தார்.

ஆஸ்திரிய அரசு தன்னுட்டிலிருந்த சிறுபான்மை மக்களுக்கு சில உரிமைகளை வழங்க முன்வந்தது (1890). பிராக்கிலிருந்த பல்கலைக்கழகம் செக் மக்களின் நன்மைக்காக இரண்டாகப் பிரிக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது. சிறிது உரிமைகள் வழங்கப்பட்டவுடன் சிறுபான்மையினர் முழு உரிமை கோரி ஆவேசமாகப் போராடினர். அவர்களை அடக்குவதன் மூலம்தான் நாடு சிதைவுறுவதைத் தடுக்கமுடிந்தது.

1907ஆம் ஆண்டில் வயது வந்த ஆண்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் கட்சி வாரியாக அன்றி இனவாரியாக அங்கத்தினர்கள் இடம் பெற்றனர். ஆஸ்திரிய, ஜெர்மன் இனத்தவருக்கு எதிராக சிறுபான்மை இனத்தவர்கள் அணி திரண்டனர். பேரரசர் சூழ்நிலையின் தீவிரத்தை உணரவில்லை. ஹங்கேரியிலும் சிறுபான்மை இனத்தவர் பிரச்சினை இருந்தது. ஆனல், அரசின் சர்வாதிகாரக் கொள்கை சிறுபான்மையினரின் கரங்களைக் கட்டிவைத்திருந்தது. இருபது மில்லியன் மக்களைக்கொண்ட ஹங்கேரியில் ஒரு மில்லியன் மக்களே, அதிலும் பெரும்பான்மையினர் மாகியார் இனத்தவரே வாக்குரிமை பெற்றிருந்தனர். இருப்பினும், ஹங்கேரி

யிலும் சிறுபான்மையினரின் தேசிய உணர்ச்சி குமுறிக் கொண்டிருந்தது. இப் பதட்டநிலையில் பேரரசர் ஆட்சி செலுத்தி வந்தார். பட்டத்து இளவரசர் ருடால்ஃப் அகாலமரணம் அடைந்தபின் அப் பதவிக்கு பிரான்ஸிஸ் பெர்டினண்ட் நியமிக்கப்பட்டார். தந்தையைக் காட்டிலும் தீவிரமான கொள்கைகள் கொண்டிருந்தார் இவர். நாட்டைச் செம்மையான பாதையில் இவர் நடத்திச் செல்வார் என்ற நம்பிக்கை யாருக்குமில்லை. 1914ஆம் ஆண்டில் இவர் படுகொலை செய்யப்பட்டார். அதன் காரணமாகத் தொடங்கியது முதல் உலகப் பெரும்போர்.

## (இ) உலகப் போருக்குமுன் ஐரோப்பாவின் நிலை

ஃபிரெஞ்சு–ஃபிரஷ்யப் போருக்குப்பின் முதலாம் உலகப் போர் தோன்றும் வரை ஐரோப்பிய நாடுகளின் உறவுமுறைகளைக் கவனிக்கும்போது நமக்கு அளவிலா வியப்பு ஏற்படுகிறது. தோன்றியபோதே வலிமையுடன் விளங்கிய ஜெர்மனி, அடிபட்ட பாம்புபோல் இருந்த ஃபிரான்சு, கிரீமியப் போருக்குப்பின் தன் பலவீனத்தைத் தெரிந்துகொண்டிருந்த ரஷ்யா, அமைதியற்ற மக்களும் பலவீனமும் நிறைந்த ஆஸ்திரியா, புதிதாகத் தோன்றி வலிமை பெறத் துடித்துக்கொண்டிருந்த இத்தாலி, கடற்படை பலத்தில் தன்னிகரற்று விளங்கிய பிரிட்டன் ஆகிய நாடுகள் அனைத்தும் தத்தம் கொள்கைகளை நிலைநிறுத்தப் பிற நாடுகளோடு ஒப்பந்தங்களும், மறு ஒப்பந்தங்களும் செய்து கொள்வதில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டு ஐரோப்பிய அரசியலை கலக்கிக்கொண்டிருந்தன. இதன் விளைவாக ஐரோப்பா, இரு பெரும் பிரிவுகளாகப் பிளவுண்டு ஒன்றையொன்று முற்றிய பகை உணர்வோடும், காழ்ப்புணர்வோடும், அச்சத்தோடும், அளவிலாத் துணிச்சலோடும் உறுத்துப் பார்க்கத் தலைப்பட்டன. இந்தப் பிளவு எப்படித் தோன்றி வளர்ந்ததெனக் காண்போம்.

1873-ல் பிஸ்மார்க்கின் முயற்சியால் ஜெர்மானியப் பேரரசர், ஆஸ்திரிய ஹங்கேரியின் அரசர், ரஷ்ய மன்னர் ஆகிய மூவரும் இணைந்த 'முப்பேரரசர் கூட்டு' (Dreikaiserbund) உருவாயிற்று. ஐரோப்பிய அமைதிக்காகவும் போர் அபாயம் தோன்றும்போது ஒருவருக்கொருவர் துணையாக இருப்பதற்கும் இக் கூட்டு வழி செய்தது.

1878ஆம் ஆண்டு கூடிய பெர்லின் மாநாட்டால் இப் பேரரசர் கூட்டு உடைந்தது. ஜெர்மனி ஆஸ்திரியாவின் பக்கமே சாய்ந்து தன்னைப் புறக்கணிப்பதாக ரஷ்யா கருதியது. மாநாட்டு நிபந்தனைகளும் அதனை உறுதிப்படுத்தின. இருப்பினும், பிஸ்மார்க்

இவ்விணைப்பிற்கு அவ்வப்போது உயிரூட்டி வந்தார். கிழக்கு ஐரோப்பியப் பிரச்சினை காரணமாக ரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையே வேற்றுமைகள் அதிகரிக்க அதிகரிக்க இம் முப்பேரரசுகளின் கூட்டும் காற்றிலே கரைந்து போயிற்று (1887).

பிஸ்மார்க், ரஷ்யா இங்ஙனம் ஜெர்மனியினின்று விலகிப் போவதை விரும்பவில்லை. எனவே, 1887ஆம் ஆண்டு ரஷ்யாவுடன் காப்புறுதியைப் புதுப்பிக்கும் உடன்பாடு (Reinsurance Treaty) ஒன்றை ஏற்படுத்திக்கொண்டார். இதன்படி வேறு ஒரு நாட்டோடு போர் மூளும்பட்சத்தில் இவ்வுடன்படிக்கை நாடுகள் நடுநிலை காக்கவும் பால்கனில் எந்த ஒரு மாற்றமும் தம் விருப்பத்தை மீறி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் ஒப்பின. ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் இடையே தோன்றிய இப் புதிய நட்பு ஓர் ஆஸ்திரிய–ரஷ்யப் போர் ஏற்படுவதையும், ஃபிரெஞ்சு–ரஷ்ய உறவு ஏற்படுவதையும் தடுத்தது என்பதே அதற்குரிய ஒரே பெருமை.

பெர்லின் மாநாட்டின்போதுதான் ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் மிக நெருங்கி வந்தன. இந் நெருக்கம் 1879ஆம் ஆண்டில் ஓர் இரட்டைக் கூட்டுறவு (Dual Alliance) ஏற்பட்டதில் முடிந்தது. மாநாட்டில் ரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்குமிடையே பால்கனில் ஆதிக்கம் குறித்து வேற்றுமை வளர்ந்ததால் யாரேனும் ஒருவரை ஆதரிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது ஆஸ்திரியாவைத் தேர்ந்தெடுத்தார் பிஸ்மார்க். ரஷ்யா பெரும் அதிர்ச்சியடைந்தது. ஜெர்மனியை மித்திரத் துரோகி எனக் குற்றம் சாட்டியது. ரஷ்ய மன்னரும் ஜெர்மன் பேரரசைச் சாடினர். இந் நிலையில் ஆஸ்திரியாவோடு நட்பு ஒப்பந்தம் செய்துகொள்ள கெய்சர் சிறிதும் விரும்பவில்லை. ஆனால், பிஸ்மார்க் தம் செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்திக் கெய்சரை இவ்வுடன்பாட்டிற்கு இணங்கும்படி செய்தார். இதன்படி ரஷ்யாவோ அல்லது ரஷ்யாவின் உதவியோடு வேறு நாடுகளோ இவ்விரு நாடுகளில் ஒன்றைத் தாக்கினால் மற்ற நாடு முன்னதன் உதவிக்கு விரையவேண்டும். ஐந்தாண்டுக் காலத்திற்குச் செல்லுபடியாகும் இவ்வுடன்பாட்டை இரு நாடுகளும் விரும்பினால் புதுப்பித்துக் கொள்ளலாம். இந்த ரகசிய உடன்பாட்டால் பிஸ்மார்க்கும் ஆண்டிரசியும் மனம் மகிழ்ந்தனர்.

இவ்வுடன்பாடு ரஷ்யாவைப் பொறுத்தவரை ஒரு பேரிடியாக இருந்தது. சான் ஸ்டிபானோவிற்குப்பின் ஆஸ்திரியாவை இழந்த ரஷ்யா இவ்வுடன்பாட்டால் ஜெர்மனியையும் இழந்து நின்றது. ஆனால், இதனால் மனம் தளராத ரஷ்யா தனக்கு எனச் சில நண்பர்

களை ஐரோப்பாவில் தேடும் பணியில் இறங்கி அதில் வெற்றியும் பெற்றது. அதைப் பின்னர் பார்ப்போம்.

1882ஆம் ஆண்டு ஆஸ்திரிய ஜெர்மன் உடன்பாடு இத்தாலியின் வருகையால் முக்கூட்டு உடன்படிக்கை (Triple Alliance) ஆயிற்று. வலிமை உடையோர் கூட்டுச் சேர்தலே சிறப்பு என்ற கொள்கையுடைய இத்தாலியை ஆஸ்திரிய–ஜெர்மானியக் கூட்டுறவில் இணையும்படி செய்ய சந்தர்ப்பச் சூழ்நிலைகளும் உதவி புரிந்தன. குடியேற்றங்களைப் பெற்று விரிவடைய வேண்டும் என்ற ஆவலைக்கொண்டிருந்தது இத்தாலி. ஆனால், இத்தாலியின் கவனம் பதிந்திருந்த டுனிசு போன்ற பகுதிகளை அடைய விரும்பி அதில் வெற்றியும் பெற்றது ஃபிரான்சு. இதனால் மனம் புண்ணுனது இத்தாலி. மேலும் தன் நிலையை வலுப்படுத்த எண்ணி பிரிட்டனின் நட்பைக் கோரி அது மறுக்கப்பட்டதால் இத்தாலியின் மன உளைச்சல் அதிகமாயிற்று. இந் நிலையில் இத்தாலிய மன்னர் ஆஸ்திரியாவிற்கு விஜயம் செய்தார். ஆஸ்திரியாவோடு உடன்பாடு செய்வதில் இத்தாலி மிகத் தீவிரமாக இருந்தபடியால் இறுதியில் 1882ஆம் ஆண்டு மே மாதம் மூவர் உடன்பாடு தோன்றியது. இதன்படி ஃபிரான்சு இத்தாலியைத் தாக்கினால் ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் தம் முழு உதவியை அளிப்பதென ஏற்பாடாயிற்று. இவ்வுடன்பாட்டால் அதிக ஆதாயம் அடைந்த நாடு இத்தாலியே. தன் பரம்பரை எதிரியான ஃபிரான்சோடு இத்தாலி இணைந்துகொள்ளுமோ என்ற அச்சம் நீங்கி பிஸ்மார்க்கிற்கு மனநிம்மதி ஏற்பட்டது. இவ்வுடன்பாட்டின் முக்கிய நோக்கம் அமைதியும் தற்காப்புமே ஆகும். ஆனால், வட ஆப்பிரிக்காவில் தன் பேராசைத் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள இவ்வுடன்பாட்டை இத்தாலி பயன்படுத்தத் தொடங்கியதுமே அதன் அடிப்படை நோக்கங்கள் உடையத் தொடங்கின. இவ்வுடன்பாடு 1897ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டபோது இத்தாலி தன் வலிமையை உணரத் தொடங்கிவிட்டது.

## (ஈ) பத்தொன்பதாம் நூற்றுண்டில் ரஷ்யா

நெப்போலியன் வீழ்ச்சியடைந்த காலத்தில் ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய நாடு என்ற நிலையில் ரஷ்யா இருந்தது. தெற்கு வடக்காக ஆர்ட்டிக் கடலிலிருந்து கருங்கடல் வரையிலும், கிழக்கு மேற்காக பசிபிக் கடலிலிருந்து பால்டிக் கடல் வரையிலும் விரிந்து பரந்திருந்தது ரஷ்யப் பேரரசு. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் படர்ந்திருந்த இப் பேரரசின் மக்கள்தொகை 45 மில்லியன்களாகும். இப் பேரரசில் மக்கள் பல்வேறு இன, சமயங்களைச்

சார்ந்தும், வெவ்வேறு மொழிகளைப் பேசியும் வந்தனர். இனங்களுள் ஸ்லாவ் (Slav) இனம் தொன்மையானது. கிரேக்க வைதீகக் கிறிஸ்துவச் சமயமே அரசாங்கச் சமயமாகவும், மூன்றில் இரு பங்கு மக்களின் மதமாகவும் விளங்கியது. மொழிகளுள் ரஷ்ய மொழி பெரும்பான்மையோரது மொழியாக இருந்தது. 18ஆம் நூற்றுண்டில் நடந்த மூன்று போலந்துப் பிரிவினைகளின் பயனுகப் போலந்து ரஷ்யாவுக்குக் கிடைத்திருக்கிறது. போலிஷ் மொழியைப் பேசி இப் பகுதி மக்கள் ரோமன் கத்தோலிக்கச் சமயத்தைச் சாந்திருந்தனர். பால்டிக் நிலங்களான எஸ்தோனியா, லிதுவேனியா, பின்லாந்து ஆகிய நாடுகளும் ரஷ்யாவின் ஆளுகைக் குட்பட்டிருந்தன. இங்குள்ள மக்கள் பிராட்டஸ்டன்ட் சமயத்தைச் சார்ந்தும், ஜெர்மன், பின்னிஷ் மொழிகளைப் பேசியும் வந்தனர். கிழக்கிலும் தெற்கிலும் இருந்த மக்கள் மத்திய ஆசிய இனத்தோராயும், இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றுவோராகவும் இருந்தனர். இவர்களன்றி, யூதர்களும் சில இடங்களில் வியாபித்திருந்தனர். இன, மொழி, சமய வேறுபாடுகள் மலிந்திருந்தும், ரஷ்யர்கள் மேலாதிக்கம் படைத்த ஸார் (Czar) மன்னனிடம் கொண்டிருந்த விசுவாசத்தால் ஒன்றுபட்டிருந்தனர். மாகபீட்டரின் காலத்திலிருந்தே ஐரோப்பாவோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தும் 19ஆம் நூற்றுண்டில் ரஷ்யா, இடைக்காலக் கிழக்கிந்திய நாகரிகத்தைப் பின்பற்றியதே தவிர, நவீன கால ஐரோப்பியப் பண்பாட்டில் ஈடுபாடு காட்டவில்லை.

ரஷ்ய சமுதாயம் பிரபுக்கள், விவசாயிகள் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. மிகப் பெரும்பான்மையினரான விவசாயிகள் நிலச்சுவான்தார்கள் உருவாக்கிய நில அடிமை முறையிலும் துன்ப இருளிலும் மூழ்கியிருந்தனர். பிரபுக்களின் ஆதிக்கத்தில் புழுக்களைப்போல் மதிக்கப்பட்டு உரிமை ஏதுமின்றி வாடி இருந்தனர். பிற ஐரோப்பிய நாடுகளில் தம் உயர்கல்வியாலும், செல்வத்தாலும், செல்வாக்கினைப் பெற்ற நடுத்தர வகுப்பு மக்கள் ரஷ்யாவில் அறவே கிடையாது. மேல்நிலையிலிருந்த சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் பிரபுக்களும், மதகுருக்களும் பெருஞ்செல்வம் பெற்றும், அரசாங்க உயர்பதவிகளை வகித்தும் பல சிறப்புரிமைகளை அனுபவித்துக்கொண்டும், 'தந்தக் கோபுரத்தில்' வீற்றிருந்தனர். நில அடிமை ஊழியர்களின் உழைப்பினுல் இம் மேட்டுக் குடியினர் உண்டு களித்தனர்.

சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் மலிந்து மிகவும் பிற்போக்கான நிலையிலிருந்த ரஷ்ய நாட்டைப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முதற்பகுதியில் ஆண்ட மன்னர் முதலாம் அலெச்சாந்தர்

(1801—1825) ஆவார். மன்னரது வாயிலிருந்து உதிரும் சொற்களே நாட்டின் சட்டங்கள் என்ற நிலையில் சர்வாதிகாரியாக ஆள வாய்ப்பிருந்தும் அலெக்சாந்தர் உரிமை வாதத்தில் நம்பிக்கைக் கொண்டு மக்களுக்கு நன்மைகள் செய்யவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். நெப்போலியனது வீழ்ச்சிக்குப்பின் கூடிய வியன்னு மாநாட்டில் இவரது கருத்துகள் மதிக்கப்பட்டன. தோற்ற நாடான ஃபிரான்சு கண்ணியமாக நடத்தப்படவேண்டும் என்றும், ஃபிரெஞ்சு மக்களுக்குப் புதிய மன்னரான 18ஆம் லூயி ஓர் அரசியலமைப்பைத் தரவேண்டும் என்றும் இவர் கூறிய ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. வியன்னு மாநாட்டால் ரஷ்யாவிற்கு அளிக்கப்பட்ட போலந்திற்குக்கூட அவர் சில உரிமைகளை அளித்தார். அந் நாட்டிற்கு ஓர் அரசியலமைப்பை நல்கி ஒரு நாடாளுமன்றம், பத்திரிகைச் சுதந்திரம், சமயச் சுதந்திரம் ஆகியவற்றை அளித்து இங்கிலாந்தைப்போல் சுதந்திரக் காற்றை நுகருமாறு செய்தார். இதே முறையில் ரஷ்யாவையும் சீர்திருத்த அவர் எண்ணினுர். ஆனல். அலெக்சாந்தர் இயல்பிலே கொள்கைப் பிடிப்பற்றவர். எளிதிலே பிறரின் கைப்பாவையாக மாறும் தன்மை அவரிடம் இருந்தது. இதனை நன்கு பயன்படுத்திய மெட்டர்னிக் அவரைத் தன் வழிக்கு இழுத்துப் பிற்போக்குவாதியாக மாற்றிவிட்டார். அலெக்சாந்தரது ஆட்சியின் பிற்பகுதியில் இம் மாற்றத்தைத் தெளிவாகக் காணலாம். 1825ஆம் ஆண்டில் அவர் இறந்தபோது அவர் ஒரு வழக்கமான சர்வாதிகார மனப்பான்மை உள்ள ஸார் மன்னனைப் போன்றே இருந்தார்.

அவருக்குப்பின் அரியணை ஏறிய முதலாம் நிக்கோலசின் (1825—55) முப்பதாண்டுக்கால ஆட்சி விறுவிறுப்பான சம்பவங்கள் நிறைந்ததாகும். இவர் ஒரு கொடுங்கோலர். காவல் படை, தணிக்கை முறை, அடக்கு முறை இவற்றின் உதவியால் இவர் ஆட்சி நடந்தது. உரிமை கோரி ஒரு குரல் எழுந்தாலும் சிறைவாசம், நாடுகடத்தல் போன்ற கடுந்தண்டனைகள்மூலம் அதை அடக்கினுர் இம் மன்னர். அரசியலில் மட்டுமின்றி, சமயத் துறையிலும் அடக்கு முறை தாண்டவம் ஆடியது. இவரது அயல் நாட்டுக் கொள்கையும் வெறுக்கத்தக்கதாயிருந்தது. 1830ஆம் ஆண்டில் போலந்தில் தோன்றிய கிளர்ச்சியை ஆயுத பலத்தால் அடக்கி, அந் நாட்டிற்கு அளிக்கப்பட்டிருந்த அரசியலமைப்பையும் ரத்து செய்தார். இவர் பால்கன் மக்களுக்காகப் பரிந்து, 1828ஆம் ஆண்டிலும் 1853ஆம் ஆண்டிலும் இருமுறை துருக்கியுடன் போர் புரிந்தார். ஹங்கேரியில் புரட்சி தோன்றியபோது இவர் தலையிட்டு அதை ஒடுக்க முயன்றுர். கிரீமியப் போர் நடந்து

கொண்டிருக்கையில் இவர் மாண்டார். இவர் காலத்தில் ரஷ்ய நாட்டின் பெருமை குன்றியதோடு ஐரோப்பிய அரசியலில் ரஷ்யா வின் செல்வாக்கு மங்கியது.

அடுத்து பட்டத்திற்கு வந்த இரண்டாம் அலெக்சாந்தர் (1855—81) மன்னர்களுக்குள் ஒரு மாமணியாவார். தாராள மனப்பான்மையும், சீர்திருத்தக் கருத்துகளும் கொண்ட இவர், ரஷ்யர்களின் வாழ்க்கையை முன்னேற்ற எண்ணங்கொண்டார். தெளிவான கொள்கை உள்ளவராதலால் நில அடிமை ஊழியர் களின் நிலையை உயர்த்தினலன்றி நாடு முன்னேறமுடியாது என்பதை உணர்ந்திருந்தார். எனவே, இவர் தலைமையில் நாடு முதலில் அத் திசையில் திரும்பியது. நாட்டிலிருந்த விளைநிலத்தில் 9/10 பாகம் அரசருக்கும், பிரபுக்களுக்கும் சொந்தமாக இருந்தது. நாட்டிலிருந்த 45,000,000 நில அடிமை ஊழியர்களில் பெரும் பாலோர் இந் நிலங்களில் உழைத்தனர். முதலில் அலெக்சாந்தர் தனக்குச் சொந்தமான நிலங்களில் பணிபுரிந்த 23,000,000 நில அடிமை ஊழியர்கட்கு விடுதலை வழங்கினர். பிறரையும் பிரபுக்களின் பிடியிலிருந்து விடுவிக்க அவர் எண்ணினர். இந்த எண்ணம் 1861ஆம் ஆண்டு மார்ச்சு 3ஆம் நாள் நாட்டிலுள்ள நில அடிமைகள் அனைவரையும் விடுவிக்கும் விடுதலை ஆணையாக (Proclamation of Emancipation) உருப்பெற்றது. இச் செயலே இவருக்கு 'விடுதலை வீரர்' (Czar the Liberator) என்ற புகழைப் பெற்றுத்தந்தது. இவ்வாணையின்படி நில அடிமை ஊழியர்கள், சுதந்திர விவசாயிகள் ஆயினர். விடுதலையோடு இவர்களுக்கு நிலமும் வழங்கப்பட்டது. ஆனல், விவசாயிக்கு அளிக்கப்படும் நிலம் அவனுக்கே சொந்தமானது அல்ல; அவன் இருக்கும் கிராமச் சமுதாயத்திற்கு (Mira) அது சொந்தமானதாகும். இச் சமுதாயம் பழைய நிலச் சொந்தக்காரர்களுக்கு இழப்பீடு அளிக்கும் பொறுப்பினை ஏற்றது. இந்த இழப்பீட்டுத் தொகையை அரசு கடனுகத்தந்து உதவும். பொருளாதாரத் துறையில் மகத் தான மாறுதல் விளைவிக்கும் இதைப் பலர் வரவேற்றுலும் சிலர் குறைகூறவே செய்தனர். ஆயினும், இவ்வாணையால் ஐரோப்பிய நாடுகளில் ரஷ்யாவின் மதிப்பு உயர்ந்தது என்பதை அவர்கள் மறுக்கமுடியாது. விவசாயிகளின் நிலை அவர்கள் அரசுக்குத் தரவேண்டிய கடன்தொகை காரணமாக ஒளி நிரம்பியதாக மாருவிட்டாலும், அவர்கள் வாழ்வில் நிச்சயமாக முன்னேற்றம் ஏற்பட்டது. மக்கள்தொகை அதிகரித்ததன் காரணமாக நிலம் மீண்டும் பங்கிடப்பட்டு வறுமை தாண்டவமாடத் தொடங் கியதே தவிர, இவ்வாணையால் ஏழ்மை நிலை தோன்றவில்லை.

இம் மிகப்பெரும் சீர்திருத்தத்தைத் தவிர வேறு பல சீர் திருத்த நடவடிக்கைகளும் இவரால் மேற்கொள்ளப்பட்டன. கீழ்மட்டங்களில் ஓரளவிற்கு ஸ்தல சுய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. செம்ஸ்ட்வோக்கள் (Zemstvos) என்ற ஊராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டு, அவற்றிற்குச் சாலைகள், மருத்துவமனைகள், கல்வி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அளிக்கப்பட்டது. நீதித் துறையிலும், சில நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன. பத்திரிகைத் தணிக்கை முறை தளர்த்தப்பட்டு, கல்வி வசதிகள் அதிகரித்தன. நாடு கடத்தப்பட்ட உரிமைவாதிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டது. ஆனால், சீர்திருத்தங்கள் நிறைந்த இப் போக்கு விரைவில் மாறி, பிற்போக்குத்தன்மை தலைதூக்கியது. தன் சீர்திருத்தங்களை எண்ணி மன்னர் அச்சம் கொண்டதும் ஒரு பொன்னான புது வாழ்வு மலரப் போகிறது என எண்ணிப் பலர் ஏமாற்றமடைந்ததும், சிறப்புரிமைகளை இதுநாள் வரை அனுபவித்து, அவற்றை இழந்ததால் சிலர் அடைந்த எரிச்சலும் இம் மாற்றத்திற்குக் காரணங்கள் ஆகும்.

மன்னர் மனம் மாறிக்கொண்டிருந்த வேளையில் 1863ஆம் ஆண்டு போலந்தில் ஒரு கிளர்ச்சி தோன்றியது. இக் கிளர்ச்சியை மிகக் கொடூரமான முறையில் மன்னர் அடக்கினார். இனி கிளர்ச்சிகள் தலைதூக்காவண்ணம் சில முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. போலந்து மக்களை ரஷ்யர்களாக்க முயற்சி துவங்கியது (Russification of Poland). அரசாங்க மொழியாகவும், பள்ளி, கல்லூரிகளில் பாடமொழியாகவும் இருந்த போலிஷ் மொழியின் இடத்தை ரஷ்யமொழி பிடித்தது.

பிற்காலத்தில் கைக்கொண்ட பிற்போக்குக் கொள்கையால் வேறொரு அபாயமும் முளைத்தது. தீவிரமான வெறுப்பு, அதிருப்தி இவற்றின் காரணமாகப் பெரும்பாலும் படித்த இளைஞர்களிடையே சூனியவாதம் (Nihilism) என்ற இயக்கம் தோன்றி வளர ஆரம்பித்தது. பகுத்தறிவு என்னும் அளவுகோலைக்கொண்டு சமுதாய, அரசியல், பொருளாதார அமைப்பின் ஒவ்வொரு அம்சத்தையும் அழிவுப் பூர்வமாக விமர்சித்தனர் இவ்வியக்கத்தினர். இவர்களிடம் உருப்படியான கொள்கையோ, தத்துவமோ ஒன்றும் கிடையாது. இருப்பதை முழுமையாக அழித்துவிட்டுப் புதியதொரு சமுதாயத்தை உருவாக்க விழைந்தனர். சோஷலிசக் கொள்கைகளை இவர்கள் ஓரளவிற்கு ஆதரித்தனர். புதிய சமுதாயத்தை அமைப்பதற்காகப் பழையதை அழிக்கவேண்டும் என்ற உணர்வை மக்களுக்கு ஊட்ட இவர்கள் மிகத் தீவிரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அரசாங்கமும்

இவர்கள்பால் சிறிதும் கருணை காட்டாது, இவ்வியக்கத்தைச் சிதைக்கத் தன் சக்தி முழுவதையும் பயன்படுத்தியது. எங்கும் வன்முறை தலைவிரித்தாடியது. நிகிலிஸ்டுகள் அலெக்சாந்தரைக் கொன்றால்தான் தங்கள் இயக்கம் வெற்றி பெறும் என நம்பினர். எனவே, அரசரின் உயிரைப் பறிக்கத் திட்டங்கள் போடப் பட்டன. சில முயற்சிகள் தோல்வி கண்டன. மக்களுக்கும் சில உரிமைகள் அளிக்குமாறு மன்னருக்கு ஆலோசனை கூறப் பட்டது. அந்த ஆலோசனையை மன்னர் ஏற்ற அதே நாளில் அவர் உலாவச்சென்று மீளும்போது அலங்கார வண்டியின்மீது குண்டுகள் வீசப்பட்டன. இம் முறை நிகிலிஸ்டுகள் வென்றனர். அலெக்சாந்தர் இறந்தார்.

அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்த அவர் புதல்வர் மூன்றும் அலெக்சாந்தர் (1881—1894) உறுதியும் உற்சாகமும் நிறைந்த இளைஞர். இராணுவக் கல்வி பயின்ற இம் மன்னர் தன் தந்தைக்கேற்பட்ட முடிவைக்கண்டு மனம் தளரவில்லை. கடுமை யான அடக்குமுறையின்மூலம் எதிர்ப்பினைச் சமாளிக்க முயன்றார். இவராட்சியில் நிகிலிஸ்டுகளும் தீவிரவாதிகளும் வேட்டையாடப் பட்டனர். பத்திரிகைச் சுதந்திரம் பறிபோயிற்று. கல்விச் சாலைகள் கடுமையான கண்காணிப்பிற்குட்பட்டன. ஊராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அரசின் மூன்றும் பகுதியான காவல்படை அளவிலும் அதிகாரத்திலும் விரி வடைந்தது. கிராமங்களில் விவசாயிகளை மேற்பார்வையிட நிலத் தளபதிகள் நியமிக்கப்பட்டனர். விசாரணையின்றி மக்களைச் சிறையிடும் உரிமை உள்ளிட்ட பல அதிகாரங்களைப் பெற்ற இவ் வதிகாரிகள் பழைய பிரபுக் குடும்பங்களிலிருந்து தேர்ந்தெடுக் கப்பட்டனர். விவசாயிகளின் கண்ணீர்க் கதை திரும்பவும் தொடர்ந்தது. இவ்வாட்சிக் காலத்தில் யூதர்கள் பெரும் கொடுமைகளுக்காளாயினர்.

இருளிலே ஒரு மின்னல் கீற்றுத் தெரிவதுபோல் இம் மன்னரின் கொடுங்கோலாட்சியில் மக்களின் துயரங்களுக்கிடை யில் தொழில்துறை வளர்ச்சியும், பொருளாதார முன்னேற்றமும் ஏற்பட்டன. ரஷ்யா ஒரு விவசாய நாடு. சில தொழில்கள் இருந்தாலும் அவற்றினுற்பத்தி உள்நாட்டில் தேவைகளைக்கூட நிறைவு செய்யவில்லை; வளமிருந்தும் வழியறியாதிருந்தது அந் நாடு. 1892ஆம் ஆண்டில் செர்ஜியஸ்டிவிட் (Sergiusdewitte) என்பார் நிதி, வணிக அமைச்சினை ஏற்றபோது பொருளா தாரத்தில் தன்னிறைவை நோக்கி உறுதியோடு நடைபோட ஆரம்பித்தது ரஷ்யா. நாட்டிலுள்ள கச்சாப் பொருள் வளத்தை யும் உழைப்புத் திறனையும் முழுமையாகப் பயன்படுத்தி இறக்கு

மதிகளைத் தடுத்துப் பாதுகாப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தால் நாடு தொழில்மயமாவது உறுதி என அவர் நம்பினார். பல புதிய தொழில்கள் தோன்றின. பாதுகாப்பு வரிகள் விதிக்கப்பட்டன. நகரங்கள் பெருகின. நாடு நகரங்களுக்கு இடையே தகவல் தொடர்பு வசதிகள் அதிகரித்தன. இருப்புப் பாதைகள் நாடெங்கிலும் அமைக்கப்பட்டன. அவற்றுள் ஐரோப்பாவைப் பசிபிக் பெருங்கடலுடன் இணைக்கும் சைபீரிய இருப்புப் பாதை பெரியதும் பெருமைமிக்கதும் ஆகும். தன் தொழில் திட்டங்களை நிறைவேற்ற ஐரோப்பிய நாடுகளிடமிருந்து, சிறப்பாக ஃபிரான்சு நாட்டிடமிருந்து பெருந் தொகைகளைக் கடனாகப்பெற்றது.

ரஷ்யா தொழில்மயமானதால் தவிர்க்க முடியாத சில சங்கடங்களும் ஏற்பட்டன. நகரங்களும் தொழிற்சாலைகளும் வளர்ந்தபோது தொழிலாளர் வர்க்கமும் பெருகியது. சோஷலிசக் கொள்கைகள் அவர்களிடையே பரவின. பிற ஐரோப்பிய நாடுகளைப்போல் இங்கும் முதலாளிகளும் உற்பத்தியாளர்களும் அடங்கிய ஒரு புதிய நடுத்தர வர்க்கம் தோன்றிச் செல்வாக்கோடு வளர ஆரம்பித்தது. பழமையில் ஊறிய பிற்போக்கான மன்னராட்சியை அச்சுறுத்தும் அளவுக்குப் புதிய சக்திகள் வலிமையோடு திகழ்ந்தன. ஆனால் இவ்விரு சக்திகளுக்குமிடையே போராட்டம் இப்போது துவங்கவில்லை.

*1894*ஆம் ஆண்டில் அலெக்சாந்தர் மறைந்தபோது இருபத்தாறு வயது நிரம்பிய அவர் மகன் இரண்டாம் நிக்கோலசு *(1894—1917)* ஆட்சிபீடம் ஏறினார். இவ்விளைஞரின் ஆட்சியில் மகிழ்ச்சியும், நன்மையும் பெருகும் எனப் பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மக்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. அடக்குமுறையில் தந்தையைக்காட்டிலும் ஒருபடி மேலே சென்றான் தனயன். வரம்பற்ற அதிகாரங்களோடு எந்தக் கட்டுப்பாட்டுக்கும் உட்படாத மக்களின் அடிப்படை உரிமைகளையும் நசுக்கி தனக்கு அடங்கிய ஊழல் மலிந்த அதிகாரிகளின் உதவியோடு அரசோச்சினார் நிக்கோலசு. கல்லூரிப் பேராசிரியர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டனர். அறிவு வளர்ச்சிக்காகப் புத்தகங்களைப் படிப்பதுகூடக் குற்றமாகக் கருதப்பட்டது. கிரீன் (Green) என்பார் எழுதிய ஆங்கிலேய மக்களின் வரலாற்றுச் சுருக்கம் (A Concise History of the English People) என்ற பாட நூல் தடை செய்யப்பட்டிருந்தது. அறிவுத் தாகங்கொண்ட மாணவர்களிடம் அரசு 'விசேஷ அக்கறை' காட்டியது. ஓராண்டில்

மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் படித்து வந்த மாணவர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் காணுமற்போயினர். சைபீரியாவும் ஐரோப்பாவிலிருந்த சிறைக்கூடங்களும் அவர்களை ஏற்றுக் கொண்டனபோலும்!

இத்தகைய அரசு தன் ஆதிக்கத்திலிருந்த பின்லாந்து, போலந்து போன்ற அப்பாவி நாடுகளைக் கொடுமைப்படுத்தியதில் வியப்பொன்றுமில்லை. பின்லாந்து புரட்சி செய்யத் துணிந்தால் அங்கு அடக்குமுறை ஆட்சியின் பிடி இறுகியது. மக்கள் அனுபவித்து வந்த உரிமைகள் பறிபோயின. போலந்தைப் போல் பின்லாந்தையும் ரஷ்யமயமாக்கும் முயற்சி துவங்கியது. பின்லாந்து தலைதூக்க இயலாது ஒடுங்கிவிட்டது. செர்ஜியஸ்டி விட்டிற்குப் பின் உள்துறை அமைச்சராகப் பதவியேற்ற வான் பிளவ் (Von Blov) அடக்குமுறையின் ஒருருவாகத் திகழ்ந்தார். நாடெங்கிலும் ஆங்காங்கே தொழிலாளரிடையே கிளர்ச்சிகள் தலைதூக்கின; வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன; வன்முறை கொடிகட்டிப் பறந்தது; எங்கும் குழப்பம் நிலவியது. 1904ஆம் ஆண்டு பிளவ் கொலை செய்யப்பட்டார். உள்நாட்டுக் குழப்பங்கள் போதாதென அயல் நாட்டோடு ஒரு போரும் அடுத்த ஆண்டே துவங்கியது.

சீனவின் பலமற்ற நிலையைப் பயன்படுத்தி மஞ்சூரியா, கொரியா (Manchoria and Korea) ஆகிய பகுதிகளைப் பிடித்துக் கொள்வதில் ரஷ்யாவும் ஜப்பானும் போட்டியிட்டன. 1902ஆம் ஆண்டு இங்கிலாந்தோடு செய்துகொண்ட ஒரு தற்காப்பு உடன்பாட்டால் தன் நிலையை வலுப்படுத்திக்கொண்ட ஜப்பான் ரஷ்யாவோடு ஒரு பலப்பரீட்சையில் ஈடுபடத் தயாராகியது. மஞ்சூரியாவிலிருந்து விலகிக் கொள்வதாகக் கூறிய ரஷ்யா அவ்வுறுதிமொழியை நிறைவேற்றுவதில் தயக்கம் காட்டியதால், ஜப்பானுக்கு நியாயமான ஐயம் ஏற்பட்டது. ரஷ்யப்படைகள் அங்கே குவிவதைக் கண்டு 1904ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஜப்பானியக் கப்பற்படை ஆர்தர் துறைமுகத்திலிருந்த ரஷ்யக் கப்பற்படைப் பகுதியைத் தாக்கி விரட்டியது. ரஷ்யா நிலத்திலும் நீரிலும் போராடி வெற்றி பெற முயன்றது. 1905ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை நீடித்த இந்த ரஷ்ய, ஜப்பானியப் போரில் தம் படைவலிமை, அரசாங்கத்தின் திறமை இவற்றின் காரணமாக ஜப்பான் பெருவெற்றி பெற்று ரஷ்யாவைப் புற முதுகிட்டோடச் செய்தது. அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட்டின் முயற்சியால் போர் நின்று போர்ட்ஸ்மவுத் உடன்பாடு (Treaty of Portsmouth) கையெழுத்தாயிற்று. இந்தப் போரால் ரஷ்யாவின் பெருமை பாதிக்கப்பட்டதோடு உள்

நாட்டில் அரசாங்கத்தின் மதிப்பு அடியோடு அழிந்தது. அரசரிடமும், அரசாங்கத்திடமும் மக்களின் அதிருப்தி மலைபோல் வளர்ந்தது. ஒரு சிறிய ஆசிய நாட்டிடம் தோற்றுப்போன செயலற்ற அரசாங்கத்தை அனைவரும் சாடினர். படைகளுக்கென அனுப்பப்பட்ட பொருள்களையும், செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியையும் சுரண்டிக் கொழுத்த ஊழல் நிறைந்த அரசாங்க அதிகாரிகளையும் மக்கள் தூற்றினர். விழிப்புணர்வு பெற்ற தொழிலாளர்கள், காப்பன் என்ற தீவிரவாதியான பாதிரியின் தலைமையின்கீழ் மன்னர் வதிந்த செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலுள்ள அரண்மனைக்கு அணிதிரண்டு சென்றனர். தங்கள் குறைகளை மன்னர்முன் வைத்து நிவாரணம் கோருவதே அவர்களின் நோக்கம். ஆனால், நிவாரணத்திற்குப் பதில் கோசப் படை வீரர்களின் மிருகத்தனமான தாக்குதலுக்கு அவர்கள் ஆளாயினர்; எண்ணற்றோர் மாண்டனர். இரத்தமயமான அந்த ஞாயிற்றுக்கிழமையை ரஷ்யர்கள் மறக்கவே இல்லை. பின்னால் வரப்போகும் பெரும் புரட்சிக்கு இது ஓர் ஒத்திகையாக அமைந்தது.

பின்வரும் அத்தியாயங்களில் ரஷ்யாவின் வரலாற்றைத் தொடர்ந்து காண்போம்.

## (உ) ரஷ்ய-துருக்கியப் போரும் பெர்லின் மாநாடும்

கிரீமியப் போருக்குப் பின் ஏற்பட்ட பாரிசு உடன்பாட்டால் கிழக்குஐரோப்பியப் பிரச்சினையில் தலையிடுவதிலிருந்து ரஷ்யாவைத்தடுத்து நிறுத்திவிட்டதாகவும் துருக்கியின் ஆதிக்கத்தை நிலை நாட்டிவிட்டதாகவும் ஐரோப்பிய நாடுகள் நம்பின. இப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மூன்றாவது வலிமை பொருந்திய சக்தியை அவை மறந்துவிட்டன. 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளை ஆட்டுவித்த தேசிய உணர்வு பால்கன் நாடுகளையும் பற்றியது. துருக்கிய ஆட்சியிலிருந்து விடுபட்டுத் தனித்தனி நாடுகளை அமைத்துக் கொள்ளும் ஆசை பேரார்வம் ஆயிற்று. இதன் விளைவாக ஐரோப்பிய நாடுகளின் ஆதரவு இருந்த போதிலும் துருக்கியப் பேரரசு சிதைய ஆரம்பித்தது. பாரிசு உடன்பாடு பலவாறு மீறப்பட்டது. முதலில் 1859ஆம் ஆண்டு ருமேனியா உருவாகி, துருக்கியிலிருந்து விடுபட்டது. அடுத்து கிரீட் தீவில் புரட்சி தோன்றியது. பின் பல்கேரியா மிரட்டல் மூலம் சில சலுகைகளைப் பெற்றது. தொடர்ந்து 1870-ல் ஃபிரெஞ்சு, ஃபிரஷ்யப் போர் மூண்டபோது ரஷ்யா கருங்கடல் தனக்கே உரியது என அறிவித்தது.

1875ஆம் ஆண்டில் பால்கனின் பிற பகுதிகளில் கொந்தளிப்புத் தோன்றியது. பாரிசு உடன்பாட்டில் வாக்களித்தபடி சுல்தான் பால்கனில் கிறிஸ்துவ மக்களுக்கு எந்த ஒரு நன்மையும் செய்யவில்லை. மாருக வரிச்சுமையும் வன்முறையும் அதிகரித்துவிட்டன. இதை எதிர்த்து முதலில் ஹெர்சிகோவினு, பாஸ்னியா பகுதிகளில் இருந்த விவசாயிகள் கிளர்ச்சி செய்தனர். சுல்தான் அளித்த வெறும் வாக்குறுதிகளால் புரட்சி அடங்கவில்லை. 1876ஆம் ஆண்டு மே மாதம் பல்கேரியாவிலும் புரட்சி பரவியது. ரஷ்யா, ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகள் பெர்லினில் சந்தித்து அமைதிக்கான குறிப்பு ஒன்றைத் தயாரித்துத் துருக்கிக்கு அனுப்பின. பிரிட்டன் இந்தக் கூட்டில் சேரவில்லை. இதனுல் துருக்கிய சுல்தான் துணிவு கொண்டு ஐரோப்பிய நாடுகளின் குறிப்பை அலட்சியம் செய்தார். மேலும், தன் பேரரசில் தோன்றிய கிளர்ச்சியை மிகக் கடுமையான முறையில் ஒடுக்கவும் திட்டமிட்டார். 18,000 துருக்கியப் படையினர் பாதுகாப்பற்ற பல்கேரிய கிராமங்களின்மீது பாய்ந்து சொல்லொணுக் கொடுமைகளை இழைத்தனர். குறைந்தது 12,000 கிறித்தவர்களாவது கொல்லப்பட்டிருப்பர் எனக் கணக்கிடப்பட்டது. இந்தக் கொடுமை கண்டு ஐரோப்பா அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தது. பிரிட்டிஷ் அமைச்சராய் இருந்த கிளாட்ஸ்டன் என்பார், தாங்கள் பாலைவனமாக்கிய அப் பகுதியிலிருந்து துருக்கியர் மூட்டை முடிச்சுகளோடு வெளியேற வேண்டும்; அவர்கள் பழியைத் துடைத்துக் கொள்ளும் ஒரே வழியில் என உணர்ச்சி வசப்பட்டு முழங்கினுர். ஆனுல், அப் பொழுதைய பிரிட்டிஷ் பிரதமரான டிஸ்ரேலி ஒரு யூதர். உணர்ச்சி வசப்பட்டுத் துருக்கியைப் பலவீனப்படுத்தும் எந்த முயற்சியையும் ஐரோப்பா மேற்கொள்ளக் கூடாது என அவர் அறிவுறுத்தினுர். பல்கேரியப் பிரச்சினையைவிட இந்தியாவைக் காப்பதே பிரிட்டனின் முக்கியமான பணி என்று அவர் கூறினுர். ஆனுல், ரஷ்யாவால் அப்படி ஒதுங்கியிருக்க முடியவில்லை. பல்கேரிய மக்களுக்குப் பரிந்துகொண்டு 1877ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் நாள் ரஷ்யா துருக்கிமீது போர் தொடுத்தது. போர் தொடுக்கும் முன் ஆஸ்திரியா நடுநிலை வகித்தால் பாஸ்னியா, ஹெர்சிகோவினு ஆகிய நாடுகளை அதற்கு அளிப்பதாக ரஷ்யா ஒப்பந்தம் செய்து கொண்டது. ருமேனியாவோடு நேச ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. செர்பியாவும் மான்டிநீக்ரோவும் துருக்கிமீது முதலிலேயே போர் தொடுத்திருந்ததால் துருக்கியின் நிலை மோசமாயிற்று. பிளாவ்னு கோட்டையைப் பிடித்த பின் ரஷ்யர்கள் கான்ஸ்டான்டிநோபிளைப் பிடிக்க முன்னேறினர். வழியில் சோபியா நகரும் 'எட்ரியா நோபிளும்

அவர்கள்வசம் வந்தன. எதிர்ப்பை மேலும் சமாளிக்க முடியாத துருக்கி சமாதானத்தைக் கோரியது. 1878ஆம் ஆண்டு மார்ச்சில் சான்ஸ்டிபேஞே(Sanstifano) உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. இது பால்கனில் ரஷ்ய செல்வாக்கின் உயர்வையும் துருக்கியப் பேரரசின் அழிவையும் கூறும் சாசனமாகும். இதன்படி மான்டி நீக்ரோவும், செர்பியாவும் சுதந்திரம் பெற்றன. ருமேனியாவின் சுதந்திரமும் அங்கீகரிக்கப்பட்டது. ரஷ்யா, ஆஸ்திரிய நாடுகளின் மேற்பார்வையில் பாஸ்னியாவிலும், ஹெர்சிகோவினுலும் சில சீர்திருத்தங்களை மேற்கொள்ளச் சுல்தான் இணங்கினர். ரஷ்யாவிற்கு பாடூம் (Batum) கார்ஸ் போன்ற ஆசியப் பகுதிகளும் ஐரோப்பாவில் பெஸ்ஸரேபியா, தோப் ருஜா ஆகிய பகுதிகளும் அளிக்கப்பட்டன. மேலும் டான்யூப் நதியிலிருந்து ஈஜியன் கடல்வரை விரிந்து பரந்த அகண்ட பல்கேரியா உருவாக்கப்பட்டுப் பெயரளவில் துருக்கிக்கு அடங்கியிருக்குமாறு செய்யப்பட்டது. இவ்வுடன்பாட்டால் ஐரோப்பாவில் துருக்கிப்பேரரசு மறைந்தது.

ஆனால், ரஷ்யா இவ்விதம் ஒரு மகத்தான வெற்றி பெறுவதை ஐரோப்பிய நாடுகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. குறிப்பாக இங்கிலாந்து ரஷ்யா தன் வெற்றியை அனுபவிக்காதவாறு தடுக்க முடிவு செய்தது. உண்மையில் சான்ஸ்டிபேஞே உடன்பாடு, ரஷ்யாவையும் பல்கேரியாவையும் தவிர்த்து வேறு யாருக்கும் மனநிறைவு தரவில்லை. இதனுலும் சான்ஸ்டிபேஞே உடன்பாட்டை மாற்றவேண்டும் என்ற தீர்மானம் ஐரோப்பாவில் வலுப்பட்டது. எனவே, இந்நோக்கத்தோடு ஒரு ஐரோப்பிய மாநாடு ஏற்பாடாயிற்று. ரஷ்யா முரண்டிப் பார்த்தது. ஐரோப்பாவில் போர் மூளுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. ரஷ்யா போரை வரவேற்கும் நிலையில் இல்லாததால் இறுதியில் மாநாடு யோசனைக்கு ஒப்பியது.

ஜெர்மனியின் தலைநகரான பெர்லினில் மாநாடு கூட்டப்பட்டது. நாணயமுள்ள தரகனுன பிஸ்மார்க்கின் தலைமையில் மாநாடு கூடினுலும் உண்மையில் அங்கு தன் செல்வாக்கை உணரச் செய்தவர் பீகன்ஸ்பீல்டு பிரபுவான பெஞ்சமின் டிஸ்ரேலியே. இம் மாநாட்டின் தலையாய பணி சான் ஸ்டிபேஞே உடன்பாட்டைத் திருத்தி அமைப்பதாகும். இம் மாநாட்டில் ரஷ்யாவிற்கு பெஸ்ஸரேபியா, பாடூம், கார்ஸ், ஆர்மேனியாவின் ஒரு பகுதி ஆகியவை மட்டுமே அளிக்கப்பட்டன. மான்டிநீக்ரோ, செர்பியா, ருமேனியா ஆகிய நாடுகளின் விடுதலை அங்கீகரிக்கப்பட்டது. அகண்ட பல்கேரியா அளவில் சுருங்கியது. வடபல்கேரியா சுயஆட்சி பெற்ற சுல்தானின் மேற்

பார்வையில் விடப்பட்டது. மற்ற இரு பகுதிகளான கிழக்கு ருமேனியாவும் மாசிடோனியாவும் துருக்கியுடனே இணைக்கப் பட்டன. பாஸ்னியாவும், ஹெர்சிகோவினுவும் தனி நாடு களாக்கப்பட்டு ஆஸ்திரியாவின் மேற்பார்வையின் கீழ்க்கொண்டு வரப்பட்டன. ஆஸ்திரியாவிற்கு சைப்பிரசு தீவு அளிக்கப்பட்டது. ஃபிரான்சிற்கு டூனிசை எடுத்துக்கொள்ளும் உரிமையும் இத் தாலிக்குத் திரிபோலியை அடையும் உரிமையும் அளிக்கப்பட்டன. ஜெர்மனி மட்டும் எதையும் கோரவில்லை. இதனுல் துருக்கிய சுல்தானின் மதிப்பையும் நன்றியறிதலையும் பெற்ற ஜெர்மனி இவற்றைப் பின்னுளில் கையெழுத்திடப்பட்ட ஆனுல், தொகை குறிப்பிடப்படாத காசோலையைப் போன்று பயன்படுத்தும் நன்மையை அடைந்தது.

1878-ல் கூடிய பெர்லின் மாநாடு தன் பணியை முடித்து விட்டது. மாநாட்டுத் தலைவரின் தரகு வேலையின் நாணயத் தன்மையைப்பற்றியும் டிஸ்ரேலி தான் கௌரவத்தோடு கூடிய சமாதானத்தை அளித்ததாகப் பிதற்றிக் கொண்டதிலும் உள்ள உண்மைகளை ஆராய்வோம். பிஸ்மார்க், ஆஸ்திரிய அங்கேரி யின் பிரதிநிதி ஆன்டிரசியைத் (Andrassy) தன் தோழனுகவும், டிஸ்ரேலியைத் தன் கருவியாகவும் அமைத்துக்கொண்டு ரஷ் யாவின் மனதைப் புண்படுத்தாமல் ஆஸ்திரியா அங்கேரியின் மீது தன் செல்வாக்கை உயர்த்திக்கொண்டதே 1878ஆம் ஆண்டின் சிறப்பாகும் என்ற கூற்று முற்றிலும் உண்மையா கும். ஆயினும், ரஷ்யா அடிபட்ட புலியைப் போன்று இருந்தது என்பதையும் மறுக்கமுடியாது. ஜெர்மனியிடம் ரஷ்யாவுக்கு ஏற்பட்ட எரிச்சலே சிறிது சிறிதாக ஐரோப்பா இரு முகாம் களாகப்(அதாவது ஃபிரெஞ்சு. ரஷ்யப் பிரிவு, ஆஸ்திரிய இத் தாலிய ஜெர்மன் பிரிவு) பிரிவதற்கு ஓர் அடிப்படைக் காரண மாக அமைந்தது. மேலும், பால்கனில் தலையிட்டுக் கசப்பான அனுபவங்களை அடைந்த ரஷ்யா தன் கவனத்தை இனி கிழக் கிலும், தென் கிழக்கிலும் திருப்புவதென முடிவெடுத்தது.

பிரிட்டிஷ் பேரரசி விக்டோரியா டிஸ்ரேலியின் பணியினைப் பாராட்டிப் பிரபு பட்டம் அளித்தாள். நெருக்கடியான நேரத்தில் அவர் காட்டிய தீரம் பாராட்டுதற்குரியது என்ரு லும், குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிய பரந்த அறிவும் காட்டப்படவேண்டும். டிஸ்ரேலியிடம் அவ்வறிவு இல்லை. இக் குறை அவர் பால்கனின் தேசிய உணர்வை மதிக்காத திலிருந்தும் ரஷ்யாவை இராணுவ பலத்தால்தான் எதிர்க்க முடியும் என நம்பியதிலிருந்தும் தெளிவாகத் தெரிகிறது. மேலும், துருக்கி சுல்தான் அப்துல் அமீது தன் கிறித்தவ

மக்களைச் சரிவர நடத்துவதாக அளித்த வாக்குறுதியை உண்மை என நம்பியதும் இக் கருத்தை வலியுறுத்துகிறது. ஐரோப்பா விலும் பல்கேரியாவைத் துண்டாடியது தவறு என்பது விரை விலேயே உணரப்பட்டது. 1885ஆம் ஆண்டில் கிழக்கு ருமேனியாவைத் துருக்கியின் பிடியிலிருந்து விடுவித்து பல்கேரியா வோடு இணைத்தனர் பல்கேரியப் புரட்சிக்காரர்கள். ரஷ்யா எதிர்த்தும் அதன் ஒற்றைக் குரலால் ஒரு பயனும் விளையவில்லை.

செர்பிய நாட்டிற்கும் பெர்லின் மாநாடு அநீதி இழைத்தது. ரஷ்யாவின் ஆலோசனையின் பேரில் ஆஸ்திரிய ஹங்கேரியின் நட்பைக் கோரிப் பெற்றது செர்பியா. விரிவடைந்த பல்கேரியா மீது 1885ஆம் ஆண்டு நவம்பர் மாதம் போர் தொடுத்தது செர்பியா. ஆனால், படுதோல்வி அடைவதிலிருந்து ஆஸ்திரிய ஹங்கேரியின் தலையீட்டினால் செர்பியா தப்பியது.

பெர்லின் ஏற்பாடு பால்கன் மக்களுக்கும் திருப்தி அளிக்க வில்லை. மாசிடோனியா துருக்கியிடமே விடப்பட்டதால் அங்கு தொடர்ந்து கிளர்ச்சிகள் நடைபெற்றன. விடுதலை பெற்ற பால்கன் நாடுகளும் அதிருப்தியுற்றுப் பெருமையும் விரிவும் கோரிப் போட்டியிலும் போரிலும் ஈடுபட்டன. இவ்விதம் பெர்லின் ஏற்பாடு கிழக்கு ஐரோப்பியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப்பதில் மேலும் பல சிக்கல்களைப் புகுத்தி அப் பிரச்சினை ஒரு பெரும் போருக்கு அடிப்படைக் காரணமாகக் கூடிய நிலையைத் தோற்றுவித்தது.

## (ஊ) முக்கூட்டு நட்பு (Trible Entente) தோன்றுதல்

ஆஸ்திரியாவோடு நெருங்கிய பிணைப்புக் கொண்டபோதிலும் ரஷ்யாவின் உறவை விடுவது விவேகமன்று என்பது பிஸ்மார்க் கின் கொள்கை. அவர் பதவியிலிருந்தவரை இக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால், பிஸ்மார்க்கின் வீழ்ச்சிக்குப்பின் நிலைமை மாறியது. ஜெர்மானியால் தனிமையாக்கப்பட்ட ஃபிரான்சும், ஆஸ்திரிய ஜெர்மன் நெருக்கத்தால் புறக்கணிக்கப் பட்டதாகக் கருதிய ரஷ்யாவும் நெருங்கிவர ஆரம்பித்தன.

ஒன்று சர்வாதிகார நாடாக இருப்பதையும் மற்றது ஜன நாயக நாடாக இருப்பதையும் மறந்து இவ்விரு நாடுகளும் ஓர் உடன்பாடு செய்துகொண்டன (1891). 1893ஆம் ஆண்டு தற்காப்பிற்கென ஓர் இராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது. அடுத்த ஆண்டில் இதனை அங்கீகரித்து இருநாட்டு அரசர்களும் கையொப்பம் இட்டனர். இவ்வுடன்பாட்டின் முக்கியத்துவத்தை நோக்கும்போது இதனால் ஃபிரான்சின்

தனிமை கலைந்தது என்பதோடு அந் நாடு இழந்த ரைன் நதிப் பகுதிகளைத் திரும்பப் பெறமுடியுமா என்ற ஆசை துளிர்விட ஆரம்பித்ததும் தெரிகின்றன. ரஷ்யாவைப் பொறுத்தவரை சைபீரிய இருப்புப்பாதை போன்ற திட்டங்களை நிறைவேற்று வதன்மூலம் தூரக்கிழக்கில் விரிவடைவதற்குத் தேவையான நிதி உதவியை ஃபிரான்சு மனமுவந்து தர முன்வந்தது; இவ்வாறாகப் பல முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்தது. ஐரோப்பா என்று பார்க்கும்போது பிஸ்மார்க்கின் காலம் முடிவடைந்ததை இது காட்டுகிறது.

இவ்வுடன்பாட்டினைக்கண்டு ஜெர்மன் சற்றுச் சலனமடைந் தாலும் மனம் தளர்ந்துவிடவில்லை. இங்கிலாந்து இவ்வுடன் பாட்டில் சேராதவரை வல்லமைச் சமநிலை கெடாது என்றும் அபாயம் ஏதும் இல்லை என்றும் ,அது கருதியது. ஆனால் இக் கருத்து சீக்கிரமே ஒரு கனவாயிற்று.

சில நூற்றாண்டுக்காலமாக இங்கிலாந்திற்கும் ஃபிரான்சிற்கும் இடையே பகைமை முற்றிக் கொண்டுவந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆப்பிரிக்காவைப் பங்கீடு செய்யும் பிரச்சினையில் தகராறு மேலும் முற்றியது. 1890ஆம் ஆண்டில் ஒப்புக்கொண்ட ஏற்பாட்டினால் நிலைமையின் இறுக்கம் சற்றுத்தணிந்தது. மடகாஸ்கர் தீவையும் சகாரா பாலைவனத்தை யும் ஃபிரான்சு எடுத்துக்கொள்ள பிரிட்டன் ஒப்பியது. ஆனால், சூடானில் ஃபிரான்சின் ஆதிக்கம் படருவதைப் பிரிட்டன் வெறுத் தது. எகிப்தோடு சூடானை இணைத்துத் தன் செல்வாக்கின்கீழ் வைத்திருக்கவே பிரிட்டன் விரும்பியது. இதனால்தான் பஷோடா கோட்டையைப் ஃபிரெஞ்சுக்காரர் கைப்பற்றியபோது ஆங்கி லேயர் அதைக் கடுமையாக எதிர்த்தனர். இந் நேரத்தில் ஃபிரான்சில் ஏற்பட்ட புதிய அமைச்சரவை இங்கிலாந்தோடு நட்புக்கொள்ளுவதே சாலச்சிறந்தது என்ற கருத்தை ஆதரித்தது. ஆனால், இங்கிலாந்தோ ஜெர்மனியின் உறவை விரும்பியது. ஜெர்மன் பேரரசர் இரண்டாம் வில்லியம் இங்கிலாந்திற்கு வந்த போது உடன்பாட்டைப்பற்றி விவாதிக்கப்பட்டது. வில்லியம் பெர்லினுக்கு வரும் பாதை வியன்னாமூலம் வரவேண்டும் எனத் தட்டிக் கழித்துவிட்டார். ஜெர்மனி காட்டிய இந்த அசிரத்தை யால் பிரிட்டன் எரிச்சலும் கசப்பும் கொண்டு வேறு நண்பர் களைத் தேட முடிவுசெய்தது. 1802ஆம் ஆண்டு ஜப்பானோடு பிரிட்டன் உடன்பாடு செய்துகொள்வதற்கு இதுவே காரணம். இந்த மனநிலையில்தான் ஃபிரான்சோடும் நெருக்கம் ஏற்பட்டது. இரு நாடுகளுக்கிடையே குடியேற்ற விவகாரங்களில் முன்போல் உறுத்திய பிரச்சினை எகிப்து, மொராக்கோ நாடுகளைப் பற்றிய

தாகும். எகிப்தைப் பிரிட்டனிடமும் மொராக்கோவைப் ஃபிரான்சிடமும் விட்டு விடுவதாக முடிவு செய்யப்பட்டது. வேறு சில விவகாரங்களுக்கும் சுமுகமான தீர்வு காணப்பட்டது. ஃபிரான்சிற்கும் பிரிட்டனுக்கும் இடையே பகைமைக் காய்ச்சல் மாறி உறவுத்தென்றல் தவழ ஆரம்பித்தது.

இதன் விளைவாக 1904ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கிடையே ஒரு நேச உடன்பாடு உருவாயிற்று. இது ஒரு இராணுவ ஒப்பந்தம்தான். உறவு தோன்றி நாளடைவில் அது இறுகுவதற் குரிய சூழ்நிலையைச் சுட்டிக்காட்டும் முதற்படியாம் இது. 1912ஆம் ஆண்டுப்போரில் ஃபிரான்சோடு கொண்டுள்ள நட்பை ஜெர்மனியின் நட்பிற்காகத் தியாகம் செய்ய இங்கிலாந்து விரும்பவில்லை என்பதை அடித்துக்கூறும் அளவிற்கு நட்பின் பலம் அதிகரித்துவிட்டது.

ஜெர்மனியின் வளர்ந்துவரும் கடற்படைப் பலத்தைக்கண்டு பிரிட்டன் அஞ்சியது. ஃபிரான்சும் ஆப்பிரிக்காவில் ஜெர்மனியின் தலையீட்டைக்கண்டு மனத் தளர்ச்சியுற்றது. பரஸ்பர அச்சத்தின் காரணமாக இரு நாடுகளுக்கிடையே இராணுவ உதவி குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. ஜெர்மனியின் ஆக்ரமிப்பிற்குப் ஃபிரான்சு உள்ளானால் இங்கிலாந்து வாளா விராது என்பது நிச்சயமாயிற்று.

இவ்விதம் 1905ஆம் ஆண்டளவில் ஐரோப்பா இரு முகாம் களாகப்பிரிந்து பிளவுபட்டது வெளிப்படையாகப் புலன் ஆயிற்று. அருகருகே இருந்த இருதரப்பினரும் மிக விரைவிலேயே பகைவர்களாய் மாறிச் சீற்றத்துடன் முறைத்துக் கொள்ளுமளவிற்கு ஆயிற்று.

## (எ) புதிய ஏகாதிபத்தியம்

1815ஆம் ஆண்டிலிருந்து 1880ஆம் ஆண்டு வரை குடியேற் றங்களை அமைப்பதில் ஐரோப்பிய வல்லரசுகளின் ஈடுபாடு குறைந்துவிட்டது. ஃபிரான்சு தன்னுடைய கடல்கடந்த பேரரசின் பெரும் பகுதிகளை ஏற்கனவே இழந்து விட்டிருந்தது. ஸ்பெயின் பெயரளவிற்குக் குடியேற்றங்களைக் கொண்டிருந்தது. பிரேசிலை இழந்தபின் போர்ச்சுகலுக்குச் சில வியாபார ஸ்தலங்களே மிஞ்சியிருந்தன. ஹாலந்து கிழக்கிந்தியத் தீவுகளில் பெரும் பகுதியைத் தன்னகத்தே கொண்டிருந்தது. பிரிட்டிஷ் பேரரசு மட்டும் உலகு முழுவதும் பரவிக் கிடந்தது. பொருளாதாரத் தத்துவங்கள் வளர்ந்த காலத்தில் தலையிடாக் கொள்கையின்

முக்கியத்துவம் ஏற்கப்பட்டு குடியேற்றங்களைப் பராமரிப்பது வீண் முயற்சி என்ற எண்ணம் ஐரோப்பாவில் நிலவியது. மேலும் குடியேற்றங்கள் சிறிது காலத்திற்குபின் தாய் நாட்டிடமிருந்து பிரிந்த போவதையே விரும்புகின்றன என்பது அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரேஸில் போன்ற உதாரணங்களால் தெளிவாக்கப் பட்டிருந்தது. இதனால் புதிய குடியேற்றங்களை அமைப்பதில் அக்கறை குறைந்துகொண்டே வந்தது.

ஏகாதிபத்திய உணர்வு நசிந்துக் கொண்டே வந்தாலும் சில புதிய குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. ஃபிரான்சு அல்ஜீரியாவைத் தொடர்ந்து இந்தோ–சீனாவில் குடியேற்றங்களை அமைப் பதில் வெற்றி பெற்றது. மெக்ஸிகோவில் ஒரு காப்பு அரசை அமைக்க முயன்று ஃபிரான்சு தோல்வியுற்றதை முன்பே கண்டோம்.

பிரிட்டனுக்கு அதன் விரிந்த பேரரசைப் பொறுத்த மட்டில் பல பிரச்சினைகள் தோன்றின. கனடாவில் உரிமைகள்கோரி ஒரு சிறு புரட்சியே நடந்தது. டர்ஹாம் பிரபு நிலைமையை நேரில் ஆராய்ந்தறியக் கனடாவிற்கு அனுப்பப்பட்டார். கனடா விற்குப் பொறுப்புள்ள சுயாட்சி அளிக்கப்பட வேண்டுமென அவர் அறிக்கை கூறியது. பத்தாண்டுகளுக்குப்பின் பிரிட்டிஷ் நாடாளு மன்றம் கனடாவிற்குப் பிரிட்டிஷ் அரசிற்குட்பட்ட சுயாட்சி தருவதை அங்கீகரித்தது. கனடாவைத் தொடர்ந்து வெள்ளையர் வாழ்ந்த பிற பிரிட்டிஷ் குடியேற்றங்களும் இதே சலுகையைப் பெற்றன.

பிரிட்டிஷ் பேரரசில் இந்தியத் துணைக் கண்டம் பெரும் பிரச் சினைகளாக விளங்கியது. பிரிட்டிஷ் கிழக்கிந்திய வணிகக் குழு ஒன்று அரசியல் அதிகாரங்களை ஏற்று நாட்டை ஆண்டது. இவ் வாட்சியை எதிர்த்து 1857ஆம் ஆண்டில் ஒரு பெரும் புரட்சி மூண்டது. பெரும் பிரயாசைக்குப் பின்னரே புரட்சித் தீ அடக்கப் பட்டது. அடுத்த ஆண்டில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் தன் நேரடி ஆளுகையின் கீழ் இந்தியாவைக் கொண்டுவந்தது. இதனால் சுயாட்சி தரப்படாவிட்டாலும் எதிர் காலத்தில் ஒரு நாள் அதனை அடையலாம் என்ற நம்பிக்கை இந்திய மக்களுக்கு ஏற்பட்டது. தொல்லைகள் ஏற்பட்டாலும் தொடர்ந்து குடி யேற்றங்களை அமைப்பதில் பிரிட்டன் முனைந்து செயலாற்றியது. நியுஸிலாந்து (1840), ஹாங்காங் (1842), நேட்டால் (1843), மலேயா (1874) பிஜி தீவுகள் (1974) ஆகியவை பேரரசில் இணைந்தன. பிரிட்டிஷ் மக்களும் பல காரணங்களை முன்னிட்டு தம் குடியேற்ற நாடுகளுக்குப் பெருமளவில் குடிபெயர்ந்தனர்.

1870ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஐரோப்பாவில் ஏகாதிபத்திய உணர்வு திரும்பவும் தலை தூக்கியது. பெரும் வல்லரசுகள் இது வரை குடியேற்றங்களாக மாறாமல் இருந்த பின்தங்கிய பகுதிகளை அடைவதில் தங்களுக்குள் கடுமையாகப் போட்டியிட்டன. இக் காலத்தில்தான் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஆப்பிரிக்காக் கண்டம் பங்கிடப்பட்டது. ஆசிய நாடுகளும் ஏகாதிபத்திய வலையில் வீழ்ந்தன. இத்தகைய திடீர் மாற்றத்திற்கான காரணம் என்னவென்பதை எளிதாகக் கூறிவிட முடியாது. இருப்பினும் கீழ்க்காணும் காரணங்கள் அதனை ஊக்குவித்ததென ஒருவாறு கூறலாம்.

(1) **பொருளாதாரக் காரணம்:** தொழிற் புரட்சியின் காரணமாக ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் தொழில் உற்பத்தி அபரிமிதமாகப் பெருகியது. உற்பத்தியாகிக் குவிந்த பொருளை விற்பதற்குச் சந்தைகளைத் தேடுவதிலும் கடும் போட்டி நிலவியது. புதிய குடியேற்றங்கள் உபயோகமான சந்தைகளாக விளங்கும் என்ற உண்மை தெரிந்தபின் குடியேற்றங்களை நாடும் ஆர்வம் அதிகரித்தது. கடல் வாணிபம் பெருகியதால் தொலைவில் அமைந்த குடியேற்றங்களை விரைவில் அடைவது எளிதாயிற்று. குடியேற்றங்கள் கச்சாப் பொருள்களின் வற்றாத ஊற்றாகவும் விளங்கின. இதனாலும் குடியேற்றங்களைப் பெறும் ஆசை வளர்ந்தது.

(2) **சமூகக் காரணம்:** பிரிட்டன், ஜெர்மனி போன்ற நாடுகள் பொருளாதார முதன்மையும் நிறைவும் எய்தியபின் அந் நாடுகளிலிருந்த உயர்குடிகளைச் சேர்ந்த ஆர்வமும், கல்வியும் நிரம்பிய இளைஞர்கள் தத்தம் நாட்டில் போதிய வாய்ப்பின்றி மனம் சாம்பினர். அத்தகையோர்க்குக் குடியேற்ற நாடுகளின் படைகள், அரசாங்கம், வியாபார நிறுவனங்கள் எண்ணற்ற வாய்ப்புகளைக் கடைவிரித்து காத்திருந்தன. மேலும் ஐரோப்பிய நாடுகளில் உபரியாகவும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாகியும் இருந்த மக்கள் கூட்டம் குடியேற்ற நாடுகளை விருப்புடன் நாடிச் சென்றது.

(3) **அரசியல், இராணுவக் காரணங்கள்:** ஒரு குடியேற்றப் பேரரசை உருவாக்குதல் என்பது அந் நாட்டின் செல்வாக்கையும் பெருமையையும் மிகுதிப்படுத்தும் என்ற கருத்து பரவலாக நிலவியது. தான் அமைத்துள்ள பேரரசைக் காரணமாகக் காட்டிப் புதியதுறைமுகங்களையும் கடற்படைத் தளங்களையும் இராணுவத் தளங்களையும் அமைப்பதற்கென மேலும் மேலும் குடியேற்றங்களை பிரிட்டன்ஏற்படுத்தியது. ஏகாதிபத்திய ஆசை மிக்குற்ற ஜெர்

மனியும் இதே காரணத்தைக் கூறி குடியேற்றங்களைப் பெற முயன்றது. ஃபிரான்சு தன் நாட்டில் மக்கள்தொகை குறைந்து வருவதைக் காரணமாகக் கூறி புதிய குடியேற்றங்களை அமைத்து அங்கே படைகளைத் திரட்ட முயன்றது.

தேசிய உணர்ச்சி—தேசிய உணர்வு ஐரோப்பிய மக்களிடையே அரும்பியதே ஏகாதிபத்திய உணர்வு கிளைத்தெழுந்ததற்குக் காரணம் எனலாம். உலக வரைபடத்தில் தத்தம் தாய்நாட்டிற்குப் பெரும் பேரரசு இருப்பதாகக் குறிப்பிடுதலை ஒவ்வொரு நாட்டினரும் அவாவினர். உயர் நாகரிகம் பெற்ற ஒவ்வொரு நாடும் தன் கலாச்சாரத்தை, மொழியைப் பிற நாடுகளில் பரப்ப வேண்டிய கடமை தனக்கிருப்பதாகக் கருதியது. இவ்வுணர்வோடு கிருத்தவ சமயத்தைப் பரப்பும் ஆர்வமும் இணைந்தபோது குடியேற்றங்களைப் பெற்றே தீர வேண்டும்என்ற ஆசை, வெறியாக மாறியது.

புதிய ஏகாதிபத்திய உணர்வு 1870ஆம் ஆண்டிற்குப் பின் ஐரோப்பிய நாடுகளை ஆட்டிப் படைத்தது. ஐரோப்பிய மக்கள், சிறப்பாக அரசியல்வாதிகள் நாட்டுப் பற்றுணர்வைத் தூண்டும் ஒரு வலிமை மிக்க கருவியாக இவ்வுணர்வினை ஏற்றனர். உரிமை வாதிகள் (Liberals) ஏகாதிபத்திய நோக்கங்களைக் கடுமையாகச் சாடினாலும் மக்களது ஏகோபித்த ஆதரவுக்கு முன் அவர்களது கண்டனக் குரல் அடங்கிப் போயிற்று. ஏகாதிபத்திய வேட்கை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை விரைவிலேயே வரலாறு உலகிற்கு உணர்த்தியது.

# 11. 19ஆம் நூற்றாண்டில் கலாச்சாரம்

## (அ) புத்துணர்ச்சி இயக்கம்

மிகக் கூர்மையான அறிவு நுட்பங்களையும், மிக உயரிய கற்பனை உணர்வையும் கலை வடிவில் காணும் முயற்சியே புத்துணர்ச்சி இயக்கம் என வரையறுத்துக் கூறலாம். கற்பனை என்ற கோணத்திலிருந்து எதையும் நோக்குவதன் மூலம் பல கலை வடிவங்களைப் பாதித்திருப்பதோடு தத்துவ, வரலாற்றுத் துறைகளிலும் தன் சுவடுகளை இப் புத்துணர்ச்சி இயக்கம் பதித்திருக்கிறது. மிகைப்படுத்திக் கூறுதலையும், உணர்ச்சி வயப்படுதலையும் குறிக்கும் கருத்து என புத்துணர்ச்சி இயக்கத்திற்கு ஒரு தவறான விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு பொருளிலும் அழகைத் தேடுவது கலை; அந்த அழகைத் தேடும் ஆர்வத்தோடு புதுமையை நாடும் உணர்வையும் கலப்பது புத்துணர்ச்சி இயக்கம் ஆகும். 'புத்துணர்ச்சி உணர்வின் அடிப்படை அம்சங்கள் புதுமையை நாடும் ஆர்வமும் அழகை ஆராதிக்கும் பண்புமே ஆகும்.' (வால்டேர் பேடர்). மத்தியக் கால இலக்கியக் கர்த்தாக்களும், கலைவாணர்களும் சாதாரணப் பொருள்களிலும் அதிதீவிரக் கற்பனையின் மூலம் புதைந்து கிடக்கும் அழகினைக் கண்டனர்.

புதுமையை நாடும் ஆர்வமும், அழகை ஆராதிக்கும் பண்பும் ஆகிய இவ்விரண்டையும் தவிர, புத்துணர்ச்சி இயக்கத்தில் வேறு பல சிக்கல் நிறைந்த முக்கியாம்சங்களும் உண்டு. நீறு பூத்த நெருப்பு போல் உள்ளே உறங்கிக் கிடக்கும் மர்ம உணர்வு, அறிவார்ந்த தேடும் ஆர்வம், வாழ்வின் அடிப்படை எளிமைகள் பற்றிய உணர்வு ஆகியவையும் அதன் முக்கியக் கூறுகளாகும். பைரன், ஷெல்லி, கீட்ஸ் ஆகிய ஆங்கிலேயக் கவிஞர்களின் படைப்புக்களில் ரொமான்டிசிசம் முகிழ்ந்தது முதல், ஃபிரெஞ்சுப் புரட்சி நடந்த கொடுமையான நாட்கள், ஜெர்மனியில் கான்ட், ஹீகல் ஆகியோரால் உருவாக்கப்பட்ட இலட்சியவாதக் கருத்துகள் பர

விய நிகழ்ச்சி, அமெரிக்காவில் நடந்த அரசியல் புரட்சி ஈருக அனைத்து நிகழ்ச்சிகளும் புத்துணர்ச்சி மறுமலர்ச்சி 19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஏற்படக் கட்டியங்கூறி நின்றன எனலாம்.

புத்துணர்ச்சி இயக்கத்தின் பிற முக்கிய கூறுகளில் தலையாயவற்றினைப் பின்வருமாறு விளக்கலாம். அறிய முடியாத ஒன்றின் முன் அச்ச உணர்வு, அறிய முடிந்த ஒன்றின் முன் வியப்புணர்வு, எங்கெல்லாம் அழகு வெளிப்படுகிறதோ அதனை அறிந்து அனுபவிக்கும் உணர்வு ஆகிய இவற்றின் கூட்டுணர்வு தலைசிறந்ததாகும். வரலாற்றுக் கண்ணோட்டத்தில் காணும் பொழுது இவ்வுணர்வு பழைமையை விரும்பிக் கற்கும் ஆர்வத்தையும். மத்திய காலத்தைப் பற்றிய மதிப்பு வாய்ந்த எண்ண அலைகளையும் தோற்றுவித்தது.

அடுத்து புத்துணர்ச்சி இயக்க எழுத்தாளர்கள் திறனாய்வுத் துறையில் ஒரு பெரும் புரட்சியைச் செய்தனர். குறைபாடுகளை மட்டும் சுட்டிக் காட்டும் நிலையிலிருந்து அழகுகளை வெளிக்கொணர்ந்து காட்டும் அரிய கலையாகத் திறனாய்வு பரிணமித்ததற்குப் புத்துணர்ச்சி இயக்கமே காரணம். காலரீட்ஜால் தொடங்கி வைக்கப்பட்ட வரலாற்று முறையிலான திறனாய்வு குழப்பதிற்த்குப் பதில் ஒழுங்கான அமைப்பினை ஏற்றது.

இக் காலத்தில் உரைநடையிலும் கவிதையிலும், சிறப்பாக ரூஸோவின் எழுத்துகளில் வாழ்வின் அடிப்படை எளிமைகளைப் பற்றிய உணர்வினைப் பரக்கக் காணலாம். எல்லைகளைக் கடந்து நிற்கிற மனிதாபிமான உணர்வையும், மனிதனை மனிதனுக உயர்வு படுத்தி நோக்கும் உணர்வையும் கற்போர் நெஞ்சில் பதியும் வண்ணம் எடுத்துச் சொன்னவர், ரூஸோவே. அன்றாட வாழ்க்கையில் காணக்கூடிய மிக அற்பமான பொருள்களில் கூட புத்துணர்ச்சி இயக்கக் கவிஞர்கள் கவிதை படைப்பதற்கான உந்துதலைப் பெற்றனர்.

19ஆம் நூற்றுண்டைய ஐரோப்பிய இலக்கியத்தில் நாம் சந்திக்கும் புத்துணர்ச்சி இயக்கத்தில் பிற மாபெரும் இயக்கங்களில் காணப்படுவதைப் போன்ற திட்டவட்டமான குறைபாடுகள் விரவியுள்ளன. பொதுவான கருத்துகளைக் கொண்டிருக்கிற கொள்கைகளின் ஒரு பிரிவுதான் புத்துணர்ச்சி இயக்கம். இவ்வியக்கத்தின் ஆதரவாளர்கள் வாழ்வின் அன்றாடப் பிரச்சினைத் தீர்வு காணும் முயற்சியில் தங்கள் கவனத்தைத் திருப்பவே இல்லை. இவ்வியக்கம் தனி மனிதனைப் பற்றிக் கவலை பட்டதே

யொழிய மனிதர்களைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லை. இது வாழ்க்கையில் புகழுக்குரியதென மிகப் பழைமை வாய்ந்தவை, குரூரமானவை, புதுமையானவை, அழகானவை ஆகிய அனைத்தையும் வெகு எளிதாக அங்கீகரித்து விட்டது.

இக் கால இலக்கியம் புதிய காற்று கிடைக்கப் பெறாத ஒரு மனிதப் பிறவியைப் போல் சோர்வு அடைந்திருந்தது. புதிய காற்றைப் பெறும் ஆர்வத்தில் சில சாளரங்கள் உடையப்பட வேண்டியநிலை ஏற்பட்டது. அவசியமான நேரத்தில் தேவைப்பட்ட புதிய காற்றும் கிட்டியது; ரொமான்டிக் இலக்கியமும் தெளிவான அழகுகளை, அறிவாக்கத்தை, செறிவான சிந்தனையைப் பெற்றுத் தழைத்தது.

## ஐரோப்பிய இலக்கியத்தில் புத்துணர்ச்சி இயக்கம்

ஜெர்மனி: ஜெர்மனியின் இலக்கியச் சூழ்நிலை இங்கிலாந்தை ஒத்திருந்தது. பண்டைய ஃபிரெஞ்சு இலக்கிய மரபுகள் ஆங்கில இலக்கியத்தை வளப்படுத்தியதைவிட, ஜெர்மன் இலக்கியம் மீதான அதன் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. இதனை எதிர்த்த ஜோஹன், ஜேக்கப் போட்மெர் ஒரு ஜெர்மானிய தேசிய இலக்கியம் வளருவதற்கான அவசியத்தை வலியுறுத்தினார். இதன் விளைவாக ஜெர்மனியில் பல எழுத்தாளர்கள், புதிய உணர்வுடன் எழுத ஆரம்பித்தனர். மத்திய கால இலக்கியமும், கருத்து திடீரெனப் பிரபலமடைந்தன. ஜெர்மனியில் புத்துணர்ச்சி இலக்கிய இயக்கம் வெகு விரைவாக வளர்ந்தது. ஜெர்மன் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பும் பணியிலும் அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. கதே, ஷ்லீகல் சகோதரர்கள், நோவாலிஸ், பிரெண்டெனோ, ஆலந்து, ஆகியோர் இதன் வளர்ச்சிக்கு உரமூட்டினர்.

1788ஆம் ஆண்டில் எடின்பரோ ராயல் பல்கலைக் கழகத்தில் வாசித்த ஒரு கட்டுரையில் ஹென்றி மெக்கன்ஸி ஜெர்மானியப் புத்துணர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சியைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். சில ஆண்டுகளுக்குப் பின் வால்டேர் ஸ்காட், பர்கரின் ‘ஜெர்மானிக் கவிதை ஒன்றின் மொழிபெயர்ப்பைப் (மொழி பெயர்த்தவர் வில்லியல் டெய்லர்) படித்து அதன் அழகால் கவரப்பட்டார். ஜெர்மனி இலக்கியத்தை இங்கிலாந்தில் அறிமுகப் படுத்திய பெருமை டெய்லரையே சாரும்.’ ‘உங்களால் எனக்கு ஜெர்மன் கவிதையைப் படிக்க வேண்டும் என்ற தாகம் ஏற்பட்டது,’ என சதேயால் புகழ்ந்துரைக்கப்பட்ட டெய்லர் தாமஸ் கார்லைலுக்கு முன்னோடியாக விளங்கினார்.

ஜெர்மன் புத்துணர்ச்சி இலக்கியத்தின் ஒரு முக்கியக் கூறு செய்யுள் வடிவிலும் உரைநடையிலும் அமைந்த எண்ணிறந்த கதைகளாகும். ஜெர்மானியப் புத்துணர்ச்சி இயக்கம் தத்து வார்த்தமாகவும் குறை நிறைகளைத் தயக்கமின்றி எடுத்துகாட்டு வதாகவும், கோர்வையுடையதாகவும் விளங்கியது. கலைமயமான கற்பனையை வெளிக் கொணர்வது மட்டுமல்ல, இலக்கியம் ஜெர் மானியரைப் பொறுத்தவரை ஒரு மதமாகவே விளங்கியது. துன்பியல் இலக்கியமும், காதல் இலக்கியமும் வேறு எந்த நாட்டையும் விட ஜெர்மனியில் அதிக முக்கியத்துவம் பெற்று விளங்கியது. ஒரு நூலையோ அல்லது நாடகத்தையோ படிப்பது என்பது வாழ்வையும், விதியையும் மாற்றியமைக்கும் வல்லமை பெற்றிருந்தது. கலை என்று அவர்கள் ஆராதிப்பதை உண்மை வாழ்விலும் புகுத்த அவர்கள் முயன்றனர். இயற்கையும், உணர்ச்சிகளும் ஜெர்மானியர்களை வசப்படுத்தியதைவிட கவிதை, தத்துவம், இலட்சியம் ஆகியவை அவர்கள் மீது அதிக ஆதிக்கம் செலுத்தின. உதாரணமாக, ஷில்லரின் 'திருடர்கள்' என்ற புத்தகத்தைத் தொடர்ந்து வழிப்பறிக்கொள்ளை நாட்டில் வெகு சாதாரணமான நிகழ்ச்சியாகிவிட்டது. சுருங்கக் கூறின், ஆங்கிலப் புத்துணர்ச்சி இலக்கியம் வாழ்க்கையை வெகு எளிதாக எடுத்துக் கொண்டு நழுவிச் செல்ல முயல்கையில் ஜெர்மன் இலக் கியம் வாழ்க்கையைத் தீவிரமாகப் பிரதிபலிப்பதில் சிரத்தை காட்டியது.

ஃபிரான்சு : பிரான்சில் ஏற்பட்ட மாபெரும் அரசியல் புரட்சியைத் தொடர்ந்து புத்துணர்ச்சி இயக்கம் வலுப் பெற்றது. இதனால் ஆங்கில, ஜெர்மானிய இலக்கியங்களுக்கு இது பிந்திய தாகும். ஸ்காட், பைரன், கதே ஆகியோருக்கு ஓரளவிற்குக் கடன் பட்டுள்ள ஃபிரெஞ்சுப் புத்துணர்ச்சி இலக்கியம் அதனினும் குறைந்த அளவிற்கே பிறநாட்டு இலக்கியங்களைப் பாதித்தது. எனினும் ஃபிரான்சில் நிகழ்ந்த சமுதாய, அரசியல் எழுச்சி ஆங்கிலப் புத்துணர்ச்சி இலக்கியத்தை வெகுவாகப் பாதித்தது.

ஃபிரெஞ்சுப் புத்துணர்ச்சி இலக்கியத்தில் தலைசிறந்த இடத் தைப் பெறுபவர் ஜீன் ஜேக்விஸ் ரூஸோ. அவருடைய உணர்ச்சி பூர்வமான செல்வாக்கிற்கு ஆட்பட்டவர்கள் பிளேக், வொர்ட்ஸ் வொர்த், காலரீட்ஜ் ஆவர். காட்வினும், அவர் மூலம் ஷெல்லி யும் அவரது அறிவு பூர்வமான செல்வாக்கிற்கு ஆட்பட்டனர். இந்த ஆரம்பகாலக் கவிஞர்களை இயற்கையின் வெளித் தோற்றத் தில் தெரியும் அழகு, எளியவாழ்க்கை முறைகள் ஆகியவை கவர்ந்தன. ரூஸோ அறிவின் வழிநின்று ஆராய்ந்த கருத்துகள் பின்வருபவை ஆகும். மனிதனுக்குத் தாமாகத் தோன்றும்

உணர்வுகள் நல்லவை; ஏனெனில் அவை இயற்கையானவை. மனிதன் தீயவனுனதற்குக் காரணம், டாம்பீகமான செயற்கை வாழ்க்கையை மேற்கொண்டு இயற்கையை விட்டுத் தூர விலகிச் சென்றதே ஆகும். இந்த ஆரோக்கியமற்ற நிலேயிலிருந்து விடுபட அவன் இயற்கையன்னேயின் மடிக்குத் திரும்பவேண்டும். பல நூற்றுண்டுக்காலமாக மனித குல வரலாற்றில் மனிதன் உருவாக்கிவிட்ட சமுதாய அமைப்பினே உடைத்தெறிந்து புதிதாக ஓர் ஆரம்பத்தை ஏற்படுத்திஞலொழிய அவனுக்கு விடிவில்லே. ஏழைகளேச் செல்வந்தர்கள் சுரண்டவும், பலமற்றோரைக் கொடுங்கோலர்கள் நசுக்கவும், அரசியல் நிறுவனங்கள் பயன்படுகின்றன. அன்பைத்தவிர மனிதனே அடிமைப்படுத்தும் எந்த ஒரு சக்தியும் இருக்கக்கூடாது. தூய பகுத்தறிவின் துணேகொண்டே ஒரு புதிய சமுதாய அமைப்பினே உருவாக்க இயலும். இதே கருத்துகளேக் காட்வின் தமது ‘அரசியல் நீதி’ என்ற நூலில் வலியுறுத்திஞர். இந் நூலிஞல் கவரப்பட்ட ஷெல்லி. ‘அறிவிலும் குணத்திலும் மிக உயர்ந்த அனேத்தையும் பற்றி இதன் மூலம் நான் அறிந்துகொண்டேன்,’ எனப் புகழ்ந்துரைத்தார்.

ஆங்கிலக் கவிஞரான பைரன், புரட்சியின் அறிவு பூர்வமான கருத்துகளால் பாதிக்கப்படவில்லே. நெப்போலியனுடைய ஆளுமையாலும், எழுச்சியாலும் அவர் கவரப்பட்டார். பைரன் தன் கவிதைகளில் தன்னேக் கவர்ந்த பெரும் தலேவர்களின் பண்புநலன்களே வடித்துத்தந்தார். தன் வாழ்நாளின் இறுதியில் ஒரு அமைதியற்ற, தன்னலமிக்க இயல்பின் அற உணர்வு அற்ற நிலேயை உணர்ந்த பைரனின் கடைசிக் கவிதைகளில், ஒளிவிடும் சமுதாய உணர்வினேக் காணமுடிகிறது.

ஃபிரான்சில் புரட்சி தோன்றியபோது ஆங்கிலப் புத்துணர்ச்சி இயக்கக் கவிஞர்களான வொர்ட்ஸ்வொர்த், காவிரிட்ஜ், சதே ஆகியோரது கவிதைகளில் வளமிக்க கற்பனே களிநடம் புரிந்தது. ஆஞல், இரத்தம் சிந்துதல் அழிவு என்ற கட்டத்தைப் புரட்சி அடைந்தபோது இக் கவிஞர்கள் தளர்வடைந்தனர். புரட்சியை முழுமனதோடு வரவேற்றுப் பாடிய கவிஞர் ஷெல்லி ஒருவரே. அவர் உள்ளத்தைக் கொள்ளே கொண்டவை கருத்துகளே அன்றி நிகழ்ச்சிகள் அல்ல. காட்வினின் கொள்கைகளே ஏற்ற அவர் அப்போது நிலவிய துன்பகரமான, சிக்கல் நிரம்பிய சூழலே மனதில் கொள்ளவில்லே. இக் கருத்துகளேக் காட்வின் வெறும் உரைநடையில் அளித்தபோது ஷெல்லி அவற்றில் வண்ண மெருகையும், இசையையும் கலந்தளித்தார். ஷெல்லி புரட்சியை

ஒரு கருத்து என்ற முறையில்தான் கண்டாரேயன்றி ஒரு செம்மையான வரலாற்று நிகழ்ச்சி என்ற முறையில் அல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

## (ஆ) கலைகள்

இங்கிலாந்தில் தோன்றிய புத்துணர்ச்சி இயக்கத்தைச் சேர்ந்த ஓவியர்களில் ஜான் கான்ஸ்டேபிளும் வில்லியம் டர்னரும் குறிப்பிடத்தக்கவர்கள். வெண்பஞ்சு மேகக் குவியலையும், நீலவானத்தையும், பச்சைப்பசும் புல்தரைகளையும், இங்கிலாந்து நாட்டுக் கிராமப்புற அழகையும் ஓவியங்களாக்கி, இங்கிலாந்தில் இயற்கைக் காட்சி ஓவியர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார் கான்ஸ்டேபிள். நீண்ட வாழ்நாளைப் பெற்றிருந்த டர்னர் சற்றேறக் குறைய 20,000 ஓவியங்களைப் படைத்து இங்கிலாந்தின் மாபெரும் வண்ண ஓவியர் என்ற புகழைப் பெற்றார். இயற்கைக் காட்சிகளை வரைவதில் வல்லுனராக விளங்கியதோடு, புராண, வரலாற்றுக் கருத்துகளையும் அவர் சிறப்புற ஓவியமாக்கினார்.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராயல் கழகத்திலிருந்து பிரிந்து சென்ற சில ஓவியர்கள் நீர் வண்ண ஓவியச் சங்கத்தை (Watercolour Society) அமைந்தனர். இயற்கையின் வண்ண ஜாலங்களை நீர் வண்ண ஓவியமாகத் தீட்டிய கலைஞர்களுள் தலைசிறந்தவர்கள் தாமஸ் கெர்டின் (Thomas Girtin) ரிச்சர்டு பார்க்ஸ் போனிங்க்டன் (Richard Parks Bonington) ஆவர். இக் கலையில் வல்லவரான தாமஸ் லாரென்சின் ஓவியங்கள்—குறிப்பாக வியன்னு மாநாட்டில் பங்கு கொண்ட ராஜதந்திரிகளின்—உருவப்படங்கள் இறவாப் புகழ் உடையன.

வியன்னு மாநாட்டிற்குப்பின், ஃபிரான்சிலும் பல சிறப்பான ஓவியர்கள் தோன்றினர். நெப்போலியனால் லூவரில் திரட்டி வைக்கப்பட்டிருந்த இத்தாலிய, டச்சுக் கலைக்கருவூலங்களால் தூண்டப்பட்ட இளம் ஃபிரெஞ்சு ஓவியர்கள் பழைய கட்டுகளை மீறி வந்து புதிய ஓவியங்களைப் படைத்தனர். இன்னும் சிலர் இங்கிலாந்தின் இயற்கைக் காட்சி ஓவியங்களின் கலைப்பாணியைப் பின்பற்றினர். ஒளி, நிழல், வண்ணம் ஆகியவற்றை நுட்பமாகச் சித்தரிப்பதில் அக்கறையைக் காட்டிய இவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட பொருள்களின் வெளிக்கோடுகளைத் துல்லியமாகக் காட்டுவதில் கவனம் செலுத்தவில்லை.

ஃபிரான்சில் டேவிட்டிற்கும், டெலாக்ரேவிற்கும் (Delacroix) இடைப்பட்ட காலத்தில் புகழ் பெற்றிருந்த ஓவியர் ஜீன் அகஸ்ட் டொமினிக் இங்க்ரஸ் (Jean Auguste Dominque Ingres) ஆவார்.

சிற்பம், கட்டடக்கலை என்று பார்க்கும்பொழுது பண்டைய மரபுகளே பெரும்பாலும் பின்பற்றப்பட்டு வந்தன. நெப்போலியனது வெற்றி வளைவைத் (Arch of Triumph) திட்டமிட்டுத் தந்த பியர்ரி ஃபான்டேன் (Pirre Fountaine) நெப்போலியனது வீழ்ச்சிக்குப்பிறகும் அரசாங்கக் கட்டடக் கலைஞராகத் திகழ்ந்தார். ஃபிரான்சின் இளம் சிற்ப, கட்டடக் கலைஞர்கள் ரோமாபுரிக்குச்சென்று அங்குள்ள பழைமையான சின்னங்களைக்கண்டு அந்த முறையில் சிற்பங்களைத் தயாரிப்பதும், கனேவா (Canova) என்ற கலைஞரிடம் சிற்பக் கட்டடக் கலையைப் பயில்வதும் வழக்கமாக இருந்தது.

இசைக் கலை : இக் காலத்திய இசைப் பாடல்கள் தனித்துவம் பெற்று விளங்கின. இருந்தபோதிலும் பொதுவான சில புத்துணர்ச்சி இயக்கக் கருத்துகளை இவற்றில் காணலாம். பீத்தோவன் இசைப் பாடல்களிலும்கூட இக் கருத்துகள் அவ்வப்போது தலைநீட்டுகின்றன. பிற இசை வல்லுநர்கள் புத்துணர்ச்சி இயக்கக் கருத்துகளுக்கு வெளிப்படையாகவே ஆக்கமளித்தனர். ஜெர்மனியில் கார்ல் மாரியா வான் வீபர் (Carl Maria Von Webar) இசைக் கருவிகளைப் பயன்படுத்துதலிலும், வெவ்வேறு தாளக் கட்டுகளை அமைப்பதிலும் தனிப்புகழ் பெற்ருர். இத்தாலியர்களிடையே கியாச்சினே அன்டோனியா ரோசனி (Gioachino Antonio Rossini) மிகப் பிரபலமடைந்த இசையமைப்பாளர் ஆவார்.

இசையமைப்பாளர்களது பணி சிறக்கக் காரணமானவர்கள் இசைக் கலைஞர்களே. இணையில்லாத நிக்கோலோ பகானினி (Nicolo Paganini) ஐரோப்பாவெங்கும் வயலின் கச்சேரிகள் நடத்தினர். ஃபிரான்ஸ் லிஸ்ட் (France Liszt) என்ற அற்புதமான ஹங்கேரிய இசையமைப்பாளர் தம் பன்னிரண்டாவது வயதிலேயே மேடையேறி மக்களது உள்ளங்களைக் கொள்ளை கொண்டார். பியானேவில் இசைத்ததைக் காண வந்திருந்த பீத்தோவன் மகிழ்ச்சியால் கண்ணீர் பெருக்கி, அவரை முத்தமிட்டு வாழ்த்தினராம். பிரடெரிக்ஸ் பிராங்கியான் சோட்டினி என்ற போலிஷ் இசையமைப்பாளரும் தம் திறமையின் மூலம் புகழ் பெற்ற மற்றுமொரு கலைஞராவார்.

தத்துவம் : 1816ஆம் ஆண்டில் கார்ல் லட்விக் வான் ஹாலர் (Carl Ludvig Von Haller) என்ற ஸ்விட்சர்லாந்து நாட்டு

அறிஞர் 'அரசியல் விஞ்ஞானத்தின் மீட்சி' என்ற தமது நூலை வெளியிட்டார். மத்திய கால அரசியல், சமுதாயக் கருத்துகளை வரவேற்ற அவர் பொருளாதார, அரசியல் துறைகளில் தனி மனிதன் முக்கியத்துவம் பெறுவதை வெறுத்தார். இறைமை என்பது கடவுளின் கருணை என்று ஒப்புக்கொண்ட அவர், பொது மக்களின் விருப்பப்படி ஆட்சி நடைபெறவேண்டும் என்ற தத்துவத்தை எதிர்த்தார். இக் காலத்திய ஜெர்மன் சிற்றரசர்கள் பலருக்கு அவருடைய கொள்கை மிகவும் ஏற்புடையதாக இருந்தது.

உலகில் பொதுவாக ஒரு நெருக்கடி ஏற்படும்பொழுது, அதனின்றும் தப்பித்துக்கொள்ளப் பழைய காலத்திற்குத் திரும்பும் எண்ணம் எல்லோருக்கும் இருப்பதில்லை. மனிதரிடம் உள்ள இயற்கையான நற்குணங்களையோ அல்லது தெய்வீகச் சக்தியையோ அவர்கள் நம்புவதில்லை. மனிதன் தன் கீழான குணங்களை எதிர்த்துத் தன்னந்தனியாகப் போராடியே தீரவேண்டும் என்ற முடிவிற்கு அவர்கள் வந்திருந்தனர். ஆர்தர் சோபன்ஹார் (Arthur Schopenhaver) என்ற தத்துவஞானி இத் தனிமனிதத் தத்துவத்தை விதந்துரைத்தார். அவரது 'எண்ணமும் கருத்துமான உலகம்' என்ற நூலில் வாழவேண்டுமென்ற ஆசையை நிறைவேற்ற முடியாமல் ஓர் இடைவிடாப் போராட்டம் எல்லா மனிதர்களிடையே நடைபெறுகிறது. அதன் விளைவு துன்பமும் சோகமுமே என்ற தத்துவம் எடுத்துரைக்கப்படுகிறது. மேலும், போராட்டத்தில் வெற்றி பெற்றாலும் இறுதியில் சோர்வே மிஞ்சுகிறது. துன்பத்தில் உடன் கூட்டாளிகளாக இருப்போர்பால் தோன்றும் அனுதாபத்தின் விளைவே ஒழுக்கக் கட்டுப்பாடு. போராட்டத்திலிருந்து கலை, விஞ்ஞானம் ஆகியவைகளிடம் ஈடுபாடும், தன்னலமறுப்பும் தோன்றக்கூடும். சோபன்ஹாரின் உலகம் துன்பமயம் என்ற கொள்கை எல்லோராலும், குறிப்பாகக் கடவுள் நம்பிக்கை உடையவர்களாலும், இலட்சியக் கனவில் ஆழ்ந்து அமைதி தேடுபவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மெட்டர்னிக்கின் அரசியல் நடவடிக்கைகள் சோபன்ஹாரின் தத்துவத்தோடு ஒத்துப் போவதை நினைவில் கொள்ளவேண்டும்.

# 12. முதலாம் உலகப் போர் (1914—1918)

முதலாம் உலகப் போருக்குக் காரணமாக எந்த ஒரு நிகழ்ச்சியையும் குறிப்பாகச் சுட்டிக்காட்ட இயலாது. இருபது ஆண்டுகளாக ஐரோப்பாவில் ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் கூட்டு விளைவே இப் போராகும். இவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

முதலாவதாக, 1871-ல் ஐக்கியமடைந்த ஜெர்மனி, ஐரோப்பாவில் வலிமையுடன் காலமெல்லாம் திகழ்ந்த இங்கிலாந்து போன்ற நாடுகளையெல்லாம் விஞ்சுமளவிற்குப் புகழ் பெறவேண்டும் என விழைந்தது. புகழ் பெற வேண்டுமாயின் குடியேற்ற நாடுகளும், வலிமைவாய்ந்த கடற்படையும் இன்றியமையாதனை என்பதை உணர்ந்த ஜெர்மனி, அவற்றைத் தீவிரமாக அடைய வேண்டும் என ஈடுபட்டபோது பல ஐரோப்பிய நாடுகளின் வெறுப்பு, பகையைப் பெற்றுக்கொண்டது. இரண்டாம் வில்லியம் ஜெர்மானியப் பேரரசரானபின் ஜெர்மனியின் போக்கே அலாதியாக இருந்தது. சூரிய மண்டலத்திலும் தம் ஆதிக்கம் இருக்கவேண்டும் என்ற அளவிற்கு அவர் பேராசை (பெரும்வெறி) கொண்டிருந்தார். வலிமை வாய்ந்த கடற்படையை உருவாக்க முனைந்ததும், பெர்லினையும், பாக்தாதையும் இணைக்கும் புகைவண்டிப் பாதையை அமைக்கச் செயற்பட்டதும் ஐரோப்பிய நாடுகளின் பகையை ஜெர்மனிக்குச் சம்பாதித்துத் தந்தன. 1900, 1907 என்ற இவ்விரு ஆண்டுகளில் உருவாக்கப் பட்ட கடற்படைச் சட்டங்களால் இங்கிலாந்தின் பகையைத் தேடிக்கொண்டதுடன் அல்லாமல் இங்கிலாந்திடமிருந்து தனது முதல் எதிரி என்ற நினைவிலிருந்து தப்பமுடியாது என்ற நிலையும் ஏற்பட்டது ஜெர்மனிக்கு.

பெர்லின் மாநாட்டில் துருக்கியிடமிருந்து சலுகை எதையும் வேண்டிப் பெறாத ஜெர்மனி, துருக்கியின் 'விலை மதிப்பற்ற'

நட்பைப் பெற்றது. மேற்காசியாவினைத் தம் இலக்காகக் கொண்டு விட்ட கெய்சர், துருக்கியிடம் தாம் பெற்றிருந்த நன்மதிப்பைக் கருவியாகக் கொள்ள எண்ணினர். துருக்கி தொழில்மயமாவதற்காகப் பொருளாதார உதவியை அளவின்றி அளித்துத் திணறடித்தார். தனது போர் அனுபவமும் ஆற்றலும் மிக்க தளபதிகளைக் கொண்டு துருக்கியின் போர் வீரர்களுக்கான இராணுவப் பயிற்சி அளித்து வந்தார். இவ்விரு வசதிகளும் இடையீடின்றித் துருக்கிக்கு எளிதில் கிடைக்க வழிசெய்யும் பொருட்டு, பெர்லினுடன் துருக்கியின் தலைநகரான பாக்தாதை இணைக்கப் புகை வண்டிப் பாதை அமைக்கவும் முனைந்தார். இவற்றைக்கண்டு ரஷ்யாவும் இங்கிலாந்தும் மனம் புழுங்கின. 1871ஆம் ஆண்டிற்குப்பின் ஐரோப்பாவெங்கும் கட்டாய இராணுவப் பயிற்சி எனும் தொற்று வியாதி பரவிற்று. போர் என்பது ஒரு தேசியத் தொழில்; வெற்றி பெற்றவன் எவனோ அவன் பக்கமே நியாயம் இருக்கிறது; அரசியலில் கோழைத்தனம் அவமானகரமானது; அண்டை அயலாரிடம் அமைதியினால் பெறும் நன்மைகளைவிடத் துணிச்சலினாலும் போரினாலுமே பெரும்பயன் கிட்டும் என்ற ஜெர்மனியின் கொள்கைகளுக்கு ஐரோப்பா முழுவதும் மதிப்பும் வரவேற்பும் கிடைத்தது.

ஐரோப்பாவில் போர் மேகம் சூழத் தொடங்கிவிட்டது என்பதை மொராக்கோ விவகாரம் முன்னோடியாகக் காட்டிற்று. 1904ஆம் ஆண்டு பிரிட்டனும் ஃபிரான்சும் ஒப்புக்கொண்ட ஒப்பந்தப்படி மொராக்கோவில் தன் ஆதிக்கத்தைப் ஃபிரான்சு நிலைநிறுத்த விரும்பினால் தான்தடையாக இல்லாததுடன் அதற்குத் துணையாக இருப்பதாகவும் பிரிட்டன் இரகசிய விதியாக ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த விதியின் வண்ணம் மொராக்கோ சுல்தானை மிரட்டித் தனக்குமட்டும் அதிகச் சலுகைகள் தரவேண்டுமென்று ஃபிரான்சு கூறியது. ஃபிரான்சு தன் அதிகார ஆதிக்கத்தை மொராக்கோவில் நிலைபெறச் செய்ய இம் மிரட்டலைப் பயன்படுத்துகிறதோ என்ற எண்ணம் ஜெர்மனிக்கு ஏற்பட்டது. இதை எவ்வாறேனும் தடுக்கவேண்டும் என்று ஜெர்மனி விழைந்ததால், கெய்சர் வில்லியம் தாமே புறப்பட்டு வந்து மொராக்கோவில் உள்ள டான்ஜியர் (Tangier) துறைமுகத்தில் வந்திறங்கிச் சுல்தானைப் பேட்டி கண்டார். அங்கு நிகழ்த்திய உரை ஒன்றில் மொராக்கோ ஒரு சுதந்திர நாடென்றும், அங்கு எந்த ஒரு நாடும் தனி உரிமை பெறுவதோ அல்லது ஆக்கிரமிப்புச் செய்வதோ நடைபெற இயலாது என்றும் வலியுறுத்தினர். இதனால் எந்த நாட்டின் பின்பலத்தோடும் ஃபிரான்சு மொராக்கோவைக் கபளீகரம் செய்ய நினைத்தால் ஜெர்மனி அதைப்

பார்த்துக்கொண்டு வாளாவிராது என்பது தெளிவாயிற்று. போர் மேகங்கள் ஐரோப்பிய அரசியல்வானில் கவியத் தொடங்கின. 1880ஆம் ஆண்டில் மொராக்கோ பிரச்சினைக்கு ஓர் உடன் பாட்டின்மூலம் தீர்வுகண்ட ஐரோப்பிய நாடுகளைக் கூட்டி ஒரு மாநாடு நடத்துவதென யோசனை கூறப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் தலையீட்டால், இந்த யோசனை உருப் பெற்று, அல்ஜிசிராசில் (Algiciras) மாநாடு கூட்ட முடிவாயிற்று. 1906ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் நாள் கூடிய இந்த மாநாடு ஐரோப்பிய வரலாற்றுப் பாதையில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். 12 நாட்டுப் பிரதிநிதிகள் கூடிய அவ்வவையில் ஃபிரான்சிற்குத் துணையாகப் பழைய துணைவனை ரஷ்யாவும், புதிய துணைவனை இங்கிலாந்தும், அண்டை நாடான ஸ்பெயினும் நின்றன. அமெரிக் காவும், இத்தாலியுங்கூட ஜெர்மனியை விடுத்து ஃபிரான்சின் பக்கமே சார்ந்திருந்தன. ஜெர்மனிக்கு ஒரே துணை ஆஸ்திரியா தான். இம் மாநாடு, மொராக்கோவின் சுதந்திரத்தை ஏற்ற அதே நேரத்தில், அங்கு ஃபிரான்சு, ஸ்பெயின் நாடுகளின் உதவியோடு காவல் படையை அமைப்பதென்றும், இவற்றோடு இங்கிலாந்து, ஜெர்மன் நாடுகளின் கூட்டுப் பொறுப்பின்கீழ் ஒரு நாட்டு வங்கியை (National Bank) நிறுவி, அந் நாட்டின் நிதி, பொருளாதார நிலையை உயர்த்துவதென்றும் முடிவு செய்யப் பட்டது. இம் முடிவுகள் மொராக்கோவின் விவகாரத்தில் ஜெர்மனி தோற்றதையும், ஃபிரான்சு வெற்றி பெற்றதையுமே காட்டுகின்றன. மொராக்கோவில் அமைதியான முறையில் ஊடுருவும் உரிமை ஃபிரான்சிற்கே கிட்டியது. முதலிலேயே இங்கிலாந்தின் 'நேச நாடுகளைச் சூழவைத்துக் கொள்ளும் இயல் முறை'யால் (Encirclement Policy) ஜெர்மனி, ஆஸ்திரியாவைத் தவிர, வேறு, நண்பர்களற்ற நிலையில் நின்றது. இம் மாநாடு அந் நிலையை மேலும் உறுதிப்படுத்தியது.

இம் மாநாட்டிற்குப்பின், நடந்த முக்கிய நிகழ்ச்சி 1907ஆம் ஆண்டில் பாரசீகத்தைக் (Persia) குறித்து செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் இங்கிலாந்தும் ரஷ்யாவும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண் டதேயாகும். ஜெர்மனியின் பெர்லின்-பாக்தாத் இருப்புப் பாதை யின் அபாயத்தை இவ்விரு நாடுகளும் பூரணமாக உணர்ந் திருந்தன. பாரசீகத்தைத் தங்களுக்கெனப் பாதுகாக்க வேண்டும் என்ற பேராசை இவ்விரு நாடுகளுக்குமிருந்தது. எனவே, பார சீகத்தின் வடமேற்குப் பகுதியை ரஷ்யாவும், கிழக்குப் பகுதியை இங்கிலாந்தும் எடுத்துக்கொள்வதெனத் தீட்டப்பட்ட திட்டமே இவ் வொப்பந்தம்.

மொராக்கோப் பிரச்சினை 1911-ல் மீண்டும் மூண்டது. 1908ஆம் ஆண்டில் பழைய சுல்தானுக்குப்பதில் பதவியேற்ற

அவரது தம்பியை எதிர்த்து மக்களின் ஒரு பகுதியினர் கிளர்ந்து எழுந்தனர். அதை அடக்க ஃபிரான்சின் உதவியைக் கோரினர் புதிய சுல்தான். ஃபிரான்சும் அதனை ஏற்று மொராக்கோவின் தலைநகரான ஃபெஸ் (Fex) நகருக்கு ஒரு படைப் பிரிவை உடனே அனுப்பிவைத்தது. இதனால் அல்ஜிசிராஸ் ஒப்பந்தம் கிழிக்கப் பட்டதாக எண்ணிக் கோபமுற்ற ஜெர்மனி, மொராக்கோவில் தன் நலன்களைப் பாதுகாப்பதற்கெனக் கூறி, ஒரு போர்க் கப்பலை மொராக்கோவின் அகாடிர் (Agadir) துறைமுகத்திற்கு அனுப் பியது. இதைக் கண்ட இங்கிலாந்து சினமடைந்தது. திரும்ப வும் போர் அபாயம் ஐரோப்பாவைச் சூழ்ந்தது. ஆனால், சிக்கல் விரைவில் தவிர்க்கப்பட்டது. மொராக்கோவை ஃபிரான்சின் செல்வாக்கின்கீழ் விட்டுவிட வேண்டுமென்றும், ஃபிரெஞ்சுக் காங் கோவின் ஒரு பகுதியை ஜெர்மனி அடையவேண்டுமென்றும் சமரசம் செய்யப்பட்டது. அகாடிர் நெருக்கடியைத் தோற்று வித்த ஜெர்மனிக்கு இம் முடிவு ஒரு தோல்வியாகும்.

அகாடிர் சிக்கலில் ஐரோப்பிய நாடுகள் மூழ்கியிருந்தபோது இத்தாலி தனக்கெனச் சில ஆதாயங்களைச் சுருட்டிக் கொள்ளப் பார்த்தது. டிரிபோலியை (Tripoli) அடையவேண்டித் துருக்கி மீது போர் தொடுத்தது இத்தாலி. 1912ஆம் ஆண்டு அக் டோபர் மாதத்தில் பால்கன் போர் மூண்டதால் துருக்கி இத்தாலி யோடு சமாதானம் செய்துகொள்ள விழைந்து, வெர்சாயி உடன்பாட்டில் கையெழுத்திட்டது. இதனால் டிரிபோலியையும், ரோட்ஸ் (Rhodes) உட்பட 12 ஏஜியன் கடல் தீவுகளையும் இத்தாலி பெற்றது.

பால்கன் தீபகற்பமும் ஐரோப்பாவின் வெடி மருந்துக் கிடங்காக மாறிக்கொண்டு வந்தது. செர்பியாவில் ஒரு புதிய அரசவம்சம் அரியணையில் ஏறியவுடன் பால்கனில் வல்லமைச் சமநிலை சீரழிந்தது. ருமேனியா மட்டும் ஜெர்மனியையும் ஆஸ்திரியாவையும் அண்டியிருக்க பல்கேரியா, செர்பியா, மான்டி நீக்ரோ ஆகிய நாடுகள் அனைத்தும் ரஷ்யாவைச் சார்ந்திருந்தன. ஐரோப்பாவில் துருக்கியப் பேரரசும் சிதைந்து கொண்டு இருந்தது. அதிலும் மாசிடோனியாவில் நிர்வாகம் சீர்கெட்ட நிலையை அடையவே மக்களின் கிளர்ச்சியும், குழப்பமும், அதைத் தொடர்ந்து படுகொலைகளும் நிகழ்ந்தன. ஐரோப்பிய வல்லரசு நாடுகள் தலையிட்டுச் சில சீர் திருத்தங்களை நடை முறைக்குக் கொண்டு வந்தன. ஆனால், பிரச்சினைகள் தீர்ந்த பாடில்லை. இங்கிலாந்தும் ரஷ்யாவும் ஒருசேர ஒப்பந்தத்தால் இணைந்தபின், துருக்கியில் ஐக்கியத்தையும் முன்னேற்றத்தையும்

கோரி 'இளந் துருக்கியர்'களின் (Young Turks) தலைமையில் படைக் கலகம் மூண்டது. சுல்தான் அப்துல் அமீத் புரட்சியை எதிர்த்து நிற்க முடியாமல் பணிந்து மக்களுக்கு ஓர் அரசியலமைப்பை நல்கினர். புரட்சியை வெற்றிகரமாக முடித்த படைத் தலைவர்கள் துருக்கியின் ஆதிக்கத்திலிருந்த எல்லாக் கிறித்தவ மக்களுக்கும் முழு உரிமை அளித்ததாக முழங்கினர். கிறித்தவர்களுக்கு அளிக்கப்பட்டதாகக் கூறப்பெற்ற உரிமைகள் பெயருக்காகவே; உண்மையில் அப்துல் அமீதைவிட இப் புரட்சியாளர் கொடுங்கோலர்களாகவே இருந்தனர் என்பதைக் கிறித்தவ நாடுகள் உணர்ந்தன. ஆனல், துருக்கியில் இளந்துருக்கியினரின் கிளர்ச்சி வெற்றிபெற்றவுடன் ஐரோப்பிய வல்லரசுகள் மாசிடோனியாவில் சீர்திருத்தங்களை அமல் நடத்தும் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டன. அது மட்டுமின்றி ஆஸ்திரிய-ஹங்கேரி 'எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்பது போல் தன் பாதுகாப்பின் கீழிருந்த பாஸ்னியா, ஹெர்சிகோவிஞ என்ற இரு பகுதிகளையும் தன் ஆதிக்கத்துக்கு உட்படுத்திக்கொள்ள நினைத்தது. பல்கேரியா தன் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திய இரண்டாம் நாளே ஆஸ்திரிய-ஹங்கேரி பாஸ்னியா, ஹெர்சிகோவிஞப் பகுதிகளைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. இந்தச் செய்தியால் ரஷ்யாவும் செர்பியாவும் மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளாயின. இங்கிலாந்தும் தன் ஆட்சேபத்தைத் தெரிவித்து, ஒரு மாநாட்டைக் கூட்டவேண்டுமென வற்புறுத்தியது. ஆனல், ஆஸ்திரியாவும், பல்கேரியாவும் துருக்கிக்கு இழப்பீட்டுத் தொகை அளிப்பதாகக் கூறின. இதனல் மாநாட்டு யோசனை கைவிடப்பட்டது. துருக்கிக்கு இழப்பீடு கிடைத்தது. பல்கேரியா தர ஒப்புக்கொண்ட பணத்திற்கான பொறுப்பை ரஷ்யா ஏற்று, அந் நாட்டின் நன்றியுணர்வையும் பெற்றது. ஆனல், பாஸ்னியா, ஹெர்சிகோவிஞவிற்காகக் காலமெல்லாம் ஏங்கியிருந்த செர்பியா இலவுகாத்த கிளியாயிற்று. இனத்தாலும் மொழியாலும் செர்பியர்களுக்கே உடைமையாக வேண்டிய பகுதிகள் கைநழுவிப் போனதால் செர்பியாவின் நெஞ்சில் அந்த ஏமாற்றம் பெரிய வடுவை உண்டாக்கியது. செர்பியர்களை ஒரு கொடியின் கீழே அமைப்போம் என்றிருந்த எண்ணம் பொய்யாய்க் கனவாய்ப் போய்விடவே அந் நாட்டு இளைஞர்தம் நெஞ்சங்களில் ஆஸ்திரியாவுக்கு எதிரான வெறுப்புணர்ச்சி பரவி வளர்ந்தது. அதுவே பேரியக்கமாக உருவெடுத்தது. செர்பியாவைச் சமாதானப்படுத்த ஐரோப்பிய வல்லரசுகள் முனைந்தும் பயனற்றுப்போயிற்று.

ஆஸ்திரியா செர்பியாவின் மனநிலையை நன்கு உணர்ந்திருந்தது. இருப்பினும் அச்சுறுத்தியாவது ஆதிக்கத்தை ஒத்துக்

கொள்ள வைக்க முயன்று ஆஸ்திரியா அதில் வெற்றியும் கண்டது. பின்னுளில் நெருக்கடியான கட்டத்தில் தன் ஒளிவீசும் படைக் கலங்களுடன் துணை நின்றதால்தான் ஆஸ்திரியா இவ்வரிய வெற்றியைப் பெற முயன்றது எனப் பெருமை பேசியது ஜெர்மனி. எப்படியிருந்தபோதும் செர்பியரின் இதயங்களில் கொழுந்து விட்டெரிந்துகொண்டிருந்த தேசியக் கனலை அணைக்க ஆஸ்திரியாவாலும் இயலவில்லை. அக் கொடிய தீயின் விளைவுகளிலிருந்து உலகமும் தப்பமுடியவில்லை என்பதைப் பின்னுளில் வரலாறு உணர்த்தியது.

ஐரோப்பாவில் துருக்கியப் பேரரசின் வீழ்ச்சி வல்லமைச் சமநிலையைத் தடுமாறும்படி செய்தது. செர்பியா, பல்கேரியா, ருமேனியா, கிரீசு ஆகிய நாடுகள் துருக்கியப் படையைத் தோற்கடித்துத் தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொண்டன. பாஸ்னியாவை இழந்ததால் ஏற்பட்ட ஏக்கத்தையும் அவமானத்தையும் துடைத்துத் துருக்கிப் பேரரசின் சில பகுதிகளைத் தன்னுடன் இணைத்துக்கொண்டு செர்பியா வெற்றிப் புன்னகை பூத்தது. மேலும், செர்பியாவும் பல்கேரியாவும் தங்கள் விடுதலைக்கும் ஐக்கியத்திற்கும் வல்லரசுகளை இனி நம்பிப் பயனில்லை எனத் தெளிவாக உணர்ந்துகொண்டன. ‘தன் கையே தனக்குதவி’ என்ற கொள்கையின் அடிப்படையில் இணைந்து செயலாற்றுவதென முடிவெடுத்தன. இக் கருத்தை கிரீசும், மான்டிநீக்ரோவுங்கூட ஏற்றதால், ‘பால்கன் லீக்’ பிறந்தது. ‘பால்கன் லீக்’ துருக்கியையே தன் முதல் எதிரியாகக் கருதியது. பால்கன் மக்களிடம் அக்கறையும் அனுதாபமும் அன்பும் கொண்ட ரஷ்யாவின் உதவியால் ஆஸ்திரியா, ஜெர்மனி இவற்றைத் தலையிடாதவாறு தடுத்து நிறுத்தி, துருக்கியுடன் போரை வெற்றிகரமாக நிகழ்த்திப் பால்கனை விடுவிப்பதே ‘பால்கன் லீக்’கின் குறிக்கோளாகும். சண்டைக் கோழிகள் போலக் கொக்கரித்துக் கொண்டிருந்த இவற்றின் போக்கைக்கண்ட ரஷ்ய அயல்நாட்டு உறவு அமைச்சர் சாசனேவும் (Sasanov) ஃபிரெஞ்சுத் தலைமை அமைச்சர் பாயின்கரேயும் (Poincare) இவற்றை எச்சரித்தனர். ஆனுல், இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது 1912ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் நாள் மான்டிநீக்ரோ துருக்கியின்மீது போர் தொடுத்தது. பால்கன் லீகின் மற்ற உறுப்பினர்கள் மான்டிநீக்ரோவின் பக்கம் சேர்ந்தனர். முதல் பால்கன் போர் தொடங்கியது. வல்லரசுகளும் துருக்கியும் எதிர்பார்த்ததற்கு மாருக, பால்கன் நாடுகள் வெற்றிக்குமேல் வெற்றியாகக் குவித்தன. ஆரம்பத்தில் கிரீஸ், மாசிடோனியாவினுள் நுழைந்து சலோனிகாவரை முன்னேறியது. பல்கேரியாவும் துருக்கிப் படை

களை லுலேபர்காஸ் (Lulehburgos) என்னுமிடத்தில் தோற்கடித்தது. ஏட்ரியானோபிள் (Adrionople) நகரும் முற்றுகையிடப் பட்டது. துருக்கியின் தோல்வி ஐரோப்பிய நாடுகளுக்கும், துருக்கிக்கும் வியப்புக்கலந்த அதிர்ச்சியையும், அதிர்ச்சி கலந்த வியப்பையும் முறையே ஏற்படுத்தியது. 1912ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் இலண்டனில் கூடி இப் போரை நிறுத்த வழிகளை ஆராய்ந்தனர். ஏட்ரியானோபிள் தனக்கு வேண்டுமெனப் பல்கேரியா பிடிவாதமாகக் கூறியது. துருக்கி அதற்கு ஒப்பவில்லை. இதனால் போர் தொடர்ந்தது. 1913ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஏட்ரியானோபிளையும், ஜனீனு நகரையும் துருக்கி இழந்தது. ஏப்ரல் மாதத்தில் ஸ்குட்டாரியும் விழுந்தது. படுதோல்வி அடைந்த நிலையில், துருக்கி சமாதானத்தைக் கோரியது. மே 30ஆம் நாள் இலண்டன் உடன்பாடு ஏற்பட்டது.

இவ்வுடன்பாட்டால் ஐரோப்பாவிலிருந்த துருக்கிப் பேரரசின் பகுதிகள் பால்கன் லீக் நாடுகளுக்கு வழங்கப்பட்டன. ஆஸ்திரியாவும் இத்தாலியும் மான்டிநீக்ரோ விரிவடைவதை விரும்பாததால் அல்பேனியா (Albania) என்ற புதிய நாடு உருவாக்கப் பட்டது. வல்லரசுகளின் விருப்பப்படி கிரீட் (Crete) தீவு கிரீசுக்குக் கொடுக்கப்பட்டது. பெரிய நாடுகளின் உதவியைப் பெறாமல் ஒன்றுபட்டுப் பணியாற்றியதன் மூலம் நான்கு சிறுநாடுகள், பால்கன் தீபகற்பத்தில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தின. ஆனால், இப் பெரும் விளைவை ஏற்படுத்திய இலண்டன் உடன்பாடு குறுகிய காலமே உயிர் பிழைத்திருந்தது.

ஒன்றுபட்டுத் துருக்கியின் வீழ்ச்சிக்கு வழிசெய்த பால்கன் நாடுகளிடையே வேற்றுமைகள் தோன்றி வளர்ந்தன. அதிலும் செர்பியாவும் பல்கேரியாவும், மாசிடோனியாவைப் பிரித்துக் கொள்வதில் சண்டையிட்டன. கிரீசும் மாசிடோனியா வேண்டுமெனக் கேட்டது. பல்கேரியா துருக்கியின் தோல்விக்குத் தானே காரணம் எனக் கூறி அதிகப் பங்கு கோரி, கிடைக்காமற் போன போது தான் விரும்பியதை அடையப் போர்புரிவதே நலம் என்ற முடிவுக்கு வந்தது.

1913ஆம் ஆண்டு ஜூன் இறுதியில் இரண்டாம் பால்கன் போர் மூண்டது. பல்கேரியாவின் ஆணவத்தால் வெறுப்பு அடைந்திருந்த ருமேனியாவும் எதிர்த் தரப்பில் செர்பியாவோடும் கிரீசோடும் இணைந்தது. துருக்கியும் சமயம் பார்த்து, பல்கேரியா மீது பாய்ந்தது. நான்குபுறமும் எதிரிகளால் சூழப்பட்ட பல்கேரியா போரைத் தொடர்ந்து நடத்தமுடியாது சமாதா

னத்தை வேண்டியது. ஆகஸ்டு மாதம் புகாரெஸ்ட் உடன்பாடு (Treaty of Bucharest) ஏற்பட்டது. மாசிடோனியாவை செர்பியாவும், கிரீசும் பகிர்ந்துகொண்டன. ருமேனியா தான் விரும்பிய நிலப்பகுதியைப் பெற்றது. துருக்கிக்கு த்ரேசும் (Thrace) ஏட்ரியாநோபிளும் கிடைத்தன. பல்கேரியா நிலப்பரப்பிலும், பெருமையிலும் சிறுத்துவிட்டது. புகாரெஸ்ட் உடன்பாட்டைக் கிழித்தெறியும் தருணத்திற்காக ஆவலோடு காத்திருந்தது.

இவ்விரு பால்கன் போர்களும் துருக்கியின் வீழ்ச்சியைத் தெளிவாகக் காட்டி வரப்போகும் பேரபாயத்திற்குக் கட்டியம் கூறின. பால்கன் நாடுகளான கிரீசு, செர்பியா போன்றவை விரிவும் புகழும் அடைந்ததால் ஐரோப்பிய அரசியலில் முக்கியத்துவம் பெறமுயன்றன. பல்கேரியா மட்டும் கர்வத்தால் தான் பெற்ற இலாபங்களை இழந்து வாடி நின்றது. செர்பியாவின் வளர்ச்சியைக்கண்டு மனப்புழுக்கம் அடைந்த ஆஸ்திரியா எவ்வாறேனும் அந் நாட்டின் பெருமையைக் குலைக்க மனம் கொண்டது. வாய்ப்பு விரைவிலேயே கிட்டியது.

1914ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆஸ்திரியப் பட்டத்து இளவரசர் ஃபிரான்சிசு பெர்டினண்டும் அவர் மனைவியும் பாஸ்னியாவிற்கு அரசாங்க முறையில் வருகை தந்தனர். பாஸ்னியாவின் தலைநகரான செராஜிவோ நகரில் இளவரசரைக் கொல்ல நடந்த முதற் சதி தோற்றது. ஆனால், இரண்டாம் முறை அம் முயற்சி வெற்றி பெற்றது. ஜூன் 28ஆம் நாள் ஒரு செர்பிய இளைஞனின் குண்டுகளுக்கு இளவரசரும், அவர் மனைவியும் இரையாயினர். இப் படுகொலை நிகழ்ந்த நாள் செர்பிய மக்கள் துக்கம் அனுஷ்டிக்கும் நாளாக இருந்தது. சில நூற்றாண்டுகளுக்கு முன் அந்தத் தேதியில்தான் அவர்கள் துருக்கியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டனர். இப் படுகொலைச் செய்தியைக் கேள்வியுற்று ஆஸ்திரியா அதிர்ச்சி அடைந்தது. இதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்துப் பழிவாங்கத் துடித்தது. ஆஸ்திரிய ஒற்றர்கள், கொலை செய்த செர்பிய இளைஞனுக்கும் செர்பிய அரசிற்கும் தொடர்பு உண்டென நிரூபிக்க இயலாது எனக் கூறியும், ஆஸ்திரிய அயல் நாட்டு உறவு அமைச்சரான பெர்ச்டோல்டு (Berchtold) பிரபு அதை ஒப்புக்கொள்ளத் தயாராகவில்லை.

ஆஸ்திரியச் செய்தித்தாள்களும், செர்பியாவைக் கொலையாளிகளின் நாடு என வர்ணித்து மக்களிடையே துவேஷத்தைப் பரப்பின. ஜெர்மனியும், செர்பியாமீது ஆஸ்திரியா எடுக்கப்போகும் நடவடிக்கைகளுக்கு நிபந்தனை ஏதுமற்ற ஆதரவு அளிப்பதாக உறுதி கூறியது. இதனால் துணிச்சல் மிக அடைந்த

ஆஸ்திரியா ஜூலை 23ஆம் நாள் உலகையே பிரமிப்பில் ஆழ்த்திய எச்சரிக்கை ஒன்றைச் செர்பியாவுக்கு அனுப்பியது. அதிலிருந்த பத்து நிபந்தனைகளில், செர்பியாவில் ஆஸ்திரியாவிற்கு எதிராக நடைபெற்று வரும் பொய்ப் பிரச்சாரம் தடை செய்யப்பட வேண்டும் என்பதும், அதில் ஈடுபட்டிருந்த படை, அரசாங்க அதிகாரிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஆஸ்திரியாவிற்கு உடனே தரப்படவேண்டும் என்பதும், ஆஸ்திரிய இளவரசரின் படுகொலை பற்றிய விசாரணையை ஆஸ்திரிய அதிகாரிகள் செர்பியாவில் நடத்த அனுமதி வேண்டும் என்பதும் குறிப்பிடத் தக்கவை. அப் படுகொலைக்கு செர்பிய அரசே காரணம் என்று அதில் தெளிவாகக் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது. 48 மணி நேரத்திற்குள் இவற்றை முழுமையாக ஒப்புக்கொண்டதாக செர்பிய அரசரிடமிருந்து பதிலை எதிர்பார்த்தது ஆஸ்திரிய அரசு. மிகக் கடுமையான பதங்களையும் நிபந்தனைகளையும் கொண்டிருந்த இவ்வெச்சரிக்கையைத் தன்மானம் உள்ள எந்த நாடும் ஒப்புக்கொள்ளாது. ஒப்புக்கொள்ளக்கூடாது என்பதே ஆஸ்திரியாவின் நோக்கமாகும். இந் நிலையில் இங்கிலாந்து, ஃபிரான்சு, ரஷ்யா ஆகிய நாடுகள், அரச தந்திரமுறை மூலம் தீர்வுகண்டு போரைத் தவிர்க்க செர்பியாவிற்கு அளிக்கப்பட்ட காலக் கெடுவை நீடிக்கும்படி ஆஸ்திரியாவை வேண்டின. ஆஸ்திரியா மறுக்கவே அவை செர்பியாவை அமைதி காக்கும் படி கோரின. இதன் விளைவாக செர்பியா ஆஸ்திரியாவின் நிபந்தனைகள் பலவற்றை ஏற்பதாகவும், ஆஸ்திரியாவிற்குத் திருப்தி ஏற்படாவிட்டால் ஐரோப்பிய மாநாடு ஒன்றைக் கூட்டிப் பிரச்சினைக்கு முடிவு காணலாம் என்றும் பணிவோடு பதில் அனுப்பியது.

செர்பியா, எதிர்பாராத அளவிற்கு வளைந்து கொடுத்தும், ஆஸ்திரியாவின் மனம் கனியவில்லை. செர்பியாவை வழிக்குக் கொண்டுவரப் போர் ஆயத்தங்களில் ஈடுபட்டது. ஸ்லாவ் நாடான செர்பியா தன் கண்ணெதிரே நசுக்கப்படுவதை ரஷ்யாவால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. பால்கன் பிரச்சினை ஐரோப்பியப் பிரச்சினையாதலால் தீர்வுகாண மாநாடு கூட்டப்படவேண்டும் என ரஷ்யா வற்புறுத்தியது. ஆஸ்திரியா, இப் பிரச்சினை தனக்கும் செர்பியாவுக்கும் இடையே உள்ளது என்றும், அந்நியரின் தலையீடு கூடாது என்றும் தெளிவாகக் கூறிவிட்டது. போர் மூண்டால் செர்பியா தனித்திருக்காது. ரஷ்யா உதவிக்கு விரையும். உடன்பாடு காரணமாக பிரிட்டனும் ஃபிரான்சும் ரஷ்யாவின் பக்கம் சேரும். இதனால் பெரும்போர் உருவாகும் என்று தெரிந்திருந்தும் முன்வைத்த காலைப் பின்வைக்க ஆஸ்திரியா

விரும்பவில்லை. ஜெர்மனியின் துணை தனக்கு உண்டென்ற நினைப்பில் ஆஸ்திரியா எதற்கும் துணிந்தது.

பிரிட்டனின் அயல்நாட்டு உறவுச் செயலர் சர் எட்வர்டு கிரே (Sir Edward Grey) பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நாடுகளின் மாநாட்டைக் கூட்டக் கருத்துத் தெரிவித்தார். ஜெர்மனி, இதை ஏற்கவில்லை. அமைதியான முறையில் தீர்வுகாண வழியே இல்லாமல் போய்விட்டது.

படுகொலை நிகழ்ந்து சரியாக ஒரு மாதம் கழித்து ஜூலை 28ஆம் நாள் ஆஸ்திரியா செர்பியாமீது போர் தொடுத்தது. மூன்று நாள்களுக்குப் பின் ரஷ்யா தன் படைகளை எல்லை நோக்கி முன்னேற ஆணை பிறப்பித்தது. இது போர் தொடுப்பதற்குச் சமமாகும் என ஆட்சேபித்த ஜெர்மனி 12 மணி நேரத்திற்குள் தன் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும்படி ரஷ்யாவை எச்சரித்தது. ரஷ்யா பதிலேதும் அனுப்பவில்லை. ஆகஸ்டு முதலாம் நாள் ஜெர்மனி ரஷ்யாமீது போர் தொடுத்தது. ரஷ்யாவின் உதவிக்கு ஃபிரான்சு விரையும் எனக் கருதி ஃபிரான்சுமீதும் போர் தொடுத்தது ஜெர்மனி. ஜெர்மனி மனம் வைத்திருந்தால் போரைத் தவிர்த்திருக்கலாம்.

பிரிட்டன்மட்டும் இன்னும் போரில் கலக்கவில்லை. உண்மையில் அமைதியான முறையில் தீர்வு ஏற்படப் பல முயற்சிகளில் ஈடுபட்ட பிரிட்டன் எண்ணியதற்கு மாறாக, பால்கனில் கிளம்பிய பொறி பெருந்தீயாக உருவெடுத்துவிட்டது. ஃபிரான்சை ஜெர்மனி தாக்கினால் போரில் கலந்துகொள்ளலாம் என்ற நிலையில் பிரிட்டன் இருந்தபோது ஜெர்மனி வேறு ஒரு செயல்மூலம் பிரிட்டனைப் போரில் ஈடுபடும்படி செய்தது.

ஐரோப்பாவில் இருந்த பெல்ஜியம், லக்சம்பர்க், சுவிட்சர்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் அவை அமைந்திருந்த இடத்தின் காரணமாக நடுநிலை நாடுகளாக ஐரோப்பிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இவற்றின் நடுநிலைபற்றிய உடன்பாடுகளின்படி இவை பிற நாடுகளைத் தாக்கவும் முடியாது. பிற நாடுகள் இவற்றைத் தாக்கவும் கூடாது. எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வுடன்பாடுகள் பின்பற்றப்பட்டு வந்தன. ஆனால், ஆகஸ்டு 2ஆம் நாள் ஜெர்மனி பெல்ஜியத்தின் வழியாக ஃபிரான்சிற்குத் தன் படைகள் செல்ல அனுமதி கோரியது. பெல்ஜியம் வலுவற்ற சிறிய நாடாயினும் சர்வதேச விதிமுறைகளைக் காக்க உறுதிகொண்டு ஜெர்மானியப் படைகளுக்கு வழி விடுவதில்லை எனத் தீர்மானித்தது. ஆனால், அது

தன் முடிவை அறிவிக்கும் முன்னரே ஜெர்மனியின் படைகள் பெல்ஜியத்தை மிதித்து நசுக்கிக்கொண்டு முன்னேறின. இதனால் பெல்ஜியத்தின் நடுநிலைமையைக் காக்க வேண்டியும் ஃபிரான்சிற்கு உதவி புரிவதற்காகவும் தற்காப்பிற்காகவும் உடனே போரில் குதிக்க வேண்டிய நிலை பிரிட்டனுக்கு ஏற்பட்டது. ஐரோப்பா முழுவதும் போர்க்கோலம் பூண்டுவிட்டது. விரைவில் போர் மேகங்கள் உலகையே சூழ்ந்துகொண்டன. முதல் உலகப் பெரும்போர் தொடங்கிவிட்டது.

## போரின் போக்கு

ஜெர்மானியர் பெல்ஜியத்தைப் பிடித்தபின் ஃபிரான்சின் எல்லையில் நுழைந்தனர். பிரிட்டிஷ் படை மார்ன் (Marne) என்னுமிடத்தில் ஃபிரெஞ்சுக்காரருக்கு உதவத் தயாராய் நின்றது. ஆனால், ஜெர்மானியர், ஃபிரெஞ்சுப் படைகளை மின்வேகத் தாக்குதலால் முறியடித்து வெர்டூன் கோட்டையைப் பிடித்தனர். மார்ன் நதியைத் தாண்டிப் பாரிசை நோக்கி அவர்கள் முன்னேறினர். நேச நாடுகள் மிகுந்த நெருக்கடிகளிடையே இருந்த போதும் தளபதி போச்சின் (Poch) திறமையால் ஜெர்மானியாரை மார்ன் நதிக்கு அப்பால் விரட்ட முடிந்தது. இவ்விதம் மார்ன் போர்க்களம் உலகப்போரின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றது. ஜெர்மானியர் குழிச் சண்டையில் ஈடுபட்டு ஃபிரெஞ்சுக்காரருக்குத் தொடர்ந்து தொல்லைகள் தரலாயினர். மேலும், பெல்ஜியத்தின்மூலம் இங்கிலீஷ் கடற்படைக்கும் துன்பம் தரலாயினர். ஆனால், ஆங்கிலேயர் உள்ளம் தளராது நின்று ஜெர்மானியர் முன்னேறுதவாறு தடுத்தனர்.

ஜெர்மனியின் கிழக்குப் பகுதியில் ரஷ்யப் படைகள் முன்னேறி வந்தன. ஜெர்மன் தளபதி ஹிண்டன்பர்க் அவற்றை முறியடித்தார். ஆஸ்திரியாவிற்குள் நுழைந்த ரஷ்யப் படைகள் வெற்றி அடைந்தாலும் ஆஸ்திரிய உதவிக்கு வந்த ஜெர்மனி அங்கும் அவைகளை முறியடித்தது. இத்தாலி ஜெர்மனியோடு இணைந்திருந்தாலும் 1914ஆம் ஆண்டின் இறுதியில் ஜெர்மனியிடமிருந்து பிரிந்தது. நேச நாடுகளின் உதவியோடு ஆஸ்திரியாவிடமிருக்கும் இத்தாலிய நிலங்களை அடையவேண்டுமென்பதே அதன் விருப்பம்.

ஜெர்மனியின் வற்புறுத்தலின் பேரில் துருக்கியும் அதன் பக்கம் சேர்ந்தது. இதனால், ரஷ்யாவுக்கும் மற்ற நேச நாடுகளுக்குமிடையே தொடர்பு அறுந்தது. இதைத் தவிர்க்க ஆங்கிலேய ஃபிரெஞ்சுக் கடற்படை டார்டனல்சைக் கைப்பற்ற முயன்றது. இம் முயற்சி வெற்றிபெறவில்லை. அடுத்து, கால்லி

போலி (Gallipoli) தீபகற்பத்தில் நேசப் படைகள் இறங்க முயன்று அதிலும் தோற்றன.

செர்பியா ஆஸ்திரியாவை எதிர்த்துத் தீவிரமாகப் போரிட்ட போதும் 1915-ல் பல்கேரியாவாலும் தாக்கப்பட்டதால் பேரழிவை அடைந்தது. இவ்விதம் 1915-ல் நேச நாடுகள் பல தோல்விகளால் இடிந்து போயின.

நேச நாடுகள் இரு பெரும் திட்டங்கள் தீட்டின. அவர்களது தளராத உறுதியால் வெர்டூன் கோட்டை ஜெர்மானியரிடம் சிக்காமல் தப்பியது. அடுத்து சோம் (Some) போர்க்களத்தில் ஆங்கிலேய ஃபிரெஞ்சுப் படைகள் ஜெர்மானியரை விரட்ட முழுமூச்சுடன் முயன்றன. ஜெர்மானியர் பக்கம் பலத்த சேதம் ஏற்பட்டது. ரஷ்யர்கள் ஆஸ்திரியாவில் பெற்ற சில வெற்றிகளைக் கண்டு ருமேனியா ரஷ்யாவுடன் சேர்ந்தது. விரைவில் ஓர் ஆஸ்திரிய ஜெர்மானியப் படை ருமேனியாவை அழித்துத் தலைநகரான புகாரெஸ்ட்டைப் பிடித்தது. 1916-ல் கடலிலும் ஒரு பெரும் போர் நடந்தது. ஜட்லண்ட் போர்க்களம் இரு தரப்பிலும் பெரும் சேதங்களைக் கண்டது. அதேசமயம் ஜெர்மன் கடற்படைப் பிரிவைச் சேர்ந்த எம்டன், டிரஸ்டன் என்ற போர்க் கப்பல்கள் வேறு இடங்களில் சேதாரங்களை விளைவித்தன. இவ்வாண்டிலேயே நேச நாடுகளுக்கு நம்பிக்கை அளித்தது, பிரிட்டிஷ் கடற்படைகளின் வெற்றிகளும் அதன் மேலாதிக்கமும்தான்.

1917-ல் ஜெர்மானியர் தங்கள் தாக்குதலை வலுப்படுத்த ஹிண்டன்பர்க் எல்லைக்கோட்டை வகுத்துக்கொண்டு அதன் உள்ளிருந்து போரிட்டனர். இதனால் நேசநாடுகளின் முன்னேற்றம் தடைப்பட்டது. இவ்வாண்டில் ஏற்பட்ட இரு முக்கிய நிகழ்ச்சிகள் ரஷ்யா விலகியதும், அமெரிக்கா சேர்ந்ததும் ஆகும். புரட்சிக்குப்பின் சார் மன்னனின் அரசு கவிழ்ந்து ரஷ்யாவில் மக்களாட்சி தோன்றியது. உள்நாட்டு நிலையைச் சீர்திருத்த விரும்பிய புதிய அரசு 1918-ல் ஜெர்மனியோடு பிரஸ்ட்-லிடோவ்ஸ்க் என்னுமிடத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன்படி தன் பால்டிக் நாடுகளையும் போலந்தையும் ஜெர்மனிக்குத் தந்தது ரஷ்யா. நேச நாடுகளின் இழப்பை ஈடுகட்டுவதுபோல் நெறியற்ற ஜெர்மன் போர் முறைகளால் கோபமடைந்த அமெரிக்கா போரில் சேர்ந்தது. 1915-ல் லூசிடானியா என்ற பிரிட்டிஷ் கப்பல் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டபோது 100-க்கும் மேற்பட்ட அமெரிக்கக் குடிகள் அதில் உயிர் இழந்தனர். இதைப் பற்றிய அமெரிக்கப் புகாருக்கு ஜெர்மனி பதில் அளிக்காததும், போரில் அமெரிக்கா இறங்க ஒரு காரணமாயிற்று.


1914-ல் ஐரோப்பா
ரஷ்யா
காஸ்பியன் கடல்
கருங்கடல்
துருக்கி
ஆஸ்திரியா ஹங்கேரி
ஜெர்மனி
பிரான்ஸ்
இத்தாலி
ஸ்பெயின்
மத்திய தரைக் கடல்
ஆப்பிரிக்கா
கிரீஸ்
அட்லாண்டிக் சமுத்திரம்
வட கடல்

ரஷ்யா விலகியதால் ஜெர்மனி தன் முழுப் பலத்தையும் மேற்கு ஐரோப்பாவில் செலவிட்டுப் போர் செய்தது. ஃபிரான்சையும், பிரிட்டனையும் பணிய வைப்பதுதான் இலட்சியம். ஏமியன்சு, இப்ரசு என்ற இரு இடங்களில் மிகுந்த பிரயாசையோடு போரிட்டு, ஜெர்மானியரை விரட்டின நேச நாடுகள். அதில் அவர்கள் பக்கம் நான்கு இலட்சம் பேர் உயிர்ச்சேதம் அடைந்தனர். பின்னர், பாரிசைக் குறிவைத்து அவர்கள் முன்னேறினர். இந் நிலையில்தான் தளபதி போச் நேசப்படைகளின் தலைமைத் தளபதியாக நியமனம் பெற்றார். நேச நாடுகளின் சக்தி அனைத்தையும் திரட்டித் தம் நுண் ஆற்றலையும் கலந்து அவர் போரிட்டார். ஃபிரான்சிலிருந்து ஜெர்மானியர் விரட்டப்பட்டனர்; சிரியாவில் துருக்கி தோற்றது; பல்கேரியா சரண் அடைந்தது; ஆஸ்திரியா வீழ்ச்சியுற்றது. ஜெர்மானியர் பின்வாங்கி, தற்காப்புக்காகப் போரிட்டுப்பின் களைப்பாலும் சக்தியனைத்தும் இழந்த நிலையாலும் சமாதானத்துக்குத் தயாராயினர். ஜெர்மன் படைவீரர்களிடையே கலகம் மூண்டது. கெய்சர் ஹாலந்திற்குத் தப்பி ஓடினர். ஜெர்மன் படைத் தலைவர்கள் நவம்பர் 11ஆம் தேதி போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அதன்படி ஜெர்மனி தன் கடற்படையையும், போர்க்கருவிகளையும் நேசநாடுகளிடம் ஒப்படைத்ததுடன் தான் பிடித்த பகுதிகளிலிருந்து வெளியேறியது. ஐந்தாண்டுகளாக உலகை ஆட்டிய பெரும்போர் முடிவடைந்தது.

## (அ) பாரிசு சமாதான மாநாடு

1918-ல் ஜெர்மனி சரணடைந்தபின் நேசநாட்டுப் பிரதிநிதிகளான கிளமான்சோ (ஃபிரான்ஸ்), உட்ரோ வில்சன் (அமெரிக்கா), லாயிட் ஜார்ஜ் (பிரிட்டன்), ஆர்லண்டோ (இத்தாலி) ஆகியோர் பாரிசில் கூடிச் சமாதான ஒப்பந்தங்கள் குறித்து விவாதித்தனர். உலகைப் புனரமைப்புச் செய்வதும் அமைதியைக் காப்பதும் இவர்கள் கையில்தான் இருந்தது. இந் நால்வரும் ஒத்த கருத்தும், பண்புகளும், இலட்சியங்களும் உடையவர் அல்லர். சமாதான மாநாட்டில் இரு கருத்துகள் முதன்மை பெறப் போட்டியிட்டன. ஐரோப்பிய நாடுகளின் நிலையைப் பற்றிச் சரிவரத் தெரியாமலும், நடைமுறைக்கு ஒவ்வாத இலட்சியக் கனவுகளில் ஆழ்ந்தும், எளிதில் வளைந்து கொடுக்காத சுபாவத்தோடும் இருந்த அமெரிக்க அதிபர் வில்சன், தன்னலக் கலப்பற்ற, ஒருபால் கோடாத, நீதி என்ற கொள்கைக்காக வாதாடினர். போரில் இத்தாலி ஆற்றிய சிறிய பங்கிற்குப் பெரிய பரிசை எதிர்பார்த்த இத்தாலியரைத் திருப்திப்படுத்தும் தன்னலத்தைத் தவிர வேறு இலட்சியமில்லாத ஆர்லண்டோ,

வில்சனது பதினுன்கு கட்டளைகளைக் கண்டு தனக்குள் நகைத்துக் கொண்டு, ஃபிரான்சிற்கு அதிகமான இழப்பீடுகள் தேவை என நயத்தாலும் நாவன்மையாலும் பிரிட்டிஷ் அமெரிக்கப் பிரதி நிதிகளை வற்புறுத்திய ஃபிரெஞ்சு கிளமான்சோ, ‘கெய்ஸரைக் கொல்ல வேண்டும் என்றும் போர் செலவுத்தொகை முழுவதையும் ஜெர்மனியிடம் பிழிந்து வாங்கிப் பழிதீர்க்க வேண்டும்’ என்றும் கூறிய பிரிட்டிஷ் மக்களை நோக்கி, ஒரு பசுவினிடமிருந்து ஒரே நேரத்தில், பாலையும் அதன் இறைச்சியையும் பெற நினைப்பது விவேகமா? என வினவியும் இறுதியில் மக்களின் கோரிக்கைக்குக் கட்டுப்பட்டு உடன்பாட்டில் பழிவெறியைக் காட்டிய லாயிட் ஜார்ஜ் ஆகிய மூவரும் சாதாரண மாநாடுகளின் வழக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் வல்லமைச் சமநிலை தோல்வியுற்ற நாடு மீண்டும் தலையெடுக்காவண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகள், வெற்றி பெற்றோருக்கு நில, பொருளாதார இழப்பீடு தருதல் என்ற கொள்கைகளுக்காக வாதிட்டனர். தன் பதினுன்கு கோட்பாடுகளை வற்புறுத்திய வில்சன் இறுதியில் மற்ற மூவர் இழுத்த இழுப்பிற்குச் செல்ல வேண்டியதாயிற்று. தோற்ற நாடுகள் ஒவ்வொன்றோடும் தனித்தனியே உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டன. வெற்றி பெற்ற நாடுகள் செய்து கொண்ட ஐந்து உடன்பாடுகளிலும் ஜெர்மனியுடன் செய்துகொண்ட வெர்சாயி உடன்பாடு அளவில் பெரியது; மிகக் கடுமையானது.

## வெர்சாயி உடன்பாடு

(1919ஜூன் 28) ஜெர்மனியின் சார்பில் உடன்பாட்டில் கையெழுத்திட்ட வைமார் (Weimar) குடியரசின் பிரதிநிதிகள், தங்கள்மீது திருப்பப்பட்டிருந்த வெறுப்பின் அளவை உடன்பாட்டில் தெளிவாகப் பிரதிபலித்ததை உணர்ந்திருந்தனர். லாயிட் ஜார்ஜ் இதைப் பற்றிக் குறிப்பிடும்போது ‘வீழ்ச்சியுற்ற வீரர்களின் இரத்தத்தினால் உடன்பாட்டு விதிகள் எழுதப்பட்டுள்ளன. ஜெர்மானியர்கள் இதில் கையெழுத்திட மறுக்கின்றனர். அவர்களது பத்திரிகைகளும் அதையே கூறுகின்றன. அரசியல் வாதிகளும் அவ்விதமே இயம்புகின்றனர். நீங்கள் இதில் வெர்சாயியில் கையெழுத்திடாவிடில் பெர்லினில் இடும்படிசெய்வோம்’ என்றார். இதிலிருந்து உடன்படிக்கையின் கடுமையை நாம் உணரலாம். ஜெர்மனி, ஆல்சேஸ், லொரைன் பகுதிகளை ஃபிரான்சிற்குத் தரவேண்டும். மோர்னெட் (Morsnet), ஈபன் (Eupen), மால்மெடிக் பெல்ஜியத்திற்குத் தரப்படவேண்டும். பால்டிக் துறைமுகமான மேமல் (Memal) லிதுவேனியாவிற்குட்பட்டுத் தனித்தியங்கும் பகுதியாக விளங்கவேண்டும். போசனும் மேற்குப்

பிரஷ்யாவும் போலந்துடன் இணைக்கப்படவும், ஒரு வாக்குக் கணிப்பால் மக்களின் விருப்பம் தெரியும்வரை சைலீஷியாவும் கிழக்குப் பிரஷ்யாவும் அந் நாட்டிற்கே தரப்படவும் வேண்டும். போலந்திற்குக் கடற்பகுதி அவசியம் என்பதால் ஜெர்மனியின் குறுக்கே ஒரு நீண்ட நிலத்துண்டும், அத் துண்டின் முதலில் இருந்த டான்சிக் என்ற துறைமுகத்திற்குச் சர்வதேசத் துறைமுக அந்தஸ்தும் அளிக்கப்படவேண்டும். நிலக்கரி நிறைந்த சார் (Saar) பள்ளத்தாக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு சர்வதேசக் குழுவால் நிர்வகிக்கப்படவும், அக் காலத்தில் அங்குள்ள நிலக்கரி வளத்தை ஃபிரான்சு பயன்படுத்திக் கொள்ளவும் வழி செய்யப்பட்டது. பதினைந்து ஆண்டுகளுக்குப்பின் ஒரு வாக்குக் கணிப்பின்மூலம் இப் பள்ளத்தாக்கு எந்த நாட்டைச் சேரவேண்டும் என்பது தீர்மானிக்கப்படும். டென்மார்க்கிற்கு ஸ்லெஷ்விக் ஹோல்ஸ்டின் மாநிலங்களை ஜெர்மனி தரவேண்டும். ஜெர்மனிக்குச் சீனு, சயாம், லைபீரியா, மொராக்கோ, துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து சிறப்புரிமைகள் பறிக்கப்பட்டன. ஜெர்மனியின் குடியேற்றங்கள் பிரிட்டன், ஃபிரான்சு, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் தலைமையில் மேன்டேட்டுகளாக (Mandates) மாற்றப்பட்டன.

ஜெர்மனியின் படைபலம் நிர்மூலமாக்கப்பட்டது. எல்லைப் பாதுகாப்பிற்காக மட்டும் ஒரு இலட்சம் வீரர்களை வைத்துக் கொள்ள அனுமதி தரப்பட்டது. படைக்கல, வெடிமருந்து உற்பத்தி அடியோடு நிறுத்தப்பட்டது. கல்வி நிலையங்களில்கூட இராணுவப் பயிற்சி அளிப்பது தடை செய்யப்பட்டது. போர் விமானங்களையும் அது நேச நாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும். ஜெர்மனியின் கடற்படையும் அழிக்கப்பட்டது.

போர் மூலக் காரணம் ஜெர்மனியே என்ற குற்றச்சாட்டு அந் நாட்டின்மீது சுமத்தப்பட்டது. இதனால் மிகப்பெரிய இழப்பீட்டுத் தொகையை நேச நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாகியது. இத் தொகையை நிர்ணயிக்க ஒரு குழு நிறுவப்படும். இத்தொகை 54 மில்லியன் டாலர்களாக நிர்ணயிக்கப்பட்டது. ஜெர்மனியில் ஓடிய எல்ப், டான்யூப், ஓடர், நீமன் நதிகளை எல்லா நாடுகளும் பயன்படுத்தலாம். ஜெர்மனியின் மேற்குப் பகுதியான ரைன்லாந்தை நேச நாட்டுப் படைகள் ஆக்கிரமித்துக்கொள்ளும். உடன்பாடு விதிகளை ஜெர்மனி பழுதின்றி நிறைவேற்றுகிறது என்ற திருப்தி நேச நாடுகளுக்கு ஏற்பட்டால் ரைன்லாந்திலிருந்து அப் படைகள் பின்வாங்கிச் செல்லும். ஃபிரான்சிடமிருந்து கைப்பற்றிய கலைப் பொருள்களையும் பிறவற்றையும் திருப்பித் தருவதோடு, ஃபிரெஞ்

சுப் பல்கலைக்கழகம் ஒன்றை அழித்ததற்கு இழப்பீடும் தர வேண்டும்.

1919ஆம் ஆண்டு செப்டெம்பர் 10ஆம் நாள் ஆஸ்திரியா வோடு செயின்ட் ஜெர்மன் உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. ஆஸ்திரியா, ஹங்கேரியின் விடுதலையை ஒப்புக்கொண்டதோடு தன் நிலப்பகுதிகளை இழந்து, செக்கோஸ்லோவேகியா, போலந்து, யூகோஸ்லாவியா நாடுகளை உருவாக்கவும் இசைந்தது. இத்தாலிக்குத் தென் டைரோலையும் டிரிஸ்டி இஸ்திரியாவையும் சில தீவுகளையும் தந்தது. டால்மேஷியக் கடற்கரைப் பகுதியையும், பாஸ்னியாவையும், ஹெர்ஸி கோவினவையும் யூகோஸ்லாவியா விற்கு இழந்தது. செக் நாடு பொஹிமியாவையும் மொராவியா வையும் அடைந்தது. போலந்து கலீஷியாவையும், ருமேனியா புகோவினவையும் அடைந்தன. இவ்விழப்புகளால் ஆஸ்திரியா ஆறு மில்லியன் மக்களுள்ள சிறிய குடியரசாக உருவெடுத்தது.

ஜெர்மனியைப் போன்றே ஆஸ்திரியாவும் படைக்குறைப் பிற்கும் இழப்பீடு தரவும் ஒப்பியது.

ஆஸ்திரியாவின் சுதந்திரத்தைக் காப்பதெனச் சர்வதேச சங்கம் உறுதி பூண்டது.

ஹங்கேரி நாட்டோடு 1920ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான் காம் நாள் டிரயனன் உடன்பாடு (Treaty of Trianon) செய்து கொள்ளப்பட்டது. மாகியார் இனத்தைத் தவிர, பிற இனத் தவர் பெரும்பான்மையாக இருந்த பகுதிகளை ஹங்கேரி இழந்தது. இதனால் ஃபிரான்சில்வேனியா ருமேனியாவிற்கும், குரோயேஷியா யூகோஸ்லாவியாவிற்கும், ஸ்லாவிய மாநிலங்கள் செக் நாட்டிற் கும் சென்றன.

படைக் குறைப்பு விதிகள் இந் நாட்டின்மீதும் சுமத்தப் பட்டன.

1919ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் நாள் பல்கேரியா நெயில்லி உடன்பாட்டில் (Treaty of Neuilly) கையெழுத்திட்டது. பல்கேரியா ஏஜியக் கடற்கரைப் பகுதியைக் கிரீசிற்கும், மாசி டோனியாவை யூகோஸ்லாவியாவிற்கும், தோப் ரூஜாவை ருமேனியாவிற்கும் கொடுத்தது.

படையைக் குறைத்துக் கொள்ளவும் இழப்பீட்டுத் தொகை யைத் தரவும் ஒப்புக்கொண்டது.

செவ்ரே உடன்பாடு 1920-ல் துருக்கியுடன் செய்துகொள்ளப் பட்டது. துருக்கிப் பேரரசு ஐரோப்பாவினின்றும் மறைந்தது. திரேஸ், ஏட்ரியாநோபிள், கால்லிபோலி கிரீசுக்குத் தரப்பட்டன.

கான்ஸ்டாண்டிநோபிளும் சுற்றியுள்ள சிறு பிரதேசமும் மட்டும் துருக்கிக்கு மிஞ்சின.

கடன் சுமையும் அந்நிய நாடுகளின் செல்வாக்கும் துருக்கி யைத் திணறச் செய்தன. துருக்கியின் தேசிய மறுமலர்ச்சிக்கான இயக்கம் ஒன்று கமால்பாஷா தலைமையில் தீவிரமாகச் செய்யப் பட்டது.

செவ்ரே உடன்பாட்டை ஏற்க அவர் மறுத்தார். கிரீசு போருக்கு வந்தபோது அதை அவர் முறியடித்தார். இப் போருப் குப்பின் செவ்ரே உடன்பாட்டை மாற்றியமைக்க வல்லரசுகள் ஒப்பின. அதன்படி 1923-ல் லாசான் உடன்பாடு ஏற்பட்டது. முன்பு இழந்த சிரியா, பாலஸ்தீனம், கால்லிபோலி போன்ற எல்லாப் பகுதிகளையும் துருக்கி திரும்பப் பெற்றது. காலிபுகளின் ஆட்சியை விலக்கிக் குடியரசாக மாறிய துருக்கி புதுவாழ்வு பெற்றது.

## உடன்பாடுகளின் குறைபாடுகள்

நில சம்பந்தமான மாற்றங்களை ஏற்படுத்தும்போது, தேசியம், சுய நிர்ணய உரிமை ஆகிய கொள்கைகள் கவனத்தில் கொள்ளப் பட்டன. இக் கொள்கைகளால்தான் 15 இன மக்களைக்கொண்ட ஆஸ்திரிய அரசு சிதைக்கப்பட்டது. புதிய நாடுகள் உருவாக்கப் பட்டன. ஆனால், இக் கொள்கைகளைப் பூரணமாகக் கடைப் பிடிக்க முடியவில்லை.

செக் நாட்டில் சில ஜெர்மானியரும் இத்தாலியில் சில ஸ்லாவ் இனத்தவரும் இருக்கும்படி நேர்ந்தது. ஐரோப்பாவிற்கு வெளியே, பின்பற்றப்பட்ட மேன்டேட் (Mandate) முறை பலத்த கண்டனத்திற்குள்ளாகியது.

சமாதான உடன்பாட்டில் அதிபர் வில்சனின் சமாதன இலட் சியக் கருத்துகளுக்கும் நேசநாடுகளின் பழிவாங்கும் வெற்றிக்கு மிடையே ஏற்பட்ட மோதலில், வில்சனின் இலட்சிய வாதங்கள் ஏற்கப்படவில்லை. சமீபத்தில் ஏற்பட்ட இழப்புகளும் எதிர் காலத்தைப் பற்றிய பீதிகளும் நேச நாடுகளை மிகக் கடுமையான முடிவுகளை எடுக்கச் செய்தன. ஜெர்மனி போர்ச் செலவை ஈடு செய்யவேண்டும். கெய்ஸர் தூக்கிலிடப்படவேண்டும் என்பதே ஐரோப்பாவின் விருப்பம்.


1919-ல் ஐரோப்பா
சோவியத் ரஷ்யக் குடியரசு நாடுகள்
மாஸ்கோ
காஸ்பியன் கடல்
கருங்கடல்
அங்காரா
துருக்கி
பாரிஸ்
பிரான்ஸ்
மாட்ரிட்
இத்தாலி
ஜெர்மனி
பெர்லின்
வார்ஸா
யூகோஸ்லாவியா
மத்தியதரைக் கடல்
அல்ஜீரியா
மொராக்கோ
ஆப்பிரிக்கா
ஆங்கிலேயத் தீவுகள்
அட்லாண்டிக் பெருங்கடல்

எனவே, ஏற்க முடியாத கடும் நிபந்தனைகள் ஜெர்மனிமீது விதிக்கப்பட்டன. உடன்பாடு விவாதிக்கப்படவில்லை. ஜெர்மனி மீது திணிக்கப்பட்டது. போர் நடுவில் ரஷ்யாமீது கடுமையான விதிகள் கொண்ட உடன்பாட்டை ஜெர்மனி திணித்தது. எனவே, அதே விதத்தில் ஜெர்மனி நடத்தப்பட்டதில் தவறில்லை எனக் கூறப்பட்டது.

உடன்பாடுகளின் கடுமையே அடுத்த போரை உண்டாக்கியது எனக் கூறலாம்.

## (ஆ) சர்வதேசச் சங்கம்
## (The League of Nations)

இலட்சக்கணக்கான மக்களைப் பலிகொண்டு உலகப் பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்து எங்கும் அழிவின் கோர தாண்டவத்தை அரங்கேற்றிய முதல் உலகப் போரைப்போன்று பிறிதொன்று ஏற்படாமல் தடுக்கவேண்டுமென உலகமக்கள் அவாவினர். பாரிசு சமாதான ஏற்பாட்டில் இதற்கான திட்டங்களை வகுக்க வல்லரசுகள் முயன்றன. போர்க்காலத்தில் அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனுல் அமைதி கோரி வெளியிடப்பட்ட பதினன்கு அம்சத் திட்டத்தில் காணப்பட்ட கருத்துகள் அவ் வல்லரசுகளுக்கு வழிகாட்டின. உலக நாடுகளைக் கொண்ட ஒரு சர்வதேசச் சங்கத்தை நிறுவிப் போரைத் தவிர்க்கப் பாடுபடுவது என்ற வில்சனின் கொள்கையைப் பலர் வரவேற்றனர். இதே கொள்கையை அமெரிக்காவைச் சேர்ந்த லான்சிங் (Lansing) என்பவரும், கர்னல் ஹவுஸ் (Coronel House) என்பவரும், பிரிட்டனைச் சேர்ந்த ராபர்ட் செசில் பிரபுவும் (Lord Robert Cecil), தென்னுப்பிரிக்கப் பிரதமர் தளபதி ஸ்மட்ஸ் (General Smuts) என்பவரும் விளக்கி மேலும் தெளிவுபடுத்தினர். இவர்களது கருத்துகளை மனத்திற்கொண்டு சமாதான மாநாடு சர்வதேசச் சங்கத்தின் விதிமுறைகளை உருவாக்கி அவற்றைச் சமாதான உடன்பாடுகள் ஒவ்வொன்றுடனும் இணைத்தது.

ஜெனீவாவைத் தன் தலைமையகமாகக்கொண்ட சர்வதேசச் சங்கத்தில் சேருமாறு உலகின் சுதந்திர நாடுகள் அனைத்தும் அறைகூவி அழைக்கப்பட்டன. சங்கத்தின் தலையாய நோக்கம் போரைத் தவிர்த்து நாடுகளுக்கிடையே எழும் தகராறுகளைச் சமாதானமுறையில் தீர்த்து அது, முடியாதவிடத்து, பலத்தைப் பயன்படுத்தி அமைதியைக் காப்பதேயாகும். சங்கத்திற்கு நாடுகளின் உள்நாட்டுப் போரிலும் புரட்சிகளிலும் ஈடுபடும் உரிமை கிடையாது. சங்கத்தில் உறுப்பு நாடுகள் இரகசிய ஒப்பந்தங்கள்

செய்துகொள்வதில்லை என்றும், வெளிப்படையாகச் செய்து கொள்ளும் உடன்படிக்கையின் நகல்களை ஜெனீவாவில் தாக்கல் செய்வது என்றும் ஒப்புக்கொண்டன. சங்கத்தின் பணிகளும் வரையறுத்துக் கூறப்பட்டன. உலகில் அமைதியைக் காக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல், அடிமை முறையைஅகற்று தல், அபினி போன்ற போதைப் பொருள்களின் வாணிபத்தைக் கட்டுப்படுத்துதல், நோய்த்தடுப்பு முறைகளையும் மருத்துவ வசதியையும் பெருக்குதல், தொழிலாளர் நலனைக் காத்தல் ஆகிய மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடுதல், சமாதான உடன்படிக்கை கள் ஒப்படைத்த சில சிறப்புப் பணிகளை நிறைவேற்றல் ஆகிய செயல்களில் சங்கம் ஈடுபட்டது.

இச் சங்கம் ஓர் அனைத்துநாட்டு நிறுவனம் ஆயினும், உறுப்பு நாடுகளைத் தேர்ந்தெடுப்பதில் பாரபட்சம் காட்டிப் போரில் தோல்வியுற்ற ஆஸ்திரியா, பல்கேரியா, ஹங்கேரி, ஜெர்மனி, துருக்கி ஆகிய நாடுகளை விலக்கிவைத்தது. அதேபோல், கடுமை யான வெர்சாயி உடன்பாட்டோடு இணைந்திருந்தது என்ற காரணத்தால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அவ்வுடன்பாட்டைப் புறக்கணித்ததோடு சர்வதேசச் சங்கத்தில் சேரவும் மறுத்தது. போல்ஷிவிக் ரஷ்யா 1933ஆம் ஆண்டுவரை சங்கத்திலிருந்து விலகியே இருந்தது. இப்படிப்பட்ட காரணங்களால், சங்கத்தின் அங்கத்தினர் எண்ணிக்கை எக் காலத்திலும் 60-க்கு மேற்பட வில்லை. இதனால் சங்கம் தன் வாழ்நாளில் சர்வதேச நிலையை அடையவில்லை.

இச் சங்கம், அவை (Assembly), கவுன்சில் (Council), செய லகம் (Secretariat), சர்வதேச நீதிமன்றம் (Permanent Court of International Justice), சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation) ஆகிய முக்கிய அங்கங்க ளோடு மேன்டேட்ஸ் குழு போன்ற பல சிறப்புக் குழுக்களையும் கொண்டிருந்தது.

சர்வதேசச் சங்கத்தின் அவைக் கூட்டம் ஆண்டிற்கு ஒரு முறை செப்டெம்பர் மாதம் கூடியது. ஒவ்வொரு நாடும் மூன்று பிரதி நிதிகளை அனுப்பலாம். ஆனால், ஒரு வாக்குதான் ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டு. ஆங்கிலம், ஃபிரெஞ்சு ஆகிய இரு மொழிகளும் அதன் நிருவாக மொழியாக இருந்தன. அங்கத் தினர்கள் எந்த மொழியிலும் பேசலாம். ஆனால், அவர்கள் தங்களுடன் மொழிபெயர்ப்பாளர்களையும் வைத்துக்கொள்ள வேண்டும். ஆண்டுதோறும் நடந்த அவையின் கூட்டத்திற்கு முக்கியத்துவம் அதிகரித்தது. எல்லா நாடுகளிலிருந்தும்

பத்திரிகை நிருபர்கள் ஜெனீவா நகரில் கூடினர். பிரதம மந்திரிகளும், அயல் நாட்டு மந்திரிகளும், மற்றும் முக்கிய அரசாங்க அதிகாரிகளும் தங்கள் தங்கள் நாடுகளின் பிரதிநிதிகளாகக் கூட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டனர்.

அவையின் அங்கத்தினர் எண்ணிக்கை அதிகமாய் இருந்த தாலும், ஆண்டிற்கு ஒரு முறைக்குமேல் அதை அடிக்கடி கூட்ட இயலாமையாலும் சர்வதேசச் சங்கத்தின் முக்கிய நடவடிக்கைகள் சங்கத்தின் கவுன்சில் எனப்படும் ஒரு சிறிய அமைப்பினுல் செயல் படுத்தப்பட்டன. அது வருடத்தில் மூன்று முறை கூட்டப்பட வேண்டும் என்று இருந்தாலும், ஏதாவது மிகவும் அவசியமான காரணங்களுக்காக எந்த நேரத்திலும் அல்லது எப்போது வேண்டுமாயினும் உடனடியாகக் கூட்டப்படலாம். அது நிரந்தர அங்கத்தினர்களும் (Permanent Members), நிரந்தரமற்ற (Non-Permanent) அங்கத்தினர்களும் சேர்ந்து எண்மர் கொண்டதாக அமைக்கப் பட்டது. வல்லரசுகளான இங்கிலாந்து, ஃபிரான்சு, இத்தாலி, ஜப்பான் ஆகிய நான்கு நாடுகளும் நிரந்தர உறுப்பினர்களாக இருந்தன. மற்ற சிறிய நாடுகள் தேர்ந்தெடுக்கும் நான்கு நாடுகள் நிரந்தரமற்ற உறுப்பினர்களாகவும் இருந்தன. ஜெர்மனி 1926ஆம் ஆண்டில் சேர்ந்து, ஐந்தாவது நிரந்தர அங்கத்தினராக ஆனது. ரஷ்யாவும் சேர்ந்து 1934ஆம் ஆண்டில் 6ஆவது நிரந்தர அங்கத்தினராக ஆனது. அது படிப்படியாக பத்தாகவும் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 14 ஆகவும் உயர்த்தப்பட்டது. நடைமுறையில் உருவாகும் ஒவ்வொரு முக்கியமான முடிவும் ஒரு மனதாக ஒப்புகொள்ளப்படவேண்டுமென்ற விதி இக் கவுன்சிலின் செயலாற்றலுக்குத் தடையாக இருந்தது.

சங்கத்தின் முக்கியக் காரியங்களை நிருவகிக்க ஒரு செயலகம் தேவைப்பட்டது. இதில் 50 நாடுகளைச் சேர்ந்த சுமார் 600-க்கும் மேற்பட்டவர்கள் வேலை செய்தனர். அவையினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பொதுச் செயலாளரின் தலைமையில் இது ஜெனீவா நகரில் இயங்கியது. 'மனிதவர்க்கத்தின் உண்மையான ஒரு செயலாளன் உலக அரங்கில் முதன்முதலாகத் தோன்றினுன்' என நாம் இதைப் பற்றிக் கருதலாம்.

சங்கம் நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்துச் சர்வதேச நீதி மன்றத்தைச் செயலாற்றுமாறு செய்தது. சர்வதேச நீதி மன்றம் ஹேக் என்னுமிடத்தில் செயலாற்ற அமைந்தது. சங்கத்தில் அமெரிக்கா அங்கத்தினராக இல்லாவிடினும் ஒரு அமெரிக்கரும் நீதிபதியாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டார். இம் மன்றம் உறுப்பு நாடுகளுக்கிடையே உள்ள சச்சரவுகளையும் வழக்குகளையும் ஆராய்ந்து தன்னுடைய ஆலோசனைகளையும் தீர்ப்புகளையும் கூறியது. 1936ஆம் ஆண்டு இறுதிவரை இது சுமார் 61 வழக்குகளைத் தீர்த்துவைத்தது. இதில் 43 வழக்குகள் வன்முறையற்ற நியாயமான பேச்சு வார்த்தைகளின் அடிப்படையிலும் ஆலோசனைகள் அடிப்படையிலும் தீர்த்து வைக்கப்பட்டன. சட்டத்தின் ஆட்சி உலகில் நடைபெற்றதால் வல்லரசுகள்கூட இம் மன்றத்தை அசட்டை செய்யாமல் பயன்படுத்திக் கொள்ளவேண்டிய அவசிய நிலை ஏற்பட்டது.

சங்கத்தின் தலையாய பணிகளில் மற்றொன்று சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம் ஆகும். இதுவும் ஜெனீவா நகரிலிருந்து 1919ஆம் ஆண்டிலிருந்து செயலாற்றத் தொடங்கியது. இது உலகத் தொழிலாளர்களின் நிலையை உயர்த்துவதற்கும் அவர்களது சமூகப் பாதுகாப்பிற்குத் தேவையான மருத்துவ வசதிகள் செய்தல், தொழிற் சங்கம் அமைக்கும் உரிமைகளைப் பெற்றுத் தருதல், வேலை நேரத்தைக் கட்டுப்படுத்துதல், வயதுக் கட்டுப்பாடுகள் விதித்தல், சிறுவர்களும் பெண்களும் வயதிற்கு மீறிய வேலைகளைச் செய்தல் முதலிய கொடுமைகளைத் தவிர்த்தல் ஆகியவற்றிற்காக மிகவும் பாடுபட்டு வருகின்றது.

இவற்றைத் தவிர, சங்கம் பலவிதமான குழுக்களையும், கமிட்டிகளையும், கமிஷன்களையும் குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து முடிவெடுக்க அமைத்தது. இவைகளில் மீட்புக் குழு, சிறுபான்மையோர் நல உரிமைக்கு உழைக்கும் குழு, இச் சங்கத்தின் சார்பில் குடியேறும் பிரதேசங்கள் ஆளப்படும் விதத்தை ஆராயும் குழு என்பவை முக்கியமானவை.

சர்வதேசச் சங்கத்தினால் உலகில் போர்மூள்வதை அடியோடு தடை செய்ய இயலவில்லை; எனினும் அங்கத்தினர்களான நாடுகள், மற்ற நாடுகளோடு தங்களுக்குள்ள தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளச் சங்கக் கவுன்சிலின் தீர்ப்புக் கிடைத்த மூன்று மாதங்களுக்குப் பின்னர்தான் போர்த் தொடக்க அறிக்கை வெளியிடலாம் என்ற விதிக்குள்ளாக்கப்பட்டன. இந்த இடைவேளையில் சிந்தித்துச் செயல்புரியவும் கோபதாபங்கள் அடங்கிச் சுமுகமான சூழ்நிலை உருவாகவும் வாய்ப்புக் கிடைத்தது. ஆயினும் சில நாடுகள் போரின்மூலமாகத்தான் முடிவெடுக்கப்பட

வேண்டுமென்ற எண்ணத்துடன் மூன்று மாதங்கள் கழித்து உடனே பலாத்காரப் படையெடுப்பைச் செயல்படுத்தவும் இயலும். இச் சர்வதேசச் சங்க விதிமுறைக் கோட்பாடுகளில் இருந்த சிறு பொத்தலை அடைப்பதற்காக ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசுச் செயலரான கெல்லாக் என்பவர் உலக அரசுகளின் கவனத்திற்கு ஓர் ஆலோசனையைக் கொண்டுவந்தார். எல்லா நாடுகளும் போரைத் தேசியக்கொள்கையின் ஒரு கருவியாகக் கொள்வதை அறவே விட்டொழிக்கவேண்டும் எனும் இவ்வடிப்படையைக் கொண்ட கெல்லாக் உடன்பாடு உருவாகியது. அது 1919ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் முன்னேற்றமடைந்த நாகரிக நாடுகளில் பெரும்பான்மையானவையால் அங்கீகரிக்கப்பட்டது. அங்கத்தினர்கள் அல்லாத முக்கிய நாடுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும்கூட இதை ஒப்புக்கொண்டன.

1920ஆம் ஆண்டு ஸ்வீடனுக்கும் பின்லாந்திற்கும் ஏற்பட்ட தகராறில் தலையிட்டு பின்லாந்துக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது. லிதுவேனியாவிற்கும் போலந்துக்கும் இடையே வில்னுவைக் குறித்து ஏற்பட்ட வழக்கில் தலையிட்டு போலந்துக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது. இவ்விரண்டிலும் சாதகமற்ற முடிவுபெற்ற நாடுகளான ஸ்வீடனும் லிதுவேனியாவும் தங்களின் எதிர்ப்பைப் பலமாகத் தெரிவித்தன. ஆனல், போர் ஏற்படவில்லை. 1923ஆம் ஆண்டில் அல்பேனிய எல்லைகளைக் கவனித்துக்கொண்டிருந்த சில இத்தாலிய அதிகாரிகளைக் கிரேக்க நாட்டுக் கொள்ளைக் கூட்டத்தினர் சிலர் கொலை செய்துவிட்டனர். கிரேக்க அரசாங்கம், அல்பேனியர்களே கொலைகாரர்கள் என்று சாதித்தது. ஆனல், அல்பேனிய அரசு அவர்கள் கிரேக்கர்கள் என்று சாதித்து, அதை நிரூபித்து, கிரேக்க எல்லைக்குள் கொலை நிகழ்ந்ததால் அதற்கு கிரீசுதான் பொறுப்பு ஏற்கவேண்டுமெனக்கூறி, இத்தாலியைச் சார்ந்த கார்பு (Corfu) தீவைக் கைப்பற்றிக்கொண்டது. சண்டை மூளவேண்டிய கட்டம் ஒன்று பயங்கரமாக நெருங்கிக்கொண்டிருந்த வேளையில் பாரிசில் நடந்த வல்லரசுகளின் கவுன்சில் மூலமாக ஒருவிதமான முடிவு ஏற்பட்டது. சங்கக் கவுன்சில் இவ்வேற்பாட்டை ஆமோதித்தது. அல்பேனியாவின் மதிப்பிற்குச் சிறிது பங்கம் ஏற்பட்டபோதிலும் ஒரு கொடுமையான சண்டை தவிர்க்கப்பட்டது. 1925ஆம் ஆண்டு அக்டோபர் 25ஆம் நாள் கிரீசு நாட்டிற்கும் பல்கேரிய நாட்டிற்கும் எல்லையில் ஏற்பட்ட கிரேக்க எல்லைக்காவலர் தகராறு ஒன்றின் காரணமாக கிரேக்க நாடு பல்கேரிய நாட்டின்மீது படையெடுத்தது. இத் தருணத்தில் சங்கக் கவுன்சில் தாமதியாமல் உடனடியாகக்கூடி பல்கேரியர்களை கிரேக்கப் படைகளுக்கு எதிர்ப்புக் காட்டாமல் இருக்கும்படியும்

கிரேக்கப் படைகளை உடனே பல்கேரியாவை விட்டு விலகுமாறும் கட்டளை விடுத்தது. இது பாரிசில் அக்டோபர் 26ஆம் நாள் நடந்தது. பார்வையாளர்கள் எல்லைக்கு அனுப்பப்பட்டனர். இரு நாடுகளும் கவுன்சிலின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தன. இதன் விளைவாகச் சங்கத்தின் மதிப்பு உயர்ந்தது. சிறிய நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட சச்சரவுகளைத் தீர்த்த சங்கம் வல்லரசுகளைத் தன் பிடியின்கீழ் வைத்திருக்க இயலாமற்போயிற்று. அதற்கென ஒரு தனியான படை இல்லாமல் இருந்ததும் இதற்கு ஒரு காரணமாகும்.

உலக நாடுகளின் படைபலத்தால் ஏற்படுகின்ற இன்னல்களைத் தடுப்பதற்காகச் சங்கம் 1932ஆம் ஆண்டு ஜெனீவாவில் ஓர் ஆயுதக் குறைப்பு மாநாட்டைக் கூட்டியது. வல்லரசுகளின் இடையே நம்பிக்கையின்மை காரணமாக ஒருவித முடிவும் எடுக்கப்படாமல் 1933ஆம் ஆண்டுக்கு இம் மாநாடு ஒத்திப்போடப்பட்டது. மற்ற வல்லரசுகளுடன் சம அந்தஸ்து கோரிய ஜெர்மனி குறைகூறிக்கொண்டே மாநாட்டில் இருந்து விலகியது. அதை மறுபடியும் சேரும்படி செய்த பல முயற்சிகள் பாழாயின. கடைசியில் ஜெர்மனி மாநாட்டிலிருந்து மட்டுமல்லாமல் சர்வதேசச் சங்கத்திலிருந்தே விலகிவிட்டது. 1934ஆம் ஆண்டு மாநாடு கூடியும் ஒரு விதப் பயனும் ஏற்படவில்லை. எல்லா வல்லரசு நாடுகளிலும் போர்ப்படைத் தளவாடங்களும் இராணுவங்களும் அதிகமாக்கப்பட்டன.

சங்கத்தின் பிற்பட்ட காலத்தில் நிகழ்ந்த செயல்கள் அதன் மங்கும் ஒளியைக் காட்டியதோடு அரைகுறையான மனப்பூர்வமற்ற நடவடிக்கைகளின் ஒரு தொகுப்பாகவுமிருந்தன.

சங்கத்திற்கு அமெரிக்க மக்கள் பலர் பெருத்த ஆதரவுடன் பொருள் உதவி செய்தும் அமெரிக்க அரசு சங்கத்தின் அங்கத்தினராக இல்லாமலிருந்தது ஒரு பெருங்குறையாக இருந்தது. அதனுல் முழுபலத்துடன் செயல்பட இயலவில்லை. ஜப்பானின் மஞ்சூரியப் படையெடுப்பு (1931), இத்தாலியின் அபிசீனியப் படையெடுப்பு (1935), 1938ஆம் ஆண்டு ஜெர்மனியின் ஆஸ்திரியப் படையெடுப்பு முதலிய வல்லரசுகளின் ஆக்கிரமிப்புகளைச் சங்கத்தால் நிறுத்தவோ, தடுக்கவோ முடியவில்லை. அதிருப்தியடைந்த நாடுகளான ஜப்பான், ஜெர்மனி முதலிய நாடுகள் மிக முக்கியமான கால கட்டத்தில் சங்கத்தைவிட்டு வெளியேறியதால் அதன் வலிமை குறைந்தது. எல்லாத் தேசிய உணர்வுகளையும் மீறிச்

செல்லும் உலகத் தோழமையையே தன் இலட்சியமாகக் கொண்டு செயல்படத் தொடங்கிய இச் சங்கத்திற்கு இறுதியாக, நாடுகளின் தேசிய உணர்வின் விழிப்பே அதனுடைய உயிரைக் கொண்டுபோக வந்த காலனுயிற்று.

இவ்வாறு கடைசிவரை போராடியும் தன் கொள்கைகளில் தோல்வி கண்ட சர்வதேசச் சங்கம் மனித வர்க்கத்தின் உலக நாடாளுமன்றத்தை உருவாக்குவதில் ஏற்பட்ட முதல் சோதனைக் களமாகும். இச் சங்கம் மனித சமுதாயத்திற்கு ஆற்றிய பணிகளை எவராலும் எளிதில் மறக்கமுடியாது. பிற்காலத்தில் ஏற்பட்ட ஐக்கியநாடுகள் நிறுவனத்திற்கு இதுவே ஒரு முன்னேடியாகத் திகழ்ந்தது என்பது மிகையாகாது.

# 13. சர்வாதிகார ஆட்சிகள் மலருதல்

## (அ) ரஷ்யப் புரட்சி

முதல் உலகப் போரால் ஐரோப்பாவில் தேசிய ஜனநாயகக் கொள்கைகள் வெற்றி அடைந்த சமயத்தில், ரஷ்யாவில் இப் போரின் விளைவாகத் தேசிய, சமுதாய, பொருளாதாரப் புரட்சி ஒன்று தோன்றி ரஷ்ய வரலாற்றில் மகத்தானதொரு பொற் காலத்தைத் துவக்கி வைத்தது. உலக வரலாற்றில் ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு அடுத்த இடத்தை இப் புரட்சி பெறுகின்றது. இப் புரட்சிக்குப் பின்னரே பன்னாட்டரங்கில் உயர்ந்ததோர் இடத்தை ரஷ்யா அடையமுடிந்தது.

புரட்சி வெடித்தெழக் காரணங்கள் எவை எனப் பார்க்கும் போது அவை ஃபிரெஞ்சுப் புரட்சியின் காரணங்களைப்போல் நீண்ட கால வரலாற்றில் புரையோடியிருப்பது விளங்குகிறது. மக்களின் நல்வாழ்வில் அக்கறையற்ற, வலிமையும் திறமையுமில் லாத, எதேச்சாதிகார அரசரும் அரசாங்கமும் புரட்சியின் அடிப்படைக்குக் காரணமாயினர். முதலாம் உலகப்போர் மூண்ட போது, மன்னர் இரண்டாம் நிக்கோலசு, நாட்டின் நிலையுணராது தம்மிச்சையாகப் போரில் தொடர்ந்து ஈடுபட்டார். பஞ்சமும் பசிப்பிணியும், பற்றுக்குறையும் மக்களை வாட்டியபோதும் அவர் தம் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. 1906ஆம் ஆண்டு மன்ன ராலும் டூமா (Duma) என்ற மக்களவையாலும் எதையும் உருப் படியாகச் சாதிக்க இயலவில்லை. போரின் ஆரம்ப கட்டத்தில் ரஷ்யாவிற்குத் தோல்விமேல் தோல்வி ஏற்பட்டபோதும் மன்ன ரைப் போரிலிருந்து திருப்ப இம் மக்களவையால் முடியவில்லை. போருக்கு முன்பே அரசரின் செல்வாக்கு மிகவும் மங்கியிருந்தது. அரசரையும், அரசியையும் தன் கைப்பாவைகளாக ஆட்டி வைத்த அதீதசக்தி படைத்த ரஸ்புடீனையும் (Rasputin) மக்கள் வெறுத்தனர். ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான திட்டங்கள் தீட்டப் பெற்றன. முதலில் ரஸ்புடீன் கொலை செய்யப்பட்டார்.

நாடே கொந்தளித்துக் கொண்டிருக்கையில் மக்களின் உணர்ச்சிகளை ஒருமுகப்படுத்த பல எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் முயன்றனர். 19ஆம் நூற்றுண்டுப் புரட்சிவாதிகளான, பல எழுத்தாளர்கள், ரஷ்யாவில் தோன்றி மக்களின் சிந்தனையை வளமாக்கினர். புஷ்கின் லெர்மாண்டோவ், துர்கனேவ், டால்ஸ்டாய், தாள்தாயேவ்ஸ்கி, மாக்சிம் கார்க்கி போன்றோர் இக் கால ரஷ்ய இலக்கிய வானை அலங்கரித்தவர்களுள் முக்கியமானவர்கள். அன்றைய அரசியலில் சமுதாயத்தில், சமயத்தில், பொருளாதார அமைப்புகளில் உள்ள சீர்கேடுகளைத் துணிவோடு சுட்டிக்காட்டி, புதுவாழ்விற்குப் புரட்சியே வழியென இவர்களின் எழுத்துகள் வலியுறுத்தின. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வெளியிடப்பட்ட பொருளாதார அரசியல், தத்துவ நூல்களிலுள்ள கருத்துகளும் ரஷ்யர்களிடையே மெல்லப் பரவின. குறிப்பாக, கார்ல் மார்க்சு (Karl Marx), எங்கெல்ஸ் (Engels) ஆகிய இருவரின் கருத்துகள் தொழிலாளர்கள், படித்த இளைஞர்கள் ஆகியோரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன.

**கார்ல் மார்க்சு:** கார்ல் மார்க்சு (*1818—1883*) ஜெர்மனியில் டிரையர் என்னும் ஊரில் ஒரு வழக்கறிஞரின் மகனாகப் பிறந்து பெர்லின் பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பு படிக்க வந்தார். அங்கே சட்டத்திற்குப் பதில் ஹேகலின் (Hegal) தத்துவத்தைப் பயில்வதில் அவர் நாட்டம் சென்றது. புரட்சிக் கொள்கைகளால் படிப்பைத் தொடர முடியாது இடையிலே விட்டார் மார்க்சு. 1842ஆம் ஆண்டு ஒரு பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்ற மார்க்சு, தணிக்கை அதிகாரிகளின் தொல்லையைத் தாங்க முடியாது ஜெர்மனியை விட்டுப் பாரிசுக்கு வந்தார். அங்குதான் அவர் எங்கெல்சைச் சந்தித்தார். ரஷ்ய நாட்டவரான எங்கெல்சோடு மார்க்சு கொண்ட தொடர்பு அவர் வாழ்நாள் முழுவதும் நீடித்தது. இருவருமாக சோஷலிசத் தத்துவங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சில முடிவுகளுக்கு வந்தனர். ஃபிரெஞ்சுப் புரட்சியின் இறுதியில் வாழ்ந்து மடிந்த இளம் புரட்சியாளரான பாபேயின் (Babeuf) கருத்துகளை இவர்கள் ஆய்ந்தனர். சுய விருப்பத்தின் பேரில் ஒரு தேசிய சமூகத்தை அமைத்தல், தனி உடைமையன்றிக் கூட்டுறவு முறையில் உற்பத்தியும் பங்கீடும் நடைபெறச் செய்தல், வன்முறையின்றி அரசு தன் குடிமக்களை அமைதியாகவும் ஆரவாரமின்றியும் இத் தேசிய சமுதாயத்தில் பங்கு கொள்ளும்படி செய்தல் ஆகியவையே பாபேயின் சோஷலிசக் கருத்துகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இக் கருத்துகளையொட்டிப் பானரோடி (Buonarroti) என்பவர் எழுதிய சிறிய நூல் ஓ'பிரியன் (O'brien) என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, பிரிட்டிஷ் சார்டிஸ்டு இயக்கத்தைப் பெரிதும் வளர்க்கும் சக்தியாக விளங்கியது. ஐரோப்பாவில் தோன்றியக் குடியரசு சார்பான எல்லாத் தேசிய இயக்கங்களும் (இத்தாலி கார்போனரி உட்பட) இந்தச் சமுதாய அரசியல் சமத்துவக் கொள்கைகளால் மெருகேற்றப்பட்டன. ஆர்மாண்ட் பார்பஸ் (Armand Barbes), அகஸ்தே பிளாங்கி (Auguste Blanqui) என்ற புரட்சிக்காரர்கள் காலத்தில்தான் நடுத்தர வகுப்பினர்களுக்கு இதுகாரும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் தவிர்க்கப்பட்டுத் தொழிலாளர்க்கு முக்கியத்துவம் தரப்பட்டது. ஜெர்மானிய இலட்சியவாதியான வில்ஹெல்ம் விட்லிங் (Whlhelm Weitling) என்பவரும் புதியகருத்துகளைத் தந்தார்.

மார்க்சும், எங்கெல்சும், விட்லிங், பாபே இருவரின் தத்துவங்களை இணைத்து மூன்றுண்டுக் காலம் பாடுபட்டு விஞ்ஞான சோஷலிசம் என்னும் புதிய தத்துவத்தை உருவாக்கினர். ஹேகலின் கருத்துகளையும் இவர்கள் பயன்படுத்தினர். ஹேகலின் கருத்துப்படி எண்ணங்கள் மாறும் தன்மையானவை. ஒவ்வொரு எண்ணத்திலும் அதற்கு எதிரிடையான பொருளும் பொதிந்திருக்கிறது. வாழ்வு என்றுல் அதில் மரணமும் இணைந்துள்ளது. ஒரு கருத்து மற்றொரு கருத்துப் பிறக்க வழி செய்கிறது. இரு கருத்துகளின் முரண்பாட்டிலே அவற்றின் சங்கமம் இருக்கின்றது. இச் சங்கமத்தால் தோன்றுகிற புதியகருத்தில் முதல் இரு கருத்துகளின் சாரமும் அடங்கியுள்ளது. கோட்பாடு, எதிர்மறைக் கோட்பாடு, தொகுப்புக் கோட்பாடு (Thesis, Anti-Thesis, Synthesis) என இம் முறை விளக்கப்படுகிறது.

மேற்கூறிய ஹேகலின் தத்துவத்தை மார்க்சும், எங்கெல்சும் பொருளாதாரத் துறையில் புகுத்தினர். முதலாளித்துவ முறை (கோட்பாடு), அதற்கு நேர் எதிரான தொழிலாளரின் சோஷலிசத்தை உருவாக்கும் (எதிர்மறைக் கோட்பாடு), இவற்றின் முரண்பாட்டின் விளைவாகக் கம்யூனிசச் சமுதாயம் பிறக்கும் (தொகுப்புக் கோட்பாடு), மார்க்சு தத்துவ தியாகச் சோஷலிஸ்டுகளின் வெற்றி நிச்சயம் என்பதை நிருபித்துக் காட்டினுர்.

இம் மார்க்சியக் கொள்கை 1847ஆம் ஆண்டு ஒரு ஜெர்மானிய ரகசியச் சங்கத்தின்முன் முதன்முதலாக விரித்துக் கூறப்பட்டு அனைவரின் பாராட்டையும் பெற்றது. மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கிய இந்த வரலாற்றின் லௌகீக வாதக் கொள்கை (Materialist Conception of History), கம்யூனிஸ்டு மானி

பெஸ்டோ (Communist Manifesto) எனும் பத்திரத்தில் வடித்துத் தரப்பட்டது. 'இதுவரை இருந்த சமுதாயங்களின் வரலாறு என்பது வர்க்கப் போராட்டமே' என்ற வாசகத்தோடு ஆரம் பிக்கப்பட்ட இப் பத்திரத்தில் பெரும்பாலான மக்களைக் கிராமிய வாழ்விலிருந்து மீட்டு, புதிய எந்திரங்களையும் தொழில்களையும் கண்டுபிடித்து, நிலமானிய முறையின் இரும்புப் பிடியை உடைத் தெறிந்து, உலகை நாகரிகச் சட்ட திட்டங்களுக்கு உட்படுத்திய பூர்ஷ்வா (Bourgeoisie) மக்களின் செயல்களைப் பெருமிதத்துடன் நினைவு கூர்ந்தது. ஆனல், இந்த பூர்ஷ்வா வகுப்பினர் தங்கள் அழிவைத் தாங்களே தேடிக்கொண்டனர். பெருந் தொழிற் சாலைகளில் பணிபுரியச் செல்வமும், சமுதாய அந்தஸ்தும், கை வினைத்தேர்ச்சியும் அற்ற தொழிலாளர்கள் என்ற ஒரு புதிய, பெரிய வர்க்கத்தை இவர்கள் உருவாக்கிவிட்டனர். மலிவான உற்பத்திப் போட்டியாலும், பிற நெருக்கடிகளாலும் தொடர்ந்து சுரண்டப்பட்டு, தம்மேல் ஆதிக்கம் செலுத்துபவரோடு இடை விடாத போராட்டத்தில் ஈடுபட்டு, வாழ்வில் துன்பத்தையே கண்ட இத் தொழிலாளர்கள் நாளடைவில் ஒன்றுபட்டு உரிமைக் குரல் எழுப்பினர். இந்தப் போராட்டம் தொடர்ந்து நடை பெறும்; தொழிலாளிகள் நிச்சயம் வெற்றி பெறுவர். 'தங்கள் விலங்குகளைத் தவிர வேறு எதையும் தொழிலாளர்கள் இழக்கப் போவதில்லை. அவர்கள் வெல்வதற்கு ஓர் உலகமே இருக்கிறது. அனைத்துநாட்டுத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற மானிஃபெஸ்டோவின் இறுதிச் சொற்றொடர்கள் உலகப்புகழ் பெற்றன. மார்க்சின் கம்யூனிஸ்ட் மானிஃபெஸ்டோ 1848ஆம் ஆண்டுப் புரட்சி தோன்றுமுன் வெளியிடப்பட்டது. இது அப் புரட்சியைப் பெரிதும் வளர்த்தது. புரட்சி ஓய்ந்தபின் மார்க்சும் எங்கெல்சும் இங்கிலாந்திற்குத் தப்பியோடினர். தன் இலட்சியப் படைப்பான தாஸ் காபிடல் (Das Capital) என்ற நூலைத் தொடர்ந்து எழுதும் பணியில் ஈடுபட்டார் மார்க்ஸ். இப் புரட்சியினல் தொழிலாளி வர்க்கம், பூர்ஷ்வா வர்க்கமே தன் எதிரி என்பதை இனம் கண்டுகொண்டதோடு, குடியரசு ஆட்சி அமைந்த எல்லா நாடுகளிலும் சமுதாயச் சமத்துவம் கோரித் தொழிலாளர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். இப் போராட்டத்தைப் பூர்ஷ்வாக்கள் அடக்குமுறையைக் கையாண்டுச் செயலறச் செய்தனர். மார்க்சு கூறிய வர்க்கப் பிரிவினைகள் நன்கு நிரூபிக்கப்பட்டன.

1864ஆம் ஆண்டு இலண்டனில் போலந்துப் புரட்சியை அடக்குமுறையால் நசுக்கிய அக்கிரமத்தைக் கண்டனம் செய்வதற் காகப் பலநாட்டுத் தொழிலாளப் பெருமக்கள் கூடினர். இது,

பன்னாட்டுத் தொழிலாளர் சங்கத்தின் முதல் உலகப்பொது உடைமை (First International) மாநாடாகும். சோஷலிசத் தொழிற்சங்க இயக்கங்கள் இருந்த நாடுகளில் எல்லாம் மார்க்சியச் சிந்தனைகள் பரவின. கார்ல் மார்க்சு தான் கனவுகண்ட உலகப் புரட்சி நெருங்கி வருவதாக எண்ணிக் களிப்பெய்தினார். ஆனால், ஃபிரெஞ்சு-ஃபிரஷ்யப் போரில், ஃபிரெஞ்சு ஜெர்மானியத் தொழிலாளர்கள் எதிர் எதிராக நின்று போரிட்டதும், உலகப் பொதுவுடைமை மாநாட்டினுள்ளே மார்க்சுக்கு எதிராக மைக்கேல் பாக்குனின் (Michael Bakunin) என்ற ரஷ்யரின் தலைமையில் ஓர் அணி திரண்டதும் மார்க்சின் நம்பிக்கையைச் சிதைத்தன. ஃபிரெஞ்சு-ஃபிரஷ்யப் போருக்குப்பின் பாரிசில் சிறிதுகாலம் நிலவிய கம்யூன் ஆட்சியைத் தன் மாபெரும் வெற்றியாக மார்க்சும், அவரைப் பின்பற்றினோரும் கொண்டாடினர்.

1872ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் பொதுவுடைமை மாநாடு ஹேக்கில் (The Hague) கூடியது. இதில் மார்க்சின் தலைமையிலான சோஷலிஸ்ட்டுகளுக்கும், பாக்குனின் தலைமையிலான வரம்புக்குட்பட மறுப்பாளர்கட்கும் (Anarchists) இடையே பிளவு ஏற்பட்டுப் பின்னவர் மாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். தனித்து வாழ்ந்தாலும் மார்க்சியம் தழைத்தது. அநேகமாக எல்லா ஐரோப்பிய நாடுகளிலும், ஜனநாயகத்திலும்சோஷலிசத்திலும் நம்பிக்கை கொண்ட அரசியல் கட்சிகள் தோன்றின. ரஷ்யாவில் சோஷலிச ஜனநாயகக் கட்சியும் (Social Democrats), சோஷலிசப் புரட்சிக்கட்சியும் (Social Revolutionaries) தோன்றின. நிகிலிஸ்ட்களின் வழித் தோன்றல்களான சோஷலிசப் புரட்சிக் கட்சியினர் பயங்கரவாதிகள். சோஷலிச ஜனநாயகக் கட்சியினரோ மார்ட்டோவ் (Mortov) என்பாரின் தலைமையில் மென்ஷிவிக்குகளாகவும் (Mensheviks), லெனினின் தலைமையில் போல்ஷிவிக்குகளாகவும் (Bolsheviks) பிரிந்து செயலாற்றினர். இவ்விரு பிரிவுகளுக்கிடையே இணக்கம் ஏற்படப் பல முயற்சிகளில் ஈடுபட்டார், லியோன் ட்ராட்ஸ்கி (Leon Trotsky) என்னும் பெயருடைய ஒரு யூத இளைஞர்.

உலகப் போர் மூண்டபோது அந்தந்த நாட்டுச் சோஷலிஸ்ட்டுக் கட்சிகள் அவைகளின் அரசாங்கங்களோடு ஒத்துழைக்கத் தீர்மானித்ததை இரண்டாம் மாநாட்டுப் பிரதிநிதிகள் கவலையோடு கவனித்தனர். போரை நிறுத்தவும், தங்களின் இலட்சியக் கனவான சோஷலிசப் புரட்சியைச் செயல்படுத்தவும் அவர்கள் விழைந்தனர்.

மார்க்சியக் கருத்துகள் ரஷ்யத் தொழிலாளரிடையே பரவி அவர்கள் ஒன்றுபட்டிருந்ததாலும், போரில் தலையிட்டதால் ஏற்பட்ட நாசங்களாலும், புரட்சிக்கு ரஷ்யா தாயாராயிற்று. 1917ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பெட்ரோகிராடிலும் (பழைய பீட்டர்ஸ்பர்க்) மாஸ்கோவிலும் இருந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்களின் மாபெரும் ஊர்வலம் பெட்ரோகிராடை நெருங்கிய போது அவர்களைக் கலைந்து போகச் செய்யப் படை வீரர்களை ஏவினர், மன்னர். படை வீரர்களோ ஆணைக்குக் கட்டுப்பட மறுத்ததன்றி ஊர்வலத்தினரோடு சேர்ந்து கொண்டனர். புரட்சியை நேரில் கண்டு அடக்க மாஸ்கோவிலிருந்து பெட்ரோகிராடிற்கு விரைந்தார் ஸார் மன்னர். ஆனல், அவர் பிரயாணம் செய்த புகைவண்டி பெட்ரோகிராடிற்குள் நுழையாதவண்ணம் புரட்சியாளர் தடுத்து நிறுத்திவிட்டனர். நிலைமை கட்டுக்கு மீறியதை உணர்ந்த நிக்கோலசு மார்ச் 15ஆம் தேதி முடிதுறந்தார். புரட்சி தோன்றியபோது மன்னரால் கலைந்து போகும்படி ஆணையிடப்பட்ட டூமா அவர் ஆணையை மதிக்கவில்லை. ஒரு தாற்காலிக அரசு நிறுவ அது முடிவு செய்தது. நாட்டிலிருந்த மூன்று முக்கியக் கட்சிகளும் இணைந்து ஒரு கூட்டு அரசு நிறுவின. இதன் தலைவரான இளவரசர் லூவாவ் (Lvov) லிபரல் கட்சியைச் சேர்ந்தவர். சட்ட வரம்பிற்குட்பட்ட ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த பால் மிலியுகோ (Paul Milyukoff) என்பாரும் புரட்சி சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த அலெக்சாந்தர் கெரன்ஸ்கி (Alexander Kerensky) என்பாரும் இவ்வரசில் பங்கு கொண்டனர். இந்தத் தாற்காலிக அரசு (Provisional Government) பின்லாந்திற்கு அரசியலமைப்பை அளிப்பது, போலந்திற்குச் சுயாட்சி தருவது, யூதர்களுக்கு உரிமைகள் தருவது போன்ற திட்டங்களையும் சில சீர்திருத்தச் சட்டங்களையும் தருவதென முடிவு செய்தது. நாடு கடத்தப்பட்டவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இனி, முன்னேற்றமும் நல்வாழ்வும் உண்டு எனப் பொதுமக்கள் உற்சாகமும் களிப்பும் அடைந்தனர். இச் சமயத்தில் தொழிலாளர்களும், படை வீரர்களும் அடங்கிய சோவியத்துகள் என்ற குழுக்களைச் சோஷலிஸ்ட்டுகள் நாடெங்கிலும் அமைத்தனர். இந்தச் சோவியத்துகள், குறிப்பாகப் பெட்ரோகிராடிலிருந்த வலிமைமிக்க சோவியத் தாற்காலிக அரசை எதிர்க்க ஆரம்பித்தன. ஜூலை மாதத்திற்குள் தாற்காலிக அரசிலிருந்து மிதவாதக் கொள்கையுடையயோர் அனைவரும் விரட்டப்பட்டனர். கெரன்ஸ்கி தலைமைப் பொறுப்பை ஏற்றார். கெரன்ஸ்கி போரில் தொடர்ந்து ஈடுபடுவதே நாட்டிற்கும் நலம் பயக்கும் எனக் கருதினர். ஆனல், சோஷலிஸ்டுகளின் பிரச்

சாரத்தால் போர்புரியும் மனநிலையில் போர் வீரர்களும் தளபதிகளும் இல்லை. போர் வீரர்கள் சிறிதும் எதிர்ப்பைக் காட்டாததால் ஜெர்மானியர்கள் மேலும் மேலும் முன்னேறி வந்தனர்.

1917ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் நாள் சோஷலிச ஜனநாயகக் கட்சியில் தீவிரவாதிகள் பிரிவைச் சேர்ந்த போல்ஷிவிக்குகள் லெனினின் தலைமையில் கெரன்ஸ்கியின் அரசைக் கவிழ்த்துத் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். புதிய அரசில் லெனின் (Lenin) பிரதம மந்திரியாகவும், ட்ராட்ஸ்கி (Trotsky) அயல்நாட்டு உறவு மந்திரியாகவும் பொறுப்பேற்றனர். உடனடியாகப் போரை நிறுத்திச் சமாதானம் செய்துகொள்ளல், தனி உடைமையாக உள்ள நிலங்களைப் பறிமுதல் செய்தல், சோவியத்துகளின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொள்ளுதல், புதிய அரசியலமைப்பை வரைய ஓர் அவையைக் கூட்டல் ஆகியவையே தம் திட்டங்களென இவ்வரசு அறிவித்தது. லெனினின் தலைமையில் ரஷ்யாவில் மார்க்சியச் சித்தாந்த அடிப்படையில் ஒரு தொழிலாள அரசு தோன்றியது. போரிலிருந்து விடுபட்டால்தான் உள்நாட்டுச் சீர்திருத்தங்களில் ஈடுபட முடியும் என்பதைத் திடமாக நம்பிய லெனின் ஜெர்மனியோடு பேச்சு வார்த்தைகளைத் தொடங்கினர், இதன் விளைவாக 1918ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிரெஸ்ட்-லிடோவ்ஸ்க் (Brest- Litovsk) உடன்பாடு கையெழுத்தாயிற்று: காக்கசசு, உக்ரெய்ன் (Ukrain), பால்டிக் மாநிலங்கள் ஆகியவற்றையும் தன்மானத்தையும் விலையாக் கொடுத்துச் சமாதானத்தைப் பெற்றது ரஷ்யா. ஆனல், உள்நாட்டில் இச் சமாதானத்திற்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது. நேச நாடுகள் ரஷ்யா, நடுவில் போரைவிட்டு விலகியதால் மனக் கசப்படைந்தன. ரஷ்யாவில் தொழிலாளர் ஆட்சி மலர்ந்ததால் இழப்புக்குள்ளான பிரபுக்களும், பிற எதிரிகளும் ஒன்று திரண்டு ஒரு வெண் சேனையைத் (White Army) திரட்டிப் புதிய அரசாங்கத்தை எதிர்த்தனர். நேச நாடுகளின் படை உதவியும் இவர்களுக்குக் கிடைத்தது. ஆனல், லெனினின் செஞ்சேனை (Red Army) இந்த வெண் சேனையை வெற்றிகரமாகத் துரத்தியடித்துத் தன் புகழை நிலை நாட்டிக்கொண்டது.

பல ஆணைகளைப் பிறப்பித்து மார்க்சியச் சோஷலிசச் சித்தாந்தங்களைச் செயல்படுத்த ஆரம்பித்தார் லெனின். பிற கட்சிகள் அனைத்தும் ஒடுக்கப்பட்டன. சொத்துரிமை பறிக்கப்பட்டது. பிரபுக்களுக்கு உரிமையான நிலங்கள் குடியானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. நாட்டில் உள்ள தொழிற்சாலைகளை, அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பைத் தொழிலாளர்

களைக்கொண்டு அமைக்கப்பட்ட சோவியத்துகளிடம் தந்தது. எல்லா மக்களும் உழைக்கவேண்டுமென்பது கட்டாயமாயிற்று. சமயம் அவசியமில்லை எனக் கருதப்பட்டதால் மத நிறுவனங்கள் கலைக்கப்பட்டன. முடிதுறந்த மன்னரும் அவர் குடும்பத்தினரும் மாற்றங்களை எதிர்த்த பலரும் கொல்லப்பட்டனர். தனிநபர் சுதந்திரத்தையும், ஜனநாயக அரசியலையும் தொழிலாளரின் சர்வாதிகாரத்துக்குப் பலி கொடுக்கவிரும்பாது, நிலத்தை இழந்தவர்களும், பழைய முதலாளிகளும், மிதவாத சோஷலிஸ்ட்டுகளும் திரண்டெழுந்தனர். ஆனால், லெனின் அவர்களைக் கொடிய முறையில் அழித்து உள்நாட்டில் எதிர்ப்பை நிர்மூலமாக்கினர். ரஷ்யாவின் எல்லை மாநிலங்களில் இருந்த கோசக்குகள் போன்றோரும் புதிய அரசை எதிர்த்தனர். ட்ராட்ஸ்கியின் தலைமையில் திறம்படப் பயிற்சி பெற்ற செஞ்சேனை இவ்வெதிர்ப்புகளை முறியடித்தது. 1921ஆம் ஆண்டின்போது லெனின் எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் செயலிழந்துபோகுமாறு செய்து, தன் கம்யூனிஸ்டுக் கட்சியை வலிமைமிக்கதாக ஆக்கி அக் கட்சியின் கீழ் ஒரு திறமைமிக்க அரசியல் நிர்வாக இயந்திரத்தை உருவாக்குவதில் வெற்றிபெற்றார். மேற்கூறியவற்றிலிருந்து போல்ஷிவிக் ஆட்சியானது அரசுக்கு எதிர்ப்பான சொல்லோ செயலோ எழாமல் நசுக்கிவிடுதல், கட்டாய உழைப்புச் செய்ய வற்புறுத்தல், இராணுவ ஆட்சியை மக்கள்மீது மீண்டும் மீண்டும் திணித்தல், ஒற்றர்களைப் பெருமளவில் பயன்படுத்துதல், கட்சிக்குள்ளே எதிர்ப்புத் தோன்றினுல் ஈவிரக்கமின்றிக் கூண்டோடு தீர்த்துக் கட்டிவிடுதல் போன்ற அச்சுறுத்தும் கொள்கையின் மூலமே நிறுவப்பட்டுத் தொடர்ந்து செயல்பட்டு வந்தது என்பதைக் காண்கிறோம். ஆரம்பக்காலத்தில் கட்சியின் இக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் சேக்கா (Sekka) என்ற சிறப்பு மன்றம் பெரும் பணியாற்றியது என்று தெரியவருகிறது.

1923ஆம் ஆண்டில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. சோவியத், சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஐக்கியம் (The Union of Soviet Socialist Republic) என்ற பெயரோடு ஒரு கூட்டரசு நிறுவப்பட்டது. நாட்டிலுள்ள ஒவ்வொரு நகரமும் பெரிய கிராமமும் தொழிலாளர்களைக் கொண்ட சோவியத்தை அமைக்கும். இந்த அடிப்படை சோவியத்துகள், மாநில சோவியத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும். இவை அனைத்து ரஷ்ய சோவியத் காங்கிரசிற்கு உறுப்பினர்களை அனுப்பும். இதுவே ரஷ்யாவின் ஆற்றல் மிக்க நிறுவனம். இதிலிருந்தே ஒரு மத்திய செயற்குழுவும், அமைச்சர்கள் அடங்கிய அமைச்சகமும் தேர்ந்தெடுக்கப்படும். 18 வயதிற்கு மேற்பட்ட, உழைப்பால் வருவா

யைத் தேடிக்கொள்ளும் ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. கூட்டரசில் உள்ள ஒவ்வொரு குடியரசும் அரசாங்க அமைப்பில் ரஷ்ய உதாரணத்தைப் பின்பற்றியது. எல்லாக் குடியரசுகளுக்கும் பொதுவாக ஒரு மத்திய, செயற்குழு அமைச்சர்கள் கவுன்சில் என்ற இரண்டும் அமைக்கப்பட்டன.

## விளாதிமிர் இலியச் லெனின் (1870-1924)

ரஷ்யாவில் புரட்சி வெற்றி பெறவும் மார்க்சியக் கம்யூனிசச் சித்தந்தாத்தை வெற்றியுடன் செயற்படுத்தும் முதல் நாடாக ரஷ்யாவை மாற்றவும் காரணமான லெனின் 1870ஆம் ஆண்டில் சிம்பிர்ஸ்க் என்ற ஊரில் பள்ளித் தணிக்கை அலுவலர் ஒருவரின் மகனாகப் பிறந்தார். இளமையிலேயே அவரது நல்லொழுக்கமும் அறிவுக் கூர்மையும் பிறரைப் பெரிதும் கவர்ந்தன. சிறுவயதிலேயே தந்தையைப் பறி கொடுத்த லெனின், 1887ஆம் ஆண்டு ரஷ்ய மன்னரைக் கொலை செய்யத் திட்டமிடப்பட்ட சதியில் பங்கு கொண்டதற்காக அவர் தமையனார் அலெக்சாந்தர் என்பவர் தூக்கிலிடப்பட்டதால், குடும்பத்தின் பெரிய ஆண் துணையையும் இழந்தார். லெனினின் குடும்பம் ஊர் ஊராக அலைந்தது. பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத நிலையில் லெனினின் மனம் அரசியலிலும் மார்க்சிய இலக்கியங்களிலும் ஈடுபட்டது. ஆழ்ந்து படித்துச் சிந்தித்த லெனின் சார் மன்னனின் கொடுங்கோன்மையிலிருந்து நாட்டை விடுவிக்க வேண்டுமெனில் பாட்டாளி மக்களை ஒன்றுதிரட்டி ஒரு புரட்சியை நடத்துவதன் மூலம் நாட்டைச் சோஷிலிசப் பாதைக்கு இட்டுச் செல்வதே நலம் என்ற முடிவிற்கு வந்தார். ரஷ்ய நகரங்களில் செயல்பட்ட ரகசிய மாக்சிய வட்டங்களுடன் தொடர்புகொண்டார். அவரது தீவிர கொள்கைகளுக்காக நாடு கடத்தப்பட்டார். சைபீரியப் பனிப்பாலையில் மூன்றாண்டுக் காலம் துன்புற்றார். 1900ஆம் ஆண்டில் ஜெர்மனிக்குச் சென்றார். பிரஸ்ஸல்ஸ், பாரிசு, இலண்டன் போன்ற நகரங்களில் சில காலம் வசித்தார். எங்கிருந்தபோதும் ரஷ்யப் புரட்சி இயக்கத்தில் பங்கு கொள்வதை அவர் விடவில்லை. வெளி நாடுகளில் இருந்து கொண்டே 'இஸ்க்ரா' (தீப்பொறி) என்ற புரட்சி ஏட்டை நடத்தினார். ரஷ்ய சோஷலிச ஜனநாயகக் கட்சியின் இடது சாரிப் பிரிவுக்குத் தலைவரான லெனின் 1905ஆம் ஆண்டில் தோன்றிய ரஷ்யப் புரட்சியின்போது நாடு திரும்பித் தொழிலாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தார். புரட்சி தோற்றதால் மீண்டும் நாட்டைவிட்டு வெளியேறினார். 1914ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்திற்குக் குடிபெயர்ந்தார்.

1917ஆம் ஆண்டில் மீண்டும் நாடு திரும்பிய லெனின் நவம்பர்ப் புரட்சியை வெற்றிகரமாக நடத்திச் சாரின் ஆட்சிக்குச் சாவு மணி அடித்துத் தாமே ஆட்சிப் பொறுப்பை ஏற்ருர். எதிர்ப்புகளை முறியடித்துச் சோவியத் யூனியன் என்ற கூட்டரசை நிறுவிப் பல வழிகளிலும் நாடு முன்னேறும்படி செய்தார். நாட்டின் நன்மைக்காகத் தம் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்றுக்கொண்ட லெனின் புதிய பொருளாதாரக் கொள்கையைக் New Economic Policy) கடைப்பிடித்ததன்மூலம் நாட்டில் உற்பத்தியும் திறமையும் பெருகுமாறு செய்தார். போருக்குப் பின் ஏற்பட்ட நெருக்கடிகளில் இருந்து தன்னை மீட்டுக்கொண்ட நாடு விரைந்து முன்னேறி உலக அரசியலரங்கில் உன்னதமானதோர் இடத்தைப் பெற்றது.

1922ஆம் ஆண்டு அவரது எதிரிகள் அவரைக் கொல்லச் சதி செய்தபோது அதிலிருந்து தப்பி உயிர் பிழைத்தாலும் அவர் உடலில் இடப்பகுதி துவண்டு போயிற்று. ஓய்வெடுக்குமாறு வற்புறுத்தியும், அதை மீறிக் கடின உழைப்பில் ஈடுபட்டதால் வலப்பகுதி செயலற்றுப் போனதுடன் பேசும் சக்தியையும் இழந்தார். நாட்டுப் பணியே உயிர் மூச்செனக்கொண்ட லெனின் 1924ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ஆம் நாள் காலமானுர். அவரது நினைவைப் போற்றும் வகையில் புரட்சிக்களமாக விளங்கிய பெட்ரோகிராட் லெனின்கிராட் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. அவர் உடலும் பதப்படுத்தப்பட்டுக் கண்ணுடிப் பேழையுள் வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது.

## (ஆ) துருக்கி

19ஆம் நூற்ருண்டில் ஐரோப்பாவில் பல நாடுகள் தோன்றியதைப் போன்றே 20ஆம் நூற்ருண்டில் ஆசியாவில் பல நாடுகள் தோன்றின. இந் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஜப்பான் வளர்ச்சியும் புதுவாழ்வும் பெற்று வல்லரசாகத் தலைநிமிர்ந்தது. சீனு, இந்தியா, பெர்ஷியா ஆகிய நாடுகள் மேலை நாடுகளின் பிடியிலிருந்து விடுபட்டன. துருக்கியும் அரேபிய உலகமுங்கூடத் தேசிய, தன்னுட்சி உணர்வுகளால் உந்தப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பின் கூடிய சமாதான மாநாட்டில் இந் நாடுகளும் இடம் பெற்றன. சமாதான ஏற்பாடுகளால் மேலை நாடுகளைப் போன்றே இந் நாடுகளும் மாற்றங்களுக்கு உட்பட்டன. குறிப்பாக அண்மைக் கிழக்கு நாடுகளிலும் மத்தியக் கிழக்கு நாடுகளிலும் பெரும் மாறுதல்கள் தோன்றின.

முதல் உலகப் போரில் ஜெர்மனியுடன் இணைந்து போரிட்ட துருக்கி, 1918ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தன் தோல்வியை

ஒப்புக்கொண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இதன் பின்னர் தோற்ற நாடுகள் ஒவ்வொன்ருேடும் தனித்தனியே உடன்பாடு ஏற்பட்டபோது, துருக்கியுடன் செவ்ரே (Sevres) உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. 1920ஆம் ஆண்டு இவ் வுடன்படிக்கை ஏற்படுமுன்பே இத்தாலிய, கிரேக்கப் படைகள் துருக்கியில் சில இடங்களைப் பிடித்துக்கொண்டன. இந்த உடன் பாட்டால் கான்ஸ்டான்டிநோபிளும் அதற்கு அருகே அமைந்த பகுதிகளும் சிறிய ஆசியாவும்மட்டுமே அடங்கிய நாடாகத் துருக்கி குறுகிப் போயிற்று. ஐரோப்பாவிலிருந்த துருக்கிக்குச் சொந்த மான பகுதிகள் பல்கேரியாவிற்கும் கிரீசிற்கும் வழங்கப்பட்டன. அதிலும் ஏட்ரியாநோபிள், திரேஸ் போன்ற பகுதிகளை அடைந்து பெருமைகொண்டது, கிரீசு. டார்டனல்சு ஜலசந்தியின் கரை யோரப் பகுதிகள் ஒரு பன்னுட்டுக் குழுவின் பொறுப்பில் விடப் பட்டன. அங்கிருந்த கோட்டை கொத்தளங்கள் இடித்துத் தள்ளப்பட்டன. சிறிய ஆசியாவில் ஸ்மெர்ன் நகரையும் அதை அடுத்திருந்த பகுதிகளையும் கிரீசிற்குத் தந்ததுடன் ஆர்மினியா விற்கும் சுதந்திரம் வழங்கியது துருக்கி. ஈராக், பாலஸ்தீனம், சிரியா ஆகிய நாடுகள் துருக்கியிடம் இருந்து பறிக்கப்பட்டு மேன்டேட் நாடுகளாக மாற்றி அமைக்கப்பட்டன. அரேபி யாவிற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இம் மாற்றங்களை எல்லாம் துருக்கி சுல்தான் ஆருரம் முகம்மது ஏற்றுக்கொண்டார். இந்த அவமானகரமான உடன்பாட்டைக்கண்டு துருக்கி மக்கள் குறிப்பாகப் படையினர் ஆத்திரமுற்றனர். உடன்பாட்டைச் செயல்படுத்துவது மிகக் கடினமான பணியாயிற்று. துருக்கியர் முஸ்தாபா கமால் பாஷா (Musthafa Kemal Pasha) என்ற தலை வரின் கீழ் அணிதிரண்டு தங்கள் நாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் காண முனைந்தனர்.

1880ஆம் ஆண்டில் சலோனிகாவில் அல்பேனியப் பெற்ருேர் களுக்குப் பிறந்தார் கமால் பாஷா. ஐரோப்பாவின் நோயாளி என்ற பெயரை அடைந்து தன் பேரரசின் பகுதிகளை இழந்து வல்லரசுகளின் தயவினுல் உயிர் பிழைத்திருந்த துருக்கியின் இழி நிலையைப் போக்கி, முன்னேற்றத்திற்கு வழி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு 1908ஆம் ஆண்டு ஜெனீவாவில் நிறுவப் பட்ட 'இளம் துருக்கியர்' இயக்கத்தில் (Young Turks) தீவிர ஈடுபாடு கொண்டார் கமால் பாஷா. துருக்கிய இராணுவத்தில் சேர்ந்த கமால் பாஷா 1911ஆம் ஆண்டில் லிபியாவில் இத்தாலியை எதிர்த்தும், பின்னர் பால்கன் போர்களிலும் பங்கு கொண்டார். முதல் உலகப் போரின்போது டார்டனல்சில் பிரிட்டனின் தாக்குதலை முறியடித்துப் பெரும் புகழ் பெற்ருர்.

நெருக்கடி நேரங்களில் அபராத் துணிச்சலோடும் முன் யோசனை யோடும் செயல்படும் திறமை அவரிடம் இருந்தது. நாட்டின் பிற்போக்கான நிலைக்குச் சுல்தானின் எதேச்சாதிகாரமும், ஐரோப்பிய நாடுகளின் தலையீடுமே காரணம் என்பதை உணர்ந்த கமால் பாஷா, நாட்டை முடியாட்சியிலிருந்து விடுவித்துக் குடி யாட்சி ஆக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, மக்கள் கட்சி (Peoples Party) என்ற ஒன்றை உருவாக்கினூர். தேசியப் பற்று டைய துருக்கியர் அக் கட்சியில் சேர்ந்து அதை வலிமையுடைய தாக்கினர்.

1919ஆம் ஆண்டு ஜூலை மாதம் இத்தாலிய கிரேக்கப் படைகள் அனடோலியாவில் நடத்திய ஆக்கிரமிப்புகளை எதிர்த்து ஒரு தேசிய மாநாட்டைக் கூட்டினூர். தொடர்ந்து பிரிட்டிஷ் படையின் பாதுகாப்பில் இருந்த சுல்தான், கமால் பாஷாவைப் படையிலிருந்து நீக்கினூர். ஆனால், படைவீரர்களும் அவர் பக்கம் இருந்தபடியால் சுல்தானின் ஆணையை மதியாது இரண்டாம் முறை ஒரு மாநாட்டைக்கூட்டி, சில தீர்மானங்களை அவர் இயற்றினூர். அனடோலியா, திரேஸ் போன்ற பகுதிகள் துருக் கிக்கே சேரவேண்டுமென்றும், மேலைநாடுகள் துருக்கியில் அனுப வித்து வந்த சிறப்புரிமைகள் நீக்கப்பட வேண்டுமென்றும் இம் மாநாடு கூறியது. நேச நாடுகள் கமால் பாஷா அபாயகர மானவர் என்பதை உணர்ந்து, அவர்மீது நடவடிக்கை எடுக்கு மாறு சுல்தானைத் தூண்டின. சுல்தானும் அவரைக் கைது செய்யு மாறு உத்தரவிட்டார். கிரேக்கப் படைகளும் அவரை எதிர்க்கக் கிளம்பின. கிரேக்கப் படைகளிடம் முதற் சுற்றுச் சண்டையில் தோற்ற கமால் பாஷாவும் அவர் நண்பர்களும், மலைகளும் காடு களும் அடர்ந்த உள்நாட்டிற்குள் ஓடிப் போயினர். அங்காரா (Ankara) வைத் தன் இருப்பிடமாகக் கொண்ட கமால் பாஷா அங்குத் தாற்காலிக அரசை அமைத்தார். ஒரு தேசிய அவை யும் கூட்டப்பட்டது. புகழ் பெற்ற அங்காரா ஒப்பந்தம் இங்கு உருவாயிற்று. இவ்வொப்பந்தம் சுல்தான் பிற நாட்டினர் ஆதிக் கத்திலிருந்து விடுபடவேண்டும்; நாட்டிற்கு முழு சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்றும் ஆட்டோமான் துருக்கியர் வாழும் பகுதிகள் அனைத்தும் துருக்கிக்கே சேரவேண்டும் என்றும் கூறியது. இவை செவ்ரே உடன்பாட்டை மீறும் செயல்களாகும். இதனுல் வரும் இழப்பினை ஏற்க விரும்பாத கிரீசு தன்படை பலத்தின் மூலம் கமாலுக்குப் புத்தி புகட்ட எண்ணியது. இத் திட்டத் திற்குப் பிரிட்டிஷ் பிரதமர் லாயிட் ஜார்ஜ் (Lloyd George) துணை நின்றூர். ஆனால், ஃபிரான்சோ கமாலுக்கு உதவத் தீர் மானித்தது. 1921ஆம் ஆண்டு மார்ச் மாதம் போல்ஷிவிக்

ரஷ்யாவோடு ஒரு நட்பு உடன்பாடு செய்துகொண்டார் கமால் பாஷா. பின் கிரேக்கப் படையை எதிர்கொள்ளத் தயாரானார். மிகுந்த தீரத்தோடு தண்ணீரற்ற பாறைப் பிரதேசமான அங்காராவை நோக்கிக் கிரேக்கப் படைகள் முன்னேறின. ஆனால், சிறிய ஆசியாவின் குறுக்கே அங்காராவை நோக்கிச் செல்லும் வழியிலேயே உறுதி தளர்ந்தது; முன்னேறுவதும் கடினமாயிற்று; பின்னேறவும் வழியில்லை. 1922ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கமால் பாஷா மிகுந்த ஆவேசத்தோடு மலைப் பகுதிகளிலிருந்து இறங்கி வந்து கிரேக்கப் படையைச் சுற்றி வளைத்துத் தூள் தூளாக்கினார். கிரேக்கர்கள் படுதோல்வி அடைந்தனர். சிமர்னாவும் (Symrna) மீட்கப்பட்டது. சிறிய ஆசியாவில் கிரேக்க ஆதிக்கத்திற்கு முடிவு ஏற்பட்டது.

கமாலின் வெற்றிப் படைகள் அனடோலியாவை விடுவித்த பின் டார்டனல்சு ஜலசந்தியை நோக்கி முன்னேறின. ஜலசந்தியில் தரைப் பகுதிகளில் ஃபிரிட்டிஷ், ஃபிரெஞ்சு, இத்தாலியத் துருப்புகள் தங்கியிருந்தன. இவற்றுள் ஃபிரெஞ்சு, இத்தாலியப் படைகள் உடனே தங்கள் பகுதிகளைக் காலி செய்தன. ஆனால், பிரிட்டன் பிடிவாதமாக ஜலசந்தியின் சுதந்திரத்தைக் காப்பதென உறுதிபூண்டு நின்றது. ஆனால், இவ்வுறுதி காப்பாற்றப் படவில்லை. அக்டோபர் மாதம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு செவ்ரே உடன்படிக்கைக்கு மாறாகப் புதிய முடிவாயிற்று. ஆனால், சூழ்ச்சித் திறன் மிக்க பிரிட்டன், துருக்கி சுல்தானும் இம் மாநாட்டில் பங்குகொள்ள வேண்டுமெனக் கூறியது. இதனால் அங்காரா தேசிய அவை மிகுந்த சினம் கொண்டு சுல்தானிடமிருந்து காலிஃபா (Caliph) பதவியைப் பறித்து விட்டது. ஆறும் முகம்மதின் பதவியையும் அகற்றியது. ஆட்சியிலிருந்து விரட்டப்பட்ட சுல்தான், ஃபிரிட்டிஷ்காரர்களுக்குச் சொந்தமான மால்டாவில் தஞ்சமடைந்தார். 1923ஆம் ஆண்டு ஜூலை மாதம் லாசேன் உடன்படிக்கை (Treaty of Lausanne-கையெழுத்தாயிற்று. துருக்கிக்கு ஏட்ரியாநோபிளும் (Adria) nople), கிழக்குத் திரேசும் (Eastern Thrace) திரும்பக் கிடைத்தன. ஜலசந்தியைச் சுற்றி நடுநிலையாக்கப்பட்ட பகுதிகளின் பரப்புக் குறைக்கப்பட்டது. பாலஸ்தீனம், மெசபொடாமியா, சிரியா, எகிப்து, சூடான், சைப்ரசு, அரேபியா, துருக்கி, கான்ஸ்டான்டிநோபிள் இவைகளை விட்டு அந்நியத் துருப்புகள் விலகின. அதே ஆண்டு அக்டோபர் மாதம் துருக்கியில் குடியரசு நிறுவப்பட்டது. முஸ்தாபா கமால் பாஷா அதன் அதிபரானார். வல்லரசுகளின் கண்காணிப்பிலிருந்து விடுபட கான்ஸ்டான்டிநோபிளுக்குப் பதிலாக அங்காராவைப் புதிய தலைநகராக அவர் மாற்றினார்.

1924ஆம் ஆண்டில் ஒரு புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.

நாட்டுக்கு ஏற்பட்ட அவப்பெயரையும், துன்பங்களையும் துடைத்த கமால் பாஷா குடியரசை அமைத்ததோடு தன் பணி முடிந்துவிட்டது எனக் கருதவில்லை. நாட்டில் மலிந்துள்ள சீர் கேடுகளைக் களைந்து மேற்கு நாடுகளைப்போல் முன்னேற்றமடையச் செய்யவும் அவர் அரும்பாடுபட்டார்.

அவர் செய்த முதற் சீர்திருத்தம் அரசியலிலிருந்த சமயத்தை விலக்கி, காலிஃபா பதவியை ஒழித்ததாகும். துருக்கி சமயச் சார்பற்ற குடியரசு என அறிவிக்கப்பட்டது. அரசின் ஆணை, குறிப்பு ஆகியவற்றில் இஸ்லாம், அல்லா எனக் குறிப்பிடப்படுவது கைவிடப்பட்டது. குரானை அடிப்படையாகக் கொண்ட பழைய சட்டங்களுக்குப் பதில் ஐரோப்பிய நாடுகளைப்போல் சிவில், கிரிமினல் சட்டங்கள் ஏற்பட்டன. அவ்வாறே நீதிமன்றமும், விசாரணை முறைகளும் திருத்தியமைக்கப்பட்டன. மசூதிகளுக்குப் பதில் அரசாங்கமே கல்விப் பொறுப்பை ஏற்றது. நவீன முறையில் பள்ளிகளும் கல்லூரிகளும் நிறுவப்பட்டு, எல்லாவிதப் பாடங்களும் கற்றுக் கொடுக்கப்பட்டன. அதாவது சமயக் கல்வியின் இடத்தை உலகக் கல்வி பெற்றது.

கமால் பாஷா தீரமும் திடசித்தமும் உள்ளவராதலால், எதிர்ப்பைச் சிறிதும் பொருட்படுத்தாது மக்களின் வாழ்வினைத் திருத்தியமைக்கப் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். பல நூற்றுண்டுகளாக இருந்த குழப்பத்தை நீக்கி ஒழுங்குமுறையைப் புகுத்துவது எளிதான பணி அல்ல. கமால் பாஷாவே மக்களிடம் ஒருமுறை, 'தாற்காலிகமாக மக்கள் அரசியலிலிருந்து விலகியிருக்கட்டும். விவசாயத்திலும் வாணிபத்திலும் அவர்களின் ஈடுபாடு மலரட்டும். ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு என்னிடம் ஆட்சியை ஒப்படைக்கட்டும். அதன் பின்னர் அவர்கள் விருப்பப்படி எதையும் பேசலாம்' என்று கூறினர்.

சமுதாயத் துறையில், ரஷ்ய நாட்டுப் பீட்டரைப் போன்று, மேலைநாட்டு நாகரிகத்தைத் தன் நாட்டில் புகுத்த ஆசைப்பட்டார் கமால் பாஷா. மூட நம்பிக்கைகளையும் காலத்திற்கு ஒவ்வாத பழைய பழக்கவழக்கங்களையும் சட்டத்தின் துணையோடு விலக்க முயன்றார். ஐரோப்பியப் பாணியில் உடை அணியுமாறு மக்களைக் கட்டாயப்படுத்தினர். இஸ்லாமியக் காலண்டர் முறை அகற்றப்பட்டு, கிரிகோரிய காலண்டர் முறை புகுத்தப்பட்டது. மெட்ரிக் அளவு முறைகள் நடைமுறைக்கு

வந்தன. ஐரோப்பிய இசையையும் நடனத்தையும் கற்பிப்ப தற்கெனச் சிறப்பாகப் பள்ளிகள் திறக்கப்பட்டன. நாட்டில் கல்வி அறிவின்மையைப் போக்க முயன்றது இவ்வரசு. பழைய துருக்கிய எழுத்துகளுக்குப் பதிலாக ஐரோப்பிய முறையில் புதிய எழுத்துகள் வழக்கில் வந்தன. தொழிற் பள்ளிகளும் மருத்துவக் கல்லூரிகளும் நிறுவப்பட்டன.

பெண்ணடிமை தீரும் மட்டும் எந்த நாடும் முன்னேற முடியாது என்ற கொள்கையுடைவர், கமால் பாஷா. துருக்கிப் பெண்களுக்கு பர்தா முறையிலிருந்தும், வீட்டுச் சிறையிலிருந்தும் விடுதலை அளிக்க விரும்பினர். அரசாங்க அதிகாரங்களால் முகம் மதியக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை இத் தளைகளிலிருந்து விடுபட்டு வெளியுலகிற்கு வருமாறு தூண்டினர். 1926ஆம் ஆண்டில் பலதார மணத் தடைச் சட்டம் பிறந்தது. மண விலக்கு உரிமை, சொத்துரிமை ஆகியவையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. வாக்குரிமையும் அளிக்கப்பட்டது. இப்படிப் பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளால் பெண்குலத்தின் பெரும் மதிப்பிற்குரியவரானர்.

பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கியிருந்தது துருக்கி. இயற்கை வளங்கள் பல இருந்தும் உணவுப் பொருள்கள் உட்பட, பலவற்றை இறக்குமதி செய்து வந்தது. நாட்டின் பல பகுதிகளை இணைக்கும் சாலைகளும் இருப்புப் பாதைகளும் இல்லை. தன்னிறைவு என்ற இலட்சியத்தை அடையப் பாடு பட்டது புதிய அரசு. முதலில் விவசாயத்தின்பால் அரசின் கவனத்தைத் திருப்பியது. பல விவசாயக் கல்லூரிகள் திறக்கப் பட்டன. பயிற்சி பெற்ற நிபுணர்கள் புதிய விவசாய முறை களைக் குடியானவர்களுக்குக் கற்பித்தனர். நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. நீர்ப்பாசன வசதிகள் அதிகரித்தன. 1930ஆம் ஆண்டு முதல் உணவுப் பொருள் இறக்குமதியாவது நின்றது. மேலும், பல பொருள்களுக்கும் அந்நிய நாடுகளை நம்பியிராமல் துருக்கி தன்னிறைவைப் பெற்றது.

தொழில் துறையிலும் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற் பட்டது. துணி, இரும்பு, நிலக்கரி, இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தி பெருகியது. ரஷ்யா, இத்தாலி முதலிய நாடுகளோடு வியாபார ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. குறிப்பாக ரஷ்யாவின் உதவியோடு பொருளாதாரத் துறையில் துருக்கி வெகுதூரம் முன்னேறியது. பொருளாதார வளர்ச்சிக் கேற்ப சாலை, இருப்புப் பாதைப் போக்குவரத்து விரிவாக்கப் பட்டன.

கமால் பாஷாவின் அயல்நாட்டுக் கொள்கை, ஆக்கிர மிப்பை வெறுத்து அமைதியையும் நட்புறவையும் நாடியது. 1919-ல் கூடிய தேசிய மாநாடு துருக்கியின் நிர்வாகத்திலிருந்த அரேபிய நாடுகளுக்குத் தன்னாட்சி உரிமை அளித்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் அரேபியாவின் எண்ணெய் வளத்தைக் கண்டு அங்கு அதிகமாகத் தலையிட்டன. ஆனால், துருக்கி அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. கம்யூனிஸ்ட் ரஷ்யாவுடன் இரு உடன்பாடுகளைச் செய்துகொண்டு இரு நாடுகளின் உறவை வளர்த்துக்கொண்டார் கமால். வேறு பல அண்டை நாடு களோடும் நட்பு உடன்பாடுகள் ஏற்பட்டன. சமுதாயச் சீர் திருத்தத்திலும் பொருளாதார வளர்ச்சியிலுமே அதிக அக்கறை காட்டினார் கமால்.

19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் அத்துமீறி நுழைந்த நாடு என்ற அவப் பெயரைப் பூண்டிருந்த துருக்கியை ஐரோப்பா வின் நோயாளியை, வலிவும் வனப்பும் உள்ள அந்நிய நாடுகளின் உதவியின்றித் தனித்து நிற்கக்கூடிய சுதந்திர நாடாகமாற்றி, அந் நாட்டு ஆடவரும் பெண்டிரும் அவர் தம் முன்னோர் அனுப வித்திராத அளவிற்கு உரிமைகளையும் பாதுகாப்பு உணர்வினையும் அளித்த பெருமைக்குரியவர் அதிபர் கமால். இதனால் துருக்கியின் தேசிய அவை அவரைத் துருக்கியரின் தந்தை எனப் பொருள் படும் ஆட்டாடர்க் (Attaturk) என்ற விருதைச் சூட்டிமகிழ்ந்தது. தன் பணிகள் நிறைவுபெறும் முன்பே 1938ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அவர் காலமானார். அவருடன் பணியாற்றிய இஸ்மத் இனானு (Ismet Inonu) அடுத்த அதிபராகி ஆட்டாடர்க்கின் பணியைத் தொடர்ந்தார்.

## (இ) ஜெர்மனி

முதல் உலகப் போரின் இறுதியில் 1918ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் நாள் தோல்விக்குமேல் தோல்வி கண்ட கெய்சர் வில்லியம் பதவியைத் துறந்து ஹாலந்திற்குத் தப்பி ஓடினார். எஞ்சியிருந்த தளபதிகள் நவம்பர் 11ஆம் நாள் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஜெர்மனியில் முடியாட்சியைத் தொடர்ந் திருக்க அனுமதிப்பதா அல்லது குடியரசை நிறுவுவதா என்ற பிரச்சினை தோன்றி மக்களை ஆட்டி வைத்தது. முடிவில் நாட்டிற் கேற்ற அரசியலமைப்பைத் தீட்டுவதற்காக ஓர் அவை தேர்ந் தெடுக்கப்பட்டு, அது 1919ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வைமார் (Weimar) என்னுமிடத்தில் கூடியது. சோஷலிஸ்டுகள் மிகுந்த இந்த அவை ஒரு குடியரசிற்காக அரசியலமைப்பைத் தந்தது. ஓர் அதிபர், அமைச் ஓர்சரவை, இருஅவைகளைக் கொண்ட ஒரு நாடாளுமன்றம்

ஆகியவற்றைக் கொண்ட குடியரசு ஜெர்மனியில் பிறந்தது. எபர்ட் என்ற சோஷலிஸ்ட் அதிபர் பதவியை ஏற்ருர். இவ்விதம் ஐரோப்பாவில் வலிமைமிக்க ஜெர்மன் முடியரசு, பேய் மழையில் கரைந்தோடிய மணல் மேட்டைப்போல் இருந்த இடம்தெரியாமல் போயிற்று. இந்த வைமார் அரசிற்கு ஏற்பட்ட முதல் சோதனை நேச நாடுகளோடு சமாதான உடன்பாடுகளில் கையெழுத்திட்ட தாகும். அம் மாநாட்டில் உடன்பாடு விதிகளைக் குறைகூறவோ, கடுமையைக் குறைக்குமாறு கோரவோ அவர்களுக்குச் சிறிதேனும் வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. நீட்டிய தாளில் காட்டிய இடத்தில் கையொப்பமிட மட்டுமே அவர்கள் அனுமதிக்கப் பட்டனர். 1918-ல் தோல்வியுற்றுச் சரணடைந்தது; பிற நாடு களின் கண்முன் பெருமை குன்றியது. கடுமையானதும் அவமானகர மானதுமான சமாதான உடன்பாடும் அதில் ஜெர்மனியே போர்க் குக் காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஜெர்மன் மண்ணில் அந்நியத் துருப்புகளின் வாசம் நீடித்தது; அருமையான நிலப் பகுதிகளைப் பறி கொடுத்தது; நேச நாடுகளுக்குத் தரவேண்டிய இழப்பீட்டுச் சுமை ஆகியவற்ருல் தலைநிமிர முடியாது தத்தளித் தது ஆகிய இவை ஜெர்மன் மக்களின் நெஞ்சங்களில் கசப்பும், புரட்சியுணர்வும், ஆன்மீக விழிப்பும் ஏற்பட வழி செய்தன. பழி தீர்க்கும் தினவைத் தீர்த்துக்கொள்ளும் முறையில்தான் அவர்கள் குடியரசை வீழ்த்தி ஒரு கம்யூனிசப் புரட்சியையும் நசுக்கி, வைமார் குடியரசை ஏற்படுத்தினர். அப்போதும் தீராது ஆவே சமும் போரினுல் ஏற்பட்ட தழும்புகளும் அவர்களைப் புதிய அரசாங்கத்தையும் குறைகூறச் செய்தன. ஜெர்மானியர் ஒற்றுமையுணர்வு குலைந்தும், துணைவற்றும், துயரங்களுக்கும், வெறுப்புணர்வுக்கும் ஆட்பட்டிருந்தனர். நாடாளுமன்ற அர சாட்சி முறையில் அவர்களுக்கு விருப்பமோ அனுபவமோ கிடை யாது. கட்சி ஆட்சி முறையால் முளைத்த இருபது முப்பது அரசியல் கட்சிகளைக் கண்டு அவர்கள் திணறினர். போரினுல் ஜெர்மனியின் பொருளாதார அமைப்பே முழுமையாகச் சீர் குலைந்து போனதால் பணவீக்கமும், அதைத் தொடர்ந்து தொழில் துறையில் பல இடுக்கண்களும் தோன்றின. பரம்பரை பரம் பரையாக இராணுவ அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கு அடங்கியே பழக்கப்பட்டுவிட்ட ஜெர்மன் மக்கள், தற்போது அக் கட்டுப் பாடுகள் இல்லாததால் தரையில் எடுத்தெறியப்பட்ட மீன்களைப் போல் திணறினர். குழப்பங்களிலிருந்து மீட்டு, அவர்களை வழி நடத்திச்சென்று, அவர்கள் இழந்த தன்மானத்தையும் பெருமை யையும் மீட்டுத் தரக்கூடிய தகுதிபடைத்த ஒரு தலைவனுக்காக அவர்கள் ஏங்கினர்.

ஆனால், இவர்களின் மனநிலையை அறியாத, அதைப்பற்றி அக்கறைப்படாத ஜெர்மனியின் எதிரிகளான வல்லரசுகள் வெர்சாயி உடன்பாட்டு விதிகளை நிறைவேற்றுமாறு ஜெர்மானியை மிரட்டின. முதல் நான்காண்டுக் காலத்தில் பணவீக்கத்தைக் காரணமாகக் காட்டி, சாத்வீகமான முறையிலும் வெறுப்பை உமிழ்ந்தும் வல்லரசுகளை ஏமாற்றமுயன்று தன்னிலையை மேலும் மோசமாக்கிக்கொண்டது ஜெர்மனி. இழப்பீட்டுத் தொகையின் தவணைகள் சரிவரக் கொடுக்கப்படாததால் சினமுற்ற ஃபிரான்சு கனிவளம் மிகுந்த ரூர் (Ruhr) எனும் ஜெர்மானியப் பகுதியைப் பிடித்துக்கொண்டது. அங்கிருந்த ஜெர்மானியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டதால் உற்பத்தி மேலும் குறைந்து ஜெர்மன் நாணயமான 'மார்க்' தன் செலவாணி மதிப்பை வெகு வேகமாக இழந்தது. நாடு திவாலாகும் நிலையை எட்டியது. நாட்டில் சற்று ஸ்திரமான நிலையிலிருந்த நடுத்தர வர்க்கத்தினர் தலைதூக்க முடியாது அழிந்தேபோயினர். பொருள்களின் விலைகள் மக்களால் எட்டமுடியாத அளவிற்கு உயர்ந்திருந்தன.

பொருளாதார நெருக்கடி மிகுந்த இந்நேரத்தில் கஸ்தாவ் ஸ்ட்ராஸ்மன் (Gustav Streisemann) ஜெர்மனியின் சான்சலரானார். 1923ஆம் ஆண்டிலிருந்து 1929ஆம் ஆண்டு வரை பதவி வகித்த ஸ்ட்ராஸ்மன் காலத்தில் ஜெர்மனியின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. தன் பழைய எதிரிகளுடன் ஒத்துழைத்தும், அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியைப்பெற்றும், தன் பொருளாதாரச் சீர்குலைவைச் சரிப்படுத்திக்கொள்ள முயன்றது ஜெர்மனி. 1924ஆம் ஆண்டு டாஸ் (Dawes) என்ற அமெரிக்க நிதித் துறையாளரின் தலைமையில் அமைந்த குழு, ஜெர்மனி தரவேண்டிய இழப்பீட்டுத் தொகையை வகைப்படுத்தும் திட்டம் ஒன்றை அளித்தது. இழப்பீட்டுத் தொகையின் தவணைகள் ஆரம்பத்தில் குறைவாகவும் போகப் போக அதிகமாகவும் இருக்கலாமென இக் குழு சிபாரிசு செய்தது. தனது நடுநிலையை அமெரிக்கா போன்ற நாடுகள் மேற்பார்வை இடுவதற்கும் ஜெர்மனி இணங்கியது. இதன் பின்னர் ரூர் பகுதியை விட்டு ஃபிரான்சு விலகியது.

1925ஆம் ஆண்டில் ஜெர்மனி ஃபிரான்சின் மேற்கு எல்லையைக் காப்பதாக உறுதி கூறும் லொகார்னோ (Locarno) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இச் செயல்களால் ஜெர்மனி பிற நாடுகளின் அனுதாபத்தைச் சம்பாதித்துக் கொண்டது. அமெரிக்க மூலதனம் ஜெர்மனியில் பெருமளவில் முதலீடு செய்யப்பட்டது. பல தொழில்கள் தோன்றின. சாலைகளும், இருப்புப் பாதைகளும், புதிய தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டன.

வெளிப்படையாகப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களும் சமூக நலத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்ட அதே நேரத்தில், இரகசியமாகத் தன் படைபலத்தை உருவாக்கும் பணியில்ஜெர்மனி ஈடுபட்டது. 1929ஆம் ஆண்டில் ஓவன் யங் (Owen Young) என்பார் தீட்டிய ஜெர்மன் இழப்பீடு பற்றிய திட்டம் ஜெர்மனியால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் பின்னரே ரைன்லாந்திலிருந்த நேச நாட்டுப் படைகள் அப் பகுதியினின்றும் நீங்கின. லொகார்னோ உடன்பாட்டைத் தொடர்ந்து ஜெர்மனி போலந்துடன் செக்கோஸ்லோவேகியாவுடனும் எல்லைத் தகராறுகள் ஏற்பட்டால் அவற்றை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்வதாக உடன்பாடுகள் செய்து கொண்டது. 1926ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சர்வதேசச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் உரிமையும், பெருமையும் ஜெர்மனிக்குக் கிட்டியது. ஜெர்மனி பழைய வல்லரசு நிலையை மீண்டும் அடைவதற்கான நம்பிக்கைக் கதிர்கள் ஜெர்மானியரின் உள்ளங்களிலே பிறந்தன. ஆனால், இம் மகிழ்ச்சி சொற்பகாலமே நீடித்தது. 1929ஆம் ஆண்டில் நியூயார்க் பங்கு மார்கெட்டில் ஏற்பட்ட பெரும் பொருளாதாரச் சரிவு (Great Depression) உலக முழுவதும் பரவி ஒரு நெருக்கடி நிலையைத் தோற்றுவித்தது. ஜெர்மனியும் இதனால் பாதிக்கப் பட்டது. விலைகள் வீழ்ச்சியுறுவதைக் கண்ட அமெரிக்கர்கள் ஜெர்மனியில் தாங்கள் போட்ட மூலதனத்தைத் திருப்பி எடுத்துக் கொள்ள ஆரம்பித்தனர். தொழில்கள் நடைபெறவில்லை; வங்கிகள் முறிந்தன; வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது நிலைமையைச் சமாளிக்க முடியாது அரசு திண்றியது. 1932ஆம் ஆண்டு வரை நீடித்த பொருளாதார மந்தம் அரசிடம் மக்கள் நம்பிக்கையை இழக்கும்படி செய்தது.

1925ஆம் ஆண்டில் ஹிண்டன்பர்க் (Hindenburg) என்ற புகழ்பெற்ற தளபதி குடியரசின் அதிபராகப் பதவியேற்றிருந்தார். இரண்டாம் வில்லியத்தின் அன்பிற்குப் பாத்திரமானவரும் முடியாட்சியில் அசையா நம்பிக்கை உடையவருமான இவர் குடியரசின் தலைவராக ஆனது, குடியரசுக் கட்சியினருக்கு மகிழ்ச்சியையும், அதே சமயம் ஐயத்தையும் ஏற்படுத்தியது. ஆனால் அரசியலமைப்பைக் காப்பதாக அவர் உறுதி மொழி எடுத்திருந்தார். போர்வீரர் ஆயினும் அமைதியை விரும்பிய இவர் காலத்தில் நாடு சீராக முன்னேறியது. ஸ்ட்ராஸ் மன்னனுக்குப்பின் சான்சலராகப் பதவியேற்ற ஹெர்புரூனிங்கும் (Herr Bruning), ஹிண்டன்பர்க்கும் சேர்ந்து பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கப் பாடுபட்டனர். மிகக் கடினமான அப் பணியில் அவர்களால் வெற்றி காண இயலவில்லை. இருப்

பினும் ஹிண்டன்பர்க்கிடம் மக்கள் கொண்ட நம்பிக்கை தளர வில்லை என்பதை 1932ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த அதிபர் தேர்தல் நிருபித்தது. ஹிண்டன் பர்க்கோடு போட்டியிட்ட, புதிதாகத் தோன்றி வளர்ந்து கொண்டிருந்த நாஜிக் கட்சியைச் சேர்ந்த ஹிட்லர் என்பார் ஆறு மில்லியன் வாக்குகள் வித்தி யாசத்தில் தோற்றார். ஆயினும் குடியரசின் அடிப்படை ஆட்டம் கண்டுவிட்டதை அனைவரும் உணர்ந்தனர். தீவிரவாதிகள் அரசி யலில் செல்வாக்குப் பெறத் துவங்கிவிட்டனர். அதிலும் நாஜிக் கட்சி என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட தேசிய சோஷலிஸ்டுக் கட்சியினர் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் மிகவும் வலிமையோடு திகழ்ந்தனர். பெருங்கூட்டத்தினரை வசியப்படுத் தும் பேச்சாற்றலும், கட்சியைத் தன் சொல்லிற்குப் பணிய வைக்கும் திறமையும், கொரில்லாக்களாகக் கட்சித் தொண்டர் களைப் பயன்படுத்திய விதமும், ஹிட்லரின் புகழ் பரவத்துணை செய்தன. இதே சமயம் குடியரசின் விரோதிகளான பெரும் தொழிலதிபர்களும், உயர்குடி மக்களும் அரச கட்சிகளும் அதி பரின் புதல்வரான ஆஸ்கார் என்பாரோடு கூட்டுச்சேர்ந்து, பின்னணியில் குடியரசுக்குக் குழிபறிக்கும் வேலையில் ஈடுபட்டிருந் தனர்.

இவர்கள் அனைவரும் எதிர்பார்த்த தருணம் விரைவில் வந்தது, புருனிங்கிற்குப் பின் இரண்டு சான்சலர்கள் பதவி யேற்று விலகினர். அடுத்த சான்சலராக ஹிட்லரின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டது. ஹிண்டன்பர்க், ஹிட்லரை வழி சான்சலராக ஏற்றார். ஹிட்லரை வழிகாட்டியாக ஏற்ற ஜெர்மனி தன் வரலாற்றில் ஒரு புதிய ஏட்டினைத் திறந்தது.

**ஹிட்லர் :** 1889ஆம் ஆண்டில் ஒரு சாதாரண அரசாங்க அதிகாரியின் பிள்ளையாகப் பிறந்த ஹிட்லர், இளமையில் எந்தத் துறையிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கவில்லை. பிள்ளையின் எதிர் காலம் இருண்டிருக்கும் என்றே பெற்றோர்கள் நினைத்தனர். ஹிட்லர் படிப்பிலும் அக்கறை காட்டவில்லை. இருப்பினும், பள்ளி யில் ஜெர்மனியையும், அந் நாட்டு மக்களையும் ஆசிரியர் புகழ்ந்து கூறிய கருத்துகள் அவர் இளம் உள்ளத்தில் ஆழப் பதிந்தன. ஜெர்மன் மக்கள் அனைவரையும் ஒன்றுசேர்த்து ஜெர்மன் நாட்டை உலகில் தலைசிறந்ததாக உயர்த்த வேண்டும் என்ற ஆசை அவர் நெஞ்சில் குடிகொண்டது. 19ஆம் வயதில் பெற்றோரை இழந்து அநாதையான ஹிட்லர் வயிற்றைக் கழுவப் பலவிதமான தொழில்களைப் புரிந்தார். சிலகாலம் வர்ணம் பூசு பவராக இருந்தார். முதல் உலகப் போர் ஆரம்பித்தபோது பவேரியப் படையில் சேர்ந்து ஜெர்மனியின் சார்பில் போரிட்டார்.

இருமுறை போரில் படுகாயமுற்றார். கார்பொரலாகப் பதவி உயர்வு அடைந்தார். அவரது பணியைப் பாராட்டி வீரருக்கான இரும்புச் சிலுவைப் பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது.

ஓர் அரசியல்வாதியாக வேண்டும் என்று ஆசைப்பட்ட ஹிட்லரும் அவரது நண்பர்களும் 1919ஆம் ஆண்டு தேசிய சோஷலிஸ்ட் கட்சியை (National Socialists) ஆரம்பித்தனர். இக் கட்சி ஜெர்மானியரின் தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிடுவதைத் தன் தலையாய கடமையாகக் கொண்டிருந்தது. ஜெர்மனி, சர்வதேச அரங்கில் இழந்த மதிப்பை, திரும்பப் பெற்றுத் தருவதே தங்கள் கொள்கை என்று இவர்கள் கூறினர். 1923ஆம் ஆண்டில் ரூர் பகுதியை ஃபிரான்சு ஆக்கிரமித்தபோது கொதிப்படைந்த ஜெர்மானியரின் மனநிலையைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கைப்பற்ற ஹிட்லர் ஒரு திடீர்ப் புரட்சியில் ஈடுபட்டார். ஆனால், அவர் நினைத்தது நடக்கவில்லை. ஹிட்லர் பிடிபட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைவாசத்தின்போதுதான் ஹிட்லர் வாழ்வையும் கொள்கைகளையும் எதிர்காலத் திட்டங்களையும் விதந்து கூறும் 'எனது போராட்டம்' (Mein Kampf) என்ற நூலை அவர் சொல்ல அவர் நண்பர் எழுதினார். ஜெர்மானியர் தூய ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இவ்வினத் தூய்மை காரணமாக உலகையே கட்டியாளும் தகுதி பெற்றவர்கள் என்றும் ஜெர்மானியரின் புகழைப் பாடும் அந் நூலை ஜெர்மானியர், குறிப்பாக இளம் தலைமுறையினர் படித்துப் பெருமிதமெய்தினர். அந் நூலில் கூறப்பட்ட கொள்கைக் கனவு நற்கனவாகும் நாளை ஆவலோடு எதிர்பார்த்து ஹிட்லரின் தலைமையின்கீழ் அணிதிரண்டனர். 'எனது போராட்டம்' என்ற நூலில் ஆரிய இனத்தவர் மட்டுமே துணிவு, தன்னையே தியாகம்செய்யும் தன்மை ஆகிய உறுதியான பண்புகளைப் பெற்றவர். ஆனால், தங்களுக்கென உயரிய கொள்கைகள் அற்ற யூதர்கள் நாட்டுப் பற்றும் போரிடும் ஆற்றலும் இல்லாதவர்கள் என்றும் இழித்துக் கூறப்பட்டதுடன், ஜெர்மனியின் துன்பங்களுக்கெல்லாம் அவர்களே காரணமானவர் எனவும் சொல்லப்பட்டிருந்தது. ஜெர்மன் மக்களின் இரத்தத்தைக் களங்கப்படுத்தி, அதை உறிஞ்சி வாழ்கிற கீழ்மக்கள் என அவர்கள் கடும் கண்டனத்திற்கு ஆளாயினர். யூதர்களை வெறுத்ததைப் போன்றே மார்க்சியக் கருத்துகளையும் அவற்றைப் பின்பற்றுவோரையும் அவர் வெறுத்தார். இவ்விரு தீமைகளையும் அழிக்க வேண்டுமானால் ஜெர்மானியரின் பழைய இராணுவத் தன்மைகளான விசுவாசம், கீழ்ப்படிதல் ஆகியவற்றையும் தீவிரத் தேசியப் பற்றையும் மக்களிடையே வளர்க்கவேண்டும். இந்த அடிப்படையில் பிறந்ததுதான் ஹிட்ல

ரின் தேசிய சோஷலிசம், மேலும் தன் நூலில், 'முக்கியத்துவமும் செல்வாக்கும் உடைய பதவிகளில் தேசிய சமுதாயத்தின் மிகச் சிறந்த அறிவாளிகளையே அமர்த்த வழி செய்யும் அரசும், அரசியலமைப்புமே மிக உயர்ந்தவை. வலிமையுடையவர்கள் பிறரை ஆளவேண்டும், வலிமையற்றவருடன் கலந்து தங்களது உயர்ந்த இயல்புகளைப் பலி கொடுத்துவிடக்கூடாது' என்று குறிப்பிட்டிருந்தார். சுருங்கச் சொன்னால் இராணுவத்தில் உள்ள கட்டுப்பாடுகள் போல நாட்டுமக்கள் அனைவரிடமும் கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டும். இதை நிறைவேற்றுமளவிற்குச் சிறந்த நிர்வாகத்திறமை வாய்த்திருக்க வேண்டும் என்பன அவர் கொள்கைகளாகும். சமாதானம் கூர்த்த அறிவு பெற்ற 200 மனிதர்களை ஒரே குறித்த காலத்திற்குள் ஒரே கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதைவிட 190 அறிவற்றவர்களையும், கல்வியறிவும் திறமையும் உடைய 10 பேர்களையும் ஒரு வழிக்குக் கொண்டு வருவது எளிது என்பது அவர் கருத்து.

நெருக்கடியான நேரத்தில் மக்களைக் கைவிட்டு ஓடிவிட்ட ஹோகன் சோலர்ன் அரச வம்சமும், 'எல்லோரும் சமம்' என்ற அடிப்படையில் உருவான குடியரசு ஆட்சியும் சாதிக்க முடியாததைத் தான் சாதித்துக் காட்டுவதாகச் சூளுரைத்தார் ஹிட்லர். திறமை, தகுதி என்ற அடிப்படையில் மிகச் சிறந்தவர்களை மக்களிலிருந்தே தேர்ந்தெடுத்து அவர்களைக் கொண்டே ஆட்சியை நடத்தும் தன் கட்சி என்று கூறினார். இக் கருத்தைக் கொண்டு காணும்போது ஹிட்லர் உருவாக்கப்போகும் புதிய ஜெர்மனி ஒரு ஜனநாயகச் சமுதாயமாகத் தோற்றமளிக்கிறது. ஆனால், அது எதிர்மறையானதே. அந்த நாடு தன் தலைவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அஞ்சி அதன் வழி நடக்கும் சர்வாதிகார ஆட்சிக்கு உட்பட்டதாக இருக்கும்.

பொருளாதார நெருக்கடியால் விளைந்த துன்பங்களை உதறியெறிந்துவிட்டு முன்னேற்றப் பாதையிலே நாடு விரைந்து நடைபோடும். வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழித்தல், புதிய வேலை வாய்ப்புகளைப் பெருக்கித் தருதல் என்ற உறுதிகள் கொண்ட பொருளாதாரத் திட்டம் ஜெர்மன் மக்கள் கருத்தைக் கவரும் வகையில் தீட்டப்பட்டது. 1929ஆம் ஆண்டின் பொருளாதார மந்தத்தால் வேலையிழந்து, வீடிழந்து, பசியாலும் பட்டினியாலும் துன்பமுற்ற ஜெர்மன் மக்களுக்கு ஹிட்லரின் திட்டம் புதிய பூமியையும், புதிய வானத்தையும் படைத்துக் கொடுப்பதாகக் காட்சி தந்தது. இவற்றை மக்களிடையே பரப்பப் பிரச்சார சாதனத்தை அவர் பரவலாகவும் திறமையாகவும்

பயன்படுத்தினர். ஹிட்லரின் கையில் பிரச்சாரம் ஒரு கலையாகவே உருப்பெற்றுத் திகழ்ந்தது. பிரச்சாரக் கலையில் அவர் ஈடு இணை யற்றவராக விளங்கினர். 'பிரச்சாரம் அறிவைத் தூண்டுவதாக இருத்தல் கூடாது. அது உணர்வினைத் தட்டி எழுப்புவதாக அமையவேணடும். அப்போதுதான் அது வெற்றியை அடையும். பிரச்சாரத்தைக் கேட்கும் மக்கள் கூட்டத்திடம் அதன் கருத்து களைக் கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் மிகக் குறைவாக உள்ளது. புரிந்துகொள்ளும் சக்தியோ ஓர் அளவிற்கு உட்பட்டது. ஆனல் அவற்றை மறந்துவிடும் குணமோ மிக அதிகமாக உள்ளது' என மக்கள் கூட்டத்தின் உளப் போக்கை அறிந்து தன் சொற்பொழிவுகளால் மக்களின் உணர்வுகளைத் தூண்டிக் கொழுந்துவிட்டெரியச் செய்தார். அவர் ஆவேச உரை நிகழ்த் தும்போது அவர் வாயோடு கண்களும் கைகளும் முழு உடலுமே அதில் பங்கு கொள்ளும். பேச்சு தந்த மயக்கத்திலிருந்து விடு படவே மக்களுக்கு அதிக நேரமாகும். முதலில் ஜெர்மன் தொழிலாளிகளின் கட்சி என்ற பெயருடன் இயங்கிய ஹிட்ல ரின் கட்சியில் போர்வீரர்களும், தொழிலாளர்களும், மாணவர் களும் பெரும்பான்மையான இடம் பெற்றிருந்தனர். பின்னரே தேசிய சோஷலிஸ்டுகள் அல்லது நாஜி என்ற பெயரை இக் கட்சி பெற்றது. 1928ஆம் ஆண்டுக்குப் பினனர் தான் நாஜிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 1930ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தில் 107 இடங்களை இக் கட்சி பிடித்து இரண்டாவது வலிமை வாய்ந்த கட்சியாக விளங்கிற்று. 1932-ல் 230 ஆக எண்ணிக்கை உயர்ந்தது. 1933ஆம் ஆண்டில் பழைய சான்சலரான வான் பாப்பென் (Von Papen) என்பாரது பரிந்துரையை ஏற்று ஹிட்ல ரைச் சான்சலராக்கினர் ஹிண்டன்பர்க்.

சான்சலர் பதவியைப் பெற்றபின் படிப்படியாக ஜெர் மனியை நாஜி மயமாக்கும் பணியைச் செய்து முடித்தார் ஹிட்லர். தேசிய அவையில் தனக்குப் பெரும்பான்மை இல்லை என்ற காரணத்தால் அதைக் கலைத்த ஹிட்லர் புதிய தேர்தல்களை நடத்த ஆணையிட்டார். இதிலும் 43·9 விழுக்காடு வாக்குகளே அவருக்குக் கிட்டியது. அவை கூடுமுன் அது கூடுவதற்கிருந்த கட்டடம் தீக்கிரையாகியது. இந்த அட்டூழியச் செயலுக்குக் கம்யூனிஸ்டுகளே காரணம் எனக் குற்றம் சாட்டிய ஹிட்லர், கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் அவையில் அமராதவாறு தடுத்து விட்டார். இவ்விதம் நாஜிக் கட்சி தான் விரும்பிய பெரும் பான்மையைப் பெற்றுவிட்டது. இதைப் பயன்படுத்தி அமைச் சரவையிடம் எல்லா அதிகாரங்களும் தந்துவிட்டு, நான்காண்டுக் காலத்திற்குத் தேசிய அவை ஓய்வுபெறும் என்ற சட்டத்தை

அவ்வவை இயற்றுமாறு செய்தார். குடியரசின் அரசியலமைப்பு குப்பைக் கூடையில் போடப்பட்டது. நாட்டிலிருந்த பிற கட்சி கள் அனைத்தும் ஒடுக்கப்பட்டன. நாஜிக் கட்சி மட்டும் சட்ட பூர்வமானதாக அங்கீகரிக்கப்பட்டது. ரஷ்யாவைப் போல், அரசோடு இணைக்கப்பட்டது. நாட்டின் காவல் துறையோடு (Police Services) கட்சியின் பாதுகாப்புப் படை இணைக்கப்பட்டது. 'கெஸ்டப்போ' (Gestapo) என்ற பெயருடைய படை, கட்சியை வளர்ப்பதற்கும், எதிர்ப்பைக் களைவதற்கும், ஒற்று வேலைக்கும் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. பிஸ்மார்க் உருவாக்கிய இணைப் பரசு முறை (Confederation) மறைந்து, ஜெர்மன் பேரரசின் (Reich) மாநிலங்களாகப் பழைய சிற்றரசுகள் மாறின. எல்லா அதிகாரிகளும் ஹிட்லரின்கீழ் வந்தனர். தொழில், வாணிபம், விவசாயம், போக்குவரத்து, நிதி, மருத்துவம், பொது சுகாதாரம், சமயம், கல்வி, பண்பாடு ஆகிய எல்லா அரசின் துறைகளும் கட்சியின் கண்காணிப்பின்கீழ் வந்தன. உற்பத்தி, விற்பனை, உழைப்பு, விலைவாசி போன்ற எல்லாப் பொருளாதாரப் பணிகளும் செம்மையாகத் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன. நாட்டின் படைகள் சிறிது சிறிதாக ஹிட்லரின் ஆதிக்கத்தில் வந்தன. கட்டாய இராணுவப் பயிற்சித் திட்டம் மீண்டும் அமலுக்கு வந்தது. வெர்சாயி உடன்பாட்டிற்கு எதிராகப் படைக்கலப் பெருக்கமும் அதிகரித்தது. வெளிநாடுகளிலிருந்த ஜெர்மானியருங்கூட, நாஜி அரசால் கட்டுப்படுத்தப்பட்டனர்.

1934ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அதிபரான ஹிண்டன் பர்க் இறந்தார். சான்சலர் பதவியோடு அதிபர் பதவியையும் தானே வகிக்கப்போவதாகக் கூறிய ஹிட்லர் தன் வழிக்குக் குறுக்கே நிற்பவர் எனக் கருதிய அனைவரையும் ஒழித்துக் கட்டினார். 1935ஆம் ஆண்டில் நாட்டின் அதிகாரங்கள் அனைத்தும் தன்னிடம் குவிந்து கிடக்கச் சான்சலராக, அதிபராக, படைகளின் உயர் தளபதியாக, கட்சியின் தலைவராக உயர்ந்து நின்ற ஹிட்லர், 'ஃபூரர்' (Fuhrer) என்று தாம் அழைக்கப்படு வதையே விரும்பினார். நாட்டின் சட்டமியற்றும் நிர்வாக, நீதி அதிகாரங்களனைத்தும், அவரிடம் இருந்தன. 14 அமைச்சகங் களும், வெறும் ஆலோசனை மன்றங்கள்தான். நாட்டின் தேசிய அவை அவருக்குக் கீழ்ப்படிந்து இருந்தது. அவரது எதிரிகள் கல்லறையிலோ அல்லது சிறையிலோ இருந்தனர். ஒரு சர்வாதி கார, ஒரே கட்சி உள்ள நாடு உருவாக்கப்பட்டுவிட்டது. ஹிட்லர் ஜெர்மனியில் குடியாட்சி முறையைத் தோல்வியுறச் செய்தாலும், சட்டபூர்வமாகவே தான் அதிகாரத்தை அடைந்த தாகப் பெருமைப்பட்டுக் கொண்டார். ஹிட்லரைப் பொறுத்து

வரை சட்டம் என்பதற்கு அவர் விருப்பம் என்பதுதான் பொருள். ஹிட்லரின் தோழரான கோயரிங் (Goering), ஃபியூரரின் கருத்து எதுவோ அதுவே நீதி, நியாயம் என்றார். பின்னாளில் போலந்தின் கவர்னர் ஜெனரலான பிராங்க் (Frank) என்பார் 'ஹிட்லரின் முடிவின்படி ஜெர்மன் நாட்டிற்கு நன்மை தருவது எதுவோ, அதுவே சட்டம். ஜெர்மனிக்கு எது பாதகமானதோ அது சட்டத்திற்குப் புறம்பானது' என மனம் நொந்து கூறினார். தனக்குத் தேவை ஏற்பட்டபோது மக்களின் சம்மதத்தைப் பெறும் வழிமுறைகளை அவர் பயன்படுத்திக்கொண்டார். தொண்டர்களின் அணிவகுப்பைக் காணும்போது ஏற்படும் பரசவத்தை மக்களின் சம்மதத்தைக் கோரிப் பெறும்போதும் அவர் அடைந்தார். வேமார் குடியரசு அமைப்பை அவர் அழிக்கவில்லை. அது பெயரளவில் வாழ்ந்துகொண்டுதான் இருந்தது.

நாஜி ஆட்சியில் மக்களது அடிப்படை உரிமைகளும் அரசியல் உரிமைகளும் மறுக்கப்பட்டதோடு, யூதர்களும், கம்யூனிஸ்டுகளும் அமைதிக் கட்சியினரும், கத்தோலிக்கரும், மதப் பிரச்சாரகர்களும் ஒடுக்கப்பட்டனர். இவர்களில் பலர் வெளிநாடுகளை நாடி ஓடினர். சமயம் அவசியமற்றதென ஒதுக்கப்பட்டது. நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஹிட்லரைப் பின்பற்றினர் என்று கூறமுடியாது. 1932-ல் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர்தாம் நாஜிக் கட்சிக்கு வாக்களித்தனர். மக்கள் இடைவிடாது சக்தி வாய்ந்த நாஜிப் பிரச்சாரத்தைக் கேட்டு, ஒளிமயமான எதிர்காலம் பற்றிய வாக்குறுதிகளை நம்பியும், கெஸ்டாபோவிற்கு அஞ்சியும், கம்யூனிச அபாயத்திற்கு மாற்று என எண்ணியும், என்றாவது ஒரு நாள் வன்முறை மாறி, சாதாரண நிலைக்கு நாடு வரும் எனக் கருதியும் ஹிட்லரை ஆதரித்தனர். மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கியதும், வெர்சாயி உடன்பாட்டு விதிகளைத் துணிவோடு ஒன்றன்பின் ஒன்றாக மீறியதும், ஆஸ்திரியாவில் பிறந்திருந்தும், ஜெர்மன் உயர்வைப் பற்றியே அல்லும் பகலும் பேசியதாலும் ஹிட்லரிடம் அவர்களுக்கு ஈடுபாடு பிறந்தது. நாஜி ஆட்சியிலுள்ள மிருகதனத்தையும், கொடுங்கோன்மையையும், கட்டாய உழைப்பு முகாம்களையும், அழிவுக்கான முகாம்களையும், சுட்டுத்தள்ளும் படைகளையும், பிற கொடூரங்களையும் அவர்கள் மன்னித்து மறக்கத் தயாராக இருந்தனர். பேரரசர் ஐந்தாம் சார்லசிற்குப்பின் ஜெர்மனியை முழு அதிகாரங்களுடன் அரசு செலுத்தியவர் ஹிட்லர் ஒருவரே. 'ஒரு நாடு, ஓர் அரசு, ஒரு தலைவர்' என்ற கோஷத்தை எழுப்பி ஹிட்லரைப் பாராட்டி மகிழ்ந்தனர் மக்கள்.

1938ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலேயே ஜெர்மனி சர்வதேசச் சங்கத்திலிருந்து விலகிவிட்டது. 1936ஆம் ஆண்டி

லிருந்து ஜெர்மனியின் படைபலம் பெருக ஆரம்பித்தது. இங்கிலாந்தோடு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஜெர்மனியின் கப்பற்படை இங்கிலாந்தின் கடற்படை அளவில் மூன்றில் ஒரு பங்கை மீறக்கூடாது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. சமீபத்தில் இணைந்த ஃபிரெஞ்சு, ரஷிய நாடுகளின் குழுவில் சேருவதிலிருந்து இங்கிலாந்தைத் தடுப்பதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கம். இந் நிலையில் இத்தாலியில் நிலை பெற்றிருந்த முசோலினியின் சர்வாதிகார ஆட்சி அபிசீனியாமீது படையெடுத்தது. 1935ஆம் ஆண்டில் கூடிய சர்வதேசச் சங்கத்தின் கூட்டத்தில் 50 நாடுகள் இத்தாலியை ஆக்கிரமிப்பு நாடெனக் குற்றம் சாட்டி அந் நாட்டின்மீது பொருளாதாரக் கட்டுப்பாடுகளை விதித்தன. சங்கத்தின் கையாலாகாத் தனத்தைக் கண்டு சிரித்த முசோலினி அபிசீனியா முழுமையும் கைப்பற்றினர். ஹிட்லரின் அனுதாபம் இத்தாலியிடமே இருந்தது. அவர் நெஞ்சிலும் ஒரு துணிகரத் திட்டம் உருவாகியது. 1936ஆம் ஆண்டு மார்ச் மாதம் ரைன்லாந்துப் பிரதேசத்துக்குள் ஜெர்மன் படைகள் செல்லும் என அறிவித்து அடுத்த நாளே அதைச் செயற்படுத்திக் காட்டினர். அந்தப் படைகளின் காலடியில்பட்டு வெர்சாயி உடன்பாட்டோடு லெகார்னோ ஒப்பந்தமும் மண்ணோடு மண்ணாகப் புதைந்து போயிற்று. ஃபிரான்சு தன் எதிர்ப்பைத் தெரிவித்தது. அந் நாட்டால் தனித்துச் செயல்பட முடியவில்லை. ஆனால், பிரிட்டிஷ் அயல்நாட்டு உறவுச் செயலரான ஈடன் (Eden) என்பார், ஜெர்மனி, ஃபிரான்சு, பெல்ஜியம் ஆகிய இரு நாடுகளின் நிலப் பகுதியையோ அன்றிச் சுதந்திரத்தையோ பறிக்க நினைத்தால் இங்கிலாந்து அந் நாட்டின் உதவிக்கு நிச்சயம் விரையும் என்பதை ஆணித்தரமாக அறிவித்தார்.

1936ஆம் ஆண்டு நிகழ்ந்த இன்னுமொரு நிகழ்ச்சி சர்வதேசச் சங்கமும், வல்லரசுகளும் அமைதி காக்கும் பணியில் மேலும் தோல்வியடைந்ததையே எடுத்துக் காட்டியது. ஸ்பெயினில் 1930-ல் இருந்த நிலையான ஆட்சி ஏற்படாத காரணத்தால் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்தது. தளபதி பிராங்கோவின் தலைமையில் அரச கட்சியினரும், பண்ணைச் சொந்தக்காரர்களும், கத்தோலிக்க மத நிறுவனமும், வணிகர்களும் அணி திரண்டு, ஒழுங்கு முறையையும் அரசின் அதிகாரத்தையும் நிலை நாட்ட உறுதிகொண்டு, போல்ஷிவிக் கொள்கையிலிருந்து ஸ்பெயினைக் காப்பாற்றப் போராடினர். இவர்களுக்கு எதிராகக் குடியரசுக் கட்சியினரும், சோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் ஒன்றுகூடி, குடியரசு ஆட்சியைக் காக்கப் போராடினர். இவர்களுக்கு ரஷ்யா உதவி புரிந்தது. ஆனல், தளபதி பிராங்கோ

விற்கு ஜெர்மனியும், இத்தாலியும் வாரிவாரி உதவின. ஸ்பானிய உள்நாட்டு விவகாரத்தில் பிற நாடுகளின் தலையீடு கூடாது எனச் சர்வதேசச் சங்கம் கூறியும், அவ் வார்த்தைகளைக் கேட்பாரில்லை. ஸ்பானியக் குடியரசு தன் உள்நாட்டுப் போரை 1939ஆம் ஆண்டு மார்ச் வரை தொடர்ந்து நடத்தியது. அவ் வருடம் அளவற்ற அந்நிய உதவி காரணமாக பிராங்கோ வெற்றி பெற்றார். ஸ்பானிய விவகாரத்தில் தலையிட்டதால் ஹிட்லர் ஒரு நல்ல படிப்பினையைக் கற்றார். எதிர்காலத்தில் ஜெர்மனி அண்டை நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டால் வல்லரசுகள் பக்கம் இருந்து பலமான எதிர்ப்புக் கிளம்பாது, வெறும் வாய்ப் பேச்சோடு அவர்கள் அமைதியுறுவர் என்பதே அந்தப் படிப்பினை. மேலும் ஸ்பெயினில் தலையிட்டபொழுதுதான் ஜெர்மனிக்கும் இத்தாலிக்குமிடையே நட்பு மலர்ந்தது.

1936ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் சர்வதேசச் சங்கத்திடமும், கம்யூனிசத்திடமும், சோவியத் ரஷ்யாவிடமும் கொண்ட வெறுப்பின் அடிப்படையில், வன்முறையில் நம்பிக்கையுள்ள இராணுவ நாடுகளான ஜெர்மனியும் ஜப்பானும், ஒப்பந்தம் ஒன்றைச் (Berlin, Tokyo, Axis) செய்துகொண்டன. 1937ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முசோலினி ஜெர்மனிக்கு விஜயம் செய்தார். இதன் விளைவாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பெர்லின்-ரோம் அச்சு (Berline-Rome Axis) உருவாயிற்று. ஒத்த பண்புகளும், இலட்சியங்களும் உடைய இம் மூன்று நாடுகளும் இணைந்ததால் உலக அமைதிக்குப் பங்கம் வரும்நிலை தவிர்க்க முடியாததாயிற்று.

நண்பர்களும் கிடைத்த மகிழ்ச்சியில் அடுத்த செயலுக்குத் தயாரானார் ஹிட்லர். 1938ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஹிட்லர் நாஜிக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை ஆஸ்திரிய உள் நாட்டு அமைச்சராக நியமிக்குமாறு ஆஸ்திரியச் சான்சலரைத் தன் இருப்பிடத்திற்கு வரவழைத்து வற்புறுத்தினார். இவ்விதம் ஆஸ்திரிய அமைச்சரவையில் இடம்பெற்ற நாஜிக் கட்சி அந் நாட்டு அரசியலில் குழப்பத்தை விளைவித்தது. ஆஸ்திரியச் சான்சலர் இத் தொல்லையிலிருந்து விடுபட மக்களிடையே ஒரு வாக்குக் கணிப்பை நடத்த முடிவு செய்தார். மக்கள் பலத்தால் நாஜிக் கட்சியை நாட்டினின்று விரட்ட எண்ணினார். ஆனால், ஹிட்லர் வாக்குக் கணிப்பை நடத்தக் கூடாது என்றும், ஆஸ்திரிய அமைச்சரவையில் 2/3 பங்கை நாஜிக் கட்சிக்கு ஒதுக்குமாறும், ஆஸ்திரிய சான்சலர் தன் ராஜினாமாவை உடனே தரவேண்டுமென்றும் அச்சுறுத்தி வற்புறுத்தினார். ஜெர்மன் துருப்புகளும் ஆஸ்திரியாவினுள் நுழைந்தன. ஆஸ்திரியாவில் நாஜிக் கட்சியினர் அரசால்

துன்புறுத்தப்படுவதாக ஜெர்மன் செய்தித் தாள்கள் ஓலமிட்டன. ஆஸ்திரிய சான்சலர் எதிர்த்து நிற்க ஆற்ருது தம் பதவியினின்று விலகினுர். மார்ச்சு 12ஆம் நாள் ஜெர்மன் படைகள் ஆஸ்திரியாவைப் பிடித்துக்கொண்டன. வீழ்ந்த அரசோடு தொடர்பு கொண்ட அனைவரும் சிறைப்பிடிக்கப்பட்டனர். ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் ஜெர்மனியுடன் ஆஸ்திரியா இணைக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் இச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தாலும் இதுவே முதலும் முடிவுமாக இருக்கும் என நம்பினர். ஆனுல், வியன்னுவின் விதியை வேறு சில ஐரோப்பிய நாட்டுத் தலைநகரங்களும் அடையப் போகின்றன என்பது விரைவில் நிரூபணமாயிற்று.

ஆஸ்திரியாவைப் பிடித்தபின் ஹிட்லரின் அடுத்த இலக்கு 'செக்கோஸ்லொவேகியா'வாக இருந்தது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் சர்ச்சில் (அப்போது வெறும் உறுப்பினராக இருந்தவர்) 'வியன்னுமீது ஜெர்மன் ஆதிக்கம் தென் கிழக்கு ஐரோப்பாவை நாஜிகளுக்கு திறந்துவிட்டு அவர்களின் இராணுவ, பொருளாதாரக் கட்டுப்பாட்டின்கீழ் அப் பகுதியைக் கொண்டு வந்துவிடப் போகிறது' என எச்சரித்தார். செக்கோஸ்லொவேகிய நாட்டின் மேற்குப் பகுதி ஜெர்மானிய ஓநாயின் கோரப் பற்களுக்கிடையே இருந்தது. ஆறு மாதங்களுக்குப்பின் அவ்வோநாயின் நாடு பிடிக்கும் பசிக்கு அது இரையாகிப் போயிற்று. செக் நாட்டின் இத் துயருக்குக் காரணம் பொஹிமியப் பகுதியில் குடியேறியிருந்த சுமார் $3\frac{1}{2}$ இலட்சம் ஜெர்மானியரே, 13 மில்லியன் மக்கள்தொகை கொண்ட அந் நாட்டில் 8 மில்லியன் மக்களைத் தவிர மற்றவர் வேறு இனத்தைச் சார்ந்தவரே. முதல் உலகப் போருக்குப்பின் செக்ஸ்லொவேகிய நாட்டை உருவாக்கிய போது எல்லைகள், போக்குவரவுச் சாதனங்கள், பொருளாதாரம் ஆகிய முக்கியக் கூறுகளை உள்ளத்தில் கொண்டே நாடு வரையறுக்கப்பட்டது. இந் நாட்டின் மேற்குப் பகுதியிலிருந்த சுடேட்டன் ஜெர்மானியர்கள் (Sudetan Germans), 1918ஆம் ஆண்டிலேயே ஒரு வாக்குக் கணிப்பின் மூலம் ஜெர்மனியுடன் இணைய விருப்பம் தெரிவித்தனர். தன்னுட்டிலுள்ள சிறுபான்மையினரை மதிப்போடு நடத்தித் தன்சுயமுயற்சியால் வளத்தைப்பெருக்கிக்கொண்டிருந்தது அந் நாடு. ஆனுல், சுடேட்டன் ஜெர்மானியர்கள், ஜெர்மனியுடன் இணையும் நாளை ஆவலுடன் வரவேற்றனர். ஹிட்லரின் தலைமையில் வீறுகொண்டெழுந்த ஜெர்மனி பிற நாடுகளிலிருந்த ஜெர்மானியரின் தேசிய உணர்வைத் தூண்டிவிட்டது. துணிவான செயல்களால் தன் ஆற்றலை நிரூபித்ததுக் காட்டிய ஹிட்லரின் தலைமையின்கீழ் தாங்கள் இருக்கவேண்டு

மென விரும்பினர். அவரது பலம் வாய்ந்த பிரச்சாரத்திஞல் மயங்கினர். ஜெர்மனியின் கண்ணேட்டத்திலிருந்து நோக்கும் போது ஹிட்லருக்குப் பிடிக்காத எல்லாக் கொள்கைகளும் செக் நாட்டில் செங்கோலோச்சின. பல இன மக்களும் திறமையும் செழிப்பும் மிக்க நாடாளுமன்ற முறையோடு கூடிய ஜனநாயகம் இங்கிருந்ததுடன், எதேச்சதிகாரத்திற்கு மாருகச் சுதந்திரமும், இராணுவக் கட்டுப்பாட்டிற்குப் பதில் உரிமைகளும், ஓரினம், ஒரே மொழி என்பதற்கு மாருகப் பல இனம், பல மொழி என அங்கு நிலவின. சுருங்கச் சொன்னல் ஜெர்மானியக் கடலால் ஃபிரெஞ்சு, ஸ்லாவ் செல்வாக்கிற்குட்பட்ட சிறிய தீவாக அது சூழப்பட்ட காட்சியளித்தது.

ஆஸ்திரிய வீழ்ச்சிக்குப்பின் ஜெர்மன் படைகள் செக் நாட்டின் மேற்கெல்லேயில் குவிக்கப்பட்டன. இதைக் கண்டு மனம் தளராத அந் நாடு தன் படைகளேயும் தயாராகும்படி ஆணையிட்டது. செப்டெம்பர் மாதத்தில் சுடேட்டன் ஜெர்மானியர் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். அரசு இராணுவச் சட்டத்தை விதித்தது. ஜெர்மனி சினந்தெழுந்து 'பழிக்குப் பழி' எனச் சீறிற்று. பிரிட்டிஷ் பிரதமரான நெவில் சேம்பர்லின் (Neville Chamberlain) எதிர்பாராதவாறு தலேயிட்டு ஹிட்லரைச் சந்தித்துச் சமாதானத் தீர்வு காண முயன்ருர். ஹிட்லர், செக் நாட்டில் ஜெர்மானியர் பெரும் பதியாக இருக்கும் நிலப்பகுதிகள் அனைத்தும் ஜெர்மனிக்குகே தரப்பட வேண்டும் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். அதற்கு ஒப்புக்கொள்ளாவிடில் போர் தான் என்றிருந்தது ஜெர்மனி. ஆனல், பிரிட்டனும், ஃபிரான்சும் போரை வரவேற்கும் மனநிலேயில் இல்லே. எனவே, அவை ஹிட்லரைத் திருப்திப்படுத்தும்படி செக் நாட்டை வற்புறுத்தின. தன் நாடு சிதைந்துபோவதை விரும்பாத செக் வருத்தத்துடன் ஒப்புக்கொண்டது. ஆனல், செப்டெம்பர் 23ஆம் நாள் ஹிட்லர் மேலும் சில சலுகைகள் வேண்டுமெனத் தன் உரையொன்றில் குறிப்பிட்டார். இதனல் மனம் சோர்ந்த சேம்பர்லின் தனித்துப் பாடுபடுவதைவிட ஒரு மாநாட்டைக் கூட்டித் தீர்வு காண்பதே நலம் பயங்கும் என நம்பினர்.

செப்டெம்பர் 29, 30ஆம் நாள்களில் முயூனிச் (Munich) நகரில் இத்தாலி, பிரிட்டன், ஃபிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாட்டின் பிரதிநிதிகள் கூடிப் பேசி சில முடிவுகளே ஏற்றனர். செக் நாட்டிலிருந்த ஜெர்மனியப் படை பெரும்பான்மையுடைய பகுதிகள் அனைத்தும் ஜெர்மனியைச் சேரவேண்டும். ஐயத்துக்குரிய பகுதிகளில் வாக்கெடுப்பு நடத்தவேண்டும். எல்லே விவகாரங்களே ஓர் அனைத்துநாட்டுக் குழு தீர்மானிக்கும் என்ற முடிவு

களே அவை. செக் நாட்டின் பிற பகுதிகள் ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்படாதென ஃபிரான்சும், இங்கிலாந்தும் உறுதி கூறின. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தாம் செய்த அமைதிப் பணியைத் தாமே புகழ்ந்து சேம்பர்லின் உரை நிகழ்த்தினர். செக்கஸ்லொவேகியா வேறு வழியின்றி மனக்குமுறலுடன் முயூனிச் உடன்பாட்டைச் செயல்படுத்திற்று. 'பட்ட காலிலே படும்' என்பதுபோல் சுடேட்டன்லாந்தை ஜெர்மனி பிடித்தவுடன் போலந்து, டெஸ்சன் (Teschen) பகுதியையும், ஹங்கேரி செக்கோஸ்லொவேகியாவின் சில பகுதிகளையும் உரிமை கொண்டாடிப் பிடித்துக் கொண்டன. மூயூனிச் மாநாட்டில் இடம் பெருததால் மனத்தாங்கலுற்ற ரஷ்யா போலந்தை மிரட்டித் தன் சினத்தைத் தணித்துக் கொண்டது.

செக்கோஸ்லொவேகியாவைத் துண்டு போட்டு ஜெர்மனிக்கு அளித்ததால், ஃபிரான்சாலும் இங்கிலாந்தாலும் ஐரோப்பிய அமைதியைக் காக்க முடிந்ததா என்னும் வினவிற்கு விடையளிப்பது மிக எளிது. ஆயின், அந் நிலையில் அதைத் தவிர வேறொன்றும் செய்திருக்க முடியாது என்பது உண்மை. 18ஆம் நூற்றாண்டில் போலந்தைத் தம்முள் பங்குபோட்டுக் கொண்டு, 'கபளீகரம்' செய்த மூன்று வல்லரசுகளைப்பற்றிக் குறிப்பிடுகையில் எட்மண்ட் பர்க் (Edmand Burke), போலந்தைக் காலைச் சிற்றுண்டியாக்கிக் கொண்ட இவர்கள் பகல் உணவுக்கு எங்கே போவார்கள்? எனக் கேட்டார். ஜெர்மனி ஆஸ்திரியாவைக் காலைச் சிற்றுண்டியாக்கிக் கொண்டது. சுடேட்டன்லாந்தைத் தாகசாந்திக்காகப் பயன்படுத்திக் கொண்டது. இவற்றாலும் வயிறு நிரம்பாத ஜெர்மனி பகல் உணவிற்காக எங்கே செல்லுமோ என்ற அச்சம் ஐரோப்பிய நாடுகளிடையே தோன்றியது.

முயூனிச் உடன்பாடு ஐரோப்பாவில் போர் தொடங்குவதை ஓராண்டுக் காலம் தள்ளிப்போட்டது. இக் குறுகிய காலத்தில் ஜெர்மனியின் விசுவரூபத்தை ஐரோப்பா முழுமையாகப் புரிந்து கொண்டது. 1938ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் செக்கோஸ்லொவேகியா முழுவதையும் ஹிட்லர் பிடித்துக்கொண்டார். இதுவரை நல்லவார்த்தைகள்மூலம் ஜெர்மனியை வசப்படுத்த முடியும் என நம்பிய பிரிட்டன் தன் நம்பிக்கையை இழந்ததுடன் ஜெர்மனியின்பால் வெறுப்பைக் கொண்டது. சிறிய சிறிய பகுதிகளாகக் கொடுத்து நில ஆசையைத் தணிப்பது என்ற கொள்கையை (Policy of Appeasement) விடுத்து, ஆக்கிரமிப்பை எவ்வாறேனும் தடுத்து நிறுத்துவது என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க

லாயிற்று. அடுத்து ஆக்கிரமிப்புக்கு இலக்காகக்கூடிய பலமற்ற அண்டை நாடு போலந்தே. எனவே, சேம்பர்லின் நாடாளு மன்றத்தில் பேசும்போது 'போலந்தின் சுதந்திரத்திற்குத் தீங்கு நேரிட்டால் இங்கிலாந்து அதைக் கண்டு பொறுத்துக்கொண்டிருக்காது' என முழங்கினர். அதைக் கண்டு இங்கிலாந்துக்கு உதவ ஃபிரான்சும் தயார் என அவர் குறிப்பிட்டார். ஏப்ரல் மாதம் முதன்முறையாக அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் ஐரோப்பிய விவகாரங்களில் தலையிட்டு, மேற்கொண்டு ஆக்கிரமிப்பு நடக்காதென ஹிட்லர் உறுதிமொழி கூறவேண்டும் எனக் கூறினர். 1939ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் போலந்தில் உள்ள சிறுபான்மையினரான ஜெர்மானியர் பெருங் கொடுமைகளுக்கு ஆளாவதாக ஹிட்லர் குறிப்பிட்டார். உண்மையில் ஹிட்லரின் எண்ணம் ஜெர்மனியைப் பிரித்த போலிஷ் தாழ்வறை என்ற செயற்கைப் பிரிவை அழிக்கவேண்டும்; டான்சிக் துறைமுகத்தை அடையவேண்டும் என்பதாகும். ஜெர்மனியையும் பிரிந்து நின்ற கிழக்குப் ஃபிரஷ்யாவையும், சாலை, இருப்புப் பாதைகளால் இணைப்பதற்கு வழி விடுமாறு ஹிட்லர் கோரினர். அதையும் போலந்து மறுத்தது. லிதுவேனியாவிடமிருந்து மேமலை (Memal) எடுத்துக்கொண்ட ஜெர்மனி, போலந்தையும் அச்சுறுத்தியது கண்டு ரஷ்யா சற்றுத் திகில் அடைந்தது. போலந்தைக் காக்க உறுதி கூறிய பிரிட்டன் ரஷ்யாவின் ஒத்துழைப்பையும் நாடியிருக்கவேண்டும். ஆனல், இத் துறையில் பிரிட்டன் மிக மெல்லச் செயற்பட்டது. இச் சமயத்தில் ரஷ்யாவில் ஜெர்மனியிடம் அனுதாபம் உடைய மாலடோவ் (Molotov) அயல் நாட்டுறவு அமைச்சராகப் பதவி ஏற்றார். இங்கிலாந்து இன்னமும் நிலைமையின் தீவிரத்தை உணராது பேச்சு வார்த்தைகளை மெதுவாக நடத்திக்கொண்டிருந்தது. இறுதியில் ஆகஸ்ட் 20ஆம் நாள் ஒரு முடிவுக்கு வந்து அம் முடிவினை மாலடோவிற்கு அறிவிக்க பிரிட்டிஷ், ஃபிரெஞ்சுப் பிரதிநிதிகள் சென்றனர். அப்போது மாலடோவ், அடுத்த நாள் ஜெர்மன் பிரதிநிதி ஒரு தற்காப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்காக ரஷ்யாவிற்கு வரப்போகும் விஷயத்தைத் தெரிவித்து அவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கினர்.

ஆகஸ்ட் 23ஆம் நாள் ஜெர்மனியும் ரஷ்யாவும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. ஜனநாயக நாடுகள் காட்டிய தயக்கத்தாலும், ஹிட்லர் இரு முனைகளில் போராட முடியாது என உணர்ந்து கொண்டதாலும் இவ்வொப்பந்தம் ஏற்படுவது சாத்தியமாயிற்று.

1939ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் நாள் ஜெர்மன் படைகள் எல்லையைக் கடந்து போலந்து நாட்டினுள் நுழைந்தன.

செப்டெம்பர் 3ஆம் நாள் பிரிட்டன் போலந்திற்களித்த வாக் குறுதியைக் காக்கவேண்டி ஜெர்மன் மீது போர் தொடுத்தது.

இனி ஹிட்லரின் வரலாறும் ஜெர்மனியின் வரலாறும் இரண் டாம் உலகப் போருடன் இரண்டறக் கலந்து விடுகின்றன.

போரிலே தோற்று இறுதியில் தான் உருவாக்கிய ஜெர்மனி தன் கண்ணெதிரிலே வீழ்ச்சியுற்றுச் சரிவதைக் காணச் சகியாது, ஹிட்லர் தன் அமைச்சகத்தைச் சார்ந்த இரகசிய அறையொன்றில் தன் வாழ்நாளை முடித்துக் கொண்டார். ஐரோப்பாவை 13 ஆண்டுகளாக ஆட்டிவைத்த சக்தி அடங்கி ஒய்ந்து போனது.

## (ஈ) இத்தாலி

1915ஆம் ஆண்டுக்கு முன் ஐரோப்பிய நாடுகளின் அரசிய லமைப்பில் மாற்றம் ஏற்படுவதாயின் அது சோஷலிச கம்யூனிசக் கொள்கைகளை விருப்புகிறவர்களாலும் அவற்றைக் கண்டு அஞ்சுகிறவர்களாலுமே ஏற்படும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனல், சில பெரும் ஐரோப்பிய நாடுகளில் சர்வதிகார ஆட்சி மறைந்தது. இதனல் பழைய அரசமைப்புகளும் மறைந்து போயின. சோஷலிச, கம்யூனிசக் கொள்கைகளுக்கு அங்கே கடும் எதிர்ப்புத் தோன்றியது. அமெரிக்க அதிபரான உட்ரோ வில்சன் (Woodrow Wilson), உலகை, ஜனநாயகத்தைக் காப் பாற்றித் தருவதற்காகவே அமெரிக்கா போரில் ஈடுபட்டதாகக் கூறினர். ஜனநாயக நாடுகள் போரில் வென்றும் விளைவு வேறு விதமாயிற்று. ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் ஜனநாய கத்தின் அடிப்படைக் கருத்துகளான பேச்சுரிமை, சிந்தனை உரிமை அரசியலில் பங்குபெறும் உரிமை ஆகியவற்றை பலமின்மையின் சின்னங்கள் என வெறுத்து ஒதுக்கும் தனி மனிதனின் மேலாதிக்க ஆட்சி தோன்றியது. இம் மாற்றம் வியப்புக்குரியது எனினும் முற்றிலும் புதுமையானதன்று. இச் சர்வாதிகார ஆட்சிகளுக்கு இசைவான கருத்துகளை 17ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த ஹாப்ஸ் (Hobbes) என்பார் எழுதிய 'லெவியாதன்' (Leviathan) என்ற நூலிலும், பின் ரூசேவின் 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலிலும் காணலாம்.

20ஆம் நூற்றுண்டின் சர்வாதிகார ஆட்சிகளில் சில அடிப் படைக் கருத்துகளைக் காண்கிறோம். எல்லா அதிகாரமும் அரசிடமே குவிந்து, மக்கள் அரசின் ஆணைகளுக்கு கீழ்ப்படிந்து, தங்கள் தனித்தன்மையை இழந்துவிடும் பாங்கு அவற்றுள் தலை யாயதாகும். அடுத்து பரம்பரை உரிமையைக் கோராமல் ஒரு தனிமனிதன் தன் திறமையாலும் தகுதியாலும் எதிர்ப்பினை

வென்று, நாடாளுமன்ற அரசாங்க முறையின் சுவடுகூட இன்றித் தானே அரசாங்கமாக இருப்பதைக் காண்கிறோம். மூன்றாவதாக, இப் புதிய அரசாங்க முறையில் மக்களின் மதிப்பில் உயர்ந்த எல்லாவித நடவடிக்கைகளும் அரசைக் கைப்பற்றிய ஒரு தனி மனிதனால் எடுக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

இத்தாலியைப் பொறுத்தமட்டில் முதல் உலகப் போர் தோன்றும் வரை ஜனநாயகமே அங்குத் தழைத்திருந்தது. ஆனால், முசோலினி இத்தாலியைப் புனர்நிர்மாணம் செய்த போது நாடாளுமன்ற அரசியல் அமைப்புக் கருத்துகளைச் சினந்து ஒதுக்கினார். உரிமை என்ற 'அழுகி நாறும் பிணத்தை'க் காலால் எற்றித் தள்ளிய பின்பே இத்தாலிக்குப் புத்துருவம் தந்தார். இத்தாலியில் பழைய உரிமைகளிலும் மரபுகளிலும் மிஞ்சியவை அரச பதவியும் சாவாய் அரச வம்சமுமே.

இத்தாலியில் ஜனநாயகம் தோற்றதற்கான காரணங்களை ஆராய்ந்தால், உரிமையும் ஐக்கியமும் அடைந்த இத்தாலி உருவாகும்போதே இத்தாலிய மக்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்து விடாதபடி சில நிகழ்ச்சிகள் நடந்தன என்பதை அறிகிறோம். இத்தாலிய ஐக்கியம் ஒவ்வொரு கட்டத்திலும் அந்நியரின் உதவியாலேயே ஏற்பட்டது. ஆல்ப்ஸ் மலைத்தொடரிலிருந்து மத்தியத்தரைக் கடல் வரை விரிந்திருந்த இத்தாலியின் விடுதலை இயக்கத்தில் இத்தாலிய மக்களின் பங்கு மிகச் சொற்பமே. எனவேதான் சுதந்திர இத்தாலியின் நாடாளுமன்ற அரசில் முதலிலிருந்தே அவர்கள் ஈடுபாடு கொள்ளவில்லை.

புதிய அரசு பொருளாதாரத் துறையிலும் அற்புதங்களை நிகழ்த்தவில்லை. விவசாய நிலையிலும் அபிவிருத்தி ஏதும் இல்லை. அமைச்சர்களோ ஊழலும் பதவிப்பித்தும் மலிந்தவர்களாக இருந்தார்களே அன்றித் திறமையால் மக்களின் இதயங்களைக் கவரவில்லை. 1911ஆம் ஆண்டில் துருக்கியோடு போரிட்டு, திரிபோலியையும் ஏஜியன் கடலில் சில தீவுகளையும் இத்தாலி பிடித்தது. இதை இத்தாலியர் மகத்தான சாதனையாகக் கொண்டாடினர்.

1914ஆம் ஆண்டில் தோன்றிய முதல் உலகப் போர் இத்தாலிக்குப் பெருஞ் சோதனையாக அமைந்தது. ஜெர்மனியோடும் ஆஸ்திரியாவோடும் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தை மதியாது முதலில் நடுநிலை வகித்தது. விரைவில் இந் நிலை மாறி, ஆஸ்திரியாவிடமிருந்து டிரென்டினோவை (Trentino) மீட்க வேண்டுமென இத்தாலிய இளைஞர் கிளர்ந்தெழுந்ததால் ஜெர்

மனிக்கு எதிராக நேசநாட்டு அணியில் இத்தாலி இடம்பெற்றது. வெறும் உற்சாகத்தால் இத்தாலியப் படைகள் முன்னேற முடிய வில்லை. 1917ஆம் ஆண்டில் ஆஸ்திரியப் படைகள் இத்தாலியப் படையினைச் சிதறியோடச் செய்தன. திகிலும் பீதியும் அடைந்து தறிகெட்டோடிய இப் படையினைக் கண்ட அந்நியத் தளபதி ஒருவர் 'இராணுவ வேலை நிறுத்தம்' என வருணித்தார். பிரிட்டிஷ்-ஃபிரெஞ்சுப் படைகள் வந்த பின்னரே நிலைமை சீர் திருந்தியது.

போர் முடிந்து சமாதான மாநாடு கூடியபோது வென்ற கட்சியிலிருந்தும் அதற்குரிய மதிப்பினை இத்தாலி பெறவில்லை. அதாவது பிறர் தரவில்லை. இத்தாலி அதிகமாகக் கேட்பதாக அவர்கள் நினைத்தனர். இஸ்திரியா, டிரிஸ்டி, டிரென்டினோ, டைரோல் ஆகியவை கொடுக்கப்பட்டாலும், டால்மேஷியாவும் ஃப்யூம் (Fiume) நகரும் கொடாது விடுபட்டனவே என இத்தாலியர் கலங்கினர். குடியேற்றங்களுக்குப் பெரிதும் ஆசைப் பட்ட இத்தாலிக்கு சோமாலிலாந்தைத் தவிர வேறொன்றுமே கிடைக்கவில்லை. வருத்தமும், வெறுப்பும், சினமும் இத்தாலி யரின் உள்ளங்களிலே அலைவீசின. சமாதான மாநாட்டில் பங்குகொண்ட ஆர்லாண்டோ பதவியிலிருந்து விலக்கப்பட்டார். 1919ஆம் ஆண்டில் டி' அண்ணன்சியோ, (D'Annunzio) தீரமிக்க இத்தாலிய இளைஞர்களின் துணையோடு ஃப்யூமைக் கைப்பற்றிச் சில நாள் அதைத் தன் ஆதிக்கத்தில் வைத்திருந்தார். விரை விலேயே அந் நகரை விட்டு வெளியேறும்படி ஆயிற்று. இந் நிகழ்ச்சியைத் தடுக்கவோ அல்லது அதற்கு ஆதரவு அளிக்கவோ இத்தாலிய அரசால் முடியவில்லை. போரினால் பாழ்பட்ட இத்தாலியப் பொருளாதாரம் சீர்பெறவில்லை. பல அமைச்சர வைகள் தோன்றி வீழ்ந்தன. இத்தகைய இன்னல்களோடு கம்யூனிச அபாயமும் நாட்டில் தோன்றியது. இந் நிலையில் அதிருப்தியுற்ற மக்களை ஒன்றுபடுத்தி நாட்டின் முன்னேற்றத்திற் குரிய சில திட்டங்களை அவர்கள் முன்வைத்து அவர்களின் ஆதரவைக் கோரியது பெனிடோ முசோலினியின் தலைமையில் அமைந்த பாசிசக் (Facist) கட்சி.

முசோலினி: ரொமெக்னாவில் (Romagna) ஒரு சிறிய கிராமத் தில் கருமான் தொழில் புரிந்த ஏழைத் தந்தையின் மகனாகப் பிறந்த முசோலினி இளமையில் அதிகம் படிக்கவில்லை. சோஷலிசக் கொள்கைகளில் பற்றுக்கொண்ட அவர் அவாந்தி (Avanti) என்ற செய்தித்தாளில் ஆசிரியராகப் பணியாற்றித் தன் அரசியலறிவை வளர்த்துக்கொண்டார். தீவிரக் கொள்கைகள்

காரணமாகச் சிறையிலும், நாடு கடத்தப்பட்டும் சில ஆண்டு களைக் கழித்தார். ஸ்விட்சர்லாந்தில் சிறிது காலம்தங்கியிருந்த போது லெனினோடு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. பொது வுடைமைக் கருத்துகளில் ஈடுபாடு ஏற்பட்டது. முதல் உலகப் போர் மூண்டபொழுது அவர் தன் அமைதிக் கொள்கைகளை எல்லாம் உதறி எறிந்து இத்தாலி போரில் ஈடுபடவேண்டும் என வாதித்து, தானும் போர் வீரனுகிக் களம் புகுந்தார். போரில் தீரம் காட்டியதால் புகழும், குண்டுகள் பாய்ந்ததால் படுகாயமும் அடைந்து படையிலிருந்து விலகினுர்.

பின்னர் தேசியமே உயிர் மூச்செனக் கொண்டு தேசிய நாளிதழ் ஒன்றின் ஆசிரியரானுர். போரிலிருந்து மீண்ட படை வீரர்களையும், வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவதியுற் றிருந்த தொழிலாளர்களையும், கொதிப்புற்றிருந்த இளைஞர்களை யும் ஒன்று திரட்டிக் கட்சி ஒன்றை நிறுவினுர். பண்டைய ரோமானிய நீதிபதிகளின் அடையாளச் சின்னமான ஃபேசஸை (Fasces = Bundle of Iron rods) நினைவுபடுத்தத் தம் கட்சிக்கு பாசிஸ்டுக் கட்சி என்று பெயர் சூட்டினுர். பாசிஸ்டுக் கட்சியின் தொண்டர்கள் கருப்புநிறச் சீருடை அணிந்து போர்ப் பயிற்சி பெற்றனர். இராணுவத்தை ஒத்த கட்டுப்பாட்டுடன் கட்சி வளர்ந்தது. கற்பனைத்திறன் மிக்க இத்தாலி மக்களின் எண்ணங் கள் வெகு தொலைவிற்குச் சொல்லுமளவிற்குத் தன் பேச்சாற்றலை யும் திறமைகளையும் முசோலினி நன்கு பயன்படுத்தினுர். அவரது துணிச்சலும் எதிர்ப்பைத் துச்சமெனக் கருதும் பண்பும் இத்தாலியரின் நம்பிக்கையை வளர்த்தன. பண்டைப் பெரு மையை நினைவூட்டி, தற்கால அவலநிலையைக் கண்ணீரால் எழுதி, எதிர்கால வளமையை ஒளி உள்ளதாகத் தீட்டிக் காட்டு வதில் பாசிஸ்டுகள் வல்லவர்களாக இணையற்று விளங்கினர். இத் திறமையால் கல்லூரி ஆசிரியரும், மாணவரும், நடுத்தர வகுப் பினரும், விவசாயிகளும், மிதவாத சோஷலிஸ்டுகளுங்கூட பாசிஸ்டு களாக மாறினர். கம்யூனிசத்தின் எதிரி தாங்கள் எனக் கூறிக்கொண்டதால் தொழில் அதிபர்களும் செல்வந்தர்களும் தங்கள் ஆதரவை பாசிஸ்டுகளுக்கு நல்கினர்.

முசோலினியிடம் இயல்பிலேயே தலைவராகும் தனிப் பண்புகள் விரவி இருந்தன. பெரும் மக்கள் திரளைத் தன் வயப் படுத்தும் காந்த சக்தி அவரிடம் இருந்தது. விரைந்து செய லாற்றும் பண்பும், தயக்கமின்றி முடிவெடுக்கும் திறனும், மனிதர் களை எடைபோடும் கூர்த்த மதியும், தந்திரமும், சாமாத்திய மும், கடின உழைப்பும், கலங்கா உள்ளமும் நிறைந்தவர் முசோலினி.

1920—21ஆம் ஆண்டுகளில் பாசிஸ்டுகள் வன்முறையின் மூலம் தங்கள் எதிரிகளான சோஷலிஸ்டுகள் போன்றோரைத் தாக்கித் தங்கள் பலத்தைப் பிறர் அறிந்துகொள்ளுமாறு செய்தனர். 1922ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாள் பாசிஸ்டுகளின் மாபெரும் மாநாடு ஒன்று நேப்பிள்சில் கூடியது. 40,000 பாசிஸ்டுகள் இதில் கலந்துகொண்டனர். கட்சியின் சில திட்டங்களை விளக்கிக் கூறிய முசோலினி அவற்றை அரசு ஏற்கவேண்டுமென வற்புறுத்திக் கூறினார். அரசு ஏற்காவிட்டால் அதைப் பணியவைத்து ஏற்கவைப்போம் என முழங்கி, ரோமாபுரியை நோக்கி அணிவகுத்துச் செல்லுமாறு பாசிஸ்டுகளுக்கு ஆணையிட்டார். இந்த அணிவகுப்பு இத்தாலிய நகரங்களின் வழியாகச் சென்றபோது மக்கள் குதூகல ஆரவாரம் செய்து தங்கள் உற்சாகத்தையும் ஆதரவையும் தெரிவித்தனர். வழியில் உள்ள புகைவண்டி, தபால், தந்தி நிலையங்கள், அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றைத் தங்கள் வசமாக்கிக்கொண்டு, அக்டோபர் 30ஆம் நாள் ரோமாபுரியை அவர்கள் அடைந்தனர். அக்டோபர் 27ஆம் நாளன்றே இத்தாலியப் பிரதமர் ஃபாக்டா (Facta)தம் பதவியை ராஜினமா செய்துவிட்டார். அரண்மனையில் அரசரைச் சந்தித்து முசோலினி ஆட்சிப் பொறுப்பைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அரசரிடம் கூறினார்.

அரசர் விக்டர் இமானுவேல், முசோலினியைப் பிரதமராக்கினார். முசோலினி நாட்டின் முக்கிய பதவிகளில் எல்லாம் பாசிஸ்டுகளை அமர்த்தினார். நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்ற முசோலினி அப் பொறுப்பைத் திறம்படச் செய்தார். பாசிஸ்டுகளின் ஆட்சி முசோலினியின் சர்வாதிகார ஆட்சி ஆயிற்று. ஜனநாய அமைப்பை மாற்றுவதில்லை என்று கூறியவர் படிப்படியாக அவ்வமைப்பினை அழித்தார். நாடாளுமன்றம், மக்களிடம் தனக்குச் செல்வாக்கு இல்லை என்பதை உணர்ந்துகொண்டு ஒதுங்கியிருக்க ஒப்புக்கொண்டது. கம்யூனிஸ்டு ரஷ்யாவைப்போல் கட்சியும் அரசும் ஒன்று என்ற நிலை ஏற்பட்டது. பிற கட்சிகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டன. 1929ஆம் ஆண்டில் பாசிஸ்டுகள் மட்டுமே அடங்கிய நாடாளுமன்றம் கூடியதை விழாவாகக் கொண்டாடினர். ஆரம்பத்தில் தனக்கெனச் சில குறிப்பிட்ட குறிக்கோள்களைக் கொண்டிராத பாசிஸ்டுக் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி நிலைப்பட்ட பின்பே கொள்கைகளை வகுத்துக்கொண்டது. உழைப்பாளிகளுக்கு நியாயம், வலிமை மிக்க அயல்நாட்டுக் கொள்கை, தேசியப் பெருமையை உயர்த்தும் முயற்சி என்ற அடிப்படைத் திட்டத்தை விரிவாக்கிக்கொண்டது. ஹிட்லரைப்

போல் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவேன் என்றெல்லாம் பெரும் வாக்குறுதிகளை முசோலினி அள்ளி வீச வில்லை. இருப்பினும், அவர் ஆட்சி பொருளாதாரக் குறைகளைக் களைவதில் பெரும் அக்கறை செலுத்தியது.

சதுப்பு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் முயற்சிகள் தொடர்ந்தன. விவசாயிகளுக்கு நிலத்தைப் பங்கிட்டுத் தரும் திட்டம் நிறைவேறாமல் போயினும் விவசாயம் தழைத்தது. தொழில் துறையிலும் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. தொழிலாளர் சங்கங்களும் வேலை நிறுத்தங்களும் தடை செய்யப் பட்டன. கட்சியின் ஆதரவில் தொழிலாளர்களின் பிரதிநிதி களைக்கொண்ட சிண்டிகேட் அமைக்கப்பட்டு அதன் கீழ்த் தொழில் நீதிமன்றங்கள் இயங்கின. இரும்பு, நிலக்கரி போன்ற இயற்கை வளங்கள் இத்தாலியில் இல்லை. நீர்வளம் மிகுந்திருந்ததால் பெரும் மின் நிலையங்களைக் கட்டி மின்சார உற்பத்தியைப் பெருக் கினர். இருப்புப் பாதைகளும் மின்வயமாயின. தொழிலுக்கும் விவசாயத்திற்கும் அரசு நிறைய கடன் உதவி அளித்தது. புதிய பாதைகளும், துறைமுகங்களும், கடைகளும், பாலங்களும் கட்டப் பட்டன. மோட்டார் கார் உற்பத்தியில் நாடு தனிப் புகழை அடைந்தது.

கல்விச்சாலைகள் அதிகமாகத் திறக்கப்பட்டன. கல்வி கட்டாயமாக்கப்பட்டதால் நாட்டிலுள்ள 90 விழுக்காடு குழந்தைகள் பள்ளிக்குச் சென்றனர். இருப்பினும், நாட்டிற்குச் சில தீராப் பிரச்சினைகளும் இருந்தன. பாசிங்கு கட்சியும் மேலாதிக்கத்தை விரும்பாத சோஷலிஸ்டுகள் போன்றோரும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். படையும் காவல் துறையும் கட்சியின் செல்வாக்கிருந்தும் இவ்வெதிர்ப்பை அடக்குவது மிகக் கடினமான பணியாயிற்று. எதிரிகளின் சொத்துகளைச் சூறை யாடியும், கடுமையான தண்டனைகள் விதித்தும், விளக்கெண் ணெய் முறையைக் கையாண்டும், கொடிய அடக்குமுறை ஆட்சியை நடத்தியது பாசிஸ்டு அரசு; எதிரிகள் ஒதுங்கினரே யன்றி ஒடுங்கவில்லை. இத்தாலியின் மக்கள்தொகை மிகக் குறை வாக இருந்ததால் அதை உயர்த்தப் பல முறைகளில் முயன்றார் முசோலினி.

25 வயதுக்குமேல் திருமணம் செய்துகொள்ளாதவர்களுக்கு வரி விதிக்கப்பட்டது. குழந்தைகள் நிறைந்த குடும்பத்திற்கு வரிச்சலுகை, இலவசக்கல்வி முதலியன அளிக்கப்பட்டன. இருப் பினும் இத் துறையில் முசோலினி எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றம் ஏற்படவில்லை.

சில இத்தாலியப் பகுதிகள் இன்னும் அன்னியர்வசம் உள்ள னவே எனப் போருக்கு முன் புலம்பியது இத்தாலி. போருக்குப் பின் அப் பகுதிகள் மீட்கப்பட்டாலும், அவற்றில் இருந்த 2½ இலட்சம் ஜெர்மானியரும், 5 இலட்சம் ஸ்லாவ் இனத்தவரும் புதிய பிரச்சினையைத் தோற்றுவித்தனர். அரசு இதைக் கண்டும் காணாததுபோல் இருந்துவிட்டது. ஃப்யூம் நகரைக் குறித்து யூகோஸ்லாவியாவிற்கும், இத்தாலிக்கும் இடையே போராட்டமே தோன்றியது. இறுதியில் இத்தாலியே அந் நகரை அடைந்த போதிலும் யூகோஸ்லாவியாவிற்குச் சில வியாபாரச் சலுகைகள் அளிக்கப்பட்டன.

சாதனைகள் என்று பார்க்கும்போது தனிநபர் உரிமையைப் பறித்து அரசே தனிச் சிறப்பாதிக்கம் வாய்ந்தது. குடிமக்கள் அரசின் பணிக்கு என்றே உதித்தவர் என்ற கார்ப்போரெட் (Corporate) அரசு கொள்கையை முசோலினி நிலைநாட்டினார். 'நம்பு, கீழ்ப்படி, போர்செய்' என்ற சொற்களே எங்கும் ஒலித்தன. முசோலினி மக்களால் அன்புடன் டியூஸ் (Duce) அல்லது தலைவர் என்று அழைக்கப்பட்டார். பிரசாரச் சாதனங்கள் அனைத்தும் தலைவரைப் பற்றியும் அவரது கொள்கைகளைப் பற்றியதுமான கருத்துகளைப் பரப்பின.

1929ஆம் ஆண்டில் போப் ஆண்டவரோடு முசோலினி செய்துகொண்ட உடன்படிக்கையைச் செயற்கரிய சாதனை என்று துணிந்து கூறலாம். 1370ஆம் ஆண்டு விக்டர் இமானுவேல் ரோமாபுரியைப்பிடித்து, போப்பின் அரசுகளைத் தன் நாட்டோடு இணைத்து இத்தாலிய ஐக்கியத்தை முடித்து மக்களின் பாராட்டைப் பெற்றாலும், அவரும் அவரது நாடும் போப் ஆண்டவரின் சினத்திற்கு இலக்காயின. வாட்டிகன் நகருள் தன்னை அடைத்துக் கொண்ட போப் ஆண்டவரின் மன வருத்தமும், பொறுமலும் தணியவே இல்லை. கத்தோலிக்க உலகின் அனுதாபம் முழுவதும் அவர்பால் இருந்தது. அவரைத் தொடர்ந்து பகைத்துக்கொள்வது நாட்டின் வளர்ச்சிக்கு நல்லதன்று என்று கருதிய முசோலினி, அவரோடு பேச்சு வார்த்தை நிகழ்த்தி ஒற்றுமைப் பத்திரம் (Concordat) ஒன்றை அவர் ஏற்குமாறு செய்தார். இதன்படி லாட்டரான் உடன்பாடு (Lateran Treaty) ஏற்பட்டது. வாட்டிகன் நகர் கடற்கரையோடுகூடிய ஒரு நாடாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. முழு உரிமைகளோடு போப் ஆண்டவர் அந் நாட்டை ஆட்சி செய்யலாம், இதற்குப் பதிலாகப் போப் ஆண்டவர் இத்தாலி நாட்டை அங்கீகரித்தார். இதனால் இத்தாலியின் நிலை உயர்ந்தது. 21 ஆண்டுகள் முசோலினியின் சர்வாதிகாரம் நீடித்து நிற்பதற்குப் போப் ஆண்டவரின் ஆசியும் நட்பும் ஒரு முக்கியக் காரணமாயிற்று.

நாஜிசத்திற்கும் பாசிசத்திற்கும் இடையே பல ஒற்றுமைகள் இருப்பினும் நாஜிகளைப்போல் யூதர்களை எதிர்ப்பதை பாசிஸ்டுகள் முதலில் விரும்பவில்லை. 1938ஆம் ஆண்டிற்குப் பின்னரே ஜெர்மனியோடு கொண்ட தொடர்பினுல் இத்தாலியும் யூதர்களுக்கு எதிரான ஓர் இயக்கத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தது. இருப்பினும் நாஜிகள் சென்ற அளவிற்கு இவர்கள் செல்லவில்லை. முசோலினியின் அயல்நாட்டுக் கொள்கைகள் ராஜதந்திரத்தையும் ஆக்கிரமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு ஐரோப்பிய அரசியலில் இத்தாலிக்கு மதிப்புவாய்ந்ததோர் இடத்தைப் பெற்றுத் தரவேண்டுமென்ற குறிக்கோளோடு வகுக்கப்பட்டது. 1933ஆம் ஆண்டிலிருந்து கம்யூனிச ரஷ்யா மேற்கிந்திய ஜனநாயக நாடுகளோடு நட்பை வளர்ப்பதில் ஈடுபட்டிருந்தது. அக்கொள்கையும் கம்யூனிசமுமே முசோலினிக்குப் பிடிக்கவில்லை. நாஜி ஆட்சி நடந்துகொண்டிருந்த ஜெர்மனியோடு நட்புக் கொண்டால் அதை ஃபிரான்சும், இங்கிலாந்தும் வரவேற்காது. இந்தச் சிக்கலை வெல்திறத்தால் அவிழ்க்க முசோலினி முயன்ருர். முதலில் 1933ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் ரஷ்யாவோடு ஒரு நட்பு ஒப்பந்தம் செய்துகொண்டார். இதனுல் ஃபிரான்சும் ரஷ்யாவும் இணைவது சாத்தியமில்லை என்று கருதினுர். பின்னர் ஃபிரான்சோடு நட்பு ஏற்படுத்திக்கொள்ள முயன்ருர். இவ்விரு நாடுகளுக்குமிடையே வேறுபாடுகள் அதிகம் இருந்ததோடு கடற்படைப் பலத்தை அதிகரிக்கவும், தென்கிழக்கு ஐரோப்பாவில் தலையிடவும், வெர்சாயி உடன்பாட்டை மாற்றவும், இத்தாலி விரும்பியதை ஃபிரான்சு ஏற்கவில்லை. தென்கிழக்கு ஐரோப்பாவில் ஃபிரான்சின் பிடி தளர்ந்தது. அங்குள்ள நாடுகள் தாமாகவே சில உடன்பாடுகளைச் செய்துகொண்டன. ஆனுல், பின்னர் நிகழ்ந்த சில சம்பவங்கள், ஃபிரான்சையும், இத்தாலியையும் நெருங்கி வரச் செய்தன. ஜெர்மனி, ஆஸ்திரியாவை நோக்கித் தன் பேராசைக் கண்களைத் திருப்பியதும், பின் விளைவுகளை எண்ணி அஞ்சிய ஃபிரான்சு இத்தாலியின் நட்பை நாடியது. 1935ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இத்தாலியும் ஃபிரான்சும் தங்களுக்கிடையே உருவான டூனிஷியா, கிழக்குஆப்பிரிக்கப் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக்கொண்டு இனி ஒத்துழைப்பது என்ற முடிவோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன. இவ்வொப்பந்தத்திற்குப் பிரிட்டனும் தன் ஆதரவைத் தந்தது. இருப்பினும் மத்தியதரைக்கடலில் இத்தாலி தனக்கு எதிரி என்ற காரணத்தால் ஃபிரெஞ்சு இத்தாலி இணைப்பிற்கு எதிராக ஜெர்மனியோடு நட்புக்கொள்ளும் முயற்சியில் பிரிட்டன் இறங்கியது.

இவ்விதம் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பிரிவினை ஏற்படுத்துவதில் வெற்றிபெற்ற முசோலினி ஆப்பிரிக்காவில்

இத்தாலியப் பேரரசை நிறுவுவது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ளும் பணியில் ஈடுபட்டார். ஹெய்லி சலாசியை (Haile Selassie) மன்னராகக்கொண்ட எத்தியோப்பியாவின்மீது (அபிசீனியா) இத்தாலியின் பார்வை படிந்தது. மன்னர் தம் அச்சத்தை சர்வதேசச் சங்கத்தில் வெளியிட்டும், ஃபிரான்சும் பிரிட்டனும் துளிகூட அக்கறை காட்டவில்லை. இத்தாலியப் படையெடுப்பு நிகழ்ந்தால், பிரிட்டிஷ், சோமாலிலாந்து, கென்யா, சூடான் ஆகிய பகுதிகளில் எல்லைகளைத் தானும் விரிவு படுத்திக்கொள்ளலாம் எனப் பிரிட்டன் நினைத்தது. 1935ஆம் ஆண்டு ஜூன் மாதம் படையெடுப்பை ஆரம்பித்த முசோலினி, சில மாதங்களிலேயே அபிசீனியா முழுவதையும் பிடித்துக்கொண்டார். நாட்டை விட்டு ஓடிய மன்னர் சர்வதேசச் சங்கத்திடம் முறையிட்டார். சங்கம் இத்தாலிமீது பொருளாதாரக் கட்டுப்பாடுகளை விதித்தது. வெகு நிதானமாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட இக் கட்டுப்பாடுகளால் இத்தாலி சிறிதும் பாதிக்கப்படவில்லை. இத்தாலி ஏகாதிபத்தியத்திற்கு அபிசீனியா பலியாக்கப்பட்டபின் இத்தாலிமீது பொருளாதாரக் கட்டுப்பாடுகளை நீடிப்பதால் பயனொன்றும் இல்லை என்று உணர்ந்து கொண்ட பிரிட்டன் அவற்றை நீக்கியது. இந்தப் பச்சை ஆக்கிரமிப்பை அனுமதிப்பதால் உலக சமாதானம் குலையும் எனப் பலர் எடுத்துரைத்தும் வல்லரசுகள் வாய்மூடி மௌனம் சாதித்தன.

இந் நிகழ்ச்சிக்குப் பின்னரே ஜெர்மனி துணிச்சலோடு ஆக்ரமிப்புக் கொள்கையைப் பின்பற்றியது. தன் செயல்களால் ஒன்றுபட்ட ஹிட்லரும் முசோலினியும் நெருங்கிவந்து இரு நாடுகளுக்கு இடையே நட்பை பலப்படுத்தும் 'ரோம் பெர்லின் அச்சை' உருவாக்கின. மேலும் 1936ஆம் ஆண்டிலிருந்து 1938 வரை தீவிரமாக நடந்த ஸ்பானிய உள்நாட்டுப் போரிலும் இரு நாடுகளும் தலையிட்டுத் தளபதி பிராங்கோவிற்கு ஆயுத உதவி அளித்தன. இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட நெருக்கம் இரண்டாம் உலகப் போரிலும் தொடர்ந்தது. போரில் ஜெர்மனி பக்கம் சேர்ந்த இத்தாலி சில ஆரம்ப வெற்றிகளுக்குப்பின் பிரிட்டிஷ், அமெரிக்கப் படைகளிடம் படுதோல்வி கண்டது. 1943ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9-ந் தேதி பதவியைத் துறந்தார் முசோலினி. படோக்லியா (Badoglio) தலைமையில் புதிய அரசு அமைந்தது. தன் கட்சியினராலேயே சிறைவைக்கப்பட்ட முசோலினியை ஜெர்மானியர்கள் சிறை பிடித்தனர். ஆனால், திரும்பவும் அவரைக் கைப்பற்றிய இத்தாலியத் தீவிரவாதிகள், 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் நாள் மிலானில் சுட்டுக் கொன்றனர். இத்தாலிக்கு ஒளிமிக்க எதிர்காலத்தைத் தருவதாக உறுதி கூறிய அத் தலைவன் இறுதியில் இத்தாலியன் ஒருவனாலேயே கொல்லப்பட்டு இத்தாலிய மண்ணில் வீழ்ந்தான்.

# 14. லொகார்னே உடன்படிக்கை

## (Locorno Pact 1925)

போருக்குப்பின் தோன்றிய பொருளாதாரப் பற்றுக்குறைகள் ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் பீடித்தன. ஃபிரான்சில் ஃபிராங்கும் இந்தப் பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக் கொண்டது. ஃபிரான்சின் தலைவராக முற்போக்குவாதியான ஹாரி பட் பதவியேற்றார். இதன் பின்னர் ஐரோப்பியச் சூழ்நிலையில் முன்னேற்றமடையக் கூடிய ஒரு நிலைமை உருவாகியது. அவற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது லொகார்னே உடன்படிக்கையாகும். ஐரோப்பாவில் அமைதி நிலவும் சூழ்நிலையை உருவாக்கும் பணியில் தலையாய இடம் பெற்ற இவ்வுடன்படிக்கை ஃபிரான்சு, ஜெர்மனியின் எல்லைகளைப் பற்றியதாகும். சின்னாட்களுக்கு முன்னர் இம் மாதிரியான ஒரு உடன்படிக்கை அமல் செய்யப் படுமா என்பதே ஐயத்திற்கு இடமாக இருந்தது. ஆயினும் 1925ஆம் ஆண்டில் ஜெர்மனி, ஃபிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாட்டைச் சேர்ந்த ஸ்டெரசிமேன், ப்ரியாண்ட், ஆஸ்டின் சேம்பர் லேன் ஆகியோர் ஐரோப்பிய அமைதிக்காகச் சிறிது ஆபத்தையும் பொருட்படுத்தாது மனவுறுதியோடு இருந்ததால் இந்த உடன் படிக்கை ஏற்படச் சாத்தியமாயிற்று எனலாம். ஜெர்மனி ரைன் லாந்திலிருந்து அந்நியர் அகற்றப்படவேண்டும், சர்வதேசச் சங்கத்தில் தனக்குமோர் இடம் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளோடு 1925-ல் இத் திட்டத்தில் கையொப்பமிட்டது. அல்லாஸ் லொரைன் பகுதியைத் தியாகம் செய்யும்படிக் கூறிய ஒரு உடன்பாட்டில் கையெழுத்திட்டு அதன்மூலம் அமைதியைப் பெற விழைந்த ஸ்டெரெஸ்மேனின் துணிபு போற்றத்தக்கது. ஜெர்மனி, ஃபிரான்சைத் தாக்குங்கால் பின்னவருக்குத் துணையாய் நிற்கவும், ஃபிரான்சு ஜெர்மனியைத் தாக்கினால் முன்னவரை எதிர்க்கவும் முன்வந்த சேம்பர்லேனின் தீரமும் தன் பரம்பரை எதிரியான ஜெர்மனிக்கு எதிராக ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தை

பிரிட்டனுடன் செய்துகொள்வதென்றும் இதற்கென ஃபிரான்சின் கொள்கையைச் சிறிது தளர்த்தவும் தயாராக இருந்த பிரியாண்டின் மனவுறுதியும் இவ்வுடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்குத் துணை புரிந்தன என்றால் அது மிகையாகாது. 1925ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் கையெழுத்தான இவ்வுடன்பாட்டின் முக்கிய அம்சங்கள் வருமாறு :

(அ) ஃபிரான்சு, ஜெர்மானிய எல்லை, ஃபிரான்சு - பெல்ஜிய எல்லைகளுக்கு உத்திரவாதம் அளிக்கும் ஓர் உடன்பாடு. இதில் ஜெர்மனி, ஃபிரான்சு, பிரிட்டன், இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகள் கையொப்பமிட்டன.

(ஆ) ஜெர்மனி போர் தொடுத்தால் அதற்கு எதிராக உதவி கோரும் ஒரு பிராஸ்கோ-போலிஷ்; பிராஸ்கோ-செக் கோஸ்லோவிய உடன்பாடு.

இரண்டாம் உடன்பாடு என்று பார்க்கும் பொழுது அதன் சில நுண்ணிய அம்சங்களைக் கொள்கை வாக்கில் ஏற்றுக்கொள்ள பிரிட்டன் மறுத்தது. முதல் அம்சத்தின்படி இங்கிலாந்து ஜெர்மனியின் எதிர்ப்பிலிருந்து ஃபிரான்சைக் காக்கவும் ஃபிரெஞ்சுப் படையெடுப்பின்போது ஜெர்மனிக்கு உதவி அளிக்கவும் ஒப்புக் கொண்டது. இவ்வொப்பந்தம் பலமற்றதாகவும், ஒரு சார்பாகவும் இருந்தது. ஏனெனில் உரம் வாய்ந்த 30,00,000 ஃபிரெஞ்சு வீரர்கட்கு 80,000 பேர்கொண்ட பிரிட்டிஷ் படை உதவியாக இருப்பின் அது வியக்கத்தக்க செயலன்று; ஆயின் இப் ஃபிரெஞ்சுப் படை 1,00,000 ஜெர்மானியரை எதிர்ப்பின் பிரிட்டிஷ் உதவி, கப்பற்படையுடன் கூடி இருப்பினும் போதுமானதாக இருக்காது. எனவே லொகார்னோ உடன்படிக்கை கைகூட வியலாத ஒரு ஒப்பந்தமாக அமைந்தது. ஜெர்மனி வெர்சாயி உடன்படிக்கையில் காணப்பட்ட எல்லை அமைப்பு தனக்குத் திருப்தியளிக்கவில்லையெனினும் பலாத்காரமாகப் படையெடுப்பு நடத்துவதில்லை என வாக்குறுதி அளித்தது.

குறுகிய நோக்கம் கொண்டிருப்பினும் லொகார்னோ உடன்படிக்கை முழுவதும் பயனற்றதாகப் போய்விடவில்லை. ஃபிரெஞ்சுப் பிரதிநிதி பிரியாண்ட் லொகார்னோவில் நாம் அனைவரும் ஐரோப்பியப் பொதுமொழி ஒன்றைப் பேசினோம் என்று பெருமையடித்துக் கொண்டார். 'இவ்வுடன்படிக்கை போர்க் காலத்தையும் அமைதிக் காலத்தையும் பிரித்துக் காட்டும் ஒரு உறுதியான நடவடிக்கையாகும்' என்று மகிழ்ந்து கூறிய ஆஸ்டின் சேம்பர்லேனின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் இவ்

வுடன்பாடு பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. இருப்பினும் ஐரோப்பிய நாடுகளிடையே நல்லெண்ணம் சமாதானம் ஆகிய வற்றைப் புகுத்தும் ஒரு சாதகமான சூழ்நிலையை இவ்வுடன்பாடு உருவாக்கியது என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆஸ்டின் சேம்பர்லேனும், பிரியாண்டும் ஜெர்மனியுடன் ஒத்துழைப்பதற் காகக் கடுமையாகப் பாடுபட்டதோடு, சர்வதேசச் சங்கத்தில் ஜெர்மனியை ஒரு அங்கத்தினராக்கும் முயற்சியில் ஸ்டெரசி மேனுக்குப் பெரிதும் உதவினர். படைக் குறைப்பையும் கண் காணிப்பில் வைத்திருந்தால் இந்த லொகார்னே உடன்பாடு உண்மையிலேயே ஒரு உபயோகமுள்ள சமாதான உடன்படிக்கை யாக இருந்திருக்கும். ஆனல், ஃபிரான்சுக்கு இது வெறுப்பைத் தருவதாக இருந்தது. எனவே ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும், யுத்த தளவாடங்களின் உற்பத்தியைக் குறைக்கவும் மற்றுமொரு உடன்படிக்கையை சோவியத் ரஷ்யா உட்பட எல்லா நாடுகளும் செய்துகொண்டன. இது கெல்லாக் உடன்படிக்கை (1930) எனப்பட்டது.

# 15. இரண்டாம் உலகப்போர் (1939—1945)

இனி இவ்வளவு உயர் அதிகாரங்களோடு கூடிய மனிதன் இருப்பது அரிது. என்னைப்போல் ஜெர்மானியரின் முழுநம்பிக்கைக்கு உரியவனுவதும் அரிது. காலம் கடத்துவதில் பயனில்லை; என் ஆட்சிக் காலத்திலேயே போர் வந்தே தீரவேண்டும்' என்று ஹிட்லர் 1939ஆம் ஆண்டு ஆகஸ்டு 27ஆம் நாள் தன் தளபதிகளிடம் கூறினுர். அவர் எண்ணியபடியே செப்டெம்பர் மாதத்தில் போர் மூண்டது. உண்மையில் இது ஒரு தனிமனிதன் தன் கொள்கைகளில் கொண்டிருந்த அளப்பரிய நம்பிக்கையின் விளைவால் தொடங்கப்பட்டது. இச் சூதாட்டத்தை ஹிட்லரின் போர் என்று கூறினுல், அது மிகையாகாது. சாதாரண மக்கள் எதிர்பாராத வகையில் முதற் பெரும்போர் மூண்டது. ஆனுல், அதன்பின் ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் நிலவிய கொள்கைகளும் மற்ருெரு போர் வெகுதொலைவில் இல்லை என்பதை மக்களுக்கு உணர்த்தின.

1933ஆம் ஆண்டிலிருந்தே போர்ப் பாதையில் ஐரோப்பா அடியெடுத்து வைத்துவிட்டது எனலாம். அவ்வாண்டில் ஜெர்மனியில் ஹிட்லரின் நாஜிக் கட்சி பதவிக்கு வந்தது. ஜெர்மனிக்கு உரிய இடத்தை அதற்குப் பெற்றுத் தருவதும் இழந்த ஜெர்மானியப் பகுதிகளை மீட்பதையும் படைபலத்தைப் பெருக்குவதையும், சுருங்கக்கூறின், வெர்சாயி உடன்பாட்டின் விதிகளை மீறுவதையும் தன் கொள்கை என வெளிப்படையாகக் கூறிய ஹிட்லர், தன் இதய ஆழத்தில் ஐரோப்பியத் தலைமை பூணவும் பழிக்குப் பழி வாங்கப் போர் நடத்தவும் ஆசைப்பட்டார். சீறி வரும் அலைபோன்று வருகின்ற ஜெர்மானிய அபாயத்தைச் சிறிது சிறிதாக விட்டுக்கொடுத்தது, கடுமையைத் தணிக்கும் கொள்கை என்ற வெறுங்கையால் தடுத்து நிறுத்த முயன்று ஐரோப்பிய வல்லரசுகள் தோற்றன. ஹிட்லர் உடன்பாடுகளைக் காற்றில் விட்டதோடு, ஆஸ்திரியா, சுடேடன்லாந்து, செக் நாடு என

ஒவ்வொரு நாடாக ஆக்கிரமித்தார். இனி ஆக்கிரமிப்பைப் பொறுக்கமுடியாது என வல்லரசுகள் எச்சரித்தும், ஹிட்லர் போலந்தின் சுதந்திரத்தைப் பறிக்கத் துணிந்தார். இத்தாலி, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகள் ஒப்பந்தத்தால் ஜெர்மனியோடு கட்டுண்டு இருந்ததும், அவர் துணிவை வளர்த்தது. 1939ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் நாளன்று போலந்தின்மீது ஜெர்மானியப் படைகள் பாய்ந்ததும், பிரிட்டனும் ஃபிரான்சும் ஜெர்மனிமீது போர் தொடுத்தன.

மேற்கில் ஜெர்மனியைப்போல், கிழக்கே ஜப்பான், போர் வெறி மிகுந்து நின்றது. சீனுவில் சில பகுதிகளைப் பெற்றும் திருப்தி அடையாது, வேறு சில பகுதிகளையும் பசிபிக் தீவுகளையும் தன் ஆதிக்கத்தில் கொண்டுவர எண்ணி, பலத்த ஏற்பாடுகளில் இறங்கியது. 1921ஆம் ஆண்டில் வாஷிங்டனில் கூடிய மாநாடு, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளின் கடற்படை வலிமை 5 : 5 : 3 என்ற விகிதத்தில் இருக்க வேண்டுமென முடிவு செய்தது. 1951ஆம் ஆண்டில் சீனுவிடமிருந்து மஞ்சூரியாவைக் கைப்பற்றி ஒரு பொம்மை அரசை ஜப்பான் அங்கு நிறுவியது. சர்வதேசச் சங்கம் அதைத் தவறு எனச் சுட்டிக் காட்டியபோது சங்கத்தைவிட்டே விலகி, ஆசியாவில் வலிமை வாய்ந்த நாடாகத் திகழ ஆசைப்பட்ட ஜப்பானின் ஏகாதிபத்தியம் பசிபிக்கிலும் வளர்வதைக் கண்டு அமெரிக்கா ஆத்திரமுற்றது. ஜெர்மனியோடும் நட்புறவு ஒப்பந்தம் செய்துகொண்ட ஜப்பான், பின்னர் இத்தாலியோடும் இணைந்து 'ரோம்-பெர்லின்-டோக்கியோ' அச்சை உருவாக்கி உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கும்வண்ணம் வளர்ந்துவிட்டது.

ஜெர்மன் விமானங்கள் வார்சாமீது குண்டுமாரி பொழிந்த போது, ரஷ்யாவும் கிழக்கில் போலந்தின்மீது படையெடுத்தது. தீவிரமாகப் போராடியும் விரைவில் போலந்து வீழ்ந்தது. செப்டெம்பர் இறுதிக்குள் வீழ்ந்த போலந்தை ஜெர்மனியும் ரஷ்யாவும் தம்முள் பிரித்துக்கொண்டன. போலந்தை விழுங்கிய பின் ரஷ்யப் படைகள் லெனின் கிராடுக்கருகிலுள்ள பின்லாந்துப் பகுதியைக் கைப்பற்றின.

1940ஆம் ஆண்டில் டென்மார்க்கையும் நார்வேயையும் ஜெர்மனி தாக்கியது. டென்மார்க் பணிந்தாலும் நார்வே தொடர்ந்து போராடியது. இறுதியில் குவிஸ்லிங் (Quisling) போன்ற நாட்டுத் துரோகிகளின் செயல்களால் நார்வேயும் வீழ்ந்தது. பிரிட்டன் போர்க் கப்பல்களை அனுப்பியும் பயனில்லை. இதன் பின்னரே சேம்பர்லின் பதவி இழந்து வின்ஸ்டன் சர்ச்சில் பிரிட்டிஷ் பிரதமரானுர்.

நார்வேக்குப்பின் ஹாலந்து, பெல்ஜியம், லக்ஸ்ம்பர்க் ஆகிய நாடுகளை வான் வழியாகவும் நில வழியாகவும் ஜெர்மனி தாக்கியது. பலத்த சேதத்திற்குப்பின் இம் மூன்று நாடுகளும் ஜெர்மனி வசமாயின. ஜெர்மனியின் அடுத்த இலக்கு ஃபிரான்சு. ஜெர்மனி வெகு வேகத்தோடும், முழுபலத்தோடும், சிறந்த விமானப் படைகளின் துணையோடும் ஃபிரான்சை நோக்கி முன்னேறியது. இத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது ஃபிரான்சு சரிந்தது. ஃபிரான்சு சிதைந்துகொண்டிருந்தபோது, அந் நாட்டின் உதவிக்காகச் சென்றிருந்த 3,37,000 பிரிட்டிஷ் படையினரையும், ஃபிரெஞ்சுப் படைப் பிரிவுகள் சிலவற்றையும் ஃபிரான்சை விட்டு வெளியேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஃபிரிட்டிஷ் விமானப் படையும் எல்லாவிதக் கப்பல்களும் ஒத்துழைக்க டன்கிர்க்கிலிருந்து (Dunkirk) இப் பெரும்படை பத்திரமாக இங்கிலாந்திற்கு மீட்டுக்கொள்ளப்பட்டது. இது மிகப் பெரிய சாதனையாகும். இத் தருணத்தில் இத்தாலியும் ஃபிரான்சைத் தாக்க ஆரம்பித்தது. ஜூன் 14ஆம் நாள் ஃபிரான்சின் வீழ்ச்சி முழுமையாயிற்று. ஜெர்மானிய ஸ்வஸ்திகா கொடி பாரிசில் பறந்தது. சரணடைந்த தளபதி பீடேன் (Marshall Petain) சமாதானத்தைக் கோரினர். 1918-ல் எந்த இடத்தில் எந்த இரயில் பெட்டியில் ஜெர்மனி சரணடைந்து சமாதானம் கோரியதோ, அதே இடத்தில் அதே பெட்டியில் ஃபிரான்சு தன் தோல்வியை ஒப்புக்கொண்டு போர் நிறுத்த ஒப்பந்தக் கையெழுத்திட்டது. தளபதி பீடேனின் தலைமையில் விஷி (Vichy) என்ற இடத்தில் ஒரு பொம்மை அரசை ஃபிரான்சிற்கென ஜெர்மனி நிறுவியது. ஃபிரெஞ்சுக்காரர்கள் தொடர்ந்து போராடுவர் என்ற சபதத்தை இலண்டனில் தஞ்சமடைந்திருந்த ஃபிரெஞ்சு தளபதி டிகால் (General de Gaulle) உலகுக்கு அறிவித்தார்.

ஃபிரான்சின் வீழ்ச்சி ஹிட்லருக்குத் தன் எண்ணங்கள் திட்டமிட்டவாறு நிறைவேறுகின்றன என்ற நிறைவையும் பெருமிதத்தையும் ஏற்படுத்தின. ஓராண்டுக் காலத்திற்குள் அவர் மேற்கொண்ட 6 படையெடுப்புகளால் மேற்கு ஐரோப்பாவே அவர் காலடியில் கிடந்தது. ஹிட்லரின் நண்பர்களும் செயலில் ஈடுபட்டனர். ரஷ்யா, லிதுவேனியாவையும் பிடித்து பால்டிக் பகுதிகளைத் தன் வசப்படுத்திக் கொண்டபின், பால்கன் பக்கமாகத் திரும்பி ருமேனியாவிடமிருந்து பெஸ்ஸரேபியாவையும் வட புகோவினாவையும் கைப்பற்றியது. ருமேனியாமீது பல்கேரியாவும் ஹங்கேரியுங்கூடப் பாய்ந்ததால் ஹிட்லர் தலையிட்டுத் தோப்ருஜாவை பல்கேரியாவிற்கும் ட்ரான்சில்வேனியாவை ஹங்கேரிக்கும் வழங்கிச் சமாதானம் செய்தார். இத்தாலி,


1939-ல் ஐரோப்பா
சோவியத் ருஷ்யக் குடியரசு நாடுகள்
காஸ்பியன் கடல்
கருங் கடல்
துருக்கி
அங்காரா
மத்திய தரைக் கடல்
அல்ஜீரியா (பிரெஞ்சு)
மொராக்கோ (பிரெஞ்சு)
ஸ்பெயின்
மாட்ரிட்
பிரான்ஸ்
பாரிஸ்
இத்தாலி
ஜெர்மனி
பெர்லின்
போலந்து
வார்ஸா
சோவியத் உக்ரெயின்
ருமேனியா
லிதுவேனியா
லட்வியா
எஸ்தோனியா
செக்
கிரீஸ்

எகிப்து முதலிய இடங்களைப் பிடித்து ஆப்பிரிவிக்காவில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றது. ஐரோப்பாக் கண்டத்திலிருந்து ஒரு சிறிய ஜலசந்தியால் பிரிக்கப்பட்டு அக் கரையில் இருந்த பிரிட்டனை அடுத்த இலக்காகக் கொண்டார் ஹிட்லர். வீருப்புடன் தன்னைக் காத்துக்கொண்டு தன் நாட்டில் செயற் பட்ட அந்நிய நாட்டு அரசாங்கங்களுக்காகவும் தொடர்ந்து போரிட்டு வெற்றி அடைந்தே தீருவது என்ற உறுதியுடன் நின்றது சின்னஞ்சிறிய பிரிட்டன். பிரதமரான வின்ஸ்டன் சர்ச்சில் நெருக்கடியின் தீவிரத்தை உணர்ந்து கலங்காத உள்ளத்தோடு செயலாற்றித் தன் நாவன்மையால் ஆங்கிலேயரை நாட்டுப் பற்றுடன் கடமையாற்றத் தூண்டி, விதியையும் எதிரியையும் எதிர்க்கத் தயாரானார். கடற்படையும் விமானப்படையும் எந்த விநாடியிலும் போர் மூளும் என எதிர்நோக்கித் தயார் நிலையில் நின்றன. ஊர்க்காவல் படை திரட்டப்பட்டது; கப்பல் கட்டுதலும், விமானங்கள் அமைத்தலும், படைக்கலன்களைப் பெருக்குவதும் அசுர வேகத்தில் நடந்தன. உதவி வேண்டி அமெரிக்காவிற்கும் ,விண்ணப்பிக்கப்பட்டது. ஹிட்லர் பிரிட்டனை அழிக்கத் தன் விமானப்படை (Luftwaffe) மட்டுமே போதும் என நினைத்தார். ஆகஸ்டு மாதத்தில் ஜெர்மனி தன் விமானத் தாக்குதல்களைத் தொடங்கியது. முதலில் பிரிட்டிஷ் கப்பல்களும், துறைமுகங்களும், விமானத் தளங்களும் குறிவைக்கப் பட்டன. பின்னால் இலண்டனும் தொழில் நகரங்களும் குண்டு மாரிக்குட்படுத்தப்பட்டன. பிரிட்டிஷ் படையினர் அஞ்சாது போராடியதுடன் பொது மக்களும் மனம் தளராது அரசோடு ஒத்துழைத்தனர். சர்ச்சிலின் வானொலிப் பேச்சுகள் அவர்களுக்குப் புத்துணர்வையும் புதுவேகத்தையும் ஊட்டின.

பதவியேற்றபோது 'நாட்டுக்களிக்க என்னிடம் ரத்தத்தையும், உழைப்பையும், கண்ணீரையும், வியர்வையும் தவிர வேறொன்றும் இல்லை' எனக் கூறிய சர்ச்சில் 'பிரிட்டனது கொள்கை, முழு வலிமையையும் கடவுள் கொடுக்கக்கூடிய பலத்தையும் பயன்படுத்தி, நிலத்திலும், நீரிலும், வானிலும் போர்புரிவதே' என்றும், 'பிரிட்டனது இலட்சியம் எப் பாடு பட்டாலும் எந்த பயங்கரத்திற்கு உள்ளானாலும், பாதை நீண்டதாகவும் கடினமானதுமாக இருப்பினும் வெற்றியே. ஏனெனில், 'வெற்றி இன்றேல் வாழ்வே இல்லை' என்று வலியுறுத்தினார். ஹிட்லரின் மின்னல்வேகப் போர் முறையைத் (Blitzkrieg) தாக்குப் பிடித்து வீரத்தின் சின்னமாய் விளங்கிய பிரிட்டிஷ் விமானப் படையைப்போற்றி வாழ்த்திய சர்ச்சில், 'மானிட இனப் போராட்ட வரலாற்றிலே இதுவரை இவ்வளவு குறைந்த எண்

ணிக்கையுடையவர்களுக்கு, மிக்க தொகையுடைய மக்கள் இவ்வளவு அதிகமாக நன்றிக்கடன்பட்டது கிடையாது' எனப் புகழாரம் சூட்டினர். விமானப்படையைச் சேர்ந்த ஹிரிகேன்களும் (Hurricanes) ஸ்பிட்பயர்களும் (Spitfires) நாட்டைக் காத்ததுடனன்றி, ஜெர்மன் விமானப் படைக்குப் பெருஞ் சேதத்தையும் விளைவித்தன. 1940ஆம் ஆண்டு அக்டோபர் வரை விமானத் தாக்குதலில் ஈடுபட்ட ஜெர்மனி, திடீரெனத் தன் போர் முறையை மாற்றி வேறு பக்கமாகத்தன் கவனத்தைத் திருப்பிற்று.

அக்டோபர் மாதத்தில் இத்தாலி கிரீசைத் தாக்கியது. ஆனல், கிரேக்கப்படைகள் இத்தாலியப் படைகளை அல்பேனியாவிற்குள் விரட்டின. இதே நேரத்தில் பிரிட்டிஷ் கப்பற்படையும் இத்தாலியக் கப்பற் படையைத் தாக்கி அழித்தது. டிசம்பர் மாதத்தில் பிரிட்டிஷ் தளபதியான வேவலின் தலைமையிலான படைகள் எகிப்திலிருந்து இத்தாலியத் தளபதி கிரேஸியானியையும் (Graziani) அவர் படையையும் வெளியேற்றின. லிபியாவிலிருந்த இத்தாலியப் படைகளை பிரிட்டிஷ் விமானப் படைதாக்கியது. நாட்டில் தோல்வியால் குழப்பம் ஏற்பட்டது. ஆனல், ஜெர்மனி இத்தாலியின் உதவிக்கு விரைந்து வந்தது. மத்தியக் கிழக்கு நாடுகளான ஈராக், சிரியா, லெபனன், ஈரான் ஆகியவற்றில் நாஜிகளுக்கு ஆதரவான அரசுகள் அமைந்து சூயஸ் கால்வாய்க்கு அபாயம் என்ற நிலையை ஏற்படுத்தின. ஆனல், பிரிட்டன் இவ்வரசுகளைப் பலவந்தமாக அகற்றித் தன் சார்புடைய புதிய அரசுகளை நியமித்தது. 1941ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கருங்கடலிலும் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தியது ஜெர்மனி. யூகோஸ்லேவியாவும் ஜெர்மனியின் வசமாயிற்று. பின் ஜெர்மன் படைகள் கிரீசை நோக்கி முன்னேறின. பிரிட்டன் உதவி செய்தும் கிரீசால் எதிர்ப்பைச் சமாளிக்க முடியவில்லை. வட ஆப்பிரிக்காவிற்கு ஜெர்மன் தளபதி ரோமல் (Rommel) அனுப்பப்பட்டார். பால்கனும் கிழக்கு மத்தியத் தரைக்கடல் பகுதியும் ஜெர்மன் வசமாயின.

ஹிட்லர், பிரிட்டனைப் பணியவைக்க வேண்டுமென்ருல் ஐரோப்பாவின் பொருளாதார வளமனைத்தும் ஜெர்மனிக்குப் பயன்பட வேண்டும் என நினைத்தார். ரஷ்யாவின் வளமும் ஆள் பயமும் அவர் கண்களை உறுத்தியது. ரஷ்யாவைத் தோற்கடிப்பது கடினமாயிராது என ஜெர்மன் தளபதிகளும் கூறினர். உக்ரேனின் கோதுமையையும், காகஸஸின் எண்ணெய் வளத்தையும் பயன்படுத்திக்கொள்ள விழைந்த ஹிட்லர், ரஷ்யாவைத் தாக்கத் திட்டமிட்டார். 1941ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜெர்மன் படைகள் ரஷ்யாமீது பாய்ந்தன. லெனின்கிராட்,

மாஸ்கோ, செபாஸ்டபோல் ஆகிய நகரங்களைக் கைப்பற்றுவது என்ற எண்ணத்துடன் படைகள் முன்னேறின. ஆனால், ஆரம்ப வெற்றிகளுக்குப்பின் தங்கள் திட்டம் நிறைவேறுவது அவ்வளவு எளிதல்ல என்பதைப் புரிந்துகொண்டனர். லெனின்கிராடைக் கூட அவர்களால் பிடிக்க முடியவில்லை. மாஸ்கோவோ தொலை தூரத்தில் இருந்தது. ரஷ்யக் குளிர்காலம் நெருங்கி வந்தது. எதிரிகளை அழிக்கும் வேலையை ரஷ்யக் கடுங்குளிரே மேற்கொண்டது. 1942ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வேறு ஜெர்மன் படைகள் உக்ரேனையும், கிரீமியாவையும் பிடித்தன. ஸ்டாலின் கிராடையும் முற்றுகையிட்டன. ஆனால், இதற்குள் ரஷ்யர்கள் ஸ்டாலின் தலைமையில் எதிர்ப்பைச் சமாளிக்கத் துணிந்து நின்றனர். ஸ்டாலின்கிராடைச் சுற்றி முற்றுகையிட்ட ஜெர்மன் படை வளைக்கப்பட்டுப் பிடிக்கப்பட்டது. பின்னர், ரஷ்யர் ஜெர்மானியரைத் தம் மண்ணிலிருந்து சிறிது சிறிதாக அகற்றிவிட்டனர்.

1940ஆம் ஆண்டிலிருந்து தாம் கடைப்பிடித்து வந்த நடுநிலைக் கொள்கையைக் கைவிட வேண்டிய அவசியத்தை அமெரிக்கா உணர்ந்துகொண்டது. பிரிட்டனது தீவிரப் போராட்டம் அவர்கள் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு உதவியளிக்கவும் தூண்டியது. அதிபர் ரூஸ்வெல்ட் பிரிட்டனுக்கு உதவத் திட்டமிட்டார். 1941ஆம் ஆண்டில் அட்லாண்டிக் ரூஸ்வெல்ட்டும் சர்ச்சிலும் சந்தித்துப்பேசி, போர்நிலையை விவாதித்து அமைதிக்கான திட்டங்களை வகுத்தனர்.

இதனிடையே பசிபிக்கில், ஜப்பானுக்கும், அமெரிக்காவிற்குமிடையே தகராறுகள் முற்றின. 1941ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் நாள் எவ்வித எச்சரிக்கையுமின்றி ஹவாய்த் தீவுகளைச் சேர்ந்த பெர்ல் துறைமுகத்திலிருந்த அமெரிக்கக் கப்பல்தளத்தின் மீது ஜப்பான் விமானத் தாக்குதலை நடத்தியது. தொடர்ந்து அமெரிக்காமீதும் பிரிட்டன்மீதும் போர்ப் பிரகடனம்செய்தது. முதலிலேயே ஃபிரெஞ்சு இந்தோ-சீனவை விழுங்கிவிட்ட ஜப்பான், தாய்லாந்தையும் மலேயாவையும் பிடித்தது; பிலிப்பைன்சு தீவுகளும் தாக்கப்பட்டன. எட்டு மாத காலத்திற்குக் கடற்போரில் நேச நாடுகள் தோல்வியையே தழுவின. பசிபிக்கிலும் கிழக்கு ஆசியாவிலும் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொண்ட ஜப்பான் மேலும் முன்னேறியது. ஹாங்காங் வீழ்ந்தது; கோலாலம்பூரும் பிடிபட்டது. 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள் சிங்கப்பூரும் பிடிப்பட்டது. அடுத்து பர்மாவை நோக்கி ஜப்பானியர் முன்னேறினர். ரங்கூனும் மாண்ட்லேயும் ஜப்பானியர் வசம் வந்தபின் இந்தியாவும் வீழ்ந்துவிடுமோ என்ற அச்சம் பிரிட்டி

ஷாரை வாட்டியது. நேச நாடுகளின் நற்பேற்றின் காரணமாக இந்தியாவை நோக்கி முன்னேறுவதை விடுத்து, தான் இதுவரை பெற்ற இடங்களை ஸ்திரப்படுத்திக் கொள்வதில் ஜப்பான் ஈடு பட்டது. மே மாதத்தில் பவளக்கடல் அருகிலும் சாலமன் தீவு களுக்கு அருகிலும் ஜப்பானியர் அமெரிக்காவிடம் பெருந்தோல்வி அடைந்தனர். விரைவில் வெற்றி நேச நாடுகள் பக்கம் திரும்ப ஆரம்பித்தது.

1942ஆம் ஆண்டு அக்டோபரிலிருந்து நேச நாடுகள் வடஆப்பிரிக்காவில் வெற்றிபெற ஆரம்பித்தன. ஒரு பெரும் ஆங்கிலேய அமெரிக்கப் படையைத் தளபதி ஐசனேவர் வட ஆப்பிரிக்காவில் நடத்திச் செல்வதென்றும், எகிப்திலுள்ள பிரிட்டிஷ் படைகள் தளபதி மான்ட்கோமரி தலைமையில் அவரை எதிர்கொள்வதென்றும் திட்டமிடப்பட்டது. மான்ட்கோமரியின் படை ரோமலின் படைகளை எல்அலாமினில் (El-Alamein)தோற் கடித்து தோப்ருக்கில் நுழைந்தது. ஜெர்மானியப் படையை விரட்டிக்கொண்டே டிரிபோலி (Tripoli) வரை மான்ட்கோமரி (Montgomery) முன்னேறினர். இதற்கிடையே பிரிட்டிஷ் அமெரிக்கப்படை காசபிலாங்கர்வில் இறங்கி எதிரிகளை அழித்துக் கொண்டு முன்னேறியது. இப் படைகளும் மான்ட்கோமரியின் படைகளும் ரோமலின் படைப் பிரிவுகளைத் துளைத்துக்கொண்டு இணைந்தன. ஜெர்மானிய இத்தாலியப் படைகள் வேறுவழி யின்றிச் சரண் அடைந்தன. வடஆப்பிரிக்காவில் வெற்றிபெற்ற பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் மத்தியத்தரைக் கடலைவிடுவித்து சிசிலிக்கு விரைந்தன. அங்கிருந்து சிறிது சிறிதாக இத்தாலியை விடுவித்தவாறு ஃபிரான்சை நோக்கி முன்னேறின. முசோலினி பதவியைத் துறந்தபின் பதவியேற்ற புதிய அமைச்சர், "நிபந்தனை யற்ற சரண், இனி போர்புரிவதில்லை' என்ற வாக்குறுதி இத் தாலியக் கப்பற் படையையும் விமானப் படையையும் நேச நாடு களிடம் ஒப்படைத்தல் ஆகிய விதிகளை ஒப்புக்கொண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இத்தாலி சரண டைந்ததும் ஜெர்மானியர் பிடிவாதமாக இத்தாலிய மண்ணி லிருந்துகொண்டு நேச நாட்டுப் படைகளை எதிர்க்கத் துணிந் தனர். ஆனல் இந்த ஜெர்மன் படைகளைப் பின்வாங்கச் செய்து சிறிது சிறிதாக பிரிட்டிஷ் அமேரிக்கப் படைகள் முன்னேறின. இதற்கிடையே வேறு நேச நாட்டுப் படைப் பிரிவுகள் நார்மண்டி யில் இறங்கின. பிரான்சு, பெல்ஜியம், லக்சம்பர்க் ஆகிய நாடுகள் விடுவிக்கப்பட்டு ஜெர்மானியர் அங்கிருந்து விரட்டப் பட்டனர். ஜெர்மன் எல்லைகளை நோக்கி நேசப் படையினர் கடுகி முன்னேறினர். இதே சமயம் ரஷ்யரும் மேற்கில் ஜெர்

மனியை நெருங்கினர். 1944ஆம் ஆண்டில் ஜெர்மனியின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பாயிற்று. போரில் இறுதிக் கட்டம் நெருங்கிக் கொண்டிருந்தது. 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வியன்னாவும் விடுவிக்கப்பட்டு பெர்லின் அடுத்த இலக்காயிற்று. கடுமையான சண்டைக்கும் தேசத்திற்கும் பின் மே 2ஆம் நாள் ரஷ்யர்களிடம் பெர்லின் சரண் அடைந்தது. இரு நாட்களுக்கு முன்பே ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்பட்டது. ஜெர்மன் எதிர்ப்பு, அடியுடன் குலைந்து ஆங்காங்கே இருந்த ஜெர்மன் படைகள் சரணமடைந்தன. ஜெர்மனியின் முழு வீழ்ச்சியைக் குறிக்கும் பத்திரத்தில் மே மாதம் 7ஆம் நாள் ரீம்ஸ் (Rheims) என்னுமிடத்தில் ஜெர்மன் தலைமைத் தளபதி ஜோல் (Jodl) கையொப்பமிட்டார்.

அச்சு நாடுகளில் இத்தாலியும் ஜெர்மனியும் தோற்ற பின்பும் ஜப்பான் தொடர்ந்து போராடியது. அமெரிக்காவும் பிரிட்டனும் தங்கள் கவனத்தை இப்போது ஜப்பான்மீது திருப்பின. 1944ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அஸ்ஸாமில் பிரம்மபுத்திராப் பள்ளத்தாக்கில் நுழைய ஜப்பானியர் திட்டமிட்டனர். ஆனால், அத் திட்டம் தவிடுபொடியாக்கப்பட்டு அவர்களுக்கும் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். இந்தப் பின்வாங்கும் கதையைத் தொடர்ந்து பசிபிக்கிலும் தளபதி மெக்ஆர்தர் ஜப்பான் பிடித்த இடங்களை ஒன்றன்பின் ஒன்ருகப் பிடித்துக் கொண்டு வந்தார். 1944ஆம் ஆண்டு அக்டோபரில் அமெரிக்கர் பிலிப்பைன்சு தீவுகளில் ஆதிக்கம் பெற்றனர். ஜப்பானியத் தீவுகளை ஆபத்து நெருங்கிக் கொண்டிருந்தது. அமெரிக்க விமானங்கள் டோக்கியோ, ஒசாகா போன்ற நகர்கள்மீது குண்டு மழை பொழியச் செய்தன. ஜூன் மாதம் அமெரிக்கா, பிரிட்டன், சீனு ஆகிய நாடுகள் கூடி ஒரு பிரகடனத்தைத் தயாரித்து ஜப்பானை நிபந்தனையின்றிச் சரணடையும்படி கூறின. இவ்விறுதி எச்சரிக்கையை ஜப்பான் அலட்சியம் செய்தது. ஆகஸ்ட் 6ஆம் நாள் ஹிரோஷிமா நகர்மீது முதல் அணுகுண்கு வெடித்தது. 4 மைல் சுற்றளவிற்கு நகரம் அழிந்து போயிற்று. 6 வருட விமானத் தாக்குதலில் பிரிட்டன் பறிகொடுத்த மக்கள்தொகையினை ஜப்பான் ஒரேநாளில் இழந்தது. இருப்பினும் சரணடைய ஜப்பான் தயங்கியது. மூன்று நாட்களுக்குப்பின் நாகசாகி நகரில் அடுத்த அணுகுண்டு விழுந்தது. அழிவின் அளவு மிக அதிகம். அடுத்தநாளே சரணடைய ஒப்புக்கொண்டது, ஜப்பான். நேச நாடுகளின் நிபந்தனையை ஏற்றுச் சமாதானத்தையும் கோரியது.

ஆறு ஆண்டுகளுக்குமுன் கிழக்கு ஐரோப்பாவில் போலந்தின்மீது எறியப்பட்ட தீப்பந்தம் உலகெங்கிலும் பரவி சொல்

லொணு அழிவினை ஏற்படுத்தியது. நாசமான சொத்துகள், மக்கள்தொகை இவற்றிற்குக் கணக்கே இல்லை. இந்த அழிவிலிருந்து உலகை மீட்டுப் புத்துருவம் தரும் கடினமிக்கதொரு பணியை நேச நாடுகள் நிறைவேற்றத் தலைப்பட்டன.

இரண்டாம் உலகப் போர் மும்முரமாக நடந்து கொண்டிருக்கும்போது போருக்குப்பின் உலகைப் புனர்நிர்மாணம் செய்வதைக் குறித்த விதிமுறைகள் பற்றி உலகத் தலைவர்கள் கூடிப் பேசிவந்தனர். அமெரிக்கா போரில் ஈடுபடும் முன்பே 1941ஆம் ஆண்டு அதிபர் ரூஸ்வெல்ட், சிந்தனைச் சுதந்திரம், சமயச் சுதந்திரம், ஏழ்மையிலிருந்து சுதந்திரம், அச்சத்திலிருந்து சுதந்திரம் என்ற நான்கு மனிதகுலத்தின் அடிப்படைச் சுதந்திரங்களைப் பற்றிய கருத்தை வெளியிட்டார். அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் அட்லாண்டிக் சாசனத்தை வெளியிட்டனர். போரின்மூலம் எந்த ஒரு நாடும் பொருளாதார இலாபம் பெற முயலக்கூடாது; நாட்டின் எல்லைகள் மாற்றி அமைக்கப்படும்போது அந் நாட்டு மக்களின் விருப்பத்தின் படி அது நடைபெறவேண்டும்; ஒவ்வொரு நாட்டிற்கும் தாம் விரும்பிய அரசாங்கமுறையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தரப் படவேண்டும்; எல்லா நாடுகளும் ஆக்கிரமிப்பிலிருந்தும், அச்சத்திலிருந்தும், ஏழ்மையிலிருந்தும் விடுபட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்; உலக அமைதியைக் காக்க ஓர் அனைத்து நாட்டு நிறுவனம் உருவாக்கப்படவேண்டும்; என்பதே அச் சாசனம் வலியுறுத்திய கருத்துகளாகும்.

இதன் பின்னரும் நேச நாடுகளுக்கிடையே 1943ஆம் ஆண்டு காசபிலாங்காவிலும், மாஸ்கோவிலும், தெஹ்ரானிலும், 1945ஆம் ஆண்டில் யால்டாவிலும், பார்ஸ்டாமிலும் பல மாநாடுகள் நடந்தன. மாஸ்கோ மாநாடு பால்கன் தீபகற்பத்தை ரஷ்ய, பிரிட்டிஷ் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிக்கவேண்டும் என முடிவுகூறியது. யால்டாவிலும் ஜெர்மனி, போலந்து நாடுகளின் எல்லைகள் பற்றித் தீர்மானிக்கப்பட்டன. ஆனால், இம் மாநாடு நடக்கும்போதே நேச நாடுகளிடையே பிளவின் சின்னமும் கருத்துவேறுபாடுகளும் தெரிந்தன. 1947ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இத்தாலி, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து அச்சு நாடுகளோடு உடன்படிக்கைகள் கையெழுத்தாயின. இத்தாலி தனது எல்லைப் பகுதிகளை ஃபிரான்சு, கிரீசு, யுகோஸ்லாவியா, ஆகிய நாடுகளுக்கு அளித்தது. அதற்குச் சொந்தமான டிரீஸ்டியில் ஐ.நா. வின் மேற்பார்வையில் ஒரு சுதந்திர அரசு அமைந்தது. தன் குடியேற்றங்களான லிபியா, சோமாலிலாந்து,

எரிட்ரியா, அபிசீனியா ஆகியவற்றை இத்தாலி இழந்தது. ருமேனியா ஹங்கேரியிடமிருந்து டிரான்சில்வேனியாவைப் பெற்றது. ஆனால், பல்கேரியாவிற்கு தோப்ருஜாவை இழந்தது. பின்லாந்தும் ரஷ்யாவிற்குச் சில பகுதிகளைக் கொடுத்தது. இவை தவிர, பெரும் இழப்பீட்டுத் தொகையைத் தரவும் தோற்ற நாடுகள் ஒப்பின; படைபலமும் குறைக்கப்பட்டது.

அச்சு நாடுகளுள் ஒன்றான ஜப்பான், அமெரிக்கத் தளபதி மெக்ஆர்தரின் இராணுவ நிர்வாகத்தின்கீழ் வந்தது. 1946ஆம் ஆண்டு ஜனநாயக முறையிலான ஒரு புதிய அரசியலமைப்பு வரையப்பட்டுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. புதிய ஆட்சி ஏற்பட்டபின் நேச நாட்டுப் படைகள் ஜப்பானைவிட்டு வெளியேறின. 1952ஆம் ஆண்டில்தான் ஜப்பானோடு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

வீழ்ச்சியுற்ற ஜெர்மனியை அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஃபிரான்சு ஆகிய நான்கு நாடுகளும் தம்முள் பங்கிட்டுக் கொண்டு நிர்வாகம் நடத்தின. பெர்லினும் நான்கு நாடுகளின் பொது நிர்வாகத்திற்குட்பட்டது. ஆனால், ஆரம்பத்திலிருந்தே ரஷ்யாவிற்கும் மற்ற மூன்று நாடுகளுக்கும் இடையே வேற்றுமைகள் வளர்ந்தன. 1945ஆம் ஆண்டு ஜனவரியில் அமெரிக்காவும் பிரிட்டனும் தம் இரு பகுதிகளையும் இணைத்து நிர்வகிப்பதென முடிவு செய்தன. ஜெர்மனியின் இராணுவபலத்தை ஒழித்து நாஜிக் கொள்கைகளைக் கூண்டோடு அழிப்பதே மேலை நாடுகளின் எண்ணம். கோயரிங், ரிப்பெண்டிராம், ரோசன்பர்க் போன்ற நாஜிக் கட்சித் தலைவர்கள் தூக்கிலிடப்படும் வேறு பலர் சிறைக்கு அனுப்பப்பட்டும் பழிவாங்கப்பட்டனர். ஜெர்மனியின் சீர்குலைந்த பொருளாதாரத்தை நேராக்குவது மிகக் கடினமான பணியாயிற்று. ரஷ்யா கிழக்கு ஜெர்மனியைக் கம்யூனிச வழியில் நடத்திச்சென்று பொருளாதாரத் துறையில் வியக்கத்தக்க சாதனைகளை ஏற்படுத்தியது. மேற்கு ஜெர்மனியிலும் தொழில்கள் விரிவடைந்து வாணிபத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. 1948ஆம் ஆண்டில் மேற்கு ஜெர்மனி ஓர் அரசியலமைப்பை உருவாக்கி அடுத்த ஆண்டில் தேர்தல் முறைகளை நடத்திக் குடியாட்சியை ஏற்றது. அடினார் தலைமையில் கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சி அரசாங்கத்தை அமைத்தது. ரஷ்யாவும் கிழக்கு ஜெர்மனிக்கு ஓர் அரசியலமைப்பை அளித்துக் குடியாட்சியை அமைத்தது. இவ்விதம் கம்யூனிஸ்டு ரஷ்யாவிற்கும், ஜனநாயக மேற்கு நாடுகளுக்குமிடையே ஒரு விளையாட்டு நிலமாக மாறிவிட்டது, ஒரு காலத்தில் உலகத் தலைமைக்கு ஆசைப்பட்ட ஜெர்மனி.



ஜெர்மனி
பிரிக்கப்படுதல்
(1945)
வட கடல்
ஸ்வீடன்
பால்டிக் கடல்
டென்மார்க்
மெமல்
ரஷ்யாவின் கீழ்
கிழக்குப் பிரஷ்யா
இங்கிலாந்து
ஹாம்பர்க்
ரஷ்யப்
பிரெமென்
ஹாலந்து
பிரிட்டிஷ் பகுதி
ஹனேவர்
பெர்லின் பகுதி
பகுதி
போலந்து நிர்வாகத்தில்
வார்ஸா
போலந்து
பெல்ஜியம்
கொலோன்
லீப்ஸீக்
பிரேக்
லக்ஸம்பர்க்
அமெரிக்கப் பகுதி
செக்கோஸ்லோவகியா
பிரான்ஸ்
ஆக்ஸ்பர்க்
மியூனிச்
வியன்னா
ஆஸ்திரியா
ஹங்கேரி
ஸ்விட்ஸர்லாந்து

இரண்டாம் உலகப் போரின் போக்கினையும் விளைவுகளையும் கூர்ந்து நோக்கும்போது சில உண்மைகளும் கருத்துகளும் நமக்குத் தெளிவாகின்றன. இதுவரை உலகம் கண்டிராத மாபெரும் அளவில் இப் போர் நடந்தது. போர் வீரர்களன்றிச் சாதாரண மக்களும் போரோடு தொடர்பு படுத்தப்பட்டனர். இங்கிலாந்தில் பெண்களுக்குக்கூடக் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டது, பாலைவனங்களிலும், காடுகளிலும், நகரங்களிலும் எங்கு பார்த்தாலும் சண்டை நடந்ததால் பொது மக்கள் போரிலிருந்து ஒதுங்கியிருக்க முடியவில்லை. உலகம் முழுவதிலும் போர்க்களங்கள் தோன்றியதால் அந்த அளவிற்கேற்பப் போர்த்திட்டங்கள் நுணுக்கமாகத் தயாரிக்கப்பட்டன. சரியான இடத்திற்குத் தேவையான மனிதர்களை உரிய நேரத்தில் அனுப்பி அரிய வெற்றியைப் பெற இருதரப்பினரும் முயன்றனர். ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் போன்ற தலைவர்கள் அடிக்கடி கூடிப்பேசி போர்பற்றிய முடிவுகளை எடுத்தனர். போர் நடந்த விதத்திலும் முதற் போருக்கும் இரண்டாம் போருக்குமிடையே பெரும் மாறுதல்கள் இருந்தன. குழிகளை வெட்டி எதிரிகளின் வரவை நோக்கிப் பதுங்கியிருந்து போர் புரியும் முறை முதற் போரின்போது பின்பற்றப்பட்டது. ஃபிரான்சின் தோல்விக்கு இப் போர் முறையும் ஒரு காரணம். இரண்டாம் போரின்போது பின்பற்றப்பட்ட முறைகள் படைகள் நகர்ந்து முன்னேறுவதில் வேகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஜெர்மனி, டாங்குகளையும் குண்டு வீசும் விமானங்களையும் விரைந்து எதிரி நாட்டின் மீது செலுத்துவதன் மூலம் வெற்றிகளை அள்ளிக் குவித்தன. இதனாலேயே போலந்து நான்கு வாரங்களிலும் ஹாலந்து நான்கு நாள்களிலும் வீழ்ந்தன. கண்மூடித்தனமான வேகத்தால் ஒன்றுமறியாத சாதாரண மக்கள் ஆயிரக்கணக்கில் பலியாயினர். குண்டு வீச்சின்போதும் விதிமுறைகள் மீறப்பட்டுக் குடியிருப்புகள், பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றின்மீதும் குண்டுகள் வீசப்பட்டன. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக பல வகையான அழிவுச் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை போரில் பயன்படுத்தப்பட்டன. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களும் நில, நீர்க் கண்ணிகளும் பெரும் சேதத்தை விளைவித்தன.

இப் போரை மாறுபட்ட கொள்கைகளின் போர் என்றும் கூறலாம். போர்நடுவில் வெளியிடப்பட்ட அட்லாண்டிக் சாசனம், 'தீமைகளுக்கு எதிரான போர், இது' எனக் குறிப்பிட்டது. ஹிட்லரும், ஸ்டாலினும் அதேபோன்று தாங்களும் தீமையை எதிர்த்து நியாயத்திற்காகப் போராடுவதாகக் கூறினர்கள். இருதரப்பிலும் பிரச்சாரம் முழுமையாக, திறமை

யாக, வன்மையாகப் பயன்படுத்தப்பட்டது. ஜெர்மனியின் பிரச்சார இயக்கத்தின் தலைவர் கோயப்பல்சும் (Goebbles) இங்கிலாந்தின் புரட்சி பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிறுவனமும் (BBC). தூற்றலிலும் போற்றலிலும் ஒருவரை ஒருவர் மிஞ்சினர்.

அழிவு என்று எடுத்துக்கொள்ளும்போது, இரு தரப்பிலும் விவரிக்கவொண்ணு அழிவும் அவலமும் ஏற்பட்டதைக் காண்கிறோம். பல நாடுகளில் விவசாயம் சீர்கெட்டுத் தொழிற்சாலைகள் தீக்கிரையாகி, மக்கள்தொகையும் கணிசமாகக் குறைந்து, பொருளாதார முறையே அடியோடு சிதைந்துபோய்விட்டது. சீர்குலைந்ததைச் சரிபடுத்தி, பழைய நிலைக்கு மீட்டுவருவது எத்துணை மகத்தான பணி என்பதை ஒவ்வொரு நாடும் விரைவில் உணர்ந்தது.

## (அ) போருக்குப் பின் ஐரோப்பா

நாடுகளிடையே கருத்து வேற்றுமையும் இலட்சியங்கள் பற்றிய பிணக்கும் அதிகரித்தன. உலகே இவ்வடிப்படையால் இருபெரும் பிரிவுகளாகப் பிளவுபட்டது. ஐக்கிய அமெரிக்க நாடுகளும் பிரிட்டனும் ஜனநாயகத்தில் அசையா நம்பிக்கைக் கொண்டு, தனிமனிதனின் உரிமைகளைக் காப்பதில் தீவிரம் காட்டின. இவற்றை முதலாளித்துவ நாடுகள் எனத் தூற்றிய சோவியத் ரஷ்யாவும் துணைக் கிரகங்களான போலந்து, யூகோஸ்லேவியா, பல்கேரியா, அல்பேனியா, செக்கோஸ்லொவேகியா, ருமேனியா ஆகிய நாடுகளும் கம்யூனிசத் தத்துவத்தில் ஈடுபாடு கொண்டு தொழிலாளர்களின் அரசை அமைத்துத் தனிமனிதன் தன் உரிமைகளை அரசிற்காகத் தியாகம் செய்து முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை மேற்கொண்டிருந்தன. மேலும் கம்யூனிசக் கருத்துகளை உலகெங்கும் பரப்பி, உலகப் புரட்சியை உருவாக்குவதே அவர்கள் இலட்சியம். இவ்விரு பிரிவுகளுக்கிடையே பகைமை முற்றி, சகஜநிலை மறைந்து, எப்போதும் ஓர் இறுக்கமான சூழ்நிலை நிலவியது. சூழ்நிலையின் இறுக்கம் அவ்வப்போது சிறிது தணிந்தாலும் முழுமையாக மறையவே இல்லை. அதிலும் ஆரம்பத்தில் அமெரிக்காவிடம் அணுகுண்டுகள் இருந்தன. இதுவேறு, மனப்புழுக்கத்தை அதிகப்படுத்தியது. விரைவில் விஞ்ஞானத் துறையில் மிகுந்த அபிவிருத்தியடைந்து அணுகுண்டு போன்றவற்றின் தயாரிப்பில் அமெரிக்காவுக்குச் சமமான இடத்தை ரஷ்யா அடைந்த பின்னரும், பிளவு விரிவடைந்து கொண்டேபோயிற்று. போரில்லாமலும், அதே சமயம், எதிர்ப்பின் எல்லையிலும் இருந்த பத்திரிகை, வானொலி

போன்ற சாதனங்களின் மூலம், கடுமையான பிரச்சாரத்தில் இரு தரப்பு நாடுகளும், ஈடுபட்டிருக்கும் இந் நிலையைக் 'கெடுபிடி போர்' (Cold War) என்ற சொற்றொடர் விளக்குகிறது.

தத்தம் கட்சியை வலுப்படுத்த எப் பிரிவிலும் சேராத நடு நிலைமை வகிக்கும் நாடுகளைத் தம் பக்கம் ஈர்க்கப் பலவித முயற்சிகளை, இப் பிரிவுகள் மேற்கொள்கின்றன. பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியும், வணிக உரிமைகளை அளித்தும், கடனாகவும் மானியமாகவும், பொருள்களையும் பணத்தையும் ஈந்தும், படைக்கலன்களை அளித்தும் நடுவில் நிற்கும் நாடுகளைத் தம் பக்கம் ஈர்க்க இவை மும்முரமாகப் பாடுபடுகின்றன. கிழக்கு, தென்கிழக்கு ஐரோப்பாவில் தன் செல்வாக்கை ரஷ்யா நிலை நாட்டிக் கொண்டது; இங்கே போலந்தும் யூகோஸ்லாவியாவும் கம்யூனிஸ நாடுகளாயினும் ரஷ்யாவின் ஏவலுக்குக் கட்டுப்பட மறுத்துள்ளன என்பதை, நினைவிற் கொள்ளவேண்டும். மத்தியக் கிழக்கு நாடுகளிடையே தன் செல்வாக்கைப் பரப்ப முயன்று அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறது, ரஷ்யா. கம்யூனிசத்திற்குக் கிடைத்த மற்றொரு வெற்றி, சீனாவில், சியாங்கே ஷேக்கின் தலைமையிலான அரசைக் கவிழ்த்துவிட்டு, மா-சே-துங்கின் தலைமையில் கம்யூனிச ஆட்சி அமைந்ததாகும். ரஷ்ய உதவியோடு மா-சே-துங் இச் சாதனையைப் புரிந்தாலும், அவர் சீனாவை ரஷ்யாவின் துணைக் கிரகமாக மாற்றாது தம்போக்கில் அந் நாட்டை நடத்திச் செல்கிறார்.

கம்யூனிச ரஷ்யா அடைந்த வெற்றிக்கு ஈடான வெற்றியை அமெரிக்காவும் அடைந்துள்ளது. சிறிய, ஏழ்மையில் வாடும் நாடுகளை உதவி எனும் தூண்டிலில் சிக்கவைத்திருக்கிறது, அமெரிக்கா. 1947ஆம் ஆண்டில், அமெரிக்க அதிபரான ட்ரூமன் (Truman) ஒரு புதுக் கொள்கையை (Truman Doctrine) வெளியிட்டார். அச் சமயத்தில்தான் கிரீசிலும் துருக்கியிலும், ரஷ்யாவின் செல்வாக்குப் பரவுவதைத் தடுத்து நிறுத்த முயன்று தோற்றுப்போன பிரிட்டிஷ் படைகள் அங்கிருந்து விலகிக்கொண்டிருந்தன. உள்நாட்டிலோ அல்லது வெளி நாட்டின் தூண்டுதலுடனோ ஆயுதம் தாங்கிய சிறுபான்மையினர் ஒரு நாட்டின் அமைதியைக் குலைத்தால் அந் நாட்டின் அமைதியைக் காக்க அமெரிக்கா முன்வரும்; ஆபத்திலுள்ள நாடு, ஜனநாயக நாடாக இல்லாமலிருப்பினும் இவ்வுதவி தரப்படும் என்றார் ட்ரூமன். கம்யூனிசத்தை எதிர்க்க வேண்டும் என்ற ஆவேசத்தில் பாசிசக் கொள்கைகள் தலையெடுக்கவும், அமெரிக்கா இங்ஙனம் வழி வகுத்துவிட்டது. 1947ஆம் ஆண்டு அமெரிக்க அயல்நாட்டுறவு


1963-ல் ஐரோப்பா
இரும்புத் திரை - xxxxx
சோவியத் குடியரசு நாடுகள்
காஸ்பியன் கடல்
கருங்கடல்
அங்காரா
துருக்கி
போலந்து
வார்ஸா
செக்
ருமேனியா
பாரிஸ்
பிரான்ஸ்
மாட்ரிட்
ஸ்பெயின்
மத்தியதரைக் கடல்
அல்ஜீரியா
மொராக்கோ

அமைச்சர் மார்ஷல் (Marshall) என்பவர் அளித்த ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு பாரிசில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. ஐரோப்பாவின் பொருளாதாரம் சீர்குலைவின் எல்லையை அடைவதிலிருந்து தடுத்து மறுபடியும் மேம்பாடு அடையும்படி செய்வதே இதன் இலட்சியம் ஆகும். அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஒத்துழைத்து இத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் கம்யூனிசத்தின் செல்வாக்கு மேற்கு ஐரோப்பாவில் பரவுவதைத் தவிர்க்கமுடியும் என அமெரிக்கா கருதியது. ‘மார்ஷல் திட்டம்’ ( Marshall Plan) நன்கு செயற்பட்டு அமெரிக்கப் பொருளாதார உதவியோடு மேற்கு ஐரோப்பிய அரசியல் பொருளாதார நிலையினைச் சீர்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டது. ரஷ்யா இதற்குப்பதிலாக, கோமின்பார்ம் (Cominform) என்ற அமைப்பின்மூலம் தனக்குக்கட்டுப்பட்ட நாடுகளை ஒருங்கிணைத்து, மார்ஷல் திட்டத்தின் தோல்விக்குப் பாடுபட்டது. நடு அமெரிக்க நாடுகளிடையேயும் தென்அமெரிக்க நாடுகளிடையேயும் கம்யூனிசத்தைப் பரப்ப ரஷ்யா மேற்கொண்ட முயற்சிகளை முறியடிக்க, 1947-ல் பிரேசிலின் தலைநகரான ரியோ-டி-ஜினரோவில் கூடிய அமெரிக்க நாடுகளின் மாநாட்டில் பரஸ்பர உதவி ஒப்பந்தம் (Inter American Treaty of Reciprocal Assistance) ஒன்று கையெழுத்தாகியது.

அடுத்த முக்கியக் கட்டம் 1949ஆம் ஆண்டில், வாஷிங்டனில் வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம் (North Atlantic Treaty Organisation) உருவானதாகும். ஆரம்பத்தில் அமெரிக்கா, கனடா, பெல்ஜியம், டென்மார்க், ஃபிரான்சு, ஐஸ்லாந்து, இத்தாலி, பிரிட்டன், லக்சம்பர்க், ஹாலந்து, நார்வே, போர்ச்சுகல் ஆகிய நாடுகளும் 1952-ல் கிரீசும் துருக்கியும், 1955-ல் மேற்கு ஜெர்மானியக் குடியரசும் உறுப்பு நாடுகளாயின. ஈரானிலும், துருக்கியிலும், கிரீசிலும் தலையிட முயன்ற ரஷ்யாவின் போக்கைக் கண்டித்து வடஅட்லாண்டிக் பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் காக்கும் எண்ணத்தோடு உருவான இராணுவ ஒப்பந்தம் இதுவாகும். பொருளாதார உதவியோடு, இராணுவ உதவியையும் அளிப்பதால் கம்யூனிச அபாயம் நிச்சயம் தவிர்க்கப்படும் என்று அமெரிக்கா கருதுவதாகத் தெரிகிறது. இந் நிறுவனம் அமைதியைக் காப்பதற்குப் பதில் அதைக் கெடுக்கும் பணியையே புரிந்துள்ளது எனக் கருதுவோரும் உளர். இரும்புத் திரைக்குப் பின்னே உள்ளே கம்யூனிச நாடுகள் இந் நிறுவனத்தை ஐ·நா. வின் அடிமையிலுள்ள கண்ணி என்றே வருணிக்கின்றனர். வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனத்திற்குச் சவால் விடுவது போல் 1954ஆம் ஆண்டில் ரஷ்யாவின் தலைமையில் வார்சாவில்

கூடிய 8 நாடுகளின் பிரதிநிதிகள் தற்காப்பிற்காக இணைந்து செயல்படுவதெனத் தீர்மானித்தனர். 1955-ல் கையொப்பமான வார்சா ஒப்பந்தம் (Warsaw Pact) நட்பு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் இணைந்த இராணுவ நடவடிக்கைக்கு வழிவகுத்தது. இதுவும் உலக அமைதிதான் தன் இலட்சியம் எனக் கூறியது. கெடுபிடிப் போரில் ஈடுபட்டிருக்கும் ரஷ்ய, அமெரிக்க நாடுகளுக்கிடையே உறவு மேலும் மோசமடைய பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. இஸ்ரேல்-அரபு நாடுகளின் பிரச்சினை, வியட்நாம் பிரச்சினை ஆகியவை இந் நாடுகளின் தலையீட்டால் மேலும் சிக்கலாகி உள்ளன.

# 16. ஐக்கிய நாடுகளின் நிறுவனம்

## (United Nations Organisation)

இரண்டாம் உலகப் போர் ஒரு பெருஞ் சூறுவளியாக வீசி உலகில் அழிவினை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்போதே மனித குலத்திற்கு அளவற்ற துன்பம் விளைவிக்கும் போரின் கொடுமையினின்று வரும் தலைமுறையினரைக் காக்கவும், அடிப்படை மனித உரிமைகளையும் நாடுகளின் சம உரிமையிலுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தவும் என்ன செய்வது என்பது பற்றிப் பெருந்தலைவர்களும் சிந்தனையாளர்களும் யோசித்தனர். இந்த யோசனைக்கு 1941ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்டும் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலும் அட்லாண்டிக் பெருங்கடலில் ஒரு கப்பல் தளத்தில் சந்தித்துப் பேசி ஒரு சர்வதேச நிறுவனத்தை அமைத்து, அமைதி காப்பது என்ற முடிவெடுத்து அட்லாண்டிக் சாசனம் ஒன்றை வெளியிட்டபோது மேற்கூறிய எண்ணத்திற்கு உருவம் கிடைத்தது. மறுபடியும் 1942ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனு ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூடிப் பேசி ஐக்கிய நாடுகளின் அறிவிப்பை வெளியிட்டனர். பின்னர் இவ்வறிவிப்பை ஏற்றுக்கொண்ட 41 நாடுகள் நாசிச, பாசிச நாடுகளை எதிர்த்து இறுதிவரை போராடுவதென்றும் வெற்றிக்குப் பின் ஓர் உலக நிறுவனத்தை அமைப்பதெனவும் உறுதி பூண்டன. 1943ஆம் ஆண்டு அக்டோபர் மாஸ்கோவில் கூடிய அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனு ஆகிய நாடுகளின் அயல்நாட்டு அமைச்சர்கள் உலக அமைதியைக் காக்க ஓர் அனைத்து நாட்டு அமைப்பை நிறுவுவதன் இன்றியமையாமையை வற்புறுத்தினர். பின், வாஷிங்டனில் டம்பார்டன் ஒக்ஸ் (Dumbarton Oaks) மாளிகையில் கூடிய வல்லரசுகளின் பிரதிநிதிகள் ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் அமைப்பை விளக்கி, ஒரு திட்டம் தயாரித்தனர். 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சான்பிரான்சிஸ்கோவில் 50

நாடுகளின் பிரதிநிதிகள் இத்திட்டத்தை இரண்டு மாத காலம் விவாதித்து ஐக்கிய நாடுகளின் சாசனத்தை உருவாக்கினர். அதே ஆண்டு அக்டோபர் 21ஆம் நாள் பல நாடுகளின் அரசாங்கங்கள் அதை அங்கீகரித்து அவ்வமைப்பில் அங்கம்வகிக்க இசைவைத் தெரிவித்தனர். இவ்விதம் அட்லாண்டிக் கடல் நீரின்மீது கருக்கொண்ட இவ்வமைப்பு நீர்மேலெழுத்துபோல் கரைந்து போகாது. கல்லின்மேல் கோபுரமாக, ஐக்கிய நாடுகள் நிறுவனமாக அக்டோபர் 24ஆம் நாளில் உருக்கொண்ட நாளை உலகம் ஐ. நா. தினமாக்க் கொண்டாடி வருகிறது.

சாசனத்தின் தோற்றுவாயில் நிறுவனத்தின் நோக்கங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதன் முக்கிய நோக்கங்களாவன: சக்தி வாய்ந்த கூட்டு நடவடிக்கைகள் மூலம் ஆக்கிரமிப்பை ஒடுக்கியும் பன்னாட்டுச் சட்டங்களின்படி நாடுகளுக்கிடையேயான தகராறுகளைத் தீர்த்தும் உலக அமைதியைக் காத்தல், மக்களின் சம உரிமைகளையும் சுய நிர்ணய உரிமைகளையும் மதித்து நாடுகளுக்கிடையே நல்லுறவை வளர்த்தல், இன, மொழி, சமய, பால் வேறுபாடுகளை ஒதுக்கி அடிப்படை மனித உரிமைகளைக் காத்து உலக நாடுகளின் சமுதாய, பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகியன.

மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றப் பின்வரும் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை உறுப்பு நாடுகள் ஒப்புக் கொண்டன. எல்லா உறுப்பினர்களும் சமமானவரே. எல்லா உறுப்பு நாடுகளும் தங்களுக்கிடையே ஏற்படும் தகராறுகளை உலக அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் ஆபத்து ஏற்படாத வகையில் சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும். நிறுவனம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் எல்லா அங்கத்தினர்களும் முழு ஒத்துழைப்பு நல்கவேண்டும். உறுப்பு நாடுகள் ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடவோ அல்லது அதை ஐ. நா. வின் தீர்ப்புக்கு விடுமாறு கோரவோ கூடாது.

அங்கம் வகிக்கும் நாடுகள் முதலில் ஒருவரோடொருவர் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் சகிப்புத் தன்மையுடனும் வாழ்வதாகவும், உலக அமைதிக்காகவும் பாதுகாப்பிற்காகவும் ஐக்கியப்படுவதாகவும் பொது நலனுக்காக மட்டுமே படைபலத்தைப் பயன்படுத்துவதாகவும் மக்களனைவரின் பொருளாதார சமூக மேம்பாட்டுக்காக உழைப்பதாகவும் உறுதி கூறும்.

ஐ. நா. வில் ஆறு முக்கிய உறுப்புகளும் பல கிளை நிறுவனங்களும் உண்டு.

**முதலாவது, பொது அவை (General Assembly)** ஆகும். இவ்வவைக்குத் தம் உறுப்பினர்களை ஐ. நா. வில் அங்கம் பெற்ற எல்லா நாடுகளும் அனுப்புகின்றன. நியூயார்க்கில் உள்ள ஐ. நா. தலைமையகத்தில் ஆண்டுக்கு ஒருமுறை இந்த அவை கூடுகிறது. அவசர நிலை ஏற்பட்டால் நாடுகளின் வேண்டுகோளை ஏற்று அவசரக் கூட்டம் கூடும். ஐ. நா. சாசனத்திற்கு உட்பட்ட எல்லா முக்கியப் பிரச்சினைகளும் அவையின் கூட்ட அட்டவணையில் இடம் பெறும். எங்கு வேண்டுமானாலும் இப்பொழுது அவையின் கூட்டத்தைக் கூட்டிக் கொள்ளலாம். இதில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகள் ஐந்து பிரதிநிதிகளை அவைக்கு அனுப்பலாம். எனினும் வாக்கெடுப்பின்போது ஒரே வாக்குதான் உண்டு. பெருவாரியான பிரச்சினைகளில் முடிவு எடுக்கச் சாதாரணப் பெரும்பான்மை போதுமானதாகும். முக்கியமான பிரச்சினைகளில் முடிவெடுக்க மூன்றில் இரண்டு பங்குபேர் ஆதரவு வேண்டும். ஐ. நா. வின் இதர நிறுவனங்களின்மீது பொது அவைக்கு அதிகாரம் உண்டு. ஐ. நா. வின் வரவு செலவு விவகாரங்களில் இதன் மேற்பார்வை உண்டு. பாதுகாப்பு அவையின் உறுப்பினர்களில் 6 பேரையும், சமூக, பொருளாதாரச் சபையின் எல்லா உறுப்பினர்களையும், ஐ. நா. பொதுச் செயலாளரையும் இவ்வவையே தேர்ந்தெடுக்கிறது. நாடுகளைக் கட்டுப்படுத்துமாறு சட்டங்களை வகுக்கவோ, அவற்றில் முடிவெடுக்கவோ இவ்வவையால் இயலாது. இப்பொழுது அவையில் ரகசியப் பேச்சுக்கே இடமில்லை. அவையின் கூட்டத்தில் எப் பிரச்சினை குறித்தும் பேசலாம்.

**இரண்டாவது, பாதுகாப்பு அவை (Security Council)** ஆகும். இவ்வவையில் தொடக்கத்தில் 11 உறுப்பினர் இருந்தனர். தற்போது அவ்வெண்ணிக்கை 15ஆக உயர்ந்துள்ளது. இவர்களுள் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், ஃபிரான்சு, சீனு ஆகிய 5 நாடுகளும் நிரந்தர உறுப்பினர் ஆவர். மற்றவர்கள் 'இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பொது அவையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆக்கிரமிப்பைத் தடுப்பதும் நாடுகளுக்கிடையே தோன்றும் பூசல்களை அமைதியான முறையில் தீர்ப்பதும் இதன் பணிகளாகும். முக்கியமான பிரச்சினைகளில் முடிவெடுக்க ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளின் ஒருமனதான ஒப்புதல் தேவை. இல்லாவிடில் முடிவுகள் எடுக்கஇயலாது. ஐந்து நாடுகளுக்கு அளிக்கப்பட்டுள்ள இச் சிறப்பு அதிகாரம் வெட்டதிகாரம் (Veto Power) என வழங்கப்படுகிறது. குற்றமிழைக்கும் நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும்படி கூற இவ்வவைக்கு அதிகாரம் உண்டு.

**மூன்றாவது, பொருளாதார, சமூக அவை** ஆகும். பொது அவையால் தேர்ந்தெடுக்கப்படும் 18 உறுப்பு நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. பொருளாதார, சமூக வாழ்வில் காணப் படும் ஏற்றத்தாழ்வுகளையும் அநீதிகளையும் கூடுமானவரை அகற்றி மக்களது வாழ்வில் மலர்ச்சியை உண்டாக்குவது இதன் இலட் சியம். கல்வி, சுகாதாரம் போன்ற பல துறைகளில் ஆராய்ச்சிகளை நடத்தி அதன் பயனை மக்கள் அனுபவிப்பதில் நாடுகளின் ஒத்து ழைப்பைப் பெற முயல்கிறது இவ்வவை. பல்வேறு பிரச்சினைகளை ஆராயப் பல குழுக்களை அமைத்தும் பல மாநாடுகளை அடிக்கடி கூட்டியும் மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு இவ்வவை பாடுபடுகிறது.

**நான்காவது, தர்மகர்த்தா அவை** ஆகும். ஐ.நா.வின் பொறுப் பில் உள்ள, அதன் உறுப்பு நாடுகளால் நிர்வகிக்கப்படும் சுய ஆட்சி பெறாத பகுதிகளின் நலத்தைக் காப்பாற்றுவது 12 உறுப் பினர்களைக் கொண்ட இவ்வவையின் பணியாகும். அரசியல் அந்தஸ்தும் அபிவிருத்தியும் அடையாத அப் பகுதிகளின் முன் னேற்றத்திற்குப் பாடுபட்டு அவற்றுள் சிலவற்றைச் சுதந்திர நாடுகளாக்கிய பெருமையும் இவ்வவைக்கு உண்டு.

**ஐந்தாவது, உலக நீதிமன்றம்** ஆகும். பொது அவையாலும் பாதுகாப்பு அவையாலும் தேர்ந்தெடுக்கப்பெறும் 15 நீதிபதிகள் உறுப்பு நாடுகளுக்கிடையே தோன்றும் சிக்கல்களைத் தீர்த்து வைத்து நீதி வழங்குகின்றனர். ஹாலந்தில் தி ஹேக் (The Hague) என்னுமிடத்தில் இம் மன்றம் அமைந்துள்ளது. ஐ.நா. அவையில் அங்கம் வகிக்காத நாடுகளும்கூடத் தம் புகாரை இம் மன்றத்திற்கு எடுத்துச் செல்லமுடியும்.

**ஆறாவது, செயலகம் (Secretariat)** ஆகும். இது ஐ.நா. நிறு வனத்தின் அன்றாடப் பணிகள் செவ்வனே நடக்க உதவி புரிகிறது. இதன் தலைவரான பொதுச்செயலாளர் பாதுகாப்பு அவையின் பரிந்துரை பெற்று, பொது அவையால் நியமிக்கப்படு கிறார். 20,000-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இதில் பணி புரிகின்றனர். ஐ.நா.வின் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த இவர்கள் ஐ.நா. நிறுவனத்திற்கு மட்டுமே விசுவாசமுள்ளவர்களாக நடந்துகொள்கின்றனர். பிரதிநிதிகளுக்குத் தேவையான தகவல் களைத் திரட்டித் தருதல், நிறுவனத்தின் நடவடிக்கைகளை உடனுக்குடன் ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஸ்பானிய, ரஷ்ய, சீன மொழிகளில் மொழி பெயர்த்தல், முடிவுகளையும் அறிக்கை களையும் உறுப்பு நாடுகளுக்கு அனுப்புதல், கணக்கு வழக்குகளைச் சரிவரக் கவனித்தல் ஆகிய முக்கிய பணிகளைச் செயலகம் பொறுப் புடன் செய்துவருகிறது.

உலகைப் போரினின்று காத்து, அமைதிப் பாதையில் நடத்திச் செல்ல, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடும் ஐ.நா.-வுடன் தொடர்பு கொண்டு பல கிளை நிறுவனங்கள் செயலாற்றுகின்றன. அவற்றுள் உலகத் தொழிலாளர் நிறுவனம் (I.L.O.); உணவு, விவசாய நிறுவனம் (F.A.O.); உலக சுகாதார நிறுவனம் (W.H.O.); ஐ.நா. உலகக் குழந்தைகள் நிதி (UNICEF); ஐ.நா. பொருளாதார, விஞ்ஞான கலாசார நிறுவனம் (UNESCO); உலக நாணயநிதி (I.M.F).; உலக வியாபார நிறுவனம் (I.T.O) போன்றவை முக்கியமானவை ஆகும்.

ஐ.நா.நிறுவனத்துச் சாதனைகளின் பட்டியல் நீண்டதல்ல வாயினும் சில, சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. போரைத் தடுத்து, ஆக்கிரமைப்பை முறியடித்துப் பல சமயங்களில் பல இடங்களில் அமைதியை நிலைநாட்டியுள்ளது. இரண்டாம் போருக்குப்பின் இந்தோனேஷியாவின் விடுதலைக்காக டச்சுக்காரர்களுடன் நடந்த போரில் தலையிட்டு, 1949ஆம் ஆண்டில் இந்தோனேஷிய விடுதலைக்கு வழிவகுத்தது ஐ.நா. அதே ஆண்டில் பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கும் அரேபியர்களுக்குமிடையே நடந்த போரையும் நிறுத்தியது. 1950ஆம் ஆண்டில் கொரியாப் போர் உலகப் போராக மாறி வளரும்நிலை ஏற்பட்டபோது படைகளை அனுப்பித் தென்கொரியாவுக்கு உதவி1953ஆம் ஆண்டில் அப் போருக்கு முடிவு கட்டியது. இந்தியப் பகுதியான காஷ்மீர்மீது பாகிஸ்தான் படையெடுத்தபோது போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தித் தீ பரவாதவாறு தடுத்தது. இதைப் போன்று கிரீசுக்கும் அண்டை நாடுகளான அல்பேனியா, பல்கேரியா, யூகோஸ்லாவியாவுக்குமிடையே மூண்ட பகைமை போராக உருவெடுக்காதவாறு தடுத்தது. சிரியாவும், லெபனுனும் அந்நியர் பிடியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் அடைய வகைசெய்தது. 1956ஆம் ஆண்டில் பிரிட்டன், ஃபிரான்சு, இஸ்ரேல் ஆகிய நாடுகள் எகிப்தின்மீது தொடுத்த போரைத் தடுத்து நிறுத்தியது. ஆயினும், உறுப்பு நாடுகளான வல்லரசுகளே பலமுறை ஐ.நா. விதிகளை மீறிப் படையெடுப்புகளை நடத்தியுள்ளன. இதனால் குவாடிமாலா, வியட்நாம், லாவோசு, கம்போடியா, எகிப்து, செக்கோஸ்லொவேகியா ஆகிய நாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அரசியல் துறையில் தோற்றாலும் சமூக, பொருளாதாரத் துறைகளில் ஐ. நா. வின் பணி போற்றற்குறியது. உணவு உற்பத்தியைப் பெருக்குவது, வாணிபத்தை வளர்ப்பது, பின்

தங்கிய நாடுகளின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பது, உலகின் தபால்-தந்திப் போக்குவரத்துத் தொடர்புகளை ஒழுங்குபடுத்துவது போன்ற பல பணிகளில் ஐ. நா. வின் சேவை குறிப்பிடத் தக்கது ஆகும். மேலும், எலும்புருக்கி நோய், காலரா, மலேரியா, அம்மை போன்ற கொள்ளை நோய்களை அறவே ஒழித்தலிலும், சத்துணவுப் பற்றுக்குறையால் வாடும் குழந்தைகளுக்குச் சத்துணவுப் பொருள்களை அளிப்பதிலும் உலக சுகாதார நிறுவனம் செய்துள்ள பணி அளவிடற்கரியது. அகதிகளின் கண்ணீரைத் துடைப்பதிலும், பெண்கள், குழந்தைகள், தொழிலாளர்கள் ஆகியோரின் உழைப்பைப் பிறர் அநியாயமாகப் பயன்படுத்தி இலாபமடைவதைத் தடுப்பதிலும் ஐ. நா.வின் அன்புக்கரம் நீண்டுள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய, வலிமையற்ற, சிறிய நாடுகள் ஐ. நா.வினால் பெற்ற நன்மைகள் ஏராளம்.

1970ஆம் ஆண்டில் வெள்ளிவிழாவைக் கொண்டாடிய ஐ. நா. வின் அமைதிப் பணியை மதிப்பிடும்போது சாதனைகளைப் பற்றிய பிரமிப்பு ஏற்படாமலிருக்கலாம். இருந்தாலும் மனித குல வாழ்வுடன் தன்னைப் பல வழிகளிலும் பிணைத்துக் கொண்டு ஓர் இன்றியமையாத நிறுவனமாக ஐ. நா. ஆகிவிட்டது. ஐ. நா. தோன்றிய காலத்தில் ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு அதில் ஓங்கியிருந்தது. பின்னர், ஏராளமான ஆசிய, ஆப்பிரிக்க, நாடுகள் விடுதலை அடைந்து ஐ.நா.வில் இடம்பெற்றதால் அவற்றின் எண்ணிக்கையும் செல்வாக்கும் ஆதிக்கமும் ஓங்க ஆரம்பித்தன. முதலிரு தலைமைச் செயலர்களான டிரிக்வீலியும் டாக் ஹாமர் ஷோல்டும் மேலைநாட்டினர் ஆவர். மூன்றுமவரான ஊதாண்ட் ஆசிய நாட்டினர் ஆவார். நிலைமை எவ்வளவு தூரம் மாறிவிட்டது என்பதற்கு இது ஒன்றே சான்றாகும். ஐ.நா.வினால் தீர்க்க முடியாத பிரச்சினைகளாக வியட்நாமின் நிலை, போர்ச்சுகீசியக் காலனி ஆதிக்கம் ரொடீஷியாவில் இனவெறி ஆட்சி ஆகியவை உலகில் அமைதி நிலவாதவாறு தடுத்துக்கொண்டிருக்கின்றன. ஜெர்மனி, கொரியா போன்ற நாடுகள் ஐ.நா.வில் இடம் பெறாததும் உலக அமைதிக்கு உகந்ததாக இல்லை.

இவ்வாறான பல குறைகள் இருப்பினும் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட இந் நிறுவனம் மனிதர்களைப் போன்றே குறைபாடுகள் உடையதாக இருக்கும் என்பதை நாம் ஏற்றுக்கொண்டாகவேண்டும். நாடுகளுக்கிடையேயான தகராறுகள் முற்றிப் பெரும் போராக உருவாகாமல் தடுத்ததிலேயே இந் நிறுவனத்தின் பெருமை விளங்குகிறது.

மனிதகுலம், ஐ.நா.வைப் பலப்படுத்தி அதன்மூலம் பல மற்ற வசதிகுறைந்த பின்தங்கிய நாடுகளுக்கு நன்மைகளைப் பெற்றுத்தருவதில் எவ்வளவு தூரம் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் அதனைப் பயன்படுத்திக்கொள்வது தான் உலகம் உய்யும் வழியாகும். நான்கு முறை சிறு தகராறுகள் பெரும் போர்களாக உருவாவதினின்று தடுத்து நிறுத்தி உலக அமைதியைக் காத்த ஐ.நா. எதிர்காலத்திலும் அப் பணியைத் தொடர்ந்து செய்யும் என நம்புவோம்.

# 17. ஐரோப்பியப் பொது சமுதாயம்

இரண்டாம் உலகப் பெரும் போரினால் விளைந்த பேரழிவுகளால் ஐரோப்பா ஒரு படிப்பினையைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. போரால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மீண்டும் பழைய நிலையை எய்தவும், போர் அபாயங்களிலிருந்து தற்காத்துக் கொள்ளவும் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒற்றுமைப்பட்டே ஆகவேண்டும் என்பதே அப்படிப்பினை. இதன் விளைவாக ஐரோப்பாவில் பல அமைப்புகள் ஏற்பட்டன. இவை தோற்றம், செயல்கள், உறுப்பினர்கள் சேர்க்கும் முறை ஆகியவற்றால் வேறுபட்டிருந்தன. அவை பணியாற்றிய முறையைக் கொண்டு அவற்றை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை 1. இராணுவத்துறை; 2. அரசியல்துறை; 3. பொருளாதாரத் துறை; 4. அறிவியல், தொழில் நுணுக்கத்துறை ஆகும்.

ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்று ஐரோப்பாவை ஒருமைப்படுத்த வேண்டும் என்ற கருத்து, இரண்டாம் உலகப் பெரும் போரிற்குப் பின் வெற்றி பெற்றாலும், இக் கருத்துப் புதுமையானதன்று. 17ஆம் நூற்றாண்டில் புகழ்பெற்ற ஃபிரெஞ்சு மன்னனான நான்காம் ஹென்றியின் அமைச்சரான சல்லி (Sully) என்பார் ஐரோப்பாவில் போரைத் தவிர்ப்பதற்கும் ஒற்றுமையை நிலவச் செய்வதற்கும் சிறந்த திட்டம் ஒன்றை வெளியிட்டார். 1929ஆம் ஆண்டில் ஃபிரெஞ்சுப் பிரதமரான பிரையன் (Briand) என்பார் சல்லியின் கருத்தைக் காலத்திற்கேற்ப விளக்கிக் கூறினார். இரண்டாம் உலகப் பெரும் போரின்போதும், போர் முடிவுற்ற பின்னரும் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் இதே கருத்தை மெருகூட்டி வலியுறுத்தினார்.

அக் கருத்துக்கு வடிவளிக்கத் தோன்றியவையே மார்ஷல் திட்டமும் பிரஸ்ஸல்ஸ் உடன்பாடும். இவற்றுள் முன்னது அமெரிக்காவின் உதவியுடன் ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்போடு பொருளாதாரத்தைச் சீர்படுத்திக் கொள்ள எழுந்தது.

1948-ல் பிரஸ்ஸல்ஸ் நகரில் பிரிட்டன், ஃபிரான்சு, பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க் ஆகிய ஐந்து நாடுகளும் கூடிப் பொருளாதார, இராணுவத்துறைகளில் ஒத்துழைப்பதன் மூலம் தங்கள் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ள முடிவெடுத்தன. பின்னல் ஐரோப்பாவில் தோன்றிய பல அரசியல் நிறுவனங்களுக்கு இவ்வுடன்பாடே அடிப்படையாக அமைந்தது.

போருக்கு முன்பிருந்த ஐரோப்பாவில் இயங்கிவந்த பெடரல் குழு (Federal Union) உலக ஒற்றுமை ஏற்படவேண்டுமெனில் முதற்படியாக ஐரோப்பா ஒற்றுமைப்படவேண்டுமென வலியுறுத்தி வந்தது. பெடரலிஸ்டுகள் ஒவ்வொரு நாடும் தன் தனித் தேசிய இறைமையைத் (Absolute National Sovereignty) தியாகம் செய்துவிட வேண்டுமெனக் கூறினர். இவ்விறைமை மக்களுக்கு மட்டுமே பொறுப்புள்ள ஓர் அரசிடம் பொதிந்திருக்கவேண்டுமென விழைந்தனர். அரசுக்குத் துணையாக நாடுகளுக்கிடையே எழும் பூசல்களைத் தீர்த்துவைக்க ஒரு தலைமை நீதிமன்றமும், அரசின் முடிவுகளைச் செயல்படுத்த ஒரு காவற்படையும் இருக்க வேண்டுமெனவும் அவர்கள் விரும்பினர். 1948ஆம் ஆண்டில் ஹேக் நகரில் கூடிய மாநாட்டில் ஐரோப்பிய நாடுகளின் ஒற்றுமையைச் செயற்படுத்தப் பல்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட்டன. ஐரோப்பிய நாடுகளின் நாடாளுமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய அவையை விரைவில் கூட்டுவது என்ற முடிவினை இம் மாநாடு இறுதியில் எடுத்தது.

1949ஆம் ஆண்டு மே மாதம் பிரிட்டன், ஃபிரான்சு, ஹாலந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க், டென்மார்க், அயர்லாந்து இத்தாலி, நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளின் அயல்நாட்டுறவு அமைச்சர்கள் ஒன்றுகூடி ஓர் ஐரோப்பியக் கவுன்சிலை (Council of Europe) அமைப்பதற்கான ஆவணத்தில் கையொப்பமிட்டனர். இந்த ஐரோப்பியக் கவுன்சில் அமைச்சர் குழு, ஆலோசனை அவை என்ற இரு அங்கங்களைக் கொண்டதாகும். நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை வளர்க்கும் பணி அமைச்சர் குழுவிற்குரியது. ஐரோப்பிய மக்களது இலட்சியங்களை எடுத்துச் சொல்லும் மன்றமாக ஆலோசனை அவை விளங்கும். ஸ்ட்ராஸ்பர்க் (Strasbourg) நகர் ஐரோப்பியக் கவுன்சிலின் தலைமையகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1949ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இக் கவுன்சில் செயற்படத் தொடங்கியது. கூட்டங்களை நடத்துவதில் பெரும்பாலும் பிரிட்டிஷ் நடைமுறைகளே பின்பற்றப்பட்டன. ஆண்டுக்கு ஒருமுறை கூடும் ஆலோசனை

அவையில் உறுப்பு நாடுகளின் நாடாளுமன்றங்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். அமைச்சர் குழு அனுப்பும் எந்தப் பொருள்பற்றியும் இவ்வவை விவாதித்து, தன் பரிந்துரைகளை அளிக்கும். இவ்வவையில் தீர்மானங்கள் நிறைவேற மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் வாக்குகள் தேவை. தொடக்கத்தில் அகர வரிசையில் அவர்கள் அமர்வ தற்கு இடம் ஒதுக்கப்பட்டபோதிலும் தற்போது கட்சி அடிப் படையில் அவர்கள் அமர்ந்து வருகின்றனர். இவ்வாலோசனை அவைக்கும் உறுப்பு நாடுகளின் நாடாளுமன்றங்களுக்கும் இடையே உறவை வளர்த்து வலுப்படுத்தவும் ஆலோசனை அவை எடுத்த முடிவுகளைச் சம்பந்தப்பட்ட நாடுகள் ஏற்குமாறு தூண்ட வும் ஒரு செயற்குழுவை இந்த ஆலோசனை அவை அமைத்தது.

அரசியல்துறையில் ஐரோப்பிய நாடுகளை ஒற்றுமைப்படுத்த விழையும் இக் கவுன்சிலின் சாதனைகளை மதிப்பிடும்போது ஐரோப்பா முழுவதற்குமான பொதுச் சட்டங்களை இயற்றுவதில் இது வெற்றியடைந்துள்ளது என்பது புலனாகிறது. மனித உரிமை கள் பற்றிய விதிகளின் தொகுப்பினை இது உருவாக்கித் தந்துள்ளது. மேலும், பல பொதுக்கொள்கைகளை ஏற்படுத்தித் தந்துள்ள துடன் பல சிக்கலான சட்டங்களுக்கு விளக்கமும் அளித்துள்ளது. ஃபிரான்சிற்கும் ஜெர்மனிக்குமிடையே பகைமையை வளர்த்த சார் (Saar) பிரச்சினைக்குத் தீர்வு கண்டதன்மூலம் வெல்திறத் துறையிலும் வெற்றியைத் தேடிக்கொண்டது இக் கவுன்சில். தற்போது இக் கவுன்சில் நாடுகளுக்கிடையேயான எல்லைப் பிரச் சினைகளை எளிதாக்குவதிலும் அகதிகள் பிரச்சினையைத் தீர்ப்ப திலும் தன் நாட்டத்தைச் செலுத்திவருகிறது. சமூக நலப் பணிகளைச் செயற்படுத்துவதில் நாடுகளுக்கு இடையே ஒத் துழைப்பை வளர்ப்பதையும், மனித உரிமைகளைக் காக்க ஓர் ஐரோப்பிய நீதிமன்றத்தை உருவாக்கியிருப்பதையும் கவுன் சிலின் பிற சாதனைகள் எனக் குறிப்பிடலாம்.

1947ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மார்ஷல் திட்டத் தின் பயனாக ஐரோப்பிய நாடுகளிடையே பொருளாதாரத் துறையில் இதுவரை இல்லாத அளவிற்குப் பிணைப்பு ஏற் பட்டது. இப் பிணைப்பு நாளுக்கு நாள் வளர்ந்தது. 1950ஆம் ஆண்டில் ஜெர்மனி, பெல்ஜியம், ஃபிரான்சு, இத்தாலி, லக்சம்பர்க், நெதர்லாந்து ஆகிய நாடுகள் நிலக்கரி, எஃகு உற்பத்தித் துறையில் ஒன்றுபடுவது எனத் தீர்மானித்தன. இந்த ஆறு நாடுகளும் ஒரு தனிப் பொருளாதாரச் சமுதாயமாக (European Coal and Steel Community) விளங்கி இவ்விரு மூலப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கி, பொருளா

தாரத் துறையில் மேம்பாடு அடையத் தீர்மானித்தன. 1954ஆம் ஆண்டு பிரிட்டனும் இச் சமுதாயத்தில் இணைந்தது.

1955ஆம் ஆண்டில் மேற்குறித்த ஆறு நாடுகளும் பொருளாதாரத் துறையில் மேலும் தங்களைப் பிணைத்துக்கொள்ள முடிவெடுத்தன. இம் முடிவு மெஸ்ஸினு (Messina) எனும் நகரில் எடுக்கப்பட்டதால் இந் நாடுகள் மெஸ்ஸினு நாடுகள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இறுதியில் 1958ஆம் ஆண்டில் ரோமாபுரியில் கையெழுத்தான ஓர் உடன்பாட்டின் விளைவாக ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் (The Europeon Economic Community) தோன்றியது. அவை, அமைச்சர் குழு, செயற்குழு ஆகியவை இதன் முக்கிய உறுப்புகள் ஆகும். அவை (Assembly), தற்போது ஐரோப்பிய நாடாளுமன்றம் என வழங்கப் பெறுகிறது. பொருளாதாரச் சமுதாய முதலீட்டுக் கொள்கைகளை ஒருங்கிணைப்பதன்மூலமும் வணிகத்துறையில் ஒரு பொதுச் சந்தையை (Common Market) நிறுவுவதன்மூலமும் மேற்குறிப்பிட்ட ஆறு நாடுகளையும் ஒரு தனிப் பொருளாதாரப் பிரிவாக இயங்குமாறு செய்துள்ளது இந்த ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம்.

பொதுச் சந்தை என்பது பலவேறுன சுங்கத் தீர்வைகளும், இறக்குமதியாகும் பொருள்களின் அளவின்மீதான கட்டுப்பாடுகளும் (Quotas) அற்ற ஒரு வணிகத்தலமாகும். இங்கு ஒரே விதமான ஏற்றுமதி வரி முறையும், இறக்குமதியாகும் பொருள்களின் அளவின்மீதான கட்டுப்பாட்டு முறையும் நடைமுறையில் இருக்கும். 1959ஆம் ஆண்டு இந்த ஆறு உறுப்பு நாடுகளும் தங்கள் உற்பத்திப் பொருள்களைத் தங்களுக்குள் பரிமாற்றம் செய்துகொள்வதில் முதன்முறையாக 10 சதவீத வரிக் குறைப்பை ஏற்றன. இவ் வரிக்குறைப்பு 1962ஆம் ஆண்டில் 40 சதவீதத்தை எட்டியது.

இதனிடையே 1956ஆம் ஆண்டில் பிரிட்டன், ஐரோப்பியத் தடையில்லா வாணிப எல்லைப் பகுதிக்குள் தானும் நுழைய விழைவதாக அறிவித்தது. ஆனல், ஆரம்பத்திலிருந்தே ஃபிரான்சு இக் கருத்தை எதிர்த்து வந்தது. இவ்வெதிர்ப்பின் மொத்த உருவமாக விளங்கியவர் ஃபிரான்சின் முன்னுள் அதிபரான சார்லஸ் டிகால் (Charles De Gulle) ஆவார். அமெரிக்காவையும் அந் நாட்டின் செல்வாக்குக்கு உட்பட்டு அடிமைகள்போல் வாழும் சில ஐரோப்பிய நாடுகளையும் மனமார வெறுத்த டிகால், ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தில் ஆங்கிலேய சாக்சன்களின் (Anglo-Saxons) நிழல்கூடப் படுவதை விரும்பவில்லை.

அமெரிக்காவுடன் பிரிட்டன் செய்துகொண்ட இராணுவத் தற்காப்பு ஒப்பந்தத்தை வெறுத்த டிகால், பிரிட்டனின் பொருளாதார நிலை அது பொதுச்சந்தையில் இடம்பெறப் பொருத்தமுடையதாக இல்லை என்ற காரணத்தைக் காட்டி, பிரிட்டனுக்குப் பொதுச்சந்தையில் இடமளிப்பதை மறுத்தார்.

இதனால் சிறிதும் மனந்தளராத பிரிட்டன், ஆஸ்திரியா, டென்மார்க், நார்வே, போர்ச்சுகல், ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளுடன் சேர்ந்து ஓர் ஐரோப்பியத் தடையிலா வாணிபச் சங்கத்தை (The European Free Trade Association) ஏற்படுத்தியது. 1959ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோம் நகரில் கூடிய இந் நாட்டு உறுப்பினர்கள் தங்கள் நாடுகளுக்கிடையே சுங்கத் தீர்வைகளை விலக்கி, பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடிவெடுத்தனர். மேலும், இச் சங்கம் ஐரோப்பியப் பொதுச் சந்தையுடன் இணைந்து, ஒத்துழைக்கவும் தயார் என அறிவித்தது. இவ்விணைப்பு எப்போது ஏற்படும் என்பது கேள்விக்குறியாகவே இருந்தது.

ஐரோப்பிய நாடுகள் வாணிப, பொருளாதார, அரசியல் துறைகளில் ஒன்றுபடவேண்டும் என எண்ணி, அவ்வெண்ணத்தை ஈடேற்றமுயன்றபோது அவைகளுக்கிடையே இருந்த குறுகிய, தன்னல எண்ணங்கள் காரணமாக அப் பெருவிருப்பம் தடைப்படுவதைக் காண்கிறோம். உலகின் ஒரு சிறு பகுதியான ஐரோப்பாக்கண்டம் ஒன்றுபடுவதிலேயே இத்துணை சிக்கல், இடையூறு இருக்குமேயானால் உலக நாடுகள் அனைத்தும் ஒன்றுபட இம் மானிட இனம் எவ்வளவு காலம் பொறுமையோடு போராட வேண்டுமோ ?

# 18. சமகால நாகரிகம்

ஐரோப்பிய வரலாற்றிலேயே ஒரே ஒரு முறை ஐரோப்பா முழுமையும் ஓர் அரசின் கீழ் ஒன்றுபட்டு இயங்கியது. மூன்று நூற்றுண்டுக்காலம் ரோமானியப் பேரரசு ஐரோப்பாவைத் தன் வசம் வைத்திருந்தது. இப் பேரரசு சிதைந்தபோது இதன் சின்னங்களாக ரோமானிய மத நிறுவனங்களும் அவர்களது சட்டங்களும், நிலைக்க முடிந்தாலும் ஒற்றுமையின் மேன்மை, கட்டுப்பாடு, பழைய பாரம்பரியங்கள் ஆகியவை அழிந்தே போயின. நாகரிகம் என்பதை அடிப்படையிலிருந்து எழுப்ப வேண்டிய அவசியம் நேரிட்டது. கிழக்கு ஐரோப்பாவும் மேற்கு ஐரோப்பாவும் பிரிந்தன. போப்பாண்டவரால் அமைதியின் சமாதானத்தை நிலைநிறுத்த முடியவில்லை. சமுதாயம் சிதறுண்டு போயிற்று. இந்த அராஜகச் சூழ்நிலையிலிருந்த பரம்பரை அரச வம்சங்களைச் சுற்றித் தேசிய நாடுகள் மெல்ல எழுந்தன; வளர்ந்தன. 17ஆம், 18ஆம் நூற்றுண்டுகளில் இவற்றிற்கிடையே போர்கள் நிகழ்ந்தன. அவை நாட்டை விரிவாக்கும் ஆசையாலும், குடியேற்றங்களைப் பெறும் ஆவலாலும், சமயத்திற்காகவும் நிகழ்ந்தன. இவற்றுல் ஐரோப்பாவில் ஒற்றுமை தோன்றுவதற்குப்பதில் பிளவுகள் மேலும் வளர்ந்தன. ஃபிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் ஐரோப்பிய அரசியல் வானில் நெப்போலியன் உதயமானுன். அவனது வீழ்ச்சி ஐரோப்பிய ஒற்றுமையைச் சாத்தியமில்லை என்று நிரூபணம் ஆக்கியது. போராட்டத்திற்குப் பின் களைப்பில் உருவான சமாதானம் ஓர் இத்தாலிய அரசும், ஒரு ஜெர்மனிப் பேரரசும் உருவாகுதலைக் கண்டது. உலக வல்லரசாகவிரும்பிய ஜெர்மனி வெறுப்பை வளர்த்தது. கிழக்கு ஐரோப்பாவில் அடக்கி வைக்கப்பட்ட தேசிய உணர்வுகள் கொந்தளித்தெழுந்தன. இவற்றின் விளைவாக முதலாம் உலகப் போர் மூண்டது. அத்தகைய கொடுமை மீண்டும் திரும்பவும் நிகழாமலிருக்க வழிகளை ராஜதந்திரிகள் ஆராய்ந்தனர்.

தொழில்துறை முன்னேற்றம், போட்டிக்கு அடிகோலியது. தொழிலாளர்கள் பிரச்சினை தலைதூக்கின. ஐரோப்பா இன்று

ஒரு சந்திப்பில் நிற்கிறது. ஒன்று போராட்டப் பாதையை அது தேர்ந்தெடுக்கவேண்டும், அல்லது பொருமை அதிதீவிர உணர்ச்சி வசப்படுதல் ஆகியவற்றிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு நிரந்தரமான அமைதிக்கான பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இரண்டிற்குமே, பொருள், பணபலம் தேவை. வளர்ந்துவரும் விஞ்ஞானம் கை கொடுக்கக் காத்திருக்கிறது. அதன் அற்புத சாதனைகளால் எதனையும் ஆக்கவும் முடியும்; அனைத்தையும் அழிக்கவும் கூடும். விஞ்ஞானத்தின் உதவி கொண்டு நாகரிகத்தைக் குலைக்கமுடியும்; அல்லது இதுவரை மனிதகுலம் அனுபவிக்காத வசதிகள், வளங்கள் முதலியவற்றைப் பெற்று, சுபிட்சமாக வாழவும் இயலும்.

## சமகால நாகரிகத்தின் கூறுகள்

ஐரோப்பா அல்லது மேலை நாடுகள் என்று கூறும்பொழுது அங்கு இருக்கக்கூடிய எண்ணற்ற தேசிய இனங்கள் நினைவுக்கு வரும். அரசியல் ரீதியாக ஐரோப்பாவை ஒன்றுபடுத்தும் முயற்சிகள் பல ஏற்பட்டும் அவற்றில் ஒன்றுகூட வெற்றி என்ற இலக்கை எட்டவில்லை. ஆனால், நாகரிகம், பண்பாடு என்ற துறைகளில் ஒற்றுமையையும், ஒரு தனித் தன்மையையும் அது பெற்று விளங்குகிறது.

இருபத்து ஐந்து நூற்றாண்டுக் காலமாக ஐரோப்பாவில் வளர்ந்து வந்திருக்கும் மேலை நாகரிகம் சிறு அளவிலேனும் உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவித் தழைத்துள்ளது. மேலை நாட்டுப் பாணியில் மக்களாட்சி முறையை நிறுவச் சில கீழை நாடுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பூதாகாரமான விமானங்கள் பேரிரைச்சலுடன் வான வீதியில் இமயத்தையும் கடந்து பறக்கின்றன. ஆப்பிரிக்க நாட்டுச் சண்டைகளில் நவீன ரஷ்ய, அமெரிக்க ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கார்ல் மார்க்ஸின் தத்துவத்தைப் புரிந்துகொண்டு செயல்படுத்தச் சீன மக்கள் துடிக்கின்றனர். ஒவ்வொரு பின்தங்கிய, போதிய முன்னேற்றமடையாத நாடும் நவீனத் தொழில் வளத்தின் நன்மைகளைப் பெற்றுத் தம் மக்கள் வாழ்வில் நிறைவைக் காண விழைகிறது.

ஆனால், எண்ணத்திலும், செயலிலும், கலாசாரத்திலும் ஒன்றுபடுவதற்குப் பதில் உலகம் அரசியல் ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கிறது. அவை பொதுவுடமைத் தொகுதி, மக்களாட்சித் தொகுதி, நடுநிலைத் தொகுதி என்பனவாகும்.

சோவியத்து ரஷ்யா பொதுவுடைமைத் தொகுதி நாடுகளில் முதன்மையான இடத்தை வகிக்கின்றது. ஆனால், செஞ்சீனு மார்க்ஸீயக் கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றி ரஷ்யாவைக் காட்டிலும் மேலான இடத்தைப் பெற முயன்று கொண்டிருக் கிறது. பொதுவுடைமைப் பிரச்சாரத்தை க்யூபாவிலும், இலத் தீன் அமெரிக்க நாடுகளிலும் நடத்தித் தனக்கு ஆதரவைத் திரட்ட முயன்றது, சீன. ஆயினும் மூலாதாரமான பொதுவுடைமை நாடான ரஷ்யாவே பரப்பில் விரிந்து தொழில்துறையில் சிறந்து இராணுவ பலமும் பெற்றுப் பொதுவுடைக் கொள்கையின் தாயகமாக விளங்கிவருகிறது.

இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்றதிலிருந்தே ரஷ்யா வின் பெருமையும், செல்வாக்கும் ஓங்கி வந்துள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொதுவுடைமைத் தொகுதியில் சேர்ந்ததும், பொதுவாக விஞ்ஞானத் துறையில், குறிப்பாக விண்வெளி ஆராய்ச்சியில் ரஷ்யாவின் சாதனைகளும் ரஷ்யாவின் முதன்மை நிலைக்குக் காரணங்களாகும். மார்க்ஸீய--லெனினீயக் கோட் பாடுகளும், தன் தொகுதியில் முதன்மை பெற ரஷ்யாவிற்கு உறுதுணை புரிந்துள்ளன. மார்க்சின் தீர்க்க தரிசனங்களில் நிறை வேற்ற முடியாதனவற்றை ஒதுக்கியும், காலத்துக்கு ஒவ்வாத பொருளாதாரக் கருத்துகளைப் புறக்கணித்தும், தொழிலாளர் களைச் சுரண்டுவதைச் சாடும் கொள்கையை வலியுறுத்தியும் லெனின் பிரச்சாரம் செய்தார். அத்துடன் ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம் இவற்றின் மீதான வெறுப்பையும் லெனின் போதித்தார். இந்தப் போதனைகள் உலகில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூகக் கலாசார நிலையைத் தெளிவாக்கிக் காட்டியதால் பின்தங்கிய நாட்டு மக்களின் கவனத்தை ஈர்த்தன. மேலும், லெனின் தந்த விளக்கம் விஞ்ஞான பூர்வமாக இருந்த தோடு உலக வரலாற்றுப் பாதையும் பொதுவுடைமை என்ற இலக்கினையே சுட்டுவதாகக் கூறியது. ரஷ்யாவின் பெருமைக்கு அதன் பொருளாதார முன்னேற்றம் மற்றொரு காரணமாகும். செம்மையான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியதன் மூலமும் நுகர்வினைக் கட்டுப்படுத்தித் தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள், கனிச் சுரங்கங்கள் ஆகியவற்றில் முதலீட்டினை அதிகப் படுத்திய தன் மூலமும் இந்த முன்னேற்றம் ரஷ்யாவில் ஏற்பட்டது. 1960ஆம் ஆண்டில் ரஷ்யப் பிரதமரான நிகிடா குருஷ்சேவ், சோவியத் ஒன்றியத்தின் தேசிய வருமானம் ஆண்டொன்றுக்கு எட்டு விழுக்காடு அளவில் உயர்ந்து வருவதாகப் பெருமையுடன் கூறினர்.

**மக்களாட்சித் தொகுதி :** மக்களாட்சித் தொகுதியின் தலைமையை அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஏற்றது. பரப்பளவிலும்

மக்கள் தொகையிலும் சோவியத் ஒன்றியத்திற்குச் சளைத்திருந் தாலும், தொழில் வளத்தில் அமெரிக்கா மிக உயர்ந்த இடத்தை வகிக்கிறது. இங்கு மக்களின் வாழ்க்கைத் தரமும், பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுகளைவிட அதிகமாக உள்ளது. இரண்டாம் உலகப் போரில் நேச நாடுகள் வெற்றி பெற்றமைக்கு அமெரிக்கத் தலையீடும் ஒரு முக்கியக் காரணமாகும். இவையன்றி ஐரோப்பா வில் வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம் என்ற பெயரில் (NATO) ஓர் இராணுவ உடன்படிக்கை உருவாக்குவதிலும், ஆசியாவில் தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த நிறுவனம் என்ற பெயரில் (SEATO) மற்றுமோர் உடன்பாட்டை ஏற்படுத்துவதிலும் அமெரிக்கா வெற்றியடைந்துள்ளது. உலகம் முழுவதிலும் இராணுவத் தளங்களை அமைத்துக் கொள்ளவும், உலக நாடுகள் பலவற்றிற்கு இராணுவப் பொருளாதார உதவிகளை ஏராளமாக வாரி இறைக்கவும், அமெரிக்க ஐக்கிய நாடுகளால் முடிந்திருக் கிறது.

கொள்கைப் போராட்டத்தில் பொதுவுடைமைத் தொகுதி யின் தலையாய எதிரியாக விளங்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக் குச் சாதகமாகச் சில உண்மைகள் இருக்கின்றன. அது காலனி ஆதிக்கத்தை முதன் முதலில் உதறி எறிந்த நாடாகும்; ஒரு நவீனக் குடியரசு அரசாங்கத்தை நிறுவி, ஜனநாயகப் பண்பினைப் பாதுகாத்து ஓர் அரசியலமைப்பை ஏற்று வேறுபட்ட பல இன, சமய, நாட்டு மக்களை ஒருங்கிணைத்து அமெரிக்க மக்களாக்கி வாழச்செய்த பெருமை அந் நாட்டிற்கே உரியது. விடுதலை உணர் வின் சின்னமாக அந் நாடு திகழ்கிறது எனில் அது மிகையான கூற் றன்று. எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் களங்கமாகக் காட்சியளிப்பது அந் நாட்டில் நிலவும் வெள்ளையருக்கும், கறுப்பருக்கம் இடையே நிலவும் இன வேற்றுமைத் தகராறுகளாகும்.

இன்று உலகில் நிலவும் கெடுபிடிப் போராட்டச் சூழலில் ஒரு சராசரி ரஷ்யக் குடிமகன் தான் முதலாளித்துவம், ஏகாதி பத்தியம் ஆகியவற்றிற்கு எதிரி எனவும், தான் சமதர்மத்திற்காக வும், உலக முழுவதிலும் உள்ள தொழிலாளர்களின் தளைகளை உடைத்து அவர்களின் மேன்மைக்குப் பாடுபடுவதாகவும் கருது கிறான். அதேபோல் ஒரு சராசரி அமெரிக்கக் குடிமகன் தன் நாடு பொதுவுடைமைத் தத்துவம், சமய மறுப்புப் போர் ஆகிய வற்றை எதிர்ப்பதாகவும், சுதந்திரம், சட்டம், நீதி, மக்களாட்சி, தனி நபரின் உணர்ச்சி ஆகியவற்றை மதிப்பதாகவும் நம்புகிறான்.

நடுநிலைத் தொகுதி ; மூன்றாவது தொகுதியான நடுநிலைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள நாடுகளில் பாரதம் சிறப்பான இடத்தை வகிக்கிறது. இத் தொகுதியைச் சார்ந்த கானா, எகிப்து, இந்தோனேஷியா முதலிய நாடுகள் மற்ற இரு தொகுதிகளைச் சேர்ந்த நாடுகளிடமிருந்து உதவியை ஏற்க விரும்பினாலும் அரசியல் அடிப்படையில் அதனைப் பெறுவதை விரும்பவில்லை. சான்றாக யூகோஸ்லாவியா பொதுவுடைமைத் தொகுதியில் இருந்தாலும் பிற மேலை நாடுகளோடு சுமுகமான உறவுகொண்டு உதவியும்பெற்று வருகிறது. ஈரான், ஜப்பான், பாகிஸ்தான் போன்ற நாடுகள் இத் தொகுதியில் இருந்தாலும், மக்களாட்சித்தொகுதி நாடுகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இதேபோல் கியூபா, கினி, மாலி போன்ற நாடுகள் சோவியத்து ஒன்றியத்திடம் நட்புரிமை பாராட்டி வருகின்றன. புதிதாகத் தோன்றிய ஆப்பிரிக்க நாடுகள் தங்கள் முன்னேற்றம் ஒன்றையே குறிக் கோளாகக்கொண்டு முதலிரண்டு தொகுதிகளில் சேராது செயல்படுகின்றன.

இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் உலகவரலாற்றில் ஏற்பட்ட திருப்பத்தை மேலே கண்டோம். சமீப கால வரலாற்றில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு உலகநிலை தடுமாற்றம் கண்டுள்ளது. இம் மாற்றங்களில் தலையாயது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், செஞ்சீனாவிற்குமிடையே மலர்ந்துள்ள நட்பாகும். செஞ்சீனா உலக நிறுவனமான ஐ.நா.வில் இடம் பெற்றதும், அமெரிக்க அயல்நாட்டு உறவுச் செயலர் ஹென்றி கிஸ்ஸிஞ்சரின் பெருமுயற்சி காரணமாக அமெரிக்க ஜனாதிபதி செஞ்சீனாவிற்கு விஜயம் செய்ததும் இந்த நட்பு மலர்ந்த காதையில் அடங்கும் நிகழ்ச்சிகளாகும். அடுத்து அமெரிக்கா இஸ்ரேலை ஆதரிக்கும் கொள்கையைக் கண்டிக்கும்வகையில் அரேபிய நாடுகள் அமெரிக்காவிற்குப் பெட்ரோலியம் எண்ணெய் வகைகளை அனுப்புவதை நிறுத்திவிட்டன. இச் செயல் தோற்றுவித்த நெருக்கடி நிலையிலிருந்து உலகம் இன்னும் மீளவில்லை.

## (அ) விஞ்ஞானத் துறையிலும் தொழில்நுட்பத் துறையிலும் தோன்றிய அற்புதங்கள்

18ஆம் நூற்றாண்டிலிருந்து விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் புதுமையான மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. 20ஆம் நூற்றாண்டில் முன்னேற்ற வேகம் அதிகரித்தது. இரண்டாம் உலகப் போர் மேலும் இதனை ஊக்கியது. போருக்குப்பின் உலகில் நிலவிய கெடுபிடிப் போரை விஞ்ஞான வளர்ச்சி மிகவும் பாதித்தது. ருஷ்யாவும் அமெரிக்கா

வும் ஒன்றினைஒன்று மிஞ்சவேண்டும் என்ற உணர்வில் கடும் போட்டியில் ஈடுபட்டதால் பல்வேறு விஞ்ஞானத் துறைகளிலும் ஆராய்ச்சி மிகுதியாயிற்று.

அணு மின்துறையில் வியக்கத்தக்கவகையில் ஆராய்ச்சிகள் நடந்தன. சர் ஏர்னஸ்ட் ருதர்போர்டு, நீல்ஸ்போர் ஆகிய விஞ்ஞானிகளின் அடிப்படை ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து ஜெர்மானிய விஞ்ஞானியான ஹேசன்பர்க் ஆகியோர் அணுவைப் பற்றிய புதிய செய்திகளைக் கண்டறிந்தனர். 1960ஆம் ஆண்டில் ஏறத்தாழ முப்பது புதிய அணுத் துகள்கள்வரை கண்டுபிடிக்கப் பட்டன.

புதிய பௌதிகத்துறையில் ஈன்ஸ்டீன் கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையில் பிற துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டது. சூரியனிலிருந்தும் பிற தாரகைகளிலிருந்தும் பெறப்படும் ஒளியும் வெப்பமும் அணுவின் செயல்பாடுகளின் விளைவு என்பது புலப் பட்டது. வேதியியலில் அணுவைப் பற்றிய விரிந்த அறிவு இரசாயனக் கிரியைகளைப் புரிந்துகொள்ளவும், இரசாயனப் பிணைப்புகளை அறிந்து கொள்ளவும், தனிமங்களுக்கு இடையே உள்ள தொடர்பு பற்றியும் தெரிந்துகொள்ளவும் உதவியது. மேலும் அணுத்துகள்களைச் சிதைவுறச் செய்வதன்மூலம் ஒரு தனிமத்தை மற்றொன்றாக மாற்றுதல், கதிரியக்க ஐசோடோப்புகளை உருவாக்குதல், புதிய கதிரியக்கத் தனிமங்களை உண்டாக்குதல் முதலிய நுட்பமான செயல்முறைகள் வளரவும் வழிவகுத்தது. கதிரியக்க ஐசோடோப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் உயிரியல், உடற்கூறு இயல், தாவரவியல், தொல்பொருளியல் ஆகிய துறைகளில் பிரமிக்கத்தக்க விளைவுகளைக் காணமுடிந்தது. சான்றாக, ஒரு துண்டு மரத்திலோ அல்லது துணியிலோ அடங்கியிருக்கும் கரிமம்-14 என்ற தனிமத்தை ஐசோடோப்புகளைக் கொண்டு ஆராய்வதன்மூலம் அதன் காலத்தைச் சரியாக நிர்ணயிக்கக்கூடும்.

புதிதாகக் கண்டறிந்த விஞ்ஞான உண்மைகளும், புதிய வழிமுறைகளும் விஞ்ஞானத் துறையில் உயிரியல்-வேதியியல், வான்வெளி பௌதீகம், உயிரியல்-பௌதீகம் முதலிய புதிய பிரிவுகள் தோன்றி வளர உதவிபுரியும். உயிரியல் துறையில் ஹார்மோன்கள் (hormones), என்சைம்கள் (enzymes), அணுக்கரு அமிலங்கள் (nucleic acids) போன்றவற்றை ஆராய்ந்ததன்மூலம் புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போருக்கு முன் மார்கன் (Morgan) போன்ற விஞ்ஞானிகள் பாரம்பரியத்தைப்பற்றிச் செய்த ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து குறு அலைக்

கதிரியக்கம் (Shoot-wave radiation), எலெக்டிரான் நுண்ணோக்கிகள் (electron microscopes) கதிரியக்க ஐசோடோப்புகள் ஆகியவற்றின் உதவிகொண்டு பாரம்பரியக் குணவியல்புகள் செல்களில் பதிக்கப்படுவதைத் துல்லியமாகத் தீர்மானிக்க முடிந்தது. இதே போல் நுண்கிருமிகள் (Viruses) எங்ஙனம் ஆரோக்கியமான செல்களைப் பாதித்து நோயுறச் செய்கின்றன என்பதும் தெளிவாகக் கண்டறியப்பட்டது. மேலும், தொடர்ந்து ஆராய்ச்சிகளின் பயனாக விவசாயத் துறையிலும் அபிவிருத்தி ஏற்பட்டது.

மருத்துவத் துறையிலும் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது. மருத்துவர்கள் விஞ்ஞான பூர்வமான பரிசோதனைகளின் மூலம் மனிதனைப் பீடித்த பல நோய்களைத் திட்டவட்டமாக அறிந்தனர். இதயத்தின் நிலையை வரைபடமாக்கிக் காட்டும் கருவியும், புதிர்க்கதிர்த் துணைகொண்டு உள்ளுறுப்புகளைப் படமெடுக்கும் முறையும், மருத்துவரின் பணியை எளிதாக்கின. வைட்டமின்கள் என்ற உயிர்ச் சத்துகளும் மனித உடலுக்கு அதன் தேவையும், அவசியமும் உணரப்பட்டன. நீரிழிவு வியாதியைக் கட்டுப்படுத்தும் இன்சுலினும், மூட்டு வலியைத் தணிக்கும் கார்ட்டிஸோனும் (Cortisone) கண்டுபிடிக்கப்பட்டன. புதிய மருந்துகளும், நச்சுயிர்க் கொல்லிகளும் கண்டுபிடிக்கப்பட்டது மருத்துவத் துறையில் ஏற்பட்ட மற்றுமொரு சாதனையாகும். 1929-ல் கண்டுபிடிக்கப்பட்ட பென்சிலின் என்ற நச்சுயிர்க் கொல்லியைத் தொடர்ந்து, ஸ்டிரெப்டோமைசின், ஆரோமைசின் போன்றவை தோன்றின. இவை வியாதியையும், நோய் பரவுதலையும் தடுக்கும் சக்திமிக்க ஆயுதங்களாகப் பயன்பட்டன. எலும்புருக்கி நோயைக் குணப்படுத்தும் மருந்துகள் தோன்றின.

இதுவரை வைசூரி தடுப்பிற்காக மட்டும் அம்மை குத்தும் வழக்கம் இருந்துவந்தது. ஆனால், இருபதாம் நூற்றாண்டில் டிப்திரியா, சுழற்சி நோய்கள், இளம்பிள்ளைவாதம் ஆகியவற்றை முரியடிக்கத் தடுப்பு ஊசி மருந்துகள் தயாரிக்கப்பட்டன. அறுவைச் சிகிச்சை முறையும் நன்கு வளர்ந்தது. மிக நுட்பமான மூளை, இதய அறுவைச் சிகிச்சைகள் மிகச் சாதாரணமான முறையில் செய்யப்பட்டன. தூய தண்ணீர், கழிவுகளை உடனடியாக அப்புறப்படுத்துதல், உணவுப் பண்டங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் அவசியம் வலியுறுத்தப்பட்டு, உடல்நல, பொதுச் சுகாதாரத் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டது.

தொழில்நுட்பத்துறை: பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட கண்டுபிடிப்புகளாலும், புதிய கண்டுபிடிப்புகளாலும், தொழில்நுட்பத்துறையிலும் விரிவாக்கம் ஏற்பட்டது. தொலை

பேசியும், வானொலியும் உலகம் முழுவதும் பரவின. இந் நூற்றுண்டில், ராடாரும் (radar), தொலைக் காட்சியும் (television), தானே இயங்கும் விமானமும் படைக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான பயணிகளை ஏற்றிக்கொண்டு மணிக்கு 600 மைல் வேகத்தில் பறக்கும் ஜெட் விமானம் இந் நூற்றுண்டின் ஒப்பரும் சாதனையாகும். பல விதங்களில் பயன்படும் பிளாஸ்டிக்கும், செயற்கை நூல் இழைகளான நைலான் போன்றவையும், செயற்கை இரப்பரும், இயற்கைப் பொருள்களையும் மிஞ்சிவிட்டன.

எலெக்டிரானிக் துறை பெரிதும் முன்னேறி உள்ளது. கை அடக்கமான டிரான்ஸிஸ்டர், வானொலிப் பெட்டிகளும், 'எலெக்டிரானிக் மூளை'களான கம்ப்யூட்டர்களும், தொழில்துறையில் புரட்சியை உண்டுபண்ணியுள்ளன.

இராணுவத் துறைக்குத் தேவையான ஆயுதங்களையும், அழிவுக்கருவிகளையும், உற்பத்தி செய்வதில் விஞ்ஞானிகளுக்கும் பெரும் பங்கு உண்டு. 1945ஆம் ஆண்டில் ஜப்பானில் வெடிக்கப்பட்ட அணுகுண்டும், 1952ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அதீத அழிவுத்திறம் வாய்ந்த நீர்வாய்க் குண்டும், விஞ்ஞானத்தின் சாதனையே. ஏவுகணைகளும் செம்மையாக்கப்பட்டன.

அழிவுக் கருவிக்காக மட்டுமின்றி, ஆக்கப் பணிகளுக்காகவும், அணுசக்தி பயன்படுகிறது. ஏவுகணைகள் விண்வெளி ஆராய்ச்சியில் பயன்படுத்தப் பட்டன. இத் துறையில் முன்னணியில் நின்ற ரஷ்யா 1957ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் ஸ்புட்னிக்-I (Sputnik-I) என்ற செயற்கைக் கிரகத்தை விண்வெளியில் மிதக்கவிட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இத் துறையில் போட்டியில் இறங்கியது. 1961ஆம் ஆண்டு ரஷ்யா விண்வெளிக் கப்பலில் ஒரு மனிதனையும் (Yuri A. Gagarin) வைத்து அனுப்பியது. இம் முயற்சிகளின் சிகரமாக சந்திரனுக்கு மனிதர்களோடு கூடிய அப்பால்லோ-8 என்ற விண்வெளிக் கப்பலை அமெரிக்க ஐக்கிய நாடு அனுப்பி வெற்றிகரமாக அதனை மீட்டுக்கொண்டது.

தொழில்நுட்பத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் விளைந்த அற்புதங்கள் ஒரு முக்கியமான விளைவை ஏற்படுத்தின. இயந்திரங்களைப் பயன்படுத்தி மனித சக்தியின் அளவைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்கியதே அவ் விளைவாகும். இருபதாம் நூற்றுண்டில் புதிய முறைகள் வாயிலாகவும், மின் சக்தி, அணுசக்தி, பெட்ரோலிய எண்ணை சக்தியைப் பயன்படுத்தியும், விஞ்ஞான அறிவை இணைத்தும் ஒரு பெரும் தொழில்துறைப் புரட்சி நிகழ்ந்துள்ளது. அதன் விளைவுகளில் உலக நாடுகள்

திளைத்தாலும், அதன் துணை விளைவுகளான வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய கட்டாயம் அவர்களை எதிர்நோக்கியுள்ளது.

## (ஆ) இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய இலக்கியம்

இந் நூற்றாண்டின் வேக தாகத்திற்கும், கொடுமைகளுக்கும் இலக்கியம் ஈடு கொடுத்துள்ளது. ஆங்கில நாவலாசிரியர்களான ஜோஸப் கான்ராட், ஹெச்.ஜி.வெல்ஸ், ஜான் கால்ஸ்வொர்த்தி, தாமஸ் கார்டி ஆகியோரும், நாடகாசிரியரான ஜார்ஜ் பெர்னட் ஷாவும், சிறுகதை ஆசிரியரான ருட்யார்டு கிப்ளிங்கும், கவிஞரான ஜான் மேஸ் ஃபீல்டும், ஃபிரான்சில் அனத்தோல் ஃபிரான்சும், ரோமென் ரோலந்தும் போன்றோரும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் மரபுகளைப் பின்பற்றி எழுதினாலும் இலக்கியத் துறையில் புதிய காற்று வீசத் தொடங்கிவிட்டது.

ஃபிரான்சில் 1913ஆம் ஆண்டில் மார்சல் பிராஸ்ட் (Marcel Proust) என்ற நாவலாசிரியர் தமது நாவலின் முதல்தொகுதியை வெளியிட்டார். மேட்டுக் குடியினரின் வாழ்வை அற்புதமாகச் சித்திரித்த இந் நூல் அதன் நுட்பமான உள்ளொளி பாய்ச்சுகின்ற மனத் தத்துவ விளக்கங்களாலும், உவமை அழகாலும், பாலுணர்வு பற்றிய கருத்துகளாலும் பாராட்டினைப் பெற்றது. இதே நேரத்தில் அயர்லாந்தைச் சேர்ந்த வில்லியம் பட்லர் யீட்ஸ் மனத்தை கொள்ளைக் கொள்ளும் கவிதைத் தொகுதிகளைப் பதிப்பித்தார். நாவல் துறையில் 'கலைஞனை ஓர் இளைஞனாகக் காணுதல்' (Portrait of the artist as a-young man), யுலிஸிஸ் (Ulysses) ஆகிய படைப்புகளை உருவாக்கியதன் மூலம் ஜேம்ஸ் ஜாய்ஸ் ஒருபெரும் புரட்சியைச் செய்தார். இவரது கருத்துகளை ஓரளவிற்கு டி. எச். லாரன்ஸ் தம் நாவல்களான 'புதல்வர்களும் காதலர்களும்' (Sons and Lovers) 'வானவில்' (Rainbow) ஆகியவைகளில் பிரதிபலிக்கிறார். இதே உணர்வுகளை மேலும் நுட்பமாகச் சித்திரிப்பதில் வர்ஜீனியா வுல்ஃப் வெற்றி பெற்றார்.

1920ஆம் ஆண்டிற்குப் பின் எழுதப்பட்ட பெரும்பான்மையான நாவல்கள் மனித மன ஓட்டங்களை விவரிப்பதில் மனத் தத்துவ விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இப்படி எழுதிய நாவலாசிரியர்களில் ஃபிரான்சைச் சார்ந்த ரோஜர் மார்டின் டு கார்ட் என்பவரும், அமெரிக்க நாட்டவரான சின்க்ளேர் லூயிஸும் யதார்த்த வாதிகளாகத் திகழ்ந்தனர். நடையிலும் மன விவகாரங்களைச் சித்திரிப்பதிலும் ஃபிரெஞ்சு ஆண்ரே கைடு ஈடுபாடு காட்டினார். ஜெர்மானியரான ஃபிரான்சு

காஃப்கா தற்கால மனிதனின் மனப் போராட்டங்களையும், அவல நிலையையும் படம் பிடித்துக் காட்டிப் புகழ் ஈட்டினார். போரையும், அதன் கொடுமைகளையும் விரித்துரைப்பதில் அமெரிக்கரான எர்னஸ்ட் ஹெமிங்வே தனிக் கவனம் செலுத்திப் புகழ் பெற்றார். ரஷ்யரான போரிஸ் பாஸ்டர்நாக் பெரும் சமுதாய மாற்றங்கள் நிகழும் காலக் கட்டத்தில் ஒரு தனி மனிதனுக்கேற்படும் அனுபவங்களை உளம் உருக விவரிப்பதில் தன் திறமையைக் காட்டினார். ஃபிரெஞ்சு நாட்டவர்களான ஆல்பர்ட் கேமு, ஜீன்பால் சார்ட்ரே, ஆந்த்ரே மால்ரு ஆகியோர்களது எழுத்துகள் சிறந்தவை என்ற வகையில் போற்றுதலுக்கு ஆளாயின.

நாடகத் துறையில் யூஜின் ஓநீல் (Eugene O'Neill), டென்னெசி வில்லியம்ஸ், இத்தாலியரான லூகி பிராண்டெல்லோ (Luigi Pirandello), ஜீன் கிராடெக்ஸ் (Jean Girandoux) ஆகியோரின் நாடகங்கள் புதிய வரலாற்றைப் படைத்தன.

கவிதைத் துறையில் பல கவிஞர்கள் ஜேம்ஸ் ஜாய்ஸைப் பின்பற்றி வார்த்தைகளிலும், மொழியிலும் விளையாடிச் சுய தரிசனத்தை நாடினர். இவர்களிடமிருந்து வேறுபட்டு விளங்கினர், அமெரிக்கக் கவிஞரான ராபர்ட் ஃபிராஸ்ட் (Robert Frost). அவரது கவிதையின் புற எளிமையில் ஆழமான உணர்வுகளும் கருத்துகளும் மறைந்து கிடக்கும். தன் கவிதைகளில் சமய உணர்வையும் கலந்து வழங்கிப் புகழ் பெற்றவர் அமெரிக்கா வாழ் பிரிட்டிஷ்காரரான தாமஸ் ஸ்டீன்ஸ் எலியட் (Thomas Sterns Elliot) ஆவார்.

## (இ) கலைகள்

**ஓவியக் கலை:** இந் நூற்றாண்டில் இலக்கியத்தைப் போன்றே ஓவியக்கலையிலும் பல பரிசோதனைகள் செய்யப்பட்டன. வழக்கம் போல் பாரீஸ் நகரம் கலைகளின் நிலைக்களனாய் விளங்கியது. விரைவில் ஓவியத்தில் புதிய பாணிகள் தோன்றின. காட்சிகளையும், பொருள்களையும் இருந்தவாறே சித்திரிப்பது என்ற நிலையை விட்டு வெகு தூரத்திற்குப் புதிய பாணிகள் சென்றுவிட்டன. 'இயற்கையில் எல்லாப் பொருள்களும், வட்டம், கூம்பு, உருளை ஆகிய கோட்டுருவங்களைப் பின்பற்றியே அமைக்கப்பட்டுள்ளன', என்ற செஸேனின் (Cezanne) கருத்தை வரவேற்ற பாப்லோ பிக்காஸோ (Pablo Picasso) என்ற இளம் ஸ்பானிய ஓவியர் தான் சித்திரித்த பொருள் ஒவ்வொன்றையும் ஜியோமிதி வடிவத்தில் அடக்கிக்காட்டினார். ஜார்ஜஸ் ப்ராக்கா (Georges Braque), ஜ்வான் கிரிஸ் (Juan Gris), ஃபெர்னண்ட் லீகர் (Fernand Leger),

ஃபிரான்ஸிஸ் பிக்காபியா (Francis Picabia) ஆகிய ஓவியர்களும் இதே பாணியைப் பின்பற்றி வரைந்தனர். இப் பாணி 'க்யூபிஸம்' (Cubism) என வழங்கப்பட்டது. இவர்கள் வண்ணத்தைக் குறைவாகப் பயன்படுத்தினர். தீட்டப்பட்டுள்ள ஓவியம் என்ன என்பதையே புரிந்து கொள்ளமுடியாத அளவிற்கு இவர்கள் வடிவமைதிகளையும் கோணங்களையும் மிகுதியாகப் பயன்படுத்தினர் சில ஆண்டுகளுக்குப்பின் பிக்காஸோ வேறுவிதப் பாணிகளில் மனத்தைச் செலுத்திஞலும் க்யூபிஸத்தில் பிற ஓவியர்கள் ஆர்வம் காட்டுவதை நிறுத்தவில்லை.

க்யூபிஸம் புகழ் பெற்றிருந்த அதே காலத்தில் இத்தாலியக் கவிஞரான ஃபிலிப்போ டோமாஸ்ஸோ மாரினெட்டி (Filippo Tommaso Marinette) வெளியிட்ட ஒரு புதிய தத்துவத்தையொட்டி 'ஃபியூச்சரிஸம்' (Futurism) என்ற புதிய ஓவியக் கலைப் பாணி பிறந்தது. நடைபெறும் இயந்திர யுகத்திற்கேற்ற வகையில் இயந்திரங்களையும் இயக்கத்தையும் அழகுபடச் சித்திரித்து மரபுகளை மீறவேண்டும் என்ற வெறியோடு இவ்வோவியர்கள் செயல்பட்டனர். முன்னவர்களைப் போன்று இவர்களது ஓவியங்கள் புரிந்துகொள்ளவியலாத வகையில் தீட்டப்பட்டிருந்தாலும் இவர்களது ஓவியங்களில் வண்ணம், லயம், இயக்கம் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது. இதஞல் உணர்ச்சிகளைத் தூண்டி வெறியூட்டும் தன்மை அவற்றில் நிறைந்திருந்தது.

வேறு பல கலைப்பாணிகளும் இக் காலத்தில் தோன்றின. அவற்றுள் முக்கியமானவை 'ஃபாவிஸம்' (Fauvism), 'எக்ஸ்பிரெஷனிசம்' (Expressionism) ஆகும். முதலில் குறிப்பிட்ட ஓவியப் பாணியால் புகழ் பெற்றவர் ஹென்றி மேடிஸ் (Henri Matisse) ஆவர். இவரது படைப்புகள் கோட்டு, வடிவமைதிகளை மீறி இருந்தாலும் ஓவியப் பொருளைப் புரிந்து கொள்ளமுடிந்தது. பின்னதில் புகழ்பெற்றவர்கள் ஆஸ்கார் கோகோஷ்சா (Oscar Kokoscho), மேக்ஸ் பெச்ஸ்டீன் (Max Pechstein) ஆவர். நிலைகுலைந்த வடிவங்கள், தீவிர வண்ணம் ஆகியவை மூலம் ஓவியக் கலைஞனின் உணர்வுகளை இவர்கள் ஓவியங்களாக வடித்தனர்.

1922ஆம் ஆண்டிற்குப்பின் தோன்றிய பாணிகளுள் 'சர்ரியலிசம்' (Surrealism' குறிப்பிடத்தகுந்தது. புகைப்படம் எடுத்ததைப்போன்று நிதரிசனமான ஓவியங்களைத் தீட்டி மனிதனின் அடிநிலை மனத்தின் ஆழத்தை வெளிக்கொணர அவர்கள் முயன்றனர். ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பொருள்களை இணைத்து இவர்கள் ஓவியம் தீட்டுவதால் காண்போருக்கு அவை ஓர் இனிய

கெடுபிடிப் போர்



அல்லது பயங்கரக் கனவாகத் தோற்றமளிக்கும். சால்வாடார் டாலி (Salvador Dali) இவ் வகை ஓவியங்களால் புகழ்பெற்றவர் ஆவர்.

இக் காலத்தில் அமெரிக்காவில் நிலவிய ஓவியக்கலைப் பாணி எந்த வகையைச் சார்ந்தது என உறுதியாகக் கூறமுடியாது. இருப்பினும், முதல் உலகப் போருக்குப்பின் புரியாத வகை ஓவியங்கள் அதிக அளவில் தீட்டப்படலாயின. அவற்றில் வண்ணங்களும் உணர்ச்சிகளும் கொட்டிக் கிடந்தன. ஜேக்ஸன் போலக்கை (Jackson Pollock) தலைவராகக் கொண்ட இவ் வகை ஓவியர்கள் தூரிகையைப் பயன்படுத்துவதில்லை. வண்ணக் குழல்களிலிருந்து வண்ணங்களை நேரிடையாக ஓவியத்துணியில் கொட்டி முற்றிலும் மாறுபட்ட ஓவியக் கனவுகளை அவர்கள் படைத்தனர்,

சிற்பக் கலை: சிற்பக் கலையும், ஓவியக் கலையைப் போன்றே பல மாற்றங்களை நாளடைவில் ஏற்றது. பொருளின் உண்மையான வடிவினைத் தருவதற்குப் பதில் புரியாத நிலையில் அதனை வடிப்பது இக் கலையையும் தொற்றிக்கொண்டது. முதல் உலகப் போருக்கு முன் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய சிற்பி ஃபிரெஞ்சு நாட்டவரான அகஸ்டே ரோடின் (Auguste Rodin) புத்துணர்ச்சி இயக்கத்தைச் சார்ந்த சிற்பியாவர். உணர்ச்சிகளைக் கல்லில் வடிக்கும் திறனைப்பெற்று ரோடினின் போற்றுதலுக்கும் ஆளான ஐவான் மெஸ்ட்ரோவிக் (Ivan Mestrovic) குறிப்பிடத் தகுந்த மற்றொரு சிற்பியாவர். இந் நூற்றாண்டின் இடைப் பகுதியில் பல சிற்பிகள் சிமெண்டு முதல் இரும்புத் துண்டுகள்வரை பலதரப்பட்ட பொருள்களைப் பயன்படுத்திப் பல படைப்புகளை உருவாக்கினர்.

பொதுவாக நோக்குமிடத்துத் தற்காலக் கலைகள் இவ்விருபதாம் நூற்றாண்டின் குழப்பங்கள், சிக்கல்கள், தேடுதல்கள், நிச்சயமற்ற தன்மை, இயக்கம், மாற்றங்கள் ஆகியவற்றிற்கு வடிவம் தர முயல்கின்றன. அற்புதமான, அலங்காரமான விளைவினை அவை ஏற்படுத்தியுள்ளன. கலைஞனின் பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கருவிகளாக அவை விளங்குகின்றன. பிரச்சாரச் சாதனமாகவும் இக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**கட்டடக் கலை:** கட்டடக் கலை மிக மெதுவாகவே மாற்றங்களை ஏற்றுள்ளது. பழைய மரபுகளைப் பின்பற்றியே ஐரோப்பாவில் கட்டடங்கள் இருந்தபோதிலும் எஃகு, அலுமினியம், பிளாஸ்டிக், மெதுபலகை, கண்ணாடி, காங்கிரீட் கலவை ஆகிய பொருள்களைப்

பல வகையாகப் பயன்படுத்தும் ஒரு நவீனக் கட்டடக் கலையும் உருவாகியுள்ளது. எளிமையும், ஜியோமிதி வடிவமைப்பும் இதில் துவங்குகின்றன. உறையுள் மட்டுமின்றி, பொதுக் கட்டடங்கள், அணைக்கட்டுகள், பாலங்கள், பெருஞ்சாலைகளும் நவீன முறையில் உருவாகியுள்ளன.

அமெரிக்கக் கட்டடக் கலைஞரான ஃபிராங்க் லாயிட் ரைட் நவீன பாணியில் அமைத்த டோக்கியோவிலுள்ள இம்பீரியல் ஹோட்டலும், நியூயார்க்கிலுள்ள அருங்காட்சியகமும் நவீன உத்திகளோடு உயர்கற்பனை கலந்து விளங்குகின்றன. ஸ்விட்சர் லாந்தைச் சார்ந்த சார்லஸ் எட்வர்ட் ஜீன்ரெட் (இவர் லார்ட்லே கர்பூஸியவர் என்றழைக்கப்பட்டார்) மர்செயில்ஸில் (Marseille) திட்டமிட்டுக் கட்டிய குடியிருப்புப் பகுதியும் பாரதத்தில் திட்டமிட்டுத்தந்த சண்டீகர் நகரும் அவரது பெருமைக்குச் சான்று பகர்கின்றன. தேவையற்ற வேலைப்பாடுகளைக் கட்டடத்தில் புகுத்துதல் அனாவசியம் என்றும், எளிமையே அழகு என்றும் வலியுறுத்தும் ஜெர்மானியக் கலைஞரான வால்டேர் குரோப் பியஸின் படைப்புகளும் புகழ் வாய்ந்தவை. வானளாவும் உயரமான கட்டடங்கள் இந் நூற்றாண்டில் தனிச்சிறப்பு பெற்றவையாகும்.

மேலை நாகரிகம் என்பது மேலை நாடுகளுக்கு மட்டும் சொந்தமானது அன்று. அதன் பொருளாதார அம்சங்கள் உலகம் முழுவதற்கும் உரியன. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள பழம் பெருமையிற் சிறந்த நாடுகள் மேலை நாகரிகத்தின் செல்வாக்கினின்று தங்கள் நாகரிகங்களைக் காத்துக் கொள்ளமுடியவில்லை. ஐரோப்பிய நாகரிகத்தைப் பின்பற்றும் மோகம் அந் நாடுகளை ஆட்கொண்டிருக்கிறது. கிறித்தவ மதமும் கீழை நாட்டுச் சமயங்களைப் பெருமளவிற்குப் பாதித்துள்ளது. எதிர் காலத்திலும் மேலை நாகரிகத்தின் செல்வாக்கு உலக நாகரிகத்தைப் பாதிக்கும்; பண்படுத்தும் என்ற நம்பிக்கைக்கும் இடமிருக்கிறது.

# மேலும் படிக்கவேண்டிய நூல்கள்

## பாட நூல்கள்


1. Grant and Temperley — Europe in the 18th & 19th centuries.
2. C. D. Hazen — Modern Europe upto 1945.
3. A. J. Grant — Europe in the 19th & 20th centuries.
4. E. Lipson — Europe in the 19th century.
5. South Gate — A Text book of Modern European History.
6. William Langer — The rise of Modern Europe.
7. David Thompson — Europe since Napolean.
8. C. J. H. Hayes — Modern Europe to 1870.
9. H. A. L. Fisher — A History of Europe.
10. C. D. M. Ketelbey — A History of Modern times from 1789.
11. மு. ஆரோக்கியசாமி — ஐரோப்பிய வரலாறு—பாகம் I & II.
12. ஆர். ஆலாலசுந்தரம் — ஐரோப்பிய வரலாறு.


## மேற்கோள் நூல்கள்


1. J. E. Thompson — The French Revolution Nopolean Bonaparte.
2. A. Goadwin — The French Revolution.
3. G. P. Gooch — Germany and the French Revolution.
4. C. K. Webster — The Congress of vienna.
5. F. B. Arly — Reaction and Revolutions
6. Bolton King — History of Italy—Vols. I & II
7. F. A. Simpson — Louis Napolean and the Recovery of France
8. C. G. Robertson — Bismarck
9. A. J. P. Taylor — The Struggle for Mastery in Europe
10. Hayes, Baldwin & Cole — History of western eivilization since 1500

| | | | |
|---|---|---|---|
| 11. | Rene Albrecht - Carrie | — | Europe Since 1815 |
| 12. | Raghubir Dayal | — | A text book of Modern European History (1789—1939) |
| 13. | S. Hook | — | From Hegal to Marx |
| 14. | W. N. Medlicott | — | The Congress of Berlin and After |
| 15. | N. Mansergh | — | The Coming of the First World War |
| 16. | S. Nicolson | — | Peace Making 1919 |
| 17. | T. E. Jessop | — | The Treaty of Versailles—Was it just ? |
| 18. | D. H. Miller | — | The drafting of the Covenent |
| 19. | F. P. Walters | — | A History of the League of Nations Vols. I & II |
| 20. | E. H. Carr | — | International Relations between the two World Wars. The Twenty years' crises 1919-1939 |
| 21. | H. Finer | — | Mussolini's Italy |
| 22. | A. Bullock | — | Hitler-A Study in Tyrarry |
| 23. | E. H. Carr | — | The Bolshevik Revolution1917 1923 Vols. I, II & III |
| 24. | D. E. Webster | — | The Turkey of Ataturk |
| 25. | F. L. Schuman | — | Europe on the Eve—The Crises of Diplomacy 1933-39 |
| 26. | C. Falls | — | The Second World War-A Short History |
| 27. | Sir Winston Churchill | — | The Second World War—6-Vols. |
| 28. | T. Cole | — | European Political System |
| 29. | E. Meyer and A Briggs | — | Patterns of Peace making |
| 30. | J. H. Jackson | — | The Post War Decade. A Short History of the World 1945-1955 |
| 31. | H. G. Nicholas | — | The United Nations as a Political Institution |
| 32. | H. L. Roberts | — | Russia and America; Dangers and Prospects |
| 33. | H. Seton and Watson | — | Neither War Nor Peace—The Struggle for power in the Postwar World |

# கலைச்சொற்கள்

## A

| | | |
|---|---|---|
| Alliance, triple | — | முக்கூட்டு உடன்படிக்கை |
| Allies | — | நேச நாடுகள் |
| Ancient regime | — | ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு முந்திய காலம் |
| Armistice | — | தற்காலிகப் போர் நிறுத்தம் |
| Assembly | — | சபை, அவை |
| Austrian Succession War | — | ஆஸ்திரிய வாரிசு உரிமைப் போர்; ஆஸ்திரிய அரசு உரிமைப் போர் |
| Autocracy | — | தனி வல்லாட்சி |
| Autonomy | — | சுய ஆட்சி |
| Aristocracy | — | உயர் குடி |

## B

| | | |
|---|---|---|
| Balance of power | — | வல்லமைச் சமநிலை; வல்லரசுச் சமநிலை |
| Balkan League | — | பால்கன் லீக், பால்கன் நாடுகளின் குழு |
| Battle of the Pyramids | — | பிரமிடுகள் போர் |
| Barricades | — | தடுப்பரண்கள் |
| Blood and Iron Policy | — | இரத்தமும் இரும்பும் இணைந்த கொள்கை |
| Blitz krieg | — | மின்வேகத் தாக்குதல் |
| Bourgoeis | — | நடுத்தர வகுப்பினர் பூர்ஷ்வா |
| Body of nobles | — | பிரபுக்கள் கூட்டம் |

Body of notables — கனவான்கள் கூட்டம்; சிறப்பானவர் கூட்டம்; சிறப்பு மன்றம்
Bundesrat — பூந்தெஸ்ராத் (ஜெர்மன் மேல் சபை)

## C

Cardinal — கார்டினல்
Cotholicism — கத்தோலிக்கச் சமயம்; கத்தோலிக்கம்
Civil war — உள்நாட்டுப் போர்
Clergy, the — சமய குருமார் தொகுதி, கிறிஸ்தவ சமயக் குருமார்
Coalition — கூட்டணி
Committee of Public Safety — பொதுக் காவற்குழு
Convention, the — கன்வென்ஷன் சபை
Consul — கான்ஸல்
Constitutional — சட்ட வரம்பிற்குட்பட்ட; அரசியலமைப்பிற்கொத்த
Confederation — நாடுகளின் இணைவு
Communist Manifesto — பொதுவுடைமை அறிக்கை
Concert of Europe — ஐரோப்பிய ஒருமைப்பாட்டுத் திட்டம்
Constituent Assembly — அரசியல் நிர்ணய சபை
Continental System — கண்டத் திட்டம்
Code — சட்டத்தொகுதி
Corrido r — இடைவழி, தாழ்வரை
Code Napolean — நெப்போலியன் சட்டத் தொகுப்பு
Coupdetat — திடீர்ப் புரட்சி
Cold war — கெடுபிடிப் போர்
Colony — குடியேற்ற நாடு
Covenant — உடன்படிக்கை
Concordat — சமயச் சார்பான ஒற்றுமை, பத்திரம்
Constituency — தொகுதி

## D

Despotism — வல்லாட்சி
Diplomacy — வெல்திறம் (அரச தந்திரம்)

Diet — டயட் என்னும் சட்ட சபை (ஜெர்மன்)

Dictatorship — சர்வாதிகாரம்; தனித் தன்னுதிக்கம்

Directory — இயக்குநர் குழு

Disarmamen — படைக் குறைப்பு; போர்க் கருவிக் குறைப்பு

Dreikaiser bund — முப்பேரரசர் கூட்டு

Dual Alliance — இரட்டைக் கூட்டுறவு

## E

Eastern Question — கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பிரச்சினை

Emancipation — விடுதலை

Emigrant Nobles — வெளியேறிய பிரபுக் கூட்டத்தினர்

Entente Cordialle — நேச உடன்பாடு

Encirclement Policy — நேச நாடுகளைச் சூழ வைத்துக் கொள்ளும் இயல்முறை

## F

First International, the — முதல் உலகப் பொதுவுடைமை மகாநாடு (1864)

Frerch Reign of terror — ஃபிரஞ்சுப் பயங்கர ஆட்சி

## G

Guerilla warfare — கொரில்லாப் போர்முறை

## H

Holy Alliance — புனிதக் கூட்டுறவு

Holy Roman Empire, the — புனித ரோமானியப் பேரரசு

## I

Indemnity — நட்டஈடு; இழப்பீடு

## M

Martial Law — இராணுவச் சட்டம்

Mandatory System — காப்பு முறை; மாண்டேட் முறை

## N

| | |
|---|---|
| National Guard | — தேசியக் காவற்படை |
| National Assembly | — தேசிய அவை |
| National Workshops | — தேசியத் தொழிலகங்கள் |
| Non-alignment | — சாராமை |
| Nihilism | — சூனிய வாதம்; நிஹிலிசம் |

## P

| | |
|---|---|
| Papacy | — போப்பின் ஆட்சி |
| Peninsular war | — தீபகற்பப் போர் |
| Privileged classes | — சிறப்புரிமை உடைய வகுப்பினர் |
| Policy of Appeasement | — சிறிது சிறிதாகக் கொடுத்துத் தணிக்கும் கொள்கை |
| Political Traditions | — அரசியல் மரபு |
| Protectorate | — காப்பாளர் அரசு |

## Q

| | |
|---|---|
| Quadruple Alliance | — நால்வர் உடன்பாடு; நான்முனை உடன்பாடு |

## R

| | |
|---|---|
| Reign of terror | — பயங்கர ஆட்சி (ஆட்சிக் காலம்) |
| Reparation | — இழப்பீடு |
| Reinsurance treaty | — காப்புறுதியைப் புதுப்பிக்கும் உடன்பாடு |
| Reich | — பேரரசு |
| Reichstag | — ரைய்க்ஸ்டாக் என்னும் கீழ்ச் சபை (ஜெர்மன்) |
| Resorgimento | — புத்துயிர்ப்பு; இத்தாலியப் புதுவாழ்வு இயக்கம் |

## S

| | |
|---|---|
| Separation of Powers | — அதிகாரப் பிரிவினை பகுப்பு |
| Social Contract | — சமூக ஒப்பந்தம் |
| States General | — ஸ்டேட்ஸ் ஜெனரல்; ஃபிரஞ்சு முப்பேராயம் |

## T

Triple Alliance — முக்கூட்டு உறவு; மூவர் உடன்படிக்கை

Triple Entente — மூவர் நட்பு; முக்கூட்டு நட்பு

Trusteeship Council — தருமகர்த்தா அரசாட்சிக் குழு

Truce — தற்காலிக உடன்பாடு

## U

Unification — ஐக்கியம்; ஒற்றுமைப்படுதல்

## W

White Army — வெண்சேனை

Worship of Reason — பகுத்தறிவு வழிபாடு

## Y

Young Italy, Society of — இத்தாலிய இளைஞர் சங்கம்

Young Turk Movement — துருக்கிய இளைஞர் இயக்கம்

## Z

Zemstvo — செம்ஸ்ட்வோ; ஊராட்சி மன்றம்

Zollvereine — சுங்க ஐக்கியம்